

சித்தர் வரலாறு கூறும்





சதுரகிரி தலபுராணம்



யாத்திரை தரிசனம்

(வண்ணப் படங்களுடன்)



ர நூலகம், சென்னை-26.

உ

சித்தர்கள் வரலாறு கூறும்

சதுரகிரித் தலபுராணம்

மற்றும் யாத்திரை தரிசனம்

(கலர் படங்களுடன்)

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தொலை பேசி எண் - 2362024.

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு		எண்-123
முதல் பதிப்பு	:	1921
இரண்டாவது பதிப்பு	:	ஜுன் 1994
மூன்றாம் பதிப்பு	:	ஜனவரி 1998
நான்காம் பதிப்பு	:	ஜனவரி 2005
ஐந்தாம் பதிப்பு	:	ஜுலை 2012

ஆறாம் பதிப்பு : மே 2017

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	சதுரகிரித் தலபுராணம்
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2004
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அச்சு எழுத்து	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	268 + 16-284
பிரதிகள்	:	1200.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ.120-00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

91/4

முதல் பதிப்பின் முன்னுரை

உ
சிவமயம்

முகவுரை

"சதுரகிரித் தலபுராணம்" என்னும் பெயரிய இந்நூல், பாண்டிநாட்டிலுள்ள நாலு மாமலையில் அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சிவ பெருமான் சுந்தரலிங்கம், மகாலிங்கம், சந்தனலிங்கம், இரட்டைலிங்கம் என நான்கு திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்குஞ் செய்தியைக் கூறுவதாகும். அன்றியும், வெள்ளைப் பிள்ளையார், முருகக்கடவுள், ஆனந்த வல்லியம்மை முதலியோரது அரும் பெருஞ் சிறப்புகளை இதன் கண் அறியலாம். இதுவுமன்றிப் பதினெண் சித்தர்களின் வரலாறுகளையும், அவர்களாற் செய்யப்பட்ட நூல்களையும், வைத்திய வாத யோக ஞானானுபவங்களையும், இந்நூல் நன்கு விளக்கும். இத்தகைய சிறந்த அரிய பெரிய மேலான இந்நூல் மகாலிங்கசுவாமி கோயில் பூசகராகிய வாலசுந்தரச் சாமியாரிடத்திலும், தம்பிபட்டி சுந்தரப் பரதேசியாரிடத்திலும், இருந்து கிடைத்த ஓலை. நண்பராகிய மதுரை புதுமண்டபம் புத்தகக்கடை திருவன் இ.ராம.குருசாமிக் கோனாரவர்கள் மேற்படி இரண்டு ஏட்டுச் சுவடிகளையும் வாங்கி வந்து பார்வையிட்டு அவற்றிற்றாங்கண்ட அருமை பெருமைகளை ஒரு நாள் காமைய நாயக்கனூர் (சாப்டூர்) ஜமீந்தாராகிய மகா-ராஜஸ்ரீ சதுரகிரிக்கட்டாரிகா மு.ராஜேந்திர நாகைய. இராமசுவாமி காமைய நாகைய இராமசுவாமி காமைய நாயக்கரவர்களிடத்திற் சொல்லிக்கொண்டிருக்கையில், அவர்கள் இந்நூலை அச்சேற்றி வெளியிடும்படிக்கு உத்தரவு செய்தார்கள். அவ்வுத்தரவின்படி கோனாரவர்கள் நன்காராய்ந்து விரிந்துகிடந்த அவற்றை ஒருவாறு சுருக்கியும், புதுக்கியும், விளக்கியும், தெள்ளிய வசன நடையிலெழுதி அச்சிற்பதிப்பித்து வெளியிட்டமை அறிஞரனைவராலும் மிகவும் பாராட்டத்தக்கதே. கோனாரவர்களுக்குப் புத்தகக்கடை, அச்சியந்திரசாலை, கிருஷி முதலிய பெரும் பொறுப்புள்ள வேலைகள் எவ்வளவோ இருப்பினும் அவற்றிற் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டிய விலையேறப் பெற்றத் தம் நேரங்களில் பெரும்பாலும் இதன்கண் செலுத்தும்படி நேர்வித்தமையும், யாதோரிடையூறின்றி இந்நூல் விரைவில் வெளிவரும்படி

நிறைவேற்றினமையும், சுந்தரமகாலிங்கப் பெருமான்றிரு வருட்செயலேயாம் உலகத்துக் குபகாரமாகிய இந்நூலை விரைந்து அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு முன்வந்த எனது நண்பராகிய கோனாரவர்கட்கும் அவ்வாறு செய்யும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுத்த ஜமீந்தாரவர்கட்கும் இவ்விருவர்களையும் ஊக்கப்படுத்திப் பெருமையுஞ் சிறப்பும், மேன்மையும் உள்ள இந்நூலை உலோகோபகாரமாகத் தந்தருளிய அருள்வடிவாம் சதுரகிரி சுந்தர மகாலிங்கப் பெருமானுக்கும் யானும் என் நண்பர் பலரும் முறையே மனமார்ந்த வாழ்த்தலும், புகழ்தலும், வணங்கலுஞ் செய்கின்றோம். வாழ்க வாழ்க. வாழ்க. பல்லாயிரத்தாண்டு வாழ்க.

த.குப்புசாமிநாயுடு
மதுரை.

91/4

பதிப்புரை

சித்தர்களின் வரலாறுகளைப் பற்றிக் கூறும் நூல்கள் கிடைத்தில. கிடைத்துள்ள பாடல்களில் ஆங்காங்கு அவர்கள் தம்மைப் பற்றிக் கூறியிருக்கும் நிகழ்ச்சிகளையே தொகுத்துக் கூறவேண்டியுள்ளது. இந்நிலையில் ஓரளவு சித்தர்களின் வாழ்க்கை பற்றியும் அவர்கள் செய்த நூல்கள் பற்றியும் முறையாகத் தொகுத்துக் கூறும் இந்நூல் பெரிதும் வரவேற்கத் தக்கதே!

பல அன்பர்கள் நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் இந்நூல் வேண்டுமெனக் கேட்டனர். இந்நூலில் பழைய பிரதி ஒன்று கிடைக்குமா என்று பலரிடம் கேட்டும் விசாரித்தும் அலைந்து கொண்டிருக்கையில் நண்பர் ஏ.என்.அனுமந்தன் அவர்கள் ஒரு பிரதியைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே அது அச்சுக்குக் கொடுக்கப்பட்டது. வெகு விரைவில் தயாராகி வெளி வந்த நூல்களில் இது ஒன்று என்பதில் பெருமையடைகிறோம்.

சித்தர்கள் வசிக்கும் இடங்களில் ஆங்காங்கு கிடைக்கும் கற்ப மூலிகைகள் உதகங்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு. கோரக்கர் மலை வாகடத்திலும் இந்நூல் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் வாழ்க்கையில் நலம் பெறவும் நீடித்த ஆயுள் பெறவும், ஏன் அழியாமை பெறவுமே உதவக் கூடிய சித்தர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் தாமரை நூலகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு உலகப் புகழ் சேர்க்கவும், தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தின் பெருமை மேலை நாடுகளுக்குச் சென்று மேல் நாட்டு மருத்துவ விஞ்ஞானிகளைத் திகைப்படையச் செய்யவும், உதவக் கூடிய அரிய நூல்களை பழைய பதிப்புகளாகவும் ஓலைச் சுவடிகளாகவும் வைத்திருப்பவர்கள் மனமுவந்து அவற்றைக் கொடுத்தால் பெரிய தொண்டு செய்தவராவார்கள். அவர்கள் உலகம் உள்ளவரை நினைக்கப்படுவார்கள்.

ஆனால் எமது வேண்டுகோள்களுக்குக் கிடைக்கும் பயன் மிகவும் அற்பமாகவே உள்ளது. அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் முதல் ஐயாயிரம் தவிர மீதம் உள்ள பகுதி எங்கே இருக்கிறது? மடங்கள் மடாலயங்களில் இருப்பதாகவும் கூறுகிறார்கள். தம்பிரான்கள் உலகோபகாரமாக அதைக் கொடுக்க முன் வந்தால் அவர்கள் பெருமை நீடித்து நிலைக்கும். வேறு பிறரிடமிருந்து இவ்வுதவி கிடைக்கப் பெறினும் இருகரம் நீட்டிப் பெற்றுக் கொள்வோம்.

வணக்கம்,


எஸ்.பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

விநாயகர் காப்பு	1
நாமகள் துதி	"
சுப்பிரமணியர் துதி	2
பரசிவ துதி	"
பராசக்தி துதி	"
சபாநாயகர் துதி	"
தட்சிணாமூர்த்தி துதி	3
வயிரவர் துதி	"
சுந்தரலிங்கர் துதி	"
மகாலிங்கர் துதி	"
சந்தன மகாலிங்கர் துதி	"
இரட்டைலிங்கர் துதி	"
ஆனந்த வல்லியம்மை துதி	4
மகாவிஷ்ணு துதி	"
திருமகள் துதி	"
நந்தியடிகள் துதி	"
அகத்தியர் துதி	"
பதினெண்சித்தர் துதி	5
நால்வர் துதி	"
கருப்பணசுவாமி துதி	"
காளியம்மை துதி	"
பேச்சியம்மை துதி	"
குலதெய்வத் துதி	"
மாதாபிதா வணக்கம்	6
குரு வணக்கம்	"
அடியார் வணக்கம்	"
அவையடக்கம்	"
புராண வரலாற்றுச் சருக்கம்	7
விநாயகர் துதி	"
இரண்டாவது - சதுரகிரிச் சருக்கம்	9
மூன்றாவது - சதுரகிரிச் தலமகிமைச் சருக்கம்	14
நான்காவது - சதுரகிரித் தீர்த்த மகிமைச் சருக்கம்	17
ஐந்தாவது - சதுரகிரி மூர்த்தி மகிமைச் சருக்கம்	"
ஆறாவது - ஸ்ரீ சுந்தரலிங்க சருக்கம்	25
ஏழாவது - ஸ்ரீ மகாலிங்கச் சருக்கம்	"

எட்டாவது - சந்தன மகாலிங்கச் சருக்கம்	37
ஒன்பதாவது - தைலக்கிணற்றுச் சருக்கம்	41
பத்தாவது - ஆனந்த வல்லியம்மைச் சருக்கம்	43
பதினொன்றாவது சத்தகன்னியர் சருக்கம்	45
பனிரண்டாவது - இரட்டை மகாலிங்கச் சருக்கம்	47
பதின்மூன்றாவது - திருமூலர் சருக்கம்	51
பதினான்காவது - அகத்தியச் சருக்கம்	63
பதினைந்தாவது - போகமகாருஷி சருக்கம்	74
பதினாறாவது - புசுண்ட மகாருஷி சருக்கம்	91
பதினேழாவது - உரோமருஷி சருக்கம்	100
பதினெட்டாவது - யூகிமுனி சருக்கம்	107
பத்தொன்பதாவது - சுந்தரானந்தர் சருக்கம்	114
இருபதாவது - பிரமமுனி சருக்கம்	121
இருபத்தொன்றாவது - காலாங்கி முனிவர் சருக்கம்	134
இருபத்திரண்டாவது - நந்தீஸ்வரர் சருக்கம்	144
இருபத்துமூன்றாவது - தன்வந்திரி முனிவர் சருக்கம்	153
இருபத்து நான்காவது - குருராஜருஷி சருக்கம்	160
இருபத்தைந்தாவது - கொங்கண முனிவர் சருக்கம்	171
இருபத்தாறாவது - சட்டை முனிவர் சருக்கம்	178
தருமன் வாக்கியம் வீமன் வாக்கியம்	182
அர்ச்சுனன் வாக்கியம் நகுலன் வாக்கியம்	183
சகாதேவன் வாக்கியம் திரௌபதை வாக்கியம்	"
இருபத்தேழாவது - இராமதேவர் சருக்கம்	188
இருபத்தெட்டாவது - கோரக்கருஷிச் சருக்கம்	196
இருபத்தொன்பதாவது - மச்சமுனிவர் சருக்கம்	202
முப்பதாவது - பட்டாபிஷேகச் சருக்கம்	214
முப்பத்தொன்றாவது - பதினெண்சித்தர் வரலாற்றுச் சருக்கம்	217
அநுபந்தம் சதுரகிரிக் கட்டாரி காமையராஜன் வரலாறு	240
அன்னக்கொடி மட தருமபரிபாலனம்	"
இராமகிரி கோஷாயி வரலாறு	241
வாழ்த்து	242
இந்நூலில் இடம் பெறாத சித்தர்கள்	243
ஈசுவரன் ஈசுவரி கணநாதர் சுப்பிரமணியர்	"
தட்சிணாமூர்த்தி தேரையர்	244
புலத்தியர் புலிப்பாணி	246
கமலமுனி கடைப்பிள்ளை	247



ஸஹஸ்ராரம்

உ
சிவமயம்

சுந்தரமகாலிங்க சுவாமி துணை

சதுரகிரித் தலபுராணம்.

விநாயகர் காப்பு

பூவார் சதுரகிரிப் பொற்பார் புராணத்தை
நாவார் தமிழால் நயந்துரைக்க-ஓவாதே
வந்துதவு முந்துபெரு மந்தரடியந்தமுவு
சிந்துரமு கந்திகமுந்தே.

இதுவுமது

சொற்குலவு பிரணவத்தின் வடிவானை
    மறைபுகழுஞ் சோதியானை
விற்குலவு மொரு கொம்பு மிருசெவியு
    முக்கண்ணு மேவினானை
மற்குலவு நால்வாயு மைங்கரமுங்
    கொண்டானை மகேசன் பெற்ற
பொற்குலவு விநாயகனாம் பெருங்களிற்றை
    மனத்தறியிற் பூட்டி வாழ்வாம்.

நாமகள் துதி

சொல்லே யுருவாக் கொண்டாளைச்
    சுருதிதானு மானாளை
அல்லே யனைய மனவிருளை யழிக்கு
    ஞானச் செழுஞ்சுடரை
வல்லேயனைய தனத்தாளை வண்மைப்
    பிரமன் மாமனையைக்
கல்லே யனைய வெனதிதய
    கமலத்தடத்தில் வைப்பேனே.

வெள்ளைப் பிள்ளையார் துதி

கள்ளை வடிக்கு மிதழியொடு கவினும் பெரிய கரிமுகனை
வெள்ளைப் பிள்ளை யாரென்ன விளம்பச் சதுரகிரிக்கிள்ளை
புள்ளைப் பழிக்குங்குரல் மாதர் பொருந்த வயங்கும் புண்ணியனைத்
தள்ளை யனைய அன்பின்னைச் சாற்றச் சாரும் தமிழ் வளமே. (3)

சுப்பிரமணியர் துதி

புள்ளி மயிலி லேறிவரும் புத்தே ளாகு மெம்பெருமான்
வள்ளி கணவன் சதுரகிரி வரதன் குகன்றன் றிருத்தாளை
உள்ளி யுள்ளி யென துள்ள முருகு மேங்கு மவனருளைத்
துள்ளி யடைய முயன்றிடுமாற் றோன்று மென் றனார்வமுமே .(4)

பரசிவ துதி

பூமேவு திசைமுகத்தோன் முதலமார்
எல்லோரும் புகழ்ந்து தேடி
நாமேவு தோத்திரங்கள் பலநவின்றுங்
காணவொணா நலத்தை யென்றும்
மாமேவு மன்பருள மகிழவவர்
நினையிடத்தில் வயங்கத் தோன்றித்
தூமேவு நல்லருள்செய் சதுரகிரிப்
பரசிவத்தை தொழுவோம் யாமே. (5)

பராசக்தி துதி

நீரினிலே தண்மையென நிமலனிட
மறைந்திருக்கு நீர்மை யாளைப்
பாரினிலே யைந்தொழிலும் நடைபெறவே
அம்பலத்திற் பரமன் தன்னைச்
சீரினிதா வாட்டுவித்த வித்தகியைப்
பராபரையச் சிந்தை செய்தே
யாரினிதா விவ்வுலக வின்பமெலாம்
பெறாதிருந்தார் யாண்டு மாதோ. (6)

சபாநாயகர் துதி

வெம்பவத்தை யோட்டியருள் வியனிலைய சதுரகிரி
அம்பலத்தி லாடியரு ளைந்தொழிலு நாட்டுவிக்குஞ்
செம்பதத்துச் சிவபெருமான் றிருவடியைத் தொழுவோரே
வம்பவிழ்தா ரிந்திரனும் வணங்குநிலை பெற்றோரே. (7)

தட்சிணாமூர்த்தி துதி

கல்லாலி னிழனின்று காமுறுநால் வருந்தேறச்
சொல்லாமல் முழுதுரைத்துச் சுகநிலையை காட்டி நின்ற
வல்லாள னாம்பெம்மான் வடதிசைக்கு நேர் நோக்கும்
நல்லானைத் தொழுதோரே நமபயத்தை யொழித்தோரே. (8)

வயிரவர் துதி

முத்தேவு மெத்தேவுந் தானாகி யவர்க்கெலா முதன்மையாகி
வித்தேயென் றிலங்குபெருஞ் சிவபெருமான் சதுரகிரி வெற்பைக் காக்கும்
அத்தேவன் வயிரவனே யவனடியை யடைந்துநனியார்வ மோடு
சித்தேறத் துதித்திட்டேன் சிறந்தகவி சொற்றிட்டேன் சிறிய னேனே. (9)

சுந்தரலிங்கர் துதி

அகத்தியன் குறிக்க வாங்கே அருஞ்சிவ லிங்க மாகிச்
சகத்தினி லெவரும் போற்றச் சதுரநற் கிரிமேல் மேவும்
நகத்தினி வில்லி யான நமதுசுந் தரஇ லிங்க
மிகத் திகழ் மூர்த்தி தாளை விளம்பிட வின்பமாமே. (10)

மகாலிங்கர் துதி

உலக முழுதுந் தொழுதேத்தி உய்ய வெனவே சதுரகிரி
இலக வமர்ந்த பெருமானை யிலிங்க மயமா யிருப்பானைக்
கலக மயக்கங் கழன்றோடக் கடையே னுளத்துங் குடி கொண்ட
அலகில் சோதி மகாலிங்கர் அடிப்பூ என்றன் முடிக் கணியே. (11)

சந்தன மகாலிங்கர் துதி

சத்தியெனு மம்பிகையே சார்ந்துதினம் வணங்கிவரத் தழைத்தகோவை
முத்தியருண் முதல்வனெனு மூர்த்திதனைச் சதுரகிரிமுத்தர் தம்மை
நித்திலநற் கோயிலுறை சந்தமை காலிங்கநிமலர் தம்மை
நத்தி நிதந் தொழுவோர்க்கு நாகில்லைப் பரமபதநண்ணுந் தானே. (12)

இரட்டைலிங்கர் துதி

மாணுருவ அரியானா வந்தருளிச் சதுரகிரித்
தோணுமிரட் டைலிங்கத் தூவுருவங் கொண்டானைத்
தாணுசிவ பெருமானைத் தரிசிக்கத் தாரணியிற்
காணுசுக மத்தனையுங் கைகூடு நந்தமக்கே. (13)

ஆனந்த வல்லியம்மை துதி

மோனந்தந் தாண்டமனச் சித்தருளக் கோயிலுறைமுதன்மைத்தேவைக்
கானந்த ரும்கூந்தற் சங்கரியைச் சாம்பவியைக் கந்தன் றாயை
மானந்தர் சோதரியைச் சதுரகிரி தனில்மேவு மயிலை மானை
ஆனந்த வல்லிதனை எல்லிபகல் சொல்லியினி தமைந்து வாழ்வாம். (14)

மகா விஷ்ணு துதி

துளவநறுந் தொடையானைச் சக்ரநெடும் படையானைச் சோதித் தூணி
லுளமுருகு பாலற்காத் தோன்றியருள் செய்தானையுவண மேறி
இளகுமனத் தடியாருக் கன்று திருக் காட்சி தருமினியான் றன்னைத்
தளமலரா லருச்சிக்குங் கரங்குவியுஞ் சதுரகிரிதன்னிற் கண்டே. (15)

திருமகள் துதி

அமுதொடு பிறந்து மாலி னணிமணி மருதத் தோங்குங்
குமுதநற் செவ்வாய்த்தேவி குவிபொரு ளிறைவி யின்பக்
கமுகினை யேய்க்கு மேன்மைக் கழுத்துடைக் காமர் பொன்னி
அமுதுகு மலர்த்தாள் போற்றி அவளருள் போற்றி போற்றி. (16)

சத்தகன்னியர் துதி

பத்தியிற் சிறந்து நாளும் பாருலகோர்கள் கூற
முத்தியின் நெறியி னின்ற முத்தநன் மூர லாராம்
அத்திருச் சத்த கன்னியடிகளை முடியிற் கொண்டேன்
சித்திசேர் சதுர வெற்பின் சீர்த்தியைச் செப்ப வென்றே. (17)

நந்தியடிகள் துதி

எம்பெருமா னிருந்தருளு மியற்பெரிய சதுரகிரிச்
செம்பதும் கூடத்துச் செறிந்துவரும் அடியவரைத்
தம்பதும கரத்தேந்துந் தனிப்பிரம்பாற் றட்டியவர்
கும்பதனைப் பந்திசெயு நந்தியடி கும்பிடுவாம். (18)

அகத்தியர் துதி

மிகத்திரு வுமையின் மன்றல் மேவுநாள் வடக்குத் தாழ்வைச்
சகத்தியல் சமமாய் நிற்கச் சங்கரர் சொல்லாற் றெற்கே
அகத்தினி லுவகை யோடே யடைந்தினி தமர்ந்த செஞ்சொ
லகத்தியனிணைத்தாள் போற்றின் அருட்டமிழ்கொழிக்குமம்மா. (19)

பதினெண்சித்தர் துதி

ஆண்டவனா திமூர்த்தி யருட்டிரு வன்மை காட்டி
ஈண்டவிவ் வுலகி லின்று மிருந்தரு ளீரொன் பானாம்
பூண்டநற் புகழார் சித்தர் பொற்பத மிறைஞ்சி யேத்திக்
காண்டகு சதுர வெற்பின் கதையினி துரைக்கலாமே. (20)

நால்வர் துதி

ஈசன் பாகப் பெண்ணளித்த வினிய பாலை யுண்டமுனி
பேசக் கல்லைப் புணையாகப் பெரிது கொண்ட புகழ்ப் பெரியோன்
வாசப் பாவை யகம்பரமன் வாய்ந்து தூது செலச் செய்தோன்
தேசத் தமிழா லமுதடிசேர் நேய னின்னோரெமக் கரணே (21)

கருப்பண சுவாமி துதி

விருப்பணச் சதுர வெற்பின் வியன்கதை விளம்ப லுற்றேன்
பொருப்பணம் வில்லாக் கொண்ட புங்கவன் புராணந் தன்னில்
திருப்பணெல் லாமு மேவச் செய்திடல் கடனாக் கொள்வன்
கருப்பண சாமி யென்னுங் காவல்செய் கடவுள் நானே. (22)

காளியம்மை துதி

சிங்க முதுகி லேறிமுனஞ் சினவே லசுரர் தலையழித்துத் தாம்
தங்கு புவன மெலாங்காத்துச் சதுர கிரியில் நாளைக்கும்
பொங்கு களிப்பி னமர்ந்தருளே பொருந்திக் காக்கும் புத்தமுதாம்
எங்கள் காளி சரண்டொழவே எய்து மின்பப் பெரு வாழ்வே. (23)

பேச்சியம்மை துதி

பேய்சூழ் கானத் தாடுமொரு பெரியான் பங்கி லுறைவாளை
நோய்சூழ் பிறவி தனையறுத்து நுவலுமின்பப் பேரருளை
ஆய்தா னாகுஞ் சதுரகிரி யணங்காம் பேச்சி யம்மையடி
வாய்தான் குளிரப் பாடிடினே வாய்க்கு மெல்லா வளமு மெற்கே. (24)

குலதெய்வத் துதி

கந்தனத்தை முதலோர்கள் கருணைக்குரிய களிப்பாளை
வந்தனத்தை யெம்போல்வார் வழங்கப் பெறுமெங் குலதேவை
முந்தனத்தை முதுபொருளை முறையே யெற்குத் தருவாளைச்
சந்தனத்தை யணிமாரித் தாயை நித்தஞ் சாற்றுவமே. (25)

இதுவுமது

காவுடைய நிலத்தெமது குலத்துதித்துக் கவின்பெற்றுக் கருணை கொண்டு
காவுடைய விண்ணாடு புக்கிருந்தே எமைப்புரக்குங் கருத்தி ணாளை
ஆவுடைய வம்மையெனுங் கன்னிதனைத் துதித்தேத்தி யன்பினோடு
பாவுடைய சதுரகிரி நாதர்தல மகிமை தனைப் பகருவேனே. (26)

மாதாபிதா வணக்கம்

புவியிற்சேயா யெனைப்பெற்றுப் புரந்து களிப்பை யூட்டியநல்
நவியிற் சிறந்த கண்ணுடைய நம்பி யென்னும் நற்றாயைச்
செவியிற் சீர்சொல் திருத்தாதை இராமசாமிச் செம்மலினைக்
கவியிற்பாடித் துதித்தன் பாய்க் காலை மாலை தொழுவேனே. (27)

குரு வணக்கம்

இம்பர் கவிசொல் திறமெற்கே எய்த வருள்செய் திசை மிகுந்த
கம்பர் குலத்து வந்துதிந்த கருணை ராமசாமியெனும்
கும்பன் நிகருந் தமிழ்வல்லான் குணத்தாள் பரவிக் கும்பிட்டே
நம்பன் சதுர கிரிக்காதை நன்கு நவில லுற்றேனே. (28)

அடியார் வணக்கம்

முடியார் கங்கா தரற்கிடமாம் முதிய சதுர கிரிக்குவந்தே
மடியா ராகிச் சுந்தரமகாலிங் கம்மென் றின்புறுவோர்
படியார் படித்தா ராரெனினும் பரமன் றிருக்கூட்டத் தரந்த
வடியார் பாதந்தொழுதேத்தியடியார்க் கடியார்க்கன்பு செய்வாம். (29)

அவையடக்கம்

உலகமெலாந் தொழுதுய்ய வருள்சு ரந்துள்
ளுகந்திருக்கு மகாலிங்கர் கோயில் கொண்டே
யிலகவொளிர் சதுரகிரிப் புராணந் தன்னை
இருந்தபடி எழுதியச்சி லிடமுன் வந்தேன்
பலகவிஞ ரிருப்பவியான் துணிந்த தென்னே!
பத்தியதோ ஆசைவெட்கம் பாரா தாலோ
அலகிலருள் ஆடலிறை கதையென் றெண்ணும்
அறிஞரொப்பு வாரிதற்கோ ரையமின்றே. (30)

உ
சிவமயம்
முதலாவது

புராண வரலாற்றுச் சருக்கம்.

விநாயர்துதி

நித்த னெந்தை நிறைந்த புராதனன்
வித்த னிந்து விளங்குச டாதரன்
சித்த தந்தஞ் சிறந்தவி நாயகன்
அத்த னுந்த வடைந்தரு ளுட்டுமே.

வேறு விருத்தம்

சீர்பூத்த சதுரகிரி மகத்துவத்தைப் பத்தியொடு செவி வாய் கேட்கப்
பேர்பூத்த தவபலத்தால் நாகார்ச்சு னாதியர்க்குப் பெரிதன் பாக
நார்பூத்த மனச்சாணாங் கியர்மொழிந்த முறைப்படியே நயந்து நாமும்
ஏர்பூத்த தமிழ்மொழியா லியம்புவா மிவ்வுடற்பே றெய்த மன்னோ

நெடிய கடல் சூழ்ந்த இப்பூமியின் கண்ணுள்ள அழகிய சிவக்ஷேத்திரமாகிய சதுரகிரியில் மகாசிவஞான யோக சித்தர் வசிக்குந் தபோவனங்க ளெல்லாவற்றுள்ளும், மிகுந்த சிறப்புற்று விளங்கிய தேவலோகக் கானலென்னுஞ் சுந்தரானந்த முனிவர் வனத்தில், சகலாகம வேதசாஸ்திர புராணங்களையுமுணர்ந்த சாணாங்கிய முனிவர், அவ்வனத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கும் முனிபுங்கவருட் பெரியவராகிய நாகார்ச்சுன முனிவரிருக்கும் ஆச்சிரமத்துக் கெழுந்தருளுதலும், அவரைக் கண்ட நாகார்ச்சுன முனிவர் எழுந்திருந்து வணங்கி வாழ்த்தித் தகுந்த ஆசனத்தி லெழுந்தருளச் செய்து அருக்கிய பாத்திய ஆசமனாதிகளாற் பூசித்து உபசரித்து சுவாமி! நீர் இங்கெழுந் தருளப்பெற்றது அடியேங்களுடைய பாக்கிய மாகும். மகா மகத்துவம் பொருந்தியதும், தபோதனர்கள் வசிக்கக் கூடியதுமான இச்சதுரகிரி மான்மியத்தைக் கேட்க எங்களுக்கு அவாவுண்டாயிருக்கிறது. சுவாமி! அடியேங்கள்மீது கிருபை வைத்து அதனைக் கூறியருள வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கி முனிவர் மனமகிழ்ச்சி கொண்டு கிருபையோடுங் கூறுவாராயினர்.

கேளும் நாகார்ச்சுனாதியரே! உலகத்திலே மான் மழு அபயவரதம், சதுர்ப்புஜம், காளகண்டம், திரிநேத்திரம், சடாதரம், கங்காதரம், சந்திரசேகரம், அரவாபரணம் விபூதி உருத்திராக்க தாரணங்களோடு கூடிய சங்கரசதாசிவப் பெரு...ள்

எழுந்தருளியிருக்குந்தானங்கள் அநேகமுள்ளன. அவற்றுள், சதுரகிரி என்னும் இத்தலம் அவருக்கு முக்கியமானதாகும். முந்திய பதினெண் புராணங்களும், சிவபுராணம் பத்து, விஷ்ணுபுராணம் பத்து, பிரமபுராணமிரண்டு, அக்கினிபுராணமொன்று, சூரியபுராணமொன்று எனப் பிரிக்கப்பெற்றிருக்கின்றன அவைகள் முறையே இலிங்கம், காந்தம், கூர்மம் சைவம், பிரமாண்டம், பௌடிகம், மச்சம், மார்க்கண்டேயம், வராகம் வாமனம், காருடம், நாரதியம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்கினேயம் பிரமகை வர்த்தம் என்னும் பெயர்களையுடையனவாகும். அவைகளொவ் வொன்றிலும் சிவ பிரம்மா, விஷ்ணு முதலியவர்களின் மகிமைகள் மிக விரிவாகக் கூறப்பெற்றிருக்கின்றன. இப்பொழுது நாம் சொல்லப் போகிற சதுரகிரித் தலபுராணமோ! அம்மகிமைக ளெல்லாவற்றையும் மிகச் சுருக்கியும், விளக்கியும் கூறும். ஆகையால் தவயோக ஞான பரிபக்குவமுடைய உங்களுக்கே இப்புராணங் கூறத்தக்கது. இதனை நீங்களே கேட்குந் தகுதியையுடையவர்கள்; ஆனதா லுங்களுக்கு இப்பொழுது வரிசைக்கிரமமாகச் சொல்லுகின்றோம். கேட்பீர்களாக என்று சாணாங்கி முனிவர் சொல்லத் தொடங்கினார்.

முதலாவது,
புராணவரலாற்றுச் சருக்கம்,
முற்றுப்பெற்றது



ஸ்ரீ சுந்தர மகாலிங்கம்



ஸ்ரீ பெரிய மகாலிங்கம்
சதுரகிரி



ஸ்ரீ கோரக்கர் குகையில் சித்தர்
ரூபத்தில் மீன்கள்



ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் சந்தனக் காப்பு (சாய்ந்த நிலை)



ஆனந்த வள்ளி அம்மன்
11 வது தலைமுறை பரதேசி சுவாமிகள்




ஸ்ரீ சுந்தரமூர்த்தி கோயில் (முன்புறம்)



ஸ்ரீ கோரக்கர் குகை



ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்



சதுரகிரி மலையில் கைலை போன்ற தோற்றம்



சதுரகிரி ஸ்ரீ பிலாவடி கருப்பசாமிகோயில்




சதுரகிரி மலையில் ஸ்ரீ நாக கன்னி




ஸ்ரீ சுந்தர மகாலிங்கம்



ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் திருக்கோயில் பின்புரம்
(தேங்காய் வேண்டுதல்)



ஸ்ரீ சந்தன மகாதேவி



சதுரகிரி அடிவாரம் பேருந்து நிலையம்



சந்தன மகாலிங்கம் கோவிலின்
வெளிப்புற காட்சி

உ
சிவமயம்
இரண்டாவது

சதுரகிரிச் சருக்கம்

நிலவும் பதினெண் சித்தரெனும் நீர்மைக் கும்பன் முதலாகக்
குலவும் பெருமைக் கோரக்கர் ஈறாக் குறிக்குந் தவ முனிவர்
உலவும் மேன்மை தனைக்கொண்டே உமைதன் பாகன் அகத்திருக்கக்
கலவும் சதுர கிரிப்பெருமை கனிய வுரைப்பாங் காசினிக்கே.

கேளுங்கள் முனிவர்களே! சீரிலங்குஞ் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலை நகராகிய மதுரையம்பதியைச் சார்ந்ததும், மேருகிரி முதலான மலைகளுக்கெல்லாம் மேலான பெருமை வாய்ந்ததும், இப்பாண்பு நாட்டிற்கே, ஓர் திலகம் போன்றதுமான மகாசதுரகிரி என்னுந் தலமிதுவே யாகும்.

இத்தலமாகிய மலையின் நான்கு சிகரங்களிலும் நீல நிறமணிக் கிரீடங்கள்போல் உலகத்துக்குத் துணைக் காரணமாகிய மழை மேகங்களானவை கவிந்து யுத்த வீரர்கள் வாள் வீசுவதுபோல மின்னி, அரசர்களது முரசமெனத் திசைகளதிரமுழங்கியிடித்துக் கொடையிற் சிறந்த வள்ளல்: பாத்திரமறிந்து கனகமாரி பொழிவது போல் சளசள எனத் தாரைதாரையாக மழையைப் பொழியும்.

அப்படிப் பொழிகின்ற மழைத்துளிகள் பலவும் ஒன்று சேர்ந்து பல அருவிகளாகி வந்து கூடித் தோணியாறெனவும், கௌண்டின்னிய நதியெனவும் பெயர் பெற்று இரண்டாறுகளும் விலைமாதரானவர் ஒரு கௌரவமான அரசனைத்தழுவி அவனிடத்துள்ள விலையுயர்ந்த அநேகபொருள்களையெல்லாங் கவர்ந்துகொண்டு தன்னில்லத்திற்குச் செல்வது போல், யானைமருப்புகளையும், சந்தனம் அகில், அசோகம், தேக்கு, வேங்கை, சுரபுன்னை, முதலான பல விருக்ஷங்களையும், நவரத்தினங் களையும், நானா வித பழவர்க்கங்களையும், வாரிக்கொண்டு விரைந்து ஓடி அவ்விடமிருக்கிற வனப்பூஞ்சோலைகளில் நின்றொழுகுந் தேனாறுகளுடன், கலந்து சென்று உவர் நீரையும் உண்ணத்தகும் இன்சுவையுள்ள நீராகச் செய்யும். இன்னும் இச்சதுரகிரியில், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிர மகருஷிகள் ஆரமங்களும், கின்னரர், கிம்புருடர், சித்தவித்தியாதரர் முதலானோர்களுடைய கீதவாத்தியங்களும், வேணுகானங்களும், வேதகோஷ்டங்களும், வேள்விச் சாலைகளும் மலிந்துள்ளன. மேகங்களைத் தம்பதினமென்று நினைத்து யானைகள்

துதிக்கைகளாற்றமுவும், அந்த யானைகளைக் குரங்குகள் கரியமலைக ளென்று நினைத்து அவைகளின் மேலேதாவும்.

வேடுவர்களும், வேடுவமாதர்களும் வசிக்கின்ற குடிசையிற் கொண்டுபோய் ஆயர்களும், ஆயர் மங்கையர்களும், ஆவின்பாலைத் தினையளவுக்குச் சரியாக அளந்துகொடுப்பார்கள்.

அவ்வேடுவ மாதர்கள் தங்களுடைய கூந்தலுக்கு, வாசனையை யூட்டுகிற சந்தனக் கட்டைகளின் புகையும். குகைளிலும் ஆச்சிரமங்களிலும் இருந்து ஆத்ம ஞானத்தைக் கருதி தவஞான நிட்டைபுரிந்து வருகிற அகத்தியர், போகர், புகண்டர், உரோமர், யூகி, சுந்தரானந்தர், பிரமர், சட்டையர், நந்தி, தன்வந்திரி, திருமூலர், கொங்கணர், காலாங்கி, இராமதேவர், கோரக்கர், மக்சமுனிவர், புலஸ்தியர், தேரையர் முதலான அநேக மகருஷிகள் செய்கிற வேள்விகளது புகையும் திரண்டொன்றாகி ஆகாயத்திற் சென்று மேகமெமுதல் போற் கூட்டமாக இருப்பதைக் கண்ட குயில்கள் யாவும் கூவாதொழிந்தன. வண்டுக ளிராகங்களைப் பாட மயில்களானவை சிறைக்கலாபத்தை விரித்து ஆடிக்கொண்டிருக்கும்.

கேளுங்கள் முனிவர்களே! இன்னும் இச்சதுரகிரியில், மூங்கில், நாங்கில், வேங்கை, கோங்கு முதலிய அநேகவிருக்ஷங்களும், எந்த மலைகளிலுங் கிடைத்தற்கரிய அழுகணி, இருப்பவல்செடி, உதிரவேங்கை, உரோமவேங்கை, உரோமவிருக்ஷம், ஏறழிஞ்சி, கற்றாமரை, கணைஎருமைவிருக்ஷம், கருநொச்சி, கருநெல்லி, கருங்கொடிவேலி, கையாந்தகரை, கானற்பலா, சாயாவிருக்ஷம், செங்கொடிவேலி சேந்தாடுபாவை, செங்கடுக்காய், செந்நாயுருவி, செங்கற்றாழை. தில்லைவிருக்ஷம், சஞ்சீவி மூலிகை சிவந்த இலைக்கள்ளி சுணங்க் விருஷம் சோதிவிருக்ஷம், முண்டக விருக்ஷம், பஞ்சதரு, வெண்ணாவல், மஞ்சப்பூத்தை வேளை, வெள்ளைப்புனல்முருங்கை, சோதிப்புல்லு, பவளத்துத்தி, பொற்றலைக் கரிப்பான், கருநாரத்தை, நாகதாளி, வனப்பிரமை, பேய்ச்சுரை, தொழுகண்ணி முப்பிரண்டை, நாகபடக்கற்றாழை, குருவரிக்கற்றாழை முதலிய காயகற்ப மூலிகைகளும் நிறைந்திருக்கின்றன. இத்தன்மை பொருந்திய பலவளங்களையுடைய சதுரகிரியானது ஒளிமிகுந்த செஞ்சடா மகுடத்தைத்தாங்கிய ஸ்ரீ சுந்தரமகாலிங்கப் பெருமானுக்கு ஓர் அரியதானமாகி யிருப்பதோடு தன்னிடத்துச் சரண்புகுந்தவரை இம்மை மறுமைகளில் வருத்தும் சனன மரணமாகிய வியாதிக்கு மணிமந்திர ஔடதம் போலிருந்து தவத்தை வளர்ந்து ஆத்மஞான மோக்ஷத்தையடையச் செய்யும். இதுவல்லாமல் அழகிய கானல்களும், அமையப்பெற்றிருக்கின்றது. அக்கானல்கள் பூர்வத்தில் திருக்கயிலாய மலையைவிட்டுப் பரமசிவன் பார்வதி தேவியாருடனே பிர்மா விஷ்ணு முதலிய தேவ கூட்டங்கள் புடைசூழ எழுந்தருளி வந்திருந்த இடங்களாகும். அன்றியும்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளாலாகிய பஞ்சகிருத்தியங்களுக்குங் கருத்தாவாகிய சிவபெருமான் சிருட்டி காலத்திலேயே, இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் தன்னிடத்திலேயேயுண்டாகத் தோன்றியது. இம்மலை, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அசுத்த தத்துவ இருளோடும்படி பிரகாசமாகிய சந்திர சூரியாக்கினிகளுடைய ஒளியை வீசும் அதன்றியும், அரவா பரணராகிய சிவபெருமான்,

தம்மைவிட்டுப் பிரியாது வசிக்கும்படி மகாமேரு, கைலை, மந்தரம், நிடதம் ஆகிய இந்நான்கும் இம்மலைக்கு கொடுமுடிகளாக வந்திருப்பது போல நான்கு சிகரங்கள் பிரகாசிக்கும்.

இன்னும் இச்சதுரகிரியானது மேரு முதலிய எட்டு மலைகளுக்குந் தலைமையான மலையாகும். பஞ்சாக்ஷரத்தாலிவ்வுலகை இரட்சிக்கும் நம் பெருமானுக் கிருப்பிடமாகிய சதுர்வேதங்களுக்கு முன்னே உண்டான ஓங்காரவட்டத்திலமைந்த நாலிதழ்களின் வடிவங்களே அம்மலையின் சொருபமாகும். இதுவுமின்றி எள்ளுக்கு ளெண்ணெய்போலெங்கும் நிறைந்திருக்கின்ற சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கு தத்துவங்களே இச்சதுரகிரியின் விடயங்களாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சதுரகிரியின் கண் பறவை கீரி, பறவைப் பாம்பு, பறவைப் பூனை, பறவை ஓந்தி முதலிய விசித்திரப் பிராணிகளும், அகண்ட போண்டமாகிய இரு தலைப்பட்சிகளும், எண்காற்புள்ளாகிய சாபமும், தீவிழுங்குபட்சியும், மதிபமிழ்தத்தையுண்ணும் சகோரப் பட்சியாகிய செம்போத்தும், பிற்பல பறவைகளும், கும்புகும்பாய்ச் சஞ்சரிக்கும் அன்றியும் சிங்கம், யாளி, புலி, கரடி, கடுவாய், யானை, பன்றி முதலிய துஷ்டப் பிராணிகளெல்லாம் மானிடர் கண்களுக்குப் புலப்படாமல் மறைவாய் ஒன்றோடொன்று பகை பாராட்டாது மகிழ்ந்துலாவும், மான், மரை, மலைப்பசு, வரையாடு, காட்டெருமை முதலிய விலங்கினங்கள் சாந்தமாய்த் துள்ளி விளையாடித் திரியும். மலைப் பாம்புகள் மிக நெடிதாய மரம் போல அச்சந்தராது வாளாக் கிடக்கும். இவ்வளவுச் சிறப்பினையுடைய மலையில், மூங்கில்கள் சொரியும் வெள்ளிய முத்துக்களது பிரகாசத்தையுடைய கைலையங் கிரியைப் போல் கிழக்குத் திசையின் கண்ணிருக்கிற இந்திர கிரியும், சந்திர சூரியர்கள் வலமாக வருகின்ற மேருகிரியைப் போல் தென் திசையிலிருக்கிற ஏமகிரியும், சகல ஜனங்களும் பார்த்தவுடன் பிரமை கொள்ளத்தக்க மந்தா கிரியைப் போல் மேற்குத் திசையிலிருக்கிற வருண கிரியும், வனக்கானல்களும், பூஞ்சோலைகளும், கானாறுகளும், தண்கமலப் பொய்கைகளும், இருத்தலான நிடத கிரியைப் போல் வடதிசையிலிருக்கிற குபேரகிரியும், அதன் மத்தியிற் சிவகிரி, பிரமகிரி, விஷ்ணுகிரி, சித்தகிரி ஆகிய இந்நான்கு கிரிகளும், அமையப் பெற்றிருப்பதாற் சதுரகிரியென இம்மலைக்குப் பெயர் வழங்கலாயிற்று.

அன்றியும் அந்நான்கு கிரிகளுக்கு, மத்தியிற் சஞ்சீவிகிரியென ஓர் அற்புதமலை யிருக்கிறது. அம் மலையில் அநேக அரிய சஞ்சீவி மூலிகைகளிருக்கின்றன. அது பூர்வத்தில் இராம இராணுவ யுத்தத்தில் இந்திர சித்து என்பவன் இலக்குமணன் முதலானோர்களைப் பிரமாஸ்திரத்தால் மூர்ச்சித்துக் கீழே விழும்படி செய்ய அதைக் கண்ட சுக்கிரீவன் முதலானோர்கள் மிகுந்த வருத்தமுற்று அம்மூர்ச்சையைத் தெளிவிச் வாயு புத்திரனாகிய ஆஞ்சனேயரிடத்தில் அன்போடு சகல செய்திகளையுந் தெரிவித்து அஷ்டகுல பர்வதங்களுக்கு மப்பாலிருக்கிற சஞ்சீவி மலையை எடுத்து வரும்படி சொல்லியனுப்புவிக்க, அவர் உடனே அங்குச் சென்று அம்மலையைத் தூக்கிக் கொண்டுவந்து இலக்குமணன் முதலானோர்களை மூர்ச்சை தெளிந் தெழுந்திருக்கும்

படி செய்த பின்பு சுக்ரீவன் முதலானோர் சொற்படி திரும்பவும் அனுமாரானவர் சஞ்சீவிமலையைத் தூக்கி இருந்த இடத்தில் வைத்து வருவதற்கு வடதிசையை நோக்கி ஆகாயமார்க்கமாய்ச் செல்லும் போது, அவ்வழியிலிருக்கிற சதுரகிரியிற் றவம் புரிந்துகொண்டிருந்த தவமுனிவர்கள் பலருங்கண் டதிசயித்து அம்மலையை அவர் முன்னெடுத்துச்சென்ற காரணத்தையும், பின்னர் அதை மறுபடிந் திரும்பக் கொண்டு வரும் விஷயத்தையும், அந்தச் சஞ்சீவிகிரியில் தங்களுக்கு வேண்டிய அநேக மூலிகைகளிருப்பதையும், ஞான திருஷ்டியினாற் றெரிந்து சந்தோஷித்து அக்கிரியின் ஓர்பகுதி இந்நான்கு கிரிக்கும் மத்தியில் வீழவேண்டுமென நினைத்த உடனே, அவர்களது பிரம்மஞானதவவலிமையால் ஓர் பெரிய காற்றுண்டாகிச் சஞ்சீவி மலையினது ஒரு பகுதி மாத்திரம் இச்சதுரகிரிமத்தியில் விழும்படி செய்தது. அதைந் தெரிந்த அனுமாராகிய ஆஞ்சனேயர் இங்குள்ள அரிய தவஞான முனிவர்கள் தேகசித்தி செய்து கொள்வதற்கு ஈதோ ருபகாரமாக இருக்க என நினைந்து அச்சஞ்சீவி மலையைக் கொண்டு சென்று முன்னிருந்த இடத்தில் வைத்துவிட்டு ஸ்ரீராமபிரான் முதலானோர்களிடம் போய்ச் சேர்ந்தனர்.

ஆதலால் அந்தச் சஞ்சீவிமலையின் மூலிகைகளானவை தவ நிட்டை புரிந்துவருகிற தவமுனிவர்கள் காய சித்தி பெறுதற்கும் உலகவசியம், மோகனம், தம்பனம், பேதனம், மாரணம், ஆகிருஷ்ணம், உச்சாடனம், வித்து வேடணம் முதலான அட்டகருமங்களுக்கு ஆதாரமாகிய அநேக மந்திரசித்திகளுக்கு உதவுவதுந் தவிர, அம்மலையின் காற்றானது தேகத்திற் பரிசித்த மாத்திரத்திற் சகல வியாதிகளையும் போக்கும்.*

இன்னும், இச்சதுரகிரியிற் பதிந்திருக்கிற நவமணிகளுடைய கிரணங்களாலும், ஈங்குச்சஞ்சரிக்கின்ற அநேக சர்ப்பங்களுடைய நவரத்தினச் சோதியாகிய சிவப்பு நிறங்களாலும், முத்துக்களது வெள்ளிய தோற்றத்தாலும், சோதிவிருக்ஷத்தின் பிரகாசத்தாலும், எம்பிரான் எழுந்தருளியிருக்கும் இச்சதுரகிரிக்கு இரவென்பது பகலென்பதுங் கிடையா. தேவர்களுஞ் சித்தர்களும், ருஷீஸ்வரர்களும், முனிவர்களும், விஞ்சையர்களும், முறையே பத்தர்களாய் விருக்ஷங்களாய் புற்பூண்டு செடிகொடிகளாய் மிருகங்களாய் பட்சிகளாய் இருப்பார்கள். ஆதலால் சதுரகிரிக்கு ஒப்பாகிய மலை இவ்வுலகத்தில் எங்குங்கிடையாது. இன்னும் பற்பல காரணங்களாற் சிவபெருமானையும் பார்வதி தேவியையும், பிரமாவையும், விஷ்ணுவையும், போன்றிருக்கும்: இவ்விதமிருக்க, இதன் மகிமையை யாம் என்னென்று புகலுவோம். ஆகையா லிந்தமலையை வலமாகப் பிரதக்ஷணம் வந்தவர் தீராத்துன்பங்களையெல்லாம் போக்கினவராவர். இதன் திக்கு நோக்கிப் பணிந்தவர் மேலாகிய ஆத்ம ஞான தவமோட்சத்தைச் சாந்தவராவர். இப்புராணத்தைப் பயபக்தியோடு ஒரே சிந்தையாக இருந்து பாராயணஞ் செய்தோர் அதை கேட்போர்

---

* இவ்வுண்மையைத் தற்காலத்தில் இங்கிலீஷ் (டாக்டர்கள்) வைத்தியர்கள் கண்டுபிடித்து அம்மலையின் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களில் வியாதியாளரைப் போயிருந்து காற்றுவாங்கும்படி சொல்கிறார்கள்.

ஆகிய இவர்கள் யாவரும் தேவவாழ்வையடைவர். இம்மலையிலேயே யிருந்து வாசஞ்செய்வோர்களுடைய பெருமையை அந்த ஆதிசேடனாலுங் கூறமுடியாதெனின் நம்மாற் சொல்லமுடியுமோ! என்று சாணாங்கி முனிவர் திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட; நாகார்ச்சுனர் முதலிய முனிவர்கள் சுவாமி! தாங்களிப்பொழுது கிருபையோடு விளம்பிய சதுராசல வள விசேடங்களைச் செவி வாயிலாக நுகர்ந்து சனனமாகிய பசிதீர்ந்தோம். ஆனாலும், இனி இச்சதுரகிரித் தல மான்மியத்தை யருளிச் செய்ய வேண்டுமென்று கேட்கச் சாணாங்கி முனிவர் மொழிவாராயினர்.

இரண்டாவது,
சதுரகிரிச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.
மூன்றாவது

சதுரகிரித் தலமகிமைச் சருக்கம்

மந்தரங் கலக்க முன்னாள் வாரியின் மருந்தின் மிக்க
நந்தலில் மூலி கைகள் நன்கமை சதுர வெற்பின்
சுந்தர லிங்கர் வாசத் தூயநற் றலத்தின் சீரை
எந்தரங் கொண்டு சாற்ற வெழுந்தன மீங்கு மாதோ.

இப்பூவுலகத்திலே சிவபெருமான் வீற்றிருந்தருளுந்தலங்களனந்த முள்ளன. அவற்றுள், தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்றாலும், முக்கியமாகச் சிறந்தது, இச்சதுரகிரியாகிய ஒரு தலமேயாகும். அன்றியுஞ் சத்தசமுத்திரமும், மேருவாதி மலைகளும் எல்லாவுலகங்களுந் தலைதடுமாறி யழியுஞ் சர்வசங்கார காலத்திலும், சுத்தப்பிரமமாகிய சிவபெருமானைப்போலவே அழியாமல் நிலைபெற்றிருப்பதாகும்.

தானந் தருமந் தவஞ் செய்தோராயினும் சதுரகிரிக் கடவுளைத் துதித்து வணங்கினவர்க்கன்றி மற்றோருக்கு அவை பலன் தரமாட்டா. முனிவர்களே! இமைய கிரியில் உமாதேவயார் திருமண மகோற்சவகாலத்திலே தேவர்களெல்லோரும் ஒருங்குகூடி வந்திருக்க அப்பொழுது வடதிசை தாழ்ந்து தென்திசையுயர்ந்திட அதனைச்சமமாகச் செய்யும் பொருட்டு அகத்திய முனிவரைச் சிவபெருமான் அவிடத்திற்கனுப்ப அவர் பொதிகைமலையிற் சென்று சில நாளிருந்து பின்பு அநேக தவருஷிகள் வாசஞ்செய்கிற இச்சதுரகிரித்தலத்திற்கு வந்து தான்முன் மேருகிரியிற் கேட்டுக் கொண்ட வரத்தின்படி சிவபெருமானுடைய திருமணக்காட்சியைத் தரிசித்ததலமும், பூலோக கைலாயமென்றதும், இத்தலமேயாகும்.

தேவலோகத்திலிருக்கிற கற்பகவிருட்சமானது இச்சதுரகிரியி லெழுந்தருளியிருக்குஞ் சுந்தரமகாலிங்கக் கடவுளது பக்கத்தில் முளைத் திருக்கின்றது. ஆதியும் அந்தமுமில்லாத அக்கடவுளின் மகிமையே, நான்குதிரியாக மேலெழுந்தாற்போலிக்கின்ற உயர்ந்த அம்மலையிலுள்ள தீர்த்த மகிமை, மூர்த்தி மகிமை, தலமகிமை ஆகிய இவைகள் திரிகாலங்களையு முணர்ந்த முனிவர்களாலும் தெரிவதற்கரியனவாகும். இன்னும் இத்தலத்தில் மனிதரிவர், தேவரிவர், ஆறுகளிவை, பொய்கைகளிவை, கானல்களிவை, சஞ்சீவிமூலிகைகளிவை, மலையிது, சிவலிங்கவடிவிது என்று பகுத்துப்பாராமல் எல்லாம் சிவவடிவாகவே ஞானிகள் காண்கின்றமையால் அவ்வற்புதத்தை அறிந்துகூற எம்போன்றவர்கட்கு எளிதாகுமோ!

ஆகையால் அருணையம்பதி நினைத்தவர்க்கு முத்தியையும், சிதம்பரம் வணங்கியவர்க்கு முத்தியையும், திருவாரூர் செனித்தவர்க்கு முத்தியையும், காசி இறந்தவர்க்கு முத்தியையுங் கொடுக்கும். இச்சதுரகிரித்தலமோ? மேற்கூறிய நால்வகையோருக்கு மோக்ஷங் கொடுக்கும். எத்தலங்களிலும் எவர் என்ன பாவங்களைச் செய்தாலும், அப்பாவங்களெல்லாம் இந்தத் தலத்திற்றீரும். இத்தலத்திற் செய்த பாவங்கள் எந்தத் தலத்திற்குச் சென்றாலுந் தீரமாட்டாது. இங்குவாசஞ் செய்த பெரியோர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேறு தலத்திற்குச் செல்லமாட்டார்கள். இம்மலைத்தலத்தின் சஞ்சீவி மூலிகைக் காற்றினால் ஆயுள் விருத்தியாவதோடு முற்பிறப்பிற் செய்த பாவங்களெல்லாம் பானுவைக் கண்ட பனிபோல் நீங்கும்.

சதுரகிரியையும், ஆங்குள்ள அழகிய சிற்றாறுகளையும், புண்ணிய தீர்த்தங்களையும், தண்மலர்ப் பொய்கைகளையும், வளந் தங்கிய தேன்நிறைந்த வனப்பூஞ் சோலைகளையும், கானல்களையும், காணும்பொருட்டுப் பூலோகத்தில் வந்து சனிக்க வானுலகத்திலிருக்கும் வானோர்கள் தவம்புரிவார்கள். அதனாலன்றோ சிவ பெருமானும், உமாதேவியும், பிரம விஷ்ணு முதலான பெருந்தேவர்களும் மற்றைத்தேவருஷி கூட்டங்களுஞ் சூழவந்து இவ்விடத்திலுள்ள ஒவ்வொரு கானல்களிலும் அகத்தியருக்காகத் தங்கியிருந்தனர். அன்றியும் இந்தச் சதுரகிரிக்கு மேருகிரி, கைலாசகிரி, இந்திரகிரி, சுந்திரகிரி, சூரியகிரி, பிரமகிரி, குபேரகிரி, சித்தகிரி, ஏமகிரி, சிவகிரி, சத்திகிரி, உதயகிரி என்ற பதினாறு திருநாமங்கள் உண்டு. ஏனெனில் பார்வைக்கு அக்கிரிகள் போற்றோற்ற முண்டாகிறபடியால் அப்பெயர்கள் வழங்கலாயின. இத்தலத்திலிருக்கிற சந்திரதீர்த்தம் கௌண்டின்னிய தீர்த்தம், ஆகாயகங்காதீர்த்தம், மஞ்சளூற்றுத் தீர்த்தம், பிரம தீர்த்தம், பொய்கைத் தீர்த்தம், நாகசுனைத் தீர்த்தம், குளிராட்டித் தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து ஸ்ரீ சுந்தர மகாலிங்கக் கடவுளையும், சந்தனமகாலிங்கரையும், இரட்டை லிங்கநாதரையும், ஆனந்தவல்லி யம்மையையும், நமஸ்கரித்து ஆங்குள்ள பெரியோர்களுடன் சேர்ந்து அக்கடவுளருக்கெதிரே தோத்திரப்பாக்களைப்பாடி ஒரு நிமிடம் இந்தத்தலத்திலிருப்பவர் பரமானந்தவாழ்வைப்பெற்று மனமகிழ்ந்திருப்பார். கொலை செய்த கொடிய பாதகர்களானாலும் மகிமை தங்கிய கற்பக விருக்ஷத்தின் நிழலிலே இலிங்கசொரூப மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிற எம்பெருமானாரது திருநாமமாகிய "சுந்தமகாலிங்காயா" என்னும் அஷ்டாட்சர மந்திரத்தை ஒரு முறையுச்சரிப்பாரானால். அவர். அரசராயிருந்து பின் தேவராகி முடிவில் சீவன் முத்தராக பிறந்து சாயுச்சியத்தை யடைவார்கள். "சுந்தரமகாலிங்காயா" என்னும் எட்டெழுத்தை மனத்துள் நினைப்பவர் எண்ணிறந்த பாவங்களைப் போக்கினவராவர். இத்தலத்திலிருந்து தவஞான நிட்டை புரிவோர் இட்ட சித்தி பெறுவர். பத்தராக இவ்விடத்திலேயே வசிப்போர் அநேககோடி புண்ணியங்களையும், அட்டமாசித்திகளையும், காயசித்திகளையும் பெற்று வாழ்வர். பதினாறு வருடம் ஆகாரமும், நித்திரையுமின்றி வேறோரிடத்திற்றவம் செய்தோரடையும் பயனை இவ்விடந்திலொரு நாள் உபவாசத்தை யனுட்டிப்பவர் பெறுவர்.

அவ்வுபவாசத்தை வேறோரிடத்தி லனுட்டிப்பவர் பெறும் பேற்றை இத்தலத்திற் புரட்டாசி மாதம் நவராத்திரியன்றும், ஆடிமாதம் அமாவாசையுடன் கூடிய

சோமவாரத்தன்று மிருக்கக்கூடிய வுபவாசங் கொடுக்கும். பிறிதொருதலத்திற் செய்த முப்பத்திரண்டு தருமத்தின் பலனை இத்தலத்தில் மனைவி மக்களுடன் வந்து ஒருநாள் தெரிசிப்பவர் பெறுவர். மற்றைத் தலத்திலே பஞ்சாக்கினியை வளர்த்து அதன் மத்தியிலிருந்து ஐம்புலன் களையு மொடுக்கித்தாம் குறித்தபொருளைத் தியானித்து ஓராண்டு தவம்புரிந்த வரடையும் பயனை இத்தலத்தில் ம்காலிங்காய" என்கிற பஞ்சாக்ஷரத்தை தெய்வீகக்கற்பவிருக்ஷ நிழலில் ஒரு நாழிகையிருந்தவர் பெறுவர். நடப்பதற்கரிதாகிய மலை, வனம், வனாந்தரங்களையும், அநேகதலங்களையுஞ் சுற்றிப் பல வருடங்களாக அலைந்து யாத்திரை செய்வோ ரடையும் பலனை இத்தலத்திலே கடவுளை ஒருமுறை வலம் வருவோர் பெறுவர். மற்றைத் தலத்தில் அளவில்லாத தானங்களைச் செய்தவர் பெறும் பேற்றினை இத்தலத்தில் திருநீறு, உருத்திராக்கமணி, புத்தகம், நல்லுபதேசம், அன்னம், தண்ணீர், சந்தனம், தாம்பூலம், விசிறி, வஸ்திரம், பொன், மணி, பாத்திரம், பிள்ளைகளுக்குத் தின்பண்டம், பாற்பசு, எருமை ஆகிய இச்சோடசதானங்களில் ஏதாவது ஒன்றினை அன்புடன் செய்வோர் பெறுவார்கள். திருக்கூட்டத்தாருக்கு கஞ்சா, புகையிலை தானஞ்செய்பவர் பெறும் பயன் சொல்லுந்தரத்ததன்று.

அன்றியும், பற்பல தலங்களிலுஞ்சென்று அக்கினிஷ்டோமம், இராஜசூயம், அசுவமேத முதலிய யாகங்களைச் செய்வோரடையும், பிரயோசனத்தை, இத்தலத்தில் மாதுர் பிதுர்யாக கர்மதர்ப்பணாதிகளை ஒருமுறை செய்வோரடைவர். வேறு வனங்களில் கந்தமூல பலாதிகளைப் புசித்தும், அரியவிரதாதிகளையனுட்டித்தும், அக்கினி முன்பாக ஊசியின் மேலொரு பதத்தையூன்றி, நெடுநாள் தவஞ்செய்வோரடையும் பேற்றை இவ்விடத்தில் தேவலோகக்கானல் என்ற அடவியிலே, ஒருதினந் தலவாசஞ் செய்வோரடைவர். இன்னும், காசி, இராமேஸ்வரம் முதலிய புண்ணிய தலங்களுக்கெல்லாம் உயர்ந்தது இந்தச் சதுரகிரியே யாகும். சதுர்வேதங்களாலுஞ் சாற்றுதற் கொண்ணாந சதுராசலத்தலத்தின் பெருமையையும், ஆங்கு வசிக்கின்ற தேவர் முனிவர் முதலானோர்களது அருமையையும், தரிசனைக்கு வருகிற தொண்டர்களுடைய பக்தி உரிமையையும், எம்மொரு நாவாற் சொல்லக்கூடுமா? என்றனர். அதுகேட்ட முனிவர் மிக ஆனந்தசிந்தை யுடையவர்களாய் இனித் தீர்த்த விசேடத்தை யருளிச் செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கச் சாணாங்கி முனிவர் செப்புவராயினர்.

மூன்றாவது,
சதுரகிரித்தலமகிமைச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
நான்காவது

சதுரகிரி தீர்த்த மகிமைச் சருக்கம்

நாலுகிரி தனிலுள்ள சந்திரதீர்த் தம்முதலா நவிலுமேழு
மேலுலகர் தாம்விரும்புந் தீர்த்தத்தின் பெருமை யெலாம் விளம்பஎன்றால்
காலுணுநற் சேடனுக்கு மாற்றலிலை யாயினும் நாங் கண்டவாறு
நூலுரைத்த முறைப்படியெம் முணர்வதனாற் சிறிதன்பால் நுவலுவோமே.

சதுராசலமென்னும் இச்சதுரகிரித் தலத்திலே ஸ்ரீ சுந்தரமகாலிங்க மூர்த்தியின் சன்னிதானத்திலிருக்கிற கானாற்றுள் சந்திர தீர்த்தமென ஒரு புஷ்கரணியுண்டு. அந்தப் புஷ்கரணிக்கு அப்பெயர் வாய்ந்த காரணத்தைச் சொல்லுகிறேன்.

கேளுங்கள் முனிவர்களே! சிந்துதேசத் தரசனாகிய சந்திரகாசனென்ற வொருவன் கற்புடைய மாதர்களை கற்பழித்தலும் பிறர் பொருளைக் கொள்ளையிடுதலும், கடவுளை நிந்தித்தலும், ஆகிய இவ்வித கொடுங்கோலரசு புரிந்து வருங்கால், அவன் நாளுக்கு நாள் அதிகமாக உன் மத்தம் பீடிக்கப்பட்டு அரண்மனையை விட்டு வெளியேறித் தெருக்கள் தோறும் அலைந்து திரிவானாயினான்.

அதைக் கண்ட அவன் மனைவியும், சுற்றத்தார் முதலானோர்களும் மிகுந்த மனவியாகுல முற்று வேதவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர்களை வரவழைத்து, உபசரித்துத் தங்கள் குறைகளையெல்லாந் தெரிவித்து வணங்கினார்கள். அதற்கு அப்பெரியோர்கள் உங்களரசனுக்குப் பீடித்த உன்மத்தமானது மகிமை பொருந்திய சதுரகிரிக்குச் சென்று ஆங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் சுந்தரமகாலிங்கக் கடவுளைத் தரிசித்தாற்றீரும். அல்லாவிடிற்றீராது. என்று கூறிச் சென்றார்கள். அப்பால் அதன்படி அவ்வரசனை மனைவி முதலானோர்கள் அழைத்துக் கொண்டு சதுரகிரி வந்து சேர்ந்து எம்பெருமானாரது திருக்கருணையால் நான்கு சிகரங்களினின்றும் உற்பத்தி யாகிவருகிற நானாற்றின் தீர்த்தத்தில் மூழ்கி யுபவாசமிருந்து மூர்த்தியைத் தரிசிக்கச் செய்ததால் அரசன் சித்தப் பிரமை நீங்கி மனைவி முதலானோர்களோடு சுகமாகத் தன்னகரஞ் சென்று நீதி வழுவாது அரசு புரிந்து வந்தான்.

ஆகையாலந்தத் தீர்த்தத்துக்குச் சந்திர தீர்த்தமெனப் பெயர் வழங்கலாயிற்று. அதில் ஒரு தரம் ஸ்நானஞ் செய்து கடவுளை வணங்குவோர்கள். கொலை களவு, கள், காமம், குருத் துரோகம் ஆகிய பஞ்சமா பாதகங்களும் நீங்கிப் புண்ணிய வாழ்வைப் பெறுவார்கள். அந்தச் சந்திர தீர்த்தத்துக்கு வடபக்கத்திற் கௌண்டின்னிய

தீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அது தெய்வத் தன்மை வாய்ந்த ஓர் நதியாகும். அந்நதி வந்த காரணத்தைச் சொல்லுகிறேன்.

வேதாகம புராண சாத்திர தவயோக சாதனைகளெல்லா வற்றிலும் மிகுந்த வல்லவனான கௌண்டின்னிய முனிவனென்பவன் ஓங்கும் முழுமுதற் கடவுளை நோக்கித் தான் நற்கதி யடையத் தபவுபவாசமிருக்கவேண்டுமென் றெண்ணி மகத்துவ மிகுந்த சதுரகிரினிடத்துச் சென்று ஐம்பொறிகளையும் ஒரு முகமாக்கித் தவநிட்டை கூடியிருந்தனன். அப்போது அம்முனிவன் புரிந்து வருகிற கொடிய தவாக்கினியால், ஆங்குள்ள கூபம், பொய்கை, கானாறு முதலியவைகளிற் புனலொழிந்து வறண்டது. அதைக் கண்ட தேவர்களும், மகருஷிகளும் மற்றயாவர்களும் மிகுந்த வியாகுல முற்றனர்.

அது தெரிந்த எம்பெருமானாகிய ஸ்ரீ சுந்தரமகாலிங்கக் கடவுளானவர் முனிவன் செய்கிற தவத்திற்கு மெச்சித் தேவருஷி முதலானோர்களுடைய வருத்தத்தை தீர்க்கும் பொருட்டு கிருபா நோக்கத்தோடு அக்கௌண்டின்னிய முனிவன் முன் பிரசன்னராகிக்காட்சி தந்து, முனியே! நீ எதற்காக இவ்வரிய தவத்தைச் செய்கின்றனை! என்று கேட்க, அதற்கு முனிவன் அஞ்சலி யஸ்தனாக வெழுந்து ஆனந்தக் கண்ணீர் சொரியப் பன் முறை வணங்கி மகேச்சுவரா! அடியேன் ஆத்ம ஞான மோக்ஷத்தை யடைய வேண்டுமென இத்தவத்தைச் செய்து வருகிறேன். அன்றியும் யான் எண்ணிய பன்னீராயிர வருடத்திற்கு இன்று வரை ஆறாயிர வருடம் முடிந்தது.

இன்னும் ஆறாயிர வருடந் தவம் புரிய வேண்டும். அதற்குள்ளாக இன்று உம்முடைய திருக்கோலத்துக் காட்சியைக் கண்டு கிருதார்த்தனாகினேன் என்றனன். அவ்வார்த்தையைக் கேட்ட எம் பெருமான் நல்லது முனியே! உன்னுடைய தவாக்கினியால் ஈங்குள்ள பொய்கை முதலானவற்றுளெல்லாம், புனலொழிந்து காய்ந்தது. அதனால் தேவர் முதலான யாவரும் மிகுந்த வருத்த முறுகிறார்கள். அதற்காக இப்பொழுது உற்பத்தியாகி வரப் போகிற நதியில் நீராடி மோக்ஷ வாழ்வைப் பெறுவாய். இனித் தவம்புரிய வேண்டுவதில்லை என்று திருவாய் மலர்ந்தருளித் தமது சடா மகுடத்திலிருக்கிற கங்கையிலொரு துளி யெடுத்து நான்கு கிரிக்கும் மத்தியில் விட்டு இலிங்கத்தில் மறைந்தருளினர். அப்பால் அத்தெய்வீக கங்கை உற்பத்தியாகி வந்து ருஷிகள் தேவர்கள் முதலானோரடையும் அவஸ்தையை நீக்கிப் புற்பூண்டு செடி விருக்ஷங்க ளெல்லாவற்றையுஞ் செழிக்கச் செய்தது.

பிறகு கௌண்டின்னிய முனிவன் சுந்தரமகாலிங்கக் கடவுளருளியபடி நதியில் மூழ்கி நம்பெருமானை வணங்கி மோக்ஷ வாழ்வைப் பெற்றான். ஆகையா லன்று முதல் அந்நதிக்குக் கௌண்டின்னிய தீர்த்தமென்று பெயர் வழங்கலாயிற்று. அத்தீர்த்தத்தில் ஒரு அரசன் மூழ்கித் தன் கொடிய ரோகத்தைப் போக்கிக் கொண்ட சரிதை யொன்றைச் சொல்லுகிறேன். அதாவது பூர்வத்தில் வளமிகுந்த மாளவதேசத்தை ஆண்டு அரசு புரிந்து வந்த சோமசீதள னென்னும் ஓர் அரசன் உண்பதும் உடுப்பதும் பூசிப்புனைவதும் சுகிப்பதும் உறுதியென்றும், தான் கொண்டதே கொள்கை என்றும்,

பாவ புண்ணியமில்லை யென்றும், சொர்க்க நரகமில்லை யென்றும், தெய்வமில்லை யென்றும் நினைத்து, அந்தணர் முதலான பெரியோர்களை நிந்தித்து மாதர்கள் கற்பையழித்துப் பழிபல சுமந்து பாவங்களிழைத்து வந்ததனால் கொடிதாகிய வெண்குட்ட ரோகத்தை யடைந்தனன்.

அந்த ரோகமானது அழகுறும் பவழமலையென்று சொல்லும்படியான அவனுடைய சிவந்தவுடலில் இட மறச்சிதறுங் காசெனத்தடித்துப் பொறியாய்க் கறுத்து கண் கண்ணாய் வெடித்து மாசுறத் தேக முழுதும் புண்ணாகி வரவர அதிக வெண்ணிறமாகியது. அம்மட்டோ தாய் கண்டாலும் வெறுத்து. அப்பாற் செல்லும்படி துர்நாற்றாமாகிய சலம் வடிய நெளியும் புழுக்களும், உண்டாயின. அப்போது அவ்வியாதியைத் தீர்க்கும் பொருட்டு வைத்திய நூற்பழக்கமும் அநுபவமுமுள்ள உயர்ந்த மருத்துவர்கள் வந்து கோடி கோடி பொன் பெற்றுக் கொண்டு, பச்சிலைச்சாறு தடவியுங்குடிப்பித்துந் தைலங்கள் பூசியும், நிச்சயமான விலேகிய முண்ணக் கொடுத்தும், சுண்ணங்கள் நிறையத் தேகமெல்லாம் பொதிந்தும், புகைகள், காட்டியும் வியாதி வளர்ந்ததேயன்றிக் குறைந்தபாடில்லை. ஆதலால், வியாதியின் வேதனை பொறாம லிருகண்களின்று நீர் வழிந்தொழுகத்துக்கித்து அரசன் யாதொரு செயலுமின்றி யுள்ளுருகித் தீமு கமெழுகெனத்தவித்து மயங்கித் தியங்கி ஆ! ஆ! நாமிழைத்த கொடிய பாவத்தாலல் லவோ இக்கதிக் காளாகினோம் இனி நாமிவ்விடத்திலிருப்பது தகுதியன்று என நினைத்து, அநேக புண்ணிய நதிகளுக்குச் சென்று தீர்த்தமாடி இந்த ரோகத்தைப் போக்கி வருவோமெனத் துணிந்து நாடு நகர் மணிமாடத்தரசிடயற்கை முதலான சகல சம்பத்தையும் வெறுத்துப் பிரயாணமாகித் தனியனாக வழியிற் கண்ட பதிகளிற் பிச்சையேற்றுண்டு நகர் மலை வனம் வனாந்தரங்களை யெல்லாங்கடந்து, அநேக புண்ணிய நதிகளில் மூழ்கிக் கடைசியாகக் காசி மாநகர்க்குச் சென்று தெய்வத் தன்மை பொருந்திய கங்காநதியிற் றீர்த்தமாடுகையில், ஆங்கு ஓர் மகாருஷி அரசனைக் கவனித்து; அவனுடைய கொடுங் கோலரசவொழுக்கங்களையும், அதனாலேற்பட்ட ரோகத்தையும், இவ்விடம் வந்த எண்ணத்தையுந் தன் தவமகிமையினால் நன் குணர்ந்து அப்பா! அரசே! நீ உன்னுடைய ரோகத்தைப் போக்கி கொள்ள வேண்டுமானால், பெருமை வாய்ந்த சதுரகிரியின் கண், கௌண்டின்னிய நதியென்ற ஒரு புண்ணிய தீர்த்தமிருக்கிறது ஆங்குச் சென்று அத்தீர்த்தத்தில் மூழ்குவாயானால் இந்த ரோகம் உன்னை விட்டு உடனே நீங்குவதோடு நீ செய்த கொடிய பாவங்களெல்லாந் தீர்ந்து உயர்பதமாகிய மோக்ஷ சாம்பிராச்சியத்தையும் அடைவாய் என்று கூறினார்.

அதைக் கேட்ட அரசன் அம்மகருஷியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, விடை பெற்று இச்சதுரகிரிக்கு வந்து மகருஷியின் இதோபதேசத்தின்படி புண்ணிய நதியாகிய கௌண்டின்னிய தீர்த்தத்தில் மூழ்கியும், உபவாசமிருந்தும், ஸ்ரீ சுந்தரமகாலிங்கக் கடவுளைத் தரிசித்தும் இவ்விதமாக அவ்விடத்தில் ஒருவாரமிருந்து வருகையில் வந்த சீயும் ஒழுகுங் குருதியும் உடைய நீர்க்கிருமிக் குட்ட ரோகமும் கொடிதாகிய பாபங்களும் நீங்கி பிரகாச மிகுந்த புண்ணிய சரீரத்தையுடையவனாகித் தோன்றி ஜீவகாருண்ணிய நல்லொழுக்கங்களைப் பெற்று ஸ்ரீ சுந்தரமகாலிங்கத்தைத் தரிசித்து மின்பொலி சடையாய் உன் பரமென்னைக் காத்தருளுக, என விடை கொண்டு தன்பதி நோக்கி

நடந்து சென்று மன மகிழ்ச்சியாய் நீதி தவறாது அரசு புரிந்து வாழ்ந்த முடிவில், உயர்வாகிய மோக்ஷ பதவியைப் பெற்றான்.

அவ்வரசன் கூறுதற்கரிதாகிய கௌண்டின்னிய நதியில் தீர்த்தமாடிச் சகல பாவங்களையும் போக்கிக் கொண்டதனால் அந்நதிக்குப் பாவகரிநதி என்னும் ஓர் பெயரும் பின் வழங்கலாயிற்று. ஆகையால் அந்த பாவகரிநதி தீர்த்தத்தில் ஒரு தரம் மூழ்கினவர் தல யாத்திரையாகக் கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, கோமதி, பாஞ்சாலி, சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரை, கிட்டினி, கம்பை, பெண்ணை முதலிய அநேக புண்ணிய நதிகளுக்குச் சென்று நீராடிய பலன்களை யடைவர். இன்னும் அச்சதுரகிரியின் மேல் இருண்டவனமொன் றிருக்கின்றது. அதற்கு காளிவனமென்று பெயர். அவ்வனத்திலிருந்து வருகிற தீர்த்தம் சந்தன மகாலிங்க தீர்த்தமெனப் பெயர் பெற்றது. அத்தீர்த்தமானது முன்னம் உமையவள் பிருங்கி மகாருஷியால், சிவபெருமானை விட்டு நீங்கி அர்த்த நாரீஸ்வரர் என்னும் சிவசக்தி சரீரமாகயிருக்க வேண்டிச் சதுர கிரிக்கு வந்து இலிங்கப்பிரதிட்டை செய்து அபிஷேகத்துக்காக வரவழைத்த ஆகாய கங்கையாகும். அந்த மகா புண்ணிய தீர்த்தத்தில் மூழ்குவோர் அன்னப் பறவையானது பாலையும் நீரையும் பிரித்து விடுவது போல எப்பாவங்களையும் ஒவ்வோரான்மவினின்றும் பிரித்து எடுத்து முத்தி தர வல்லது.

இன்னும் பார்வதி தேவியின் பணிப் பெண்களாகிய சத்த கன்னியர்களும் தாங்கள் நீராடுதற்குண்டாக்கிய திருமஞ்சனப் பொய்கை என்னும் ஒரு தீர்த்தமுண்டு. அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவர் இஷ்டகாமியார்த்த மோக்ஷங்களைப் பெறுவார்கள். ஆங்கு இரசவாதஞ் செய்வதில் மிக்க சமர்த்தரான காலங்கி நாதராலுண்டாக்கிய பிரம தீர்த்தமொன்று மலைக் காவலராகிய கருப்பணசுவாமி சன்னிதி முன்பாக விருக்கிறது. அத்தீர்த்தத்தில் மூழ்குவோர் எப்பாவங்களுந் தீர்ந்து புண்ணிய வாழ்வைப் பெற்று இம்மையில் நீடுழி காலம் வாழ்ந்திருப்பர். அன்றியும் கோரக்கர், இராமதேவர், போகர், முதலிய மகருஷிகளா லுண்டாக்கப் பெற்ற பொய்கைத் தீர்த்தம், பசுக்கிடைத் தீர்த்தம், குளிராட்டி தீர்த்த முதலிய அநேக புண்ணிய தீர்த்தங்களிருக்கின்றன.

அத்தீர்த்தங்க ளொவ்வொன்றிலும் அனுதினமும் மூழ்கி ஸ்ரீ சுந்தர மகாலிங்கக் கடவுளை வணங்குவோர் அரிதாகிய பேரின்ப முத்தியை யடைவர். என்று சாணாங்கி முனிவர் அருளிச் செய்யக் கேட்ட நாகார்ச்சுனர் முதலிய முனிவர்கள், சுவாமீ! எங்களுடைய பிறவி வினையாகிய வெப்பத்துக்கு நீர்மோக்ஷமாகிய மழையைப் பொழிந்தீர். இனி மூர்த்தி மகிமையை சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிவதுபோற் சொல்லியருளுகவென்று கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்லுவாராயினர்.

நான்காவது,
தீர்த்தமகிமைச் சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்
ஐந்தாவது

சதுரகிரி மூர்த்தி மகிமைச் சருக்கம்

சுந்தர லிங்கநாதர் துணைபுரி யிரட்டை லிங்கர்
சந்தன லிங்க ரின்பந் தருமகா லிங்கராக
அந்தரர் போற்று நாலா வமர்ந்தொளிர் சதுரவெற்பின்
வந்தர சிருக்கு மூர்த்தி மகிமையை யெடுத்துச் சொல்வாம்.

கேளுங்கள் முனிவர்களே! உருவாய் அருவாய் உருவருவாய், ஒன்றேயாய், நின்று ஒருவராலு மறியப்படாததாய், அறிந்த மெஞ்ஞானிகளுக்கே உண்மையாய், விளங்குஞ் சிவபரம்பொருள் ஒன்றுண்டு. பெருங்ககுணைத் தடங்கடலாகிய அப்பொருள், மெய்யடியார்களுக்கே அருள்செய்யும் பொருட்டுச் சதுரகிரியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருத்தலால், சித்தர் முனிவர் முதலிய யாவரும் அவ்விடத்திலேயே வாழ்க்கை கொண்டிருந்து வழிபட்டுவருவாராயினர். வழிபடுவாருக்கு அருள்செய்யும் மூர்த்தி மகிமையை அறிதல் பத்தர்களுக்கே எளியதென்று வேதங்களியம்பும், அத்தகைய சிவமூர்த்தி சுந்தரலிங்கர், மகாலிங்கர், இரட்டை லிங்கர் என்ற நான்கு திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அம்மூர்த்திகளுள் பொதிகைமலையிலிருந்து மூலிகை வளங்காண வந்த அகத்தியரால் பிரதிட்சை செய்து பூசிக்கப்பெற்றவரும், திருமணக்காட்சியைத் தந்தருளியவருமே சுந்தரமகாலிங்கராவர். அவர் தர்ம சுந்தரானந்தரால் நாடோறும் பூசிக்கப்பெறுகிறார். இனி பச்சைமால் என்னும் ஆயர்குல முதல்வனுக்காகக் காட்சி கொடுத்தருளி இலிங்க வடிவாய் அமர்ந்தருளியவரே மகாலிங்கராவார். அப்பால் இறைவன் காட்சிகொடுத்தருளி உமையொருபாகமாகி அர்த்த நாரீஸ்வரர் என்னும் பெயர் கொண்டெழுந்தருளும் பொருட்டு சர்வலோக மாதாவாகிய உமையம்மை தவவேடங்கொண்டு சந்தன மரத்தடியில் பிரதிட்டை செய்து பூசிக்கப்பெற்ற மூர்த்தியே சந்தனலிங்கராவார். இதன்மேல் ஆனந்தசுந்தரமென்னும் வர்த்தகனுக்கும், அவன் மனைவி ஆண்டாளம்மாளுக்கும் சங்கர நாராயணராகக் காட்சி கொடுத்தற்பொருட்டு எழுந்தருளி அருள் வடிவாய் விளங்கும் மூர்த்தியே இரட்டை லிங்கராவர்.

இந்த நான்கு மூர்த்திகளிலும் நிறைந்து நின்று அருளிச் செய்யும் சிவபரம் பொருளே, திருக்கைலை முதலிய ஆயிரத்தெட்டுச் சிவதலங்களிலும் இருந்தருளுவதைப் பார்க்கிலும் இச்சதுரகிரியிற் சிறப்புற்று விளங்குகின்றார். ஆகையால் சதுரகிரி மூர்த்தி மகிமை மிகச் சிறப்புடையதாகும். அன்றியும், அளவிறந்த சீவராசிகளுக்கு முணர்வாகி உற்பத்தி யழிவில்லாதிருக்கிற அச்சிவபெருமானே! கற்பாந்த

காலத்திலும் நித்தியமாய்ச் சிவபுரம் போலழியாதிருக்கின்ற சதுரகிரியிலெழுந்தருளியிருந்து தமக்கென்று ஒரு சொரூபமில்லாதவராய்த் திருக்கருணையே திருமேனியாகக் கொண்டு எல்லா உலகங்களையுஞ் சிருட்டிக்கத் திருவுள்ளத்தில் நினைந்து தாமரைப்பூவை ஆசனமாகவுடைய மலரோனான சாரதாம்பிகையுடன் அமர்ந்து, அண்டபுவனங்களையும், பஞ்சபூதங்களையும், சப்த மேகங்களையும், சூரிய சந்திரர்களையும், ஏழுகிரகங்களையும், இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் பலதேவர்களையும், திரிகாலங்களையும், இரண்டு அயனங்களையும், ஆறுருதுக்களையும், ஆகமவேத புராணசாஸ்திரங்களையும், பிராண முதலிய மந்திரங்களையும், மற்றுமெல்லாவற்றையும் படைத்து அப்பால், நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபே தங்களையும் உண்டாக்கி மேலான மக்கள் பிறிதொரு சமயத்திற் புக்குழலா வண்ணம், சிவசமய சன்மார்க்கத்தைக் கொடுக்கும் கற்பகவிருக்ஷத்தையுடைய தேவகானலென்னும் சோலையை அமைத்து சோதி சொரூபமாக விளங்குஞ் சதுரகிரியினிடத்து தேவர்களும், அரிய மகரிஷிகளும், பணிசெய்ய வீற்றிருந்தருளினார்.

அத்தகைய சிவபெருமானார் ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற நான்கு சக்திகளையுந் தழுவி முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய இந்நான்கையும், சீவகர்களுக்குப் புகட்டித் திருவிளையாடல் செய்யுந் தமது இலிங்க சொரூபங்கள், சுயம்பு, காணம் தைவிகம், ஆரிடம், மானுடம், என்னும் ஐந்துவகையாக விளங்கும். அவைகளிற்றானாகத் தோன்றியது சுயம்புலிங்கமென்றும், விநாயகர், சுப்பிரமணியர், தேவி, முதலானோர்களாற் றாபிக்கப்பெற்றது காணலிங்கமென்றும், பிர்மா, விஷ்ணு முதலானோர்களாற் றாபிக்கப்பெற்றது தைவிக லிங்கமென்றும், இருடிகள் முதலானோர்களாற் றாபிக்கப்பெற்றது ஆரிடலிங்கமென்றும், மானுடராற் றாபிக்கப்பெற்றது. மானுடலிங்கமென்றும், பெயர் பெறும். இவ்வகை இலிங்கங்களுள்ள தலங்கள் அனந்தமாகும். அத்தலங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது சதுரகிரியி லெழுந்தருளி யிருக்கும் நான்கு மூர்த்திகளில் மகாலிங்கமும், இரட்டை லிங்கமும், சுயம்புலிங்கங்களாகும். சந்தன லிங்கந் தைவிகலிங்கமெனவும், சுந்தரலிங்கம் ஆரிடலிங்கமெனவும் பெயர் பெறும். இவைகளில் இரட்டை லிங்கம் இரண்டாக விளங்கலால் இலிங்கங்கள் ஐந்தாக அவற்றைப் பஞ்சபூத லிங்கமெனவுஞ் சொல்வதுண்டு. ஆகையால் எல்லாத் தலங்களினுஞ் சதுரகிரியே உயர்ந்த க்ஷேத்திரமும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் இலிங்க சொரூப மூர்த்திகளே சகலமூர்த்திகளுக்கும் உயர்ந்த கிருபாமூர்த்திகளுமாகும். அந்த மூர்த்திகளைப் பூசிக்கும் பூசையே மேலான பூசை ஆகும். ஆதலால் இஷ்டகாமியங்களை விரும்பி வேள்விகளையும் தவஞான நிட்டைகளையும் புரிந்து துன்புறவேண்டாம்.

கற்பகவனஞ்சூழ்ந்த சதுரகிரியி லெழுந்தருளியிருக்கும் இலிங்கங்களை ஒருமுறை வணங்கினால் அநேகயாகங்களும் தவங்களும் புரிந்த பலன் கிடைக்கும். அந்த நாதர் திருமேனியில் பால், தேன், பன்னீர், இளநீர், முப்பழம், பஞ்சாமிருத முதலான அபிக்ஷேகங்களைச் செய்து இரத்தினாபரணம், பரிவட்டம், புட்பம் புனைவித்து அலங்கரிப்போர் எவராயிருந்தாலும் அவரது சரீரத்தை யவ்வாறே

தேவர்களலங்கரித்து அவர்களை மகிழ்விப்பார்கள். இன்னும் அந்த ஸ்ரீ சுந்தர சந்தன மகாலிங்கக்கடவுளருக்கேனும், இரட்டைலிங்க நாதருக்கேனும், ஆலயம், கோபுரங்கள், மண்டபங்கள் முதலிய பல திருப்பணிகள், ஆபரணங்கள், பாத்திரங்கள், திருவிழாக்கள், ஆறுகால பூஜைகள் செய்வித்தோர் உயர்வாகிய பரமபத சாயுச்சியத்தைப் பெறுவார்கள். அக்கடவுளுருக்குத் திரு நந்தனவனம் வைத்து உண்டாக்குவேரா தேவருலகத்திற் சென்று மன மகிழ்ச்சியோடிருப்பார் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நாற்கவிகளாலும் பாமாலை புனைந்து சாத்துவோர் கற்பகோடி காலம் மணமங்களமாக வாழ்ந்திருப்பர்: அன்றியும் அவருக்கு மலர்மாலை தொடுப்பவர், திருமஞ்சனமெடுப்பவர், பரிமளவாசனைக் களபங்கள் சேர்ப்பவர், தூபதீப பரிகலங்கள் துலக்குபவர், திரு விளக்கிடுபவர், முறையோடு பூசிப்பவர் ஆகிய யாவருந் தெய்வவடிவாகி சிவபுரஞ்சென்று ஆங்குச் சிவகணங்களோடு வீற்றிருப்பர். இன்னும் அந்தச் சதுரகிரிச் சுந்தரமகாலிங்க மூர்த்திக்கு விளாபூசை, காலசந்தி, திரிகாலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை. அர்த்தசாமம் என்ற ஆறுகாலபூஜை நடக்குஞ் சமயத்தில் அம்மூர்த்தியைத் தெரிசிப்போர் சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்ற பெருமை பொருந்திய பதங்களை அடைவர் தினவிசேடம், பக்ஷ விசேடம், மாதவிசேடம், வருடவிசேடம் என்று சொல்லக்கூடிய உற்சவ நாட்களிலே சுந்தரமகாலிங்கக் கடவுளை வணங்குவோர், அன்னம், தண்ணீர், பானகம், மோர் முதலியவைகளை ஏராளமாகக் கொடுப்போர் ஆகிய இவர்கள் யாவரும் மோக்ஷ வாழ்வைப் பெற்றுத் தேவர்களோடு அமுத முண்டிருப்பர். அவரவர்கள் பிரார்த்தனையின்படி மொட்டையிடுதல் கன்னபூஷணமிடுதல், காணிக்கை போடுதல் முதலானவைகளைச் செய்வோர் புத்திர சந்தான செல்வவாழ்க்கையை யடைவார்கள். ஆலகால விடத்தை யமுதமாகவுண்ட அப்பரமற்குச் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், புளியன்னம், தயிரன்னம், பாயாசம், வடை, அதிரசம் முதலியவைகளை நிவேதிப்பவர் தேவ வாழ்க்கையை அடைந்து கற்பகவிருக்ஷமும் காமதேனுவும் உபசரிக்க மனமகிழ்ச்சியோடு தெய்வலோகத்தில் வீற்றிருப்பர். இப்புராணத்தைப் பயபக்தியோடு படிப்பவர் கேட்பவர் ஆகிய இவரது புகழைச் சிவபுரத்து வாழ்கின்றவரெல்லாம் பேசித் தோத்தரித்து மகிழுவர். இத்தன்மையையுடைய மூர்த்தியின் மகிமையைத் தெரிந்த மெய்யடியார்க்குப் பிரமலோகமும் விஷ்ணுலோகமும் ஒரு பெரியவையல்ல எனச் சகலாகம வேத புராண சாஸ்திரங்களையுந் தெரிந்த சாணாங்கி முனிவர் கூறினார்.

இஃது அன்றியும், காலாங்கி முதலிய முனிவர்கள் நவராத்திரி பூசையை பயபக்தியுடன் செய்த காலத்தில் அவர்களுக்கு அருள் செய்தற்பொருட்டு எழுந்தருளி நல்வரங்கொடுத்த வாமசத்தி ஆனந்தரூபியாகி நிற்றலைக்கண்டு அம்மையே! இவ்வாறு யாண்டும் இவ்விடத்திலிருந்து எங்கள் பூசனையை ஏற்று. நன்மை பயக்கவேண்டுமென்ற அம்முனிவர்கள் வேண்டுகோளின்படி திருக்கோயில் கொண்டிருக்கும் ஆனந்த வல்லியம்மையும் இங்கே வாழ்வாளாயினாள். இச்சதுரகிரியிலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும், காலாங்கி முனிவரால் அமைத்திருக்குஞ் சிறந்த அரிய பெரிய மேலான வகாரத்தைலக்கிணற்றுக்கும் காவற் தெய்வங்களாக வைரவமூர்த்தி, காளியம்மை, பேச்சியம்மை, கருப்பண சுவாமி என்னும் நால்வரும்

இங்கே கோயில் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அநேக தெய்வ நிலையங்களும் இங்கே சிறந்து விளங்கும். இங்கே உள்ள எல்லாத் தெய்வங்களும் மிக சாந்நித்திய முடையவராயிருப்பார்கள் என்றுங் கூறியருளினார் சாணாங்கி முனிவர்.

அதனைக்கேட்ட நாகார்ச்சுனர் முதலிய முனிவர்கள் மிகப்புளகாங்கித முடையவர்களாய் ஆனந்தக் கண்ணீர் ததும்ப நின்று இருகரங்களையுங் குவித்துப் பல்புகழ்பாடி ஆடி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினவர்களாய் மீண்டும் வணங்கி முனிபுங்கவரே! இன்னும் அந்த மூர்த்திகளுடைய சரிதங்களும், அம்மூர்த்திகளின் திருவருட்காட்சியைப் பெற்றவர்களுடைய புண்ணிய சரித்திரங்களும் நாங்கள் கேட்கப் பேராசையுடையவர்களாயிருக்கிறோம். அவற்றை அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்க சாணாங்கி முனிவர் சொல்லத் தொடங்கினார்.

ஐந்தாவது,
மூர்த்திமகிமைச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
ஆறாவது

ஸ்ரீசுந்தரலிங்க சருக்கம்.

அரனார் மொழியா லகத்தியனா ரமைதென்மலையில் வந்தடைந்து
உரனா ரிலிங்க முளதாக்கி உன்னிப் பூசித்ததன் பின்னை
வரனார் சுந்த ரானந்தர் வணங்கிப் போற்ற வின் புறவே
பரனாநின்ற இலிங்கத்தின் பார மகத்வம் பகர்ந்திடுவாம்.

ஆதிவிராட்புருட சொரூபமானவரும், ஞானானந்த மோன வீடாகிய மோக்ஷத்தை யடைவதற்குத் துணைக் காரணமானவரும், அருட்சுயம் பிரகாச முற்றுணர்வுடைய முழுமுதற்கடவுளருமாய்க் கைலையங்கிரியி லெழுந்தருளியிருக்கும் சாக்ஷாத் சிவபெருமான் தமது திருவுள்ளத்தெழுந்த பெருங்கருணையால் அணுப்பிரமாணமான ஒரு சிறு விளையாட்டாக இவ்வுலகத்தைச் சிருட்டித்து அதில் ஆன்மாக் காமநுகர்ச்சியாகிய இன்பத்தை யடையும்பொருட்டு உமாதேவியை மலையரசன் புத்திரியாக அவதரிக்கச் செய்து அப்பால் அத்தேவியைத் திருமண முடிக்க நினைத்துச் சத்தருஷிகளால் விவாக முகூர்த்தத்தை நிச்சயித்து நந்திதேவரை நோக்கி முப்பத்து முக்கோடி தேவர் நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், கருடகாந்தருவர், சித்த வித்தியாதரர், பிரம, விட்டுணு, உருத்திரர், விநாயகர், சுப்பிரமணியர், முனிவர், சித்தர், மண்ணுலகத்தவர் முதலான யாவரையும் அவரவர்கள் தம்பதி சமேதர்களாய் வரும்படி செய்க என்று கட்டளையிடுதலும், அவர் அவ்வாறே சகலரும் வந்து சேர முரசறையும்படி செய்தனர். அம்முரசொலியைக் கேட்ட முப்பத்து முக்கோடி தேவர் முதலான யாவரும் அவரவர் தம்பதிகளுடன் வாகனங்களி லேறிக் கைலாயமலையின்கண் வந்து சேர்ந்தனர். அப்போது சிவபெருமான் அவர்களனைவோர்க்கும் திருக்கண்ணால் நோக்கித் திருவருள் செய்த பின்னர் இமயவரசன் வந்து என் அழகிய புத்திரியாகிய பார்வதி மணம் நிறைவேற என்னுடைய தானத்துக்கெழுந்தருளுக என்று விண்ணப்பஞ் செய்தலும் உடனே சிவபெருமான் ரிஷபவாகனாரூடராய் பிரம விட்டுணு முதலான சகலரும் புடை சூழ்ந்து வரப் பிரயாணமாகி மேருகிரியிற் சென்றிருந்தனர். மலையரசன் அச்சமயத்தில் பார்வதிதேவியையும், சிவபெருமானாரையும், அட்டலக்குமிகளையும் பிரம விட்டுணுக்களையுங் கொண்டு முறையே திருமணக்கோலமாக நன்கலங்கரித்துப் பவளக்கால்கள் நிறுத்திய மண்டபத்தின் நடுவிலே புட்பராகம் முத்து இவைகளினாற் செய்த ஓர் அழகிய சிங்காதனத்தி லெழுந்தருளியிருக்கும்படி செய்து திருமணக்காட்சிக்கு வந்த மற்றெல்லாத் தேவர்களையும் அவரவர்க்குரிய தானங்களில் மணவரையைச் சூழ

இருக்கும்படி செய்தனன். அப்போது இப்பூமியின் தென்கோடி யுயர்ந்தும் வடகோடி தாழ்ந்தும் மிருப்பதைக் கண்ட பூமிதேவி தன்கரத்தை யசைத்தனள்; ஆதிசேடனுஞ் சிரத்தையசைத்தனன். இச்செய்தியை தெரிந்த எம்பெருமான் றன் பக்கத்திலிருந்த அகத்தியரை நோக்கி நீயிந்த வேளை தென்றிசைக்குச் சென்று தங்கியிருப்பாயாகில் இப்பூமி சமமாகு மெனத் திருவாய் மலர்ந்தருள, அது கேட்ட அகத்தியமுனிவர் சுவாமீ! இம்மேருகிரியின் கண் நீண்ட நாட்களாகத் தவம் புரிந்து உமது திருமணக்கோலத் திருவிழாவை விரும்பித் தரிசிக்க வேண்டுமென்றிருந்த அடியேனைத் தென்றிசையிற் சென்றிருக்கும்படி திருவுளம் பற்றினீர். ஆனாலும் இனி இந்தத் திருமணக்கோலக் காட்சியைக் கண்டு தரிசிக்கும் நாள் எந்நாளோ அறிகிலேன் என நினைத்து வருத்தமுற்றனர். அதனைக் கண்ட சிவபெருமான் அகத்திய முனிவரை நோக்கி நீ எந்தத் தானத்தில் எக்காலம் நம்மை நினைக்கிறாயோ அக்காலம் அந்தத்தானத்தில் இத் திருமணக்கோலக் காட்சியைத் தந்தருளுகிறோம் என்று வாக்களித்தனர்.

அதுகேட்ட அகத்தியர் அகமிக மகிழ்ந்து நம் பெருமானை வணங்கி விடைபெற்றுத் தென்திசை நோக்கிப் பிரயாணமாகிப் பொதிகை மலையினிடத்துப் போய்ச்சேர்ந்து தங்கியிருந்தனர். அப்போது இப்பூமியின் தென்கோடியும் வடகோடியும் சமமாயின. பின்னர் பசுபதி மூர்த்தியாகிய சிவபெருமானுக்கும் மலையரசன் புத்திரியாகிய பார்வதிதேவிக்கும் திருமண மகோற்சவவைபவ முடிந்தது. தேவர் முதலான யாவரும் அவரவர்கள் எதாஸ்தானத்துக்குச் சென்றார்கள்.

அப்பால் அகத்திய முனிவர் தென் பொதிகை மலையின் பக்கமாகிய திருக்குற்றாலத்தில் ஆலயத்துட்சென்று பார்க்கும்போது விட்டுணுவாலயமாக யிருக்கக்கண்டு அந்த ஆலயத்தைச் சிவபெருமானுத்தரவின் படி இலஞ்சியிலிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளிடத்தில் உபதேசம்பெற்றுச் சிவாலயமாகச் செய்து அச்சிவபிரானுக்கு ஆடி மாதந்தொடங்கி மார்கழி மாதம் வரை அபிஷேக அர்ச்சனை தூபதீப முதலிய கைங்கரியங்கள் செய்து பூசித்தும் அதன்மேற் பொதிகை மலையின் மீதிலிருந்து தவம் வேள்வி முதலியவைகளைப் புரிந்துஞ் சில காலமிருந்து வருகையில் ஒரு நாள் பெருமை தங்கிய சதுரகிரியின் வளங்களையும் பஞ்சதரு நீழலிலும் குகைகளிலும் வாசஞ்செய்கிற சுந்தரானந்தர் முதலான அநேக தவ முனிவர்களையும் அவர்கள் புசித்து வருகிற காயகற்ப சஞ்சீவி மூலிகைகளையும் தேவவிருடிகளாற் கேள்வியுற்று உடனே அவ்விடத்திற்குச் செல்ல எண்ணங்கொண்டு பிரயாணமாகி வனசஞ்சாரமாக மலை, வனம், வனாந்தரம், கானாறு முதலானவற்றையெல்லாங் கடந்து சதுரகிரியைச் சேர்ந்து முனிவர்களது ஆச்சிரமம் நோக்கி வருஞ்சமையத்தில் அவ்விடத்து வசிக்கின்ற சுந்தரானந்தர், யூகிமுனிவர், கொங்கணர் முதலிய பல முனிவர்களும் எதிர்கொண்டு சென்று வணங்கி வாழ்த்தி அழைத்துவந்து ஆசனத்திலெழுந்தருழச்செய்து அருக்கிய பாத்திய ஆசமனமாகிய மூன்றையுங்கொடுத்துப் பூசித்துச் சுவாமீ! தேவரீர் இங்கெழுந்தருளியது யாது காரணம்? என்று அன்போடு வினவ, அதற்கு அகத்திய முனிவர் அங்கு வந்தகாரணங்களைத் தெரிவித்து அவர்களால் அம்மலையின் வளவிசேடங்களை யெல்லாங்கேட்டு அளவில்லாத வானந்தமுற்று வழக்கம்போற் சிவபூசை செய்வதற்காகத் தம்மாலொரு இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து

அவ்விலிங்கத்தை ஆகம வேதபுராண சாஸ்திரவிதிப்படி பூசித்துக் கொண்டிருக்கும்போது முன்னம் மேருகிரியில் சாக்ஷாத் சிவபெருமான் மணக்கோலத் தோடிருந்து தம்மைத் தென்பொதிகைமலைக் கனுப்புந்தருணத்திலீந்த அரிய வரம் ஞாபகத்துக்கு வருதலும் கைலையங்கிரி வாசராகிய பொங்கரவணிந்த மூர்த்தியை நினைந்து கைலைவாசா! கருணைகடலே! கருணாகரா! மலை மகள் கணவா! சிவபெருமானே! எனப்பல அழகிய நாமங்களால் மானத ஜெபத்துடன் தோத்தரித்துச் சகல ஜீவராசிகளிலும் நிறைந்திருக்கின்ற எம்பெருனே! நீ எந்ததில் எக்காலம் நம்மை நினைவு கொள்ளுகிறாயோ அக்காலமந்த இடத்தில் இத்திருமணக் கோலத்தைக் காண்பித்துக் காட்சி தந்தருளுவோம் என்றருளிச் செய்தீரே? அவ்வருள் வாக்கின்படி தற்சமயம் இச்சதுரகிரித்தலத்தில் அக்காட்சியைக் கொடுத்தருள வேண்டும் என்று பரிபூரணபக்குவ சித்தத்துடன் நினைக்க அவ்வாறு முனிவர் மனத்துள் நினைத்ததைத் தெரிந்த நம் பெருமான் உமையவளுக்கு அவையனைத்துந் தெரிவித்துத் திருமணக் கோலத்துடன் ரிஷப வாகனாரூடராயெழுந்தருளினர். அதைக்கண்ட பிரமவிட்டுணுக்களும் விநாயகர் சுப்ரமணியரும் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் முதலானோர்களும், தேவருஷி, முனி சித்தர்களும் அவரவர்கள் தம்பதி சமேதராய்ப் பிரயாணமாகிச் சூழ்ந்துவரச் சிவபெருமான் சதுரகிரியிற் சென்று சுந்தரானந்தர் ஆச்சிரமத்தில் தம்மைப் பூசித்துக் கொண்டிருந்த அகத்திய முனிவருக்குத் திருமணக் கோலக் காட்சியைத் தந்தருளினார். அக்காட்சியைக்கண்ட அகத்தியரும் அங்குள்ள மற்ற முனிவர்களும் மனங்கசிந்து ஆனந்தக் கண்ணீர் சொரியச் சரீரம் விதிர்ப்பநின்று தோத்திரஞ்செய்வாராய்ப் பாராபரனே! பரமயோகி! மான்மழுக்கரனே! நித்தனே! நின்மலனே! போற்றிபோற்றி யென்றேத்திப் புகழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர். அப்போது சிவபெருமான் முதலிய தேவர்கள் அம்முனிவர்களுக்கு ஆசீர்வசனங்களைத் திருவாய் மலர்ந்தருளி வனமாகிய கானல்களில் ஆங்காங்குத் தங்கியிருந்தார்கள் அதன் பின்னர் அகத்தியர் அநுதினமும் இலிங்கபூசை செய்து மூன்று கானல்களில் எழுந்தருளியிருக்கிற திரிமூர்த்தி களையுந் தரிசித்துக்கொண்டு வரும்போது ஒருநாள் சுந்தரானந்தர் அகத்திய முனிவரை நோக்கிச் சுவாமீ! நீர் அனுதினமும் செய்துவந்த இலிங்கபூஜை மகிமையினால் சிவபெருமானுடைய தரிசனக்காட்சியை அடைந்தீர். அத்தரிசனையை நாங்களுங்கண்டு தரிசித்துக் கிருதார்த்தர்களானோம். ஆகையால் மகத்துவமிகுந்த அவ்விலிங்கபூஜையை அடியேன் செய்து வரக்கிருபை பாலிக்கவேண்டும், எனக் கேட்க அதற்கு அகத்தியர் நல்லது நாமும் இனித் தவத்துக்குச் செல்ல வேண்டிய படியால் இவ்விலிங்கத்தை நீரே பூசித்து வருக என்று கூறிப் பின்னும் அவ்விலிங்க சொரூப லக்ஷணங்களை விளம்புகிறார். உலகங்களுக்கெல்லாங் கருத்தாவாகிய இலிங்கசொரூப சிவபெருமான் நித்தியரும் சருவவியா பகரும் அநாதி மலமுத்தரும் சர்வக்ஞரு சர்வகர்த்தாவும் நித்தியானந்தரும் காருண்யரும், சுவதந்திரருமாயுள்ளவராவர். அவருடைய தொழில்கள் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என ஐந்தாகும். அவர்க்குரிய வடிவம் அருவம், உருவம், அருவுருவம் என மூன்றாகும். இத்தன்மை யுடையவராகிய நம்பெருமானைச் சிவலிங்கத்திற் பூஜைசெய்து ஆராதிப்பதே முக்கிய கடமையாகும். இதனை அரியமந்திரங்களாகிய சிவசத்தி அட்சரப் பொருள்களை உள்ளத்திலே சிந்தித்து அவைகளை யறிவிக்கும் வாசகமந்திரங்களை யுச்சரித்து சிவலிங்கத்திருமேனியையுட்

கொண்டு சிவபெருமானுக்கு உபசாரத்துடன் கூடிய உண்மை வழிபாடுகளாலே பூசித்து வந்தால் அவருடைய தரிசனக்காட்சியைப் பின்னாலடையலாகும் என்று திருவாய் மலர்ந்தருளி அவரிடம் விடைபெற்றுச் சதுரகிரியின் பக்கத்திலிருக்கிற மலைபோய்ச் சேர்ந்து அங்குத் தவநிட்டை புரிந்துகொண்டிருந்தனர். அதனால் அம்மலைக்குக்கும்பமலையெனப் பேராயிற்று. பின்பு சுந்தரானந்தர் தவசிரேஷ்டரான, அகத்திய ருபதேசத்தின்படி அவராற் பிரதிட்டை செய்த இலிங்க சொரூபத்தைப் பூசித்துக் கொண்டு வந்தனர். அதனால் அன்று முதல் அவ்விலிங்க மூர்த்திக்குச் சுந்தரலிங்கமெனப் பெயர் வழங்கலாயிற்று என்று சாணாங்கி முனிவர் சொல்லுதலும், நாகார்ச் சுனாதி முனிவர்கள் கேட்டு சுவாமி! மகாதவபரிபக்குவரான அகத்திய முனிவர் சிவபெருமானுடைய திருமணக்காட்சியைக் கண்டு தரிசிக்கப்பெற்றதையும் ஸ்ரீ சுந்தரலிங்கர் உற்பத்தியையும் நன்கருளிச் செய்தீர். இனி மற்ற மூர்த்திகளின் உற்பத்தி சரிதமும் அருளிச் செய்க என்று கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

ஆறாவது,
ஸ்ரீசுந்தரலிங்கச் சருக்கம்.
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
ஏழாவது

ஸ்ரீ மகாலிங்கச் சருக்கம்

சடைமங்கை சடாதாரி யென்னுந் தேவாய்ச்
சதுரகிரி யடித்தலத்தி லமரவாக்கி
இடைமங்கை யவள்கணவன் பச்சைமாலென்
றினியகுணப் பொதுவனின்சா யுச்சியத்தை
நடைமங்காப் பத்தியினா லடைய வன்பால்
நயந்துபுரி மகாலிங்க ரன்பை யின்பாய்த்
தொடைமங்கா வசனவழி வகுத்துக்கூறத்
துணிந்திட்டே மவனடியைத் தொழுதுநாமே.

ஆன்மாக்கள் போகத்தை அனுபவிக்கும் தானமாகிய கைலையங்கிரியின் கண் பர்வதராஜபுத்திரி சமேதராக எழுந்தருளியிருக்கிற. சிவபெருமான் அடியார்களுள் ஒருவனும் வீணாகானத்தால் நம்பெருமானைச் சந்தோஷிக்கச் செய்து வருகிறவரும் அவரை யனுதினமும் வணங்குவதே மேலாகிய இன்பமெனத் தம்மனத்துட் கொண்டவருமான அழகில் மன்மதனை யொத்த யாழ்வல்ல தேவரென்பவர் ஒருநாள் வழக்கம்போல், சிவ பெருமான் திருச்சன்னதியின் முன்னுஞ்சென்று, பத்தியாகிய ஆனந்தம் மேலிடும்படி சங்கீத சுதிலயக்கிரம முறையோடு, சாமவேத வீணாகானஞ் செய்து கொண்டிருந்தனர். அப்போது, ஒப்பற்ற மேருவை வில்லாகவுடைய சிவபெருமானைத் தரிசிக்க, ஆங்கு வந்து சூழநின்று கொண்டிருந்த அநேக தொண்டர் குழாங்களில், மிக்க சௌந்தரியமுள்ள ஓர் தேவமாது. அவரது இனிய பாடலைக் கேட்டு மகிழ்ந்து அவரது அழகில் மயங்கி அவர் மீது தன் கண்வலையை வீசினாள். அத்தேவமாதை அந்த யாழ்வல்ல தேவருங்கண்டு தானும் மெய்மறந்து தம்வினை யிருந்தவாறே மயங்கி மோகமுற்றனர்.

அத்தருணத்தில் அவ்விருவர்களுடைய கண்களின் செய்கையானது ஒன்றுக் கொன்று போர் புரிந்து சமாதானஞ் செய்து கொள்ளுதல் போலிருந்தது. இச்செய்திகளை யெல்லாந் தெரிந்த நினைத்தற்கரிய பரஞ்சோதி யருள்வடிவாகிய சிவபெருமான் யாழ் வல்ல தேவரையும் தேவமாதையும் நோக்கி நீங்களிருவரும், நம்தானத்திற்கு வந்து மாயமாகிய பாசபந்தக் காமவிச்சையை எண்ணினமையால், பூலோகத்திற்குச்சென்று செனித்துக் காமவின்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டிருங்கள். முடிவில் நாம் வந்து தடுத்தாட் கொள்வோம் என்று திருவாய்மலர்ந்தருள, அதைக் கேட்ட அவ்விருவரும், அவரடி மலரை அன்போடு

பன்முறை வணங்கிச் சுவாமி எங்களுடைய பூர்வ கன்மானுபவத்தாலிக்கொடிய சாபத்தைப் பெறலாகினோம் என் செய்வோம் என ஏங்கி, வருத்த முற்று எம்பெருமானே! இச்சாப விமோசன காலம் எப்பொழுதோ, அதை அருளிச் செய்ய வேண்டுமென்று கேட்க அதற்குச் சிவபெருமான் நீவீர் சனித்து நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக விமோசன காலத்தை யடைவீர்களென்று அருளுதலும், அவ்வருளைப் பெற்றுக் கடலாடை சூழ்ந்த இப்பூலோகத்தில் அமிழ்தினுமினிய செந்தமிழ்ப்பாண்டி நாட்டைசார்ந்த மகாபெருமை வாய்ந்த இச்சதுரகிரிக்கருகில் ஐந்து நாழிகை வழிதூரத்தில் பூமிதேவியாகிய மங்கைக்குப் பரிமளமிகுந்த குழல் போலப் பூஞ்சோலையும்: மெல்லியல் நேரும் வல்லிக் கொடியும் இரண்டு தனம் போன்ற உயர்ந்த இரண்டு குன்றுகளும், பூமாலைபோன்ற சிற்றாறுகளும், சூழ்ந்து விளங்கா நின்ற கோட்டையூர் என்னும் அழகிய நகரத்தில் கல்வியறிவும் நற்கண நற்செய்கைகளும் ஈசுரபத்தியும், அடியார்பக்தியும், ஜீவகாருண்யமு முடைய மேலாகிய O பொதுவர் குலதிலகனான தில்லைக்கோன் என்பவனுக்கும், அவன்மனைவி திலகமதி என்பவளுக்கும், சிவபெருமான் ஆக்ஞையின்படி யாழ்வல்லதேவர் அருமைப்புத்திரனாக வந்தவதரித்தனர். அப்பால், அத்தில்லைக்கோன் தங்கையாகிய சிங்காரமங்கை என்பவளுக்கும், அவன் புருடன் செங்கமலக்கண்ணன் என்பவனுக்கும், ஏழுபுத்திரர்களிருக்கச் சிவபெருமான் உத்தரவின்படி தேவமாது எட்டாவது அருமைப் புத்திரியாக வந்தவதரித்தனள்.

அவ்விரு குழந்தைகளும், தாய் தந்தையர்கள் அன்பால் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அத்தாய் தந்தைகளால் ஆண்மகவினுக்குச் சரீரம் மேக நிறம் போலிருந்தால், பச்சைமாலென்றும், பெண்மகவினுக்குச் சடை போட்டிருந்தால் சடை மங்கையெனவும் நாமகரணஞ் செய்யப் பெற்றுத் தவழ்தல் மழலை வார்த்தை பயிலல், தளர்நடை நடத்தல், முதலியவைகளைச் செய்து வருகையில், பச்சைமாலென்பவனுக்கு, வயது பதினாறும், சடை மங்கை என்பவளுக்கு, வயது பன்னிரண்டுமாயின. அத்தருணம், அவரவர்களுடைய தாய் தந்தையர் முதலான சுற்றத்தார் யாவரும் மக்களுக்குத் தக்க பருவ காலம் வந்ததென்றும், கல்யாணச் சடங்குகளை முடிக்க வேண்டுமென்றுங்கூற அதைக் கேட்ட தில்லைக் கோன் தன்புத்திரனாகிய பச்சைமாலென்பவனுக்குத் தங்கையாகிய சிங்கார மங்கையினது புத்திரி சடை மங்கை யென்பவளை நல்ல சுபமுகூர்த்தத்தில் மிக சிறப்பாக விவாகம் முடித்து வைத்தனன். அப்பால் சதிபதிகளிருவரும் மனமொத்து இல்லறம் வழுவாது சந்தோஷமாக வாழ்ந்து வருகையிற் பச்சைமா லென்பவன், தன்குலத் தொழிலின் வழக்கம் போல, ஆவினங்களை யோட்டிச் சதுரகிரிக்குச் சமீபத்திற் சென்று மேய்த்தும், சிலநாட் சென்று அவ்விடத்திலேயே ஆவின் கிடைப் போட்டும், அனுதினமும் மாலைப் பொழுது, அந்த ஆவினங்களின் பாலைக் கறந்து தன் மனைவியினிடங் கொடுத்தும், அவள் அப்பாலைப் பெற்றுத் தன்னில் லஞ்சென்று, விற்றுக் கால க்ஷேபஞ்செய்தும், இப்படியாக இருவரும் இருபதுவருடம் காலங்கழித்து வந்தார்கள். அதன் பின்னர்,

O பொதுவர் - இடையர்.

உலகத்தை ஐந்தொழில்களாலும், நடாத்தி வருகிறவரும், உமாசமே தராக வெள்ளியங்கிரியி லெழுந்தருளி யிருப்பவருமாகிய சிபெருமான், தமது அந்தரங்க அதிபிரியபத்தரான யாழ்வல்ல தேவரென்ற பச்சைமாலென்பவனுக்கும், அவன் மனைவி தேவமாது என்ற சடை மங்கை என்பவளுக்கும், திருக்காட்சியீந்து, ஆட்கொள்ள வேண்டுமென எண்ணங்கொண்டு பூலோகத்திற்கு வந்து திருநீரு உத்திராக்ஷந் தாங்கிய திருமேனியராய் சடா மகுட காவிவஸ்திர தண்டு கமண்டலமுடைய, ஓர் அரிய சித்தராய்த் தெய்வத் தன்மை வாய்ந்த மாவூற்றின் பக்கத்திலெழுந்தருளியிருந்தனர். அப்போது வழக்கம் போற் சடை மங்கையானவள் ஆவின் கிடைக்குச்சென்று தன் புருடனாகிய பச்சைமாலென்பானிடம் அன்று கறந்த ஆவின் பாலை வாங்கிக் கொண்டு வருகையில் ஆங்குவழியில் அம்மாவூற்றின் பக்கத்திலெழுந்தருளியிருக்கிற கடவுளாகிய மகாசித்தரைக் கண்டு பயபக்தியோடு வணங்கி நின்றனள். அதைத் தெரிந்த சித்தரானவர் அவளை நோக்கி மாதுசிரோமணி! நமக்கு இப்போது அதிகதாகமாயிருக்கிறது. உன் கரத்திற் பற்றியிருக்கிற பாத்திரப்பாலைச் சிறிது கொடுப்பாயா? எனக்கேட்க, அதற்கவள், உடனே பாற் பாத்திரத்தை அச்சித்தரிடந் தர. அவரதை வாங்கிச் சிறிது அருந்திக்களை தீர்ந்து சடைமங்கையினது சீவகாருண்யத்திற்கு மெத்தவுஞ் சந்தோஷித்துக் கிருபைகூர்ந்து நாமிங்கு இன்னுஞ் சிலநாள் வசிக்கும்படி நினைக்கிறோம். அதுவரை அனுதினமும் பால் கொண்டுவந்து கொடுக்க முடியுமோ என்று கேட்க அதற்கவள் அவ்விதமே செய்கிறேனென்று அவரிடம் விடைபெற்று தன்னில்லஞ் சென்றனள். மறுநாளும் தன் புருடனிடஞ்சென்று பாலை வாங்கிக் கொண்டுவந் துபசரித்தும், அருந்தச் செய்தும், அவரை நமஸ்கரித்தும், இப்படியாக அச்சித்தருக்கு அனுதினமும் பணிசெய்து வருகையில், அவளுடைய தாய் தந்தையர் மாமன் மாமி முதலான சுற்றத்தார் யாவரும் பால் அனுதினமும் குறைந்து வருவதைக் கவனித்து அவளுடைய புருஷன் பச்சைமாலென்பவனிடந் தெரிவிக்க, அவன் நான் பாத்திரத்தில் நிறையப் பாலைக்கறந்து கொடுத்தனுப்பப் பால் குறைந்து வரவேண்டிய காரணமென்ன? நல்லது இதனை அறிய வேண்டும் என்று, மறுநாள் வழக்கம்போற் பாலைக் கறந்து கொடுத்து, அவளுக்குத் தெரியாது பின்சென்று மறைவாக நின்றுக்கொண்டிருந்தான்.

அவள் வழக்கம்போல அப்பாலைச் சித்தரிடங் கொடுத்து அருந்தச் செய்து அவரைத் தொழுது விடை பெற்றுத் தன்னில்லஞ் சேர்ந்தனள். அதைக் கண்ணுற்ற இடையன் மிகுந்த கோபாவேசனாய், ஓடோடிச் சென்று மனைவியைக் கரம்பற்றி அடீ! நான் மலைவனங்களில் வெயிலிலும், பனியிலும் அலைந்து திரிந்து ஆவினங்களை மேய்த்துக் கஷ்டமுற்றுக் கறந்து கொடுத்த பாலை, யாரோ ஒரு பரதேசிக்கு அருந்தக் கொடுத்தனையே! என்று கொடுமையாகக் கோபித்துத் தண்டித்தான். அத்தண்டனையைப் பெற்ற சடை மங்கையனவள் மாவூற்றி னருகிலிருக்கிற கடவுளாகிய சித்தரிடம் வந்து, சகல விஷயங்களையும் அறிவித்து வருத்தமுற்றழுதனள். அதைக் கேட்ட சித்தர் அவளுக்கு அப்பொழுதே நற்பதவியையீந்து அவளுருவை நவசத்திகளிலொருத்தியாக அமைத்து, சடா தாரியெனும் பெயரிட்டுத், தெய்வத்தன்மையை யடையும்படி செய்து, மானிடர்களுக்கு இம்மையில் வேண்டிய மனோபீஷ்டங்களையருளும்படி வாக்களித்து அவ்விடத்திலேயே யிருக்கும்படி செய்தனர். ஆனதால், சடாதாரி கோயில் இன்றைக்கும் மாவூற்றுக் கருகி லிருக்கிறது.

அத்தேவியையும் பத்தியோடு வணங்குவோர், இம்மையில் வேண்டிய அநேக சுகபோகங்களை அடைவர். அப்பால் அம்மங்கையுடன் பிறந்த அண்ணன் மாரெழுவரும் தங்களுடைய தங்கையைத் தேடிவந்து சித்தரிடம் கேட்டுத் தெரிந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்ட சித்தர் பெருமான் அவர்களையும் தெய்வத்தன்மை தங்கிய ஏழு ஐயனாராக்கித் திசைக் கொருவராய் வீற்றிருக்கச் செய்தனர்.

பின்பு பச்சைமாலென்போன், தன்மனைவி சடை மங்கை சடாதாரி யென்ற பெயர் பெற்று, தெய்வீகமானதையும், மைத்துனரெழுவரும் ஐயனராக நாமம் புனையப் பெற்று, திசைக்கொருவராக வீற்றிருப்பதையும், அவர்களை மற்ற மானிடர் யாவரும் பொங்கலிட்டுப் பூசித்துப் புகழ்ந்து கொண்டாடுகிறதையும் பார்த்துங் கேட்டுந் துக்காந்த காரனாகிச் சிலநாளங்கிருந்து பின்பொருவாறு மனந்தேறி நமக்கு மாயமாகிய பந்த பாச வாழ்க்கையே இனி வேண்டாமென வெறுப்புற்றுக் கீழிருந்த ஆவினங்களை யோட்டிச் சதுரகிரியின் மேலே சென்று ஆங்கு ஒரு பசுக் கிடையமைத்து வாசஞ்செய்து அறிவு, அருள், அடக்கம், தவம் பத்தி முதலியவைகளும் நல்வினை தீவினைகளால் வரும் ஆக்கம் கேடுகளில் சமபுத்தியும், யாவரையும் மோகிப்பிக்கின்ற மகா சௌந்தரியம் வாய்ந்த மாதர்கள் வலிய வந்து தழுவினாலும் அவர்களைத் தாயென மதிக்குஞ் சிந்தையும் உடையவனாகிப் பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் பஞ்சபாதகத் தொழில்களை பற்றாது தானம், தவம், தயை, தாக்ஷிண்யம் என்ற நன்னடக்கையுடன் ஆங்குப் பசித்து வந்தோர்களுக்குப் பால், தயிர், மோர், முதலியவைகளைக் கொடுத்துப் பசியாற்றிச் சந்தோஷிக்கச் செய்தும், எப்பொழுதுந் தனக்கு மோட்ச வாழ்வை யருளவேண்டுமெனக் கங்கைவேணியனான மங்கையோர் பாகனை நினைத்துத் தியானித்துக் கொண்டுமிருந்தான்.

அப்பால் கோட்டையூர் அரசனாகிய கொடை வள்ளலென்று கூறாநின்ற மூவரைய தேவனென்பவன் மாவூற்றின் கண்ணெழுந்தருளியிருக்கிற சிவபிரானான சித்தருடைய வல்லமைகளை யெல்லாம் பலராலுங் கேள்வியுற்று. அவரைக்காணச் சைனியங்களுடன் பிரயாணமாகிவந்து, சித்தரைக்கண்டு பன்முறை வணங்கி தோத்திரித்து நிற்க, அப்பொழுது சித்தர் ஆசீர் வசனங்கூறி, அவனை அரசனெனவறிந்து, அப்பா மன்னவனே! நமக்கு இவ்விடத்தில் ஆலயமொன்ற மைத்துக் கொடுப்பாய் என்று கூறுதலும், அதற்கு அரசன் உடனே சிற்பிகளால் விசித்திரமான, அழகிய ஆலயந் தடாகம் முதலானவைகளைச் செவ்வையாய மைத்துச் சித்தரிடந் தெரிவிக்க அவர் அன்று காலை சூரியோதயத்தில் கோயிலுட்சென்று இலிங்க சொரூபமாக அரசன் முதலான யாவர்களுக்குந் தெரிசனக்காட்சியையீந்து மறைந்தருளினார். அதனால், அவ்விலங்க மூர்த்திக்கு உதயகிரி நாதரெனப் பெயர் வழங்கலாயிற்று மாவூற்றில் நீராடி அம் மகாநாதரைத் தரிசித்தவர்கள் சகல பாவங்களும் நீங்கி மோக்ஷவாழ்வைப் பெறுவார்கள். அப்பால் இச்சதுகிரியின் கண் பசுத்தொழுவமைத்து ஆவினங்களை மேய்த்து வருகிற பச்சைமாலென்னும் பெயரையுடைய புண்ணியனானவன் ஓர் நாள் ஆவினங்களை மேய்த்துப் பசுத்தொழுவுக்கு ஒட்டிக்கொண்டு வரும்பொழுது அகத்தியராற் பிரதிட்டை செய்து கொடுக்கப்பெற்ற இலிங்கத்தைச் சுந்தரானந்தனர்

பூசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு. ஆனந்தமுற்றுச் சமீபத்திற்சென்று சுந்தரானந்தரையும் இலிங்க சொரூபத்தையும், அன்புற வணங்கிச் சுத்தரானந்தரது ஆசீர் வசனம் பெற்று ஈசுரபத்திமிகுந்து, அன்று முதல் தன்னுடைய ஆவினங்களிலொரு ஆவினைக் குறித்து அதன்பாலைநாடொன்றும் கொணர்ந்து சுந்தரானந்தர்க்குக் கொடுப்பதாகவும், அவ்விலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்து வருவதாகவும் நினைத்து அப்படியே யாதொரு குற்றமுமில்லாது அனுதினமுஞ் செய்துவந்தான். அப்போது எம்பெருமானாகிய சித்தரானவர் பச்சைமாலை யாட்கொள்ள வேண்டுமென எண்ணங்கொண்டு, சதுரகிரிக் கற்பக விருக்ஷத்தின் சமீபத்தில் வருகையில் சுந்தரானந்தரும், சட்டை நாதரும் பார்த்து இவர் யாரோ! மகாசித்தர் வடிவமுடையார் போற் காணுகிறது, என நினைந்து விரைவாயுடனே எழுந்து எதிர்சென்று வணங்கி அழைத்துவந்து, ஆசனத்தி லெழுந்தருளச் செய்து, அருக்கிய முதலியவற்றைக் கொண்டு உபசரித்துப் பூசித்து யாசித்து நேசித்திருந்தனர்.

மறுநாள் சுந்தரானந்தர் வழக்கம் போல இலிங்கத்தைப் பூசிக்க, எத்தனிக்கும் பொழுது, சித்தமூர்த்தியானவர் தெரிந்து நாம் கேட்கிற விஷயங்களுக்கு என்ன விடை கூறுவாரோ பார்ப்போமென்று எண்ணினவராய் அவரை நோக்கிச் சுந்தரானந்தரே உலகத்தில் சித்த ஞான தவத்தோர்கள் யாவரும் தன்னையறிந்து தானே பிர்மமென்று, தன்னையே பூசித்து, ஆத்மஞானத்தை யடையலா மென்கிறார்களே? நீரேன் அவ்விதஞ்செய்யக் கூடாது? அவ்வழிகளையெல்லாந் தவிர்த்து, இவ்விலிங்கத்தை வைத்துப் பூசிக்கப் போகின்றீரே; இந்த லிங்கத்தின் விவரமென்ன? இதனாலடையும் பயனென்ன? என்று வல்ல சித்தராகிய யெம்பெருமான் கேட்க, அதற்குச் சுந்தரானந்தர் சுவாமி! சிவலிங்கங்களின் விபரமாவது என்னவெனில் பரார்த்தலிங்கம், இஷ்டலிங்கம் என இருவகையுண்டு. அதில் பரார்த்த லிங்கமாவது சிவபெருமான் சருவசங்கார காலவரையுஞ் சாந்நித்தியராயிருந்து ஆன்மாக்களுக்கு, அனுக்கிரகிக்கப்பெறு மிலிங்கமாம். அது சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகையாகும். இவைகளுள், சுயம்பு லிங்கமாவதுதானே தோன்றியது. காணலிங்கமாவது தேவி, விநாயகர், சுப்பிரமணியர் முதலானோர்களாற் றாபிக்கப் பெற்றது தைத்விகலிங்கமாவது பிரமா, விட்டுணு முதலானோர்களாலே ஏற்படுத்தப்பெற்றது.

ஆரிடலிங்கமாவது இருடிகளாற் றாபிக்கப்பெற்றது. மானுடலிங்கமாவது மானிடராற் றாபிக்கப்பெற்றது. இஷ்ட லிங்கமாவது பரம்பரை ஆசிரியரின் உபதேசத்தின்படி அவரிடத்தில் அடியேன் இச்சரீரம் உள்ளவரையும், பூசைசெய்யாது ஒன்றும் உட்கொள்ள னெனப் பிரதிஞ்ஞையோடு பெற்றுப் பூசிக்குமிலிங்கமாம். அதில் வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், லோகஜலிங்கம், சைலலிங்கம், க்ஷணிகலிங்கம் எனப் பலவகையுண்டு. ஆனாலும் இப்பொழுது, அடியேன் வைத்துப் பூசித்து வருகிற லிங்கமாவது பரார்த்த லிங்கத்தின் வகைகளுளொன்றாகிய ஆரிட்லிங்கமாகும். இஃது அகத்தியராற்றாபிக்கப் பெற்றது. அவரது உபதேசவனுக்கிரத்தால் தான் நான் பூசித்துவருகிறேன். அதன் பயனாவது, ஆதிமத்யாந்த ரகிதராகிய சிவபெருமான் ஆண்டவர் என நினைந்துதான் அடிமையென்னு

முறைமையை மனத்தகத்தே வழுவாமலிருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு ஒரே மனமாயிருந்து பூசித்துக்கொண்டுவரின் விறகினிடத்தே, அக்கினி பிரகாசித்தாற்போல் ஆன்மாவினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து மும்மலங்களையும் நீக்கித்தவயோகமோன ஞானானந்தத்தை யீந்தருளுதலாகும் என்று கூறினர்.

அதைக் கேட்ட சிவபெருமானாராகிய சித்தர் குறு நகைபுரிந்து, சுந்தரானந்தரைத் தழுவிச் சந்தோஷித்து இருவரும் யோகசாதனைகளைப் பற்றிச் சிறிதுநாழிகை வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் பச்சைமால் வழக்கம்போல் தன் ஆவினங்களை மேய்த்துச் சுந்தரானந்தர் ஆகாயமார்க்கமாக வருதலும், சித்தரானவர் பச்சைமாலாகிய அவ்விடையனையும், ஆவினங்களையும் கிருபைக்கண்ணாற்பார்த்து இத்தருணத்தில் நாம் ஒரு திருவிளையாடல் செய்வோமென எண்ணங்கொண்டு பச்சைமாலானவன் சுந்தரானந்தர்க்கும் இலிங்கமூர்த்திக்கும், பால் கறந்து கொண்டு வருதற்குக் குறித்திருந்த பாற்பசு வொன்றைப் பஞ்சதரு நிழலின் கண் தனித்து நிற்கும்படி செய்தனர். அதையறியாத பச்சைமாலோ! சீக்கிரம் பால்கொண்டு வரவேண்டுமெனப் பசுக்களையெல்லாந் தொழுவுக்கு ஓட்டிச் சென்றடைந்து, இலிங்க அபிஷேகத்துக்காகவும், சுந்தரானந்தருக்காகவும், பால் கறப்பதற்குக் குறித்திருந்த பாற்பசுவைக் காணாது மனம்வருந்தித் தான் வந்த வழியை நோக்கித் தேடிவருகையில் ஆங்குத்தங்கி நின்ற பாற்பசுவினுடைய மடுவில் சிவபெருமானாகிய சித்தரானவர், தமது திருவாயை வைத்துப் பால் பருகிக் கொண்டிருந்தனர். அதை அப்பச்சைமால் கண்டு, அவ்விடத்தில் வாழும், ஈச்சுரனாகிய சித்தரை வனவேடுவனென நினைத்து, அடா பாவி? கடவுளுக்காகக் குறித்து விட்டிருந்த பாற்பசுமடுவில் வாய் வைத்துப் பால்பருகி, எச்சிலாக்கி விட்டனையே? சண்டாளா! இனியானென்ன செய்வேன்! என்று உரத்த சத்தமிட்டு மிகுந்த கோபத்துடன் ஓடிவந்து தன்கரத்திற் பற்றியிருந்த கழியால் அழகிய சடாமகுடதாரியாகிய சித்தரின் சென்னியிலோங்கி சருவான்மாக்களும் உணரும்படி புடைத்தனன். அவ்வாறு தன் சென்னியும் நோவப்புடைத்த பச்சைமாலைச் சுந்தரானந்தரும், சட்டை முனிவருங்கண்டு, திடீரென்று முனிவு கொண்டெழுந்தனர். அவ்விருவரையும், சித்தரானவர் அமர்த்திவிட்டுப் பின்னர் உயர்ந்த சடாமகுடதாரியாய்ச் சர்ப்பாபரணராய்க் கொன்றைமாலை யணிந்தவராய் மான் மழு துடி கபாலசூல கரத்தோடு நின்ற திருக்கோலமாகத் தமது உருவைக் காட்டியருளினார்.

அத்திருக்காட்சி தரிசனத்தைக் கண்ட பச்சைமால் சித்தரை அருவமும், உருவமும் அருவுருவமுமான நம் பெருமான் எனவறிந்து, சிரசின் மேற்கை குவித்து, வணங்கிக் கண்ணீர் ததும்ப, ஆனந்தக் கூத்தாடிப் பன்முறையிந் தோத்திரஞ் செய்து, அடியேனறியாது செய்த குற்றத்தை மன்னித்தருளுகவென வேண்டினன். சராசரங்க ளெல்லாவற்றையும், தம்மிடத்திற்றோற்றி ஒடுக்கா நின்ற சதாசிவ மூர்த்தியானவர், சிவபத்தப் பிரியனாகிய பச்சைமாலைக் கிருபைக் கண்களாற் பார்த்தருளி இனிய குருநகை தோன்ற அப்பா! நீ அனுதினமும் நமக்குப் பாலாபிஷேகஞ் செய்தும், அடியாராகிய சுந்தரானந்தர் முதலானோர்களுக்குப் பால்கொடுத்து, அருந்தச் செய்தும் வந்த உன்பத்தியினால், மிகுந்த மகிழ்ச்சி யடைந்தோம். இனியுனக்குயாதுவரம் வேண்டுமெனத் திருவாய் மலர்ந்தருள, அதற்கும் பச்சைமால் ஆகிய இடையன்

எவ்விடத்தும் நிறைந்துவிளங்கிய சச்சிதானந்தமே திருமேனியாகக் கொண்ட சங்கரமூர்த்தி இனி அடியேனுக்கென்ன வேண்டியதிருக்கிறது. உம்முடைய பாதாரவிந்தமே வேண்டும். வேறு ஒன்றும் வேண்டுவதில்லை யென்றுகூற, அதைக் கேட்ட எம் பெருமான் அவனுடைய உறுதியையும், பத்தியையும் மெச்சி, மேன்மை தங்கிய அருட்பேறொளிமிகுந்த தமது பாததாமரை நீழலில் அவனை ஐக்கியம் பண்ணி ஆட் கொண்டனர்.

அப்பால் அவனுடைய தாய்தந்தையர்களுக்கும், அந்தப் பாற்பசுவுக்கும் மேலாகிய சாயுச்சிய பதவியையீந்தனர்.

வேதங்களையே சிலம்புகளாக வணிந்து நடனமாடிய பெருமானது திருவடித் தாமரைகளை ஆங்கு சூழநின்று துதித்துக் கொண்டிருக்கிற சுந்தரானந்தர் சட்டைநாதர் முதலான தவமுனிவர்களைக் கைலைவாசராகிய கருணாகரக் கடவுளானவர், தமது திருவருட் கண்களால் நோக்கித் தவசிரேஷ்டர்களே! உங்களுக்கு யாது வரம்வேண்டு மென்றுவினவ, சித்தவடிவந்தாங்கி யீங்கு வந்து எங்களிடஞ் சிநேகித்திருந்த எம் பெருமானே! உம்முடைய திருமூர்த்தி சொரூபத்தை இவ்விடத்திலேயே எக்காலமும் பூசித்துத் தரிசித்துக்கொண்டிருக்கும்படியான வரத்தை யீந்தருளவேண்டுமென்று கேட்க, சோமசேகரனான வாமதேவப் பிரான்: அவர்கள் மனோ பீஷ்டத்தின்படி உடனே மறைந்து, அவ்விடத்திலேயே சுயம்புலிங்க வடிவமாக எழுந்தருளியிருந்தனர்.

அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தேவதுந்திமிகள் முழங்கின. சுந்தரானந்தர், சட்டை நாதர் முதலான சகலமுனிவர்களும், பச்சைமாலாயனுக்குப் பரமானந்த வாழ்வைக் கொடுத்த பரமனே! பண்ணவர் தொழுங்கிரமனே! அரனே! மகாசித்த வடிவங்கொண்டதிரனே! மான்மழுக்கரனே! எனப் பல வாறு கூறிப் புகழ்ந்து, போற்றிப் பணிந்தனர். அன்று முதல் அரிய தவசிரேட்டரான சட்டைமாமுனிவர், அவ்விலிங்க சொரூபத்தைப் பூசித்து வந்ததனால் அதற்கு மகாலிங்கமெனப் பெயர் வழங்கலாயிற்று. என்று சாணாங்கி முனிவர் கூறுதலும், அதைக்கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் களிகூர்ந்து சுவாமீ! இந்தவரலாற்றைக் கேட்கப்பெற்ற நாங்கள் மிகவும் கிருதார்த்தர்களானோம். ஆனாலும் பரமேசுவரராகிய சித்தருக்கு அன்போடு ஆவின்பாலைக் கொடுத்து அருந்தி மகிழச் செய்த சடைமங்கையம்மை சடாதாரி என்னும் ஒரு தெய்வ வடிவமாகவும், அவ்வம்மையினுடைய அன்பின் பெருக்கால் நிகழ்ந்த உத்தமச் செய்கையினருமையை அறியாமையால் அவளைத் தண்டித்தவனும், சிவசித்தருடைய திருமுடியின்மீது கைக்கழியாலடித்தவனும், ஆகிய பச்சைமால் திருவடி நிழலிற்கலக்கவும், நேர்ந்தது என்னே! மேலும் இவர்கள் தம்பதிகளல்லவோ! இருவர்க்குஞ் சமமான பேற்றையாயினும் நமது பெருமான் அருளிச் செய்ய வேண்டாவோ? இதில் ஏதோமருமமிருக்கிறது. அதனை எங்களுக்கு விளக்கியருளல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அதற்குச் சாணாங்கிமுனிவரும் மகிழ்ச்சியுடையவராய் முனிவர்களே! நீவிர் நன்று வினவினீர், பூர்வத்தில் சடைமங்கையை ஓர் தேவமாதென்றும், பச்சைமாலை யாழ்வல்ல தேவரென்றும், உங்களுக்கு நான் முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? அக்காலத்தும் பிற்காலத்தும்

அந்தத் தேவமாது திருவடி நிழலை யடையும்படியான அருந்தவஞ்செய்தவளில்லை; தெய்வப் பிறப்பை மேலாக எண்ணிய அவளுக்கு அவளென்னமிருந்தவாறே தெய்வவடிவைச் சிவபெருமான் அருளிச்செய்தனர் யாழ்வல்லதேவரோ! சாமவேதகானத்தால் சதாபரமேஸ்வரனுடைய திருச்செவி குளிரும்படி பாடித் திருவடி பெறுதலையே வேண்டி அருந்தவம் புரிந்து நின்றார்.

அத்தகைய அவரையறியாமல் அவருடைய வினையிருந்தவாறே தேவமாதை விரும்பிய சிறுகுற்றந் தீர்த்தற்பொருட்டுப் பச்சைமாலாகப் பிறந்து அவளுடன் சிறிது காலம் வாழ்ந்திருந்தார். பின்னர் தடுத்தாட் கொள்ளும் இறைவன்வந்து அவளைப் பிரித்துவிட்டான். அப்பால் பூஜாதிரவியத்தைக் கவர்வாரைத் தண்டித்தலை அவரைக்கொண்டு உலகத்திற்கு அறிவிப்பதற்காகவே இறைவன் அடியும்பட்டான். கடைசியாக விட்டகுறை இருந்தபடி பச்சைமாலுக்குத் திருவடிப் பெரும்பேற்றை வழங்கினான். எம்பெருமான், வேண்டுவார் வேண்டிற் றெல்லாம் வேண்டியாங் கருள்வோனாதலின், அவ்வாறு அருளிச் செய்தனர் என்று சாணாங்கி முனிவர் திருவாய் மலர்ந்தருளவும், அதைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் தமக்குண்டாயிருந்த சந்தேகம் நீங்கியவர்களாய் பரமானந்தக் கடலிற்படிந்து முனிசிரேஷ்டரே! இன்னும் சதுரகிரியிலுள்ள மூர்த்திகளின் சரிதங்களைச் சொல்வீராக என்று பிரார்த்தித்தார்கள் சாணாங்கிமுனிவர் மகிழ்ந்து ஆனந்தவல்லி யம்மை பூசித்த சந்தனலிங்கத்தின் பெருமையைச் சாற்றுவாராயினர்.

ஏழாவது,
மகாலிங்கச் சருக்கம்,
முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்
எட்டாவது

சந்தன மகாலிங்கச் சருக்கம்

அண்டமெலாந் திருவயிற்றில் வைத்தென்றுங்காத்தருளும் அம்மை யீசன்
கொண்டதிரு வுருவினிடம் பெற்றர்த்த நாரியெனுங்கொள்கை மேவக்
கண்டசதுர் வெற்பிற்சந் தனநிழலில் தாபித்துக்களித்தன் பார்ந்து
பண்டருச்சித் தொளிரவருஞ் சந்தனலிங் கப்பெருமைபகர லுற்றாம்.

கேளும் முனிபுங்கவரே! முன்னங் கைலாசத்திலே, கங்கையையும், சந்திரனையும், சடாமகுடத்திலணிந்த சிவபெருமானானவர், பார்வதி சமேதராகக் கொலுவீற்றிருக்கும்பொழுது, அவ்வீருவரையும் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ருஷீஸ்வரர்களும், கருடர், காந்தருவர், இயக்கர், பூதர், மருத்துவர், கின்னரர், கிம்புருடர், சித்த வித்தியாதரர் முதலான யாவர்களும், வழக்கம் போல் வலப்பிரதக்ஷணமாய் வந்து தரிசித்துச் சென்றார்கள். அப்பொழுது தவத்திற் சிறந்த உத்தமராகிய பிருங்கிமகா ருஷியானவர், பார்வதிதேவியைப் புறம்பாக நீக்கிப் பரமசிவனை மாத்திரம் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து தோத்திரித்துக் கொண்டு நின்றனர்.

அதைக் கண்ட உமாதேவியார், மகேசுவரரை நோக்கி சுவாமீ! கருடர், காந்தருவர், இயக்கர், பூதர், மருத்துவர், யோகியர், சித்தர், முனிவர், வானவர் முதலான சகலமானவர்களும், நம்மிருவரையுஞ் சேர்த்தே வலமாகப் பிரதக்ஷணம் வந்து நமஸ்கரித்துச் செல்லுகிறார்களே? இந்தப் பிருங்கி ருஷியானவன் என்னை விலக்கி உம்மை மாத்திரம், வலமாக வந்து தோத்திரஞ் செய்து நிற்கின்றானே! இதன் காரணம் என்ன? அவ்விதஞ் செய்யலாமா? என்று கேட்க, உமா மகேஸ்வரராகிய சிவபெருமான் தேவியைப் பார்த்துச் சொல்லுவார்.

தேவி! உட்புலனைந்தையும் வென்று பற்றினை நீக்கினவர்களாகி, உண்மை உணர்ந்தோரது மனங்களிற்சென்று, அவர்கள் அறிவினிற் பேரின்பமாகிய அமுதத்தைப் பொழிகின்ற ஞானமயமாக நான் இருக்கிறபடியால், என்னைப் பிரதக்ஷணஞ் செய்து வணங்கினவர்கள், பிறப்பிறப்பு இல்லாத முத்தியான மோக்ஷ வீட்டைப் பெறுவார்கள். நீ என்னுடன் பார்வதி சொரூபமாக விருக்கிறதால், உன்னை வணங்கினவர்கள் இஷ்டகாமியார்த்த மோக்ஷங்களைப் பெறுவர்.

ஆகையினால் முப்பத்து முக்கோடி தேவர் முதலிய சகலமானவர்களும், இஷ்டகாமிய மோக்ஷார்த் தங்களை பெறுவதற்காக, நம்மிருவரையும் வலமாக வந்து துதித்துச் சென்றனர். இந்தப் பிருங்கி ருஷிமட்டும், முத்தியென்னும் மோக்ஷவீ டடைவதற்காக என்னை மட்டும் வலமாக வந்து துதித்துக் கொண்டு நின்றனன் என்றுகூற, இதைக் கேட்ட பார்வதி தேவியானவள், பிருங்கி ருஷியைப் பார்த்து.

பிருங்கிருஷியே? நீ என்னை வணங்காது, எம்பிரானை மாத்திரம் வணங்கியதால், சத்திபூசை செய்யாதவனாயினை, சத்தியில்லாது சீவனெவ்வித முண்டாயிற்று. உன்னுடைய சரீரத்தில் சத்தியென்ற என்னம் சமாகிய மாமிசத்தை மட்டுஞ் சுமந்து கொண்டிருக்கலாமோ? அதுவுங் கூடாதே என்று சொல்ல, இதைக் கேட்ட பிருங்க மகாருஷி உட்கார்ந்து சரீரசத்தாகிய மாமிசத்தை உதறிய பின்னர் எழுந்திருந்து நடக்கச் சக்தியற்றவரா யிருக்கிறதைக் கண்ட எம்பெருமான் தன்னை யறிவாலறிந்த அன்பர்களிடத்தில் என்றுங் கிருபா நோக்க முள்ளவரானபடியினால், உடனே எழுந்திருந்து நடக்கும்படிக்கு வலிமை மிகுந்த பெருமை வாய்ந்த ஓர் கோலை வரிடங் கொடுத்து எழுந்திருக்கும்படி சொல்ல, அதைப் பிருங்கி மகாருஷியானவர் கரத்திற் பெற்றுக் கொண்டு எழுந்திருந்து சிவபெருமானை மட்டுந் துதித்துத் தன் எதாஸ்தானஞ் சென்றனர்.

இதைக் கவனித்த பரமேஸ்வரியானவள் பிருங்கி முனிக்கு ஓர் கோலைக் கொடுத்து அதன் மகத்துவத்தினா லெழுந்திருக்கச் செய்த கோபத்தால், மனம் வேறாகிச், சிவபெருமானுடைய திருமேனியிலொரு பாகமாகத்தானிருக்கவேண்டுமென எண்ணங்கொண்டு பூஜா தவத்தைச் செய்துதான் இடப்பாகத்தைப் பெற வேண்டுமென்றும்; அப்பூஜா தவத்திற் குரியதானம் எதுவென்றும் யோசித்துப் பூலோக கைலைமலையாகிய சதுரகிரிக்குச் செல்ல வேண்டுமென்று நிச்சயித்துச் சிவபெருமானை விட்டுப் பிரிந்து ஆகாய அருஊரு நிகராகிய வாகான தேனருவிகளுள்ளதும், வானுலகம் வரை உயர்ந்து சிவலிங்க வடிவம்போற் றோன்றுவதுமான, அழகிய சதுராசலமென்னும் இச்சதுரகிரியில் சட்டை முனிவர் ஆசிரமத்தில் வந்து கல்லால் விருக்ஷத்தின் கண் ணெழுந்தருளியிருந்தனள்.

அப்போது அவ்வனத்திற் பன்னிரண்டு வருட காலமாக மாரிபொழியாது உலர்ந்திருந்த மரஞ் செடி கொடி புற்பூண்டு முதலானவைகள் யாவும் உமாமகேஸ்வரியினது கருணை விழி நோக்க மகத்துவத்தாற் றழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிகளோடு செழிப்புற்றிருப்பதைத் தெரிந்த சட்டைமுனி முதலியவரும் அப்பொழுது வந்த வான்மீகி முதலிய மகருஷிகள் யாவரும் அதிக ஆச்சரியமடைந்துவனங்களைச் சுற்றிப் பார்த்து வருகையில் நவ சத்திகளுக்குந் தலைவியாகிய மலைமகள் கல்லால விருக்ஷத்தின் கீழிருப்பதைக் கண்டு வணங்கி வலம் வந்து ஆனந்தக் கண்ணீர் ததும்பப் போற்றிப் புகழ்ந்து உபசரித்து உலகமாதாவே! நீயிங்குவர நாங்கள் முன்யாது தவத்தைச் செய்தோமோ! எங்களுடைய பாக்கியமே பாக்கியம். எனப் பன்முறை கொண்டாடித் தோத்திரித்து இவ்விடத்திற் கெழுந்தருளிய காரணமென்னவோ? என்று கேட்க.

அதற்குத் தேவியானவள், அம்முனிவர்களுக்கு ஆசி கூறி நான் சிவபிரானை அர்த்தனாரீஸ்வரர் ஆக்க அவரது வாமபாகத்தைப் பெறுவதற்கு அவரை நோக்கி பூஜாதவம் புரிய வேண்டி வந்தேனெனத் தெரிவித்து அம்முனிவர் யாவரும் சிசுருடை செய்ய உலகத்திலுள்ள எல்லாவுயிர்களுக்கு முயிராகித் தண்ணீரிடத்திலிருக்குங் குளிர்ச்சி போலவும், அக்கினியிடத்தி லிருக்குஞ் சூடு போலவும், மலரிலிருக்கும் மணம் போலவும், மணியிலிருக்கும் ஒளி போலவும் விளங்கி நீங்காமலெங்கும் நிறைந்த பெண் வடிவமாகிய பார்வதி தேவியானவள் புரட்டாசிமாதச் சுக்கில பக்ஷத்தசமி முதல் அதிக காலையிலெழுந்து நித்திய கன்ம அநுட்டான ஜெபதவங்களை முடித்து ஆங்கிருந்த சந்தன விருக்ஷத்தின் கீழ்ச் சைலலிங்க மொன்றைப் பிரதிஷ்டை செய்து, அதற்கு ஆகாய கங்கையைத் தருவித்து, அதோடு விபூதி சந்தன முதலிய வைகளால் நிறைய அபிஷேக முடித்துக் கஸ்தூரி குங்கும புஷ்பங்களையணிந்து அலங்கரித்து முன்பாக இலைவிரித்து அதன் மேல் வெல்லம், வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, அதிரசம் இவைகளை வைத்து இருபத்தொரு நூலிழையை ஒரே இழையாகத் திரித்துச் சிறிது மஞ்சள் தடவி இருபத்தொருமுடி போட்டுத் தன்கரத்திற் கட்டிக்கொண்டு வில்வதளங்களாலும், பல வாசனைப்புட்பங்களாலும் சிவலிங்க சகஸ்திர அஷ்டோத்திர நாமங்களைச்சொல்லி யருச்சித்துத் தேங்கா யுடைத்து நைவேத்திய தூபதீபகற்பூர சோடசோப சாரங்களைச்செய்து பூசித்து, வலமாகப்பிரதக்ஷணம் வந்து பீஜாக்ஷரமந்திரங்களைச் செபித்து, பலபாக்களினாற் றோத்திரித்துத் தவநிட்டையிலிருந்து நெய் வேத்திய பதார்த்தங்களைத் தாமே புசித்து இவ்விதமாகப் பூஜாதவத்தை இருபத்தொரு நாள் (அதாவது) ஐப்பசி மாதக் கிருஷ்ணபக்ஷத் தமாவாசை வரை அநுட்டித்துவந்தனள். அப்பால் இவையெல்லாந் தெரிந்த பொங்கரவணிந்த புராந்தக மூர்த்தியாகிய சிவபெருமான் தேவியினுடைய பூஜாதவத்திற்கிரங்கி, வெள்ளியங்கிரியை விட்டு ரிஷபவாகனாரூடராய் உமையவள் திருமுன்னர் வந்துதோன்றி உமாதேவியே! உனக்கென்ன வரம் வேண்டும்? எதற்காக இவ்வரிய தவத்தைச் செய்கின்றனை? என்று எல்லாந் தெரிந்த இறைவன் ஒன்றுந் தெரியார்போல் கேட்க, அதற்குக் கௌரியானவள் உடனேயெழுந்து அஞ்சலியஸ்தளாய்ப் புகழ்ந்து நமஸ்கரித்துச் சுவாமீ! கைலைமலையில் பிருங்கிருஷியால் அடியேனிவ்விடம் வந்த விஷயங்கள்யாவும் உம்முடைய திருவுள்ளமறிந்ததே. ஆனாலும் உம்முடைய திருமேனியில் அர்த்தநாரியாக இருக்க வேண்டுமெனத் தெரிவிக்க, அமலமூர்த்தியாகிய எம் பெருமான் நல்லது உன் மனோபீஷ்டத்தின்படியே இருப்பாயென வாக்களித்துத் தம் சரீரத்தின் பாதியில் அவ்வுமாதேவியைச் சேர்த்து அர்த்தநாரீஸ்வரரென்ற அழகிய நாமத்தைத் தாமே பெற்றனர். அப்போ தாங்குச் சூழநின்று சிரமேற்கரங்கூப்பி வணங்கிய சட்டை நாதர் முதலான மகருஷிகளுக்கு ஆசீர்வசனங்கூறி வேண்டிய வரங்களை யீந்தது மன்றியும், பராசக்தி பூசித்த இவ்லிங்கத்தை உங்களைப் போன்ற மகருஷிகள் பூசிக்க வேண்டுமே யல்லாது மற்றெவரும் பூசிக்கலாகாது. ஏனெனில், இவ்விலிங்கம் தேவி பூசித்ததாயிருப்பினும் அவள் எனதொரு பாகத்தை பெறக்கருதிப் பூசித்ததாதலால் அவ்வாறு என்னில் இரண்டறக் கலக்கும் முத்திப் பேற்றினை விரும்புவோரே இதனைப் பூசித்தற்கு உரியராவர் என்க. ஆதலால் காமியமாகிய உலகயின்பத்தை விரும்புவோர் பூசிக்கலாகாது என்றோம். பூசிப்பாரானால் அவருக்கு உலகவின்பத்தில் வெறுப்பும் நம்பால் விருப்பும் உண்டாகச் செய்து அவரை நாம் ஆட்கொள்ளுவோம்.

இன்னிலைமையில் நிஷ்காமியமாகி மோக்ஷவீட்டினை விரும்புந் துறவிகளுக் கருளிச்செய்யும் பொருட்டே நாம் இங்குக் கோயில் கொண்டருளினோம் என்று திருவாய் மலர்ந்தருளிக் கைலையங்கிரிக்குச் சென்றனர். சந்தனவிருக்ஷத்தினீழலில் உமாதேவிபிரதிஷ்டை செய்து பூசித்தமையால், அதற்குச் சந்தன மகாலிங்கமெனப் பெயர் வழங்கலாயிற்று. பின்னர், அந்தலிங்கத்தைச் சட்டை முனிவர் பூசித்துவந்தனரென்று மொழிந்து பின்னுஞ் சாணாங்கிமுனிவர் சொல்லுவாராயினர்.

எட்டாவது,
சந்தனமகாலிங்கச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
ஒன்பதாவது

தைலக்கிணற்றுச் சருக்கம்

வேதமொரு நான்கேகால் வெற்பாக நின்றதெனப்
போதவுரை சேர்சதுரப் பொங்கரினற்காலாங்கி
நீதசித்தர் தைலமதை நேராக்கி வைத்துதவும்
சீதமணங் கூர்கிணற்றின் சீர்தெரியச்செப்பிடுவாம்.

வளமிகுந்த சிருங்கேரி என்னும் நகரத்தைச்சார்ந்த வாலைபுரம் என்னும் ஒரு கிராமத்தில் ஈசுவர பக்தியும் தேவாலயத் திருப்பணிக் கைங்கரியங்களி லதிகப் பிரீதியுமான வாமதேவனென்னும் பெயரும் உடையவனான பிரபல வர்த்தகனொருவனிருந்தான். அவன்தன் கிராமத்தில் சிவாலயமொன்றைக் கட்டுவதற்கு நினைந்து அதி நிபுணர்களான சிற்பிகளை வரவழைத்துத் தன்னிடத்துள்ள திரவியங்களைக் கொண்டு அவ்வாலயத்தின் சில பாகங்களைக் கட்டிமுடித்து மற்றைப் பாகங்களைக் கட்டுவதற்குப் பொருளில்லாது பற்பல அரசர்களின் பாற்சென்று யாசித்துவரும்போது, வழியில் முக்காலங்களையுமுணர்ந்த ஒரு முனிவரைக் கண்டு வணங்கி அவரிடஞ் சகல செய்தியையுந் தெரிவித்து ஆலயத் திருப்பணியை முடித்தருளவேண்டுமென இறைஞ்சிக்கேட்க, அதற்கு அம்முனிவர் அப்பா! இக்காரியங்க ளெல்லாம் அரசர்களாலும், ஐசுவரிய முடையவர்களாலும் வகார வேலை தெரிந்த பெரியோர்களாலும் முடியவேண்டுமே யல்லாது நம்மைப் போன்றவரெல்லா முடிப்பதென்றால் அது கூடாத காரியம். அன்றியும், உன் கைவசமிருந்த திரவியங்கள் முழுதுஞ் செலவழிந்து இப்பொழுது யாசகமெடுத்து வருகிறேனென்று கூறுகின்றனை, நல்லது நீ ஆலயத்தைக் கட்டிமுடிப்பது உண்மையென்றால், இத்தருணமே மகா மகத்துவம் பொருந்திய சதுரகிரியின்கண் தவம்புரிந்து கொண்டிருக்கிற வகார வேலைகளில் மிக்க சமர்த்தரான காலாங்கி முனிவரிடஞ் சென்று உனது உள்ளன்பினைத் தெரிவித்தால் காரியம் பூர்த்தி பெறும். ஆகையால் ஆங்குச் செல்லுவாய் என்று கூற அவ்வார்த்தையைக் கேட்ட வர்த்தகன் அடங்காத மகிழ்ச்சியுற்றவனாகி அவரைப் பன்முறை தொழுது விடைபெற்று இச்சதுர கிரியிலிருக்கிற அழகிய பூஞ்சோலைகள் சூழ்ந்த காலாங்கி வனத்துக்கு வந்து ஆங்கு புலித்தோலாசனத்தி லெழுந்தருளியிருக்கின்ற காலாங்கி முனிவரைக் கண்டு அவரடிமலரைப் போற்றிப் புகழ்ந்து நின்றனன். அச்சமயம் முனிவர் வர்த்தகனுக்கு ஆசீர் வசனம் கூறி, அப்பா நீ யார்? இங்கு வரவேண்டிய காரணமென்ன? வென்று கேட்க, அதற்கு அவ்வர்த்தகன் வந்த காரியங்களனைத்தையுந் தெரிவிக்க, முனிவர் அவன் கூறிய வார்த்தைகளால் செய்தி உண்மையெனத் தெரிந்தும், உலகத்தில்

மானிடர்களிற் சிலர் ஆலயம் தடாகம், வாவி முதலிய திருப்பணித் தர்பங்களைச் செய்யவேண்டுமெனப் பொய்மை வேடங் கொண்டு யாசித்து அளவிறந்த பொருளைச் சேகரித்து தாம் முன் நினைத்தபடி தர்மங்களைச் செய்யாது மனைவி மக்கள் மகிழ வாழ்ந்து கொண்டிருக்கிற மகா பாதகர்களில் இவனும் ஒருவனாக யிருக்கலாமோ என்று சந்தேகித்தவராகி மௌனமுற்றிருந்தனர்.

அவ்வாறு மௌனமுற் றிருப்பதை வர்த்தகன் தெரிந்து எவ்விதமாவது ஆலயத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்ற உறுதியை மனத்தில் வைத்தவனாகி ஆங்கேயே சில நாட்கள் வசித்து அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். இவ்வண்ணம் நிகழும் நாட்களில், ஒருநாள் காலாங்கி முனிவர் வர்த்தகன் செய்துவருகிற பணிவிடைகளால் மிகுந்த இரக்கமுற்று அவன் எண்ணத்தை நிறைவேற்ற நினைத்து, உரோம வேங்கை, உதிரவேங்கை, சோதிவிருக்ஷம், கருநெல்லி முதலிய அநேக மூலிகைகளாலும் முப்பத்திரண்டு பாஷாணச் சரக்குகளாலும், முப்புக்களாலும் அதிகப் பிரயாசையோடு வகாரத்தைலத்தைச் செய்துமுடித்து அத்தைலத்தால் உலோகங்களைப் பேதிக்கச் செய்து தங்கமாக்கி அவ்வர்த்தகனுக்கு வேண்டுமட்டுங் கொடுத்தனுப்பினார். அதன்பொருட்டு செலவழிந்தது போகப்பாக்கியிருந்த தைலத்தைப் பூமியின் கீழாகக் கற்கிணறொன்றமைத்து அக்கிணற்றிலூற்றிக் கற்கதவழைத்துப் பத்திரமாக்கியதல்லாமலும், இன்னும் எவரேனும் மாந்திரீக பூஜா தந்திரங்களாற் றுட்டதேவதைகளின் உபபலத்தாற் சோரத்தனமாகத் தைலத்தைக் கொண்டுபோய் விடுவார்களென் றெண்ணி அதனைக் காக்கவேண்டியும்; ஸ்ரீ சுந்தர மகாலிங்க சுவாமி சந்நிதி முதலான இடங்களைக் காக்கவேண்டியும், அத்தைலக்கிணறிருக்கிற தானத்துக்கு, வடதிசையில் வராகியினமிசமாகிய பேச்சியம்மையை மந்திர யந்திரங்களாற் பிரதிட்டை செய்து வைத்துத் தென்திசையில் ஐம்முகானந்த உருத்திராமிசமாகிய வைரவமூர்த்தியை வேதபூஜா மந்திரங்கனாற் றாபித்துக் கிழக்குத் திசையில் மனோன்மணி யமிசமாகிய காளிதேவியை மூலமந்தி ரோச்சாடனங்களாற் றாபித்து மேற்குத் திசையில் அகோர வீராமிசமாகிய கருப்பண சுவாமியை மூலபீஜாக்ஷர மந்திர தந்திரங்களாற் பிரதிட்டை செய்து, இந்நான்கு தேவதைகளையும், எக்காலமும் காவலாக இருக்க என்று உபசார எச்சரிக்கை செய்து, ஈங்குத் தரிசனைக்கு வரக்கூடிய மானிடர்களது பிரார்த்தனைப் பலி முழுவதும், கருப்பணனே! நீயே ஏற்றுக் கொள்க என்று ஆக்ஞாபித்து அப்பால் மலையடிவாரத்துக்குக் காவலாகச் சுந்தரமகாலிங்க சுவாமியைத் தரிசிக்கப்போகிற தெற்குவழியில் தோணிப்பாறைக் கருப்பணனையும், வடக்குவழியில் முனீசுவர ஐயனையும், மேற்கு வழியில் பண்டாரத் தையனாரையும், கிழக்கு வழியில் பச்சை மலையப்பனாகிய மலையாண்டியையும், பிரதிட்டை செய்து தவநிட்டையிலிருந்தனர், என்று மொழிந்து, இனி அத்தவமுனிவர் ஆதிபராசக்தியைப் பூசித்த மான்மியத்தைக் கூறுவோம் என நாகார்ச்சுனாதி முனிவர்களுக்கு முறைப்படி சாணாங்கி முனிவர் அருளுவராயினர்.

ஒன்பதாவது,
தைலக்கிணற்றுச் சருக்கம்
முற்றுப்பெற்றது

உ
சிவமயம்
பத்தாவது

ஆனந்தவல்லி யம்மைச் சருக்கம்

காலமுதற் கற்பனைக்கு மெட்டாத வற்புதனார் களிக்க வாமத்
தேலவமர்ந் திருப்பவளே சதுரகிரி தனன்முன்னாளிசையும் ஞான
சீலமிகு வான்மீகி பூசைசெயுங் கும்பத்திற்றேசிற் றோன்றி
ஞாலமுண ரானந்த வல்லியென நின்றநிலைநவிலு வோமே.

எவராலும் நினைத்தற்கு அரியதும், அளவில்லாததுமாகிய பரமசிவனுடைய பராசத்தி யருளினாலே குடிலையில் நாதமும், நாதத்தில் விந்துவும், விந்துவில் சதாசிவமும், சதாசிவத்தில் மகேச்சுரமும் தோன்றும். மகேச்சுரத்திற்றோன்றும், மற்றைய வுந்தானகத் தனி நிற்குங் கடவுள் வீற்றிருந்தருளிய இச்சதுரகிரியின்கண் நீண்டநாள்களாகத் தவத்தைச் செய்து வருகிறவர்களான, பிரமருஷி-காலாங்கி-சுந்தரானந்தர்-சட்டை நாதர் முதலிய அநேக மகருஷிகளொருங் குகூடி அடைதற்கரிய அரும் பெரும் பதவிகளனைத்தையும், பெறவேண்டிச் சார்வ பௌம மங்கள மாதாவாகிய, ஆதிபராசக்தியே சகல உலககாரண வஸ்துவென்றாலும் அப்பராசக்தியின் றிருவருளாலே, நம் மனோபீஷ்டப்படி வேண்டுவனவற்றை அடையலா மென்றும், அவ்வன்னையே பிரமாதி தேவர்களுக்கெல்லாம் உயர்வான வளென்றும் நினைத்து அவர்களுள் பிரமமுனிவர் தேவி உபாஸனை பூசாவிரதத்தை அனுஷ்டித்து வரும்படி மற்ற முனிவர்களுக்குச் சொல்ல, அம்முனிவர்கள் பிரய முனிவருக்குதவியாகச் சத்தி தியானபரராய் வேதாகமங்களைப் பாராயணஞ் செய்து கொண்டு அவரைக் சூழவிருந்தனர். அப்போது பிரம முனிவர் புரட்டாசி மாத அமாவாசைக்குப் பின் வந்த பிரதமை தினமானதால் மிகுந்த சந்தோஷமுற்று ஸ்நான அனுஷ்டாணங்களையெல்லாம் முடித்துச் சுத்தமான தானத்தில் நெல்லைப் பரப்பி அதன் மேல் நூல் சுற்றிய தீர்த்த கும்பத்தை வைத்து அக்கும்பத்தின் மேல் மாவிலையுடன் மஞ்சள் தடவிய தேங்காயொன்றை வைத்து அத்தேங்காயின் மேல் மஞ்சளினாற் றேவி உருவஞ் செய்து வைத்து முன்பாக இலை விரித்து அதில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு வைத்து நைவேத்தியஞ் செய்து முனை முறியாத மஞ்சளை ஒரு கயிற்றிற் கட்டி வைத்துத் தூபங் கொடுத்து அக்கயிற்றைக் காப்பாக வலக்கரத்திற் கட்டிக் கொண்டு மான்றோ லாசனத்தில் வடக்குத் திசை நோக்கி வீற்றிருந்து சத்தி தேவியின் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஒரு செப்புத் தகடில் வரைந்து கும்பத்தின் முன் வைத்து, அம்மந்திரத்தையே நாள் ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உருச் செபித்து மண் மலர்களால் அஷ்டோத்[illegible]ர அர்ச்சனைகளைச் செய்து கற்பூர தீபாராதனைகள் கொடுத்து நவராத்திரி வ[illegible]ர தே[illegible]

பூசையை முடித்து; அன்றிரவு வடை, தோசை, அதிரசம், பாயசம் முதலியவைகளும், அவல், கடலை தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு முதலியவைகளும் வைத்துக் கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்கரிக்க, ஜெகன் மோகன மாதாவாகிய ஆனந்த பராசக்தியானவள் பிரம முனிவர் செய்த உபாஸனா பூசாவிரதத்திற்கு இறங்கி அக்கும்பத்தினின்று அலங்கார மங்கைப் பருவக் குறு நகையானந்த மதிமுக விலாச ரூபத்தோடு திருக்காட்சி தந்தருளினள்.

அக்காட்சியைக் கண்ட பிரமமுனிவரும், ஆங்குச் சூழ்ந்திருந்த முனிவர்களும் எழுந்து சிரமேற்கரங் கூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிய அம்பிகை மாதரசி யாமளா தேவி சாம்பவி முக்கண்ணி பராசக்தி கௌரி பார்வதி மாதங்கி மனோன்மணி வாலை மஹேஸ்வரி ஆனந்த பைரவி என்னும் பல அழகிய நாமங்களாற் பன்முறை தோத்திரித்துச் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து நிற்குங்கால், அம்பிகை தண்ணருட் கண்களாற் கிருபை கூர்ந்து முனிவர்களே! நீங்கள் நம்மை யுத்தேசித்துச் செய்த உபாசனா பூசாகிரமத்துக்குச் சந்தோஷித்தோம்.

உங்களுடைய மனோபீஷ்டத்தின்படி தற்சமயத்தில் எவ்வரங்கள் வேண்டுமென நினைக்கிறீர்களோ? அவ்வரங்கள் யாவையும் மீந்தருளினோம்; என்று மொழிந்து ஆசீர்வதித்து முனிவர்களுடைய வேண்டுகோளின்படி ஆங்கே மறைந்தருளி யிருந்தனள். அன்று முதல் அநேக தவமக ருஷிகளும் உலக மானிடர் பலரும் இந்நவராத்திரி பூஜாவிரதத்தை அனுஷ்டித்து, ஆனந்த மழையாலும், பிரம முனிவர் செய்த பூசாகும்பத்தினின்று அம்பிகையானவள் ஆனந்த மங்கள முகவிலாசத்தோடு தோன்றிக் காட்சிதந்தருளியதாலும், அவ்வம்பிகைக்கு ஆனந்தவல்லியெனப் பெயர் வழங்கலாயிற்று என்று சாணாங்கி முனிவர் கூறி யருளிப் பின்னுஞ்சப்த கன்னியரின் மான்மியத்தைச் சாற்றுவாராயினர்.

பத்தாவது,
ஆனந்தவல்லியம்மைச் சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்
பதினொன்றாவது

சத்தகன்னியர் சருக்கம்

சீர்பூத்த சதுரகிரி சிவன்வெற்பிற் சிறக்கமுனம்
ஏர்பூத்த உமைபூசைக் கின்புதவு பூக்கொய்யப்
பேர்பூத்த எழுகனியர் பேணிநனி வந்தங்கே
நார்பூத்த பூசைபுரி நலஞ்சிறிது நலிலுவமே.

ஒன்றாய்ப், பரிபூரணமாய், அறிவுக்கறிவாய், நின்மலமாய், உயிருக்குயிராய், குறியுங்குணமு மில்லாததாய் அருவும், உருவும், அருவுருவமாய் இவையல்லாததுமாய், ஆனந்தமாய், விளங்குவதுமான சாக்ஷாத் ஸ்ரீ சுந்தரமகாலிங்கக் கடவுளெழுந்தருளிய, சதுரகிரியின் கண், தவஞான நிட்டையிலிருந்து, வருகிற சுந்தரானந்தர், சட்டை முனிவர் முதலான மகருஷிகள் பலரும் ஆங்கு அரிசந்தனம், பாரிஜாதம், சண்பகம், அசோகம், பன்னீர் சம்பங்கி, பவளமல்லிகை, மரு, மருக்கொழுந்து, முல்லை, மல்லிகை, இருவாட்சி, செவ்வந்தி, வில்வம் முதலான பல பரிமள புட்பச் செடிகளும், விருட்சங்களும், நிறைந்த அழகிய ஓர் நந்தவனத்தை யுண்டாக்கி, அதிற்புட்பிக்கும் மலர்களைக் கொய்து வந்து அனுதினமும், அக்கடவுளுக் கலங்கரிந்து, வேத விதிப்படி பூசைகள் புரிந்து வந்தனர்.

இஃதிப்படியிருக்க, நவரத்தினங்கள் புனையப் பெற்ற, நாநாவித கொடு முடிகளை யுடைத்தான பிரகாசம் பொருந்திய வெள்ளியங்கிரியாகிய கைலாயத்திற் செம்பொற் றிருக்கோயிலிற் றேவகணங்களும், இருடிகளும், சூழ்ந்து நின்று துதிக்க, இனிதாக வீற்றிருந்தருளுஞ் சிவபெருமா னிடப்பாகத்தமர்ந்த உமா மகேஸ்வரியம்சமான புஷ்பகை, கெந்தகை, அமிர்தகை, கருணிகை, மிருதுபாஷிகை, சுசீலிகை, சுமுகை என்னும் பெயரினராகிய சத்த கன்னியர்களும், அவ்வுமையவளுக்குப் பணிப்பெண்களாக இருந்து வரும்போது, ஒருநாள் எழுவரும் அம்பிகையை நோக்கி அம்மா! பூலோகத்தில் விகசித பரிமள புட்பங்கள் நிறைந்த அநேக நந்தன வனங்களிருக்கின்றன. ஆதலால் அங்ஙனஞ் சென்று ஆங்குள்ள மலர்களை எடுத்துவந்து உனக்கு நாங்கள் அலங்கரித்துப் பார்க்க வேண்டுமென எண்ணுகிறோம்; அவ்வெண்ணத்தைப் பூர்த்திசெய்ய அனுமதி கொடுத்தருள்வா யெனக்கேட்க, அதற்குப் பார்வதி தேவி நல்லது அவ்விதமே செய்யுங்கள்; எனக் கூறியருள, அதற்கவர்கள் அவ்வாறே அனுதினமும் பூலோகத்திற்குவந்து அங்குள்ள நந்தனவனப் பொய்கைகளிலிறங்கிப் புனலாடிக் காலதாமதஞ்செய்து பூக்கொண்டு வருவதைத் தெரிந்தஉமையவள் ஒருநாள் அவ்வெழுவரையும் நோக்கி, பெண்களே! பூலோகஞ்

சென்று ஆங்குள்ள பொய்கைகளிற் புனல் விளையாடிக் காலதாமதஞ் செய்து வருகிறீர்கள்; அப்படி வருவது நன்றல்ல. ஆகையால், இன்றுமுதல் நீங்கள் பூலோகஞ் சென்றால் வீண்காலம் போக்கலாகாது. ஆங்கு நமக்கு வேண்டிய மலர்களை மாத்திரம் கொய்தெடுத்துக் கொண்டு, மானிடர்களுடைய நேத்திரங்களுக்குப் புலப்படாது அதிசீக்கிரம் வந்து சேர வேண்டும். அப்படியில்லாது உங்களுடைய அசாக்கிரதையினால் அவர்கள் முன்னே தோற்றுவீர்களாகில், அவ்விடத்திலேயே ஆகாயமார்க்கமாக வருகிற உங்களுடைய வலிமையை இழந்து நின்று விடுவீர்கள்! என்றுத்தரவு செய்ய, அவ்வுரத்திரவின்படிக்குக் கன்னியரெழுவரும் அனுதினமும் பூலோகத்திற்கு வந்து, மானிடர்களுடைய கண்களுக்குத் தோன்றாது; மலர்களைக் கொய்து எடுத்துச்சென்று அம்பிகைக்கு அலங்கரித்துப் பார்த்து அகமகிழ்வோடிருந்து வந்தனர். ஒருநாள் வழக்கம்போல் மலர் கொய்வதற்குப் பூலோகத்தில் வந்து ககனமார்க்கமாக ஸ்ரீசுந்தரமகாலிங்கமூர்த்தி எழுந்தருளியிருக்கிற சதுரகிரியின் சமீபத்தில் வருகையில் ஆங்குச் சுந்தரானந்தர் சட்டை முனிவர் முதலான மகருஷிகளா லுண்டாக்கப் பெற்ற, அழகிய நந்தனவனத்தைக்கண்டு மிகுந்த ஆச்சரியமுற்றுக் கீழிறங்கித் தங்களுக்கு வேண்டிய அரிய மணமலர்களைக் கொய்துகொண்டு விளையாட்டுப் போக்கிற்பாராமுகமாகச் செல்லுந்தருணத்தில் அம்மலையில் வசித்து வருகிற ஒரு வேடுவன் பார்த்து அம்மா! நீங்கள் யார்? இங்கு வரவேண்டிய காரணமென்ன? என்று கேட்கச் சப்த கன்னியர்களாகிய, எழுவருந்திகைத்து ஆகாய மார்க்கமாகச் செல்லும் வலிமையையிழந்து மனவருத்தமுற்றுப் பிரக்ஞையில்லாது, மௌனமாயிருப்பதைக்கண்ட வேடன், அவர்களைத் தெய்வப் பெண்களென்று நினைத்து அப்பாற் சென்றனன். பின்பு அக்கன்னியர்கள் பக்கத்திலிருந்த சட்டை முனிவரது ஆசிரமத்துக்குச்சென்று, அவரை நமஸ்கரித்துத் தங்கள் குறைகளைத் தெரிவித்து நிற்க, அதைக்கேட்ட முனிவர் மிகவும் வருந்தி அப்படியானாலினி உங்களுடையதானத்திற்குச் செல்ல முடியாது. இவ்விடத்திலேயே அரிய தவத்தைச் செய்துகொண்டிருங்கள். அதனால் அநேக மேன்மைகளை அடையலாம், என்று கூறியதைக் கேட்ட கன்னியர் எழுவரும் இவ்விடத்தில் மஞ்சளூற்று முதலிய சுனைத்தீர்த்தங்களையுண்டாக்கி அத்தீர்த்தங்களில் அனுதினமும் நீராடி அநேககாலம் அரிதாகிய தவத்தைச் செய்துகொண்டிருந்து அத்தவமகிமையினாற் றேசசஞ்சாரமாக, இப்பூவுலக முழுமையுஞ்சுற்றி ஆங்காங்குப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து அவ்வவ்விடங்களிற் தெய்வீகத் தன்மைகளை யடைந்திருந்தனர். ஆகையால், சத்த கன்னியரெழுவரையும் எவரே னும் பயபத்தியாக மனதிற்றியானித்துப் பூசித்து விரதமனுஷ்டித்து வருவோர், இம்மையிற் சகல இஷ்ட சித்திகளையும்பெற்று முடிவில் பேரின்பமாகிய மோக்ஷவாழ்வைப் பெறுவார்கள்; என்று சாணாங்கி முனிவர் நாகார்ச்சனாதி முனிவர்களுக்குணர்த்திப் பின்னும் அவர்களது வேண்டுதலால் எம்பெருமான் சங்கரநாராயணராக எழுந்தருளி இரட்டை இலிங்கமாயிருந்த மான்மியத்தைச் சாற்றுவாராயினர்.

பதினொன்றாவது,
சத்தகன்னியர் வரலாற்றுச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
பனிரண்டாவது

இரட்டை மகாலிங்கச் சருக்கம்

வானந்தன் கீழாக வுயர்சதுர கிரிதனிலே வணிகனான
வானந்த சுந்தரற்குச் சங்கரனா வவன் மனைவி ஆண்டாளுக்குக்
கானந்த ருத்துளவ நாரணனாக் காட்சிதருங் கடவுளானார்
தானந்த விடத்திரட்டை யிலிங்கமென நின்றநிலைசாற்றலுற்றாம்

மிகுந்த வளம் பெற்றோங்குங் கோபாலபுரமென்னும் பட்டினத்திற் சகல ஆகமவேத புராண சாஸ்திரங்களையுங் கற்றுச் சிவபெருமானையன்றி வேறு கடவுளேயில்லையென்ற வைராக்கியத்தைத் தன்மனத்துட் கொண்ட ஆனந்த சுந்தரமென்னும் பெயரையுடைய ஒரு பிரபல வர்த்தகனிருந்தான். அவன் இலக்குமி போன்ற சிறந்த அழகை யுடையவளும், வேத இதிகாச வைணவ புராணங்களை நன்கு ஆராய்ந்துதேர்ந்தவளும் ஸ்ரீ நாராயணனையன்றி வேறே ஒரு கடவுளில்லை யென்றவைராக்கியத்தைத் தன் மனத்துட்கொண்டவளுமாகிய ஆண்டாளென்னும் பெயரையுடைய ஓர் கன்னிகையை விவாகம்முடித்து அனுதினமுஞ் சிவபூசை செய்து வர அவன் மனைவி ஆண்டாளம்மாள் தினந்தோறும் விஷ்ணு பூசை செய்துவர, இனிதாக அவ்விருவரும் இல்லறம் வழுவாது வாழ்ந்து வரும் நாட்களில், ஒரு நாள் அவ்விருவரும் ஆகமவேத புராண சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் பொழுது வர்த்தகன் சிவபெருமானே பரம்பொருள் எனவும், அவன் மனைவி விஷ்ணுவே பரம்பொருளெனவும் இப்படியாக ஒருவர்க்கொருவர் உதாரணங்களுடன் பேசித்தர்க்கித்து முடிவு பெறாது மிகுந்த கவலையுற்று உலகத்தில் மகருஷிகள் ஆத்மஞானத்தை யடையவேண்டி மலைகளிலும், வனங்களிலும் தவம்புரிந்து எம்பெருமானுடைய தரிசனக்காட்சியைக் காண்கிறார்களே? அதுபோல நாமும், அரிய தவத்தைச் செய்து இதன் உண்மையைத் தெரிவோமென நினைத்து அவ்விருவரும் அவர்களது நகர்க்குப் பக்கத்திலிருக்கிற பெருமை தங்கிய சித்தகிரியென்னும், சதுரகிரியினிடத்துச் சென்று தபோசிரேஷ்டரான இராமதேவர் வனத்தில் பெரிய பசுத் தொழுவுக்குச் சமீபத்தில் வீற்றிருந்து அன்னாகாரமில்லாது நீண்ட நாள்களாக அரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தனர்.

ஈங்கிப்படி நிகழ கோடானுகோடி அண்டங்களிடத்தும் மற்றுமுள்ள தாவரசங்கமங்களிடத்தும், உள்ளும் புறம்பும், நிறைந்து விளங்குகின்ற ஸ்ரீ சுந்தரமகாலிங்க மூர்த்தியானவர் ஆனந்தசுந்தரனென்ற வர்த்தகனும் அவன் மனைவி ஆண்டாள் என்கிற பெண்ணும் செய்கிற உயர்வாகிய தவத்தைக் கண்டு மகிழ்ந்து

அவ்விருவர்களுடைய விபரீத சந்தேகங்களைப் போக்கத் திருவுளங் கொண்டு நதிமதி விளங்கிய சடாமகுடமும், அரவக்குழையணிந்த காதுகளும், வெண்ணீறணிந்த திருநெற்றியும் கொன்றை மாலையணிந்த திருந்தோள்களும், மான் மழுப் படையேந்திய திருக்கரங்களும், புலித்தோலுடுத்த இடையுந் தோன்றவந்து திருக்காட்சிதந்தருளினார்.

அத்திருக்காட்சி தரிசனத்தைக் கண்ட வர்த்தகன் எழுந்து உள்ளமுருகி ஆனந்தக் கடலிலாழ்ந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து கரங்குவித்து நின்று ஆனந்த பாஷ்பங் கண்களிலிருந்து பெருகப் பன்முறை தோத்திரித்தான். அப்பொழுது சிவபெருமான் வர்த்தகனை நோக்கி அப்பா! நீ எதற்காக இவ்வரிய தவம் புரிந்தனை? யெனத் திருவாய் மலர்ந்தருள, அதற்கவன் தனக்குந்தன் மனைவிக்கும் நடந்த சம்பாஷணைகளைக் கூற அதுகேட்ட சிவபெருமான் புன்னகைகொண்டு பக்கத்திலிருந்த வர்த்தகன் மனைவியை நோக்கி பெண்பாவாய் நீ எதற்காக இவ்வித தவம் புரிகின்றனை? என்று கேட்டருள, அதற்கவள் தனக்குத் தன் புருடனுக்கும், நடந்த சம்பாஷணைகளைத் தெரிவித்து உம்மை யுத்தே சித்துத்தவமியற்றவில்லை, யென்றும், பரமபதியாகிய ஸ்ரீமந் நாராயணனை நினைத்துத் தவம்புரிகின்றே னென்றும் விளம்ப, அதுகேட்ட சங்கர சதாசிவப் பெருமான், உளமகிழ்வுற்று திரும்பிச் செல்வார் போன்று ஒரு மின்னல் தோன்றி மறைந்தாற்போல மறைந்தருளி, அவ்விடத்திற்றானே கோடி சூரியப்பிரகாசம் போன்ற நவரத்தின கிரீடமும், மணிமகர குண்டலங்களும் கஸ்தூரித் திலகமும், சங்கு சக்கர கதா கட்ககோதண்டமென்னும் பஞ்சாயுதங்களும் விளங்கிக் கொண்டு, நீல மேக சாமள வர்ணராய், திருமார்பிலே அணிந்த திருத்துழாய் மணங்கமழ இடையிற் கட்டிய சுவர்ன பீதாம்பரஞ் சொலிக்க அம்மே! இதோ வந்து விட்டேன் என்று அவள் திருமுன்னர் வந்து காட்சி கொடுத்தருளி நின்றார்.

ஆண்டாளுங்கண்டு அகமகிழ்ச்சிக் கொண்டு சிரமேற்கரங் கூப்பித் திவ்விய பாசுரங்களால் நாவாரப்பாடி அவரது திருமேனியை இதய கமலாசனத்தில் வைத்துப் பூசித்து நின்றாள். எம்பெருமான், ஆண்டாளே!நீ என்னை வேண்டிச் செய்த பூசனைக்கு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக் கொள்வாயாக, என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அது கேட்ட ஆண்டாளம்மை உம்மைக் காணப் பெற்ற எனக்கு வேறு வேண்டப்படுவது ஒன்றுமில்லை யான், ஆராய்ந்த நூல்களெல்லாம் உம்மையே பரம் பொருளென்று கூறுதலை யானறிந்து அவ்வாறு நம்பி வணங்கி வந்தனள். எனது பர்த்தாவோ, உம்மை மறந்து வேறொன்றைப் பரம் பொருளென்று கொண்டு நின்றனர். உடலுமுயிரும் போன்ற வாழ்க்கையினையுடைய எங்களில் வேறுவேறு பரம்பொருளைப் பற்றுவது ஞாயமல்லவென்று நாங்கள் தர்க்க மாடினோம். நூல்கள் விரிந்து கிடக்கின்றமையால் அதன்வழி ஒருவரையொவர் வெல்ல முடியவில்லை. ஆகையால் இருவரும் ஒற்றுமையாகித் தவம்புரிந்தாயினும் பரம் பொருளைத் தெரிந்து கொள்ளத் துணிந்தோம்.

இவ்விடத்திலேயும் பரம் பொருள் ஒன்றேயாகாமல், அவருக்கு வேறும் எனக்கு நீருமாக வருதலையே நாங்கள் காணப் பெற்றோம். உண்மையில் பரம்

பொருளாவார்தாம் யாவர்? உண்மையை எங்களுக்கு விளக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதனைக் கேட்ட ஸ்ரீமன் நாராயண மூர்த்தியானவர் அன்பர்களே! உங்களன்புக்கு வந்தோம். நீங்கள் கோரிக் கொண்ட உண்மையை உங்களுடன் உலகமும் அறியும் படி இதோ பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கின்றோம்; காண்மின் என்றதும், அந்த நிலையிலேயே தாம் சங்கர நாராயணராகக் காட்சிதந்தருளினார்.

அக்காட்சியைக் கண்ட வர்த்தகனும் அவன் மனைவியும் கண்டு பிர்மித்து நின்றார்கள். அச்சமயம் சங்கர நாராயணராகிய எம்பிரான், அன்பர்களே! அஞ்சாதீர்கள். சிவன் வேறு விஷ்ணு வேறு என்று போராடுபவர்கள் அறியாமை யுடையவராவார்கள். சங்கரன் என்றால் மங்களத்தைச் செய்பவன் என்பது பொருள், ஆகையால் எல்லா வுயிர்களுக்கு மின்பத்தைச் செய்பவன் யானே! எங்கும் நிறைந்தவன் யானே, சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம், என்னும் பஞ்சகிருத்தியங்களுக்குக் கர்த்தா என்னைத் தவிர வேறொருவருமில்லை, வேண்டுவார் வேண்டியபடி விளங்கி யாமே அவர்களுக்கு அருளிச் செய்வோம். யானே சங்கரனாகவும் நாராயணனாகவும் சங்கர நாராயணராகவும் விளங்குவேன். ஆதலால் என்னை அரி அர்த்தன் என்று வேதங்களெல்லா முழங்கும் நீவிர் இனி எம்மிற் பேதங்காண்கிலீர், என்று திருவாய் மலர்ந்து அவர்கட்கு வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை உபதேசித்தருளினர்.

உடனே தம்பதிகளுணர்ந்து எம்பெருமானே சங்கரனும் நாராயணனும் ஒரு கூறென அறியாத எங்களுக்கு இங்ஙனங் காட்சி தந்து அருள் சுரந்தது எங்களுடைய பெரும் பாக்கியம், என்று புகழ்ந்து போற்றிக் கொண்டாடி யாங்கள் பூசித்து ஈடேறிவேண்டி நீர் இரட்டை மூர்த்தியாக இருந்தருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே எம்பெருமான் இரட்டை லிங்கமாகத் திருக்கோயில் கொண்டருளினார். அவ்விலிங்கத்தை இருவரும் பூசித்து நேசித்து வாழ்வாராயினார்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சித்தர் முனிவர் முதலியயாவரும் எடுத்த பிறப்பின் பயனை யடைந்தவர்களாய்ப் பரமானந்தக் கடலிற் படிந்தார்கள். தேவர்களும் புஷ்பமாரியைப் பொழிந்தார்கள். இரட்டை லிங்கத்தைப் பூசித்து வந்த ஆனந்த சுந்தரன் என்னும் வர்த்தகனும் அவன் மனைவி ஆண்டாளம்மாளும் சில காலத்தின் பின்னர் சிவகணங்கள் விமானத்தி லழைத்துச் செல்ல சிவலோக வாழ்வைப் பெற்று மகிழ்வாராயினர். அப்பால் ஆகமவிதிப்படி தவசிரேட்டராகிய இராமதேவர் அவ்விரட்டை லிங்கத்தைப் பூசித்து வந்தனர்.

இதன்மேல் அநேக இடையர்களும், தொட்டிய நாயக்கர்களும், தங்கள் தங்கள் ஆவினங்களைத் தத்தம் மேய்ப்பரிடத்தில் ஒப்புவித்து மலையில் மேய்த்துவர விட்டிருந்தார்கள். அவ்வாறே இரண்டு மேய்ப்பரும் பசுக்களை மேய்த்துப் பொழுது அஸ்தமித்தவுடன் ஒட்டிக் கொண்டு வந்து சதுரகிரியின் கண் வடபுறமிருக்கிற காலி இடமாகிய பசுத்தொழுவி லடைத்து அப்பசுக்களின் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும் பொழுது வழியிலிருக்கிற சங்கர நாராயண சொரூபமாகிய இரட்டை இலிங்கத்துக்குச் சமீபத்தில் வந்தவுடன் தெய்வீகமாகக் கால் தட்டி அவர்கள் கரத்திற்

பற்றியிருந்த பாத்திரத்திலுள்ள பால் அவ்விலிங்கத்தின் மீது கொட்டுண்டு போவது வழக்கமாக விருந்தது. அவ்வாறு பால் கொட்டுண்டு வருவதை நினைத்து மிகுந்த ஆச்சரியமுற்று நாம் எவ்வளவோ பத்திரமாகப் பாலைப் பரிவோடு கொண்டு போனாலும், அந்த இரண்டு கல்லுஞ் சேர்ந்திருக்கிற இடத்திற்குச் சென்றவுடன் கொட்டுண்டு போகிறதே! இஃதென்ன காரணம் என்று ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டு ஒரு நாள் வழக்கம் போல் பாலைக் கறந்து கொண்டு வரும் வழியில் அந்த இலிங்கத்தைப் பூசித்துக் கொண்டிருந்த இராமதேவரைக் கண்டு இவர் யாரோ தெரியவில்லை. இவ்விடத்திலிருந்து பூசை செய்கிறார் போலும் இங்கு என்ன சாமி இருக்கிறது. இவ்விடத்திற்றான் நாம் கொண்டு வருகிற பால் முழுவதும் கொட்டுண்டு போகிறது, என்று மொழிந்து சமீபத்திற்சென்று உற்று நோக்கி ஒகோ! இவர் ஒரு சித்தர்போற் றெரிகின்றனர், என்று கூறிய போது இராமதேவர் தவமோன பூசையை முடித்துக் கண்களை விழித்து நோக்குகையிற், இருவரும் வணங்கி நின்றனர்.

அப்போது இராமதேவர் மைந்தரே! நீங்களிருவரும் யார்? என்று கேட்க, அதற்கவர்கள் நாங்கள் இம்மலையிலிருக்கிற பசுக்கிடைக்காரர்கள். தினந்தோறும் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும்பொழுது இந்த இரண்டு கல்லிருக்கிற இடத்திற்கு வந்தவுடன் தெய்வீகமாகப் பால் கொட்டுண்டு போகிறதென்று அறிவித்து அதன் காரண மென்னவென்று கேட்க, அதற்கு இராம தேவர் குறுநகை கொண்டு இவ்விரண்டும் கல்லல்ல. இரட்டை லிங்கமூர்த்திகளாகும், இவ்விரட்டைலிங்க மூர்த்தியே ஆனந்த சுந்தரனென்ற வர்த்தகனுக்கும், அவன் மனைவியாகிய ஆண்டாள் என்பவளுக்கும், சங்கர நாராயண சொரூபமாய்த் திருக்காட்சி தந்தருளினவரென்ற விஷயங்களெல்லாவற்றையும் விவரமாகத் தெரிவித்து நீங்கள் அனேக நாள்களாக இவ்விலிங்கங்களின் மேல் பாலைய பிஷேகஞ் செய்து வந்தபடியால் நீடூழி காலம் இம்மையில் தேவந்திர போகங்களை யனுபவித்திருந்து முடிவில் மேலான சிவபத வாழ்வைப் பெறுவீர்கள். இனிமேலுங்களுக்கு யாதொரு குறைவுமில்லை யென்று கூறிப் பலமுறை வாழ்த்தித் தன் ஆச்சிரமத்துக்குச் சென்றனர். அதைக் கேட்ட மேய்ப்பர் மகிழ்ந்துவந்து தம்மவருக் கறிவிப்ப, ஊரிலுள்ள எல்லா இடையர்களும் தொட்டிய நாயக்கர்களும் அன்றுமுதல் அனுதினமும் பக்தியோடு ஆங்குச் சென்று அந்த இரட்டைலிங்க மூர்த்திகளுக்குப் பாலபிஷேகஞ் செய்து பூசித்து வணங்கி யாதொரு குறைவும் இல்லாமல் க்ஷேமமாக வாழ்ந்து வந்தார்கள், என்று கூறியருளிப் பின்னுஞ் சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

பன்னிரண்டாவது,
இரட்டை மகாலிங்கச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
பதின்மூன்றாவது

திருமூலர் சருக்கம்

மூல முணர்ந்த மூலரெனும் மூலசித்தர் சதுரகிரி
ஞாலமுய்ய வீற்றிருந்து நயந்து வீர சேனவிறை
கோல வுடலிற் புக்குப்பின் குணஞ்சேர் சதுரக் குன்றிடத்தில்
சால யோகில் இருந்தநிலை சாற்றப் புகுவேன் தமியேனே.

கேளும் முனிவர்களே! மிகுந்த பெருமையுற்று விளங்கிய, பங்கயப் புட்பத்திற் பிறந்த புங்கவனாகிய சதுர்முகனுக்கு முதற் 0பரார்த்தமான *பாத்துமகற்ப முடிந்தவுடனே இரண்டாவது பரார்த்த ஆரம்பத்திற்றிருமாலாகிய விஷ்ணுபகவான், சுவேத வராக அவதாரஞ்செய்து இரசா தலத்தில் மூழ்கிக்கிடந்த பூமியை எடுத்துவந்து யுகப்பிரளய வெள்ளத்தில் நிலைக்க வைத்தனர். அந்தக் காரணத்தால் மேற்கூறிய இரண்டாவது பராத்தஞ் சுவேதவராக கற்பமெனப் பெயர் பெற்றது.

அச்சுவேத வராக கற்பத்தில் பிரமனுடைய அழகிய புயத்தி லுற்பவித்த இரண்டாவது வருணத்தில் பதினாறாவது பட்டமாகிய சுவேத மகாராஜனென்னும் ஓர் அரசன் சனித்தனன். அவன் நெடிய கடல்சூழ்ந்த இப்பரத கண்டத்திற் செந்தமிழ் நாடாகிய பாண்டிநாட்டில் நீர்வள நிலவள மிகுத்துப் பயிர்வளந் தழைத்துக் குடிவளங்களித்துப் பொய், கொலை, களவு, கள், காமம் என்னுந் துற்செய்கைகளின்றி அறநெறி மிகுத்து ஆலய பூசைகள் ஆறுகாலமுந் தவறாது நடை பெற்றுவர. முழுமுதற் கடவுளாற் சிருட்டித்த எண் பத்துநான்குலனஞ் சீவராசிகளும், ஒன்றோடொன்று உறவின்முறை கொண்டாடி இனிதாக வாழ்கின்ற அதிக சிறப்பு வாய்ந்த இராஜேந்திரபுர நகரில் இருபத்தெட்டாகமம், நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், முப்பத்திரண்டு தருமசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவசாஸ்திரம், மநுவிக்ஞான முதலிய சகல சாஸ்திரங்களையுஞ் சந்தேகமறக் கற்றுணர்ந்து தன்னுயிர் போன் மன்னுயிர்களனைத்தையும், பாதுகாத்துக் குடிகளிடம் ஆறிலொரு கடமைபெற்றுத் தன்குலகுருவாகிய சூக்ஷுமபுத்தி என்னும் முனிவரோடு நன்மதி என்னும் மந்திரி முதலானோர் புடைசூழ ஐம்பத்தைந்து தேசத்தரசர்கட்கும்

---

0 பரார்த்தம் - பிரமனுடைய வாழ்நாள்களிற் பாதி.

* பாத்துமகற்பம் - வராக கற்பம்

அதிபதியாய் நவரத்னங்களா லிழைக்கப்பெற்ற பிரகாசம் பொருந்திய உயர்ந்த சிங்காதனத்திலிருந்து நீதிவழுவாமல்மகிழ்ச்சி யோடு அரசுபுரிந்திருந்தான்.

அப்படி யிருக்குங்காலத்தில், அன்னங்கள் வசிப்பதற்கிடமாகிய தண்கழனிகளும், அடர்ந்த பூஞ்சோலைகளுஞ் சூழ்ந்து விளங்குகின்ற, ஆனந்தமா நகரை ஆழிசூழுல சேழுமகிழ அரசு புரிந்து வருகிற ஆதித்த மகாராஜன் அருமைத் தவப்புத்திரியும், சகல உத்தம குணங்கள் நிறைந்தவளுமான சுந்தரவதனியையும், அவள் தங்கை யாகிய சந்திரவதனியையும், விவாகஞ் செய்து சகலபோகங்களையும் அநுபவித்து மனமகிழ்ச்சியடைந்தனன். அப்பால், அவ்வரசனுடைய மனைவியரிருவரும், சில நாட் சென்ற பின்பு, கருப்பமுற்றுப் பத்துத் திங்களுஞ் சென்ற உடன் நல்ல சுபயோக சுபதினத்திற் சந்திரவதனி முதலில் ஓராண்மகவையும், பின்பு சுந்தரவதனி ஓராண் மகவையு மீன்றனள்.

அவ்வாறு ஈன்ற அந்தந்தக் காலத்தில் சுவேத மகாராஜன் அமோக மங்கள வாத்தியங்கள் கோஷிக்கக் கங்காநதிக்குச் சென்று நீராடி வந்து அருமைக்குழந்தைகளின் திருமுகத்தைக் கண்டு அத்யானந்த சந்தோஷங் கொண்டு வைதிகப் பிராமணர்களுக்குக் கோதானம், பூதானம் முதலிய அநேக தானதருமங்களைச் செய்தும், ஏழைகளுக்கு வேண்டிய திரவியங்களை அள்ளிக் கொடுத்தும், பின்னர் தன் குலகுருவாகிய குசூஷ¬ம புத்தி முனிவரால், இளைய மனைவி பெற்ற மகவினுக்குத் தன்மார்த்தனெனவும், மூத்த மனைவி பெற்ற மகவினுக்கு வீமசேனனெனவும், நாமகரணமிட்டு அக மகிழ்வோடு வாழ்ந்துவரு நாள்களில், பின்னும் இளைய மனைவியாகிய சந்திரவதனியானவள் இரண்டு புத்திரர்களைப் பெற்றாள். அவ்வக்காலங்களிலும், அரசன் முன்னிலும் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தவனாகி, அவ்விரண்டு புத்திரர்களில் மூத்த மகவினுக்குச் சூரசேனனெனவும், இளைய, மகவினுக்கு வச்சிராங்கதனெனவும் பெயரிட்டு, ஆக நான்கு புத்திரர்களையும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து அறிவு, கிருபை, தருமம், பொறுமை, பலம், சவுரியம். உதாரத்துவம் முதலிய உத்தம குணங்களோடு நகரத்தை வேலி போல ரட்சித்து ஆண்டு வருகிறபொழுது, புத்திரர் நால்வரும் தவழ்ந்து விளையாடிக் கொண்டு வருவதையும், மழலை வார்த்தை பேசுவதையும், தளர் நடை நடப்பதையும் கண்களிக்கப்பார்த்துச் சந்தோஷித்து அன்னப்பிராசனம், சவுளம், உபநயனம் முதலானவையுஞ் செய்து, உடனே அரசன் புத்திரர்களைச் சூசூஷ¬மபுத்தி முனிவருடைய கல்விச்சாலைக்கனுப்பி, அரிச்சுவடி முதல் இலக்கியவிலக்கணங்களும் ஆகமம், வேதம், தருமசாத்திரம், கலைஞ்ஞானம், புராணம், இதிகாசம் முதலாகிய அநேக நூல்களும், கரிபரியேற்றங்களும், தனுர்வேத முதலியவைகளும் ஒதி யுணரும் படி செய்து மனுநீதி சாத்திரமும், இராஜரீக தரும முறையுங் கற்பித்துப் பிரஸ்பதிக்குச் சமானமாக விளங்கச்செய்தனன். அப்புத்திரர் நால்வருள் தன் மார்த்தன் மாத்திரம் வேதாந்த தத்துவ நூல்களை மிகுதியாக ஆராய்ச்சிச் செய்து கொண்டு வந்தனன்.

இவ்வாறு நான்கு பேரும் நான்கு வேதம்போல மிகுந்த செல்வமாக வளர்ந்து வரும்பொழுது தன்மார்த்தனுக்கு வயது பதினேழும் வீரசேனனுக்கு வயது பதினாறும்

ஆயின. அதைத் தெரிந்த அரசன் அப்புத்திரர்களுக்குக் கலியாண காரியத்தை நடத்தவேண்டுமென் றெண்ணங் கொண்டவனாகி வாவிகளிலிருக்கும் படியான கெண்டைமீன்களானவை துள்ளிவிழ, அதனாலே நல்ல நீலோற்பலமலரின் அரும்புகள் கிழிய மடைகளின் வழியே செல்கின்ற பரிமளித்தலையுடைய தேனானது சென்று வயல்களிற் பாய அதனாலந்த வயலிடத்து வளர்கின்ற செந்நெற் பயிர்களானவை ஆகாயத்தைத் தொடும்படியாய் வளரக்கூடிய யாதொரு குற்றமற்ற அழகிய மகாராஜபுர நகரை நீதிவழுவாது அரசுபுரிந்து வருகிற அமுதலிங்க மகாராஜனுடைய அருந்தவப்புத்திரர் நால்வருள் மதுரபூபாலனுடைய அருந்தவப் புத்திரியாகிய தனமதி யென்னும் அரிவையைத் தன் மார்த்தனுக்கும், அந்த மதுர பூபாலனுடைய சகோதரனாகிய மங்கள பூபாலனீன்ற குணமதியென்னும் பெண்மணியை வீரசேனனுக்கும், அந்த மங்கள பூபாலனுக்கிளைஞனாகிய சங்கரபூபாலன் பெற்ற சுகமதி, என்னும் மாதைச் சூரசேனனுக்கும், அச்சங்கர பூபாலன் தந்த மந்திரவல்லி என்னும் கன்னிகையை வச்சிரங்கதனுக்கும், பெரியோர்களால் மணம் பேசி நிச்சயித்து, விவாகத்துக்குரிய காரியங்களைத் தொடங்கஞ் செய்து, சோதிட சாஸ்திரிகளால் முகூர்த்ததினம் ஏற்படுத்தி அவர்களோடு தவசிரேட்ட ரெல்லோரும் புடைசூழ்ந்து ஆசீர்வதிக்கச் சுபமாங்கல்ய மாதர்வாழ்த்த மண மகோற்சவத்தை நடாத்திவைத்து மிகுந்த மனச் சந்தோஷமுற்றிருந்தான். அப்பாற் சில நாட்சென்று தன்மார்த்தன் மனைவியாகிய தனமதிம்மாளும் வீரசேனனுடைய மனைவியாகிய குணமதியம்மாளும் கருப்பமுற்றுப் பத்துமாதமும் பூரணமானபின்பு நல்ல சுப முகூர்த்தத்தில் இருவரும் இரு ஆண்மகனை முன்பின்னாகப் பெற்றார்கள். அதன்பின் அவ்விரண்டு குழந்தைகளையும் பெற்றோரும் மற்றோரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துத் தன்மார்த்தனுடைய புத்திரனுக்குச் சற்குணனென்றும், வீழசேனனுடைய புத்திரனுக்குச் சுவேத சந்திரனென்றும் பெயரிட்டு எந்நாளும் மனமங்கள மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்தார்கள்.

சிறிது நாட்சென்றபின் ஒருநாள் சுவேதமகாராஜன் வழக்கம்போற் சபாமண்டபத்திற்குச் சென்று சிம்மாதனத்தில் வீற்றிருந்து தன்னுடைய குலகுருவாகிய சூக்ஷமபுத்தி என்னும் முனிவரையும், நன்மதி என்னும் மந்திரி முதலான யாவரையும் நோக்கி! ஒரு வார்த்தை சொல்லுவான். அதாவ்து, பூர்வகாலத்தில் எங்கள் முன்னோர்கள் தருமநெறி முறைதவறாது இராச்சியபரிபாலனஞ் செய்து கொண்டு வந்தார்கள். யானும் அவ்விதமே உங்களுதவியின் பலத்தினால் இதுநாள் வரை இராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டுவந்தேன் ஆனாலும், இப்போது எனக்கு மூப்பென்பது சமீபித்தபடியால் இனி இந்தப் பூபாரத்தை நான் சுமக்கமாட்டேன். ஆதலால் அதற்காக எனது குமாரர் நால்வரில் ஜேஷ்ட புத்திரனான தன் மாத்தனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டுப் பின்புநான் தவத்தைச் செய்து மோக்ஷசாம்ராச்சியத்தைத் தேடிக்கொள்ள ஆரணியஞ் செல்ல வேண்டுமென்றெண்ணியிருக்கிறேன். அதன் பொருட்டு நீவிரெல்லாரும் ஆராய்ந்து உங்கள் அபிப்பிராயத்தை நன்கு தெரியச் சொல்லுவீர்கள் என்று கேட்க, அதற்குச் சூக்ஷமபுத்தி முனிவரும் மந்திரி முதலானோர்களும் கூறுகின்றார்கள்.

அரசே! உம்முடைய பெரியோர்கள் அநேக வீரர்களை வென்று இராச்சியத்தைப் பெருக்கிப் பெருங் கீர்த்திகளைச் சம்பாதித்தார்களே அல்லாமல் தவமிருப்பத்தை மேற்கொண்டவர்களா யிருக்கவில்லை. அவர்களைப்போல உமது காலத்தில் வேற்றரசர்களை எதிர்க்கவேண்டிய அவசியமில்லாமையே உமது பெருமையை விளக்குகின்றது. ஆதாலால் சமாதானத்துடன் மனு நீதி நெறிமுறையின்படி அரசுபுரிந்து புத்திர மித்திரகளத்திராதி முதலிய அஷ்டைஸ்வரியங்களையும் பெற்று, நீர்குடிகளைப் பாதுகாத்து வருகிறீர். அப்படிப்பட்ட உம்மை வனத்துக்கு அனுப்பக் குடிகள் எவ்வாறு சம்மதிக்கும்? இருந்தாலும் உமது மகிமைக்குத் தக்க தவமாகிய காரியத்தையே நீர் நினைத்தீர் போலும்; இனி நீர் தவசு செய்து மோக்ஷவீட்டை யடைதற்குத் தகும். உமது புத்திரன் தன்மார்த்தனுக்கு முடிசூட்டுவது இங்கு யாவர்க்குஞ் சம்மதமே, என்று கூறினர். அதைக் கேட்டிருந்த தன்மார்த்தன் அரசனை நோக்கி, ஐயா! நம்முடைய வம்மிச பரம்பரையின் வழக்கமாவது. மூத்தமனைக் கிழத்தி யீன்ற புத்திரனுக்குத் தான் பட்டம் ஆகுமே தவிர, இளையமனையாட்டியின் குமாரனுக்குப் பட்டங்கட்டுவது பொருந்தாதே? அவ்வாறிருக்க, உம்முடைய இளைய மனையாட்டியின் குமாரனாகிய என்னைப் பட்டங் கட்டிக்கொள்ளச் சொல்வது நன்றல்ல. ஆனதால், என்பெரியதாயின் புத்திரனாகிய வீரசேனனுக்கு முடிசூட்டுவதே உசிதம். இது விஷயத்தில் என்னை வற்புறுத்த வேண்டாம் என்றனன்.

அதைக்கேட்ட அரசனும் மற்றும் ஆங்குள்ளயாவரும் தன்மார்த்தன் கூறிய வார்த்தையை, நீதிநெறிமுறையென நினைந்து மனக்களிப்படைந்தனர். அப்பால், சுவேதமகாராஜன் வீரசேனனுக்கு முடிசூட்டக் கருதிப் பட்டாபிஷேகத்திற்காக ஐம்பத்தைந்து தேசத்தரசர்களையும், மற்று முலகத்திலுள்ள யாவரையும், வரும்படி நிருப மெழுதியனுப்புவீர்கள் என்றும், நகரை அலங்கரிக்கச் செய்வீர்கள் என்றும், இன்னும் மற்றக் காரியங்களெல்லாவற்றையுஞ் செய்வீரென்றும், மந்திரிமார்களுக்குக் கட்டளையிட, அக்கட்டளையின்படி மந்திரி முதலானோர்கள், யாவரையும் வரும்படி நிருபமெழுதியனுப்பி ஏவலர்களால் நகரத்தை யலங்கரிக்கச்செய்து வேண்டிய சாமான்களைச் சேகரித்து அரண்மனையின் உப்பரிக்கைகளின் மேல் பஞ்சவர்ணக்கொடிகளையும், வெளிப்பக்கங்களில் வாழை மரங்களையும், கமுகு மரங்களையும் நட்டுவித்து, மகர தோரணங்களைக் கட்டி முத்துக்களினாற் பந்தல்கள் போட்டுச் சபாமண்டபம் முதலானவைகளை யெல்லாம் நன்றாய் அலங்கரித்து விகசிதமாகத் தேவருலகம் போற் றுலங்கும்படி செய்தனர்.

ஈங்கிப்படியிருக்க வீரசேனனுடைய பட்டாபிஷேக வைபவத்தைக் காண ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும், மாமறையோர்களும், முனிவர்களும், மற்றுமுள்ள யாவரும் வந்துசேர்ந்தார்கள். பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய வஸ்துக்களும், கங்காதீர்த்தங்களும், வந்து சேர்ந்தன. அப்போது சூக்ஷமபுத்தி முனிவர் சுவேத மகாராஜனை நோக்கி பட்டாபிஷேக முகூர்த்த வேளை இதுவே என்று தெரிவிக்க, அதைக்கேட்ட அரசன் உடனே வீரசேனனுக்கு அபிஷேக முதலானவைகளைச் செய்வித்து அழகுபெற அலங்கரித்துச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படி செய்தனன். அத்தருணத்தில் பல மங்களவாத்தியங்கள் கோஷிக்கவும், மாமறையோர்கள் ஆசீர்

வசனங் கூறவும், உத்தமப் பெண்கள் வாழ்த்தவும் கணிகையர் நடனம்புரியவும், வித்துவான்களும் தவ முனிவர்களும் புகழ்ந்தேத்தவும், மந்திரி முதலான யாவரும் பல்லாண்டு கூறிப் போற்றவும், தன்மார்த்தன், சூரசேனன், வச்சிராங்கதன், முதலானோர்கள் பக்கத்திற்சூழ வீற்றிருக்கவும், வீரசேனனுடைய திருச்சென்னியில் சூக்ஷுமபுத்திமுனிவர் தமது திருக்கரத்தால் அழகிய மணிமகுடத்தைச் சூட்டினார்.

அப்பால் அரசன் யாவருக்கும் சந்தன தாம்பூலங் கொடுத்து அறுசுவையோடு அன்னம்புசிக்கச் செய்து அந்தணர், வித்துவான்மார், யாசகர் முதலானோர்களுக்கு வேண்டிய ஆடையாபாரண முதலியவைகளை முறைப்படி கொடுத்து உபசரித்து மிகுந்த சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தனன். அன்றிரவு நகர்வலம் வருவதற்குப் பலவகைத் தீவர்த்தி வெண்கொற்றக் குடை முதலிய எடுபிடி இவற்றைச் சேகரித்து நல்ல வேளையில் வீரசேனனை இரதத்தி லாரோகணிக்கச் செய்து மங்கள வாத்தியங்க ளார்ப்ப வினோத விசித்திர வேடிக்கைகளுடன் நகர்வலஞ் செய்வித்து அரண்மனைக்கு முன்புவரச் சுபமாங்கல்ய மாதர்களால் ஆலத்தியெடுத்துக்கண்ணேறுகழித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள் மகுடாபிஷேக மகோற்சவம் மங்களகரமாக நடைபெற்றது. முடிசூட்டுக் கொண்டாட்டங் காண வந்த அரசர், அந்தணர், முனிவர். முதலிய யாவரும் மறுநாட் காலையில் வீரசேன மகாராஜனிடத்தும், சுவேதமகாராஜன் முதலியர்க ளிடத்தும் நல்விடை பெற்றுக்கொண்டு தத்தம் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றுமுதல் வீரசேன மகாராஜன் இராஜேந்திர புரத்தை நீதி வழுவாது அரசு புரிந்துவந்தான். இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் வழக்கப்படி ஒருநாள் அரசன் நகரசோதனை செய்து வரும்பொழுது தனது அரண்மனை முற்றத்தில் வைத்துண்டாக்கப்பெற்ற அலங்கார புட்பச் செடிகள் பலவும் விகசிதமாக மலர்ந்து பரிமளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து மிகுந்த மண மகிழ்ச்சியுற்று அவற்றில் ஒரு பூவைக் கொய்து முகர்ந்து செல்லுங்கால் தனக்கு ஏதோ ஓர்வித மயக்கம் வருகிறதென்று வாய் பிதற்றிக்கொண்டே பள்ளியறைக்குட்சென்று சப்ரமஞ்சத்திற் சாய்ந்தனன். அது தெரிந்து காவலாளிகளும், மந்திரி முதலானோர்களும் ஓடோடி வந்து வீரசேனனைச் சூழ்ந்துகொண்டிருப்பதைக்கேள்வியுற்ற சுவேத மகாராஜனும், அவன்பத்தினி புத்திர பௌத்திராதியரும், திகிலுற்றமனத்தை யுடையவராய் ஓடிவந்து பார்த்துப் பண்டித வைத்திய மாந்திரீகரின் உதவியினால் வேண்டிய சிகிச்சைகளைச் செய்தும் மயக்கந்தீராதது கண்டு உற்று நோக்கும்போது உயிர்நீங்கிய தெளவறிந்து அவர்கள் யாவரும் அழுது பரிதபிக்கத் தொடங்கினார்கள்.

அவ்வழுகைக் கூச்சலைக்கேட்ட நகரத்து ஜனங்கள் யாவரும் ஒருங்குசேர்ந் தோடிவந்து வீரசேனனைப் பார்த்து அரற்று தற்காரம்பித்துப் பெருத்த கூக்குரல் செய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் நடந்ததொரு ஆச்சரியத்தைச் சொல்லுகிறேனெனச் சாணாங்கிமுனிவர் கூறுதலும், அதைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! என்ன ஆச்சரியம் நடந்தது? அதைக் கூறுவதோடு நகர சோதனை செய்த வீரசேன மகாராஜன் உயிர் துறந்த காரணம் என்னவோ! அதையுந்தெரிவிக்க வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கிமுனிவர் சாற்றுவாராயினர்.

கேளும் முனிசிரேஷ்டர்களே! வீரசேனமகாராஜன் நகர சோதனை செய்துவிட்டு அரண்மனைக்குட் செல்லுத் தருணத்தில் அவன் பறித்து முகந்த நறுமலர்ச் செடியிற் றங்கிய விஷத்தின் கோளால், மயக்கமுற்று உயிர்துறந்தனன். அவ்வளவோயன்றி, வேறொன்றுமில்லை, அவ்வரசனே! மறுபடியும் உயிர்பெற்றெழுந்திருக்கப்போகிற சரிதையை விளம்புகிறேன் கேளுங்கள், என்று சாணாங்கி முனிவர் சொல்லுகின்றார். அதாவது மகத்துவமிகுந்த சதுரகிரியின் கீழ்பாகத்திற் பாரிசாதம் அரிசந்தனம், கற்பகம், மந்தாரம், சந்தானம் என்னும் பஞ்சதருக்களும், அகில் சுரபுன்னை, பாதிரி, அசோகம் முதலான பலவிருக்ஷங்களும், வைத்துண்டாக்கப்பெற்ற மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, செவ்வந்தி, சம்பங்கி, நந்தியாவட்டம் முதலான பலபுட்பச்செடிகளும் நிறைந்த திருமூலர் வனமென்னும் ஓர் அழகிய வளமுண்டு. அவ்வனத்தில் ஆசிரம மொன்றுண்டாக்கி அதிற்றவநிட்டை புரிந்துகொண்டு திருமூல மகருஷி என்னும் ஒருவரிருந்தார். அவர் அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய அட்டமா சித்திகளையுந் தெரிந்தவராதலால், ககனமார்க்கமாக எவ்விடங்களுக்குஞ் சென்று வருவார். ஒரு நாள்இரவு வழக்கம்போற் ககன மார்க்கஞ் சென்று இராஜேந்திரபுர நகரத்தின் சமீபமாக வருந்தருணத்தில், வீரசேன மகாராஜன் மலர்ச் செடியிலிருந்து விஷத்தா லுயிர்த்துறந்ததற்காக ஆங்குள்ள யாவரும் அமுதலான பெருஞ்சத்தத்தைச் செவியுற்றுக் கேட்டுச் சற்று நிதானித்து நின்று யோசித்துப் பின்பு தம் தவசிரேட்டத்தால் வீரசேனன் உயிர்துறந்த விஷயங்களையெல்லாந் தெரிந்து நகர்க்குட்சென்று பார்த்து மனமிரக்கமுற்று உடனே தமதாசிரமத்துக்குச் சென்று தம் சரீரத்தை அவ்விடத்துள்ள ஓர் குகைக்குள் எப்போதும் பத்திரமாக இருக்கும் படி ஒளித்துத் தம் சீடரான குருராஜமகருஷியிடந்தம் அந்தரங்க செய்தியைத் தெரிவித்து நான்வரும் வரை சரீரத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வரவேண்டுமெனக் கூறிச் சூக்குமசரீரத்தோடு இராஜேந்திரபுர நகரத்தில் உயிர்நீங்கிக் கிடந்த வீரசேன மகாராஜனுடைய சரீரத்திற் புகுந்து கொண்டனர்.

அப்பால் வீரசேன மகாராஜன் நித்திரை நீங்கி எழுபவன் போல் எழுந்திருந்ததை அவன் பக்கத்திற் சூழ்ந்து அழுது வருந்தினோர் யாவரும் கண்டு அழுகையை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு சொல்லொணாத ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து இவர் இன்று மயக்கமுற்றிறந்ததும், பின் பெழுந்ததும், ஆ! ஆ! என்ன ஆச்சரியமோ! ஏது காரணமோ? ஒன்றுந்தெரிய வில்லையே? என இவ்விதமாக ஒருவரோடொருவர் பற்பல வார்த்தையாடிக் கொண்டிருந்தனராய்த் தத்தம்மிருக்கை சென்றனர்.

மறுநாளிரவு வீரசேனமகாராஜனாகிய திருமூலர் அந்தப்புரத்தின் ஓர் பாகமாகிய பள்ளியறைக்குட் சென்று தன் மனைவியான குணமதியுடன் அம்சதூளிகா மஞ்சத்தில் சரச சல்லாபமாக இருக்குஞ் சமயத்தில் குணமதியானவள் தன்னுடைய கணவன் முன்னர்த் தன்னுடனே விதாரண வார்த்தைகளாடிய விகசிதங்களும், இன்ப லீலாவினோதங்களும் இப்பொழுது மாறுதலாகி மிகச்சிறந்திருத்தலைக்கண்டு, இதற்குக் காரணமென்னவென்று யோசித்துச் சொல் லொணாத வருத்தத்தையும், சந்தேகத்தையும் தன் மனத்துள் அடைந்தவளாகி அதனைத் தன்னுடைய கணவனிடங் கேட்டுத் தெரிந்து கொள்ள நீண்டநாள்களாகச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனள். இப்படியிருக்க,

ஒருநாள் இரவு வீரசேன திருமூலவரசன் அனங்கனுடைய அரும்பு மலர்க்கணைகளால் அதிக மோகமுற்று மனமகிழ்ச்சியுடன் தன்னிடம் வருவதை அவள் கண்டாள். ஒவ்வொரு நாளும் அவரைக் காணும் பொழுதெல்லாம் புதுமையான உளமகிழ்ச்சி யுண்டாவது இயல்பாகவே இருப்பவும், அன்றுண்டாகிய பெருமகிழ்ச்சியால் நெடுநாளாகச் சந்தேக முற்றிருக்கிற விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுஞ் சமயம் இன்றுதான் வாய்த்தது என எண்ணித் தன் கணவனை ஆலிங்கனஞ் செய்து அவனுடன் சப்ரமஞ்சத்திற் சென்று கேளீ விலாசத்துடன் சந்தன தாம்பூலத்தரிந்து மனக்களிப்புற் றிருக்குந் தருணத்தில் அரசன் குணமதியைத் தழுவுதற்கு ஆரம்பித்தனன். அப்போது குணமதியானவள் மதி போன்ற முகவசீகரத்தை மிகமலர்ச்சியோடு காண்பித்தவளாய்த் தன் உட்கருத்தைத் தெரிவிக்க உன்னினவள் மீண்டும் மறைத்துக் கொண்டனள். அதனைக் குறிப்பாலுணர்ந்த வீரசேன திருமூலவரசன் பெண்மணீ! இப்பொழுது ஏதோ என்னிடத்திற் சொல்ல உன்னினவள் மீண்டும் மனததில் அடக்கிக் கொண்டனையே! அஃதென்ன? நீ சொல்லலாமென்று நினைத்த காரியத்தை நான் கேட்க மாட்டேனென்று மறைத்தனையோ? அல்லது என்னிடத்திற் சொன்னால் அந்தக் காரியம் ஆகமாட்டாதென்று நினைத்தனையோ? இதற்கு முன் நீ சொன்னதை நான் தட்டிவிட்டேனா? என்பால் உனக்கு இவ்வளவு சந்தேகம் எதற்கு? உன்னை மகிழ்வித்தலே எனது கடமை யாதலால் உன்னுடைய எண்ணத்தை என்னிடம் ஒளியாமற்சொல், என்று கூறவும், அதைக் கேட்ட குணமதி மிகக் களி கூர்ந்தவளாய் அரசே! தங்களிடத்திற் சொல்லக் கூடாத காரியத்தை நான் நினைக்கவில்லை. நீண்ட நாள்களாக ஒரு விஷயத்தில் தான் கொண்டிருந்த சந்தேகத்தைத் தங்களால் நிவர்த்தித்துக் கொள்ள நினைத்தும், “பேதமை என்பது மாதர்க்கணிகலம்“ என்னும் முதுமொழிக்களாகி அதனை அடக்கிக் கொண்டேன். தாங்கள் உண்மையை அறிந்து கொண்டீர்கள். அன்றியும் அதனைச் சொல்லும்படியாகவும் எனக்கு உத்தரவு கொடுத்து விட்டீர்கள். அப்பாலும் என்வாய் கூசுகிறது; ஆனாலுஞ் சொல்லுகிறேன்.

என் பிராண நாயகரே! மணமான கால முதற்றங்களுடன் அடியாள் பழகியுள்ளேன். சுவேத சந்திரனென்ற ஒரு புத்திரனையும் தாங்களருளப் பெற்றேன். ஏதோ ஊழ்வலியால் தங்களுக்கு ஒரு சமயம் மயக்க முண்டாகிப் பின் நெளிவு பிறந்ததல்லவா! அதற்கு முன்னர் நாமிருவரும் எவ்வளவோ மணமகிழ்ச்சியுடன் சரச சல்லாபமாக இருந்து வந்த நிலைமை இன்னும் என்னுடைய மனத்தை விட்டகலாமலிருக்கிறது.

அதன் பின்னர் தங்களுடைய விதரணவார்த்தைகளின் விகசிதங்களும், காமவின்ப லீலாவினோதங்களும், பண்டை நிலைமையின் மாறி மிகப் புதுமையாகி நூல்களிலே வர்ணிக்கப் பெறுகிற தேவ போகத்தைக் காட்டிலும் அதிகமாகச் சிறந்த ஆச்சரியகரமான இன்பாநுபவங்கள் காணப்படுகின்றனவே! முன்னில்லாத இந்நிலைமை பின்னர் உங்களுக்கு எப்படி வந்தது? என்பதைத் தங்களிடங் கேட்டு அறிய வேண்டுமென்றும் ஓர் எண்ணம் எனக்கு நெடுநாளாக உண்டாயிருந்தது. அதைத்தான் கேட்கத் துணிந்து வாய் கூசி மறைத்து விட்டேன். இதைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்த உண்மையை வெளியிட்டு நெடுநாளாக உள்ள சந்தேகத்தை நீக்கியருளல் வேண்டுமென்று அடியாள் பிரார்த்தித்து வேண்டிக் கொள்கிறேன் என்றாள். அவ்வார்த்தைக் கேட்ட அரசன் அவளறிவுடைமையை மெச்சி அவள் பால் வைத்த பிரீதியினாலும், அவளை மகிழ்வித்தல்வேண்டியும், பொய் சொல்ல மாட்டாதவரா இருத்தலாலும், உண்மையைச் சொல்லத் துணிந்து குணமதியை நோக்கி ஆரணங்கே! நல்லது அவ்வரலாற்றைச் சொல்லுகிறேன் கவனித்துக் கேட்பாயாக. அதாவது, அகத்தியர் முதலான அநேகதவ மேலோர்கள் புகழ்ந்து போற்றும் சதுரகிரியின் கீழ்த்திசையிலிருக்கிற திருமூலர் வனத்தின் கண் ஓர் குகையிற் றவம்புரிந்து கொண்டிருந்த திருமூலசித்தனென்னும் பெயரையுடைய யான் ககனமார்க்கமாக இப்பூவுலகத்தைச் சுற்றிப்பார்த்துலாவி வரும்பொழுது இவ்விடத்தி லதிகமா யழுகைச் சத்தங் கேட்டது. உடனே நான் கீழிறங்கிக் கவனித்ததில் நகர் சோதனைக்குப் போய் வந்த அரசனாகிய உன்புருடன் விஷத்தால் சிறிது நேரம் மயக்கமுற்றுப் பின் உயிர் துறந்தானென வறிந்து பெருங்கருணையை வகித்தவனாகி எனது கற்பசரீரத்தைப் பத்திரமாக என் ஆசிரமக் குகைகுள் வைத்து விட்டு, நான் இச்சரீரத்திற் பாகாயப் பிரவேசஞ் செய்து கொண்டேன்.

ஆகையால் பெண்ணே நீ இது செய்தியை எவரிடத்திலுந் தெரிவிக்கக் கூடாதென்று கூறியதைக் கேட்ட குணமதியானவள் சுவாமீ! அடியாள் எதற்காக இச்செய்திகளையெல்லாம் பிறரிடத்திற் றெரிவிக்கப் போகிறேன் ஒருக்காலுமில்லை என்று கூறிப்பின்னுஞ் சொல்லுகிறாள். அரசே! தங்கள் சரீரத்தைக் தங்களா சிரமக் குகைக்குள்வைத்து வந்ததாகக் தெரிவித்தீர்களே? அச்சரீரத்தை அவ்வனத்தில் வாழும் துட்ட விலங்கினங்கள் தின்று ஒழித்து விடுமே? அதுவு மல்லாமல் எவரேனுங் கண்டு எடுத்து தகனித்துவிட்டா லென் செய்கிறது? என்று கேட்க அதற்குத் திருமூலவரசன் மாதரசீ! கற்பசரீரத்தைக் காட்டில் வாழ் விலங்கினங்கள் புசிக்காது. தவிர மானிடரெவரும் அதை எடுத்து வெளியே கொணர்ந்து தகனிக்கவு முடியாது.

ஏனெனில், அதற்கு நம் சீடரான குருராஜருஷியைக் காவலாக நியமித்து வந்திருக்கிறேன். மேலும் அச்சரீரத்தைத் தகனிக்கவேண்டுமென்றால் குருராஜருஷி வெளியே சென்றிருக்குஞ் சமயம் பார்த்துச் சரீரத்தை யெடுத்து வெளியே கொணர்ந்து அதன் மேல் வெடியுப்புங் குங்கிலியமும் பொரிகாரமும் நிரப்பி விராலியிலையைப் போட்டு அகிற்கட்டைகளை யடுக்கி நெருப்பிட்டாலல்லவோ வேகும். இதனையாரறிவர்? ஆகையாற் பயமில்லை. இந்த மருமங்களைத் தெரிந்து தகனிக்கப் போகிறவர் ஒருவருமே இல்லை ஆனதா லதைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம் என்று தெரிவித்தனர்.

அதைக் கேட்ட குணமதி மிகுந்த சந்தோஷத்தையடைந்தவளாகித தன் கணவனான வீரசேன திருமூல மகாராஜனோடு முன்னிலும்அத்யந்த பிரிய நேசமாயிருந்து வருங்காலத்தில் ஓர் விபரீத எண்ணமுண்டாகி அவள் ஆலோசிக்கின்றாள், இவரோ சித்தர்பெருமான், இவரது பண்டைய உன்னத நிலையை அடைதற்கு நினைந்துவிட்டாலோ இச்சரீரத்தை ஈங்குக் கிடத்திவிட்டுத்

தமதாசிரமத்திலிருக்கிற கற்பசரீரத்திற் புகுந்து கொள்ளுவார். அப்பால் இச் சரீரத்தை, தகனித்துவிட வேண்டியது வரும். அப்பொழுது நாம் விதவையாய்ப் போய்விடுவதோடு பட்டத்ரசியென்ற நாமதேயமும் அன்றைய தினமே மறைந்துவிடும். அன்றியும், இவ்விராஜ சுகபோக சௌபாக்கியங்களை எல்லாம், இழக்கும்படியும் நேரிடும், எனப் பலபல நினைத்து உடனே இரண்டு புலையர்களை வரவழைத்து அரசன் அறிவித்த விவரப்படி மருந்துகளைக் கொண்டுவரும்படி செய்து அப்புலையர்களை நோக்கி புலையர்காள்! நீங்களிப் பொழுது நமக்கோருதவி செய்ய வேண்டும். இது செய்தி எவருக்குந் தெரியக்கூடாது. என்னவெனில் சதுரகிரியின் கீழ்திசையிலிருக்கிற வனத்தில் திருமூலர் ஆசிரமக்குகைக்குள், உயிர் நீங்கிய சடமொன் றிருக்கிறது. நீங்களிப்பொழுதே ஆங்குச் சென்று அச்சடத்தை எவருக்குந் தெரியாமலெடுத்து அகிற்கட்டைகளை யடுக்கி, அதன் மேற் சடத்தை வைத்து இம்மருந்துகளைத் தூவி விராலியிலையால் மூடி நெருப்பிட்டுத்தகனித்து எனது பார்வைக்குச் சிறிது அச்சரீரத்தின் சாம்பலை எடுத்து வரல் வேண்டுமென்று உத்தரவு கொடுத்து அனுப்பினாள்.

அவ்வுத்தரவின்படி புலையர்கள் வாயுவேக மனோ வேகமாகத் திருமூலர் வனத்துக்குச் சென்று ஆங்கிருந்த சடத்தை எடுத்து வெளியே கொண்டுவந்து தகனித்து அதற்கடையாளமாகச் சிறிது சாம்பலை எடுத்துவந்து அரசியிடங்காண்பித்து, வேண்டிய சன்மானங்களைப் பெற்று அவர்களிருப்பிடஞ் சென்றனர்.

அப்பால் குணமதியும் வீரசேன திருமூல வரசனும் சிலநாள் வரை நகமுஞ் சதையும் போலவும், புட்பமும் மணமும் போலவும் மிகப் பிரியமுற்றிருந்தனர். இப்படியிருக்க ஒரு நாள் வீரசேன திருமூலவரசன் தன்னுடைய கற்பசரீரத்தை யடைய அவாக் கொண்டு காட்டைநாடி வேட்டமாடச் செல்வதுபோல் வேடர் வில்லியரோடு சதுரகிரியின் கீழ்திசையிலிருக்கிற திருமூலர்வனத்திற் சென்று தன்னுடன் வந்தவேடுவர் முதலானோரை வெளிப்பக்கத்தில் நிற்கச் செய்து குகைக்குட்சென்று பார்க்கத்தன் சடத்தையும் ஆங்கு அதற்குக் காவலாக விருந்த குருராஜருஷியையும் காணாது, திகிலடைந்து வெளிவந்து கீழேகவனிக்குந் தருணத்தில் தகனித்துக் கிடக்கும் அஸ்தியையும் சாம்பலையுங் கண்டு மிகுந்த மனவருத்தமுடையவனாகி ஆலோசிக்கிறான்.

ஆ! ஆ! நம்முடைய கற்ப சரீரத்தை மானிடர் எவராலுந் தகனிக்க முடியாதே! நம்முடைய உளவறிந்தவர்களே இப்படிச் செய்திருக்கவேண்டும். முன்பு ஒருநாளிரவு குணமதியோடு சரசசல்லாபமா யிருக்கும்போது, இவ்வந்தாங்கத்தை அவள் கேட்க, அத்தருணம் அந்தோ! உத்தமியாகிய அவள் நமக்குத் துரோகஞ் செய்யமாட்டாள் என்று நினைத்தல்லவோ உண்மைகளையெல்லாம் வெளியிட்டோம், "எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்மதி பின்மதி" என்னும் பழமொழி பொய்க்குமோ! அவளால், வந்த மோசந்தானிது, ஆ! ஜெகதீசா! இதற்கென்ன செய்வேன்! யாங்குச் சென்று முறையிடுவேன்! பலகாலம் அருந்தவஞ் செய்த பரிசுத்தமாகிய நமதுமனத்தையே கொடியகாமாந்தகாரம் விழுங்கிவிட்டதே! காமமயக்கத்திற் பட்ட சாமானியர் கதி என்னவாகும். இதனாலன்றோ, "காமமேகொலைகட் கெல்லாங்காரண" மென்றும்,

"காமமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கம்" என்றும், அநேகம் பாக்களை ஆன்றோர் மனம் வெறுப்புற்றுக் கூறியுள்ளார்.

ஆகையால் அவ்வாக்கியங்கள் யாவும் நமக்கே இப்போது பொருத்தமாக விருக்கிறதுந் தவிர, ஊழின் வலிமையால் நாம் இச்சரீரத்திற் புகுந்து காமாதி சுகங்களை யனுபவித்துத் துன்பத்துட் சிக்கிக்கொண்டோம். அதனால் இங்கு நம் கற்ப சரீரம் நீறானதையுங் கண்டோம் இனி இச்சரீரத்தோடு இருப்போமானால் இச்சரீரமும் சிலநாள்களுக்குள், அழிந்துவிடும் என்பதற்குச் சந்தேகமே யில்லை, ஆனதால் இச்சரீரத்தைத் துறந்து நமக்காக வேண்டிய சரீரத்தைப்பெற்று ஆத்மஞான காயசித்தியை யடைந்து முடிவில்சொரூப நிலையைப் பெறவேண்டும் என்று நிச்சயித்து ஒருவாறு மனந்தேறி, வேடுவர் முதலானோர்களுடன் திரும்ப இராஜேந்திர புரத்துக்குவந்து சேர்ந்தனன் எனச் சாணாங்கி முனிவர் கூறியருளுதலும், அதைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! குணமதியின் அனுமதிப்படி புலையர்கள் சென்று கற்பசரீரத்தைத் தகனிக்குந் தருணத்தில் ஆங்குக் காவலாக இருந்த குருராஜருஷி என்பவர் அவ்விடத்தில் இல்லாது எங்குச் சென்றிருந்தார்? அதைக் கூறியருளவேண்டுமெனக்கேட்க சாணாங்கி முனிவர் சாற்றுவாராயினர்.

கேளும் நாகார்ச்சுனாதி முனிவர்களே! திருமூலருடையசரீரத்துக்குக் காவலாக விருத்த குருராஜ ருஷியானவர் கற்பசரீரத்தைத் தம்பால் வைத்துச்சென்ற ஆசிரியரைத்தேடி அழைத்து வரச்சென்றிருந்தார். அதனாற்றான் புலையர்கள் யாதொரு தடையு மில்லாமல் அச்சரீரத்தைத் தகனித்துச் சென்றனர், என்று கூறிப் பின் நடந்த சரித்திரங்களையுஞ் சொல்லலாயினர்.

அப்பால் திருமூலவரசன் வேட்டையாடச் சென்று வந்த நாள் தொடங்கித் தன் மனைவியாகிய குணமதியினிடத்து வெறுப்பு மிகக்கொண்டு அதனைக் காட்டாதிருந்து வருகையில், தான் காயசித்தி பெற்றுப் பிரம ஞானத்தை யடையவேண்டு மென்று முன்விரும்பியதை ஒருநாள் நினைத்து ஒருவருக்குந் தெரியாமல் மாறு வேடம் பூண்டு இராஜேந்திரபுரத்தை விட்டு நீங்கித் தென்திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இவ்விதமிருக்க வளந்தங்கிய சம்புகேஸ்வர நகரவாசியும் சம்புகேஸ்வரன் என்ற பெயரையுடையவனுமான ஓர் பிராமணன் தவயோக ஞானானுபவ நூல்களை முறையோடு தகுந்த ஆசிரியரிடம் கேட்டு ஐயமறக் கற்றுக் கொள்ளாதிருந்தும், ஏதோ சிறிது படித்தமையாற் செருக்குற்று எல்லாவற்றையும் நாம் தெரிந்துகொண்டோம் என்ற எண்ணத்தை உடையவனாகி, தவம் புரிந்து மோக்ஷத்தைப் பெறக்கருதி அதற்குரிய வளம் பொருந்திய இடத்தைத் தேடிப் பல இடங்களுக்குஞ் சென்று கடைசியாய் இச்சதுரகிரிச்சாரலை வந்தடைந்து ஆங்குள்ள வனத்தின் சிறப்புக்களைக் கண்டு இதுவே தகுதியான இடமென்று நினைத்து வசிப்பானாயினான்.

அவன் நாள்தோறும் பொய்கையில் நீராடி, பிராணாயாமப் பயிற்சியை முதல் முதல் பழகிவருவானாயிருந்தான். அப்படி இருக்குங்காலத்தில் அப்பிராமணன் ஒருநாள் பிராணயமஞ் செய்யத் தொடங்கிய பொழுது பிராணவாயுவை ரேசித்து (மூச்சை

வெளியே விடுத்து) பூரித்து (உள்ளுக்கிழுத்து நிரப்பி) கும்பித்து (சமனாகச் செய்து அடக்கி) ப்பயிலுகையில் வரம்பு கடந்துபோனதால் மூச்சுமுட்டி விரைத்து உயிர் துறந்தான். அச்சமயத்தில் வீரசேன திருமூலவரசன் அவ்வனக்கு வரவும் தனக்கெதிரே ஒருபிராமண னிருப்பதாக அறிந்து சமீபத்திற் சென்று பார்த்து அத்தேகம் அசையாதிருத்தலைக் கண்டான். கண்டவுடனே இவன் ஒரு பிராமணன் போலுங் காணப்படுகிறானே! இவனிருக்கும் நிலை சமாதி நிலையுமல்லவே! பிராணாயாமம் செய்து கொண்டிருந்தவனைப் போலும் இவன் காணப்படுகிறானே! ஆனால் இவன் சரீரம்விறைத்திருப்பதைப் பார்க்கும்பொழுது உயிர்போனது போலுந்தெரிகிறதே! என்று தன்னுள் நினைத்துக்கொண்டு சிகிச்சை முறையால் ஒருவாறு உயிர் அடக்கிக் கிடப்பினும் எழுப்பிவிடலாமென்று நினைத்துக் கைகளாற்றொட்டுத் தட்டித் தடவிப் பார்த்தான். அவ்வாறு பாத்ததில் உயிர் நீங்கிச் சிறிது நேர மாய்விட்ட தென்பதைத் தெரிந்த அரசன் இவ்வுடம் பைத்தான் கடவுள் நமக்குத் தந்தருளினார், என்று கருதினவனாகி மிக மகிழ்ச்சியுடன் அத்தேகத்தில் புகுந்து கொண்டு தனது அரசதேகத்தை விட்டனன். தன்னால் விடப்பட்ட அத்தேகத்தை ஆங்கொரு யானை உண்டி மரத்தின் கோடரத்தில் ஒளித்து வைத்துப் பிறரறியா வண்ணம் அதற்கு மறைப்பு மையைத் தீட்டிவிட்டுத் தாங்கொண்ட சரீரம் சம்புவால் தரப்பெற்றதென்று கருதி, அவர் சம்பு முனிவர் என்னும் பெயர் கொண்டவராகித் தாம் முன்பு கொண்டிருந்த அரசசரீரத்தை வைக்கப் பெற்ற யானை உண்டி மரத்திற்கு இன்று முதல் அரசமரமென்னும் பெயர் உண்டாகுக, என்று கூறிச் சென்றமையால், அன்று முதல் அது அரசமரமென்னும் பெயரையும் பெறுவதாயிற்று. அப்பால் சம்புமுனிவர் சதுரகிரியில் மேற்சென்று ஆங்கு எவருஞ் செல்லுதற் கரிதாயதும், வானுலகுவரை அளாவி நிற்கும் பல விருக்ஷங்கள் நிறையப்பெற்றதும், பயங்கரமுமாகிய இருண்ட காளிவன மென்னும் கொடிய காட்டினுள் நுழைந்து அவ்விடத்துள்ள ஒரு குகையில் அரிய தவத்தைச் செய்து கொண்டிருந்தனர். அப்படி யிருக்குங் காலத்தில் அவர் பால் வந்தடைந்த பல சீடர்களுக்குத் தவயோகாப்பி யாசங்களைப் போதித்து அவ்வழிப் பயிலுவாரைக் கண்டு மகிழுவார். அதுவுமன்றி உலக நன்மைக்காக வைத்திய வாதயோக ஞான சாஸ்திரங்களை அவர் தமது பண்டைப் பெயரால் திருமூலர் வாக்கியமென்று தம் சீடர்களுக்கு உபதேசித்தருளுவாருமா யிருந்தனர் என்று கூறியதைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் பரமானந்த சித்தத்தையுடையவர்களாகி மேல் நடந்த சரித்திரங்களையும் சொல்லியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். சாணாங்கி முனிவருஞ் சொல்லுவாராயினர்.

கேளும் நாகார்ச்சுனாதி முனிவர்களே! வீரசேன திருமூலவரசன் இராஜேந்திரபுர நகரத்தைவிட் டகன்ற பின்பு குணமதியானவள் தன் கணவனைக் காணாது அரண்மனை முழுதுந்தேடிப் பார்த்து மனவருத்தமுற்று அழுதுகொண்டிருக்கும் சமயத்தில், பூசுரர் புகழும் புரவலனாகிய சுவேதமகாராஜனும், அவன் மனைவியிருவரும், தன்மார்த்தனும், சூரசேனனும், வச்சிராங்கதனும், அவர்களின் மனைவியர் மூவரும், மற்றுமுண்டான சுற்றத்தார் யாவரும், மந்திரி முதலானோர்களும், குணமதி அழுகிற சத்தத்தைக் கேட்டு அவளிடம் ஓடோடிச் சென்று விசாரித்து விஷயங்கள் யாவுந் தெரிந்து வீரசேனனது பிரிவாற்றாமையால் மிகுந்த வருத்தத்தை

யடைந்தவர்களாய்க் கவலைக் கடலில் மூழ்கி, ஆ! தெய்வமே! இனி நாங்கள் என்ன செய்வோம்! எவ்வாறுயவோம்; இது எவரிட்ட சாபமோ! எங்கள் முன்னோர்களது கோபமோ! என்ன மனஸ்தாபமோ! ஒன்றுந் தோன்றவில்லையே! அந்தோ! செங்கோல் மன்னனாகிய வீரசேனனை இழக்கும்படியான காலமும் நேரிட்டதே! எனப் பற்பலவாறாகப் புலம்பிக் கண்ணீர் விட்டாற்றி முட்டிமோதிக் கீழ்விழுந்து புரண்டு அழுது பின் சூக்ஷுமபுத்தி முனிவரால் ஒருவாறு மனந்தேறி வேவுகாரர்களை ஐம்பத்தைந்து தேசங்களிலுந்தேடிப் பார்த்து வரும்படியனுப்ப அவர்களும் சகல தேசங்களையுஞ் சுற்றித் தேடி பார்த்து வந்து வீரசேனன் அகப்படவில்லையே என்று ஓலமிட்டுக் கூறினர். அதைக் கேட்ட குணமதியம்மாள் தன் கணவன் தன்னையும், தான் காதலித்த வாஞ்சையையும், நகரையும், வெறுத்து எவருங் காணாது அரண்மனையைவிட்டு வெளியேறித் தனிமையாய்ச் செல்லவேண்டிய காரணமென்ன? அப்படிச் சென்றாலும் எங்குச் சென்றிருக்கலாம்? அந்தோ முன்னொரு நாள் யான் என்னுடைய அறியாத் தன்மையினாலும், என்னைத் தனியாகவிட்டுப் பிரிந்து போய்விடுவாரென்ற எண்ணத்தாலும், சதுகிரிவனத்தின் குகையிலிருந்த அவருடைய கற்ப சரீரத்தைத் தகனிக்கச் செய்து விட்டேனே! அதனாலொரு சமயம், கோபத்தைமனத்துட்கொண்டு எங்கேனும் போயினரோ! ஆமாம், அவ்விதமாகத் தானிருக்கலாம். ஏனெனில் சிலநாள்களுக்கு முன் காட்டை நாடிப்போய் வேட்டையாடி வந்ததன்பின் என்னுடன் ஒருநாளாவது மிகுந்த சந்தோஷமாய் வார்த்தையாடவில்லையே? அதிக வெறுப்பாகத்தானே இதுநாள்வரை இருந்து வந்திருக்கின்றனர்; ஆ! ஆ! மோசம்போனேனே! அவரைத் தேடிப் பார்த்து வரச் செய்யலாமென்றால் வேவுகாரர்கள் ஐம்பத்தைந்து தேசங்களையுஞ்சுற்றித் தேடிப்பார்த்தோம், காணவில்லை என்று சொல்லுகிறார்களே! இது பொய்யோ மெய்யோ தெரியவில்லையே ஒரு சமயம் தம தாசிரமத்துக்குச் சென்றிருப்பாரோ! அவ்வாறு சென்றிருந்தாலும் நானே அவ்விடத்திற்குச் சென்று தேடிக்கண்டு அழைத்துவருவேன். ஆனாலும் நான் தனியாகச் சென்றால் உலகத்தில் கணவன் பரதேசம் போனான்; கவலையற்ற மனைவியும் தேசாந்திரியாயினாள் என்று சொல்லுவார்களே! என்றெல்லாந் தன்னுட்கருதி தனியே புலம்பிக் கொண்டிருப்பதைத் தவிர தனது கணவன் கட்டளைப்படி மருமத்தை மட்டும் வெளியிடாதவளாய் இருந்தனள்;. அன்றியும், கணவனைப் பிரிந்த மனைவியானவள் புட்பம் ஆபரணம் முதலியவைகளை யணிய லாகாதன்றோ! இனி எனக்கென்ன உண்ணல் உவத்தல் என்று எண்ணி எல்லாவற்றையும் வெறுத்துத் தரையிற் கிடப்பாளாயினள். இவள் கதி இங்கனமாக, மேல் நடந்தன வற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சாணாங்கிமுனிவர் சாற்று வாராயினர்.

பதிமூன்றாவது,
திருமூலர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
பதினான்காவது

அகத்தியச் சருக்கம்

செப்புஞ் சதுர கிரிதனிலே சிறந்த கும்ப வனத்தினிடை
ஒப்புஞான தன்மார்த்த னுடனே நால்வர் சென்றதுவும்
உப்புக்கடலுண்முனிகற்பமுவந்தீந்தருளைவிளக்கிடவே
தப்பு நீக்குஞ் சிபிசரிதஞ் சொன்ன சால்புஞ் சாற்றிடுவாம்.

கேளும் முனிசிரேஷ்டர்களே மற்றொருநாள் அரசர்க்கரசனான சுவேதமகாராஜன் சபாமண்டபத்துக்கு வந்த சிம்மாசனத்திலமர்ந்து ஆங்கு சூழ வீற்றிருந்த சூக்ஷ்மம் புத்தி முனிவரையும் நன்மதி முதலிய மந்திரிகளையும் தன்மார்த்தன் முதலான யாவரையும் நோக்கி ஓர் வசனஞ் சொல்லுகிறான். 'அதாவது எனக்கு மூப்பென்பது சமீபித்தபடியால் என்முன்னோர்கள் நடந்து வந்த முறைப்படி தவயோகம் புரிந்து ஆத்ம ஞானத்தையடைவதற்கு ஆரண்யஞ் செல்லவேண்டுமென்றெண்ணி நான் வீரசேனனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்தேன். நானும் வனஞ்செல்லுவதற்கு உரியநாளைக் குறிப்பிட்டுருந்தேன். அதற்குள்ளாக அவன் நாடுநகர், தாய்தந்தையர், சுற்றத்தார் முதலான யாவரையும் வெறுத்து எவ்விடத்திற்குச் சென்றானென்றும், அவ்வாறு செல்லவேண்டிய காரணம் இதுவென்றும் இப்பொழுது இன்ன இடத்திலிருக்கிறானென்றுந் தெரியவில்லை. ஆனாலுமினி நான் வாணாளை வீணாளாகக் கழிப்பது கூடாது. இப்பொழுது மறுபடியுமிவ் விராச்சியத்தைத் தன்மார்த்தனுக்கு முடிசூட்டி வைத்துப் பின்னர் என் மனத்திலுள்ள எண்ணத்தை நிறைவேற்ற வனஞ்செய்யலாமெனக் நினைக்கிறேன். அதற்கு உங்களுடைய அபிப்பிராயங்கள் என்னவோ? அவற்றை தெரிவிப்பீர்களெனக் கூறலும், அதைக்கேட்டிருந்த தன்மார்த்தன் உடனே எழுந்து பிதாவே! "கற்க கசடறக் கற்பவை கற்றபின்-நிற்க அதற்குத்தக" என்ற முதுமொழிக் கிணங்க நான் நீண்ட நாள்களாக வேதாந்த நூல்களைக் கற்று ஆராய்ச்சிசெய்து வந்து அவற்றிற் கூறியபடி ஆத்மஞானமடைந்து சாயுச்சியத்தைப் பெறுதற்குத் தவயோகம் புரியவேண்டுமெனத் தீர்மானித்து வனத்துக்குச் செல்லுங்காலத்தை எதிர்பார்த்த வண்ணமாக யிருந்துவருகிறேன். அன்றியும் நமது முன்னோர்கள் முதன் மனையாட்டியின் ஜேஷ்ட புத்திரனுடைய புத்திரனுக்கே பரம்பரை வழக்காக மகுடஞ்சூட்டி வந்திருக்கிறார்கள்.

அந்தப்படி தற்போது, வீரசேனன் புத்திரனாகிய சுவேதசந்திரனுக்கு முடிசூட்டுவது தான் உத்தமம். அதை தவிர்த்து அதற்கு மாறாக நீர் எனக்கு மகுடா

பிஷேகஞ் சூட்டிவைப்பதென்றால் நன்றல்ல; என் மனமும், அக்காரியத்திற் கிணங்காது, என்று கூறிச் சபாமண்டபத்தை விட்டு நீங்கித் தன்னிருப்பிடத்திற்கு வந்து இனி நாமிங்கு இருப்போமானால் நம்மையே முடிசூட்டிக் கொள்வதற்கு வற்புறுத்து வார்களென நினைந்து ஆரண்யத்துக்குப் பிரயாணமாவதைக் கண்ட தம்பியராகிய சூரசேனனும் வச்சிராங்கதனுங் கூடவருவதாகக் கூற அதற்குத் தன்மார்த்தன் சகோதரர்களே! நான் ஆத்மஞானத்தை யடையலாமென்று ஆரண்யஞ் செல்கிறேன். நீங்களிருவரும், எதற்காக வரவேண்டும். அப்படி வந்து விட்டால் ஈங்கு, நம் தாய்தந்தையர் முதலானோர்க்குதவி புரிபவர் யாவர்? ஆதலால் எனக்குத் துணையாகச் சூரசேனன் மாத்திரம் வந்தாற் போதும். அப்பா! வச்சிராங்கதா! நீ இவ்விடத்திலிருந்து சகல காரியாதிகளையுங் கவனித்து மாதா, பிதா, குரு முதலானோர்களுடைய சொற்றவறாது நடந்து கொண்டு மனமகிழ்ச்சியோ டிருப்பாய், என்று கூறி தன்மார்த்தன் சூரசேனனுடன் தன் தாய் தந்தையரிருக்குமிடத்தை நோக்கிச் செல்ல எத்தனிக்கும் பொழுது அவர்களின் மனைவியராகிய தனமதியும், சுகமதியும் உங்களோடு நாங்களும் வருகிறோமென்று சொல்ல, அதைக்கேட்ட தன்மார்த்தனும், சூரசேனனும் பெண்களே! நீங்கள் எங்களோடு வருவது கூடாத காரியம். ஏனெனில் உங்களுடைய பாதங்களோ மிகவும் மிருதுவுடையன. நாங்கள் செல்கிற இடமோ நெருங்கியகாடு. ஆங்குக் கற்களும் பரல்களு மிகுந்திருக்கும். அவற்றின் மேல் நடந்து உங்கள் பாதம் பொறாது. அன்றியும், பசி வந்தபோது காய் கனி முதலியவைகளை உணவாகக் கொண்டு சுனைநீரருந்தவேண்டும். இவையெல்லால் உங்களுக்குச் சம்மதமாயின் வரலாகும், என்று சொல்ல அதைக்கேட்ட மனைவியரிருவரும் ஐயன் மீர்! தாங்கள் செல்வது காடாயிருந்தாலும் எங்களுக்கதுதான் அரண்மனையாகிய வீடு. தங்களைப் பிரிந்து நாங்கள் இருக்கும் நாடுதான் அடர்ந்த காடு, என்று மிகுந்த வருத்தமுற்றுக் கூறுவதைக் கேட்ட தன்மார்த்தனும், சூரசேனனும் அவ்வார்த்தைக்கு அத்யந்த சந்தோஷமடைந்து, அப்படியானால் கூடவருவீர்களென்று அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு செல்ல, அதைக் கவனித் ருந்த வீரசேன திருமூலவரசன் மனைவியாகிய குணமதியானவள் தன்மார்த்தன் முதலானவர்களோடு நாமும் வனஞ்சென்றால் ஆங்கு நம்முடைய புருஷனைத் தேடிக் கண்டு கூட்டி வரலாமென்று நினைத்து உடனே எழுந்து அவர்களுடைய சமீபத்திற்சென்று இளவரசர்களே! உங்களுடைய அண்ணல் நகரை விட்டு நீங்கிய விஷயங்கள் யாவும் உங்களுக்குத் தெரியுமே? ஆனதால் இனி நான் தனியாக இவ்விடமிருப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை. உங்களோடு யானும் தவத்தை நாடி ஆரணியத்துக்கு வருகிறேன். அவ்விடத்திலேயே நானும் அரிய தவஞானப் பீடுயர்வையடையும்படியான வழி என்ன உண்டுமோ! அது எனக்குங் கைகூடிவந்து சென்ம சாபல்யத்தை அடையச் செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறேன், என்று கூறினள்.

அதைத் தன்மார்த்தன் முதலான நால்வரும் அளவிலாத, ஆனந்தத்துடன் கேட்டுக் குணமதியையும் அழைத்துக் கொண்டு சென்று தாய்மாராகிய சுந்தரவதனி, சந்திரவதனி என்னுமிருவரையும் தந்தையாகிய சுவேதமகாராஜனையும் அன்புறச் சாஷ்டாங்கமாக வணங்கிப் பெற்றோர்களே! உலகத்தில் மானிடர்களது இல்லற வாழ்க்கையானது மிகச் சிறந்ததே! ஆதலின் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்னும் மேலான

மறைவழியை யறிந்து அவ்வில்லறமாகிய நல்லறத்தில் நாங்கள் வழுவாது நின்றோம். அத்தகைய எங்களுக்கு ஏதோ விட்ட குறையிருந்து அதில் வெறுப்பும், தவத்தில் விருப்பும் இவ்விளமையிலேயே வந்து கொண்டிருக்கின்றன, ஆனபடியால் சிலகாலம் வனவாசஞ் செய்தற்கு நாங்கள் எண்ணங்கொண்டோம்."நெருநலுளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு" என்னும் மறையின் உண்மையை அறிந்த நீங்கள் எங்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கமாட்டீர்கள். நமது வீரசேனனும் அவ்விருப்பத்தாலேயே தங்கள் தடைக் கஞ்சி ஒளித்து ஓடிப்போய் விட்டான்போலும். நாங்கள் அறிவிற் சிறந்த உங்களுடைய மேலான நிலையை நன்கறிவோ மாதலின் தங்களிடத்தில் விண்ணப்பித்துத் தங்கள் மனதைக் குளிரப் பண்ணி நல்விடை பெற்றுக் கொண்டு செல்லவந்தோம். நமது நாட்டிற்கு, உரியவனாகிய சுவேதசந்திரனுக்குப் பருவம் வந்து, பட்டங்கட்டும்வரை வீரசேனனுடைய அரசாட்சிப் பொறுப்பை வகித்திருக்குந் தவத்தைத் தாங்களே யுடையவர்களாயிருக்கிறீர்கள். நாங்களும் வனவாசஞ்சென்று ஆங்குள்ள தவயோக சித்தர்களைக்கண்டு அவர்களுடைய ஆசீர்வசனமும், நல்லுபதேசமும் பெற்றுக்கொண்டு சில ஆண்டுகள் கழித்து இங்கே வந்து சேர்வோம். ஆதலால் தாங்கள் மனப்பூரணமான உத்தரவு கொடுத்து எங்களை யனுப்புதல்வேண்டும் என்று பிரார்த்தித்தனர். அதனைக் கேட்ட சுவேதமகாராஜன் மைந்தர்களே, நீங்கள் கொண்ட அவாவை முன்னர்க் கொண்டுள்ளது நானன்றோ? கிழப்பருவத்தையுடைய எனக்கு விடுதி கொடுக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? புத்திரராவார் தம்மைப் பெற்றோர் புத்தென்னும் நரகத்திற்கு ஆளாகாதபடி நற்றவத்தா வீடேற அவருக்கு வழிகாட்டுபவர் என்னுஞ் சொற்பொருள்களை நீங்கள் அறியாதவர்களல்லவே! அதனை மறந்து என்னிடத்தில் நீங்கள் விடை கேட்பதுந் தகுமோ? புத்தியிற் சிறந்தவர்களாகிய நீங்களே யோசித்துச் சொல்லுங்கள் என்று கூறினான். அதனைக் கேட்ட ஐவருள் தன்மார்த்தன் முகமலர்ச்சியுடையவனாகி தன் தந்தையை நோக்கி எந்தையே! நீங்கள் கூறுவது நியாயமேயானாலும், அது இச்சமயத்திற்குப் பொருந்தாது. பட்டத்தரசன் எங்கேயோ போய் விட்டான். அவனுடைய பிள்ளையோ! இளைஞனாயிருக்கின்றான். இராச்சியபாரத்தை இப்பொழுது மேற் பார்க்கத் தகுந்த உரிமை தங்களுக்கே இருக்கிறது. நாங்கள் ஞாதிகள்; ஞாதிகளிடத்தில் அரசுரிமையை ஒப்புக் கொடுப்பது எந்த அரசர் பரம்பரையிலும் வழக்கில்லை. அதனை மறந்தமையாலோ! என்பால் வைத்த அன்புடைமையாலோ! எனக்குப் பட்டங்கட்டத் தாங்கள் திருவுளங் கொண்டீர்கள் "பிதுர் வாக்கிய பரிபாலனம்" என்ற ஒரு நியாயத்தைக் கடந்து தரும சாஸ்திர முறையையே பின் பற்றி நான் அதை மறுத்து விட்டேன். மேலும் தாங்கள் இப்பொழுது வனத்திற்குப் போக விடை கேட்கிறீர்கள். நாங்களோ! போய் வர விடை கேட்கிறோம். ஆகையால் எங்களுக்கு விடை கொடுக்க உங்களுக்கு முழு உரிமையும் இருக்கிறது. தங்களுக்கு விடை தருபவன் சுவேசந்திரனாவன், அவனை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்து அவன் பால் விடைபெற்றுத் தவத்துக்குச் செல்லுங் காலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதே இப்பொழுது தங்களுக்குக் கடமையாகும். விட்டகுறை தொட்டு நிற்கும் எங்களுக்குத் தாங்கள் விடை தந்து அனுப்புங்கள். நாங்கள் சென்று விரைவில் மீண்டும் வருகின்றோம், என்றனன். அதைக் கேட்ட சுவேதமகாராஜன் எனதப்பனே! தன்மார்த்தா! நீ கூறுவன வெல்லாம் மிகச் சரியாகவே

இருப்பினும் கிழப்பருவத்தையுடைய எனது வாழ்நாள் நிலையானதல்லவே! என்றுதான் நான் மயங்குகின்றேன். அத்தகைய என்னைத் தனியே வைத்து விட்டு நீ வனவாசம் போகத் துணிந்து விடை கேட்கலாகுமோ? என்று ஏங்கிய மனத்தையுடைய வனாகிய வருத்தத்துடன் ஏதோ ஆலோசிப்பான் போல ஏதும்புகலாது மஞ்சத்திற்சாய்ந்தனன்.

அதனைக் கேட்ட தன்மார்த்தன் பிதா! நீங்கள் ஏன் கலங்குகின்றீர்கள்? நாங்கள் சில ஆண்டுகள் வரை வனதிலுள்ள பெரியோர்களைச் சேவித்து அவரது அருள் பெற்றுக் கொண்டு வந்து விடுவோம். அதுவரை உங்களுக்குத் துணையாக தம்பி வச்சிராங்கதனை இவ்விடத்தி லிருக்கும்படி நான் செய்திருக்கிறேன். அன்றியும் நமதாசிரியரும், மந்திரிமாரும் இருக்கிறார்கள். தாங்களொன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்றான். அவனது திட நிலையையும், மற்றும் நால்வருடைய குறிப்பையும் தன்மனத்துள் ஆராய்ந்தறிந்த சுவேதமகாராஜன் அப்படியானால் உங்களுக்கு வேண்டிய துணையையும் பொருளையுங் கொண்டு சென்று பத்திரமாகப் போய் வாருங்களென விடை தந்தருளினான். அரசன் விடை கொடுத்தமையையும், ஐவர்களது முகமலர்ச்சியின் நிலைமையையும், ஆங்கு நடந்த தடை விடைகளையும் நேரிற் கண்ட தாய்மார்களிருக்கும் கண்ணீர் மழையாகப் பொழிதலுடன் கடவுளைப் பிரார்த்தித்து திருநீறுதரித்து அனுப்பினார்கள். அங்ஙனம் விடைப் பெற்றுக் கொண்டு வந்த ஐவரும் திருவருளைத் துணையாகவும், அறவொழுக்கத்தைச் செல்வமாகவும் கொண்டு வனத்தை நோக்கிப் பிரயாணமானார்கள்.

அத்தருணத்தில் அவர்கள் வனஞ்செல்வதையறிந்த மந்திரி முதலியவர்களும், குடிகளும் பின்பற்றி வந்து எம்பெருமக்களே! எங்களையெல்லாம் விட்டுப் பிரிய உங்களுக்கு மனமும் வந்ததோ? உங்களுடைய பிரிவையும் பொறுத்து யாங்களும் வாழ்வமோ! என்று ஓலமிட்டனர். அதனைக் கண்ட ஐவருள் தன் மார்த்தன் அவர்களை நோக்கி அன்பர்களே! சில ஆண்டுகள் கழித்து நாங்கள் வந்து விடுவோம். பெரியோர்களுடைய சேவைக்காகவே நாங்கள் வனவாசஞ் செய்யப் போகிறோம். இதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆதலால் நீங்கள் கவலை கொள்ள வேண்டாம் என்று அவர்களுக்கு வேண்டிய மட்டும் ஆறுதல் கூறி அவர்கள் பாலும் விடைப் பெற்றுக் கொண்டான். அப்பால் ஐவர்களும் பிரயாணமாகித் தென் திசை நோக்கி நாடு நகர், வனம் வனாந்தரங்களையெல்லாங் கடந்து சதுரகிரியிலுள்ள கும்பமலையின் சமீபமிருக்கும் ஓர் வனத்திற்றங்கி அன்றிரவு பொழுதைப் போக்கினர்.

மறுநாள் ஐவரும், அதிகாலையிலெழுந்து அவ்விடத்திலிருந்த, தண்கமலப் பொய்கையில் ஸ்நான வனுஷ்டானங்களை முடித்து, அநேக குன்றுகளையும், வரையாறுகளையும், கடந்து, வனக்கானல்களும், பூஞ்சோலைகளுஞ் சூழ்ந்திரா நின்ற, கும்பமலைக்குச் சென்று, ஆங்குப்புலித்தோ லாசனத்தில் ஞானபானுவை போல் திவ்யதேஜசோடு தவநிஷ்டை யி லெழுந்தருளியிருந்த அகத்திய முனிவரைக் கண்டு மிகுந்த உபசாரத்தோடு சாஷ்டாங்கமாக வணங்கிக் கைகட்டி வாய் பொத்திப் பயபக்தியோடு புகழ்ந்து நின்றனர். அப்போது கும்ப முனிவர் தம் கருணைத் திருக்கண்களால் கண்டு, அவர்களை ஆசீர்வதித்து அமரச் செய்து, நீங்கள் ஐவரும்

இங்கு என்ன காரணமாக வந்தீர்கள்? உங்களுடைய நகரம் யாது? நாமதேயமென்ன? என்று கேட்டருள, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள்.

சுவாமீ! நாங்களிருப்பது இராஜேந்திரபுரம், அந்நகரத்தரசனாகிய சுவேதமகாராஜனுடைய புத்திரனயான், இவன் என் சகோதரன். இங்கே நிற்கிற மங்கையர்களிருவரும் எங்கள் பத்தினிகள். அங்கே நிற்கிற மங்கையானவள், இன்னொரு சகோதரனும் அரசனுமாகிய வீரசேனனுடைய மனைவி. நாங்கனைவரும் இவ்விடத்தில் வாசஞ் செய்து கொண்டு தங்களைப் போன்ற மகருஷிகளிடம் உபதேசம் பெற்று சிவஞானத்தை அடையலாமென, வந்தோமென்று கூறியதைக் கேட்ட, அகத்திய முனிவர் ஐவரையும் நோக்கி நீங்கள் இவ்விடத்தில் மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதற்கு, நீண்ட நாளைக்கிருந்து வருவதென்றால் இது கூடாத காரியம், ஏனெனில் எங்களுடைய தவத்துக்கு இடையூறாகும். ஆனதனால் இச்சதுரகிரியில் எம்மைப் போன்ற மகருஷிகள் அநேகரிருக்கிறார்கள். அவ்வவ்விடங்களுக்குச் சென்று ஆங்காங்கு இருக்கின்ற மகருஷிகளிடத்தில் ஒவ்வொரு வருடமிருந்து உபதேசம் பெற்று அவ்வுபதேசத்தின்படி நடந்து கொள்ளுவீர்களாக.

ஆனாலும் இப்பொழுது நீங்கள் நம்மிடத்துக்கு வந்ததனால் இவ்விடத்திலும், ஒருவருடமிருந்து வேண்டிய தத்வார்த்த ஞானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள், என்று கூறி வீற்றிருக்கச் செய்து அன்பு பெருக ஐவர்களையும் நோக்கி, அன்பர்களே! நீங்கள் நல்ல காரியத்தை விரும்பி வந்தமைக்காக நாம் மகிழ்கின்றோம். ஆகையால் கூறுதும் கேண்மின்.

உலகத்திலே எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவியே சிறந்தது. அதிலும், தத்துவ ஞானத்தை விரும்பும் உத்தம பத்தினியோடு கூடித் தவத்தை நாடி வந்த நீங்கள் மிகச் சிறந்தவராவீர்கள், அத்தகைய நீங்கள் இனிமரவுரிதரித்துப் புல்லுகளினாலேயே செய்த பன்ன சாலைகள் ஐந்தும் அடுக்காகத் தனித்தனியமைத்து அதில் வாசஞ் செய்துவரல் வேண்டும். அன்றியும், நாட்டிலுண்ணத்தக்க உணவுகளை மறந்து காட்டிலுள்ள கனி, கிழங்கு, சரகு முதலியவற்றைப் புசித்தல் வேண்டும். தினந்தோறும் ஸ்நானஞ் செய்து பிராணாயாம அநுட்டான முதலியவற்றைச் சரியாய் நடத்திவரல் வேண்டும். இமிசை செய்யா திருத்தலே மேலான தருமமாகும். ஆகையால் எந்த உயிர்களையும், இமிசிக்கக் கூடாது. தத்தம்மா லியன்றவாறு பிறவுயிர்க்கு நன்மை செய்தலும் வேண்டும், பெரியோரைக் கண்ட விடத்து பயபக்தியுடன் அவர்களை வணங்கி மகிழ்வித்தல் வேண்டும். மண், பெண், பொன் என்னும் மூவாசைக்களையும் அறவொழித்து மேலான பரம்பொருள் ஒன்றனையே நாடி நிற்றல் வேண்டும். தன்னயங் கருதாதபடி பொறுமை, பேராசையின்மை, கோபமின்மம, இன்சொல் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். இவ்வித ஒழுக்கங்களை யுடையவர்களே, சிவஞானத்தை அதிசீக்கிரமாக அடைவார்கள். அத்தகைய நற்செயல்களெல்லாம் அமையப் பெற்ற நீங்கள் நல்லன்புடையவர்களாகி, உயிருக்குயிரா யிருக்கும் சிவபெருமான் றிருவருள் நாட்டம் பதியப்பெறுவதே மேலான சிவஞான மாகும். அதை எவ்வழியாக அடைய வேண்டுமெனில், தீட்சை பெற்று அவ்வழியொழுகியே அடைய

வேண்டும். தீட்சையின் விவரத்தை நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன். அன்புடன் கேட்பீர்களாக. யோக ஞான தவங்களுக்கெல்லாம் மூலமாகிய தசதீட்சையாவது:- ஐம்புலனையும் அடக்கி, நாவினுனியை உண்ணாக்கிற் செலுத்திப் பல்லோடுபல்லைச் சேர்க்காது வாசியென்ற பிராணவாயுவால், பிராணாயாமமாகிய ரேசகம், பூரகம், கும்பக முதலியவற்றை முறையோடு பத்து வகையாகச் செய்வது தசதீக்ஷையாகும். அதன் விவரமாவது :- முதற் றீட்சையில் உரோமத் துவாரங்கள் வழியாகக் கெட்ட நீர்கள் வியர்வையாகக் கசியும். இரண்டாவது தீட்சையில் முத்தோஷமாகிய வாதபித்த சிலேத்தும தோஷங்கள் நீங்கும். மூன்றாவது தீட்சையில் - சர்ப்பந்தோலுரிப்பதுபோல் சரீரத்திற்றோலுரித லுண்டாகும். ஐந்தாவது தீட்சையில் - சட்டை கழன்று தேசஞ் சிவப்பு நிறமாகும், அச்சமயத்திலே உரோமங்கருக்கும்; பஞ்சமூர்த்திகளும் அவர்கள் வசமாகி நிற்பர். ஆறாவது தீட்சையில் - சுழிமுனை வாசல் திறந்து தூரதிருஷ்டி யுண்டாகும். ஏழாவது தீட்சையில் - சோதிருபமாகித் தேகம் தீபம்போற் பிரகாசிக்கும். எட்டாவது தீட்சையில் - சரீரத்தை உயரத் தூக்கும். ஒன்பதாவது தீட்சையில் - யோகம், ஞானம் விளங்கி அட்டமாசித்திகள் விளையாடிக் கொண்டிருப்பக் கைலாய தேகமுடையராய்த் தேவர்களும் ஏவல்புரிய வாழ்வர். பத்தாவது தீட்சையில் - தேகசித்தியாகி கத்தியூடாடுங் காற்று வடிவமாக விளங்குந் திருமேனியை யுடையவராவர். அவருக்கு மரணமில்லை. அவரே சஞ்சார சமாதியாளராய் ஆகாயத்திற் சஞ்சரிப்பர் என்று திருவாய் மலர்ந்தருளினர். அதைக் கேட்டிருந்த ஐவர்களும் எழுந்து வணங்கி விடைபெற்றுச் சென்று அவர் கூறியவாறு ஐந்தடுக்காகத் தனித்தனி பன்ன சாலைகளமைத்து, அவற்றிலிருந்து வாசிப் பழக்கத்தைச் செய்து கொண்டு வந்தார்கள்.

மற்றொரு நாள் தன்மார்த்தன் முதலான ஐவரும் நித்திய ஸ்நான வநுஷ்டானங்களை முடித்துத் தமது குருவாகிய அகத்திய மகா முனிவரைத் தரிசிக்கச் சென்றனர். சென்றவர்கள், அழகிய புலித்தோலாசனத்தில் வீற்றிருந்த முனிபுங்கவரைப் போற்றிப் புகழ்ந்து. மிகுந்த வணக்கத்துடன் நின்றனர். அப்போது அகத்தியமுனிவருந் தங் கிருபைக்கண்ணாற் குளிரப் பார்த்து அவர்களுக்கு ஆசீர்வசனங்கூறி ராஜபுத்திரர்களே! இவ்விடத்தி லிருங்களெனக் கையமர்த்தி யிருக்க விடங்காட்ட, முனிசிரேஷ் ரிட்ட கட்டளைப்படியே அவ் வைவரும் ஆங்கு வீற்றிருந்து பயபக்தியுடன் சுவாமிகள் திருவாக்கினின்றென்ன வருமோ என்ற ஆசையோடு கைகட்டி வாய்பொத்திச் சித்திரப்பாவைபோலசையாது முனிவரை மனப்பூர்வமாக நோக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது குறுமுனிவராகிய அகத்தியரும் அவர்களை நோக்கி மக்களே! உலகிற் பெறுதற்கரிய மானிட சரீரம் பெற்றவர்க்கு மும்மையிலும் நன்மை தருவது வைராக்கியமும் ஜீவகாருண்யமுமேயாம். அத்தகைய வைராக்கிய ஜீவகாருண்முடையவனே, சிவபெருமானுடைய திருவருளுக் குரியவனாவன்.

அவ்வுண்மையை முன்னம் கேவலம் அற்பப்பிராணியாகிய ஓர் புறாவின் பொருட்டு சூரியகுலத்தரசனும், தன்னுயிர்போல் மன்னுயிரை நினைத்து வந்தவனுமான சிபிச்சக்கரவர்த்தி என்பவன் தன்னை அபயமென்றடைந்த புறாவை ரட்சிக்கும்பொருட்டு தன்னுடலிற் சதையை யறுத்துத் தராசினில் வைத்து மோக்ஷ வீட்டைப்பெற்ற சரித்திரம் நன்றாக விளங்குமெனக் கூற, அதனைக் கேட்டிருந்து

தன்மார்த்தன் முதலிய ஐவரும் முனிவரை வணங்கி கருணாகரமூர்த்தியாகிய சுவாமிகளே! வைராக்கிய காருண்யங்களை யுடைமையால் சிறந்த பேற்றையடைந்த அந்தச் சிபிச் சக்கரவர்த்தி சரித்திரத்தைக் கூறியருள வேண்டுமென்று வேண்ட, அதற்கு அகத்தியமுனிவர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

ஆதிகாலத்தில் அன்பு, அருள், பொறை, அறிவு முதலிய நல்லொழுக்கமெல்லாம் நிறையப்பெற்று விளங்கிய குடிகள் வசிக்கப் பெற்றதும், நீர்வளம் நிலவளம் பொருந்தியிருப்பதுமான அயோத்திமா நகரில், உத்தம குணமும், திடசித்தமும், வைராக்கியமும், ஜீவகாருண்யமும் உடையவனான சிபிச்சக்கரவர்த்தி என்னுமரசன் நீதிவழுவாது அரசுபுரிந்துவந்தான். அதன் மறுமைப் பயனாகிய பீடுயர் வாழ்வையடையக்கருதி இராச்சியத்தை மந்திரியிடத்தில் ஒப்புவித்து நாட்டை விடுத்துக் காட்டில் வந்து அரனை நோக்கி அன்னாகார மில்லாமலும், வேறு விடயங்களில் தன்னறிவைச்செலுத்தாமலும், அரிய தவத்தைச் செய்து கொண்டிருந்தான் அப்பொழுது உமாசமேதரான சிவபெருமானுடைய திருவருளினாக் ஞையின்படி அமராபுரிக் கரசனான தேவேந்திரன், அரசனது மனவன்மையைச் சோதிக்கும் பொருட்டுத் தான், ஒரு வேடுவனாக உருவங்கொண்டு, அக்கினி தேவனையழைத்து ஓர் புறாவாக உருக்கொண்டு தன் கூட வரும்படி செய்து பூலோகத்துக்கு வந்தான். அப்பால் அப்புறாவை அதிக தூரத்திலிருந்து துரத்திக் கொண்டு வருவதுபோல் அவ்வேடன் வரப் புறாவனாது வேடனுக்குப் பயந்து ஓடுவது போலப் பாவனை செய்து சிறகுகளை வீசிக்கொண்டு துடிதுடித்துக் கீழே விழுந்து மீண்டும் பறந்து ஆங்குத் தவநிட்டையி லமர்ந்திருந்த சிபிச் சக்கிரவர்த்தியின் மடியில், அபயம், அபயம்; என்னைக் காத்தருளவேண்டுமென்று பரிதபித்துக் கதறிக் கூவிக்கொண்டு வந்து வீழ்ந்தது.

அதைக்கண்ட, சிபிச்சக்கரவர்த்தியோ! கேவலம் இது ஓர் அற்பஜீவ ஜெந்துவாகிய பட்சிதானே என்று நினையாது, அதுவுந்தன்னைப்போல் ஓர் உயிரே என்றெண்ணி, மனம் வருந்திப் பயத்தினால் நடுநடுக்கமுற்றிருக்கிற அப்புறாவைத் தன்னழகிய கரத்திலேந்தித் தடவிக்கொடுத்து உச்சிமோந்து ஆயாசத்தைத் தீர்த்து நீ சற்றுங்கலங்காதே. உன்னுயிரைக் காப்பேன். என உறுதிமொழி கூறி மடியிலணைத்து வைத்துக்கொண்டிருந்தான். அப்போது வேடுவன் தன் கரத்திற்பிடித்த வில்லிற்றொடுக்கும் பாணங்களுடனே ஓடோடியும்வந்து சக்கரவர்த்தியிடத்தில் புறாயிருப்பதைப்பார்த்து அரசே! அடியேனொரு வேடுவன். இவ்வனங்களிலுள்ள பட்சிகளையும், மிருகங்களையும், வேட்டயாடிப் புசித்து, ஜீவிப்பதே என்குல சுபாவம், என்பது தாங்களறிந்ததே. ஆனாலும் வழக்கம்போல் இன்றையத் தினமுமும், இவ்விடத்தில் வந்து ஜீவஜெந்துக்கள் யாதொன்றும் அகப்படாமைபற்றி வருத்தமுற்றுச் சுற்றிப்பார்த்து வருகையில், தற்சமயத்தில் தங்களது மடிமேலிருக்கிற இப்புறாவானது வரக்கண்டு உடனே வில்லில் நாணேற்றிப் பாணத்தைவிட இப்புறா அப்பாணக்குறிக்குத்தப்பி மிகுந்த தூரம் ஓடிப் போவதைத் தெரிந்த நான் விடாது பின்தொடர்ந்துவரக் கடைசியாகத் தங்களிடத்தில் வந்து சேர்ந்தது. ஆதலால் என் புறாவைக் கொடுக்கவேண்டும். யானும் என் பெண்டுபிள்ளைகளும், பசியினால் வருந்துகின்றோம் எனக் கேட்டான். அதற்கு அரசன் ஆ! ஆ! இப்புறாவானது பயத்தினால் நடுக்கமுற்று நம்மைச் சரணாகதியென உரத்துக் கூவிக்கொண்டு வந்து வீழ்ந்தது.

இதை; இவ்வேடன் வந்து கொடுக்கவேண்டுமென்கிறானே! அந்தோ! ஆபத்தான காலத்தில் தன்னைச் சரணாகதியடைந்த வோர் ஜீவனை எவன் அப்பொழுது சோரவிடுகிறானோ அவனைப்போற் கொடியமாபாவிகள் உலகத்தில் ஒருவருமில்லையென வேதங்கள் முறையிடுகின்றனவே. அதனை நாம் தெரிந்திருந்தும், இப்புறாவை வேடனுக்குக் கொடுத்தால் நம்மை உலகம் என்ன சொல்லும். இவன் ஜீவகாருண்யமில்லாதவன் என்றல்லவோ தூற்றும். அன்றியும், மீளா நரகத்திற்கும், ஆளாய்விடுவோமே! என்றெல்லாம் எண்ணமுற்றவனாகி அக்கான வேடுவனை நோக்கி, அடா வேடா! இச்சிறிய வுருவை யடையபுறா, உன் பெண்டு பிள்ளைகளது பசியையாற்றுமோ? அன்றியும் இப்புள் தன் ஜீவனைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு நடுநடுங்கிய பயத்தோடு தஞ்சமென என்னிடத்தில் ஓடிவந்தடைந்தது. அப்படி வந்த புறாவை யான் உன்னிடங்கொடுப்பது நன்றல்ல. உனக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுக்கிறேன். பெற்றுக்கொண்டு போவென்று சொல்ல, அதைக் கேட்ட வேடுவன் அரசே! என்னைப் பசிதாகத்தோடு இத்தனைதூரம் அலைந்து திரியும்படி செய்த இப்புறாவைத் தவிர வேறு என்ன கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளேன். இப்புறாவைக் கொடுத்தாற் கொடுக்கவேண்டும்; பசிப்பிணியால் வருந்தும் பாவத்தை நீரேற்றுக் கொள்ள வேண்டும். அல்லது என்னை மனத்திருப்தியோடு அனுப்பப வேண்டுமானால் இப்புறாவைக் கொடுக்க வேண்டும். இவ்விரண்டுமல்லாமல் தாங்கள் மௌன முற்றிருப்பதில் எனக்குப் பசிப்பிணியாயிருக்கிறது. ஆகையால் ஏதாவது ஒரு சீவனுக்கு உதவி செய்யக் கேட்டுக்கொள்கிறனென்று இரங்கிக் கேட்க, அதற்கு அரசன் அடாவேடா! இப்போது ஒரு சீவனுக்கு உதவி செய்வதில் யாதொரு பிரயோசனமுமில்லை, அன்றியும், இப்புறாவை உன்வசம் கொடுக்கவுமாட்டேன். புறாவுக்குப் பிரதியாக எனது சரீரத்தின் மாமிசத்தையாகிலும், அறுத்துக் கொடுக்கிறேன், எனக் கூறினான். அதைக் கேட்ட தேவேந்திரன் இதுதான் சமயமென்று நினைத்து அரசே! இப்பொழுது தாங்கள் கூறியபடி இப்புறாவின் எடைக்கு நிறுத்துத் தங்கள் சரீர மாமிசத்தையாவது கொடுத்தனுப்புங்களெனக்கூற, அதற்கு அரசன் சொல்லொணாப் புளகாங்கிதமடைந்து இத்தேக மாமிசத்திற்காவ திணாங்கினானே என்று உள்ளன்புகொண்டு நானிது காலம்வரை தவம்புரிந்தும் ஆணவமலத்தாற் பீடிக்கப்பட்டிருக்கின்ற இந்நாற்றச் சரீரத்தை விடுத்துப் புறாவைக் காப்பாற்றுதலின் மூலமாய்ப் புகழுடம்பைப் பெறுவேன் என எண்ணித் தராசு கொண்டுவரச் செய்து அதன் ஒரு தட்டில் புறாவை வைத்து மற்றொரு தட்டில் சக்கரவர்த்தி தன் தேகமாமிசத்தைச் சிறிது சிறிதாக அறுத்துவைக்கவும் புறாவாகிய அக்கினிபகவானுடைய காவடத்தால் நிறை சரியாக வரவில்லை. வராததனால் மாமிசங்களையெல்லாம் அறுத்து அறுத்து வைக்க அப்போதும் சரிவராதது கண்டு ஆச்சரியமுற்று நிற்கையில் திருவருட் செயலால் ஓர் துணிவுண்டாகி இனி யானே தட்டிலேறி உட்காருகிறேனென்று எலும்புச் சரீரத்தோடு அந்தத் தட்டில் ஏறி உட்கார்ந்தான். நிறையுஞ் சரியாகவிருந்தது. இறைவனும் உமாதேவியுடன் காட்சிதந்தருளினான். அப்பொழுது அவ்வனத்திலிருக்கிற தவமுனிவர் பலரும் அதிக ஆச்சரியமுற்றனர். ஆகாயவாசிகள் பூமாரி பொழிந்தனர். அச்சமயத்தில் புறாவாகவிருந்த அக்கினிதேவனும் வேடனாயிருந்த தேவேந்திரனும் மறைந்து தன்தன் சுயரூபத்தோடு நின்றார்கள். திடசித்தவைராக்கிய சீவகாருண்யமுடைய

சிபிசக்கரவர்த்தியும் பழைய வடிவமுண்டாகப் பெற்றுத் தராசைவிட்டுக் கீழிறங்கிச் சிவபெருமானைக் கண்டு வணங்கித் தோத்திரிக்க, அரனும் சக்கரவர்த்தியை வாழ்த்தித் தன்னருளால் சோதித்தறிந்த விஷயங்களனைத்தையும் தெரிவித்து நீ எக்காலமும் புகழுடம்பை நாட்டி இறவா நிலைமை யடைவாயென, நல்வாக்களித்து வேண்டிய வரங்களையுமீந்து, கைலைக்குச் சென்றான். மற்றவரும் சக்கரவர்த்தியை வாழ்த்தி அவரவர்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

என்று அகத்திய முனிவர் கூறுதலும், அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! சிவபெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமாகவேண்டுவதற்கு உதாரணமாக வைராக்கிய சித்தத்தையும், சீவகாருண்யத்தையு முடையவனான சிபிச்சக்கரவர்த்தியினுடைய புண்ணிய சரித்திரத்தைத் தங்களிடங் கேட்டு அந்நிலையை யடைந்தோம் என்று சொல்லினர். அதைக் கேட்ட அகத்திய முனிவர் ஐவர்களே, இறவாநிலையையடைதற்கு உங்களிடம் திடசித்த வைராக்கிய சீவகாருண்யமிருந்தாலும், முதலிற்றேகத்தைக் காய கற்பங்களாற் சித்தி செய்து கொள்ள வேண்டுவது அவசியமென் றருளிச் செய்தனர். அதைக் கேட்ட தன் மார்த்தன் முதலானவர்கள் சுவாமீ! கற்ப மென்பது என்ன? அதை எவரெவர்கள் புசித்திருக்கிறார்கள்? அவைகளை விவரமாக அருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க, அதற்கு முனீஸ்வரர் "ஐவர்களே! கற்பமென்பது, பல மூலிகைகளாலும், முப்புச் சத்துக்களாலும் முறையோடு செய்த அவிழ்தமாகும். அதனைப் பாகந்தவறாது புசித்து வந்தால் எப்பொழுதும் முப்புவராமற் செய்து கொள்ளலாம். கற்பம் பல வகையுண்டு, அக்கற்பங்களை உலகத்தில் எம்போன்ற முனிவர்களுள் நந்தீஸ்வரர் நூறு கற்பங்களையும், போக முனிவர் நாற்பத்து நான்கு கற்பங்களையும், கொங்கணர் பதினாறு கற்பங்களையும், திருமூலர் அறுபத்தாறு கற்பங்களையும், கோரக்கர் தொண்ணூற்றாறு கற்பங்களையும் உரோமருஷி - மச்சமுனி – இராமதேவர் ஆகிய இம்மூவரும், முறையே பதினொரு கற்பங்களையும் புசித்தார்கள். யாம் நூறு கற்பங்களையுண்டோம். உங்களால் அத்தனை கற்பகங்களையும் உட்கொள்ள முடியாது. ஆகையால் நீங்கள் எத்தனை கற்பங்கள் உட்கொள்ள முடியுமோ அத்தனையுஞ் சிறிது சிறுதாகப் புசித்துக் காயசித்தி செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு அக்கற்ப மூலிகைகள் இருக்கிறதானத்தையும் கூறுகிறேன், கேளுங்கள். மகத்துவ மிகுந்த இச்சதுரகிரிவனங்களிற் கையாந்த கரையிலை என்றொரு மூலிகை இருக்கிறது. அதனைப் பிடுங்கி வந்துமைபோலரைத்து ஆவின் நெய்யிற் குழப்பிக் கொதிக்க வைத்துச் சிவந்த பதத்திலிறக்கிக் காலை நேரத்தில் வலக்கைப் பெருவிரலிற்றொட்டு உள்நாக்கின் மேல் வாசலிற்றடவிவரக் குகை வாசல் திறக்கும். தேகமும் சித்தியாகும். மற்றொரு முறையாவது, அந்தக் கையாந்தகரை மூலிகைக்குப் பக்கத்தில் சோதிப்புல் என்றொரு மூலிகையுண்டு, அச்சோதிப்புல்லானது பார்வைக்கு மலைப் புல்லைப் போலும், சிறிது மஞ்சள் நிறமாயுமிருக்கும். அது நான்கு விரலளவுக்கு மேல் வளராது.

அம்மூலிகையைச் சாபம் நீக்கிச் சமூலத்துடன் பிடுங்கி வந்து இரவு தண்ணீரிலிட்டுப் பார்த்தால் தீபம் போற் பிரகாசிக்கும். அதைக் கவனித்து அப்புல்லை

ஆவின் பாலிற் போட்டால் இரத்த நிறமாக வரும். அப்போது ஒரு கழஞ்சு சூதம் அதனோடு சேர்த்து நூறு எருமுட்டையிற் புடமிட, அச்சூதங் கட்டியாய் விடும். பின்னதைச் செந்தூரமாக்கி வெள்ளியிற் கொடுக்க, ஏமமாகும். அந்த ஏமத்தைப் பற்பமாக்கி நெய்யிற் குழப்பிப் புசித்துவரத் தேக சித்தியாகும், என்று திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட அவரும், முனிவரை வணங்கி விடை பெற்றுத் தங்களது பன்ன சாலையிற் சென்று அவர் கூறியவாறு காயகற்பங்களைப் புசித்துக் கொண்டும். தவயோக ஞானங்களை யப்பியாசித்துக் கொண்டும் வந்தார்கள்.

இவ்வண்ணம் நிகழும் நாள்களில், ஒரு நாள் வழிப்போக்கிருவர் பசியினால் மனமிகவாடிக் கால் தள்ளாடி ஐவருடைய பன்னசாலையின் முன்பாக வந்து திடீரென்றுப் பூமியில் வீழ்ந்து மயக்க முற்றனர். அதைக் கண்ட தன்மார்த்தனும், சூரசேனனும், ஓடோடியுஞ் சென்று மயக்கமுற்றுக் கீழே விழுந்து கிடக்கின்ற அவ்விருவரையும் பார்த்து ஐயா! நீங்கள் ஈங்கு இவ்வித மயக்கத்தோடு வரவேண்டிய காரணமென்ன என்று கேட்க, அதற்கு அவர்கள் ஐவரையும் நோக்கி, மெல்லிய குரலோடு முனிவர்களே! நாங்கள் வெகு தூரத்திலிருந்து இவ்விடத்தில் சுந்தரமகாலிங்க சுவாமியைத் தரிசிக்க வேண்டி வரும் வழியில் ஐந்து தினங்களாக அன்னாகாரமில்லாது வந்ததனால் இவ்வித மயக்கத்தை யடைய லாயினோம். இனி வார்த்தையாடுதற்கு நாவுமெழாது போற்றெரிகிறது. பசியுமிகுதியாகிறது. ஆனதா லிச்ச மையத்தில் சிறிது அன்னங்கொடுத் துதவிசெய்தால் மிக்க நலமாகும். எங்களுடைய மயக்கமுந்தீரும். அல்லாவிடில் இன்னுஞ் சிறிது நேரத்துக்குள் ஜீவன்பிரிந்து விடும், என்று கூறியதைக் கேட்ட ஐவரும் ஐயா! நாங்கள் தவத்தைக் கைக்கொண்டவர்க ளாதலால், எங்களிடம் அன்னங்கிடையாது. காய் கனி முதலியவைகளிருக்கின்றன. உண்பீர்கள் எனவுரைப்ப, அதற்கவ்விருவரும் எங்களுக்கு அன்னத்தைத்தவிர மற்றொன்றும் வேண்டியதில்லை யெனப்புகல, அவ்வார்த்தையைக் கேட்ட ஐவரும் இவ்வனத்திலென்னத்துக் கென் செய்வோமென ஏங்கி மனவருத்த முற்றவராய் அகத்திய முனிவரிடத்திற் சென்று, அவரை வணங்கி இது செய்தியைத் தெரிவித்து நிற்க, அதற்கு முனிவர், சுவர்ணலிங்கமொன்றைக் கொடுத்து இவ்விலிங்கத்தை நீங்கள் சுத்தமான இடத்தில் வைத்துப் பூசித்தாலும், மானத ஜெபமாகச் செபித்தாலும், உங்கள் மனோபீஷ்டப்படி நீங்கள் வேண்டியவற்றையெல்லாம் அதுதரும் என்று கூறிப் பின்னும் சொல்லுவார். நீங்கள் நம்மிடத்துக்கு வந்து ஒருவருடகால மாகிறது. இனி மேலிவ் வனத்திற்குப் பக்கத்திலிருக்கிற போக முனிவர் வனத்துக்குச் சென்று ஆங்கு அவரிடம் வேண்டிய ஞானோபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள் என்று விடைகொடுத்துத்தம் பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை நோக்கி, சீடனே! இவ்வைவர்களையு மழைத்துச் சென்று போகமுனிவரிடத்தில் விடுத்துவருவாய் என்றளுதலும், அப்படியே சீடனுடன் ஐவரும் முனிவரைப் பன்முறை வணங்கி விடைபெற்றுத் தங்கள் பன்னசாலைக்கு வந்து முனிவர் கொடுத்த சுவர்ணலிங்கத்தை விதிப்படி பூசித்து அறுசுவையோடு கூடிய அன்னம் வரவேண்டுமென நினைக்க உடனே சிவபெருமான் றிருவருளால் அவர்கள் வேண்டியவாறே ஆங்கு ஒரு கணம் கொண்டுவந்துபடைக்க, அதனைக் கண்ட இவரும் சிவபெருமானைவாழ்த்தி மனமகிழ்ச்சியுடையராய் அவ்விடத்தில் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து கிதுக்கிறவழிப்பிரயாணிக ளிருவரையும் அச்சாதத்தைப் புசிக்கும்படி



ஸ்ரீ சந்தன மகாலிங்கம் சதுரகிரி







ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் திருக்கோயில்
(முன்புறம்)




பைரவர் ரூபத்தில் சித்தர்கள் உலா வருவதாக ஐதீகம்



தபசு குகை




சதுரகிரி மலையில் ஸ்ரீ வெள்ளை விநாயகர்



நவக்கிரக கல்



ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் வெள்ளிக்காப்பு



இரட்டை மகாலிங்கம்



சதுரகிரி மலைவழி பக்தர்கள் யாத்திரை



சதுரகிரி அடிவாரம் தாணிப்பாறை
பஸ் நிற்கும் இடம்



யாத்திரை செல்லும் பக்தர்கள்



இரட்டை மகாலிங்கம்



தபசு குகையிலிருந்து



சதுரகிரி ஸ்ரீ சுந்தர மகாலிங்க தரிசனம் செய்ய பக்தர்கள் நுழைவு வாயில்



கோரக்கர் குகையில் தியானம்

செய்து அவர்களுடைய மயக்கந்தீர்ந்த பின்னர் அனுப்புவித்தனர். அப்பால் இவரும் அகத்திய முனி சீடருடன் பிரயாணமாகிப் போகர்வன ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்கள்.

எனச்சாணாங்கி முனிவர் அருளிச் செய்ததைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமி! மகாநுபவராகிய அகத்திய முனிவருடைய ஆசிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும், வேதாந்த ஞானோப தேசங்களையும், காயகற்பக மூலிகைகளுடைய முறைகளையும், கேட்டுச் சொல்லொணாத பக்தியாகிய கடலில் மூழ்கி ஞானமாகிய கரையை அடைந்தோம். ஆனால் சுவாமீ! அகத்திய முனிவர் ஐவருக்கும் ஐந்துலிங்கங்கள் கொடுத்தனரா? அல்லது ஒரே லிங்கந்தான் கொடுத்தனரா? ஒரே லிங்கமாயின் ஐவரும் பூசனை புரிவது எப்படி? இவ்விவரங்களை எங்களுக்கு ஐயமறத் தெரிவித்தல் வேண்டும்? என நாகார்ச்சுனாதி முனிவர்கள் கேட்க, அதற்குச் சாணாங்கி முனிவர், அன்பர்களே! நீவிர் நன்று வினாவினீர். அகத்திய முனிவர் கொடுத்த சுவர்ணலிங்கம் ஒன்றே; அதனைப் பெற்றது தன்மார்த்தானே; அப்படியிருந்தாலும் அன்போடு பூசித்துத் தியானிக்கும் உங்கள் மனோபீஷ்டப்படி வேண்டுவனவற்றை யெல்லாம் இவ்விலிங்கந்தருமென்று அகத்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளினமையாலும், மூர்த்தி ஒருவனேயாயிருந்தாலும் ஐவருக்கும் அந்த சுவர்ணலிங்கப் பெருமான் அருள் செய்வாராயினர். தன் மார்த்தன் பூசைப்பெட்டியில் எப்பொழுதும் அச்சிவலிங்கமிருக்கும், பூசிக்கும்பொழுது ஐவரும் சேவித்து உள்ளத்திற் கொண்டு தியானித்துவருவர். ஆகையால் தியானத்தால் ஐவரும் பயன்பெறுவர். என்று கூறிய சாணாங்கி முனிவர் திருவாய்மொழிகளைக் கேட்ட நாகார்ச்சுனாதி முனிவர்கள் அகமகிழ்கூர்ந்து இனி, போக மகாமுனிவரது ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும், ஞானகற்ப முறைகளையும், கூறியருள வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கிமுனிவர் சொல்லுவாராயினர்.

பதினான்காவது,
அகத்தியச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
பதினைந்தாவது

போகமகாருஷி சருக்கம்

இரண்டாவது வனம்

விரிந்த புகழார் சதுரகிரி மேவும் போகர் வனந்தனிலே
தெரிந்த ஞான தன்மார்த்தன் தெளிந்த மற்றை நல்வருடன்
புரிந்த தவத்தாற் சென்றதுவும் போகர் கண்ணன் கதையுரைத்தே
பரிந்த வன்பாற் பத்தியினைப் பகர்ந்த பண்பும் பகர்ந்திடுவாம்.

கேளும் முனி சிரேட்டரே! அகத்திய முனிவர் சீடனும், தன்மார்த்தன் முதலான ஐவரும், பிரயாணமாகி அநேக வனங்களையும், மலை யாறுகளையும கடந்து, முனீஸ்வரன் எல்லையைச் சேர்ந்து படிவெட்டிப் பாதை வழியே சென்று காற்றாடிமேடையிற்றங்கி, ஆங்கு சற்றிளைப்பாறியிருந்து, அப்பால் கொடைக்காரன் கல்லும், பல்லக்கு முடங்கியையும், கௌவுண்டின்னிய நதியிற் பிரிந்து வருகின்ற கங்கணவாற்றையுந் தாண்டிக் குளிராட்டிப் பொய்கை போய்ச் சேர்ந்து, அப்பொய்கையிற் றீர்த்தமாடி அதன்பின்பு தென்மேற்குத் திசையிலிருக்கிற அழகிய பூஞ்சோலைகள் சூழ்ந்த போகமகாமுனிவர் வனத்தைக் கண்டு உட்சென்று அங்குத் தம் ஆசிரமத்திற் புலித்தோலா சனத்தில் ஞானசூரியன்போல் திவ்விய முகதேஜசோடு எழுந்தருளியிருந்த போகமகாமுனிவரை நெடிய உடல் நிலத்துற நமஸ்காரித்துக் கை கட்டி வாய்பொத்திப் பயபக்தியோடு நின்றனர். அத்தருணத்தில் முனிவருந்தம் கிருபைக்கண்ணால் அன்பொழுகப் பார்த்து அவர்களை யாசீர்வதித்து அகத்தியருடைய சீடனால் அந்த ஐவருடைய சமாச்சாரங்கள் முழுதுந் தெரிந்து, அச்சீடனை வழியனுப்பிய பின்னர் தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி இராஜபுத்திரர்களே! இவ்விடமிருங்களெனக் கையமர்த்தி இருக்கவிடங்காட்ட முனிசிரேட்டரிட்ட கட்டளையின்படியே ஆங்கு ஐவரும் வீற்றிருந்து முனிவரதுறிரு வாக்கினின் றென்ன வருமோ, என்ற ஆர்வத்தை வகித்தவராகிச் சித்திரப்பாலையின் அத்தகவடங்கி, அசையாது முனிவரை மனப்பூர்வமாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது சகலவேதசாஸ்திர வாதவைத்தியோக ஞானங்களை யெல்லாந் தெரிந்த போகமகாமுனிவர், அவர்களை நோக்கி மக்களே! நீங்க ளிவ்வனத்தி லெத்தனை நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷயம் உங்களுக்குத் தெரிய வேண்டும்? என்று கேட்க, அதற்கு ஐவரும் சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருட காலமிருந்து புண்ணிய சரித்திரங்களையும், ஞானோ

பதேசங்களையும் காயகற்ப முறைகளையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டாகத் தங்களிடம் வந்தோம்.

என்று மிகப்பணிவோடு கூற, அவ்வார்த்தையைக் கேட்ட முனிவர், அப்படியானால் நீங்கள் இதன் நேர் மேற்குத் திசையில் ஐந்தடுக்காகத் தனித்தனிப் பன்ன சாலையமைத்து அவற்றில் வாசஞ்செய்துவருவீர்களென அருளிச் செய்ய, அப்படியே ஐந்தடுக்காகப் பன்னசாலையமைத்து வாசஞ் செய்து கொண்டு முனிவரிடத்தில் வேதாந்த ஞானோபதேசங்களைக் கேட்டுவரு நாள்களில் ஒருநாள் போகமகா முனிவர் ஐவர்களையும் நோக்கிப் புத்திரர்களே! நீங்கள் தவயோக தத்துவ ஞானானு பூதியை அடையவேண்டுமென்றால், பக்தி என்பது ஒன்றுவேண்டும். பக்தியென்பது, அன்பு என்பதும் ஒருபொருட் சொற்களாகும். அப்பக்தி அல்லது அன்பு என்பது உள்ள நெகிழ்ச்சி எனப்பெறும். அதனால் பற்றப்படு பொருள்களின் றன்மைக்கேற்ப அதனைப்பல பெயர்களால் உலகத்தார் வழங்குவர். அதாவது அடி மைகளிடத்துச் செல்லும் அன்பு-இரக்கம் அல்லது தயை எனவும், நண்பரிடத்துச் செல்லும் அன்பு-நேயம் அல்லது நட்பெனவும், மக்களிடத்துச் செல்லும் அன்பு-ஆதரம் அல்லது காதலெனவும், மனைவியினிடத்துச் செல்லும் அன்பு-பற்று அல்லது காமமெனவும், தாய், தந்தை குரு ஆகிய இம்மூவரிடத்துஞ்செல்லும் அன்பு-நயப்பு அல்லது பேனல் எனவும், கடவுளிடத்துச் செல்லும் அன்பு-இடையறா அன்பு அல்லது உழுவல் எனவும், மரபுவழக்கில் வழங்கி வருகிறது. இங்கே கூறிய இரக்கம் முதலான பெயர்களெல்லாம் அன்பு கூறிய இரக்கம் முதலான பெயர்களெல்லாம் அன்பு என்பதன் வேறுபாடுகளேயாகும். அவ்வப்பொருள்களில் பற்றிநிற்கும் தகுதிக்கேற்ப உள்ள நெகிழ்ச்சியும் மனோபாவனையால் வெவ்வாறாகிப் பலதொழில்களை இயற்றாநிற்கும். அத்தகைய அன்பால் பற்றப்படும் பொருள் பலவாயிருப்பினும் அவற்றில் அது நெறியே செல்லு மாயின் ஒரு வழிப்பட்டுச் சிறந்து கடவுளிடத்தில் அன்பனைச் சேர்க்கக்கூடிய தாகவே நிகழும். அங்ஙனம் நிகழுவதே உண்மை அன்பாம். அது கடவுளின் வேறா காமையின் "அன்பே சிவம்" என்று பெரியோர்களாற் கொண்டாடப்பெறும் ஆகலின், அன்பினால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமும் சித்திக்கும். அவ்வன்பினாலேயே உத்தவன் என்னும் பெயரையுடைய ஒருவன் பரமபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி உபதேசத்தைப் பெற்று அருந்தவம்புரிந்து மோக்ஷத்தையடைந்தான். நீங்களும் அன்பு என்ற பக்தியைப் பூஷணமாகக் கொள்வீர்களாகில் மேலான தவயோக ஞானவாழ்வைப் பெறுவீர்கள் என்று கூறியருளியதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும், சுவாமி! அந்த உத்தவன் என்பவன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிடம் தத்துவ ஞானத்தைக் கேட்டுத் தவம்புரிந்து மோட்சிமடைந்த சரித்திரத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனக் கேட்க முனிவர் பெருமான் கூறுவாராயினர்.

ஐவர்களே! கிருஷ்ணபகவானுடைய திருவிளையாடல்கள் முழுவதும் நிறையப்பெற்ற ஸ்ரீமத் பாகவதம் ஒன்றுள்ளது. அப்பாகவதத்தை முன்னம் வேதங்களை எல்லாம் சிக்கறுத்த வேதவியாசமுனிவர் திருக்குமாரராகிய சுகப்பிரம்மரிஷியானவர், வெற்றியில் மிகுந்த அபிமன்யு மகாராஜாவின் குமாரன்

பரிசித்து வேந்தனுக்கு மொழிந்தருளுங்கால் யான் சமீபத்திலிருந்து கேட்டபடி உங்களுக்கு இப்பொழுது சொல்லுகிறேன் கவனமுற்றுக் கேட்பீர்களாக.

அதாவது, முன்னொரு காலத்தில் தேவர்களும் தவமுனிவர்களும் துன்புறும்படியாகக் கொடிய இராக்கதர்கள் உற்பவித்தனர். அதனாற் பொய்மையும், கொலையும், புலையும் மிகுந்தன. மழையில்லாது விளைவுகளும் குறைந்தன. ஜெபதபதானங்கள் மங்கின. இதையறிந்த பூமிதேவியானவள், மிகுந்த மனவருத்த முற்றுப் பாரம் பொறுக்க முடியாது பிரமன் உருத்திரன் முதலிய சகல தேவர்களிடத்திலுஞ்சென்று தன் குறைகளைக் கூறி முறையிட்டுப் பின்யாவரும், திருப்பாற் கடலுக்குச் சென்று ஆங்கு அனந்த சயனத்தில் அறிதுயில் கொள்வோனாகிய ஸ்ரீமந் நாராயணனைக்கண்டு ஆனந்தித்துப் பன்முறை வணங்கித் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டார்கள்.

அச்சமயத்தில் பசுந்துழாய் முடியோன் றண்ணருளானால் ஆகாயத்திலோர் அசரீரிவாக்குண்டாயிற்று. அவ்வாக்கியத்தினுட் பொருளை யின்னதென் றறியாது யாவரும் சூழ்நின்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அன்ன வாகனத்தோன் அவ்வாக்கியத்தின் அந்தரங்கப் பொருளைத் தெரிந்து தேவர்களே! எம்பெருமான் பூவுலகில், வசுதேவன் மனைவியாகிய கற்பில் மிகுத்த தேவகி என்பவளுக்குப் புத்திரனாகப் பிறந்து மூடர்களாகிய கொடிய அசுரர்களைச் சங்கரித்து உங்களைக் காப்பாற்றுகிறோமென்றும், நாமெல்லோரும் யதுகுலத்திற் சென்று செனிக்க வேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறான். என்று கூறிப் பூமிதேவி முதலானோர்களை யழைத்து வந்ததன் பின்பு அவரவர்கள் தத்தம்மிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பால் இவ்வுலகத்தை ஓர் குடையின் கீழாக நீதிவழுவாது அரசு புரிந்து யதுவம்சத்திற் பிறந்த குந்திபோஜனென்னும் இயற்பெயரையுடைய சூரசேன மகாராஜன் அருந்தவப்புத்திரனும், தெய்வப்பத்திமிகுந்த அரிதாகிய புகழுடையவனுமான, வசுதேவராஜன் வட மதுரை என்னும் அழகிய நகரை நீதிமுறை தவறாது செங்கோலோச்சி வருநாள்களில், ஒருநாள் உக்கிரசேன மகாராஜனுடைய சகோதரனாகிய தேவகன் அருந்தவப் புத்திரி தேவகியை அண்ணல், வசுதேவனுக்கு அவர்களுடைய தாய்தந்தையர்கள், அறந்தழைத்தோங்கச்சிறந்த திருமண முடிப்பித்து மூன்றாவது நாள் நகர்வலம் வருவதற்காக மணமக்களிருவரையு மிரதத்தி லாரோகணிக்கச் செய்து, தேவகியினுடன் பிறந்தவனான திடமிகு புயபலக் கஞ்சனென்போன், .இரத சாரதியாகவமரக் கரி, பரி, குடை, சுருட்டி, காலான முதலானோ ரிருபுறமுஞ் சூழ இரத மூர்ந்து நாரை வலமாக வரச்செய்கிற தருணத்தில் வானில் அசரீரியாக ஓர்வாக்குண்டாயிற்று. என்ன வென்றால், அடா கஞ்சனே! உன் தங்கையையும், அவன் கணவனையும் இரதத்திலேற்றி மங்களமாய் நகர்வலமாய்ச் சாரத்தியஞ் செய்து வருகின்றாயே? இந்தத் தேவகி வயிற்றிற் பிறக்கப் போகிற எட்டாவது குமாரனால், உனக்கு மரணம் சம்பவிக்கக் கூடும், இது நிச்சயம் என்பதே யாம்.

அவ்வுரையைச் செவிக் கொண்ட கஞ்சனானவன் உடனே கோபித்து உடை வாளையுருவிக் கரம் பற்றித் தேவகியை இந்நிமிடமே வெட்டுவேன் என ஆர்ப்பரித்து

அவள் சமீபத்திற் சென்று வெட்டுவதற்கு வாளை ஓங்க, அத்தருணத்தில் வசுதேவன் தடுத்துப் புயபலபராக்கிரம கஞ்சனே! உன் தங்கையைக் கொல்வது தகுதியல்ல. ஆனாலும் பொல்லாக் கொலைகள் புரிகின்ற கொலையாளரும், பெண்ணைக் கொல்லுவதால் கொடும்பழியும் பாவமும் உண்டாகுமென நினைத்து கொலை செய்யாதிருப்பார்கள். ஆகையால் ஸ்திரீஹத்தி செய்யலாகாது. எனப் பலபல நீதி வாக்கியங்களை யுரைத்துப் பின்னும் கூறுவான்.

அப்பா கஞ்சராஜனே! இவள் வயிற்றிலுற்பவிக்கிற குழந்தைகளைப் பிறந்தவுடனே உன்னிடங் கொண்டு வந்து ஒப்பு வித்து விடுவேன். நீ அக்குழந்தைகளை என்ன செய்தாலுஞ் சரியே, என்று கூறியதைக் கேட்ட, கஞ்சன் கோபந்தணிந்து மனந்தேறி வாளை யுறையிற் போட்டுக் கொண்டு இரதத்தை நடத்தித் தன் அரண்மனைக்கட் சேர்ந்து வசுதேவனையும் தேவகியையும் அவ்விடத்திலேயே யிருக்கும்படி உத்தரவு செய்தான்.

அவ்வுத்திரவின்படி இருவரும் மதனு மிரதியும்போற் சில காலம் வாழ்ந்திருக்கும் நாள்களில், தேவகி கருப்ப முற்றுப்பத்துத் திங்களுஞ் சென்றபின் ஓர் புத்திரனைப் பெற்றாள். அதைக்கண்ட வசுதேவன் முன்னங் கஞ்சனிடத்தில் தன் மனைவியைக் கொல்லாதிருக்கும் பொருட்டு கூறிய வார்த்தை பிறழா திருக்கும்படியாகக் கண்ணீர் ததும்பிய முகத்தோடு, அக்குழந்தையை எடுத்துச் சென்று கஞ்சனிடத்திற் கொடுக்க, அவன் குழந்தையை பார்த்து இதற்கு எட்டாவது குழந்தைதானே எனக்குச் சத்துரு. இக்குழந்தையினாலெனக்கு யாதொரு ஆபத்துமில்லை. ஆதலால் நீ ரெடுத்துச் செல்லும், என்று கூறிக் குழந்தையை வசுதேவனிடத்திற் கொடுக்க அவன் வாங்கிச் சென்று தன் மனைவி தேவகியிடத்திற் கொடுத்துக் கஞ்சன் கூறிய செய்திகளைத் தெரிவித்து அவளுடன் துக்கந்தீர்ந்து மனமகிழ் வடைந்திருந்தான்.

அப்பால் சிலநாட்சென்று இரண்டு வருடத்திற்கொரு குழந்தையாக ஐந்து குழந்தைகளைப் பெற்று அக்குழந்தைகளை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுகமாகப் பெற்றோர் வளர்த்து வந்தார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் நாரதமகா முனிவர், கஞ்சனிடத்திற் சென்று அவனுடைய பூர்வ வம்சவிர்த்தாந் தங்களை யறிவித்துப் பின்னுங் கூறுவார், கஞ்சமகா ராஜனே? நீ மாத்திரம் அசுர கூட்டத்தைச் சேர்ந்தவன். உன் தந்தை உக்கிரசேனனும் வசுதேவன் முதலானோர்களும் தேவகூட்டத்தைச் சாரந்தவர்கள். ஆகையால் ஸ்ரீமகா விஷ்ணுவானவர் பூமி பாரத்தைத் தீர்க்கும் பொருட்டும், தேவர் முனிவர் முதலியவர்களுக்கிரங்கிக் கருணை செய்யும் பொருட்டும், உனக்குச் சத்துருவாகவும் தேவகி வயிற்றின் உத்தம கருப்பத்தில் அவதாரஞ் செய்யப் போகின்றார். ஆன்தால் இனித் தேவகி வயிற்றிற் பிறக்கப் போகிற குழந்தையை நீ சங்கரித்தாயானாற் பிழைப்பாய். சங்கரியா விட்டாற் பிழைக்கமாட்டாய், என்று தெரிவித்துச் சென்றனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட கஞ்சனாவன் உடனே மிகக் கோபாவேசனாகி அநேக அசுரர்களையும் துட்ட அசுரர்களையுந் தனக்குச் சகாயமாகத் துணை சேர்த்துக் கொண்டு இதுநாள் வரை தேவகி பெற்ற ஆறு குழந்தைகளையும் வரவழைத்துக் கொன்றதோடு வசுதேவனையும், தேவகியையும்,

தந்தையாகிய உக்கிரசேனன் முதலான பெரியோர்கள் யாவரையுந் தன்னிடத்தில் தந்திரமாக வரவழைத்து, விலங்கிட்டுச் சிறைச் சாலையில் வைத்துத்தான் மகுடாபிஷேகஞ் செய்து கொண்டு அரசனாகி வடமதுரையை ஆண்டு வந்தான்.

இஃதிவ்வாறிக்கத் திருப்பாற்கடலிற் பள்ளி கொண்டருளிய விஷ்ணுவானவர் பூதேவி, தேவர் முதலானோர்களுடைய வேண்டுகோளுக் கிரங்கித் தம் சயனமாகிய ஆதிசேடனை யழைத்து நீ இப்பொழுதே பூலோகத்தின் கண் கொடிய அசுரனான கஞ்சன் அரசு புரிந்து வருகிற வடமதுரா புரிக்குச் சென்று அவன் தங்கை தேவகி வயிற்றிற் கருப்பமுறக்கடவை என்று ஆக்ஞாபித்து அனுப்பிவிட்டுப் பின் தம் பக்கத்திலிருக்கிற மாயையைநோக்கி மாயையே! ஆதிசேடன் பூலோகத்தில் வட மதுரையை ஆண்டு வருகிற கஞ்சனுடைய தங்கை தேவகி வயிற்றில் ஏழாவது கருப்பமாக நம் உத்தரவின்படி சென்று விளங்குகின்றான். இப்பொழுது அந்தக் கஞ்சனானவன் தேவகி வயிற்றில் செனிக்கிற சிசுக்களை யெல்லாம் அதம் பண்ணிக் கொண்டு வருகின்றான்.

ஆகையால் நீ இப்போதே யாங்குச்சென்று தேவகி வயிற்றிலிருக்கிற கருப்பத்தை எவர்க்குந் தோன்றாமல் உட்புகுந்து எடுத்து வசுதேவ னிரண்டாவது மனைவியானவளும், தற்சமயத்தில் அந்தக் கஞ்சனுக்குப்பயந்து நந்தகோன் மனையிற் சென்று வாழ்கின்றவளுமான உரோகணி வயிற்றிற் சேர்த்துவிடு. ஆங்கு யசோதை வயிற்றிலொரு பெண்மகவாய்க் கருப்பமுற்று நீ பிறப்பாயாக, நாம் தேவகி வயிற்றிலோர் ஆண்மகவாக வந்தவதரிப்போம்.

அந்த மகவை வசுதேவர் கோகுலத்து நந்தகோன் வீட்டிற்கொண்டுபோய்க் கிடத்திவிட்டு அவ்விடத்தில் பெண் மகவாகப்பிறக்கும் உன்னை எடுத்துக்கொண்டு வந்து வடமதுரையில் தேவகியிடத்திற் கிடத்திப் பின்னர் அவரே அம்மகவை எடுத்துக் கஞ்சனிடத்திற் சென்று பெண்மகவு பிறந்ததாகச் சொல்லிக் கொடுப்பார். அவன் உன்னைக் கரத்திற்பெற்றுத் தன் பகையை முடிக்க நினைத்துக் கொல்வதற்காகப் பாறையிலடிக்கத் துணியும் போது, அவனுடைய கரத்தினின்றுத் தப்பித்து ஆகாயத்தையடைந்து தெய்வத் தன்மையைப் பொருந்தி அவனை நிந்தித்துப் பேசிய பின்னர் அனைவோர்களாலும் பூசிக்கப்பெறுவதான சத்தியம்சமாய்த் துர்க்கையென்ற நாமநேயத்தை வகித்துப் புகழையடைவாய் என்று கூறியருளினார்.

அப்பால் அம்மாயை யானவள் அவ்விதமே நடந்து கொள்ளுகிறேனென, ஸ்ரீமகாவிஷ்ணு வினிடத்தில் உத்தரவு பெற்று வடமதுரைக்குச் சென்று தேவகி வயிற்றிலிருக்கிற ஏழாவது கருப்பத்தை எடுத்துப்போய் நந்தகோன் மனையிலிருக்கும் உரோகணி வயிற்றிற் சேர்ப்பித்துத் தேவகியின் ஏழாவது கர்ப்பம் அழிந்து போய் விட்டதெனப் பெயரை ஏற்படுத்தி விட்டாள். அதன் பின்னர் சலசலோசனான மாயவன் தேவகியினுடைய ஆலிலைபோன்ற வயிற்றினில் எட்டாவது கருப்பப்பமாக உருக்கொண்டனர்: அவ்வுருவைத் தாங்கிய தேவகிக்கு பத்து மாதமும் பூரணமானவுடன் அவள் வயிற்றினின்று மூர்த்தியானவர் ஆவணிமாதம் பானுவாரமும், அட்டமிதிதியிற்

உரோகணி நக்ஷத்திரமுங்கூடிய சுபயோக சுபதினத்தில் சதுர்ப புஜமுடையவராய், சங்கு சக்கரம் சாரங்கம் தண்டுவாள் ஆகிய பஞ்சாயுத தாரியாய், வனமாலை கௌத்துவாபாணம் மின்னற் சோதி மகுடந்துலங்க, பீதாம்பரம் மணி மகரகுண்டலங்கள் துலங்க, அழகிய திருமேனியராக உலகத்திற் சனித்தனர். அவ்வாறு செனித்த குழந்தையைத் தாய் தந்தையரிருவரும் கண்களிக்க கண்டதிசயித்துச் சொல்லொணாத மனமகிழ்ச்சியை யடைந்தவர்களாகி நீருண்டு கறுத்த மேகம்போன்றவனே! அரைவடங்கிண்கிணி பாதச்சிலம்பணிந்தவனே! மாயவனே ஆயவனே! ஆதவனே! மாதவனே! கேசவனே! முகுந்தனே! எங்கள் குலம் விளங்க உற்பவித்த பெருமானே! எனப்பல அழகிய நாமங்களைச் சொல்லித் தோத்திரித்து வாழ்த்திப்பத்தி நிறைந்த ஆனந்த பரவசராய் அக் குழந்தையாகிய வைகுண்டபதியை நோக்கி! ஐயனே! இப்பொழுது நாங்கள் துட்டக் கஞ்சனுடைய உத்தரவுக்குத் திகிலடைந்து நடுநடுங்கிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனதால் தேவரீர் இத்திருமேனியை மறைத்துச் சாதாரணமாக உலகத்திலுற்பவிக்கின்ற குழந்தை வடிவமாகவே இருக்கும்படி பிரார்த்திக்கின்றோம் என்று கூற, அதைக்கேட்ட பகவான் குறுநகை முகவசீகரத்தோடு தன் தாய்தந்தையர்களான தேவகியையும், வசுதேவனையும் நோக்கி எந்தையரே! உங்களிருவருக்குந் தெரியும் பொருட்டாக நம் சுயரூப அலங்கார ஆபரணங்களோ டுற்பவித்தோம். நீங்க ளினிமேல் யாதொன்றுக்கும் பயங்கொள்ள வேண்டுவதில்லை. ஆனாலும் இப்பொழுதே எம்மையெடுத்துச் சென்று, கோகுலத்தில் நந்தகோன் மனைவி அசோதையிடத்தில் விடுத்து, ஆங்கு இப்போது பெண் குழந்தையைப் பெற்று மயக்க முற்றிருக்கும் அவள் பாற்கிடக்கும் அப்பெண் குழந்தையை ஈங்குக்கொண்டு வந்து சேர்த்து விடல்வேண்டும். அதற்காகக் கஞ்சனா லேற்படுத்தப் பெற்ற உங்களுடைய கரவிலங்குகள், இவ்வறைக் கதவின் பூட்டுகள், முதலியவை யெல்லாந்தானே திறந்து கொள்ளும் படிக்கும், இவ்விடத்திற்காவல் புரிந்து கொண்டிருக்கிற் காவலர்களை உறங்கிக் கொண்டிருக்கும்படிக்குறம் நாம் செய்கின்றோம் என்று திருவாய் மலர்ந்தருளினர். அது கேட்டு வசுதேவனும், தேவகியும், தங்களிரு கண்களினின்றும், நீர் பெருகக் கோவிந்தனைக் கைத்தலத்தேந்திக் கனிவொடு கொஞ்சி எங்களுக்குக் குழந்தையாய் வாய்த்த இனியமொழியுடைய எம்பெருமானே! இனி நீ என்றைக்குக் குழந்தையாக எம்மிடம் வருவாய் என்று கேட்க, அதற்குக் குழந்தையாகிய பகவான் தாய் தந்தையரே! உங்களுக்கும் எமக்கும் மாற்றானாகிய அந்தக் கொடிய கஞ்சனைக் கொன்றதன் பின்னர் இவ்வுலக மெல்லாம் புகழ உங்களுக்குக் குமாரனாக வருகிறேன் என வாக்களித்துச் சிறுகுழந்தை வடிவமாயினர்.

அச்சமயத்தில் அவர்கள் பாதத்திற் பூட்டியிருந்த விலங்குகள் தெரித்தன. அறைக்கதவுகள் திறந்தன. காவலர் யாவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். இவைகளை எல்லாம் கவனித்த வசுதேவன் இலக்குமி சமேதனான நாரணன் உத்தரவின்படி தேவகியிடத்திலிருந்த மைந்தனை யெடுத்துக் கோகுலத்தை நோக்கிச் செல்லும்போது பனிநீ ரெனப் பெய்கின்ற மழைத்துளிகளைப் பகவானாகிய குழந்தையின் மேல் விழாதுபடி, ஆதிசேடன் தன் படங்க ளாயிரத்தையும், குடைபோற் பிடித்து வந்தான்.

பூத பிரேத பைசாசங்களை வரவொட்டாமற் சுற்றிலும், பஞ்சாயுதங்கள் காவலாக வந்தன. தன் புத்திரனுடைய ஒளிமிகுந்த முகக்காந்தியினால், இருள்வழி தெரிந்து மதிமங்காது நடந்து அச்சுதனைக் கொண்டு போம்பொழுது, யமுனாநதியும் அலைவிலகி அன்பாக வழிவிட்டது.

அப்பால் அதைக் கடந்து கோகுலத்தைச் சேர்ந்து நந்தகோபன் வீட்டில் நுழைந்து அங்கு யாவரும் நித்திரையிலிருப்பதையும், ஓர்புறம் அசோதை யானவள் பெண்மகவைப் பெற்று, மயக்கத்தா லயர்ந்து உறங்குவதையும் பார்த்து மிருதுவாக நடந்து அசோதையின் சமீபத்திற் சென்று தன்மைந்தனாகிய பகவானை அவள் அணையாடையின்மேற் கிடத்தி, அப்பெண்மகவை விரைந்தெடுத்துக்கொண்டு தன் மகனைப் பிரிந்து செல்ல மனம் வராது கன்றினை விட்டேகுங் கறவை போல் நின்றுருகித் திகைத்துப் பின்பொருவாறு தெளிந்து, வெளிவந்து விரைவாக நடந்து யமுனா நதியைக் கடந்து வடமதுரைக்கு வந்து சேர்ந்து காராக்கிரகத்துள் நுழைந்தவுடன், கதவுகளெல்லாம் முன்போலத் தாமே பந்தனம் பண்ணிக்கொண்டன. வசுதேவன் தான் எடுத்து வந்த குழந்தையைத் தேவகி கையிற் கொடுக்கச் சமீபத்திற் சென்றபோது இருவர்க்கும் முன் போட்டிருந்த விலங்குகள் பழையபடி தானே பூட்டிக்கொண்டன. அப்பால் வசுதேவனிடத்திலிருந்த குழந்தையைத் தேவகி வாங்கித் தன் கரத்தாற் றழுவும் போது அக்குழந்தை அழத்தொடங்கியது.

அவ்வமுகைச் சத்தத்தைக் கேட்ட காவலர் யாவரும் கண் விழித்துக் கொண்டார்கள். அப்போது அக்காவலர்களிற் சிலர் ஓடோடியுஞ் சென்று கம்சனிடத்திற்போய்க் குழந்தை பிறந்ததெனக் கூறினார்கள். அவ்வார்த்தையைக் கேட்ட துட்டகஞ்சனானவன் கண்களில் அனற்பொறி பறக்கச் சினந்தெழுந்து சயன அறையை விட்டு வெளிவந்து என் சத்துரு இன்றையத் தினம் பிறந்தனனா? அவனை யிப்பொழுதே கொல்லுகிறேன் என ஆரவாரித்தெழுந்து கைவாளுடன் மிக்க விரைவாக நடந்து காராக் கிரகத்துக்கு வந்து சேர்ந்து கதவைத் திறந்து வசுதேவனையும் தேவகியையும் நோக்கி, எங்கே இப்பொழுது பிறந்த குழந்தை? இங்கே கொண்டு வா? என்று சொல்ல, அதற்குத் தேவகி உடனே எழுந்து வணங்கி அண்ணா? பெண்மகவு பிறந்திருக்கிறது. ஆடவரிற் சிறந்தவரான உம்மை இப் பெண் மகவென்ன செய்யப்போகிறது: இதனைக் கொல்லாதிருப்பீர்களானாற் றங்களி னருமைத் திருக்குமாரனுக்கு விவாகம் முடித்துக் கொள்ளலாம் எனக் கூறிக் கொண்டே கஞ்சனிடத்திற் குழந்தையைக் கொண்டு வந்து கொடுத்தனள்.

அக்குழந்தையைக் கஞ்சனானவன் தன் கரத்திற் பெற்றுக்கொள்ள வேண்டாமென்று இளையாள் கூறிய வார்த்தையை ஒரு பொருட்டாக நினையாது, பெண்ணாயிருந்தா லென்ன? ஆணாயிருந்தாலென்ன? எப்பொழுது எது எனக்குச் சத்துருவாகவந்து பிறந்ததோ? அதை அப்பொழுதே கொலை புரியாது விடுதல் நலமா? என்று கூறிப் பெண்பாவம் பொருந்துயருக் கஞ்சாது, குழந்தையின் பாதமிரண்டையும்பற்றி ஆங்கிருந்த ஓர் பாறையின்மேல் நெற்கதிரை யடிப்பதுபோல் வீசியடிக்க துணியும் பொழுதில் அப்பெண் மகவானது கஞ்சன் காத்தைவிட்டுத்

தப்பித்துக் காலினாலவனையு முதைத்து வானிற்சென்று மின்னலைப் போல் விளங்கிக் கொண்டிருக்கிற நான்கு முகத்தோடும் வீரசடையிலங்க! எட்டுக் கரங்களிலும் ஆயுதங்கள் துலங்க, மூன்று கண்களுடன் வக்ரதந்தஞ் சொலிக்க, அகோர ரூப துர்க்கையென்ற பெயரை யுடையவளாகி நின்று கஞ்சனை நோக்கி, அடாமூர்க்கா! கஞ்சனென்னும் பெயரையுடைய வஞ்ச நெஞ்ச முடைய பாதகா! என்னையிந்தப் பாறையி லெதற்காக அடிக்கத் துணிந்தனை? உன்னைக் கொல்லும் பொருட்டாக ஒருவன் வேறொரு இடத்தில் வளர்கின்றான். ஆகையால் யானுன்னைத் தண்டித்தல் கூடாது என்று தந்திரமாக மொழிந்து அந்தரத்தில் மறைந்தது.

அவ்வாக்கைக் கேட்ட கஞ்சன் தளர்கின்ற நெஞ்சையுடையவனாகி, அந்தோ! முன்பு என் தங்கையின் திருமணக் காலத்தில் நகர்வலம்வர நான் இரதமூர்ந்து வரும்போது அன்று அசரீரியாக ஆகாயத்தி லிருந்துண்டான வார்த்தையும் பொய்வார்த்தையானதே! என்ன காரியத்தை நினைத்து என்ன காரியத்தைச் செய்தோம். இவ்வநியாயமான சரீரத்தைப் பாதுகாப்பதற்காக என் தங்கையையும் அவள் கணவரையும், விலங்கிட்டுக் காராக்கிரகத்திலடைத்து அவர்கள் பெற்ற குழந்தைகளையுங் கொன்றுகொடிதாகிய பாவமூட்டையைக் கோட்டையாகக் கட்டிக்கொண்டோமே! தமக்கு வரும் விதியை வென்று விலக்கும் வல்லவர் இப்பூமியிலெவரிருக்கிறார்? ஒருவருமில்லை, வருவது தானே வரும், எனத்தைரியமுற்றுத் தன் தங்கையையும் அவள் கணவனையும், நோக்கி, நான் இந்தநாள்வரை உங்களுக்குச் செய்து வந்து அபசாரங்க ளனைத்தையும், இன்று நீங்கள் பொறுத்தருள வேண்டுமெனப் போற்றிப் புகழ்ந்து அவர்களது கால்விலங்கை விடுவித்து வெளியே அழைத்து உங்கள் மனைக்குச் செல்லுங்களென வழியனுப்பித் தன்னரண்மனை வந்து சேர்ந்து பூதகி, சகடாசுரன், தேனுகாசுரன், அகாசுரன், பகாசுரன் முதலிய துட்ட அரக்கர்களை வரவழைத்து என்னுயிரைப்போ லெனக்கு உதவியாயிருக்கிற என் அன்பர்களே! மிகுந்து பராக்கிரமசூரர்களே! என் தங்கை வயிற்றிற் பிறந்த பெண்மகவொன்றை இன்று யான் கொல்லப்புகுஞ் சமயத்தில் அக்குழந்தை ஆகாயத்திற்சென்று ஓர் தெய்வரூபமாக விளங்கி, அடா துட்டக் கஞ்சனே! உன்னை இனிக் கொல்லப்போகிறவன் வேறோ ரிடத்தில் வளர்கின்றான் என்று கூறி மறைந்துபோய்விட்டது.

ஆகையால் நீங்களிப் பூமியின் கண் இன்றைக்குப் பிறந்த குழந்தைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கங்குச் சென்று உங்கள் புஜபல பராக்கிரமத்தாலும், மாயாதந்திர ஜாலங்களினாலும், கொன்று விடுவீர்களாக என்றுத்தரவு செய்ய, அதற்கு அவர்கள் அப்படியேசெய்து வருகிறோமென விடைபெற்றுச் சென்றார்கள். இங்கிவ்விதமிருக்க, இனி அந்தக் கோகுலத்தில் நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக. முன்னம் வசுதேவனானவன் தன் குழந்தையைக் கோகுல நந்தகோன் மனைவி அசோதையினணையிற் கிடத்திவிட்டு அவளீன்ற பெண்மகவை எடுத்துக் கொண்டு சென்றபின்னர், அவ்வசோதையானவள் நித்திரை மயக்கந் தீர்ந்தெழுந்து தன்னணையிலிருக்கிற குழந்தையைப் பார்த்து அதிக சௌந்தரியமுடைய ஆண்மகவு பிறந்ததென நினைத்துக் குழந்தையைத் தன் இருகரத்தாலுந் தாங்கி யெடுத்து

முத்தமிட்டு உச்சிமோந்து மடியில் அணைத்து வைத்திருக்கும்போது குழந்தை அழத் தொடங்கிற்று.

அவ்வழுகைக் குரலைக் கேட்ட மற்ற மங்கையர்களெல்லோரும் எழுந்து அசோதை வயிற்றில் சந்திரவதனத் தனயன் பிறந்தானெனக்கண்டு அடங்காத மகிழ்ச்சியை யடைந்து அச்செய்தியை நந்தகோபனிடஞ் சென்று தெரிவிக்க அவனதைக் கேட்டவுடனே குழந்தையைவந்து பார்த்துக் கரையில்லாத ஆனந்தமாகிய கடலில் மூழ்கி இன்புற்று மங்கள ஸ்நானஞ் செய்வித்துப் பின்யாவரும் யமுனை யாற்றுக்குச்சென்று நீராடி வந்து கோதானம், பூதானம், முதலிய பல தானங்களைச் செய்து புத்திரனை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சீராட்டிப்பாராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வருநாள்களில், கோபிகாஸ்திரிகள் ஒவ்வொருவரும் வந்து கண்ணனுடைய அழகைக் கண்டு இவன் பரந்தாமனோ! மன்மதனோ! வேலவனோ! இப்பூமி முழுவதையும் புரக்கவந்த பூமானோ! நல்லொழுக்கத்தை இப்பூமியில் நிலைநிறுத்தவந்த நாயகனோ! என எண்ணி ஆ! ஆ! கார்ப்பூத்தமேனியும், பார்பூத்தவுந்தியும், இந்துவை நிகர்த்த முகவசீகரமும், உள்ள இவனை யாருக்கு உவமையாகக் கூறுவோம். எனப் பலவாறு கூறிப் போற்றிப் புகழ்ந்து செல்லுவார்கள்.

இன்னுஞ் சிலர் பாற்குடங்களைக் கொண்டுவந்து வைத்துப் பாலகனைக் கண்களிக்கப்பார்த்துச் செல்வார்கள். பின்னும் வையகத்திலுள்ள பிரம, க்ஷத்திரிய, வைசிய மேலோர் பலரும் வந்து புத்திரனைப் பார்த்து அளவிலா அன்பு பெருக ஆசீர்வதித்துச் செல்லுவார்கள். அப்படி வருவோர்களுக்கெல்லாம் நந்தகோன் சந்தன சுகந்தாதி தாம்பூல முதலியவைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். மறுநாட்காலை நந்தகோனானவன் தனக்குப் புத்திரன் பிறந்த புகழ்ச்சியால் திறைகொண்டு கஞ்சனைக் கண்டுவர வேண்டுமென்று அநேகமங்கல வாத்தியங்களுடன் கோவலர்கள் சேர்ந்து குழலூதிவர நடந்து பூலோக தேவேந்திரனென்று கூறா நின்ற கஞ்ச மகாராஜனிடத்திற்சென்று அவனை யிறைஞ்சி வாழ்த்தி பகுதியைக் கட்டி நிற்கும்போது கஞ்சன் நந்தகோனைப் பார்த்து ஐயா? உம்முடைய நகராகிய கோகுலபதியில் வாழுங் கோவலர்களும், நிரைகள் யாவும் சுகமோ? எனக்கேட்க, அதற்கு நந்தகோன் அரசே! உம்முடைய கிருபையினாலும், கடவுளுடைய கருணாகடாக்ஷ வீட்சண்யத்தாலும், எல்லோரும் சுகமே. யாதொன்றுங் குறைவில்லை யென்றியம்ப, அதற்கரசன் அகமகிழ்ந்து வரிசைகள் மிகக் கொடுத்து வழியனுப்பினன் அவ்வரிசைகளைப் பெற்ற நந்தகோன் கோகுலத்தை நோக்கி வரும்வழியில் வசுதேவன்கண்டு ஐயா நந்தகோனோ! தங்களுக்குப் புத்திரனுண்டோ? என வினவ அதற்கவன் உண்டு எனக் கூறினன்.

அதுகேட்ட வசுதேவன் இப்போது ஈங்குக் காலதாமதஞ் செய்யாது சீக்கிரம் வீட்டுக்குப் போய்ச்சேருங்கள், என்று கூறுதலும், நந்தகோன் வசுதேவனோ வீனான வார்த்தை விளம்பான் என ஆழ்ந்த கருத்தை மனத்தில் நினைத்து தன் கூட வந்த எல்லாருடனும் வேகமாக நடந்து ஆய்ப்பாடிக்குப் போய்ச் சேர்ந்தான். அப்பால் கஞ்சனானவன் உலகத்தில் ஆவணி மாதம் பானுவாரத்தன்று செனித்த குழந்தைகளை யெல்லாங் கொல்லும் பொருட்டு உத்தரவு செய்தனுப்பிய பூதகி முதலான அரக்கர்கள்

எல்லோரும் ஒவ்வொரு வீடுகள் தோறுஞ் சென்று பார்த்துக் கடைசியாகக் கோகுல ஆயர்ப்பாடியை சேர்த்து நந்தகோன் வீட்டில் வளருகிற பகவானாகிய குழந்தையைத் தங்கள் தங்கள் மாயா வினோத ஜால சாமர்த்தியங்களாற் கொல்லப் பார்த்ததும், இயலாது, அக்குழந்தையால், அவர்களனைவோரும் மாண்டு போயினர்.

நந்தகோன் வீட்டில் நன்னயமாக வளருதற்கு வந்தகோனாகிய நீலமேகவண்ணன் சொந்த மகன் போல வளர்ந்து வருங்காலத்தில் வசுதேவன் சொற்படி தவமேலோனாகிய கற்கமகா முனிவர் நந்தகோ னிடத்தில் வந்து அவனால் வரவேற்று வீற்றிருக்கும்போது நந்தகோன் தன் புத்திரனுக்கு நாமகரணமிட வேண்டுமெனக் கூற முனிவர் அப்படியே நல்லதென்று தாமரைப்புட்பம் போன்ற கண்ணனுக்குக் கிருட்டினன் எனவும், வசுதேவனது இரண்டாவது மனைவியாகிய உரோகணியீன்ற குழந்தைக்குப் பலபத்திரனெனவும், பெயரிட்டு நாமகரண விழா முடித்த பின் விடை பெற்றுச் சென்றனர். பின்பு நந்தகோன் சில நாட் கழிந்த பின்னர் கிருஷ்ண பலராமர்களை அந்தக் கற்கமுனிவரிடத்துக்கனுப்பி ஆகமவேத புராண சாஸ்திர முதலானவைகளை யெல்லாம் கற்கச் செய்து வந்தனன். அப்பால் உலகையெல்லாமுண்டுமிழ்ந்த அக்கிருட்டிணன் கோகுல ஆயர்ப்பாடியில் வாழ்கின்ற கோவியரை வேய்ங்குழலினால் மயக்கியும், அவர்களுடைய துகில்களைக் கலைந்தும், வேள்விமங்கையருணவளிக்கப்பெற்றும் இந்திரன் விடுத்த மழையைத் தடுத்தும் ஆவினங்களையும் கோவலர்களையும் பாதுகாக்கு நிமித்தங் கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்து கோவியரைத் தழுவியும், இன்னும் இவைபோன்ற பல திருவிளையாடல்களைப் புரிந்து சங்குசூடன் முதலான அசுரர்களைச் சங்கரித்தபின், வடமதுரா புரியின் வளம்பார்த்து வரவேண்டுமென்று பிர யாணமாகி யமுனா நதியைக்கடந்து மதுரைக்குச் சென்று ஆங்கு மூரிச் சிலையை வெடித்துக் கஞ்சனாலேவிய குவலாயபீட மென்னுங் குஞ்சரத்தைக் கொன்று வெய்ய சாணூரனைவதைத்துக் கொடுமை பல புரிந்தவனாகிய துட்டகஞ்சனை மலர்க் கொண்டையைப் பிடித்திழுத்துப்பூமியில் வீழ்த்திக் கரத்தினால் ஓங்கிப் புடைத்துக் கொன்றான்.

பின்னர் அந்த வடமதுராபுரியைப் பல மங்கள வாத்தியங்கள் முழங்க, இப்பூதலமெல்லாங் கொண்டாட உக்கிரசேனன் என்பவனைச் சிங்காதனத்திலிருத்தி நீராட்டி மகுடஞ் சூட்டி வைத்தனன். அப்பால் தன்னையீன்ற தாய் தந்தையராகிய தேவகியையும் வசுதேவனையும் கண்டு வணங்கித் தன் முன் சொன்ன காலத்தில் சுயரூபத்துடன் சொன்ன வாக்கின்படி அவர்கள் புத்திரனாக வடமதுரையிற் சிலகாலமிருந்து தன்னை வளர்த்த தாய் தந்தையாராகிய அசோதை நந்தகோனென்பவர்களிடத்திற் சென்று நற்சேம வார்த்தைகளைப் புகன்று அடிக்கடி வருகிறேன் என்று அவர்கள் மனங்களிக்க வாக்களித்துத் திரும்ப வடமதுரைக்கு வந்து சேர்ந்தும், ஆங்கு கடலில் ஓர் மீன் விழுங்கிய குருவின் புதல்வனைக் கொணர்ந்தும், உத்தவன் என்பவனைக் கோகுலத்தில் விடுத்தும், அக்குரூரன் என்பவனை அத்திநகர்க்கனுப்பியும், சராசந்தனோடு தனிப் போர் செய்தும், சிசுபால தந்தவக்கிரவதங்களைப் புரிந்தும், இராஜ சூயயாக முடித்தும், பஞ்சபாண்டவர்க்கு

உதவி செய்தும், முசுகுந்தர்க் கருள்புரிந்தும், அப்பால் உருக்குமணி, சத்தியபாமை, சாளிந்தி, மித்திர விந்தை, சத்தியையை, பத்திரை, இலக்கணை என்னும் அட்டலக்குமிகளைத் திருமண முடித்தும், அவர்கள் அகங்களிப்பச் சரசசல்லாப மனமகிழ்வோடு வாழ்ந்து துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனஞ் செய்து வரும் நாள்களில், உத்தவனென்னும் பத்தனானவன் கோகுலத்தை விட்டகன்று வடமதுரைக்கு வந்து வசுதேவன் வீட்டிற் சென்று அவன் புத்திரனாகிய கமலக்கண்ணனைக் கனிவுடன் பார்த்து எம் பெருமானே! அடியேன் மோக்ஷ சாம்பிராச் சியம்பெற ஞான தத்துவத்தை உபதேசிக்க வேண்டுமென வணங்கிக் கேட்க, அதற்கு நாராயணனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் உத்தமனே! உதயம் அஸ்தமனமில்லாததாயும், எங்கு முள்ளதாயும், இல்லாதாயும், வேதங்களிற் கூறியவாறு ஒரே வஸ்துவாக விளங்குவதாயும், மனத்தாலும், வாக்காலும், அளவிடக் கூடாத தாயு முள்ளவஸ்து எதுவோ! அதுவே அறிஞர் அனைவராலும் வழிபாடு செய்து கொண்டாடத்தக்க பரதத்துவப் பொருள்.

இன்னும் அது "பேரறிய சொரூபமாகவுள்ளது பிரமம் "அதாவது" பிரக்ஞானம் பிரமம்" என்று இருக்கு வேதத்து ஐதரேயவுப நிடதங்கூறும் முதல் மகாவாக்கியத்தின் பொருளாகவுள்ளது. இப்பரம் பொருளின் சந்நிதானத்தில் சிற்றறிவுப் பொருளாகிய ஜீவகோடிகள் எண்ணிலாதன இருக்கின்றன என்பது இம்மகாவாக்கியத்தால் அறிஞருக்கு நன்கு விளங்கும். விளங்குவதனால் சீவகோடிகளுக்குப் பரம்பொருளைத் தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும் பாசத்தின் உண்மையில் நிச்சயமாகிறது. ஆதலால் பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள்களும், எப்பொழுதும் உள்ள பொருள்களாம். அவற்றுள் உயிர் பாசத்தில் நீங்கினால் மட்டும் பரம் பொருளை அறிந்து அடையும்.

அங்ஙனம் உயிர்கள் பிரமத்தை அறிந்து தியானித்து சமாதித்து சாக்ஷாத்கரித்து ஈடேறும் பொருட்டே உயிர்களுக்கு உடம்புகள் கொடுக்கப் பெற்றன. உடம்புகளைப் பெறுதற்கு முன்னரே சிற்றறிவுப் பொருள்களாகிய உயிர்கள் பாசத்தின் மறைப்பால் தம் உண்மையையும், உலகத்துப் பொருள்களையும் அறியாதிருந்த கேவலத்தினீங்கி உடம்புகளைப் பெற்ற பின் அவற்றை நன்கு அறிகின்றார்களல்லவா? அறிவிற் சிறந்த மக்களனை வரும் மாயாத நுவாகிய இவ்வுடம்பையன்றி தனித்து நின்ற யாதொரு பொருளையும் அறியமாட்டோமென்பதை நன்கறிவார்கள்.

அத்தகைய மக்கள் தாம்பெற்ற உடம்பின் துணையால் புறப்பொருள்களை யறிகின்றார்களே யல்லாமல் அறியுந்தன திருப்பை யூகத்தினாலே யன்றிப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றிலர். இந்தவுண்மையால் புறப் பொருள் மறைப்பு மாத்திரம் அவர்கள் நீங்கப்பெற்றிருக்கிறார்களே தவிர தன்னையும் தலைவனையும் அறிந்து ஆனந்திக்க வேண்டிய அறிவு அவர்களுக்கு உண்டாயிருக்கவில்லை யென்பது வெளியாம். அவ்வறிவைப் பெற்றவர்தாம் சொரூப மறைப்பு நீக்கமும் பெற்றவராவர். அந்த ஞானோதயத்தை வேண்டிப் பேரறிவுப் பொருளாகிய எண் குணக்கடவுளை வழிபடுவதே மக்களுக்குக் கடமையாகும். பெருமையும் சிறப்பும் மேன்மையும் உள்ள பரம்பொருளே எவ்வாற்றானும் சிறுமையும், சிறப்பின்மையும், கீழ்மையுமுள்ள ஆன்கோடிகளுக்கு நன்மையை அருளிச் செய்பவனாதலான். அப்பெரியவன்

பணியையே தமது கடமையாகக் கொள்ளுதலை அறிவுறுத்தற்கே இம்முதல் மகாவாக்கியம் உண்டானதாகும்.

இதனைத் தியானித்து வழிபடுவோர் இகபர சாதனங்களைப் பெற்று வாழ்வார்கள். இதன் மேல் "நான் பிரமமாயினன்" அதாவது "அகம்பிரமாஸ்மி" என்று எசுர்வேதத்து பிருகதாரணிய உபநிடதங் கூறும் இரண்டாவது மகாவாக்கியத்தின்படி அவனருளாலே அவன் இவனாகு முறைமையை நல்லாசிரியன் முன்பில் விசாரணையாலறிந்த அறிஞன் தற்கிழமையால் (ஒற்றுமை நயத்தால்) இவனும் அவனாகி நிற்கும் உரிமை பாராட்டி நின்று தான் பாசத்தினின்று நீங்கு தற்குரிய வேறில்லாத் தன்மையனாகி இரண்டறக்கலந்து பேரின்பம் அனுபவித்தலைப் பெறுவன்.

அந்நிலையையடைந்தவன்தான், அனாதி அத்துவித நிலையை அறிவிக்கும், சத்திபதிந்த பரமகாசிரியானால் உபதேசிக்கப் பெறுவதாகிய "அது நீயாயினை" அதாவது "தத்துவமசி" என்று சாமவேதத்து சாந்தோக்கிய வுபநிடதங் கூறும் மூன்றாவது மகாவாக்கியத்தின்படி பரம்பொருளுக்கும் தனக்குமுள்ள ஒற்றுமைத் தன்மையால் வேறில்லாமல் நின்றும், ஒன்றாகாமலும் இரண்டாகாமலும் ஒன்று மிரண்டு மின்றாகமலும் நித்தியமாயிருக்கும் இன்பாநுபவத்தைப் பெற்று வாழ்வன்.

அத்தகைய முக்தான்மாக்கள் பிரமானந்த மேல் நிலையைப் பெற்றாலும், அதாவது பிரமமாய் விட்டாலும் பஞ்சகிருத்தியஞ் செய்வது ஏகபிரமமே என்பதை அறிவித்தற்கு "அப்பரம் பொருளே பிரமம்" அதாவது "அயமாத்மாபிரமம்" என்று அதர்வணவேதத்து மாண்டூக்கிய வுபநிடதம் கூறும் நான்காவது மகா வாக்கியம் உண்டாயிற்று. இந்த மகாவாக்கியங்கள் அறிவிக்கும் பரம்பொருளே பிரமம். அது உள்ளும், புறம்பும், மேலும் நடுவும், கீழும், எங்கும் நிறைந்த பொருள். அதுவே நான் என்று பிரமாகம்பாவனையால் அந்நிலையையடைந்து இறைவனில் வேறில்லாத தன் சொரூபத்தைக் காண்பித்துத் தரிசிக்கச் செய்து அவ்வுத்தவனுக்கு உண்மை ஞானம் உண்டாகும்படி கிருபை பாலித்து அவனை நைமிசாரணியத்திற்கு அனுப்பிவிட்டு ஸ்ரீகண்ணபிரான் வைகுந்தம் போய்ச் சேர்ந்திருந்தனர் என்று முனீஸ்வரர் கூறியருள, அதைக் கேட்ட ஐவரும் புத்தி முதிர்ந்து பரமானந்தத்தையடைந்து வணங்கிப் புகழ்ந்து பன்னசாலைக்குச் சென்றார்கள்.

மற்றொரு நாள் தன்மார்த்தன் முதலான ஐவரும் அதிகாலையில் எழுந்து நித்திய கன்மாநுட்டானங்களை முடித்துவர கௌண்டின்னிய நதிக்குப் பக்கத்திலிருக்கிற பூஞ்சுனை யென்னும் பொய்கைக்குச் சென்றார்கள். அவ்வைவருள் தன்மார்த்தன் மனைவியாகிய தனமதியம்மாள் தானணிந்திருந்த நவகண்டிமாலையைக் கழற்றி ஆங்கொரு மேட்டின்கண் வைத்து நீராடச் சென்றனள்.

அத்தருணத்தில் அந்த நவகண்டி மாலையின் பிரகாசத்தினால் ஏதோ தனக்கு இன்று ஆகாரங் கிடைத்ததென நினைந்த கருடப்பட்சியொன்று பறந்தோடி வந்து அதைத்தன் காலிலிடுக்கித் தூக்கி யெடுத்துக் கொண்டு வெகுதூரம் ஓடி

அவ்விடத்திலிருக்கிற ஆல விருக்ஷத்தின் கிளையிலுட்கார்ந்து ஆபரணத்தை மூக்கினாற் கொத்துதல் செய்து பார்க்கத் தன் ஆகாரத்திற்கு இது பிரயோசன மில்லையென்று தெரிந்து நழுவ விட அந்த மாலை பூமியில் வந்து விழுந்தது. அப்பால் தனமதியம்மாளும் தன்மார்த்தன் முதலான நால்வருடன் பொய்கையில் ஸ்நான முடித்துக் கரையேறி ஆபரணத்தைப் பார்க்கக் காணாமையால் சொல்லொணா துயரடைந்து நால்வரிடத்திலும் இச்செய்தியைத் தெரிவித்துப் பின்னர் எல்லோரும் அவ்வனத்தைச் சுற்றி தேடிப் பார்த்து வருகையில் முன் பறவை நழுவ விட்டுப் பூமியில் வீழ்ந்து கிடந்த அந்த நவகண்டி மாலையை அவ்விடத்தில் குல தெய்வங் கொண்டாட வந்து கொண்டிருக்கிற கிராதர் கூட்டத்திலுள்ள ஜாதித் தலைவன் கண்டெடுத்து இது நம் குல தெய்வத்தால் நமக்குத் தரப்பட்டதென்று கொண்டாடி தன் கூட்டத்தாருக்குத் தெரிவித்து மகிழ்ச்சியோடு தன் கழுத்தி லணிந்து கொண்டான். அப்பொழுது அவ்வழியே வந்து கொண்டிருந்த ஐவரும் தாம்தேடும் பொருள் வேடுவர் முதல்வன் கழுத்திற்கிடப்பக்கண்டு ஆங்கொரு மரநிழலிலிருந்து கொண்டு சூரசேனனை விட்டு அவ்வேடர் முதல்வனை யழைத்து வரும்படி செய்தனர். அவனுஞ் சென்று அழைக்கச் சிலம்பனாகிய அவ்வேடன் சில ரோடுங்கூடி வணக்கத்துடன் வந்து இராஜ தவசிகளே! இன்றைக்கு எங்கள் குலதெய்வ வழிபாடு செய்யவந்த வேளை நல்லவேளையா யிருந்தலாற் றங்களைக்காணப் பெற்றோம்.

சற்று நேரத்துக்கு முன்னர் இந்த மாலையை எங்கள் வன தேவதை எங்களுக்குத் தந்தது. இச்சமயத்தில் நீங்கள் என்ன காரியமாக வந்தீர்களோ! உங்கள் முகம் மிக வாட்டமாக விருக்கிறதே! உங்களுக்குத் தேனுந் தினைமாவும் வள்ளிக்கிழங்கு முதலியவைகளும் கொண்டு வந்து தந்தால் இப்பொழுது உண்டு பசியாறலாமா? உங்களுடைய சித்தத்தைத் தெரிவித்தல் வேண்டும்? என்று அன்புடன் கேட்பதைத் தெரிந்த தன்மார்த்தன் முதலியோர் அவ்வேடுவர்களுடைய நற்குணங்களையும் இன்சொற்களையும் தன் மனத்திற்கொண்டு முகமலர்ந்தவர்களாய் சிறிதுநேரம் தம் முள்ளத்தில் ஆலோசனை செய்து கொண்டு ஒன்றும் பேசாமலிருந்தனர். அப்பால் தன் மார்த்தன் அவ்வேடர் முதல்வனை நோக்கி ஏ கானகநாட! உன்னுடைய அன்புக்குகந்தோம். நீ கழுத்திலணிந்திருக்கிற நவகண்டிமாலை எங்களுடையது, இதனை கௌண்டின்னிய நதிக்குப் பக்கத்திலிருக்கிற பூஞ்சுனையின் மேட்டிற் கழட்டி வைத்துவிட்டு நீராடிய பின் வந்து பார்க்க ஆங்குக் காணவில்லை. இம்மாலையைத் தேடிக்கொண்டு நெடுந்தூரஞ் சிரமப்பட்டு இங்கே வந்த இடத்தில் உன்னுடைய கழுத்தில் கிடப்பதை யறிந்து உன்னையழைத்து வரச்செய்ததே யன்றி வேறொன்றுமில்லை. அப்படி இருப்பவும் உன்னுடைய குலதெய்வம் இம்மாலையை இன்று உனக்குத்தந்ததாச் சொல்லுகின்றனை. அஃது உண்மையானால் அத்தெய்வம் உனக்குச் சாட்சிசொல்லுமா? உன்னுடன் நான் உனதுகுலதெய்வத்தின் கோயிலுக்கு வரலாமா? அது சாட்சி சொல்லவில்லையானால் இந் நவகண்டி மாலையை நீ கழற்றி என்னிடத்தில் தரல்வேண்டும். என்ன சொல்லுகின்றாய்? என்று கேட்டனன். அக்கேள்வியைச் செவிக்கொண்ட சிலம்பன் சிறிதுநேரம் தன்னுள் யோசனை செய்து ஐயா தவசிரேஷ்டரே! நீர் புனைந்திருப்பதோ தவவேடம். உம்மைப்போல்

இவ்வேடத்தைப் புனைந்துகொண்டு இம்மலைக்கு வருபவர்கள் அனைவரையும் நாங்கள் உபசரிப்பது வழக்கம். உண்மையான தபசிகள் எங்களால் மிகநன்கு மதிக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் செல்வார்கள். பொய்வேடதாரிகள் எத்தகையோராயிருப்பினும் அவர்களுடைய வார்த்தையிலிருந்து அவர்களை நாங்கள் தெரிந்துகொண்டு இங்குத் தங்கவொட்டாமல் விரட்டிடுவோம். அத்தகைய குன்றவர் கோமானாகிய என்னிடத்தில் இம்மாலையை அபகரித்துக்கொண்டு போகத்தக்க தந்திரமான வார்த்தைகளை நீர் செலவு செய்கிறீர். எங்கேயாவது குலதெய்வம் சாட்சிசொல்லுகிற வழக்கமுண்டோ? நீர் ஏதோ ஒரு பூஞ்சுனை மேட்டில் கழற்றிவைத்ததாகச் சொல்லுவதாலேயே இவ்வாபரணம் உம்முடையதல்ல என்பது நன்கு வெளியாயிற்று. இனி உம்முடையதென்பதைத் தக்கசாட்சியுடன் வந்து தெரிவிப்பீராகில் நான் இம்மாலையைக் கழற்றித் தந்துவிடுகிறேன். எனக்கு இஃது ஒரு பெரிதல்ல. அப்படியில்லாமல் நீர் ஏமாற்றிக் கொண்டு போகப் பார்ப்பது பலிக்காது. நீர் கூறிய இடத்திற்கு எங்களில் யாரும் வந்ததுமில்லை. அங்கிருந்து இதனை நான் எடுத்துக்கொண்டு வரவுமில்லை. இஃதுண்மை. என்று கூறிவிட்டுக் கோவிலில் பூசைநடைபெற வேண்டியது அவசியமாக யிருக்கிறது. ஆகையால் நான் போகிறேன் என்றுந்தெரிவித்துச் சென்றான். அதனைக் கண்ட ஐவரும் இம்மாலை நம்முடையதே இதனை வைத்திருப்பவன் வேடனாயிருப்பினும் ஒழுங்குக்குக் கட்டுப்படக் கூடியவனே யாகக் காணப்படுகிறான். வேடன்தானே என்று நினைத்து அவனை ஒரு வழியிலகப்படுத்த நான் பார்த்தேன் அவன் அவ்வழியில்வந்து நம்மையே மடக்கிக் கொண்டான். காணாமற்போன பொருள் இருக்குமிடத்தை நாம் அறிந்துகொண்டோம். இனி அது நமது கைக்கு வரத்தக்க வழியை யோசித்தல் வேண்டும், என்று தன்மார்த்தன் சொல்லவும் சூரசேனன் அண்ணா! இவ்விடத்தில் தாங்கள் இவ்வளவு பொறுமை காட்டவேண்டுமா? இக்கிராதகனோ, கொலைஞரென்றும், தீயரென்றும் சொல்லப்படுகிற வேடுவர் தலைவன்தானே? நம்முடைய முன்பில் தன் குலதெய்வம் இம்மாலையைத் தந்ததென்று முதலாவது அவன் கூறியது பொய்யல்வா? பொய்யரைத் தண்டித்தல் குற்றமாகாது.

இவனிடத்தி லிரக்கங்காட்டாமல் நமது அரச தர்மத்தைக் கைக்கொண்டாலன்றி ஆபரணம் நம்மிடத்தில் வந்து சேராது. ஆதலால் அவனைத் தண்டித்து ஆபரணத்தைக் கொண்டுவர அடியேனுக்கு உத்தரவருளல் வேண்டும். என்று வேண்டி நிற்குஞ் சமயத்தில் தன் மார்த்தனானவன் புன்னகையுடையவனாகி அப்பா சூரசேனா! சற்றுப்பொறு, நம்முடையபொருள் நம்மிடத்தில் வரும்; என்று ஆறுதல் செய்து கொண்டிருக்கிஞ் சமயத்தில் ஆங்கு ஒரு கோங்கு விருக்ஷத்தினீழலில் தவம் புரிந்து கொண்டிருந்த மார்க்கல்ய முனிவரென்பவர் தமது தவயோகநிட்டையினின்று நீங்கி எழுந்து அவர்கள் முன்னர் வந்தனர். அவரது வருகையைக் கண்டு ஐவரும் வேறு சிந்தனையைவிட்டு மிக மகிழ்ச்சி யுடையவராய் எழுந்து அன்புடன் வணங்கி நின்றனர்.

முனிவரும் அவர்பாலருள் சுரந்து அவருக்கு நன்மொழி வழங்கி அன்பர்களே! நீங்கள் ஐவரும் இங்கே வந்த காரியத்தை நாம் அறிந்துளோம். நீங்கள் உட்காருங்கள், என்று கையமர்த்திக் கூறித்தாமும் ஒர் சிலாசனத்தில் அமர்ந்தருளினார். அப்பால்

சூரசேனனை யழைத்து நீ போய் மார்க்கல்ய முனிவர் உன்னையழைக்கின்றாரென்று அதோ தெரிகிற கோவிலில் நிற்கிற கானவர் தலைவினடத்துச்சொல்லிவிட்டு வாவென்று கூறினர். அவனும் அவ்வாறே போய்த் தெரிவிக்க ஆங்குக் கூடியிருந்த வேடரனைவரும் விரைந்து வந்து நிலம்படிய விழுந்து வணங்கி எழுந்து வாய் பொத்திக் கைகட்டிக் கொண்டு நின்றனர். முனிவர் பெருமானும் அவர்களுக்காசி கூறி வெற்புத் தலைவனே! உன் கழுத்திற்கிடக்கும் நவகண்டிமாலையைக் கழட்டித்தாவென, அவனும் முக மலர்ச்சியுடன் விரைந்து மாலையைக் கழற்றி அவரது திருக்கரத்திற் கொடுத்தனன்.

அதனை வாங்கிக்கொண்டு தன்மார்த்த! இவ்வேடுவராஜனது அருமை பெருமைகளை நான் சொல்லாமலே நீ தெரிந்திருக்கிறாய். இவன் இப்பொருளையபகரித்த வனல்லன். இதில் ஆசைகொண்டவனுமல்லன். இவன் இன்றைக்குத் தன் குலதெய்வத்தைக் கொண்டாட வரும் வழியில் இதனைக்கண்டெடுத்தான். அப்பொழுது தன் குலதெய்வமே இதனைத் தந்ததென்று நினைத்துத்தன் கழுத்திலணிந்து கொண்டதனால் ஐவரும் இழந்துபோன பொருளின் இருப்பை அறிந்தீர்கள். இதனாலேயே இவன் திருடனில்லையென்பது உனக்கு நன்கு விளங்கும் என்று சொல்லிவிட்டு, கானவர் தலைவனைப் பார்த்து "வழியிற்கண்டா லெடு உடையவன் கேட்டாற்கொடு" என்ற பழமொழிப்படி இவ்வுடைமைக்குரிய இவர்களிடத்தி லிதனைக் கொடுத்துவிடலாமோ? என்று கேட்டனர். எங்கள் பெருமானே! அவர்களுடைமையை அவர்களிடத்திற் கொடுத்துவிட வேண்டியதுதானே, என்று வேடுவர் முதல்வன் கூறவும், முனிவர் மகிழ்ச்சியுடையவராய் உடைமையைத் தன்மார்த்தனிடங் கொடுத்து வேடுவர் அனைவரையும் ஆசிர்வதித்து அனுப்பிவிட்டு ஐவரையும் ஆச்சிரமத்துக்கு அழைத்துக்கொண்டு சென்றார். அங்கே தம் முன்பிலிருக்கச்செய்து அவர்களைப் பார்த்து ஐவர்களே! உங்களுக்கு மூவாசைகளும் இருக்கக்கூடாதல்லவா? இந்த நவகண்டிமாலை என்ன பெறும்? ஓடும் பொன்னும் ஒப்புநோக்கும் ஜீவன்முத்த ர்களுக்குரிய தவவேடந்தாங்கிய உங்களுக்கு இவ்வாபரணத்திலுண்டாகிய பற்று நீங்கவில்லையே! உங்களுடைய இயல்பை உங்களுக்குணர்த்தி உங்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று திருவுள்ளங் கொண்ட சிவபெருமானே தமது திருவருள் நோக்கத்தால் ஒரு கருடனை ஏவி இவ்வாபரணத்தை எடுத்துக் கொண்டு போய் வேடனுக்கெதிரில் நழுவிவிடச் செய்தருளினார். அதனை வேடன் எடுத்துக்கொண்டான்.

அவ்வளவேயன்றி அவன் திருடினவனல்லன். அதனையறியாமல் சூரசேனன் அவ்வேடர்களைத் தரும சாஸ்திர முணர்ந்தவழித் தண்டிக்கத்துணிந்தது நியாயமே ஆனாலும், நீங்களிப்பொழுது அரசாங்கத்திலமர்ந்திருக்கவில்லையே. இந்தச் செய்கை பூர்வவாசனையால் உண்டாகியதல்லவா? வாசனாமல உண்மையை நீங்களறிந்து மேலொதுங்கி நடக்கவேண்டியதற்காக இந்த நிகழ்ச்சி யுண்டானதென்று அறியுங்கள் என்று கூறி ஆசிர்வதித்துப் பன்னசாலைக்குச் செல்லும்படி விடை கொடுத்தருளினார். அந்த இதோபதேசத்தைக்கேட்ட ஐவரும் உண்மையை உணர்ந்து மகிழ்ந்தவராய் ஆரம்பத்தில் அகத்தியர் உபதேசத்தருளியதை நினைந்து அதனை மறந்ததற்காக மனம் வருந்தித் தங்கள் பன்ன சாலைக்குப் போய்ச்சேர்ந்து காய்கனி முதலியவற்றைப்

புசித்துப் பசிதீர்ந்து போகமுனி புங்கவரிடத்தில் வந்து அவர நுக்கிரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாள்களில்.

ஒருநாள் ஐவரும் முனிவரை நோக்கி சுவாமீ! இனி நாங்கள் தேக சித்தி யடைவதன் பொருட்டு ஏதாவது சில கற்ப முறைகளைக் கூறியருள வேண்டுமென்று கேட்க, அதற்கு முனிவர் ஐவர்களே! உலகத்தில் நம்மைப் போன்ற சித்தர்கள் அனுபவத்திலிருந்து வருகிற அநேக கற்ப முறைகளிற் சிலவற்றை இப்பொழுது உங்களுக்குக் கூறுகிறேன்.

அதாவது, இவ்வனத்தின் மேற்குத்திசைக் கன்னி மூலையில் தில்லை விருக்ஷமென் றொன்றுண்டு. அதனை முகம்வீங்கி விருக்ஷமென்றுஞ் சொல்லுவார்கள். அவ்விருக்ஷம் கறுப்பு நிறமாகவும், கிளைகள் சாம்பல் வர்ணமாகவும், சிறிதாகவும், இலை அத்தியிலை போலவும் இருக்கும். அதன் பாலைக் கரத்தாற்றீண்டாது அரைக்காற் படிகொண்டு வந்து தாமிரத் தகட்டை இலேசாகத் தட்டி அப்பாலில் ஒரு மண்டலம் ஊறப் போட்டுப் பின்பு அதையெடுத்து வீரமும் பூரமும் சேர்த்து அப்பாலையே விட்டு அரைத்துத் தகட்டை யெடுத்துக் கவசஞ்செய்து குக்குடபுடமிடச் சுண்ணமாகும். அச்சுண்ணத்தை ஆவின் நெய்யிற் குழப்பி மூன்றுநாள் சாப்பிடக் காயசித்தியாகும்.

இன்னொரு முறையாவது, அந்தத் தில்லை விருக்ஷமிருக்கு மிடத்திற்குத் தென்திசையில் ஒரு திட்டு இருக்கிறது. அதன் கீழே மணல் வாரி யோடை யென்ற ஓர் வாய்க்கால் இருக்கிறது. அவ்வாய்க்காலின் கரையில் சிவந்த இலைக்கள்ளி யென்றொரு மூலிகை உண்டு. அதனுடைய இலை சிவப்புநிறமாக மின்னல்போலப் பிரகாசிக்கும். காம்பு சாம்பல் நிறமாக இருக்கும். அதன் பாலைக் குன்றிமணியிடை சர்க்கரையிற் சேர்த்து மூன்று நாள் புசிக்கவேண்டும். மறு மூன்றுநாள் வரை பத்தியத்துடனிருந்து, பகலில் மோரன்னமும், இரவில் பாலன்னமும் அருந்தத் தேகசித்தியாகும் என்று கூறி யருளினர். அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் அப்படியே கற்ப மூலிகைகளைப் புசித்துக் கொண்டும், ஞானோப தேசங்களை அப்பியாசித்துக்கொண்டும் வரு நாள்களில், ஒரு நாள் ஐவரையும் நோக்கித் தன்மார்த்தன் முதலானோர்களே நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருட காலமிருப்பதாக முன்பு இவ்விடத்தில் வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந் நாள்வரை ஒருவருட காலஞ் சரியாய் விட்டது. நாமுந் தவநிட்டை புரியவேண்டியதாகவுமிருக்கிறது. ஆகையாலினிமேல் நீங்கள் இவ்வனத்திற் கடுத்த புசுண்ட மகாருஷி யாசிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய ஞானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளித் தம் பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை யழைத்து, சீடனே! இவர்களைவரையுங்கூட்டிச் சென்று புசுண்ட மகாருஷி யிடத்தில் விடுத்து வருவாயென் றுத்தரவுசெய்ய, அவ்வுத்தரவின்படி அவர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும் போகமுனிவரை அன்புற வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள். என்று சாணாங்கிமுனிவர் கூறுதலும், நாகார்சுனாதி முனிவர்கள் சுவாமீ! போக மகாமுனிவரது ...த்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும், மெய்ஞ் ஞானோபதேசங்களையும்,

காயகற்ப முறைகளையுங் கேட்டுப் பத்தியாகிய ஞானவருளைப் பெற்றோம். இனி அந்தப் புசுண்ட மகாருஷி ஆசிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் அவர் கூறியருளிய யோக ஞான கற்பமுறைகளையும் கிருபை கூர்ந் தருளிச் செய்ய வேண்டுமென்று கேட்கச் சாணாங்கிமுனிவர் கூறுவாராயினர்.

பதினைந்தாவது,
போகமகாருஷி சருக்கம்
முற்றுப்பெற்றது

உ
சிவமயம்
பதினாறாவது

புசுண்ட மகாருஷி சருக்கம்

மூன்றாவது வனம்

தக்க சதுர கிரிதனிலே தன்மார்த் தன்றான்நால்வருடன்
மிக்க புசுண்ட ரிடஞ்சென்று மேவும் பிர்ம்ம ருஷிமகத்தில்
புக்க கஞ்சா புகையிலையின் புகழார் தோற்றங் கேட்டுணர்ந்து
தொக்க கற்பங் கண்டதுவுந் தொகுத்துச் சிறிதே சொற்றிடுவாம்.

கேளுங்கள் முனிசிரேட்டர்களே! போகமகாமுனிவர் சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவருந் தென்சிசை நோக்கிப் பிரயாணமாகிக் கனை பெருமைக் காவையும், கொடிக்கானலையும், பரிமளித்தலையுடைய மலர்த்தேன் கொம்புத்தேன் முதலான தேன்கள் ஒழுகப்பெற்ற அழகிய பூஞ்சோலைகளையும், அடர்ந்த வனங்களையுங் கடந்து அப்பாதையைவிட்டு மேற்குத்திசைக்கட் சென்று சுகந்தங்களையுடைய சந்தனம், அகில், தேக்கு, வேங்கை முதலிய பலவிருக்ஷங்களும், தண்மலர்ப் பொய்கைகளும் சூழ்ந்து விளங்கிய புசுண்ட மகாருஷி வனத்தினுள் நுழைந்து ஆங்கு உயர்ந்த ஆசனத்தில் ஞானபானுவைப் போல் திவ்விய தேஜசோடு வீற்றிருந்தருஷீஸ்வரைக் கண்டு கைகட்டிவாய் பொத்திப்பயபக்தியோடு சாஷ்டாங்கமாக, நமஸ்கரித்து நின்றனர். அப்பொழுது புசுண்ட மகாருஷியுங் கருணைத் திருக்கண்ணால் அன்பொழுகக் கண்டு அவர்களை ஆசீர்வதித்து போகமகாருஷீஸ் வரருடைய சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய சமாசாரங்கள் யாவையுந் தெரிந்து கொண்டு அச்சீடனை வழியனுப்பிய பின்பு, ஐவரையும் வீற்றிருக்கச் செய்து விளம்புவார். கேளுங்கள் தன்மார்த்தன் முதலானோர்களே! நம்முடைய வனத்தில் எவ்வளவு நாட்டங்கியிருக் கலாமென வந்தீர்கள்? என்னாலென்ன விஷயம் உங்களுக்குத் தெரிய வேண்டும். அதைத் தெரிவிப்பீர்களெனக் கேட்க, உடனே தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருடகால மிகுந்து தத்துவ மெய்ஞ்ஞானோப தேசங்களையும் காயசித்தி கற்பங்களையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப்புகல, அதைக் கேட்ட புசுண்ட மகாருஷியானவர் அவர்களை நோக்கி மக்களே! அப்படியானல் நீங்களனைவரும் இவ்விடத்தில் வாசஞ் செய்வதற்கு இதன் நேர்

கிழக்கில் ஐந்தடுக்காகத் தனித்தனிப் பன்ன சாலையமைத்துக் கொள்வீர்களென உத்தரவு செய்தார். அவ்வுத்தரவின்படி ஐவரும், பன்ன சாலையமைத்து வாசஞ்செய்துகொண்டு தினந்தோறும் மகருஷியிடத்தில் வந்து அவரனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒருநாள் தன் மார்த்தன் முதலான ஐவரும் சிரோன்மணியாகிய புசுண்ட மகாருஷியை நோக்கிச் சுவாமிகளே! உலகத்திற் றங்களைப்போன்ற சித்தர்கள் கஞ்சாவையும், புகையிலையையும் கற்பமென உபயோகித்து வருகிறார்களே, அதன் விவரத்தைச் சிறிது உரைத்தருள வேண்டுமெனக் கேட்க, அதற்கு ருஷீஸ்வரர் இராஜ புத்திரர்களே! முன்னொரு காலத்தில் இச்சதுரகிரியின் மேற்றிசையிலிருக்கிற வாதமேடு என்னும் ஓர்வனத்தில் தவம்புரிந்து கொண்டிருந்த பிரமமுனிவரும், கோரக்கநாதரும், யாகசாலையொன்றுண்டாக்கி அதற்கு வேண்டிய சமித்து, நெய், நவதானிய முதலிய யாவையுஞ் சேகரித்து தேவர்களும், தவமுனிவர் குழாங்களுஞ் சூழ்ந்திருக்க மாசி மாதம் பௌர்ணமி திதியும், மகநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் இரவு பத்துநாழிகைக்கு மேல் யாகத்தை ஆரம்பித்துக் காருக பத்தியும், தட்சிணாக்கினியம், ஆகவனீயம் என்ற மூன்று அக்கினியையும் வளர்த்து ஆகுதிகள் கொடுத்து உபவாசமாக இரவும் பகலு மிருந்து அநேக காலங்களாக அரியவேள்வியைச் செய்து வந்தனர். அதை அட்டதிக்குப் பாலகரிற் சிலரும், நந்தி, பதஞ்சலி, வியாக்கிரமர் முதலான யாவரும் தெரிந்து கயிலையங்கிரியின் கண் மலைகள் சமேதராகவீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானிடத்திற் சென்று விண்ணப்பஞ் செய்தனர். அத்தருணத்தில் பரமேசுரனுடைய இடப்பாக சரீரியான உமாதேவியானவள் கடவுளை நோக்கிச் சுவாமீ! அந்தப் பிரம்முனிவரும் கோரக்கநாதரும் எதற்காக வேள்வியைச் செய்கிறார்கள்? என்று கேட்க. அதற்கு நம்பெருமான் பெண்ணே! உமாதேவியே! அம்முனிவர் தாம் சிரஞ்சீவியா யிருக்கும் பொருட்டும், உலகத்தில் இறந்த மக்களை உயிர்பெற்றெழச் செய்யும் பொருட்டும் சிருட்டி, திதி, சங்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என்ற பஞ்சகிருத்தியங்களைத் தாமே நடாத்தற்குரிய வலிமையைப்பெறும் பொருட்டும் அந்தயாகத்தைச் செய்கிறார்கள். அது பூர்த்தி பெறுமாகிலும் அவர்கள் நினைத்த வண்ணம் ஆகாது. அன்றியும், அவர்கள் அந்த யாகத்தை ஒருவாறாக முடித்துவிட்டார்களானால் அவர்கள் பெறும் பேற்றை யருளிச் செய்யவேண்டியது நமது கடமையல்லவா? அதனை நீ செய்வாயாக, என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதைக் கேட்ட பார்வதி தன் பக்கத்திலிருக்கிற அழகில் மிகுந்த மருள்மாயை இருள் மாயை என்னும் இரு மங்கையர்களை நோக்கிப் பெண்களே! இப்பொழுதே நீங்களிருவரும் பூவுலகத்திற்கொரு திலகமென விளங்கும் சதுரகிரியின் தென்திசை யிலிருக்கிற பிரமமுனிவர் வனத்துக்குச் சென்று, ஆங்குப் பிரம்ம முனிவரும் கோரக்கநாதரும் இயற்றி வருகிற யாககுண்டத்திற்றோன்றி அம்மகத்தின் பலனாக அவர்கள் பெறும் பேறாகிய கற்ப மூலிகைகளாகி அவர்கட்கு நித்தியவாழ்வைக் கொடுத்தற் பொருட்டு உங்கள் மாயாவினோத சௌந்தரிய முகவசி கரத்தால் அவர்களை வழிபடுத்தக் கடவீர் எனக் கூறியனுப்பினள், உடனே அம்மாயை மங்கையரிருவரும் பார்வதாதேவி சொற்படி சதுரகிரியிலுள்ள பிரமமுனி வனத்துக்குச்

சென்று, அம்முனிவர் செய்து வருகிற யாகாக்கினியின் கண் நுழைந்து மிக்க ரூபலாவண்ய முகவசீகரத்தோடு கண்டை கிண்கிணி சிலம்புகள் கலீர் கலீரென்று சப்திக்க வெளிவந்து தோன்றினர்.

அம்மாதர்களை யாகஞ்செய்து கொண்டிருந்த முனிவர் கண்டு ஆ! ஹா! இதென்ன ஆச்சரியம்! நாமியற்றி வருகிற இவ்வரிய மகத்திலிருந்து இருமங்கையர் ஏது காரணம் பற்றித் தோன்றியிருக்கிறார்கள். விசாரித்தறியலாம், என்று நினைத்து அவ்விரு மங்கையரையும் நோக்கி பெண்களே! நீங்களிருவரும் யார்? உங்கள் வருகைக்காக நாங்கள் இந்த யாகத்தைச் செய்யவில்லையே! வேறு காரியத்தை மனத்துட் கொண்டல்லவோ செய்கிறோம். அவ்விதமிருக்க நீங்களிந்த யாகத்திலிருந்து வெளிவர வேண்டிய விஷயம் யாது? என்று கேட்க, அதற்கு அம்மங்கையர் முனிவரே! நாங்கள் தேவருலக மங்கையர் நீர் நீண்ட நாள்களாகச் செய்து வருகிற இவ்வேள்விக்கு நாங்கள் மிகவுஞ் சந்தோஷமுற்று உம்மை மகிழ்விப்பதற்கு வந்தோமென்று கூறினர். அப்போது அங்கு யாகசாலையின் பக்கத்திற்வீற்றிருந்த வருணபகவானும், அக்கினிபகவானும், நாரதர் முதலான முனிவர்களும் அப்பெண்களின் சௌந்தரியத்தைக் கண்களிக்கப் பார்த்துப் பார்த்து மிகுந்த மோகமுற்று இத்தனை அழகுவாய்ந்த பெண்கள் எவ்விடத்தினுங் கிடையார், இது எவருடைய சிருட்டியோ! எனப் பலவாறு புகழ்ந்து கொண்டிருந்தனர்.

அதைத் தெரிந்த பிரமமுனிவரும், கோரக்கநாதரும் இவ்விரு பெண்களின் வனப்பைக்கண்டு தேவர்களும் மகரிஷிகளும் அளவிலாத மோகத்தை அடைந்தார்களெனில், உலகத்துள்ள மானிடர் கண்டால் மனங் கலங்கா திருப்பரோ! ஆதலால் இவ்விரு பெண்களையும் நாமினிச் சபித்துவிட வேண்டும் எனச் சிவனருளியக்கத்தால் எண்ணியதை அறிந்த அம்மங்கையரிருவரும் சுவாமிகளே! நீவிர் இருவரும் எங்களுக்கு ஏதோ இப்போது சாபத்தைக் கொடுக்கப் போகிறதாகத் தெரிகிறது. அப்படி எவ்இத சாபங் கொடுத்தபோதிலும் அது தாங்கள் எந்நாளும் மேன்மையடையும்படியான தாகவேயிருக்கும். உமது சித்தம்போலச் செய்தருளுக என்று வேண்டிக்கொண்டனர். அச்செய்தியைத் தெரிந்த வருணனும், அக்கினியும் பிரமமுனிவரை நோக்கிச் சுவாமீ! யாகத்திலிருந்து தோன்றிய இப்பெண்மணிகளை நாங்கள் கண்டு மோகித்து ஆசையுற்றதைத் தாங்கள் தெரிந்திருந்தும், எதற்காக அவர்களைச் சபிக்கப் போகிறீர்கள்; ஒருக்கால் யாகத்தில் நாம் நினைத்தது வேறு, வெளிவந்தது வேறு என்று நினைத்துத் தாங்கள் கோபமாகச் சபித்தபோதிலும், நாங்களிருவரும் அப்பெண்களை யடையும்படியான சாபத்தைக் கொடுத்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அதற்கு முனிவர் தேவர்களே! இப்பொழுத நான் அப்பெண்களைச் சபிக்கப் போகிறதில் நீங்களிருவருஞ் சேர்ந்தாற்றான் சித்தானந்த முண்டாகும். அல்லாவிடில் இல்லை. பதறவேண்டாம் எனக்கூறி, அவ்விரு பெண்களில் மருள்மாயையின் கையைக் கோரக்கரும், இருள் மாயையின் கையைப் பிரமமுனிவரும் பற்றிக்கொண்டு சென்னியில் சாபமந்திர உச்சாரணத்தால் தீர்த்தத்தைப் புரோட்சிக்க, அவ்விரு பெண்களும் இரண்டு செடிகளாக நின்றனர்.

இக்கண்காட்சியைப் பார்த்திருந்த தேவர்களும், முனிவர்களும் பிரமமுனிவர் கைப்பற்றி நிற்கின்ற செடிக்குப் பிரம பத்திரமென்றும், யாகப் புகையிலிருந்துண்டானதால் புகையிலையென்றும், கோரக்கநாதர் கைப்பற்றி நிற்கின்ற செடிக்குக் கோரக்கர் மூலிகை என்றும், அது புசிப்பவர்களுக்கு அமுதமா யிருத்தல் பற்றிக் கஞ்சா என்றும் பெயரிட்டு இவ்விரு வஸ்துகளுக்கும் தண்ணீர், நெருப்பு இல்லாவிடில் உருசியாது. ஆதலால், வருணபகவானையும், அக்கினி பகவானையும், எக்காலமுஞ் சேர்ந்திருப்பீர்களெனக் கூறினர்.

இங்கிப்படியிருக்க, கைலையங்கிரிவாசராகிய சிவ பெருமான் உமையவளை நோக்கிப் பெண்ணே! பூலோகத்தில் சதுரகிரியில் வசிக்கும் பிரமமுனிவர் வனத்துக்கு நீ அனுப்பிய மாயைப் பெண்களிருவரும் நமது எண்ணம்போலப் பெருமூலிகைகளாய் விட்டார்கள். ஆகையால் நாம் இப்பொழுதே ஆங்குச் சென்று முனிவர்களை மகிழ்வித்தல் வேண்டும் என்று கூறி உடனே உமாதேவியோடு ரிஷபவாகனாரூடராகப் பிரம முனிவர் யாகசாலைக்கு எழுந்தருளினர். அப்பொழுது ஆங்குச் சூழவீற்றிருந்த தேவர்களும், முனிவர்களும் அவர்களைக் கண்டு எழுந்து சிரமேற்கரங் கூப்பிப் போற்றிப்புகழ்ந்து தோத்திரிக்க நம்பெருமான்யாவருக்கும் வாழ்த்துகூறிப் பிரமருஷியையும், கோரக்கரையும் நோக்கி முனிவர்களே! நீங்கள் யாகஞ்செய்து வருகிற மருமங்கள் யாவையும், அறிந்தோம். ஆனால் உமது எண்ணத்தின் பிரகாரம் இம்மகத்தினாற் பஞ்சகிருத்தியங்களையும் செய்தல் உம்மாலாகாதகாரியம். அம்மகத்திற்கு அத்தகைய வலிமை கிடையாது. அன்றியும் உமக்குப் பஞ்சகிருத்தியஞ் செய்யும் வலிமை கிடைப்பதும் அரிது. மிக்க சிரத்தையோடு இந்த யாகத்தை நீர் இதுநாள் வரை செய்து வந்ததற்கு நாம் மகிழ்கின்றோம் என்று திருவாய் மலர்ந்தருளி இம்மலையில் அகாலமரணமானவர்களைப் பிழைக்கும்படி செய்தற்குரிய ஆற்றலுமக்கு உண்டாவதாக; என்றருளிச் செய்தனர். அப்பால் யாகத்தை நிறைவேற்ற ஆங்கு வந்திருந்த யாவர்க்கும் அவரவர்கள் மனோ பீஷ்டப்படி வேண்டிய வரங்களை எல்லா மீந்து ரிஷப வாகனா ரூடராகக் கயிலைக்குச் சென்றனர். அதன்பின் தேவர்களும் தவமுனிவர்களும் அவரவர்க ளிருப்பிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆதலா லன்றுமுதல் கோரக்கநாதர் வர்க்கத்தார் கஞ்சாவையும், பிரமமுனிவர் வர்க்கத்தார் புகையிலையையும் கற்பமூலிகையாகப் புசித்து வருகிறார்கள் என்று கூறியருளியதைக் கேட்ட ஐவரும் சந்தோஷத்தையடைந்தவர்களாக எழுந்து முனிவரை வணங்கி விடை பெற்றுத் தங்கள் பன்னசாலைக்குச் சென்றிருந்தார்கள்.

மற்றொரு நாட்காலையில் தன்மார்த்தன் முதலான ஐவரும் நித்தியஸ்நானவ வநுட்டான ஜெபதபங்களெல்லாமுடித்தபின் ஆகாரத்துக்காகக் காய்கனி பறிப்பதற்குத் தன்மார்த்தன் செல்வதைக் கண்ட சூரசேனனானவன், அண்ணா! யான் சென்று காய்கனி கொண்டுவருகிறேனெனக் கூறி விடைபெற்று வடதிசை நோக்கி வெகுதூரம் நடந்து அடர்ந்தவனத்தினுள் நுழைந்து செல்லும்பொழுது, ஆங்கு ஒரு பலாவிருக்ஷத்தின் கண் அநேக கனிகள் நிறைந்து பழுத்துத் தொங்கிக் கொண்டிருத்தலையும் அவைகளிலொரு கனி வெடித்துச் சுளைகளினின்று ஒழுகுகின்ற தேனையும், அதன்

பரிமளத்தையுங் கண்ணுற்று அளவில்லாத பிரியத்தைக் கொண்டவனாகி, அவ்விருக்ஷத்தின் சமீபத்திற் சென்று கனிகளைக் கொய்யும்போது, அக்கனிகளிலெல்லாம் நன்றாய்ப் பழுத்துவெடித்திருந்தமையால், சுளைகளெல்லாம் வெளிவந்து கொண்டிருந்தன. அவ்வாறு வெளி வருவதைத் தெரிந்த சூரசேனன் ஓ! கோ! சுளைகளெல்லாம் கீழ்வீழ்கின்றனவே என எண்ணி அச்சுளைகளிற் சிலவற்றைப் புசித்தனன்.

அப்படிப் புசித்துச் சிறிதுநாழிகை சென்றபின் தனக்கு அதனால் ஏதோ ஓர்வித மயக்கமுறுவதை யுணர்ந்து, இதென்ன மாயமோ? எவர் செய்யுபாயமோ! நாவுலருகின்றதே! கண்களிருளுகின்றனவே! கால் தள்ளாடுகின்றதே! இனி எவ்வாறுய்வேன்! பலாக்கனியைத் தவிர வேறொன்றும் நான் உண்ணவில்லையே! அந்தோ! ஏது செய்வேன். இந்தச் சமயம் என் சமீபத்திலிருந்து சிகிச்சை செய்வதற்கொருவருமில்லையே! ஆங்கு என் அண்ணன் முதலானோர்கள். நாம் காய் கனி கொண்டு வருவேனென வழிமேல் விழிவைத்து நோக்கிக் கொண்டிருப்பார்களே! எனப் பலபல வாறாக நினைந்தழுது புலம்பிக் கீழுட்கார்ந்து ஏது நாமினிப் பிழைக்கமாட்டோம் போலிருக்கிறது. ஒருக்கால் நம் அண்ணன் முதலானோர்கள் நம்மைக் காணோமென இவ்விடத்துக்குத் தேடிவந்து பசியினால் இப்பலாக்கனியை யுண்பார்களாகில் அவர்களுக்கு மிக்கதிதானே வரும் என நினைந்தவனாகிப் பூமியில் மண்ணைக் குவித்துப் பரத்தி எழுதத் தொடங்கினான். அதாவது, அண்ணன் முதலானோர்களே! நான் இந்த இடத்திலிருக்கிற பலாவிருக்ஷத்தில் நன்றாகப் பழுத்து வெடித்த கனியின் சுளைகளைப் புசித்ததனால் ஓர்வித மயக்கமுற்று அழுதுகொண்டிருக்கிறேன். இனி யெவ்வாறாவேனோ தெரியாது. ஆகையா லிவ்விருக்ஷத்தின் கனியை நீங்கள் புசியாதீர்கள்; என்று எழுதிய உடனே மூர்ச்சையாகினன்.

இங்கிப்படியிருக்க, ஆங்குப் பன்னசாலையி லிருந்த தன்மார்த்தன் முதலான நால்வரும், காய்கனி பறித்து வரச் சென்ற சூரசேனன் இன்னும் வரக்காண்கிலோமே என்ன காரணம். அந்தோ அடர்ந்த வனங்களினுட்சென்று வழிதெரியாதலைகிறானோ? துட்ட மிருகங்களின் கொடுமையாலுயிர்ச்சேத மாகினானோ? அல்லது அவைகளுக்குப் பயந்து விருக்ஷங்களின் மீதேறி ஒளிந்துக் கொண்டிருக்கின்றானோ? என்னவோ யாதொன்றுந் தெரியவில்லையே! நம்மை விடுத்தகன்று சிறிது நாழிகையாவது தனித்திருக்க மாட்டானே! என்ற ரற்றினர். கடைசியாய்த் தன்மார்த்தன் எதற்கும் நாம் சென்று தேடிப்பார்த்துவருவோம் என நினைந்து வட திசை நோக்கி வெகு தூரஞ் சென்று அடர்ந்த ஓர் வனத்தினுள் நுழைந்தாள்.

ஆங்குப் பலவின்கனித் தேறலினது வாசனையானது வீச, அவ்வாசனை வருகிற வழியை நோக்கிச் செல்லும்பொழுது அவ்விடத்திலிருந்த ஓர்பலாவிருக்ஷத்தையும், அதன் கீழ்வெடித்த பலாக்கனியின் சுளைகளெல்லாஞ்சிதறுண்டிருப்பதையும், பக்கத்தில் சூரசேனன்மூர்ச்சித்துக் கிடப்பதையுங் கண்ணுற்றுத் தன்னிருகண்களினின்றும் நீர் ஆறாகப் பெருக அழுது புலம்பி ஒருவாறு மனந்தேறி,

இவனை இப்படி மூர்ச்சையாகிக் கீழேவிழும்படி எவர் செய்தனரோ? அல்லது விஷஜெந்துக்களேதேனுந் தீண்டிற்றோ? என இவ்வாறாக நினைந்து சூரசேனை உற்று நோக்குகையில், கீழே எழுதியிருந்த எழுத்துக்கள் பார்வைக்குத் தோன்றின. உடனே அவற்றை வாசித்து உண்மை தெரிந்து நம்முடைய செயலினா லாவதொன்றுமில்லை என்று கூறி, இலைதளிர், சருகு முதலியவைகளாற் சூரசேனனுடைய சரீரத்தை மூடி எந்த சீவஜெந்துக்களுந் தீண்டாதபடி அரிய மந்திரங்களைக் கூறி அவ்விடத்தை விட்டகன்று புகுண்ட மகாருஷி ஆசிரமத்தில் வந்து அவரடி மலரை வணங்கிச் சூரசேனனுடைய செய்தி முழுமையுந் தெரிவித்து மனவருத்தத்தோடு நிற்க, அதைருஷீஸ்வரர் கேட்டுச் சிறிது நாழிகை மௌனமுற்றுப் பின்தன்னுடைய தவமகிமையாற் றெரிந்து, அப்பா தன்மார்த்தனே! வருந்தாதே இப்பொழுது அவனுக்கு ஒன்றுமில்லை. அவன் பலாக்கனியைப் புசித்து மயக்கமுற்று மூர்ச்சித்திருக்கின்றான். என்னவெனில் அந்தப் பலா விருக்ஷத்தின் கனிகளில் ஒரு கனி நன்றாகப் பழுத்து வெடித்து வாசனை வீசிக்கொண்டிருந்ததை ஒரு நாகசர்ப்பம் அறிந்து அவ்விருட்சத்தின் மேலேறி அதை அருந்துவதற்கு ஆரம்பிக்குப்போது காற்றினால் அக்கனி அசைய அதைப் பார்த்துச் சர்ப்பம் தனக்கு ஏதோ ஓர்வித ஆபத்து வந்துவிட்டதென நினைத்துக் கோபித்துச் சீறி அக்கனியைத் தீண்டி அதன்விடத்தைக் கக்கிச் சென்றிருக்கிறது. அவ்விஷம் சுளையிற் பரவியிருந்ததனால் அதைப் புசித்து மயக்கமுற்றிருக்கிறான்.

ஆகையால் இப்பொழுதே நீ மறுபடியும் ஆங்குச் சென்று நாம் கொடுக்கிற இம்மூலிகையைக் கசக்கி அவன் தேகமுழுமையுந் தடவுவாயாகில் மயக்கமாகிய மூர்ச்சை தெளிந்தெழுந்திருப்பான் என்று கூறி நாகதாளி யென்னும் ஒரு மூலிகையின் இலையைப்பறித்து மந்திரஞ் சொல்லிக் கொடுத்தனுப்பினர். அவ்வாறே தன்மார்த்தன் ஓடோடியுஞ் சென்று மூர்ச்சித்துக் கிடக்கிற சூரசேனனுடைய தேகமுழுமையும் அம்மூலிகையைக் கசக்கித் தடவினவுடனே சூரசேனன் மூர்ச்சை தெளிந்து நித்திரை நீங்கி எழுபவன் போல் எழுந்து, தன் தமையனைக் கண்டு ஆலிங்கனஞ்செய்து அவனால் தான் மூர்ச்சைதெளிந் தெழுந்ததைக்கேட்டு அளவிலா மகிழ்ச்சியடைந்ததன்மேல், அவ்விருவரும் வேறு சில காய்கனிகளைப் பறித்துக்கொண்டு தங்களுடைய பன்னசாலைக்கு வந்து சேர்ந்து தனமதி முதலானோர் களிடத்தில் இச்செய்திகளைத் தெரிவித்துச் சந்தோஷமடைந்தனர். அதன்பின் எல்லோரும் காய்கனிகளைப் புசித்துப் பசிதீர்ந்து மகருஷி சமுகத்தில் வந்து அவரை அன்புற வணங்கி அவரது ஞானாநு பூதியாகிய அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒரு நாள் ஐவரும், மகருஷியைநோக்கி சுவாமீ! தங்களைப் போன்ற யோக ஞானசாதனைகளையுடைய பெரியோர்கள் மனலய முறுதற்குப் பிராணாயாமஞ் செய்யவேண்டுமெனக் கூறுகிறார்களே! அந்தப் பிராணாயாமமென்பது என்ன? அதை எதற்காகச் செய்யவேண்டும்? அதனாலடையும் பயன்யாது? அவ்விஷயங்களை அடியேங்களுக்கு நன்கு புலப்படும்படி திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனக்கேட்க, அதற்கு முனிவர், இராஜபுத்திரர்களே! பிராணாயாமம் என்பது பிராண வாயுவைத் தடுப்பது என்றாகும். அவ்வாயுவி

னசைவுள்ள போது சித்தமசையும், அது அசையாவிடின் சித்தம் அசையாது. ஆகையால், மனமடங்கவிரும்பி அதனைச் செய்வதன்றி வேறில்லை. நிற்க, பூரகம், கும்பகம், ரேசகம் என்ற இம்மூவகையில் பூரகமாவது: சந்திரநாடி சூரிய நாடிகளினாற் பிராணவாயுவை நிறுத்துவதாகும். ரேசகமாவது: நிறுத்திய பிராணவாயுவைத் தைரியமாக விடுதலாகும்.

இப்பிராணாயாமம் மனோலய மாவதற்குரிய சிறந்த சாதனமாகையால் நல்லாசிரியனருள் பெற்று அவனாற் காட்டிக்கொடுக்கப்பெற்ற முறையிற்சிறிது சிறிதாக அதனைக் கணக்குப்படி பயின்று வருதல்வேண்டும். பிராண வாயுவைத் தடுக்காவிடில் கள்வனைச் சிறையினின்று விடுத்தவுடன் மீண்டும் அக்களவுத்தொழிலை எவ்வாறு நாடிச்செல்கின்றானோ, அவ்வாறு மனமானது விஷயங்களையே நாடிச்செல்லும் என்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. பிராணாயாம சாதனத்தால் தவயோக ஞானங்கள் கைவரும் அந்த ஞானத்தால் ஜனன மரணத்தைப் போக்கித் துக்கமற்ற சுகத்தைப் பெற்று மோனமுற்று எங்கும் நிறைந்த ஈசனே தானாகி அவனிலிரண்டறக்கலந்து சச்சிதானந்தமாய் விளங்கி முத்தியாகிய பேரின்பநிலையை அடையலாகும். யோகத்தால் அட்டமாசித்திகளைப் பெறலாம். இத்தன்மைகளையுடைய அத்தவ யோக ஞானங்களுக்கு மூலமாகிய பிராணாயாமத்தை நாம் இதுநாள்வரை செய்து வருகிறதனால் ஊழியூழி காலந்தோறும் இறவாமல் காகருபமாக இருந்து அப்பால், இச்சதுரகிரியின் கண்மேவியிருந்து வருகிறோம். அதனாலெமக்குக் காகபுசுண்டர் என்ற ஒரு பெயரும் வழங்கலாயிற்று. நீங்களும் அந்தத் தவயோக ஞானங்கருதி அதற்கு மூலமாகிய பிராணாயாமத்தைச் செய்து வரவேண்டுமெனப் பிரியமுற் றீர்களாகில், முதலில் உங்கள் தேகத்தைக் கற்ப மூலிகைகளாற் சித்திசெய்து கொள்ள வேண்டுவது அவசியம். ஆகையால் அதற்காகச் சில காயகற்ப முறைகளையுங் கழறுகின்றோம் கேட்பீர்களாக.

அதாவது, இந்தச் சதுரகிரி மகாலிங்க மூர்த்தியின் றிருச் சன்னிதிக்கு வடதிசையில் ஒரு நாழிகை வழிதூரத்திற் கப்பால் முண்டக வனமென்றொரு வனமுண்டு அவ்வனத்திற்கு வடமேற்கு மூலையில் முண்டக விருக்ஷமென ஒரு மரமிருக்கிறது. அது ஆலவிருக்ஷம் போலும், இலை சிறிதாகவும், காய்கள் கல்லத்திக்காய் போலவுமிருக்கும். மரத்தைத்தட்டினாற் பால்வரும், அப்பாலை அரைக்காற்படியாக முப்பது நாளைக்குச் சாப்பிட மூர்ச்சையாகும். அச்சமயத்தில் ஒருவர் சமீபத்திலிருந்து ஆவின் பாலைக் காய்ச்சித் தேன்விட்டு அடிக்கடி ஒரு கரண்டிவீதம் மூர்ச்சை தெளியும்வரை கொடுத்துக் கொண்டே வந்தால் மூர்ச்சை தெளிந்து ஒரு வாரத்துக்குள் தேகத்தில் சட்டை கழலும். அப்பொழுது சரீரந்தங்க நிறமா யிருக்கும். மலஜலம் பேதிக்கும் காயசித்தியாகும்.

இன்னுமொரு முறையுமுண்டு, அதாவது அந்த முண்டக விருக்ஷத்தின் பக்கத்தில் வட்டப்பாறை ஒன்றுண்டு. அதற்கு மேற்றிசையின் கண் தண்ணீர்க் கசிவும், நெரிகற்களும், நிறைந்த இடத்தில் அழு கண்ணி என்றொரு மூலிகையுண்டு. அதன் இலை பலாச்சுளை போல இருக்கும். எந்த நேரமும் நீர் வடிந்து கொண்டிருக்கும் பூ மஞ்சள் நிறமாகவும், காய்கள் செந்தட்டிக்காய்கள் போலவும் இருக்கும். அதைப் பூர்வபக்ஷம் பூசநக்ஷத்திரத்தன்று சாபம் நீக்கிச் சமூலத்தையும் பிடுங்கி வந்து சூரணித்து ஆவின் நெய்யுடன் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வர நரை திரை மாறும்.

இன்னுமொரு முறையுமுண்டு. அதாவது, அந்த அழுகண்ணி மூலிகை இருக்கிற இடத்திற்கு மேல்புறமாகத் தொழுகண்ணி என்னும் ஒரு மூலிகை உண்டு. அதன் இலை அலரியிலை போலிருக்கும். பூ வெண்மையாயும், தூர் கறுப்பு நிறமாயுமிருக்கும். அன்றியும் அது கதிரவனை நோக்கியே நிற்கும். அவ்வடையாளத்தைக் கவனித்து அந்த தொழுகண்ணி இலையிற் கொஞ்சமும் முன் கூறிய அழுகண்ணி மூலிகை இலையிற் கொஞ்சமும் சமனெடை சேர்த்துச் சூரணித்து உலக்கைச் சத்தமில்லாத இடத்திலிருந்து திரிகடிப் பிரமாணம் ஆவின் பாலிற் போட்டு அருந்தினால் தேக சித்தியாகும். ஆகையால் நீங்கள் இக்கற்பங்களைப் புசித்து முதலிற் காயசித்தி செய்து கொள்ளுங்கள், எனக் கூறியருளினார்.

அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும், ருஷீஸ்வார் சொற்படி காயகற்பங்களைப் புசித்துக் கொண்டு வரும் பொழுது ஒருநாள் ருஷீஸ்வர் ஐவரையும் நோக்கி, இராஜபுத்திரர்களே நீங்கள் நம்முடைய வனத்தில் ஒரு வருட காலமிருப்பதாக முன்பு இவ்விடத்தில் வரும் போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள் வரை ஒரு வருட காலஞ் சரியாகி விட்டது. நாமும் இனித் தவம்புரிய வேண்டியதாகவு மிருக்கிறது. ஆதலாலினிமேல் நீங்கள் இவ்வனத்திற்கு அடுத்த உரோமருஷி யாசிரமத்திற் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள், என்று திருவாய் மலர்ந்தருளித் தம் பக்கத்திலிருந்த சீடர்களி லொருவனை யழைத்துச் சீடனே! இவர்களை வரையுங் கூட்டிச் சென்று உரோம ருஷீஸ்வரரிடத்தில் விடுத்து வருவாய் என்றுத்தரவு செய்ய, அவ்வுத்தரவின்படி அவர் சீடனும், தன்மார்த்தன் முதலான ஐவரும் புசுண்ட மகாருஷீஸ்வரரை அன்புற வணங்கி விடை பெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள், என்று சாணாங்கி முனிவர் கூறுதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! புசுண்ட மகாருஷியாசிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும், மெய்ஞ்ஞா னோப தேசங்களையும், காய கற்பமுறைகளையும் நாங்கள் கேட்டுத் துன்பமாகிய பெரிய சாகரத்தைத் தாண்டினோம். ஆனால் எம்பெருமானே!

புசுண்ட மகாருஷியானவர் தாம் காகவடிவப்புசுண்ட ரென்று தன்மார்த்தன் முதலிய ஐவருக்குங் கூறினரன்றோ? அப்படிக் கூறுங் காலத்தில் அவர் எப்படி இருந்தார்? காகவடிவாயிருப்பரேல் அவருக்கும் ஓர் ஆசிரமும் வேண்டப்படுமோ? விநாயகர் யானைமுகங் கொண்டருளினாற் போல இவர் காகமுகங் கொண்டருளினரா? பட்சியிற் காகஞ் சண்டாளத்துவ முடையதாகலின் அவ்வடிவத்தையா அவர் விரும்பிக் கோடல் வேண்டும்? இத்தடைகளுக்கு விடையருளி எங்களைத் தெளிவு படுத்தல் வேண்டும், என்று நாகார்ச்சுனாதி முனிவர்கள் வேண்ட, சாணாங்கி முனிவர் கூறுவார்.

அன்பர்களே! நீவிர் நன்று வினாவினீர், யாம் இவ்வினாக்கட்கு ஓர் விடை கூறுகின்றோம் கேண்மின். முனிவர்களே! புசுண்ட மகருஷீ அழியா நிலைமையையடைந்த ஒரு மகருஷியாவர். அவர் பிரளயந்தோறும் அவிட்ட நாள் என்னும் நக்ஷத்திரப் பதவியை அடைந்து மீண்டும் உலகந் தோன்றும் பொழுது ஈண்டுச் சித்தர் குழாத்துடன் வந்து வாழ்வோராவர். அவிட்ட நாள் காக்கை வடிவமாக இருத்தலின் அவர் நாம் காகவுருவுடையேமா யிருப்போம் என்றார். இவ்வளவே யன்றி

அவர் ஒரு வாயசமா யிருக்கவில்லை என்றறிக என்றார். அதனைக் கேட்ட முனிவர்கள் அகமகிழ்ந்தவராய் இனி அந்த உரோமருஷி யாசிரமத்தில் நடந்த சரித்திரங்களையும், அவர் கூறியருளிய ஞானகற்ப முறைகளையுங் கிருபை கூர்ந்தருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கி முனிவர் கூறுவாராயினர்.

பதினாறாவது,
புகுண்ட மகாருஷி சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்
பதினேழாவது

உரோமருஷி சருக்கம்

நான்காவது சருக்கம்

சாற்றுமுயர் சதுரகிரி தனில்ரோம ருஷியுறையுஞ்
சாரல் சென்று
ஆற்றுதவ மாலினிதன் மைந்தனுக்குக் கடனுதவி
யதுவுந் தன்பால்
ஏற்றுதவ வந்தமகன் பாற்பொன்னைப் பெற்றதுவு
மியையக் கேட்டுக்
கூற்றினைவெல் கற்பம்ஐவர் தேர்ந்துணர்ந்த கதையு
மினிக் கூறுவோமே.

கேளுங்கள் முனிசிரேட்டர்களே! புசுண்டமகாருஷீஸ்வரர் சீடனுடன், தன்மார்த்தன் முதலான ஐவரும், தென் மேற்குத் திசையை நோக்கிப் பிரயாணமாகி எல்லைக் குட்டம் பாச்சற்களம் என்ற மண்மலைகளையும், சதுரகிரியின அழகிய முகட்டிலிருந்து, பிரகாசத்தை வீசுகின்ற, விரிந்த கிரணங்களை யுடைய, வெண்மையான யானைக் கொம்புகளையும், அகில், சந்தனம் முதலிய பல விருக்ஷங்களின் துண்டங்களையும், தேக்கு மரங்களினுடைய விசாலமாகிய கிளைகளையும், முறுத்து வாரிக் கொண்டு வருகிற வெள்ளருவி முதலிய கானாறுகளையும் பொன்னைப் போற் பிரகாசிக்கின்ற சிறைகளை யுடைய வண்டினங்க ளானவை மெல்லிய பூவரும்புகளின் மேல் விழுந்து மிதித்தலினால், அவ்வரும்புகளிலிருந்து ஒழுகுகின்ற தேனும், பிற இடங்களிலுள்ள மா, பலா முதலான விருக்ஷங்களின் பழங்களானவை கனிய அவைகளி லிருந்து ஒழுகுகின்ற தேனும், ஒன்று சேர்ந்து ஆறாகப் பெருக்கெடுத்துச் சென்று பாய்கிற அனேக பொய்கைகள் நிறைந்த வனங்களையும், நெருக்கமுற் றிலகுகின்ற பயங்கரமான வனங்களையும் கடந்து, அப்பால் வண்டுகளானவை செழிப்பாகிய புட்பங்களிலிருந்து இராகங்களைப் பாடிக்கொண்டும், மான்குட்டிகள் புலியின் முலைப்பாலுண்டு கொண்டும், தருக்கள் நறுமணங் கமழத் தண்ணிய நிழலைச் செய்துகொண்டும், களிப்பினால் மிகுந்த மயில்களானவை தம் தோகையை விரித்து ஆடிக்கொண்டும். இருப்பதாகிய தேன் பெருகுகின்ற மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த உரோமருஷி வனத்துட்சென்று ஆங்குத்தம் ஆசிரமத்தின் கண் வீற்றிருந்த உரோமருஷியைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நிற்க, ருஷிஸ்வரர் ஐவர்களுக்கும் ஆசிவசனங்கூறி அவர்களைக் கூட்டிவந்த புசுண்ட மகாருஷியினுடைய

சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய சமாசாரங்கள் முழுமையுந் தெரிந்து, அச்சீடனை வழியனுப்பிய பின்பு, ஐவர்களையும் வீற்றிருக்கச் செய்து சொல்லுவார். தன்மார்த்தன் முதலானோர்களே! இவ்வனத்திலெத்தனை நாள் தங்கியிருக்கலாமென வந்தீர்கள்? என்னால் என்ன விஷயங்கள் உங்களுக்குத் தெரியவேண்டும்? அவற்றைத் தெரிவிப்பீர்களெனக்கேட்கத் தன்மார்த் தன் முதலானோர், சுவாமீ! தங்களுடைய வனத்தின் கண் ஒருவருட காலமிருந்து, ஞானோபதேசங்களையும், கற்ப முறைகளையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப் புகல, அதைக்கேட்ட ருஷீஸ்வரர் அப்படியானால் நீங்களிவ்விடத்தில் வாசஞ்செய்வதற்கு, இதன் நேர் வடக்கில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதிலிருந்து வருவீர்களென்று ஆஞ்ஞாபிக்க, உடனே ஐவரும், ருஷீஸ்வரர் சொற்படி பன்னசாலையமைத்து, அதில் வாசஞ்செய்து கொண்டு தினந்தோறும், தத்துவார்த்தாதி யுபதேசங்களைக் கேட்டு வந்தார்கள். ஒருநாள் தன்மார்த்தன் முதலான ஐவரும், உரோமருஷியை நோக்கிச் சுவாமீ! இவ்விடத்திற் கருத்த கீழ்த்திசையில் பெரிய கல்விளக்கொன்று இருக்கிறதே! அதன் விவரமென்ன? அதை எதற்காக அந்த இடத்தில் அமைத்து வைத்திருக்கிறார்கள்? அதை இன்னதென மொழிந்தருள வேண்டுமெனக் கேட்க ருஷீஸ்வரர் கூறுவார்.

ஐவர்களே! முன்னொரு காலத்தில், இவ்வனத்தின் கண் மகாமகத்துவம் பொருந்திய மாலினி மகாருஷி என்றொருவரிருந்தார். அவர் மாதேவி என்னுங் கற்பிற் சிறந்த உத்தமியை மனைவியாகக் கொண்டு, கிருகஸ்தாச்சிரம தருமத்தின்படி, இல்லறம் வழுவா தொழுகி வருங்காலத்தில் மாதேவி கருப்பமுற்று நல்ல சுபயோக சுபதினத்தில், இரட்டை யாண்புத்திரரைப் பெற்றாள். அதுகண்ட மாலினி மகாருஷியானவர் மிகுந்த சந்தோஷ முற்று அவ்விரண்டு ஆண்குழந்தைகளுக்குஞ் செய்ய வேண்டிய சடங்குகளனைத்துஞ் செய்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அப்பிள்ளைகளை வளர்த்து வந்தனர்.

அப்பால் அக்குழந்தைகளுக்கு இரண்டு வயதாகுங்காலத்திற் ஒருநாள் தாயானவள் வழக்கம்போல் குழந்தைகளுக்கு ஆகாரத்தைக் கொடுத்துப் பக்கத்திற் படுக்க வைத்திருக்கும்போது குழந்தைகளிரண்டும் ஒன்றுக் கொன்று முகத்தை நோக்கி ஆ-ஈ-ஊ-ஏ-ஓ என்று இவ்விதமாகப் பலவார்த்தைகளாடிச் கொண்டிருப்பதை, மாலினி மகாருஷீஸ்வரர் ஐந்தெழுத்துப்பொருள் தெரிந்தவராதலால் அக்குழந்தைகளின் பூர்வஜன்ம ஞானத்தை நன்கு தெரிந்து நகைபுரிந்தனர். அதைப் பக்கத்திற் குழந்தைகளோடு சயனித்துக்கொண்டிருந்த மாதேவியானவள் கண்டு உடனே எழுந்து ருஷிஸ்வரரை நோக்கிச் சுவாமி! தாங்கள் இவ்விடத்திலென்ன அதிசயத்தைக்கண்டு இப்பொழுது நகைத்தீர்கள்? அதை அடியாளுக்குத் தெரியச் சொல்ல வேண்டுமென்று கேட்க, அதற்கு மாலினி மகாருஷி கூறுவார்.

பெண்மணி! நான் முன் ஜென்மத்தில், வைசிய குலத்திற் பிறந்து, அனேக வியாபாரங்களைச் செய்து கொண்டு வருநாளில் ஒரு வாணியனிடத்தில் கடனாகப் பத்துக்குடம் எண்ணை வாங்கி அதன் விலையைக் கொடாமற் றெய்வீகமா யுயிர்

துறந்து விட்டதாகவும், என்னைப்போ லொரு வைசியன் என்னிடத்திற் கடனாக ஆயிரம்பொன் வாங்கி அதை மறுபடி எனக்குக் கொடாது அவனு மிறந்து விட்டதாகவும், அந்த வாணியன் கடனை வாங்கிக்கொண்டு செல்வதற்கு ஒரு குழந்தையாகவும், எனக்குச் செலுத்த வேண்டிய கடனைத் தீர்த்து விட்டுப் போவதற்கு என்னிடத்திற் கடன்வாங்கிய வைசிய னொரு குழந்தையாகவும், பிறந்திருக்கிறோமென்று நம்மிரண்டு குழந்தைகளும், ஒன்றோடொன்று வார்த்தை யாடிக் கொண்டிருந்த ஒலிப்பொருளைத் தெரிந்து நகைத்தேனே தவிர, வேறு யாதொன்று மில்லையென்று கூறினர். அதைக்கேட்ட மாதேவியானவள் நல்லது அப்படியாவென மிகுந்த விசனமுற்று ருஷீஸ்வரரை நோக்கி சுவாமீ! இக்குழந்தைகளிரண்டும் நம்மிடத்தில் வளர்ந்து கடைசியாக நாம் கொடுக்க வேண்டிய எண்ணெய்க் கடனைப் பெற்றுக் கொண்டும். நமக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் பொன்னைச் சம்பாத்தியஞ்செய்து கொடுத்துவிட்டும் போய்விடுமே, அப்பொழுது நாமென்ன செய்வோம் என வியாகுல முற்றவளாய் எவ்விதமிருந்தாலும் நாம் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்து விடவேண்டியதுதான்.

ஆகையாலதற்கு வேண்டிய தந்திரங்களைச் செய்ய வேண்டும் எனக் கூறினள். அதைக் கேட்ட ருஷீஸ்வரர் அவ்வாறே செய்வோமெனக் கூறித் தன் பக்கத்திலிருந்த சீடனால் பத்துக்குடம் நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டு வரும்படிச்செய்து கல்விளக் கொன்றமைத்து அதற்குத் தக்க திரிபோட்டு அவ்விளக்கு நிறைய எண்ணெய் ஊற்றித் தன் இரண்டு குழந்தைகளையும் அவ்விளக்கின் பக்கத்திற் படுக்கவைத்துத் தீபமேற்றிக் கொண்டு வந்தனர். அப்பால் அந்தப் பத்துக்குடம் எண்ணெய் தீரும்வரை தீபம் எரிந்து அதன்பின் எண்ணெய் இல்லாது முற்றி அணைந்து புகைந்தது. உடனே ஒரு குழந்தையு மிறந்தது. அதுகண்ட மாதேவியானவள் வாய்விட்டலறி யழுது துடிதுடிப்பதைக் கண்ட மாலினி மகாருஷி சனன மரண அந்தரங்க ஞானத்தைப் போதித்து அவளுடைய துக்கத்தை மாற்றிச் சந்தோஷிக் செய்து, பெண்மணி! வாணியனாகிய ஒரு குழந்தை நாம் கொடுக்க வேண்டிய கடனை வாங்கிக்கொண்டு சென்றது. இனி வைசியனாகிய இந்தக் குழந்தை நமக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் பொன்னைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டுத்தான் உயிர் துறக்கும்

ஆகையால், இக்குழந்தை தகுந்த பருவகாலம் வந்த தன்பின் சம்பாத்தியஞ்செய்து எந்தப் பொருளைக் கொண்டு வந்து கொடுத்தாலும் நீ உன் கரத்தேந்தி வாங்கவேண்டாமென்று கூறித் தவநிட்டையிலிருந்தனர். பின்பு ருஷிபத்தினியானவள். அக்குழந்தையை மிகுந்த அன்புடன் வளர்த்துத் தேவ நாதனெனப் பெயரிட்டு ஆகம தேவ புராண சாஸ்திரங்களையும் தத்துவ வாத வைத்திய முதலான சகல சாஸ்திரங்களையுங் கற்கும்படி செய்து வரும் போது வயதும் பதினாறாகிறது. அப்போது ருஷி புத்திரனான தேவநாதன் தானே பல மூலிகைகளால் * வகாரவேலை

---

* வகாரவேலை என்பது இரும்பு செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னாகச் செய்வது.

செய்ய ஆரம்பித்து முறைப்படி முடித்துக் கட்டி கட்டியாகப் பொன்னைக் கொண்டு வந்து தன் தாயிடங் கொடுக்க வர அவள் பார்த்து அப்பா! நீ உற்பத்தி செய்கிற பொன்னை நீயேயொரு தனி இடத்திற் பத்திரமாக வைத்து வேண்டிய போதெடுத்துச் செலவு செய்து கொள்ளுவாய் என்று கூறுதலும், அவ்வார்த்தைக்கு மறுமொழி புகலாது, அப்படியே நடந்து வருநாளில், ஒருநாள் தேவநாதன் சிறிது பொன்னை எடுத்து உருக்கிக் கிண்ணம் ஆக அடித்து விசித்திர வேலைப்பாட்டுடன் எடுத்துக் கொண்டு வந்து நித்திரையி லிருந்த தன் தாயை எழுப்பி அம்மா! இதைப் பாருங்கள், ஓர் பொற் கிண்ணம் என்று கொடுக்க அவள் அச்சமயத்தில் தன் பேதைமைக் குணத்தினாலும் நித்திரை மயக்கத்தாலும், தன் நாயகன் முன்பு தெரிவித்த வார்த்தையை மறந்து, அப்பொற் கிண்ணத்தைக் கரத்திற் பெற்றாள். பெற்றவுடனே எதிர் நின்ற தேவநாதன் தனக்கு ஏதோ ஓர்வித மயக்கமாக வருகிறதெனக் கூறிக் கீழே வீழ்ந்து மூர்ச்சித்து உயிர் துறந்தான்.

மாதேவி தன்புத்திரன் தரையில் வீழ்ந்த சத்தத்தைக் கேட்டு நித்திரை மயக்கந் தீர்ந்து கண் விழித்துத் தன் புத்திரனைப் பார்க்க உயிர் நீங்கி யிருந்தமையால், சொல்லொணாத் துக்கத்தை யடைந்து தன்னிரு கண்களினின்றும், நீர் ஆறாகப் பெருக வாய் விட்டழுதாற்றிக் கொண்டு, இருப்பதைப் பக்கத்தில் தவநிட்டையிலிருந்த மாலினி மகாமுனிவர் கேட்டு, எழுந்து தன் மனைவியைப் பார்த்துப் பெண்மணி! நான் முன்னறிவித்த வார்த்தையை மறந்து மதிமோசம் போய் விட்டனையே இனி நீ அழுதாற்றுவதனாற் பிரயோசனம் யாது? ஒன்றுமில்லை யென்று வேண்டிய சமாதானங்களைச் சொல்லி அவள் மனத்தைத் தேற்றித் தம் புத்திரனுக்கு ஈமக்கடனை முடித்துப் பின்னர் தாமும் தம்மனைவியு மனவொற்றுமையோடு இல்லற தருமத்தை நடத்திக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஆகையால், உலகத்தில் எவனொருவன் கடன் வாங்கினாலும் கடன் கொடுத்தாலும் அவைகளை அப்போதைக்கப்போதே ஒழுங்காகத் தீர்த்துக் கொள்ளல் வேண்டும். அப்படி யில்லையனால், மற்றொரு ஜன்மத்தில் அவர்களுக்கே புத்திரர்களாக அவதரித்து அக்கடன்களைத் தீர்க்கவும் கொடுக்கவும் நேரிடும். ஆனதால் அந்த மாலினி மகா முனிவர், முன் ஜன்மத்தில் வாங்கி யிருந்த எண்ணெய்க் கடனைத் தீர்ப்பதற் குண்டாக்கிய கல்விளக்கு அதுதான். தெரிந்து கொண்டீர்களா? என்று கூறிப் பின்னும், அவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி வேதாந்த உபநிஷத்துக்களின் அர்த்தங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெரியும் படி கூறியருளுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவ்விதமிருக்க, ஒருநாள் காலையில் தன்மார்த்தன் முதலான ஐவருமெழுந்து வழக்கம்போல் ஸ்நானாநுட்டானங்களை முடிப்பதற்குத் தாங்கள் தினஞ்செல்லுங்கானாற்றுக்குச் செல்லாது, அவ்வனத்தைக் கடந்து தெய்வமங்கையர்களான சப்த கன்னியர்கள் எப்பொழுதும் வந்து நீராடிச் செல்வதும், நறுமணங்கமழுந் தண்கமலப் புட்பங்கள் நிறைந்து விகசிதம் பொருந்தியிருப்பதுமான, மஞ்சனப் பொய்கைக்குச் சென்று அத் தண்ணீரில் மூழ்கி எழுந்தவுடனே

ஒருவர்க்கொருவர் பார்த்து, அந்தோ இதென்ன! நம்முடைய உருவமும் நிறமும் மாறுதலடைந்து வேற்றுமையாகக் காணப்படுகின்றனவே! இஃது எவருடைய சாபமோ! இங்கு வசிக்கின்ற தவமுனிவர்கள் கோபமோ! அல்லது, நம் முன்னோர்கள் செய்த பாபமோ! என்னவோ யாதொன்றுந் தெரியவில்லையே, என்று மிகுந்த மனவருத்த முற்றுப் பின்பு ஒருவாறு மனந்தேறி இப்பொய்கையி லேதோ மித்திர பேதம் நடந்திருக்கிறதெனத் தங்களுக்குள் தீர்மானித்து ஐவரும் உரோமருஷி யாச்சிரமத்துக்கு வந்து அவர் திருமலரடிகளை வணங்கி நடந்த செய்திகளைத் தெரிவிக்க, ருஷிஸ்வரர் சொல்வார்.

தன்மார்த்தன் முதலானோர்களே! நீங்கனைவரும். இன்றையத்தினம் ஸ்நானஞ் செய்த மஞ்சனப் பொய்கையில் அனுதினமுந் தெய்வத் தன்மை பொருந்திய மங்கையர்களாகிய சத்த கன்னியர்கள் வந்து ஸ்நானஞ் செய்து போவார்கள். அப்படியிருக்க ஒருநாள் அவர்கள் ஸ்நானத்துக்கு வந்தபொழுது ஆங்குவேட்டையாடுதற்கு வந்திருந்த ஓரரசன் சேனாசைன்யங்களால் தண்ணீர் கலங்கியிருப்பதைக் கண்டு கோபித்து இன்று முதல் எங்களைத் தவிர மானிடர்கள் எவரேனும் இப்பொய்கையிலிறங்கித் தண்ணீருள் மூழ்கி ஸ்நானஞ் செய்வார்களாகில், அவர்களுடைய நிறமும் உருவமும் மாறிப் போகக் கடவன; என்று சாபமிட்டுச் சென்றார்கள். இது தெரியாத அநேகர் அப்பொய்கையில் வந்து ஸ்நானஞ் செய்து வேற்றுருவமைந்து சென்றார்கள். அது போல் நீங்களும் அப்பொய்கைக்கு இன்று சென்று ஸ்நானஞ் செய்து உருமாறி வந்திருக்கிறீர்கள். ஆனாலும் நீங்கள் பயப்படவேண்டாமென்று சொல்லிப் பூஜாமந்திரோச் சாரண தந்திரத்தினால், அந்த சத்த கன்னியர்களையும் வரவழைத்து இந்த ஐவர்களுக்குத் தெரியாது செய்த குற்றத்தை க்ஷமித்து இவரது பழைய உருவம் தரவேண்டுமெனவேண்ட, அக்கன்னியர்கள் ருஷிஸ்வரர் வார்த்தைக்கிரங்கி உம்முடைய மனோபீஷ்டத்தின்படி இவர்களுக்குப் பழைய உருவம் வரும்படிக்குக் கிருபை செய்தோ மெனக்கூறிச் சென்றார்கள்.

பின்னர் தன்மார்த்தன் முதலான ஐவரும் பழைய உருவத்தைப் பெற்று மனமகிழ்வோடு சென்று காய்கனி சரகுகளாற் பசி தீர்ந்து வந்து ருஷிஸ்வரிடத்தில் வீற்றிருந்து ஆத்ம ஞானோப தேச ங்களைக் கேட்டுக் கொண்டு வரும்போது தன்மார்த்தன் முதலானோர்கள் ருஷிஸ்வரரை வணங்கிச் சுவாமீ! வேத சாஸ்திரங்களிற் கூறிய தேகமைந்தின் விவரங்களைக் கூறியருள வேண்டுமெனக் கேட்க, உரோமருஷி சொல்வராயினர்.

கேளுங்கள் ஐவர்களே! தேகமைந்தின் விவரமாவது:- இருள் தேகம், மருள் தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என ஐந்து வகையாகும். அவ்வைந்தினுள், இருள் தேகமாவது:- தூலதேகத்தின் அபரனத்தில் மலக்குற்றம், நாவில் நாடிக் குற்றம் கண்டத்தில் - கபக்குற்றம், மேல் மூலத்திற்றிரைக் குற்றம், மனத்தில் - ஆணவமலக் குற்றம் ஆகிய இவைகள் யாவும் பொருந்தி நான் என்னும் அஞ்ஞானக் குற்றத்தை வகித்திருப்பது. மருள் தேகமாவது:- மாயா சம்பந்தமாய் தனக்கு வருவதை இன்னதெனப் பகுத்தறியுமாட்டாது. அகங்காரத்தைக் கொண்டிருப்பது, சுத்த

தேகமாவது:- கருவி கரணா திக ளோய்ந்து அறிவுதானே விளங்கிப் பார்க்கப்படும் பொருளனைத்தும் அருள்வடிவமாய்த் தோற்றி நிற்பது. பிரணவதேகமாவது:- உருவம் தோற்றிக் கைக்கு அகப்படாது நிழற்சாலையில் நிற்பது. ஞானதேகமாவது:- நேத்திரங்களுக்குத் தோற்றாது அறிவுக்கு மாத்திரந் தோற்றி நிற்பது. ஆகையால் இத்தேகங்களில், அறிவுக்கு மாத்திரந் தோற்றி நிற்பதான ஞான தேகமே மேலானதாகும். அந்த ஞானதேகத்தைப் பெறுவதற்குப் பலகாயகற்பங்களைப் புசித்து வருதலே முக்கிய காரணங்களாகும். அக்காய கற்பங்கள் நம் மனுபவத்திற் றெறிந்த சிலவற்றை இப்பொழுது உங்களுக்குக் கூறுகின்றேன்.

அதாவது, இவ் வாசிரமத்துக்குக் கீழ்ப்புறம் அம்பிடு தூரத்தில், ஏரழிஞ்சிமரமென ஒன்றுண்டு. அந்த விருக்ஷத்தின் இலை மஞ்சணத்தி யிலைபோலும், விரைதேற்றான் கொட்டை போலுமிருக்கும். அந்த விரையைக் கொண்டு வந்து நல்லெண்ணெய் லூறவைத்து எடுத்துக் குளித்தைல மிறக்கிப் பேரண்டத்தில், அத்தைலத்தை விட்டுச் செந்தாமரைநூல் திரிபோட்டுத் தீபமேற்ற அவ்வண்டத்தில் மை படிந்திருக்கும். அதை எடுத்துத் திலகமிட்டால் தூரத்திலிருக்கிற சாமான்கள் நேத்திரங்களுக்கு நன்றாகத் தோற்றும். ஆனால் தன்னுருவம் பிறருக்குத் தோற்றாது.

இதைத்தவிர வேறே இன்னுமொரு முறையுண்டு. அதாவது, அந்த ஏரழிஞ்சி விருக்ஷத்தின் பக்கத்தில் செங்கொடிவேலி என்று ஒரு செடியிருக்கிறது. அச்செடியின் புட்பம் பிச்சிப்பூப் போலவும், நிறம் சிவப்பாகவும், வேர் இரத்த நிறமாகவுமிருக்கும். இச்செடிக்குச் சாபம் நீக்கிச் சமூலத்தையும் பிடுங்கிவந்து, இரும்பினாற் செய்த ஓர் குழாயிற் போட்டு, அத்துடன் அமுரிவிட்டு எட்டு நாள் வரை ஊறினபிற்பாடு எடுக்க இரும்பு சுத்தியாகும். அந்த இரும்பை உலையிலிட்டுத் தகடாக அடித்து அத்தகட்டை ஆட்டெருவிற் புடமிட்டு ஏறழிஞ்சித் தைலத்திற் சுருக்கிடப் பேதிக்கும். அதை மறுபடி உலையில் வைத்தூதிப் பழுக்கக்காய்ச்சிச் செங்கொடி வேலிச் சாற்றில் சுருக்கிடப் பத்து வயதாகும். அதைச் சுண்ணஞ்செய்து பசுவின் நெய்யில் ஒருவாரம் புசித்து வரத் தேகசித்தியாகும். இதைத் தவிர வேறே இன்னுமொரு முறையும் உண்டு. அதாவது, அந்தச் செங்கொடி வேலிச் செடிக்குப் பக்கத்தில் கருங்கொடிவேலி யென்னும் ஒரு செடி யிருக்கிறது. அதன் இலை நொச்சியிலை போலிருக்கும். அந்த இலையைப் பிடுங்கிவந்து கசக்கிச் சாறுபிழிந்து எடுத்துக்கொண்டு வெந்த சோற்றில் ஒரு கைப்பிடி சாதமெடுத்து அதில் மேற் சொன்ன சாற்றை மூன்று துளிவிட்டு அந்தச் சாதத்தை மூன்றுநாள் வரை சாப்பிட்டுவரத் தேகசித்தியாகும். ஆகையால் நீங்கள் இக்கற்பங்களைப் புசித்துக் காயசித்தி செய்துகொள்ளுங்கள்: என்று கூறியருள, அதைக் கேட்ட தன் மார்த்தன் முதலான ஐவரும் உரோம மகாரிஷீஸ்வரர் சொற்படி காயகற்பங்களைப் புசித்துக் கொண்டு வரும் பொழுது ஒருநாள் ருஷீஸ்வரர் ஐவரையும் நோக்கி, நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருடகாலமிருப்பதாக முன்பு இவ்விடத்தில் வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள் வரை ஒருவருட காலஞ் சரியாய் விட்டது. நாமும் இனித் தவநிட்டை புரியவேண்டிய தாகவு 'மிருக்கிறது. ஆகையால் இனிமேல் நீங்கள் இவ்வனத்திற்கடுத்த யூகிமகாமுனிவர் ஆசிரமத்திற் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள் என்று திருவாய்

மலர்ந்தருளித் தம் பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை யழைத்து சீடா! இவர்களைவரையுங் கூட்டிச் சென்று யூகிமுனி வரிடத்தில் விடுத்துவருவாய் என்று உத்தரவு செய்ய அவ்வுத்தரவின்படி அவர் சீடனும் தன்மார்த்தன் முதலிய ஐவரும் உரோமருஷீஸ்வரரை அன்புற வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! உரோம ருஷியாச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும், ஞானோபதேசங்களையும், காயகற்ப முறைகளையுங் கேட்டு சன்னமாகிய ஆழ்ந்த கடலைத் தாண்டினோம். இனி அந்த யூகி முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் அருளிச் செய்யவேண்டுமென்று கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்லுவராயினர்.

பதினேழாவது,
உரோம ருஷி சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
பதினெட்டாவது

யூகிமுனி சருக்கம்

ஐந்தாவது வனம்

காட்டுமெழிற் சதுரகிரி தனில்யூகி முனிவனத்துக் காதலோடு
நாட்டுதவத் தன்மார்த்தன் நால்வருடன் சென்றதுவும் நயந்து புற்றின்
மாட்டுறையுஞ் சௌனகனற் சுககனியை மணந்ததுவும் மலைப்பாம் பின்வாய்க்
கூட்டுணின்று சுகுணவதி பிழைத்ததுவு முறையாகக் கூறு வோமே.

கேளுங்கள் முனிவரிற் சிறந்தவர்களே! உரோமகாருஷீஸ்வரர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும் தென் திசையை நோக்கிப் பிரயாணமாகி மேகங்களைத் தங்களுடைய இனமென்று நினைத்துத் துதிக்கைகளாற் றழுவி மகிழ்ச்சி யுறுகின்ற யானைக் கூட்டங்கள் நிறைந்த மலைகளையும், அம்மலைகளைப் போன்ற யானைகளை மலைகளென நினைத்துக் குரங்குகள் வேகமாகப் பாய்கின்ற வளத்தினையுடைய சோலைகளையும், விரைந்து பாய்கின்ற கானாறுகளையும், பூஞ்சோலைகளி னின்றொழுகி வரும்படியான தேனாறுகளையும் தாண்டி அப்பால் தென்திசையை நோக்கிச் சென்று சமதளப் பள்ளத்திலிறங்கிக் காவற்கானலுக்கு வந்து ஆங்குச்சற்றிளைப்பாறி அவ்விடத்தை விட்டகன்று அநேக தவமுனிவர் கூட்டங்களும், கமலாக்கினி, தீபாக்கினி, காடாக்கினி, என்றும் முத்தழல் வளர்க்கும் வேள்விச் சாலைகளும், வளமலிந்துள்ள வனங்களும், ஆகிய இவற்றைக் கடந்து பூமலி தடாகங்கள் நிறைந்தும் பூஞ்சோலைகள் சூழ்ந்து மிரா நின்ற யூகிமுனிவர் வனத்தினுட் சென்று ஆங்குத் தம் ஆச்சிரமத்தின்கண் ணெழுந்தருளியிருந்த மகாமுனி வரைப் பத்தியுடன் வணங்கி நிற்கும்பொழுது யூகிமுனிவரானவர் ரோமருஷியினுடைய சீடனால் இவருடைய சமாச்சாரங்கள் முழுமையுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பியபின்பு ஐவர்களையும் வீற்றிருக்கும்படி செய்து கூறுவர்.

தன்மார்த்தன் முதலானோர்களே! இவ்வனத்திலெத்தனை நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷய முங்களுக்குத் தெரியவேண்டு மெனக் கேட்க, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! தங்களுடைய வனத்தின்கண் ஒருவருட காலமிருந்து தங்களிடத்தில் ஞானோபதேசங்களையுங் கற்ப முறைகளையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப் புகல, அதைக் கேட்ட அம்முனிவர் அப்படியானால் நீங்களிவ்விடத்தில் வாசஞ் செய்வதற்கு இதன்

நேர்வடக்கில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதில்வாசஞ் செய்து வருவீர்களென்று ஆஞ்ஞாபிக்க, உடனே ஐவரும் முனிவர் சொற்படி ஐந்தடுக்குப் பன்னசாலையமைத்து அதில் வாசஞ்செய்துகொண்டு பிரதி தினமும் அம்முனிவரிடத்தில் வேதசாஸ்திர உபநிஷத்துக்களின் வியாக்கியானோப தேசங்களைக் கேட்டுக்கொண்டு வருநாளிலொருநாள் ஐவரும் அவ்வனத்தில் வினோத விசித்திரங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது ஏகவெளியான ஒரு இடத்தில் இருந்த பெரும்புற்றின் கண் அப்பிரேகச் சத்துப்போலும், சுயத் தங்கத்தைப் போலும் பிரகாசிக்கின்ற அதிசயத்தைக் கண்டு ஐவரும் அப்புற்றின் சமீபத்திற்சென்று உற்றுநோக்க அங்குச் சொர்ணம்போல் ஒளி தோற்றுவதையுஞ் சிறிது ஓசையுண்டாக்கிக் கொண்டிருப்பதையுங் கவனித்து, அதிக ஆச்சரியமுற்றி இப்புற்றில் ஏதோ விசேஷ மிருக்கிறதெனத் தங்களுக்குள் தீர்மானித்துக் கரத்தாற் றீண்டாது முனிவரிடத்தில்வந்து இச்செய்தியெல்லாந் தெரிவித்து அப்புற்றின் அதிசயங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டனர்.

அதற்கு யூகிமகாமுனிவர் சொல்லுவார். தன்மார்த்தன் முதலானோர்களே! அப்புற்றை உங்கள் கரத்தினாற் றீண்டாது வந்ததைப் பற்றிச் சந்தோஷிக்கின்றேன். நீங்கள் பார்த்துவந்த அப்புற்றினுடைய அதிசயமானது என்னவென்றால், முன்னொரு காலத்தில் யோக ஞானத்தையே வைராக்கியமாகக்கொண்ட வேதஞானருஷி என்பவர் இவ்வனத்திற்கு வந்து நீங்கள் பார்த்து வந்த அந்த இடத்தில் வீற்றிருந்து தம் சரீரத்தில் சலித்துக்கொண்டிருக்கும் பிராணவாயுவை அந்தர் முகமாகத்திருப்பி நிறுத்திப் பலவித யோக முறைகளி லொன்றாகிய ஞானயோகத்தை நீண்ட நாள்களாகச் செய்து கொண்டுவருகிறார். அதனாற் காற்றினாலும், கரையான்களாலும், மண்களெல்லாம் ஒன்று சேர்ந்து புற்றுப்போலாக வளர்ந்திருக்கின்றன. அது தவிர, அப்புற்றின்மேற் படிகிற துகள்களெல்லாம் அவர் செய்கிறதவமகிமையின் முதிர்ச்சியால் மினுமினுப்புண்டாகிக் கொண்டும்; தேகத்தைத் தங்கம்போற் பிரகாசிக்கச்செய்து கொண்டுவருகின்றன. அந்நிலையில் அவர்தச நாதமுழக்கத் திருநடக்காட்சியிலிடுபட்டு சதாபேரின்பந்திளைத்துள்ளார். அதனாற்றான், அவ்வளவு பிரகாசமும், தொனியும் உங்களுக்குத் தோற்றிய தென்றுகூற, அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள் ருஷீஸ்வரரை நோக்கி சுவாமி! அப்புற்றை உங்கள் கரத்தினாற்றீண்டாது வந்தமைபற்றி மிகச்சந்தோஷிக்கிறே னென்றீர்களே? அது என்ன காரணமென்று கேட்க, அதற்கு முனிவர் ஐவர்களே! முன் ஒரு புற்றுக்குள் ளிருந்த ஒரு ருஷீஸ்வரரை ஒரு பெண்ணானவள் தன்கரத்தாற் றீண்டிச் சாபத்தை யடைந்தனள். அதுபோல நீங்களும் அப்புற்றை ஒரு சமயம் கரத்தாற்றீண்டி ஏதேனுஞ் சாபத்தை யடைந்தீர்களோ என்னவோ! எனச் சந்தேகித்து அப்பாலில்லையென தெரிந்து, சந்தோஷித்தேனே யல்லாது வேறில்லை என்று கூறியதைக் கேட்ட ஐவரும் சுவாமீ! புற்றினுள்ளிருந்த ருஷீஸ்வாரை ஓர் பெண்ணானவள் கரத்தாற்றீண்டி சாபத்தையடைந்தா ளென்றீர்களே? அந்த ருஷீஸ்வரர் யார்? அப்பெண் யார்? அவள் எதற்கு.ாக அவரைத் தீண்டினாள்? பின்பு எவ்வகைச்சாபத்தைப் பெற்றாள்? இவை முதலியவைகளை விவரமாகச் சொல்லியருள வேண்டுமென்று கேட்க அதற்கு யூகிமகா முனிவர் இசைக்கலாயினார்.

கேளுங்கள் தன்மார்த்தன் முதலானோர்களே! முன்னொரு காலத்தில் தவசிரேட்டராகிய சௌனக மகாமுனிவர் என்பவர் மோனதவப் பீடுயர்வையடையத் தவநிட்டை செய்யும் பொருட்டுக் குளிர்ச்சி தங்கிய ஓர் அழகிய வனத்தின்கண் வந்து புலித்தோலாசனத்தின் மேல் உட்கார்ந்து தம் சரீரமத்தியிலிருதய வாகாயத்தைப் பொருந்தி யிருக்கிறபிராணன், அபானன் என்று சொல்லக்கூடிய துரித கதி வாயுக்களின் மத்திய தானத்தையநுசரித்து நனவில் அதீதத்தை யடைந்து வாசனையற்று, நீண்ட நாள்களாகத் தவமோனத் தமர்ந்திருக்கும் பொழுது, கரற்றினுடைய உதவியினாலும், கறையான்களாலும், மண், துகள் முதலானவை புற்றாக வளர்ந்து அவர் சரீரத்தை முழுதும் மறைத்துக் கொண்டன. முகத்தினது இரண்டு கண்களுக்கு நேரே தெய்வச் செயலாக இரண்டு துவாரங்களமைந்திருந்தன.

அவ்வித மிருக்க, நீர்வள நிலவளமிகுந்த சந்திரகிரி நகரைச் சதுர்வித உபாயங்களுடன் நீதிவழுவாது அரசுபுரிந்து வருகிற, சையாதி மகாராஜன், ஒருநாள் தன் குடிகளுக்குக் குடிலம் விளைத்த கோர விலங்கினங்களைக் கொல்லும் பொருட்டுக் காட்டை நாடி வேட்டை யாட எண்ணங்கொண்டு இரதகஜ துர பதாதிகளோடும், மனைவி மக்கள் வேடர் வில்லியரோடும் பிரயாணமாகிச் சௌனக மகாமுனிவர் தவஞ்செய்து கொண்டிருக்கும் வனத்திற்கு வந்து துட்ட மிருகங்களை வேடுவர் உதவிகொண்டு வேட்டையாடினன். அப்போது அவன் புத்திரியாகிய சுகன்னிகையானவள் அவ்வனத்தின் வினோத விசித்திரங்களைச் சுற்றிப் பார்த்து வரும் போது ஆங்கு நீங்கள் கையாற் றொடாமல் பார்த்து வந்து புற்றைக் கண்டு அப்புற்றைக் கவனித்து நோக்குமிடத்து இரண்டு துவாரத்தி னிடத்துக் கண்ணொளி போலத் தோன்றிற்று. அதைக் கண்ட சுகன்னிகை தன் பேதமைக் குணத்தால் விளையாட்டாக ஒரு குச்சியை எடுத்து ஒளிவீசுகிற அந்தத் துவாரத்தினுட் குத்தினாள். அப்படிக் குத்தினவுடன் புற்றினுள்ளிருக்கிற சௌகை முனிவரின் இரு நேத்திரங்களிலும் பட்டு ஒளி மழுங்கினதுந்தவிர, அதனாலுபத்திரவமும் உண்டாயிற்று. அவ்வுபத்துரவம் பொறுக்க முடியாத முனிவர் சினங்கொண்டு தம் கண்ணைக் குத்திய அந்த அரச புத்திரிக்கு நேத்திரங்கள் தெரியாதிருக்கச் சபித்தனர்.

அதையறிந்த அரசன் முற்றும் விசாரித்துத் தன் குமாரத்தியாலிக் குற்றம் நேரிட்டதென்றறிந்து அப்புற்றி னிடத்துக் குற்றம் நேரிட்டதென்றறிந்து அப்புற்றி னிடத்துச் சென்று முனிவரைக்கண்டு வணங்கிப் புகழ்ந்து என் புத்திரியால் தங்களுக்கு நேர்ந்த குற்றத்தை மன்னித்து அவள் கண்ணைத் திறப்பித்து அக்கன்னிகையை மணந்து எங்களை யாட்கொள்ள வேண்டுமெனக் கூறினன். அதைக்கேட்ட சௌனகர் அரசன் புத்திரியாகிய சுகன்னிக்கு நேத்திரந்தெரிய நல்வரமீந்தருளி அக்கன்னிகையை மணந்து அரசனுக் காசிவசனங்கூறி எல்லோரையும் வழியனுப்பியபின் தவயோகத் தமர்ந்திருந்தனர். அப்போது சுகன்னிகை தன் புருடராகிய சௌனக முனுவருக்குப் பணிசெய்து வருங்காலத்தில் ஒருநாள் அவள் முனிவர் பூசைக்குச் சலந்திரட்டி வருவதற்குச் செல்லுந் தருணம் அசுவினி தேவர்கள் கண்டு அவள் கற்பைப் பரிசோதிக்க எண்ணங்கொண்டு அவள் சமீபத்திற்சென்று ஓ! மாது சிரோமணி! நீ யார்! உன் புருடன்

யார்! இந்த வனத்திலிருக்க வேண்டிய காரணமென்னவென்று வினவ, அதற்குச் சுகன்னிகை அதிதிகளே! நான் சையாதி மகாராஜாவுடைய புத்திரி, என் பெயர் சுகன்னிகை. எனது புருடன் இவ்வனத்திலிருக்கிற மகருஷியாவர். நான் அவர் பூசைக்குச் சலந்திரட்டிவரச் செல்கிறே னென்று கூறினள்.

அவ்வார்த்தையைக் கேட்ட அசுவினி தேவர் நகைத்து ஒ! மாதரசி! நீ மகா ருபலாவண்யமுடைய பெண்ணாகவும், அரச கன்னிகையாகவு மிருக்கிறாய். உனக்கு விருத்தாப்பியப் பருவம் வாய்ந்த கிழவன் நாயகனாக விருப்பதில் என்ன சுகமேற்படக் கூடும்? அதனால் வரும் பயனென்ன? என்று வினவினர். அதற்கு அவள் மறுமொழி ஏதும்புகலாது சலந்திரட்டிக்கொண்டு தன் கணவனிடத்துக்கு வந்து வழியில் நடந்தனவற்றைக் கூறினள். சௌனகரும் ஞானதிருட்டியால் அதன் உண்மையைத் தெரிந்துகொண்டு தம் மனைவியை நோக்கி! பெண்மணி! இப்பொழுது உன்னிடந்தாறுமாறாக வார்த்தை யாடினவரிடத்தில் மறுபடியும் நீ சென்று உங்கள் கருத்தின்படி இணங்குகிறேன்: உங்களிலொருவர் எனக்கு நாயகராக ஏற்படுங்களென்று கூறுவாய்: அதன் மேலவர்கள் என்னிடத்துக்கு வருவார்கள்: செல்லென்று கூறினர்.

உடனே சுகன்னிகை அசுவனி தேவர்களிடத்தில் வந்து அதிதிகளே! உங்கள் கருத்தின்படி நடக்கிறேன். உங்களிலொருவர் எனக்கு நாயகராக ஏற்படுங்களென்று கூற, அது கேட்ட அசுவினி தேவர்கள், நீ எங்களிடமிப்போது கூறுவதிற்பயனில்லை: நாங்கள் உன் கணவனிடத்திற் சென்று யோசித்துக் கொண்டு வந்து உன் கருத்து மகிழும்படி நடக்கிறோமென்று கூறி, சுகன்னிகையோடு சௌனகரிடத்திற்கு வந்து அவள் கூறிய செய்திகளைத் தெரிவித்து அவரையு மழைத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்த ஓர் சுனை உட்சென்று சௌனக முனிவருடன் மூழ்கி எழுந்து நின்று சுகன்னிகை நேத்திரங்களுக்கு அசுவினி தேவதை இருவரும், சௌனக முனிவரும் ` வேற்றுமையில்லாமல் வாலிபராகத் தோற்றும்படி செய்து கொண்டு அக்கன்னிகைன:ய நோக்கி ஒ! பெண்மணீ! எங்களில் யார் மேலுனக்குப் பிரியமிருக்கிறதோ? அவரைத் தொடு என்று கூறினர்.

அவ்வார்த்தையைக் கேட்ட சுகன்னிகை தன் கணவனை மனத்தில் நினைத்து வணங்கி அம்மூவரில் ஒரு வாலிபனைத் தொட்டனள். அப்படித்தொட்ட வாலிபன் அவளுடைய கணவனாக விருந்தமையால், அசுவினி தேவர்கள் மகிழ்வடைந்து, தங்கள் சுயரூபத்தோடு விளங்கி அச் சுகன்னிகையைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடிச் சௌனகரைப் பார்த்துச் சொல்லுவார்கள். ஒ! சௌனக முனிவரே! நீர் தவயோகியாயிருந்தும், இராஜ கன்னிகையை விவாகஞ் செய்து கொண்டீர்! நாங்கள் அவ்விராஜ கன்னிகையின் நற்குண நற்செய்கைகளைக் கண்டறிந்து உமக்கு யௌவன பருவத்தைக் கொடுத்தோம். ஆகையால் நீர் இன்று முதல் அக்கன்னிகைக்கு இன்பம் பெருக நடப்பது உமது கடமை என்று கூறினர். அதைக்கேட்ட சௌனகமுனிவர் தேவர்களே! முதுமைப் பருவமடைந்த எனக்கு வாலிப தசை யடியும்படியான ஒரரிய உபகாரத்தைச் செய்தீர்கள். நீங்கள் செய்த உதவிக்கு யான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன், எனப் புகழ்ந்து அவர்களை வாழ்த்திப் போற்றி விடை பெற்றுத்

தன் ஆசிரமத்துக்கு வந்து மனவைியோடு கூடிக் கலந்து வாழ்ந்து சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார், என்று கூறியதைக் கேட்டுத் தன்மார்த்தன் முதலான ஐவரும் பன்ன சாலையிற்போய்ச் சேர்ந்தார்கள்.

மற்றொரு நாள் காலையில் தன்மார்த்தன் முதலான ஐவரும் எழுந்து நித்திய ஸ்நான வநுட்டானங்களை முடித்து வருவதற்கு அனேகவனங்களைக் கடந்து ஆங்கு ஒரு பூஞ்சோலையின் சமீபத்திலிருக்கிற பொய்கையைக் கண்டு அதில் இறங்கி ஸ்நானஞ் செய்து அநுட்டான ஜெபதபங்களை முடித்துக் கரையேறின உடன் தன்மார்த்தன், சூரசேனன், தனமதி, சுகமதி, இந்நால்வர்களும் கீழ்த்திசையிலுள்ள ஒரு இடத்திலும், குணவதி மாத்திரம் தனியாக மேற்குத் திசையில் வனமடர்ந்த புதருள்ள ஒரு இடத்திலும் தங்கள் தங்களாடைகளை உலர வைத்துக் கொண்டிருக்கும் பொழுது, ஆலமரம் போற் றிரண்டுருண்டு நீண்டு பருத்த உடலும், கூரிய பற்களையுடைய வாயும், விசால நேத்திரங்களை உடையதுமான ஓர் மலைப் பாம்பு கீழ்ப் பக்கத்திலிருந்து மேல் பக்கத்தை நோக்கி அதிக விரைவாகப் பேரிரைச்சலுடன் வந்து கொண்டிருந்தது. அது சீறும் பேரிரைச்சலைக் கேட்ட குணமதியானவள் பயந்து நடு நடுங்கி வாய்குழறி நான்கு திசையும் பார்க்கையில் தனக்கு நேராக அம் மலைப் பாம்பு வருவதைக் கண்டு நான் தாய், தந்தை புருடன் முதலானோர்களை இழந்து, இவ்வனத்திற்கு வந்து தவசாதுக்களின் உபதேசத்தால் மோக்ஷமடையலா மென்றெண்ணி யிருக்கவும் இப்பொழுது பாம்புக் கிரையாகப் போகிறேனே அந்தோ என்ன செய்வேன்! ஆ! செகதீசா! அம்பிகை சமேதா! என்று கிழக்கு திசையி லிருக்கிற நால்வரையும் நோக்கி ஏசூரசேனன் முதலானோர்களே! என்னுயிர் நீங்கப் போகிறது ஓடிவாருங்களோடி வாருங்கள்: என்றோலமிட்டுக்கொண்டோடுகையில் அதைக் கேட்டுத் தன்மார்த்தன் முதலான நால்வரும் வருவதற்குள்ளாக அம்மலைப்பாம்பு வாயுவேக மனோவேக மாகவந்து குணமதியினுடைய பாதங்களைப் பிடித்து மருங்குல் வரை விழுங்கிக் கொண்டிருக்கும்போது நால்வரும் ஒடோடியும் வந்து பார்த்து மனவருத்தமுற்றனர். அப்போது சூரசேனன் நாம் இப்போது ஜீவகாருண்யத்தை வகிப்பதிற் பிரயோசனமில்லையென நினைத்து தன்மார்த்த னுத்தரவின்படி தன் மந்திரவாளினால் அப்பாம்பினுடலை இரண்டு கூறாகக்கிழித்துக் குணமதியை விடுவித்துமறுபடியும் அப்பொய்கையில் ஸ்நானஞ் செய்யச்சொல்லி யழைத்துக்கொண்டு அனைவரும் பன்னசாலைக்குப் போய்ச் சேர்ந்து காய்கனி சரகுகளாற்பசிதீர்ந்து யூகிமுனிவர் ஆச்சிரமத்தில் வந்து அவரடிமலரை வணங்கி நடந்த செய்திகளைத் தெரிவித்து வீற்றிருந்தனர். பின்னர் முனீஸ்வரரை நோக்கி சுவாமி! பஞ்சமூர்த்திகள் என்பவர் யார்? அவருடையஸ்தானமெது? வாசியாவது யாது? அதன் பிரயோசனம் என்ன? இவைகளை விபரமாகக் கூறியருள வேண்டுமெனக் கேட்க அதற்கு முனிவர்,

ஐவர்களே! பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆக இந்த ஐவரும் பஞ்சமூர்த்திகளாவர், அவர்கள் கணபதி வாழும் மூலதாரத் தானத்துக்கு மேலுள்ள ஐந்து ஆதாரத்தானங்களில் வசித்து மண், நீர், அக்கினி, காற்று ஆகாயமென்னும் ஐந்து பூதேஸ்வரர்களாக விளங்கி நால்வகைத் தோற்றவடிவ சீவர்களுக்கு ஆதாரமாக இருந்து வருகின்றார்கள்: ஆனால் சீவர்களுடைய நாசியில்

உச்சவாச நிச்சவாசமா யுலவிவரும் பிராணவாயுவானது இடகலை, பிங்கலையாகச் சுழிமுனை, ஆதாரத்தில் மாறி நடந்து கொண்டிருக்கும். சத்திசிவவடிவாகிய சந்திரசூரியனென்னும் அந்தச் சுவாசமே வாசியாகும். அவ்வாசியானது நாளொன்றிற்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமாக நடந்து வருகின்றது, அப்படி நடந்துவருவதாற்றான் மனம் சுழல்கின்றது. "மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு" என்றபடி மனத்தை நடத்தும் பிராணவாயு யாண்டும் பன்னிரண்டு வட்டமாக இடகலையாகிய சந்திரபாகத்திலும், பிங்கலையாகிய சூரிய பாகத்திலும் ஐம்பூதப் பிரிவினையைப் பிரித்துக் காட்டும்.

அவ்விதம் பிரிந்து நடக்கும் ஐம்பூதங்களானவை அந்தக் கரணங்களைக் கொண்டு அறிவாகிய ஞானத்தைத் தோற்றுவிக்காமல் ஆயுளை க்ஷீணப்படுத்தி நரைதிரை மூப்பை எளிதி லுற்பவஞ் செய்து விடுகின்றன. ஆகையால், மனத்தையும், ஐம்புலன்களையும், அவ்வழிக்குச் செலவிடாம லறிவாற்றடுத்து ஒருவழிப்படுத்தி வருதல் நலமாகும். அதுவே பிராணாயாம நெறியாகும். அந்த நெறியை விடாது பற்றிப்பயின்று வாசிதாரணை சித்தி செய்த அறிஞருக்குக் காயசித்தி செய்து கொள்ளுவது அவசிய மாதலால் எனக்குத் தெரிந்த சில கற்ப முறைகளையும் அறிவிற் சிறந்த உங்களுக்கு கூறுகின்றேன். கேட்பீர்களாக. இவ்வனத்தின் வடமேற்கில் ஒரு கற்றிட்டுண்டு, அதன் வடக்கில் குவிந்த மண்மேடுண்டு, அதன் பாலுள்ள ஓடையின்கண் சாயாவிருக்ஷம் என்னும் ஒருமர மிருக்கின்றது. அம்மரத்திற்கு நிழற் காந்தன் என்ற பெயருமுண்டு. அவ்விருக்ஷத்தின் நிழல் சாயாது. அதன் நிறஞ்சாம்பல் நிறமாயும், இலை புன்னைமரத்து இலைபோலும், காய் சுருண்ட வெள்ளரிக்காய் போலுமிருக்கும். அம்மரத்தின் பட்டையைச் சீவினால் நீலநிறம்போல் பால்வரும். அப்பாலைக் கொண்டுவந்து அதில் சூதம்விட்டுச் சூரியபுடம் வைத்தெடுத்து இறுகின பாலையே செந்தூரமாக்கி நெய்யிற் குழப்பி ஒரு மண்டலஞ் சாப்பிட்டுவரத் தேகசித்தியாகும் பத்தியமாக விருந்து பாலன்னம் புசிக்கவேண்டும். இதைத் தவிர, இன்னுமொரு முறையாவது அந்த இடத்திற்குப் பக்கத்தில் சேந்தாடு பாவை என்ற ஒரு செடியுண்டு. அந்தச் செடி குத்துக்காரைச் செடிபோலவும், அதன் இலை சம்மட்டி இலை போலவு மிருக்கும். அதன் இலையை, பிடுங்கிப் பிழிந்து தனிச்சாறெடுத்துச் சூதத்திற்குச் சுருக்குக் கொடுக்கச் சூதங்கட்டும், அப்படிக் கட்டின சூகத்தைச் சாயாவிருக்ஷத்தின் பாலில் ஏழுநாளூறவைத்து எடுத்துப் புடமிட்டுச் செந்தூரமாக்கி ஆவினெய்யிற் குழப்பி ஒருவாரஞ் சாப்பிட்டுவரத் தேகசித்தியாகுமென்று கூறினர். அப்பால் ஒருநாள் முனிவர்: ஐவர்களே! நீங்கள் இங்கு ஒருவருட காலமிருப்பதாக முன்பு தெரிவித்தீர்கள் அன்றோ? அவ்வாறு ஒருவருடஞ் சரியாய்விட்டதால், இனி இவ்வனத்திற்கடுத்த சுந்தரானந்த முனிவர் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய ஞா னோப தேசங்களைக் கேட்டுக்கொண்டிருங்கள், என்று தம் சீடர்களி லொருவனை யழைத்து சீடனே! இவர்களைவரையும் அழைத்துப்போய்ச் சுந்தரானந்த ராச்சிரமத்தில் விட்டு வருவாய், என்று திருவாய் மலர்ந்தருளினார். அந்தப்படி சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் யூகிமுனிவரை அன்புற வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள்: என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமி! யூகி மகாமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் வேதாந்த ஞானோப

தேசங்களையுங் காயகற்பங்களையுங் கேட்டுச் சனனமாகிய ஆழ்ந்தகடலைத் தாண்டினோம். இனிச் சுந்தரானந்தர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் ஞான கற்ப முறைகளையும் அருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க, சாணாங்கி முனிவர் சொல்லுவாராயினர்.

பதினெட்டாவது,
யூகி. முனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

பத்தொன்பதாவது

சுந்தரானந்தர் சருக்கம்

ஆறாவது வனம்.

மணந்திகழுஞ் சதுரகிரி தனிற்சுந்த ரானந்தர் வனத்திற் புக்குக் குணந்திகழுந் தன்மார்த்தன் முதலைவ ரம்முனிவர் குளிர்ந்த நோக்கி னெணந்திகழுங் கற்பமுறை கற்றதொடு மதிசீல னிலத்தை விட்டுத்தணந்தினிய தவமடைந்த முறைநின்ற சரித்திரமுஞ் சாற்றல் செய்வோம்.

கேளும் முனிவரிற் சிறந்தவர்களே! யூகி முனிவர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவருந் தென் திசையைநோக்கிப் பிரயாணமாகி நெடிதாகிய உயர்ந்த மலைகளையும், சந்தனம், தேக்கு, அகில், அசோகம், சுரபுன்னை, மூங்கில் முதலிய பல விருக்ஷங்களும், இல வங்கம், தக்கோலம், வசம்பு, குங்குமம் முதலிய பல செடிகளும் நிறைந்த அடர்ந்திருக்கிற அனேகவனங்களையுங் கடந்து அப்பால், பிரகாசிக்கின்ற வைரம், வைடூரியம், முத்து பதுமராகம் முதலிய பல மணிகளை வாரிக் கொண்டு மலைகளிலிருந்து விரைந்தோடி வீழ்ந்து மோதி வருகிற கானாற்றைக்கண்டு ஆங்குச் சற்றிளைப் பாறி, அதன்பின் சிறிது தூரம்நடந்து வேடுவர் விளைவித்த தினைப்புனங்காக்கும் வேடிச்சியர் சிவந்த கைகள் போலச் செங்காந் தண்மலர்கள் மலர்ந்திருக்குஞ் சுனைகள் சூழ்ந்த அழகிய சுந்தரானந்தர் வனத்தினுட் சென்று ஆங்குக் கோவில் கொண்டெழுந்தருளியிருக்குஞ் சுந்தரலிங்கரையும் மகாலிங்கரையுந் தெரிசித்து அவரது அருள் பெற்றுக் கொண்டு அப்பால் ஆச்சிரமத்தின் கண் எழுந்தருளி யிருந்த சுந்தரானந்தரைக் கண்டு அவரது திருவடி மலரை வணங்கித் தோத்தரித்தார்கள். அப்பொழுது சுந்தரானந்தர் யூகி முனிவருடைய சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய சமாசாரங்கள் முழுமையுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பிய பின்பு ஐவர்களையும் வீற்றிருக்கும்படி செய்து கூறுவார்.

தன்மார்த்தன் முதலானோர்களே! இவ்வனத்திலெத்தனைநாட் டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? நம்மாலென்ன விஷயமுங்களுக்குத் தெரியவேண்டுமென தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! தங்களுடைய வனத்தின்கண் ஒருவருட காலமிருந்து தங்களிடம் ஞானோப தேசங்களையும் கற்பமுறைகளையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும்பொருட்டு வந்தோமெனப் புகல,

அதைக்கெட்ட சுந்தரானந்தர் அப்படியானால் நீங்களிவ்விடத்தில் வாசஞ்செய்வதற்கு இவ்வனத்தின் மேற்குத்திசையில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து கொண்டு அனுதினமும் வேதாந்த உபநிஷத்துக்களின் வியாக்கியானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்க ளென்றுகூற அந்தப்படியே ஐவருமிருந்துவரும் நாள்களில் ஒருநாள் தன்மார்த்தன் முதலான ஐவருங் காலையிலெழுந்து நித்திய ஸ்நானநுட்டானங்களை முடித்துவர மேற்குத் திசைக்கட் சென்று மேல்நாட்டு மலையின் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிற சிற்றாற்றிலிறங்கி நித்திய ஸ்நான ஜெபதபங்களெல்லா முடித்துத் திரும்பிவரும்போது வழியில் ஆங்குள்ள வனத்திற் றவயோகத் தமர்ந்திருந்த ஒரு முனிவரைக்கண்டு இம்மகானுபாவர் யாரோ தெரியவில்லையே என எண்ணங் கொண்டவராய் அவரை வணங்கிக்கொண்டு சுந்தரானந்தர் ஆசிரமத்தில் வந்து அவரைக்கண்டு போற்றிக்சூழ வீற்றிருந்து வரும் வழியிற்கண்ட முனி சிரேட்டரைப் பற்றிய செய்தியை மிகப் பணிவோடு கேட்டனர்.

அதற்குச் சுந்தரானந்தர் ஐவர்களே! பூர்வத்தில் இப்பாண்டிநாட்டைச் சார்ந்த இராயபுரமென்னும் ஓர் கிராமத்தில் அக்கிராரத்தில் சகல வேத சாஸ்திரங்களையும் ஐயமறக் கற்றுணர்ந்த வடமனாகிய மதிசீலனென்றொரு பிராமண னிருந்தான். அவன் கற்பி, லகுந்ததிக்குச் சமானமான மாதிளநங்கை என்னும் பெயரையுடைய ஓர் மாதை மனைவியாகக்கொண்டு இல்லறம் வழுவாது நடாத்தி வரும்பொழுது ஓராண்மகவும், ஓர் பெண்மகவும் பிறந்தன. அப்பால் அப்பிராமணனாவன் பந்தபாசமான இல்வாழ்க்கையிற் பிரியமில்லாதவனாகித் தவஞான மோக்ஷமே பெரிதெனத் தன் மனதில் நினைந்து, எவர்க்குந்தெரியாது நகரை விட்டுப் பிரயாணமாகி ஈங்குவந்து சுணங்கன் மேட்டுக்குப் பக்கத்திலிருக்கிற செம்பாறையின்கண் தன் சரீரம் அழிவின்றி நீடித்தகாலஞ் சீவித்திருப்பதற் காதாரமாகச் சுவாசத்தைத் தன்வயப்படுத்திக் காய கற்பம் புசித்து வைராக்கியத்தை நிலைநாட்டித் தகுந்த ஆசனத்திலிருந்து பிராணாயாமம் முதலிய சாதனங்களைச் செய்துகொண்டு நீண்ட நாள்களாகத் தன்னைமறந்து தவயோக நிட்டை கூடியிருந்தனன். அப்படியிருக்கும்போது காற்றாற்றுகள் படிந்து அவனுக்குத் தெரியாது மூடிப் புற்பூண்டு செடிகொடிக ளுற் பத்தியாகிப் பெரும் புதராகச் சூழ்ந்து மறைக்கப்பட்டனன்.

இஃதிப்படியிருக்க ஆங்கு இராஜபுரங் கிராமத்தில் இவனுடைய மனைவி மாதிளநங்கையானவள் தன் புருடன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற நாள் முதல் அழுகையுங் கண்ணீருமாகச் சென்று பல இடங்களிலுந் தேடி அவனைக் காணாது மனமிக வருந்திப் பின்பொருவாறு மனந்தேறித்தன் செலவுக்காகத் தன்னிடமிருந்த சொத்துக்கள் முழுமையும் விற்றுக் கமலநாதன் காமவேணி என்னும் தனது இரு குழந்தைகளையும் மிகுந்த செல்வமாக வளர்த்து அருமையாகக் காப்பாற்றி அக்குழந்தைகளுக்குப் பத்துவயது பூரணமாகும்போது தெய்வீகமா யுயிர் துறந்தனள். அவ்விரு குழந்தைகளாகிய கமலநாதனுங் கமலவேணியும் கண்ணீர் ஆறாய்ப்பெருக வாய் விட்டலறி அழுது தாய்க்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் முறைப்படி செய்து முடித்தனர் பின்பு அப்பிள்ளைகளை அன்புகொண்டு ஆதரிக்கக்கூடிய சுற்றத்தா ரொருவரு மில்லாமையால் அப்பிள்ளைகளிருவரும்"

பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்ற முதுமொழிக் கிணங்கப் பிச்சையேற்றுக் காலக்ஷேபஞ் செய்து வந்தார்கள்.

அப்பால் கமலநாதன் தங்கையான காமவேணியானவள் தன் சகோதரனுக்குந் தெரியாது புஷ்பவதியாகிச் சில நாட்சென்றபின் காமத்தினால் மயக்கமுற்றுப் பரபுருடர்களைச் சேர்ந்து விபசாரஞ் செய்துகொண்டு வருவதை அறிந்த அக்கிராரத்திலுள்ளவர் அவளை ஒதுக்கி வைக்க, அவள் அந்த இடத்திலிருக்கமாட்டாமல் தன் தமையனையு மழைத்துக் கொண்டு அக்கிராரத்தைவிட்டு வேடர்கள் குடியிருக்கப் பெற்ற இடத்திற் சென்றிருந்து அவ்வேடுவர்களுடன் சேர்ந்து வனங்களுக்குச் சென்று மிருகங்கள் பட்சிகள் முதலானவைகளைக் கொன்று அவைகளின் மாமிசங்களைச் சமைத்து உண்டு காலங்கழித்து வந்தார்கள். ஒருநாள் கலமநாதன் வனவேடுவர்கள் கூட்டங்களோடு சேர்ந்து இம்மலைக்கு வந்து வில், வேல், பிண்டி, ஈட்டி, வாள் முதலியதங்கள் தங்கள் கருவிகளைக் கரத்திற்பற்றி வேட்டமாடும் அவ்வேடுவர்களைவிட்டுத், தான் தனியாக ஓர் மானைத் துரத்திக்கொண்டு வெகு தூரம் ஓடுகையில் அம்மானானது இந்தச் சுணங்கள் மேட்டுப் பக்கத்திலிருக்கிற செம்பாறை வனத்துள் நுழைந்து கமலநாதனுடைய தந்தையாகிய மதிசீலனெனும் பிராமணன் தவஞ்செய்கிற புதர்க்குள் ஓடிவந்து ஒளிந்து கொண்டது. கமலநாதனும் விடாது துரத்திச் சென்று அப்புதர்க்குள் மறைந்த மானைத் தன்னிரு கரங்களாலும் அணைத்துத் தாவிப் பிடிக்க முயலுகையில் ஆங்குத் தவநிட்டையிலிருந்த மதிசீல னென்னும் பிராமணன் தவத்தை நீங்கித் தன்னிரு கண்களை விழித்துப் பார்த்து அடா! சண்டாளா! என் தவநிட்டையை எதற்குக்கெடுத்தாய்? பாதகா! உன்னை இலேசாக விடமாட்டேன். உனக்குச் சாபத்தைக் கொடுக்கிறேனென்று இருகண்களிலுந் தீப்பொறி பறக்கக் கோபித்து எழுந்தருளுந் தருணத்தில், கமலநாதனான வேடுவன் பயந்து நடுநடுங்கி வாய் குமுறி இராஜபுரங் கிராமத்தில் தனது தாய் தந்தையர்கள் பெருமையாக வாழ்ந்தமையையும், அவர்கள் தங்கையொடு தன்னைப்பெற்றுச் செல்வமாக வளர்த்தமையையும், பின்பு தம்மை அருமையாக வளர்த்த தாயானவள் உயிர் துறந்தமையையும், அதன்மேல் தாம் பற்பல துன்பங்களுக்கு ஆளாயினமையையும், இப்பொழுது வயிற்றின் கொடுமையால் வேடுவர்களுடன் சேர்ந்து வேட்டைக்கு வந்தமையையும், அவ்விடத்தில் தவமுனிவரிடுஞ் சாபத்தைப் பெறப்போகின்றமையையும், நினைத்து மனம்வருந்தி வாய்விட்டு அரற்றி யழுவதைக் கண்ட மதிசீலனென்னு முனிவன் மிகுந்த இரக்கமுற்றுக் கமலநாதனை உற்றுநோக்கி இவன் தன்னுடைய புத்திரனாயிருக்கலாமென்றும், இன்னும் நன்கு விசாரித்தறியலாமென்றும் நினைந்து அடா! நீ யார்? உன் தாய்தந்தையர் பெயரென்ன? என்ன கஷ்டத்தை யடைந்தாய்? இவைகளை யெல்லாம் விவரமாகத் தெரிவிப்பா யென்று கூற அதற்குக் கமல நாதனாகிய வேடுவன் தன்னுடைய சரித்திரங்கள் யாவையும் புகலக் கேட்ட மதிசீல முனிவன் இவன் தன்னுடைய புத்திரனெனச் சந்தேகமறத் தெரிந்து கொண்டு அனேக உபசார வார்த்தைகளால் கமல நாதனைத் தேற்றி அருகில் வீற்றிருக்கும்படிச் செய்தனர்.

அப்பால் கமலநாதன் மதிசீல முனிவனை நோக்கிப் பிதாவே தங்களுடைய புத்திரனாகிய நான் பிராமண சமயத்தை விடுவித்து வேடுவர்கள் கூட்டத்திற் சேரவும்

என் தங்கை, கமலவேணி விபசாரத்தை யடையவும் இன்னும் மற்றக் கஷ்ட நிட்டூரங்களை யனுபவிக்கவுமாகிய இவைகளையெல்லாம் எங்களுக்கு ஏற்படவேண்டிய காரணமென்னவோ? வென்று கேட்க, அதற்கு முக்காலங்களு முணர்ந்த மதிசில முனிவன் தன் புத்திரனை நோக்கி அப்பா கமலநாதா! நீ முன் சென்மத்தில் சத்திரிய வம்ச அரசனுக்குப் புத்திரனாகப் பிறந்து இராச்சிய பரிபாலனஞ் செய்து வருகையில் யாதொரு குற்றமுஞ் செய்யாத நல்லொழுக்கமிகுந்த மாமறையோர்களைப் பலவிதமாகத் தூஷணை செய்ததினாலும் அவர்களை அகாரணமாகக் காராக்கிரகத்தில் அடைத்துவைத் தடித்ததனாலும் ஒருநாள் வனத்திற் சென்று வேட்டமாடி நீ மாத்திரம் அறுசுவையோ டன்னம் புசித்து, உன்னுடன் கூடவந்த வேடர்களைப் பசிப்பிணியால் மனம் நோகச் செய்தமையாலுமாகிய இக்கொடுமைகளால் இந்த சென்மத்தில் நீ பிராமணனாகப் பிறந்தும் பிராமண ஒழுக்கந்தவறி அநேக கஷ்டங்களை, யனுபவித்துப் பின் வேடுவருடன் சேர்ந்து அவர்களுடைய தொழிலைக் கொண்டு பசிப் பிணியா லலைந்தனை. உன் தங்கை கமலவேணியானவள் முன் சென்மத்தில் உனக்கே தங்கையாகப் பிறந்து வளர்ந்து ஓரரசனுக்கு மனைவியாகி வாழும் நாளில் தன் கணவனுடன் பிறந்த இளைஞனைத் தன் மாயவலைக்குட் சிக்கும்படி செய்துகொண்டதுமன்றி, அவனுக்கும் அவன் மனைவிக்கும் பிரிவினையையுமுண்டாக்கி அவளை அரண்மனையையும்விட்டு ஓட்டிவிடச் செய்தமையாலும், அரசிளைஞனால் விரட்டிவிடப்பட்ட அப்பெண் தனக்குக் கணவனில்லாமல் மனவருத்தத்துடன் பரபுருடனை சேர்ந்து வாழுங்காலத்தில்அவள் சதா திட்டி வயிற்றெரிச்சலுட னிருந்தமையாலும், அப்பாவங்களின் வழி இந்தச் சன்மத்திலும் உனக்கே தங்கையாகி இத்துன்பங்களுக்கு ஆளாகினள் எனக்கூறி, கமலவேணியாகிய அவளை ஆங்குக் கூட்டிவரச்செய்து அவ்விருவர்களுக்கும் பாவவிமோசனஞ் செய்து மெஞ்ஞானத்தை உபதேசித்து அவர்களுக்கு வேண்டும் பொருள்களை வேண்டியமட்டுங் கொடுத்து. நீங்கள் இங்கே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ சுந்தரமகாலிங்கப் பெருமானைச் சேவித்துக்கொண்டு நாட்டிற்போய் வீட்டறம் புரிந்து வாழ்வீர்களானால், அடுத்த பிறப்பில் நீங்கள் உயர்ந்த அரச குடும்பத்திற் பிறந்து உலகமதிக்க வாழ்வீர்களென்று நன்மொழி வழங்கி அவர்களை அனுப்பிவிட்டுத் தவஞான நிட்டையிற் கூடியிருந்தனன். அதுமுதல் அவ்வனத்திற்கு மதிசில மகாமுனிவர்வனம் எனப் பெயர் வழங்கலாயிற்று. அம்முனிவ ரருள்பெற்று சுந்தரமகாலிங்கப் பெருமானை வணங்கிக் கொண்டு இராஜபுரம் கிராமத்துக்குச் சென்ற கமலநாதனும் கமலவேணியும் சிறந்த புத்திசாலிகளாய் பெருஞ் செல்வமுடையவர்களா யிருத்தலைக் கண்டு முன்னுள்ள செய்கைகளை மறந்து கமலநாதனோடு அக்கிரமத்தார் அளவளாவி இருந்தனர். அவனுஞ் சிறந்து வாழ்வானாயினான். ஆகையால் உலகத்தில் மானிடர் யாவரும் தருமம், பொறுமை, அறிவு, ஒழுக்க முதலிய நற்குண நற்செய்கைகளை யுடையவராயிருந்து வாழல் வேண்டும், என்று புகன்றருளியதை அறிவிற்சிறந்த தன்மார்த் தன் முதலானோர்கள் கேட்டு மனமகிழ்வடைந்தனர்.

மற்றொரு நாள் தன்மார்த்தன் முதலான ஐவரும் நித்திய ஸ்நான வநுட்டானங்களை முடித்துவர வட திசையிலிருக்கிற வரையாற்றுக்குச் செல்லும்பொழுது ஆங்கு ஒரு தண்கமலப் பொய்கையின் கண் புலியும் பசுவும் ஒரே

துறையில் தண்ணீரருந்துவதையும், கீரியும், பாம்பும் ஒன்றோடொன்று நேசங் கொண்டிருப்பதையும், கண்ணுற்று அதிக ஆச்சரியமடைந்து சென்று ஆற்றில் நீராடித் திரும்பப் பன்னசாலை நோக்கி வரும் வழியில் விடத்தும்பை என்னும் ஓர்வகைப் பெருஞ் செடியானது படர்ந்திருந்தது. அதை அவர்கள் விஷச்செடி யென்றுணராது சாதாரணமான ஏதோ ஓர் மலைச்செடி என நினைத்து அச்செடியைத் தங்கள் கரங்களால் விலக்கிக்கொண்டு வந்தார்கள். அப்படி வரும்போது அந்த விஷச்செடி ஐவர் சரீரத்திலும் படவே அவர்கள் சரீரம் வீங்கியதை ஒருவருக்கொருவர் பார்த்து, சொல் லொணாத துக்கத்தை யடைந்தவர்களாய்ச் சுந்தரானந்தர் ஆச்சிரமத்தில் வந்து அவரை வணங்கி நடந்த செய்திகளைத் தெரிவித்து நின்றார்கள். அதைக்கேட்ட சுந்தரானந்தர் மிகுந்த இரக்கமுற்றவராய் ஐவர்களையுங் கிருபைக் கண்களாற் பார்த்து அநேக சஞ்சீவி மூலிகைகளால் அச்செடியின் விஷவீக்கங்களையெல்லாம் போக்கி அவர்களை வீற்றிருக்கும்படிச் செய்து சொல்லுவார்.

ஐவர்களே! இவ்விடத்தில் *தும்புகச் செடி என்னும் ஓர்விதப் பச்சிலையுண்டு. அப்பச்சிலை மானிடர்கள் சரீரத்திற் பட்டமாத்திரத்தில் வீக்கமுறும். அதற்கப் பொழுதே வேண்டிய சிகிச்சைகளைச் செய்யாவிடில் உயிர் நீங்கிவிடும். அப்பச்சிலை தான் உங்கள் தேகத்திற் பட வீக்கமுற்று வந்தீர்கள். அன்றியும் இங்கு விஷப் பூலாமரம், முகம்வீங்கி மரம், எரிமுகி மரம், விஷத்தேற்றாமரம் முதலிய இன்னும் அநேக விஷமரங்களும் செடி கொடிகளுமிருப்பதனால் நீங்கள் மிகப் பத்திரமாக இருந்து வாசஞ்செய்து வருதல் நலமாகும். இனி நீங்கள் இத்தேவகான லிலெழுந்தருளியிருக்கிற சுந்தரலிங்கத்தையும், மகாலிங்கத்தையும், ஆனந்தவல்லி அம்மையையும், பலாவடிக் கருப்பண்ணன், பேச்சியம்மை, காளியம்மை, முதலான தெய்வங்களையும், தரிசனை செய்து வருவீர்களெனக் கூறினர். அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் எழுந்து விடைபெற்றுச் சுந்தரானந்தர் கூறிய தெய்வங்களைக் கண்டு தரிசனஞ் செய்து தங்கள் பன்னசாலைக்குச் சென்று காய்கனி சரகுகளாற் பசிப்பிணியைப் போக்கிக்கொண்டு சுந்தரானந்தரிடத்துக்கு வந்து வணங்கி வீற்றிருந்து மெஞ்ஞானோப தேசங்களைக் கேட்டு வரும்போது ஐவரும் சுந்தரானந்தரை நோக்கி சுவாமீ! தங்களைப் போன்ற மெஞ்ஞான தவத்தை யுடையவர்களுக்கு ஆதாராமாவது என்னவோ? அதைக் கூறியருள வேண்டுமெனக் கேட்க, அதற்குச் சுந்தரானந்தர், ஐவர்களே! உலகத்தி லரிய தவத்தையுடைய பெரியோர்களுக்கு முக்கிய ஆதாரம் வாசியே யாகும்.

வாசியென்பது பிராணவாயுவாகும். அந்தவாசியைத் தம் வயப்படுத்தி நடாத்த வல்ல பெரியோர்களே சகல சித்திகளையும் பெற்றுச் சிறந்தனர். எவ்வாறெனில், விரிந்த அரிய சுடரான சுழிமுனையில் இடகலையாகிய சந்திரன் சேரில் பஞ்சபூதங்களுமறிவு மொடுங்கும். பிங்கலையாகிய இரவிசேரில் ஐம்புலனும் அறிவும் பெருகும். அந்த இரவிமதி ஒன்றாகக் கூடிச் சுழினையிடத்தில் நிற்கில் அறிவுந் தசவாயுவுமொடுக்கும். ஆதலா லவ்வாசியின் மத்திய நிலையில் மூலத்திலும், குய்யத்திலும், நாபியிலும்,

---

*தும்புகா, விடத்தும்பை, தும்புகர் என்பன ஒரு பொருட்சொற்கள். இதனை "விஷத்தும்புலா" என்று இக்காலத்தார் வழங்குவர்.

இதயத்திலும், கண்டத்திலும் குருபதியிலும் எழுந்தருளிய ஆதார மூர்த்திகளை சதா காலமும் சேவித்து நிற்பவர்கள் தாம் மெய்ஞ்ஞானிகளாவர். அவ்வாறு அம்மெய்ஞானிகளுடைய நிலையை நீங்களைவரும் அடைவது அவசியமே; ஆனாலு முதலிற் காயகற்ப மூலிகைகளாலுங்கள் தேகத்தைச் சித்தி செய்து கொள்ளுவது உத்தமமாகும். அதற்காக நமக்குத் தெரிந்த கற்பமுறைகளிற் சிலவற்றைக் கூறுகின்றோம் கேட்பீர்களாக. இவ்வனத்தின் தென் திசையில் எழுந்தருளியிருக்கின்ற சுந்தரமகாலிங்கமூர்த்தி சொரூபத்துக்குப் பின்பு கற்பகத்தரு என்றொரு விருக்ஷமிருக்கிறது. அதனைப் பஞ்சதருவென்றுஞ் சொல்லுவார்கள். அவ்வொரே மரத்திற் கிளைகள் ஐந்து உண்டு. அக்கிளைகளைந்திலும் ஐந்து விதமான இலைகளிருக்கும். அதன் பட்டையைக் கொண்டு வந்து தினமும் ஒரு காசுடை வீதம் ஒரு வாரஞ் சாப்பிடச் சகல வியாதிகளும் நீங்கும். அந்த மரத்தைத் தட்டினாற் பால் வரும். அதன் பாலைக் காசெடை வீதம் ஒரு மண்டலஞ் சாப்பிடத் தேக சித்தியாகும்.

இதைத் தவிர இன்னுமொரு முறையும் உண்டு. அதாவது, அந்தக் கற்பக விருக்ஷத்திற்கு மேற்குப் பக்கத்தில் சிறிது தூரத்துக்கப்பால் செங்கடுக்காய் விருக்ஷமென ஒன்றுண்டு. அது கடுக்காய் விருக்ஷம் போலிருக்கும். காய் சிவப்பு நிறமாயிருக்கும். அக்காயையும், கற்பகத்தருவின் பச்சைப்பட்டையையும் காடித் தண்ணீரில் மூன்று நாளூறவைத்துப் பிசைந்து தண்ணீரை வடித்து அதற்கு அளவாக உப்பு, மிளகு சேர்த்து இஞ்சி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றை விட்டரைத்துப் பழகின ஒரு மண் கலத்தில் வைத்து நாற்பத்தெட்டு நாள் காலை மாலை கொஞ்சங்கொஞ்சம் புசித்துவரத் தேகசித்தியாகும்.

மற்றொரு முறையும் உண்டு. அது யாதெனில் அந்தச் செங்கடுக்காய் விருக்ஷத்துக்குங் கீழ்திசையில் மண்திட்டு என்னுமொரு குன்றிருக்கிறது. அக்குன்றின் கண் சஞ்சீவி மூலிகையென்றோர் பச்சிலையுண்டு. அதற்கு எமனை வென்றான் மூலிகை யெனவும் தசையொட்டிப் பச்சிலை யெனவும் பெயர். அதன் இலை சிறு வேப்பிலை போலும் அதன் வடிவு குத்து செடிபோலுமிருக்கும். அந்த இலையைக் கொண்டு வந்து சூரணஞ் செய்து அகால மரணமானவர்களது நாசியிற் ஒரு சிட்டிகை போட்டுக் குழாய் வைத்தூதினால் உடனே உயிர்பெற் றெழுந்திருப்பார்கள். இது தவிரத் துண்டு துண்டாக வெட்டுண்டு இறந்தோரது தேகத்தின் துண்டுகளை ஒன்று சேர்த்து மேற்சொன்ன பச்சிலைச் சாற்றை அந்த ஒவ்வொரு துண்டங்களிலும் பிழிய அத்துண்டங்களெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும். இறந்தவர்களும் உறங்கி எழுந்தவர்கள் போல் எழுந்திருப்பார்கள். இது தவிர மூர்ச்சை யடைந்தோர்களுக்கு மேற்சொன்ன பச்சிலையைக் கொண்டு வந்து விசிறினால் அம்மூர்ச்சை தெளிந்தெழுந்திருப்பார்கள். அப்பச்சிலையின் காற்று தேகத்தின் மேற் படுமாகில் ஆயுசு விருத்தியுண்டாவதோடு காயசித்தியுமடையலாகும், என்று கூறி இன்னுமனேக தத்துவப் பிரகாச வியாக்கியானங்களை யெல்லா முபதேசித்து முடித்த பின்னர்ச் சுந்தரானந்தர் சொல்லுவார்.

தன்யார்த்தன் முதலானோர்களே! நம்முடைய வனத்தில் ஒருவருடகால மிருப்பதாக முன்பு என்னிடந் தெரிவித்தீர்கள். அந்நாண்முத லிந்நாள்வரை ஒரு வருட

காலஞ் சரியாய்விட்டது. ஆகையால் இதன் பக்கத்தில் பிரமமுனிவர் ஆச்சிரம மொன்றிருக்கிறது. ஆங்குச் சென்று அவரிடத்தில் இன்னும் வேண்டிய ஞானோப தேசங்களைக் கேட்டுக்கொண் டிருங்களென்று உத்தரவு கொடுத்துத் தம்பக்கத்திலிருந்த சீடர்களி லொருவனை யழைத்து இவர்களைவரையும் கூட்டிச் சென்று பிரம முனிவரிடத்தில் விடுத்துவருவாயென்று உத்தரவு செய்ய அவ்வுத்தரவின்படி சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் சுந்தரானந்தரை அன்புறவணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! சுந்தரானந்தர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் வேதாந்த ஞானோப தேசங்களையும் காயகற்ப முறைகளையுங் கேட்டுச் செனனமாகிய ஆழ்ந்த கடலைத் தாண்டினோம். இனி அந்தப் பிரமமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் ஞான கற்ப முறைகளை அருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க சாணாங்கி முனிவர் சொல்லுவாராயினர்.

பத்தொன்பதாவது,
சுந்தரானந்தச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபதாவது

பிரமமுனி சருக்கம்

ஏழாவது வனம்

பிறங்குஞ் சதுர கிரிதனிலே பிரம்ம ருஷியைத் தன்மார்த்தன்:
அறங்க ளுணர அடைந்தங்கே அருமைக் கலைக்கோட்டுருஷியர்,

திறங்கொள் பிறப்பு மிராம பிரான் செனித்த வசைய முணர்த்தக்கேட், டுறங்கி எழுந்தாற் போலுணர்ந்தே உயர்வைப் பெற்ற விதுசொல்வாம்:

கேளுங்கள் முனிவர்களே! சுந்தரானந்தரது சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும் தென்திசையை நோக்கிப் பிரயாணமாகி சந்நியாச வனத்தில் வந்திருந்து இளைப்பாறி யிருக்கும்போது பூனை, கீரி, பாம்பு, பல்லி, பூரான், ஒந்தி முதலானவைகள் பறந்து வருவதும் போவதுமாக இருப்பதைக் கண்டாச் சரியமுற்று அவ்விடத்தை விட்டகன்று மான், பன்றி, புலி, யானை, கருமந்தி முதலிய அநேக மிருகங்களும், மயில், குயில், புறா, கிளி முதலிய அநேக பறவைகளுங் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரிக்கின்ற வனங்களையும், கதிரவனொளியும் புகாது நெருங்கி ஓங்கி வளர்ந்த விருக்ஷங்கள் மலிந்து விளங்கிய வனங்களையும், உயர்ந்த கிரிகளின் உச்சியிலிருந்து உற்பத்தியாகி வீழ்ந்து பல பகுப்பாய்ப் பிரிந்து ஓடிவருகிற கானாறுகளையுங் கடந்து பிரமரம் முதலாகிய வண்டினங்களானவை மெல்லிதாயுள்ள புஷ்பங்களி லிருக்கிற தேனைக்குடித்து மயக்கத்தினால் மோகன முகாரி இராகங்களைப் பாடிக்கொண் டிருப்பதான அழகிய பூஞ்சோலை சூழ்ந்த பிரமமுனிவர் வனத்துட்சென்று ஆங்குத் தம் ஆசிரமத்தின் கண்ணெழுந்தருளி யிருந்த பிரமமுனிவரைக்கண்டு அவருடைய பதமலரை வாழ்த்தித் துதித்தார்கள்.

அப்பொழுது பிரமமுனிவர் சுந்தரமுனிவர் சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய விருப்பினைத் தெரிந்து அச்சீடனை வழியனுப்பிய பின்னர் ஐவர்களையும் வீற்றிருக்கும்படி செய்து கூறுவார்.

தன்மார்த்தன் முதலானோர்களே! இவ்வனத்திலெத்தனை நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? நம்மா லென்ன விஷயம் உங்களுக்குத் தெரிய வேண்டும்? எனக்கேட்கத் தன்மார்த்தன் முதலானார்கள் சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு

வருட காலமிருந்து கற்பமுறைகளைத் தெரிந்து காயசித்தியடைய வேண்டிய விவரங்களையும் ஆத்ம ஞான தத்துவார்த்தாதி உபதேசங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென வந்தோமென்று புகல, அதைக் கேட்ட பிரம முனிவர் அப்படியானால் நீங்கள் வாசஞ்செய்வதற்கு இவ்வனத்தின் மேற்குத் திசையில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்ன சாலை அமைத்து அதிலிருந்து வருவீர்களென்று சொல்ல, உடனே ஐவரும் முனீஸ்வரருடைய சொற்படி ஐந்தடுக்குப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து அனுதினமும் வேத ஞானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டு வரும் நாள்களில் ஒரு நாள் தன்மார்த்தன் முதலான ஐவரும் அதிகாலையிலெழுந்து நித்தியஸ்நான வநுட்டானங்களை முடித்துப் பிரம முனிவர் ஆச்சிரமத்துக்கு வந்து அவரை வணங்கி வீற்றிருக்கையில் முனீஸ்வரர் ஐவரையும் நோக்கி நீங்கள் தவஞான நிட்டையையடைய வேண்டுமென்றால் விபாண்டக முனிவர் புத்திரரும், தவஞான நிட்டையின் மேம்பாட்டை யுடையவரும், ரோமபத மகா ராஜாவினுடைய நாட்டின் கண் மழை வருஷிக்கும்படி செய்தவரும், அயோத்தியாபுரிக்கரசனாகிய தசரதச் சக்கரவர்த்திக்குப் புத்திரப்பேற்றை உண்டாக்கினவரும், இராவணசம்மாரத்தை அப்புத்திரர்கள் நடாத்துதற்குக் காரணமாயிருந்தவருமான கலைக்கோட்டு மகா முனிவரைப் போலிருந்தாலல்லவோ ஞான நிலையை அடையலா மென்றுகூற, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! அந்தக் கலைக்கோட்டு மகா முனிவரென்பவர் யார்? அவருடைய பெருமைகளை யெல்லாம் அடியேங்கள் எல்லோரும் உய்யுமாறு கூறியருள வேண்டுமென்று கேட்க, அதற்குப் பிரம்மமுனிவர் ஐவர்களே! தவவொழுக்கங்களிற் சிறந்த கலைக்கோட்டு மகாமுனிவரது சரித்திரமானது மேன்மை தங்கிய நாரத முனிவருபதேசத்தின்படி தவஞ்செய்வதும் வேதமோதுவதும் ஆகிய இவைகளைச் சதாகாலமும் விரும்பின வான்மீகி மகருஷி செய்த ஸ்ரீமத் இராமாயணத்திலுள்ளது. அவ்விராமாயணத்தைச் சகல வேதசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த பராசரருஷியிடத்தில் நான் முன்பு பதபாகமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டபடி இப்போதுங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்களென்றுகூறிக் கிருபா நோக்கத்தோடு புகலுகின்றார்.

ஆதி காலத்தில் சீரோங்குங் கதிரோன் குலதிலக இட்சுவாகு வம்சத்தி லுற்பவித்த அசமகா ராஜனுக்குப் புத்திரனாகப் பிறந்த தசரதச் சக்கரவர்த்தியானவன் சகல ஜீவ ராசிகளுக்குந் தாய்த்தானத்தையொத்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற இந்நான்கு நிலங்களினும் மகரந்தப் பொடிகளை உதிர்க்கின்ற சோலைகள் சண்பக வனங்கள் தடாகங்கள் கழனிகள் மேன்மேலும் வளம்பெற் றோங்கி வளரச் சரயுநதியாற் சூழப் பெற்றதாகிய கோசல நாடென்னும் அயோத்தியா புரியைக் கௌசலை கைகேசி சுமித்திரை என்ற மூன்று பட்டஸ்திரீகளையும் மணமுடித்துச் சகல ஆலோசனைகளிலும் வல்லவர்களான திருஷ்டி, ஜயந்தர், மந்திரபாலர், விஜயர், சித்தார்த்தர், அர்த்தசாதகர், அசோகர், சுமந்திரர்முதலான அனேக மந்திரிகளோடும், வசிஷ்டர் முதலான அநேக பெரியோர்களது சொற்படி ஜனங்களைத் தர்மங்களினால் மனமகிழச் செய்து பாதுகாத்துச் சொன்ன சொற் தவறாது மூவுலகங்களிலும் பிரசித்தனாய்த் தபோதனர்களும் மாமறையோர்களும் புடைசூழ்ந் தாசீர்வதிக்க நவரத்தின சிம்மாதனத்தில் வீற்றிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்து வரும் பொழுது ஒருநாள்

தன்னுடைய குலகுருவான வசிஷ்ட மகா முனிவரை நமஸ்கரித்துச் சுவாமீ! அடியேன் இது நாள் வரை ஈஸ்வர அனுக்கிரகத்தாலும் தங்களுடைய கிருபா நோக்கத்தாலும் அறுபதினாயிரம் வருடம் முனிவர் அந்தணர் முதலான யாவரும் யாதொரு துன்பமில்லாது வாழ்ந்துவரும் படியாக இராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டு வந்தேன். எனக்குப் பின்பும் அவர்கள் வருத்தமுறா திருக்கும்படியாக இவ்விராச்சியத்தை யாளப் புத்திரன் இல்லா திருப்பது என்ன காரணம்? என்று மிகுந்த கிலேசமுற்றுக் கேட்க, அதற்கு வசிஷ்ட மகாமுனிவர் அரசே! முன்னந் தேவலோகத்தில் நடந்த தேவரகசிய மொன்றுண்டு. அதாவது தேவேந்திரன் முதலான தேவர்கள் இராவண இராக்கதர்கள் செய்யும் உபத்திரவங்களைப் பொறுக்க முடியாது. காளகண்ட திரிநேத்திர தாரியாகிய சிவ பெருமானிடத்திற் சென்று முறையிட, அதற்கவர் நாம் இராக்க தர்களைச் சங்கரிக்கிற தில்லையெனக் கூறித் தம்மிடத்துக்கு வந்த தேவர்களைப் பிரம தேவரிடத்துக்கனுப்பினர்.

உடனே அத்தேவர்கள் பிரமதேவரிடத்தில் வந்து தங்களுக்கு நேரிட்டிருக்கும் வருத்தத்தைக்கூற, அவர் இவ்விடற்களைத் தீர்க்க எம்மாலாகாது எனக்கூறித் தாமும் அத்தேவர்களுடனே திருப்பாற்கடலுக்குச் சென்று மரகத சொரூபனான, ஸ்ரீமன் நாராயணனை மனத்துள் தியானித்து பலவிதமாகத் தோத்திரஞ் செய்ய அத்தருணத்தில் வைகுந்த பதவியை இச் சித்தவர்க்கருளும் வைகுந்தநாதன் கெருடவாகனராய் சங்கு சக்கர கதா கட்க கோதண்ட பாணியாக அவர்களுக்கு முன் பிரத்தியட்ச மாயினர்.

அப்போது அவர்கள் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து! பகவானை நோக்கி ஆபத்பாந்தவா! அனாத ரட்சகா! சனார்த்தனா, பக்தாநுகூலா! பாவிகளாகிய இராக்கதர்கள் செய்கிற உபத்திரவங்களைத் தீர்த்து எங்களை யிரட்சித்து ஆட்கொள்ள வேண்டுமெனக் கேட்க, அனந்தகுண கல்யாணனாகிய பகவான் பிரமாதி தேவர்களை நோக்கி நீங்கள் இனிமேற் பயங் கொள்ள வேண்டாம். அந்தக் கபட மாய வஞ்சக ராகிய இராக் கதிர்களை யெல்லாஞ் சங்கரித்து இரட்சிக்கிறோம். அதற்கு நமக்குதவியாக நீங்கள் யாவரும் இப்பொழுதே மத்திய பாகமாகிய பூலோகத்திற்குச் சென்று மலைகளிலும் வனங்களிலும் வானரங்களாகப் பிறந்து சஞ்சரித்துக் கொண்டிருங்கள். தாம் பெற்றுள்ள வரங்களினாற் செருக்கடைந்து வாழுகின்ற இராக்கதர்களைப் படுசூரணஞ் செய்ய நமது சங்கு சக்கரம் சேடன் மூவரும் நமக்குத் தம்பியர்களாக, இரதகஜதுரகபதாதிகள் சூழ அயோத்தியா புரியை அரசு செய்து வருகிற தசரதச் சக்கரவர்த்திக்கு நாம் புத்திரனாக வந்தவதாரஞ் செய்கின்றோ மெனத் திருவாய் மலர்ந்தருளிச் சென்றனர்.

அதன்பின் தேவர்கள் யாவரும் பகவானாஞ்ஞையின்படி பூலோகத்திற்குச் சென்று வானரர்களாக அவதரித் திருக்கிறார்கள். ஆகையா லினிமேல் வருத்தமுற வேண்டாம். இவ்வீரேழு பதினான்குலகங்களையும் அரசுபுரியும் படியான புதல்வர்களை நீ பெறுவாய். இந்த நிமுடமே குற்றமற்றகாசிபமகாருஷியினுடைய புத்திரர் விபாண்டகரது பிள்ளையான கலைக்கோட்டு மகாருஷியென்பவருதவியால் புத்திரகாமேஷ்டி செய்வாயாகில் உனது மனச் சஞ்சலந்தீரும் என்று சொல்லினர்.

அதைக்கேட்ட தசரத மகாராஜன் அளவிலா ஆனந்தக் கடலில் மூழ்கின வனாகிச் சுவாமீ! அந்தத் தவசிரேஷ்ட ரெங்கிருக்கின்றனர். அவர் ஈங்கு வருவதற்கு வேண்டிய காரியாதிகளை அடியேனுக் கனுக் கிரகஞ்செய்தால் அவ்விதமே நடந்து கொள்கிறே னென்றனன். அதற்கு வசிஷ்ட மகாருஷி அரசே! முன்னம் மனு குலத்தி லுற்பவித்த உத்தான பாத்மகா ராஜனுடைய குமாரன் உரோமபதனென்னும் அரசனானவன் தன்னாட்டில் அனேக காலம் மழையில்லாமையால் சகல ஜீவ ராசிகளும் வருத்தமடைவதைத் தெரிந்து துன்புற்று, திரிகாலங்களு முணர்ந்த மகாத்துமாக்களான பெரியோர்களிடத்திற் சென்று கேட்க, அதற்கவர்கள் மகாராஜனே! காசிபருடைய புத்திரரான விபாண்டகரென்னும் முனிவர் நீண்ட காலங்களாகச் சுகவனத்தின்கண் தவநிட்டையிலிருந்து வருகையில் ஓர் நாள் அவர் அதிகாலையிலெழுந்து அவ்வனத்தின் பக்கத்தி லோடிக் கொண்டிருக்கிற கங்காநதியில் ஸ்நான அநுட்டான ஜெபதபத்தைச் செய்துகொண்டிருந்தனர். அப்போது அத்தவத்தைக் கலைக்கும் பொருட்டு தேவர்களுத்தரவின்படி வந்த அரம்பை யென்னும் ஓர் மாது சிரோமணி அவரிடத்துக்கு வந்து அவர்முன்னே நின்றனள். அவளைக்கண்ட விபாண்டக முனுவர் மிகுந்த மையலுற்றுச் சமீபத்தில் வருவதற்குள் அவரது இந்திரியங் கலிதமாகி நதியில் வீழ்ந்து மிதந்து போய்க்கொண்டிருந்தது. அச்சமயத்தில் அம்முனிவர்க்கு நேர்கிழக்காக ஓர் பெண் மான் தாகவிடாயோடு வந்து தண்ணீர்பருகும்போது அத்தண்ணீரில் மிதந்து வருகிற இந்திரியத்தையுஞ் சேர்த்துப் பருகிற்று.

உடனே அம்மானானது கருப்பமுற்று ஒரு கொம்போடு ஓராண்மகவைப் பெற்றுவிட்டு உயிர்துறந்தது. அதைக்கண்ட விபாண்டக முனிவர் அக்குழந்தையை யெடுத்துத் தன் னாச்சிரமத்திற்குக் கொண்டுவந்து வளர்த்துக் கலைக்கோட்டாரென நாம கரணமிட்டு அநேக வேத சாஸ்திரங்களைக் கல்பித்து ஆத்மஞானர்த் தங்களை யெல்லாம் உபதேசித்துவந்ததனால், அக்கலைக்கோட்டார் மகா தவஞான சிரேஷ்டராயிருக்கிறார். அவருக்கு உலக சுபாவமே தெரியாது. சகல ஜீவர்களையுந் தன்னுடைய ஜீவனைப் போல நினைக்கக் கூடியவர்; ஆதலால் அம்மகானுபாவரான கலைக் கோட்டாரென்னும் சிருங்க மகா முனிவரை அழகில் மிகுந்த பெண்களால் கூட்டிவரச் செய்வாயாகில் உனது நாட்டில் வேண்டிய மழைவருஷிக்கும் என்று கூறி யருளியதைக் கேட்ட ரோமபத மகாராஜன் உடனே தன்னரண் மனையிலிருக்கிற நாடகப் பெண்க ளிருவரை யழைத்து பெண்காள்! உங்களுக்குவேண்டிய ஆடையா பரணாதிகளைத் தருகிறேன். நீங்களிப்பொழுதே தென்திசையி லிருக்கிற வனத்தின்கண் வசித்துவருகிற விபாண்டக முனிவருடைய குமாரரானகலைக்கோட்டு மகாமுனிவரை அழைத்து வருவீர்களென மிகுந்த உபசாரத்துட னனுப்ப, அவ்விருபெண்களும் அனோ யோசனைதூரந் தென்திசையிற் சென்று ஆங்கோரழ்கிய சோலைகள் சூழ்ந்த வனத்தில் கலைக்கோட்டு மகாருஷியின் ஆசிரமத்தைக்கண்டு மகாருஷிகள்போல வேடம் பூண்டு சிறிதுதூரத்தில் தங்களுக்காகப் பன்ன சாலையமைத்து வாசஞ்செய்து கொண்டு வருநாள்களில் ஒருநாள் விபாண்டக முனிவரில்லாத தருணம் பார்த்துக் கலைக்கோட்டு முனிவரைப்போய்க் கண்டு கொண்டார்கள். அம்முனிவர் அவர்களையும் அவர்களுடைய தனங்களையும் பார்த்து நமக்கோ ஒரு கொம்பிருக்கிறது. இவர்களுக்கோ இரண்டுகொம்புகளிருக்கின்றன. ஆனதா லிவர்கள் நம்மிலுஞ் சிறந்த

மகருஷிகள் போலிருக்கிறார்களென்று நினைத்துச் சிறிதுநேரம் வசனித்துக் கொண்டிருக்குந் தருணத்தில் அவ்விரு பெண்களாகிய ருஷிகளும் திடீரென்றெழுந்து அம்முனிவரை ஆலிங்கனஞ்செய்து தங்களுடைய பன்ன சாலைபோய்ச் சேர்ந்தார்கள். இப்படி அநுதினமும் அந்தப் பெண்கள் வருவதும் ஆலிங்கனஞ் செய்வதும் செல்வதுமாக இருந்தனர்.

அப்பால் ஒருநாள் அம்முனிவரைத் தங்களுடைய பன்னசாலைக்கு அழைத்துச் சென்று தகுந்த ஆசனத்திலிருத்தி மா, பலா, வாழை முதலிய விருக்ஷங்களின் கனிகளையும் தேங்காய்த் திருகற்பூவையும் அனேக பக்ஷணங்களையும் அருந்தும்படி கொடுக்க அவரவற்றை வாங்கிப் புசித்து ருசியா யிருப்பதைப் பற்றிச் சந்தோஷ முற்று இக்கனிகள் முதலியன எந்தத் தேசத்தில் விளைகின்றன வெனக் கேட்க, அதற்கிருபெண்களும் சுவாமீ! எங்கள் தேசத்திற்றான் விளைகின்றனவென, அதைக்கேட்டு முனிவர் அப்படியானா லுங்கள் தேசத்திற்கு வரலாமோ வென, அப்பெண்களிதுதான் சமயமென நினைத்துச் சுவாமீ! இப்பொழுதே வாருங்கள் கூட்டிச் செல்லுகிறோமென்றழைத்துக்கொண்டு தாங்கள் முன்னும் முனிவர் பின்னுமாய் நெடுந்தூரம் பாதசாரியாய்ச் சென்று, ரோமபத நாட்டின் எல்லைக்குச் சமீபத்த வுடனே அம்மகானு பாவருடைய திருமலரடிகள் அந்நாட்டிற் பரிசித்த மாத்திரத்தில் ஆகாயத்தின் கண் மேகமானது கறுத்து மின்னலுங்குமுறலுமாக ஆர்ப்பரித்து மழை வருஷித்தது. அதைக் கண்ட ரோமபத மகாராஜன் ஆச்சரியத்தை யுடையவனாகி அந்தக் கலைக்கோட்டு மகாருஷி யென்பவர் இவ்விடத்துக்கு வந்துவிட்டனரோ! ஏது இவ்விதமழை பெய்கிறதென்றாலோசித்து முனிவர்கள், அந்தணர்கள், மந்திரி பிரதானியர்களுடன் ரத கஜ துரக பதாதிகள் முதலான நால்வகைச் சேனைகளுஞ் சூழ்ந்து வர எதிர்சென்று கலைக்கோட்டு மகாமுனி வருகிறதைக் கண்டு வணங்கி அழைத்துவரும்போது, அம்முனிவர் தம்மைக் கபட வஞ்சகமாக இவ்விடத்திற்கு அழைத்து வந்தார்களெண்ணியதை அரசன் தெரிந்து தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்துத் தன் குறைகளை யெல்லாஞ் சொல்லி முறையிட்டுப் பலவாறாக வேண்டிச் சந்தோஷிக்கச் செய்து நகர்க்குள் வந்து தன்னரண்மனையிற் கூட்டிச்சென்று தகுந்த ஆசனத்தி லெழுந்தருளி யிருக்கச் செய்து சோடச வுபசாரங்களுடன் வாழ்த்தித் தோத்திரஞ் செய்து கொண்டிருந்தனன்.

அம்முனிவரைக் கூட்டி வந்த அவ்விரு பெண்களுக்கும் வேண்டிய சன்மானங்களைக் கொடுத்து அனுப்பியதன் மேல் தன் புத்திரியாகிய சாந்தையென் பவளை அக் கலைக்கோட்டா ரென்னுஞ் சிருங்கி முனிவருக்கு நல்ல சுபயோக சுபதினத்தில் திருமண முடிப்பித்து. அம்முனிவரை அந்நகரத்திலேயே வசிக்கும்படி செய்து கொண்டிருக்கிறான். ஆகையாலந்த மகாதவ சிரேட்டராகிய கலைக்கோட்டு மகா முனிவரை ஈங்கு அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்று வசிஷ்ட முனிவர் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட தசரதச் சக்கரவர்த்தி தனது பிரதான மந்திரிகளாகிய சுமந்திரன் முதலிய அமைச்சரோடு அழகிய ரதத்தின் மீதாரோகணித்து நெடுந்தூரங் கடந்துபோய் ரோமபத மகாராஜனுடைய திருநகரத்தைக் கண்ட மாத்திரத்தில் ஆங்கு வேவுகாறர்களால் தசரதச் சக்கரவர்த்தியின் வரவைத் தெரிந்த உரோமபதன் எதிர் சென்று

வணங்கி மிகுந்த அன்புடனே தன்னரண் மனைக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சிங்காதனத்தி லிருத்தி அரசே! தாங்க ளென்னை யொருபொருட்டாக் வெண்ணி இவ்விடத்துக்கு வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டுமெனக்கேட்க, அதற்குத் தசரதன் தான் வந்த காரியங்களை யெல்லாம் விபரமாகத் தெரிவித்தான்.

அதைக் கேட்ட உரோமபதன் அந்த மகாமுனிவரை நானே தங்களுடைய நகரத்திற்கு அழைத்து வருகிறேனென்று சொல்ல தசரதன் உரோமபதனிடத்தில் விடை பெற்றுக் கொண்டு தனது நகரமாகிய அயோத்தி போய்ச் சேர்ந்தான்.

பின்பு உரோமபத மகாராஜன், கலைக்கோட்டு மகாருஷியின் திருமாளிகைக்குச் சென்று அவரைக் கண்டு சேவித்து அயோத்திமா நகரைப் பரிபாலித்து வருகிற தசரதச் சக்கரவர்த்தி தன்னிடத்தில் வந்த விஷயத்தை நன்கு தெரியக்கூறி இப்பொழுதே அவ்விடத்திற் கெழுந்தருள வேண்டுமென்றதைக் கேட்ட கலைக்கோட்டு முனிவர் அப்படியே வருகிறோ மென்று கூறிய வுடனே உரோமபதன் அவரையும் அவர் பத்தினியையும் ரதாரூடராக எழுந்தருளச் செய்து நால்வகைச் சேனையோடு தானும் பிரயாணமாகி மலைவனம்-நாடு-நகரமெல்லாங் கடந்து, அயோத்திமா நகரத்துக்குச் சமீபத்தில் வரும்போது ஒற்றர்களாற் கேள்வியுற்ற தசரதச் சக்கரவர்த்தி மந்திரி முதலானோர்களுடன் எதிர் சென்று தவமோன வடிவமாய்க் கமண்டலம் குடையோக தண்டோடு பிரகாசித்து ரதத்தில் வரும் கலைக் கோட்டு மகாருஷியான சிருங்க மகாமுனிவரைக் கண்டு கண்களாரத் தெரிசித்து நகரத்திற்கழைத்து வந்து வசிஷ்டர் முதலான அனேக முனிவர்கள் சூழ உயர்ந்த திவ்வியாசனத்திலெழுந்தருளச் செய்து சோடச வுபசாரங்களோடு அவரிருசரணாரவிந்தங்களிலும் வீழ்ந்து நமஸ்கரித்து அவரது ஆசீர் வசனமும் பெற்ற பின்னர், வசிஷ்ட முனிவரை நோக்கிச் சுவாமீ! தங்களுடைய கிருபா நோக்கத்தால் மகருஷியும் வந்து சேர்ந்தார் என்று உபசரித்து வணங்கித் திரும்பவுங் கலைக்கோட்டு முனிவரிடத்தில் வந்து வணங்கிச் சுவாமீ! தங்களுடைய திருவடியை அர்ச்சித்த அடியேனுக்கென்ன குறைவு? இனியாள் தவமுடையவ னாயினேன், என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லையென்று சொல்லிக் கரங்களைக் கூப்பிக் கொண்டு நின்றனன்.

அது கேட்டுக் கலைக்கோட்டு முனிவர் மனமகிழ்ச்சியுற்றுத் தசரதச் சக்கரவர்த்தியை நோக்கிப் பிரமபுத்திரரான வசிஷ்ட மகாமுனிவர் உம்மிடத்திலேயே சர்வ காலமும் வாசமாக இருக்கும்போது உமக்கு என்ன குறைவு வரப் போகிறது. அரசர்களிலே உமக்குச் சமானமானவர் எவரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை யென்று மிகுந்த அன்போடு கூற, அதுகேட்ட தசரதன் எல்லாந் தங்களுடைய ஆசீர்வாத மகிமை யென்றுரைத்துப் பின்னும், ஒரு வார்த்தை சொல்லுவான். அதாவது சுவாமீ! இது நாள் வரை குறைவில்லாது இவ்விராச்சியத்தை அரசு புரிந்து வந்தேன், எனக்குப் பின் இவ்விராச்சியத்தைப் பரிபாலனஞ் செய்துவரத் தகுதியான புத்திரன் உண்டாகவில்லையே என்ற மனத்துன்பம் எந்நாளு மேலிட்டுக் கொண்டிருப்பதால், இராச்சிய பரிபாலன சந்தோஷமில்லாதிருந்து வருகின்றேன். என்ன செய்வேனென்று முறையிட, அரசனாகிய தசரதச் சக்கரவர்த்தியைக் கலைக் கோட்டு மகருஷி நோக்கி

சக்கரவர்த்தியே! நீர் இனி வருத்தங் கொள்ள வேண்டாம். இவ்வுலகமொன்றல்ல, இந்தப் பதினான்கு லோகங்களையும் ஆளத்தக்க புத்திரன் உற்பவிக்கப்போகிறான். ஆகையால் நீர் இத்தினமே புத்திரகாமேட்டி யாகஞ் செய்வதற்கு பிரயத்தனஞ் செய்யுமென்று சொல்ல, அந்த க்ஷணமே அரசன் யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்கள் யாவுஞ் சேகரித்துக் கொண்டு யாகசாலையுங் கட்டி யாகத்தை யாரம்பித்து அனேக தவருஷிகளும், மாமறையோர்களுஞ், சூழ்ந்திருக்கக் கலைக்கோட்டு மகருஷியும் வசிஷ்ட மகாமுனிவரும் இருந்து வேத நெறி முறையின் பிரகாரம் ஆகவனீயம் காருகபத்தியம் தக்ஷிணாக்கினியம் என்கிற மூன்று அக்கினியையும் வளர்த்து ஆகுதி கொடுத்து வரச் செய்தான். இவ்விதமாகப் பன்னிரெண்டு மாத காலம் வரை யாகத்தை நடத்தி வந்து கடைசி நாளில் தேவதுந்துமிகள் முழங்கத் தேவர்கள் புஷ்பமாரி பொழியச் சிருங்க மகருஷியானவச் புத்திரருண்டாகிற சீவ பீஜாக்ஷர மந்திரத்தைச் சொல்லி ஆகுதி கொடுத்தார். அப்பொழுது அந்த ஓம குண்டத்தி லிருந்து சிவந்த மயிரும் அக்கினி போன்ற கண்களும் கோரத் தந்தமும், கரிய நிறமு முடைய ஒரு பூதம் பொற்றட்டில் அமுதத்திற்குத் சமானமான திவ்விய அன்னத்தைத் தன் கரத்திலேந்தி வெளிவந்து கீழே வைத்து மறுபடியும் அந்த ஓம குண்டத்திற் புகுந்து கொண்டது. அப்போது மகருஷியானவர் அந்தத் திவ்வியான்னத்தை எடுத்துத் தசரதச் சக்கரவர்த்கையிற் கொடுத்து இதை உம்முடைய பட்டஸ்திரீகளுக்குக் கிரமமாகக் கொடுமென்று ஆஞ்ஞாபித்தார். அரசன் அதிக சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு முதன் மனைவியாகிய கௌசலை தேவிக்கு ஒரு பாகமும், இரண்டாவது மன்னவி கைகேசிக்கு ஒரு பக்கமும் மூன்றாவது மனைவியாகிய சுபத்திரைக்கு ஒரு பாகமும் கொடுத்தான். பின்னர் அந்தத் தட்டில் மிகுதியா யிருந்ததெல்லாஞ் சேர்த்து அந்தச் சுபத்திரைக்கே கொடுத்தான். அப்பெண்கள் மூவரும் அதிக சந்தோஷத்தோடு வாங்கிப் புசித்தார்கள். அப்பால் அரசன் யாகத்திற்குப் பூரணாகுதி கொடுக்கச் சொல்லி யாகத்தை முடித்தவுடன் எல்லோருமெழுந்து சரயு நதிக்குச் சென்று தீர்த்தமாடி வந்தபின் அரசன் பிராமணர்களுக்குச் சோடா சகாபிானங் கொடுத்துச் சபா மண்டபத்தில் வந்து கலைக்கோட்டு மகருஷி முதலான யாவரையும் தோத்திரஞ் செய்து சுவாமிகளே! உங்களது அநுக்கிரகத்தால், யானடைந்திருந்த துன்பத்தை ஒழித்தேன், என்று சொன்ன மாத்திரத்தில் கலைக்கோட்டு மகருஷியானவர் சந்தோஷித்து அன்புடன் ஆசீர்வாதஞ் செய்து தாமும் அவரது பத்தினியும் அநேக மாதவர்களும் உரோமபத மகாராஜனும் அவரவர்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்.

அப்பால் கௌசலை கைகேசி சுமித்திரை என்கிற மூவர்களும் அந்த யாகத்தன்னத்தைப் புசித்த நாள் முதல் கருவுண்டாகி கர்ப்பச் சின்னங்களோடு பொருந்தியிருந்து பத்துமாதமும் பூரணமாகச் சித்திரை மாதத்தில் நவமிதியும் புனர்பூச நக்ஷத்திரமும் கர்க்கடக ராசியுங் சுபயோக சுபதினத்தில் நீலமேக சாமள ரூபனாகிய பகவானைக் கௌசலை புத்திரனாகப் பெற்றாள். பூசநக்ஷத்திரமும் மீனராசியுங் கூடிய சுபதினத்தில் கைகேசி ஒரு புத்திரனைப் பெற்றாள். ஆயிலிய நக்ஷத்திரமும் கடகராசியுங் கூடிய சுபதினத்தில் சுமத்திரை யொரு புத்திரனையும், மகநக்ஷத்திரமும் சிங்கராசியுங் கூடிய சுபதினத்தில் பின்னுமொரு புத்திரனையும் ஆக இரண்டு பிள்ளைகளையும் பெற்றாள். இந்நான்கு புத்திரர்கள் பிறந்ததையுந் தசரதச் சக்கரவர்த்தி கேட்டு அதிக

சந்தோஷத்துடனே அனேகமங்கள வாத்திய முழங்க வசிஷ்டர் முதலான அனேக ருஷிகளோடு சரயு நதியிற் சென்று ஸ்நானாநுஷ்டானங்களை முடித்துவந்து புத்திரர்களுடைய திருமுகங்களைப் பார்த்து சபா மண்டபத்துக்கு வந்து அனேக தானதருமங்களைச் செய்து ஆனந்த பரவசராய் மகிழ்ச்சியுட னிருக்கும்பொழுது பன்னிரண்டா நாள் சக்கரவர்த்தி: வசிஷ்ட மகருக்ஷியை அழைத்து வரும்படி செய்து தம்புத்திரர் நாய்வருக்கும் நாமகரணமிட வேண்டுமெனக்கூற, அதற்கு அவர் வேத சாஸ்திர விதியின்படி அன்று செய்யவேண்டிய கிரமங்க ளெல்லாஞ் செய்து கௌசலா தேவியின் புத்திரனுக்கு இராமரென்றும், கைகேசி புத்திரனுக்குப் பரதரென்றும், சுமித்திரைபெற்ற முதற்பிள்ளைக்கு இலக்குமணரென்றும், இரண்டாவது பிள்ளைக்கு சத்துருக்க ரென்றும் பெயரிட்டனர்.

அதன்பின் புதல்வர் நான்குபேருந் தவழ்ந்து விளையாடிக் கொண்டு வருவதையும் மழலைவார்த்தை பேசுவதையும் தளர்நடை நடப்பதையும் சக்கரவர்த்தி கண்களிக்குப் பார்த்துச் சந்தோஷித்து அன்னப்பிராசனம் சவுள உபநயனம் முதலானவையுஞ் செய்வித்ததன் மேல் நால்வரும் நான்கு வேதம்போல் வளர்ந்து வந்தார்கள். சில நாட் சென்றபின் தசரத மகராஜன் நால்வருக்கும் வேதசாஸ்திர சகல கலைக்கியானங்களையும், வில்வித்தை முதலான ஆயுத வித்தைகளை கரிபரி இரத முதலான வித்தைகளையும் தன் குல குருவாகிய வசிட்ட முனிவரிடத்தில் கற்கச் செய்து வரும் போது அந்நான்கு புத்திரர்களில் அழகு பொருந்திய ஸ்ரீராமனைத் தன்னுடைய ஜீவனும் அறிவும் அவனே யல்லது வேறில்லை யென்று மனத்திலெண்ணி அதில் சந்தோஷத்துடன் இருந்தான். அப்போது அயோத்தியில் வசிக்கிற சகல ஜனங்களும் இராமபிரான் முதலானோர்களை நம்முடைய வினைகளையெல்லாந் தீர்த்து மோக்ஷ சாம்பிராச்சியத்தைக் கொடுக்கக் கூடியவர் இவர்களே யென்று ஒரு க்ஷணப்போதும் பிரியாமல் சதாகாலமுந் தரிசனஞ் செய்து புகழ்ந்து கொண்டாடியிருந்தனர். அவர்கள் நால்வருஞ் சிங்காரத் தோட்டங்கள், குளங்கள், நதிகள் முதலான இடங்களுக்குச் சென்று விளையாடி வருவார்கள். இஃதிப்படியிருக்க மூவுலகங்களும் புகழ்ந்து தோத்திரித்துச் சந்தோஷமடையத் தம்பிமார் மூவரும் நிழல் போலச் சூழ்ந்திருக்கும் படியான ஸ்ரீராமபிரானைப் பெற்ற தசரதச் சக்கரவர்த்தி ஒப்பற்ற குடை நிழலின் கண் நீதி வழுவாது இராச்சியத்தை ஆண்டு கொண்டு சந்தோஷமென்ற சாகரத்தில் மூழ்கியிருந்தான். ஒரு நாள் காசி மகாராஜாவுடைய புத்திரராகிய கௌசிக மாமுனிவர் தம் யாகத்தை இராக்கதர்கள் வந்தழிக்காத வண்ணம் காக்கும் பொருட்டு அயோத்திக்குச் சென்று ஆங்கு அரசர்க கரசனாகிய தசரத சக்ரவர்த்தியைக் கண்டு அவனால் பூசிக்கப் பெற்று வீற்றிருந்து ஒரு வார்த்தை சொல்லுவார். அரசே! என்னைப் போலொத்தருஷிகளுக்கும் தேவர் முதலானோர்களுக்கும் ஒரு துன்பம் நேரிடுமானால் கைலாயம் திருப்பாற்கடலும் சத்தியலோகமும் அமராபதியும் இவ்வயோத்தி மாநகரமும் அல்லாமல் முறையிடுவதற்கு வேறோர் இடமுண்டோ? இல்லை ஆனதால் யானிங்கு வந்தேன். இப்பொழுது ஆரண்யத்தில் யான் செய்யுந் தவமுதலிய யாகத்துக்கும் மற்றோர் தவத்துக்கும் இடையூறாக வந்து காமக் குரோதாதிகள் போல் துட்ட விராக்கதர்கள் விகற்பஞ் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படிக்கு நேரிடாமல் என் யாகத்தைக் காத்து நிறைவேற்றுதற்கு உம்முடைய நான்கு புத்திரர்களில் முதல்வனாகிய நீலமேக

சாமளரூபமுடைய இராமனை என் கூட இப்பொழுதே அனுப்ப வேண்டுமென்று கேட்க, அவ்வார்த்தையானது தசரதன் செவியில் நுழைந்த மாத்திரத்தில் அனலிற்பட்ட மெழுகு போல நெஞ்ச முருகி மிகுந்த துன்பத்தை யடைந்து வத்துன்பத்தினின்றும் ஒருவாறாகத் தேறி சுவாமீ இராமன் ஆயுதப் பரீக்ஷையில் நன்றாக அறியாதவன்; அவனால் ஒன்று முடியாது. யாகத்துக்கு யாதொரு விக்கினமும் வராதபடி நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொன்னான்.

அதைக் கேட்ட விசுவாமித்திரர் கோபத்தோடெழுந்ததைப் பக்கத்திலிருந்த வசிஷ்ட மகாருஷி கண்டு அவர் கோபத்தைப் பல சந்தோஷ வார்த்தைகளாலாற்றிய பின் தசரதனை நோக்கி அரசே! உனது புத்திரனாகிய ஸ்ரீராமனை இவருடனனுப்பினால் அளவில்லாத வித்தையையும் மணக்கோலத்தையும் அடைந்து மிகுந்த பெருமையுட னிங்குவருவான். தடை செய்யாது உடனனுப்புவாய் என்று கூறினார். உடனே சக்கரவர்த்தி வசிஷ்ட மகாருஷி சொற்படி ஸ்ரீராமனையும் அவனுக்குத் துணையாக இலக்குமணனையும் அழைத்து அவ்விருவர்களையும் விசுவாமித்திரருக்குச் சுட்டிக் காண்பித்துச் சுவாமீ! இவர்களுக்குத் தாயுந் தந்தையும் நீரே. இப்போதே இவர்களை உமதுபால் ஒப்புவித்தேன் இனி யுமது சித்தப்படி கூட்டிச் செல்லுமென்று நமஸ்கரித்தலும், விசுவாமித்திரர் தசரத மகாராஜனைப் பல முறையும் வாழ்த்தி ஆசீர்வதித்து இராமனையும் இலக்குமணனையும் அழைத்துக் கொண்டு அயோத்தியாபுரி நகரத்தை விட்டு நீங்கிச் சிறந்த சரயுநதி யென்ற ஆற்றையும் அநேக நந்தன வனங்களையும் சோலைகளையும் அனங்க னானவன் சிவ பெருமான லெரிந்த தானமாகிய காமனாச்சிரமென்னும் அங்க தேசத்தையுங் கடந்து கொடிதாகிய பாலை வனத்துக்கு வந்து பலை, அபலை யென்ற மந்திரங்களை இராமலெட்சுமணர்களுக்கு உபதேசித்துக் கோமதி கௌசிகை முதலான நதிகளையுங் கடந்து சிலதூரஞ் சென்று ஆங்கோரிடத்தில் யாகத்தை யாரம்பித்துத் தாடகை, சுபாகு முதலானோர்களைக் காண்பித்து இராம லட்சுமணர்களால் சம்ஹரிக்கச் செய்து வேள்வியை நிறைவேற்றிக் கொண்டு மிதுலாபுரியை நோக்கிச் செல்லும் பொழுது வழியிற் கருங்கல் லொன்று கிடந்தது. அக்கல்லின் மேல் இராமனுடையபாதங்களின் துகள் பட்டவுடனே கல்லுருவமாறி ஓர் பெண்ணாக எழுந்து நிற்றலும், அப்பெண்ணினது விர்த்தாந்தங்களை விசுவாமித்திரர் இராமலட்சுமணர்களுக்குத் தெரிவித்து, அவளைத் தன் நாயகனிடத்துக் கனுப்பிய பின் அப்பால் அம்முனிவர் அரச புத்திரரிருவருடன் மிதுலாபுரி நகரத்தைச் சேர்ந்து ஜனகமகா ராஜனைக் கண்டு அவனுக்கு ஆசி கூறி இராமலட்சுமணர்களைப் பற்றிப் புகழ்ந்து அவர்கள் செனனங்களையு மறிவித்து அந்நகரிலே யிருக்கும்போது ஒரு நாள் ஜனகமகாராஜாவின் விரதத்தின்படியும், கௌசிக முனிவ ருத்தரவின்படியும், சிவதனுசை இராமபிரானெடுத்து முறித்தலும், அப்பொது ஜனகமகாராஜன் முதலான யாவர்களுஞ் சந்தோஷித்து அப்பொழுதே தசரத மகாராஜனையும் அவனுடைய மனைவியரையும் மற்று முண்டான யாவரையும் வரும்படி செய்து ஸ்ரீராமபிரானுக்குச் சிதாபிராட்டியையும், இலக்குணமருக்கு ஊர்மிளையையும், பரதருக்கு மாண்டவியையும், சத்துருக்கருக்குச் சுருதகீர்த்தியையும் விவாகஞ் செய்ய நிச்சயித்து மகர தோரணங்கள் கட்டி, வாழை, கமுகு முதலான மரங்களை நாட்டுவித்து முத்தினால் பந்தல்கள் போட்டு நகரை நன்கு அலங்கரிக்கச் செய்து பல மங்களவாத்தியங்கள்

முழங்கச் சகல வைபவத்துடன் அந்தணர்கள், தவமுனிவர்கள் ஆசிகூறத் திருமண முடித்துச்சகலரும் அத்யந்த சந்தோஷசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

அப்பால் சில நாள் கழிந்த பின்னர் ஸ்ரீராமர் இலக்குமணர், பரதர், சத்துருக்கர் ஆகிய இந்நால்வரும் அவரவர்களுடைய மனைவியர்களும், தசரதன் முதலான அநேக முனிவர்களும் மந்திரி முதலானோர்களும் புடை சூழ்ந்துவர அயோத்தியாபுரிக்குப் பிரயாணமாகி வரும் வழியில் எதிர்த்த பரசுராமனை ஸ்ரீ ராமர் கர்வபங்கஞ் செய்து அனுப்பிய பின்னர் யாவரும் அயோத்திக்கு வந்து சுபமங்களமாக வாழ்ந்திருக்கும் நாளில் ஒரு நாள் பரதனை உன்னுடைய மாமனைப் பார்த்து வருவாயாக வென்று தசரதன் அனுப்ப, அவனும் தன்னுடைய தாய் தந்தையரிடத்தில் விடைப் பெற்றுத் தன் சகோதரனாகிய சத்துருக்கனுடன் கேகய நாட்டுக்குச் சென்றான். அப்பால் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்று தசரதச் சக்கரவர்த்தி ஆரம்பித்த உடன் அவரது இளைய மனைவி கைகேயி கேட்டபடிக்கு ராமன் பதினான்கு வருடங் காட்டிற் சென்றிருக்கவும், பரதர் இராச்சியத்தை யாளவும் வரங் கொடுத்தார்.

அந்தப்படியே இராமபிரான் சீதா பிராட்டி இலக்கு மணப் பெருமான் ஆகிய மூவரும் தவ வடிவம் பெற்றுத் தாய் தந்தையர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டு நகரிலுள்ள ஜனங்கள் புலம்பக் காட்டுக்குச் சென்று குகனிடம் உறவு கொண்டு சித்திரக்கூடத்தில் வந்து தங்கியிருந்தனர். இதனையறிந்த தசரதன் இராமரைப் பிரிந்த சோகத்தா லுயிர் துறந்தனன். பின்பு பரதர் வந்து தசரதச் சக்கரவர்த்திக்கு உத்தரகிரியை செய்து இராமனை மீட்டு வரும்படி காட்டுக்குச் சென்று சித்திர கூடத்தில் இராமபிரானைக் கண்டு வணங்கி அழைக்க அவர் வராமையால் பின் அவ்விராமர் கட்டளையின்படி பாதுகையைப் பெற்றுத் திரும்பி அயோத்தியா புரியில் வந்து அதன் பக்கத்திலிருக்கிற நந்திக் கிராமத்தில் அப்பாதுகையை வைத்துப் பூஜித்துக் கொண்டிருந்தார்.

அப்பால் பரதர் முதலான சுற்றத்தாரை நீங்கிய ஸ்ரீ ராமபிரான் முதலானோர் தண்டகாரணியத்தில் புகுந்து விராதனைக் கொன்று இருடிகளுக்கு அபயாஸ் தங் கொடுத்து அகத்தியரைத் தரிசித்துச் சடாயுவை சந்தித்துப்பஞ்சவடி தீர்த்தத்தை யடைந்து அங்கு வசிக்கும்நாளில் இலங்கையில் இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை என்பவள் இராமன் மீது காதலுற்று வந்தனள். அவளை இளைய பெருமான் மூக்கு முதலியவற்றைக் கொய்தலும் அவள் வருந்திக் கரதூஷணாதியரிடத்திற் சென்று தெரிவிக்க, அவர்கள் உடனே பதினாறாயிரம் மகாரதருடன் வந்து இராமபிரானிடத்தில் யுத்தம் புரிந்து மடிந்தனர். பின்பு சூர்ப்பநகை இலங்கைக்குச் சென்று இராவணனிடத்தில் முறையிட அதைக்கேட்ட இராவணனது ஏவலால் மாரீசன் பொன்மான் வடிவங்கொண்டு வஞ்சித்துச் சீதாபிராட்டியி னருகிலிருந்த இராம லெட்சுமணரைப் பிரிவு செய்ய அந்தச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராவணன் சீதாபிராட்டியைப் பூமியோடு பேர்த்தெடுத்துத் தூக்கிப் புட்பக விமானத்தில் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் செல்லும் பொழுது குறுக்கே தடுத்த சடாயுவை வெட்டி வீழ்த்திச் சென்று தன்னகரமாகிய லங்காபுரியின் பக்கத்திலுள்ள அசோகவனத்தில் சிறை வைத்தனன்.

பின்னர் இராம லட்சுமணரிருவரும் பன்னசாலையில் வந்து பார்த்துச் சீதாபிராட்டியைக் காணாது மனம் வருந்தித் தேடித் தென்திசை நோக்கிச் செல்லும் பொழுது வழியில் குற்றுயிருடன் கிடந்த சடாயுவைக் கண்டு அவனால் இராவணன் சீதையை யெடுத்துப் போனானென்பதை யறிந்து அப்பாலிந்த சடாயுவுக்கு ஈமக்கடனை முடித்து மதங்க மலைமேற்சென்று சவரி செய்த விருந்துண்டு அவளுக்கு முத்திகொடுத்துப் பின் கிஷ்கிந்தைக்குக் சென்றி ருஷியமுக பருவத்தில் வாலிக்குப் பயந்து ஒளிந்துக்கொண்டிருந்த சுக்கிரீவன், அனுமான் முதலானவர்களைச் சினேகித்து அவர்களது வேண்டுகோளுக்கிரங்கி மராமரத்தைத் துளைத்து துந்துமி யெலும்பைக் காலினாலெற்றி வாலியைச் சங்கரித்து கிஷ்கிந்தையைச் சுக்கிரவனுக்குப்பட்டங்கட்டி வைத்துச் சுக்கிரீவன் முதலிய வானரவீரருடன் இலங்கா புரிக்கேகி விபீடணைக் கண்டு சந்தோஷித்து அவனுடைய உதவியினால் இராவணன் முதலிய இராக்கதர்களைக் கொன்று சீதாபிராட்டியைக் கூட்டிக்கொண்டு திரும்பி வானர சைன்னியங்களுடன் இராமேச்சுரத்துக்கு வந்து இராமலிங்கத்தைப் பூசித்துப் பின் அயோத்தியா புரியில் வந்து பரதன் முதலானோர்களுக்குக் காட்சி கொடுத்தனர். அதன்மேல் வசிஷ்ட முனிவரால் மகுடா பிஷேகங்கொண்ட இராமபிரான் சீதா, லட்சுமணன், பரதன், சத்துருக்கன் முதலானவர்களோடு மணமங்களமாக நீதிவழுவாது இராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டுவந்தனர்; என்று திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டிருந்த தன்மார்த்தன் முதலானோர்கள் அத்யந்த சந்தோஷமுற்றிருந்தனர்.

அப்பாலோர் நாள் சூரசேனன் கனிபறிப்பதற்குத் தன்மார்த்தன் முதலான நால்வரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு மேற்றிசையை நோக்கிச் சோலைகள் சூழ்ந்த வனங்களைக் கடந்து ஆங்கொரு அடர்ந்த வனத்தின் கண்ணிருந்த சுரங்கமொன்றைக் கண்டு அதனுட் புகுந்து சென்று குளிர்ச்சி பொருந்திய சோலைகளையும் தாமரைத் தடாகங்களையும் சுற்றிப்பார்த்துக் கொண்டு வரும்போது ஆங்கொரு பலாவிருக்ஷணத்தின் கண் பூவும், பிஞ்சும் காயும் வாசனையுள்ள பழங்களுமிருக்கிற வளத்தைப் பார்த்துச் சந்தோஷித்து அப்பழங்களைப் பறித்துக்கொண்டு போகவேண்டுமென்று அவ்விருக்ஷத்தின் மீதேறி ஒரு பழத்தைப் பறித்துக் கீழிறங்குகையில் கரத்திலிருந்த பழம் பூமியில் வீழ்ந்த அதிர்ச்சியைச் செவியுற்றுக் கேட்ட தவசிரேஷ்டராகிய வியாக்கிரம பாதர் தம் சுரங்கத்தை விட்டெழுந்து வெளி வந்தனர். அவரைக்கண்ட சூரசேனன் புலியெனப் பாய்ந்து நடுநடுங்கிப் பின்பு மகாருஷியெனத் தெரிந்து அவரை இரண்டு பாதமலரையும் நமஸ்கரித்து நிற்க அதைக் கண்ட வியாக்கிரமகருஷி சூரசே னனைப் பார்த்து அடா நீ யார்? இங்கு வரவேண்டிய காரணமென்ன கூறுவாயென்று கேட்க, சூரசேனன் தானும் தன் அண்ணன் முதலானவர்களும் நாட்டைவிட்டுக் காட்டுக்கு வந்தது முதல் நடந்த செய்திகள் யாவுந் தெரிவித்தனனன். அதைக்கேட்ட வியாக்கிரமர் தன்னிருகண்களாலும் நோக்கி இவன் தவசிரேஷ்டனெனத் தெரிந்து அன்பு கொண்ட அப்பா சூரசேனா! இச்சுரங்கத்திற்கு எவரும் வரமாட்டார்கள், மீறி வருவார்களானால் எங்களுடைய மீளாத சாபத்தைப் பெற்றுச்செல்வார்கள். அன்றியும் இப்பொய்கையைச் சுற்றியிருக்கிற மா, பலா முதலான விருக்ஷத்தின் கனிகளை இவ்விடத்திலுள்ள மகருஷிகள் புசிக்கிறதேயல்லாது மற்றெவரும் புசிக்கக் கூடாதாகையால் நீ இச்சுரங்கத்தைவிட்டு வெளியே சென்று

ஆங்கிருக்கிற விருக்ஷத்தின் காய் கனிகளைப் பறித்துக்கொண்டு செல்லுவாயென்று சொல்லினர்.

இதைக் கேட்ட சூரசேனன் சந்தோஷமுற்று அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்துச் சுரங்கத்தைவிட்டு வெளியேறி ஆங்கொரு வனத்தில் வேண்டிய கனிகளைப் பறித்துக்கொண்டு தனது பன்னசாலைக்கு வந்து சேர்ந்து தன்மார்த்தன் முதலானோர்களிடத்தில் ஆங்கு நடந்த செய்திகளையெல்லாந்தெரிவித்து அவர்களுடன் காய்கனிகளைப் புசித்துப் பிரமமுனிவ ராசிரமத்துக்குச் சென்று ஆங்குப் புலித்தோ லாசனத்தில் எழுந்தருளிலிருந்த அம்முனிவரை வணங்கி மெய்ஞ்ஞா னோப தேசங்களைக் கேட்டு கொண்டு வரும்போது ஐவரும் பிரமமுனிவரை நோக்கிச் சுவாமி! சரியை கிரியை யோகம் ஞானம் என்பன யாவை? அவற்றை அருளிச் செய்ய வேண்டுமெனக்கேட்க, அதற்கு முனிவர்; கேளுங்கள். தன்மார்த்தன் முதலானோர்களே! மன்னுயிரைத்தன் போல் எண்ணுவது சரியையாகும். நல்லாசிரியன்பால் அறம், பொருள், இன்பம், வீடுகளைப் போதிக்கும் புருடார்த்த நூல்களைக் கேட்டலுடன் தாய், தந்தை, குரு முதலான பெரியோர்களுடைய வார்த்தைகளையுங் கேட்டு அவ்வழியே ஒழுகிக் கடவுளை வணங்கி அப்பெரியோர்களுக்குத் தொண்டு செய்து வருவது கிரியையாகும். இந்திரியங்களைத் தன்வசஞ்செய்து கர்மயோகம், ஹடயோகம், இராஜயோகம் என்ற மூவகை யோகங்களால் சித்தத்தைப் பிரமத்தி லொடுங்கச் செய்வது யோகமாகும். அறிவானது நானென்று அகங்கரித்தெழாதபடி அடங்கித் தற்பாரத்திற் பொருந்தி நிற்பதுவே ஞானமாகும். அந்த ஞானத்தையடைய வேண்டுமென்றால் முதலிற்றேகத்தைப் பல கற்ப மூலிகைகளாற் சித்திசெய்துக் கொள்ளுவது அவசியம். ஆகையால் நமக்குத் தெரிந்த சிற்சில காயகற்ப மூலிகைகளை உங்களுக்குக் கூறுவோம். கேட்பீர்களாக.

அதாவது, இவ்வனத்துக்கு நேர்கிழக்காக அம்பிடு தூரத்தில் உயர்ந்த மலையடிவாரத்தி லோர் ஒடையும், சங்கிலிப் பாறை என்ற குன்றும், அதற்குத் தென் கிழக்கில் மணற்றிட்டு என்ற மண்மலையு மிருக்கின்றன அவ்விடத்தில் உரோம வேங்கையென்றொரு விருக்ஷமுண்டு அவ்விருக்ஷம் வேங்கை மரம்போலும் மிருதுவாகவும் அடித்தூர் சாம்பல் நிறமாகவு மிருக்கும். அதன் விழுது கவரிமான் உரோமம்போல் ஒருசாண் அல்லது அரைச்சாண் நீளம் தொங்கிக் கொண்டிருக்கும். அவ்விருக்ஷத்தின் பட்டையைச் சிறிது பெயர்த்தால் இரத்தம் போற் பால்வடியும். அப்பாலைக் கொண்டு வந்து சொர்ணத்திற்குச் சுருக்கிட்டுப் பற்பஞ்செய்து சாப்பிடத் தேகசித்தியாகும். மற்றொரு பாகமும் உண்டு. அதாவது அந்த உரோமவேங்கை விருக்ஷத்தின் பாலில் சாதி லிங்கத்தை முழுகவைத்து உமிக்காந்தலில் வைக்க மெழுகாகும். அந்த மெழுகை வெள்ளியுருக்கு முகத்தில், இருபதுக்கு ஒன்றுகொடுக்க அவ்வெள்ளி பழுக்கும். அதைச் செந்தூரமாக்கி நெய்யிற் சாப்பிடத் தேகசித்தியாகும்.

மற்றொரு முறையும் உண்டு. அதாவது அந்த உரோமவேங்கை விருக்ஷத்தின் பக்கத்தில் இருப்பவற் செடியென்ற ஒரு செடியுண்டு. அதன் இலை அவலைப் போலிருக்கும். அதைச் சமூலம் பிடுங்கிவந்து அரைத்து இருப்புத்தகட்டிற் பொதிந்து

பழுக்கக் காய்ச்சிக் கொடிக்கள்ளிச் சாற்றில் நான்குதரம் சுருக்கிட வெள்ளிபோலாகும். மறுபடியும் இருப்பவல்செடி சமூலத்தையும் அரைத்துக் கவசஞ்செய்து கெஜபுடமிடச் செம்பாகும். அதைச் செந்தூரமாக்கிச் சாப்பிடத் தேகசித்தி யாகுமென்று கூறி பின்னுஞ் சொல்லுவார்.

தன்மார்த்தன் முதலானோர்களே! நம்முடைய வனத்தி லெருவருடகாலமட்டு மிருப்பதாக முன்பு தெரிவித்தீர்கள். அந்நாள்முத லிந்நாள்வரை ஒருவருடமுஞ் சரியாய்விட்டது. ஆகையால் இவ்வனத்திற்கு அடுத்த தென்பக்கத்தில் காலாங்கி முனிவர் ஆச்சிரமொன் றிருக்கிறது. ஆங்குச்சென்று அவரிடத்தில் இன்னும் வேண்டிய ஞானோபதேசங்களையும் கற்ப முறைகளையுங் கேட்டுக்கொண்டிருங்கள், என்று ஆக்ஞாபித்துத் தம் பக்கமிருந்த அனேக சீடர்களில் ஒருவனை யழைத்து சீடனே! இவர்களைவரையும் அழைத்துப் போய்க் காலாங்கி முனிவர் ஆசிரமத்தில் விட்டுவருவாயென்று உத்தரவு கொடுக்க, சீடன் அவ்வுத்தரவின்படியே தன்மார்த்தன் முதலான ஐவரையும் பிரயாணமாக்கிக் கூட்டிக் கொண்டு காலாங்கி முனிவர் வனத்துக்குச் சென்றானென்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சனமுனிவராதியர் கேட்டு, சுவாமீ! பிரமமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் வேதாந்த ஞானோபதேசங்களையுங் காயகற்பங்களையுங் கேட்டு மிகுந்த சந்தோஷ முற்றோம். இனிக் காலாங்கி முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் ஞானகற்ப முறைகளையும் அருளிச்செய்ய வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்வராயினர்.

இருபதாவது,
பிர்ம முனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தொன்றாவது

காலாங்கி முனிவர் சருக்கம்

எட்டாவது வனம்.

நனிபெரிய சதுரகிரிக் காலாங்கி வனத்திற்கு நால்வரோடு, மினி யகுண தன்மார்த்தன் சென்றதுவு முனிவரிட மின்ப மூட்டுங், கனிதுரிய உபதேசங் கேட்டதுவும் நளாயினியின் காதை கேட்டுத், தனியொளிரு ஞானமுற்றுக் கற்பமுறை யுணர்ந்ததுவுஞ் சாற்றுவோமே.

கேளுங்கள் முனிவர்களே! பிரமமுனிவர் சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும், தெற்குத் திசையை நோக்கிப் பிரயாணமாகி அநேக பூஞ்சோலைகளையும், மலையின் சிகரங்களிலிருந்து உற்பத்தியாகி அதிகவிரைவாகவும் மிகுந்த இரைச்சலோடும் மோதி வீழ்ந்து வருகிற கானாறுகளையுங் கடந்து வானரங்கள் பலாவிற்றாவிப் பிரியத்தோ டெடுத்துத் தன்மந்திக்கருத்தும் மரங்கள் செறிந்த கரைகளையுடைய மஞ்சளூற்றுப் பொய்கையில் வந்து தாகசாந்தி முதலானவைகள் செய்து களைப்பாறி அப்பால் மலைச்சரிவு மேலேறித் தவசிக் குகை என்னும் காலங்கி முனிவர் வனத்திற்சென்று ஆங்குத் தம் ஆச்சிரமத்தின்கண் எழுந்தருளியிருந்த, காலாங்கி மகாமுனிவரை முறையுடன் நமஸ்கரித்து வாழ்த்தித் துதித்தார்கள். அப்பொழுது காலாங்கி முனிவர், பிர்மமுனிவரது சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய செய்திகள் யாவுந் தெரிந்து அவனை வழியனுப்பிய பின்பு ஐவர்களையும் வீற்றிருக்கும்படி செய்து கூறுவார்.

தன்மார்த்தன் முதலானோர்களே! இவ்வனத்தில் எத்தனை நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? நம்மாலென்ன விஷயமுங்களுக்குத் தெரியவேண்டும்? எனக்கேட்க, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒருவருடகாலமிருந்து காயகற்ப முறைகளைத் தெரிந்து, காயசித்தியடைய வேண்டிய விவரங்களையும், ஆத்மஞான தத்துவார்த்தாதி உபதேசங்களைங் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென வந்தோமென்று புகல, அதைக் கேட்ட காலாங்கி முனிவர், அப்படியானால் நிங்கள் வாசஞ் செய்வதற்கு இவ்வனத்தின் மேற்குத் திசையில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதிலிருந்து வருவீர்களென்று சொல்ல உடனே ஐவரும் முனிஸ்வரருடைய சொற்படி ஐந்தடுக்குப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து கொண்டு தினமும், ஆத்மஞானோபதேசங்களைக்

கேட்டுக்கொண்டு வருநாள்களில், ஒரு நாள் தன்மார்த்தன் முதலான ஐவரும், முனீஸ்வரரை நமஸ்கரித்துச் சுவாமீ! தங்களைப் போன்ற தவமுனிவர்கள் மனத்தாலும், வாக்காலும், சரீரத்தாலும் அறிதற் கரிதாகிய அட்டமா சித்தியென்னும் எட்டுச்சித்திகளையுந் தெரிந்து, தெரிந்தபடி நடாத்தி வருகிறார்களே? அந்த அட்டமா சித்தியென்பது இன்னதெனக் கூறியருள வேண்டுமெனக் கேட்டனர்;

அதற்குக் காலாங்கி முனிவர்: தன்மார்த்தன் முதலானோர்களே! அட்டமா சித்தியாவது, அணிமா-மகிமா-கரிமா-இலகிமா-பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்று எட்டு வகையுண்டு. அவைகளிலே (அணிமாமென்பது) அணுரூபமான ஆண்மாவைப் போலாதல், (மகிமா என்பது) மிகப் பெருமையுடைத்தாதல். அதாவது மிகவும் பருத்தல். (கரிமா என்பது) தன்னுடல் கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றை யூடுருவிச் செல்ல வல்லனாதல். அன்றியும், இருப்பு மலையினுங் கனத்திருத்தல். (இலகிமா என்பது) மேரு மலைபோற் கனமான தூலத்தை எடுத்தாலுங் இலகுத்துவமுடையனாதல். (பிராத்தி யென்பது) வேண்டுவன வடைதல். அதாவது நினைத்த போகமெல்லாம் பெறுதல். (பிராகாமியம் என்பது) நிறைவுளனாதல். அதாவது, குறைவின்றி யிருத்தல். அன்றியும் ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திலே புகுதலும், தான் நினைத்த உருவங்களை எடுத்துக் கொள்ளுதலும்; ஆகாசத்திலே சஞ்சரித்தலும்; இச்சித்த போகங்களெல்லாம் நுகர்தற்கு யோக்கியமாதலும் ஆகுகை. (ஈசத்துவம் என்பது) ஆட்சியுளனாதல், அதாவது யாவர்க்குந் தேவனாகுதல். (வசித்துவம் என்பது) தேவாசுரர்கள் பட்சிகள் பூதங்கள் மானிடர்கள் இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலர்களெல்லோரையும் தன்வசமாக்க வல்லவனாதல். அதாவது யாவும்யாவரும் வணங்கிநிற்றல். இத்தகைய எட்டுச் சித்திகளைத் தெரிந்த மௌத்கல்ய மகருஷி யென்பவர் ஒரு சித்தியாகிய பிராகாமியத்தினால் கற்பில் மிகுந்த நளாயினி என்னும் பெண்ணை விவாகம் முடித்து அவள் கற்பைப் பரிசோதித்த பின்னர் அவளுக்கு வேண்டிய வரங்களையும் கொடுத்தருளினார்; என்று சொல்ல, அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள்.

சுவாமி! மௌத்கல்ய மகருஷி சரித்திரத்தை விவரமாகக் கூறியருள வேண்டுமென்று கேட்க. அதற்கு முனிவர்: கேளுங்கள் ஐவர்களே! முன்னோரு காலத்தில் தமதாச்சிரமத்தின்கண் வீற்றிருந்து தவஞான நிட்டை புரிந்து வருகிறவரும், பெருமைமிகுந்த அட்டமாசித்திகளை நன்குணர்ந்தவருமான மௌத்கல்ய மகாமுனிவர் என்னுமொரு விருத்தாப்பியரிருந்தார். அவர் அவந்திதேசத்துக் கதிபனான நள மகாராஜன் அருந்ததவப் புத்திரியாகிய நளாயினி யென்பவள் கற்பில் மிகச் சிறந்தவளென்று கேள்வியுற்று அவளைத் தாமே விவாகஞ்செய்து கற்பைப் பரிசோதிக்க வேண்டுமென நினைத்து, அவ்விடத்திற்குச் சென்று அரசனைக் கண்டு ஆசீர் வசனங்கூறி வீற்றிருக்குஞ்சமையத்தில் அரசன், சுவாமீ! தாங்களிவ்விடத்துக்கு வந்த காரியமென்ன வென்று கேட்க. அதற்கு முனிவர் அரசனே! நீண்ட நாள்களாக ஒரு பெண்ணை விவாகஞ் கொள்ளவேண்டுமென நமக்கு அவா மிகுதியாக இருந்து வருகிறது. ஆனதனால் இப்பொழுது உனதருமைப் புத்திரியாகிய நளாயினியை நமக்கு மணஞ்செய்து கொடுப்பாயென்ற எண்ணத்தினால் இவ்விடத்துக்கு வந்தோம். உன்

விருப்பமன்னவென்று கேட்க, அதற்கரசன் இவரோ விருத்தாப்பிய பருவத்தை யடையப் பெற்றிருக்கிறார். இவருக்கு நாம் என்ன விடை கூறுவோம் என்று நினைத்து ஒருவாறு மனந்தெளிந்து சுவாமீ! எனது புத்திரியாகிய நளாயினியானவள் தங்களை விவாகஞ் செய்துகொள்வதற்கு மனப்பூரணமாகச் சம்மதிப்பாளானால் தடையின்றி மணஞ்செய்து கொடுக்கிறே னென்று வாக்களித்தனன்.

அதைக் கேட்ட மௌத்கல்ய மகருஷி மிகுந்த சந்தோஷத்தை யடைந்து அப்படியே சம்மதப்படும்படியாகச் செய்வோமென்று தெரிவிக்க, அது கேட்ட அரசன் சுவாமீ! அவ்விடத்தில் தெரிகிற கன்னி மாடத்திற்குச் சென்று என் புத்திரியைத் தங்களுடைய பிரியத்துக்கு இணங்கும்படி செய்து அதற்கடையாளமாக அவள் விரலிலிட்ட கணையாழியை வாங்கிக் கொண்டு வருவீர்களெனக் கூறி அனுப்பினன். உடனே அரசன் தெரிவித்தபடி முனிவர் கன்னி மாடத்தை நோக்கிச் செல்லும் பொழுது நாமிந்தச்சொரூபத்தோடு சென்றால் அப்பெண்மணியானவள் நம்முடைய வார்த்தைக் கிணங்கமாட்டாளென்று எண்ணிப் பஞ்சபுட்ப பாணனான மன்மதனும் வெட்கும்படியான உருவத்தைப் பெற்றுக் கன்னி மாடத்திற் சென்று நளாயினியைக் கண்டு தமது விரகதாப விஷயத்தையும், அரசன் கூறிய செய்திகளையுந் தெரிவித்தனர். அதை நளாயினி கேட்டு அளவிலா வானந்தமுற்று முனிவரை பார்த்து மொழிவாள். சுவாமீ! யான் செய்த தவமோ! அல்லது என் முன்னோர்கள் செய்த தவமோ! தவசிரேஷ்டராகிய தாங்களே என்னை விவாகஞ் செய்து கொள்ள நினைத்து வலிய வந்தீர்களே. யான் என்ன தடை கூறப் போகிறேன். தங்களைப் பார்க்கிலும் உலகத்தில் அழகிற் சிறந்த புருடர்கள் எவரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை. ஆகையால் தங்களையே விவாகஞ் செய்து கொள்கிறேன். இது உண்மையென்று தன் கணையாழியைக் கழற்றி முனிவரிடத்திற் கொடுத்து என் தந்தையிடத்தில் இச்செய்திகளைக் கூறுவீர்கள்; எனச் சொல்லி மிக்க அன்போடு அவ ரடிமலர்களைத் தொழுது வணங்கி யனுப்பினள்.

முனிவர் உடனே அரசனிடத்திற் சென்று பழைய உருவத்தோடு கணையாழியைக் கொடுக்க, அரசன் அக்கணையாழியை வாங்கிப் பார்த்து மேன்மேலும் ஆச்சரியமடைந்து அனேக தவசிரேஷ்டர்களும் பிராமண உத்தமர்களும் ஆசீர்வதிக்கவும் பல மங்கள கீத வாத்தியங்கள் கோஷிக்கவும், கற்புடைய மங்கையர்களும் பற்பல அரசர்களும் சூழ்ந்திருந்து வாழ்த்தவும் நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் புத்திரியாகிய நளாயினியை மௌத்கல்ய மகருஷிக்குந் திருமண முடிக்கச் சம்மதித்தனன். அப்போது அம்முனிவரும் நளாயினியும், மணவரைப் பிரதக்ஷணம் வரும்போது நளாயினி மணவாளனாகிய மௌத்கல்ய மகருஷியைக் கடைகண்ணால் நோக்கி மனம் வெட்கி ஆ! ஆ! இஃதென்ன புதுமையாயிருக்கிறது. நாம் இவரை முன் பார்த்தபோது அழகிய மன்மத சொரூபராயிருந்தார். இப்போது கிழப்பருவ சொரூபரா யிருக்கின்றாரே! காரணம் ஒன்றுந் தெரியவில்லையே. ஒரு சமயம் அட்டமா சித்திகளையுந் தெரிந்த தவமுனிவராக இருக்கலாமே? எவ்வாறாயினுமாகுக: ஈசன் அமைப்பு போல் நடக்கும் ஆகிலும், நாம் கற்பாபரணமாகிய நன்னடக்கைகளால், இவருடைய அந்தரங்கங்களைக் கண்டு கொள்ளலாமென்று எண்ணியிருந்தாள். அப்பால் அரசனானவன் ருஷிஸ்வரர்

கையினால் திருமாங்கல்யத்தை நளாயினி கழுத்திற்றரிக்கும்படிச் செய்து விவாக காரியங்களை எல்லாம் முடித்த பின்னர் மௌத் கல்ய மகருஷியும், அவர் மனைவியாகிய நளாயினியும், அரசனிடத்தில் விடை பெற்றுத் தமதிருப்பிடம் போய் சேர்ந்து மனமொத்து இல்லறம் வழுவாது வாழ்ந்து வரும்போது ஒருநாள் ருஷியானவர் தன் மனைவியாகிய நளாயினியின் கற்பை பரிசோதிக்க வேண்டுமென நினைத்துத் தன் சரீரத்தின் கால், கை முதலியவைகளை அழுகிப் புழுத்து நாறும் படியான ஒரு ரோகத்தை உண்டாக்கிக் கொண்டு தானந்த ரோகத்தால் அதிக அவஸ்தையடைவது போற் பாவனைசெய்து வருவதை நளாயினி பார்த்து மன வெறுப்புக் கொள்ளாமலும் அவர் மனங்கோணாமலும் பணிவிடை செய்து வந்ததை முனிவர் கவனித்து இன்னும் அறியலாமென்று நினைத்து வாழும் நாளில் ஒரு நாள் முனிவர் வாழையிலையில் அன்னம் புசித்துக் கொண்டிருக்கையில் தம் விரலைச் சீ இரத்தமுடன் அவ்வன்னத்தின் கண் அழுகிவிழும்படி செய்து எழுந்தனர்.

அதைக்கண்ட ந ளாயினி அவ்விரலழுகி விழுந்த அன்னத்தை அருவருப்புக் கொள்ளாது விரலையுஞ் சீ இரத்தத்தையும் ஒருபக்கம் ஒதுக்கி வைத்து அவ்வன்னத்தை அருந்தினாள். அதையும், முனிவர் நோக்கி மனத்துட் சந்தோஷித்து இன்னும் கவனித்தறியலாமென நினைத்து இருக்கும்போது ஒரு நாள் தன் மனைவியைப் பார்த்து நளாயினியாகிய பெண்மணீ! உன்னை விவாகஞ்செய்த தோஷத்தால் அந்நாள் முதல் இந்நாள் வரை இவ்வியாதி எனக்குச் சம்பவிக்க மிகுந்த கஷ்டமடைவதுந்தவிர அநேக புண்ணிய தீர்த்தங்களாடு தற்கும், என்னால் முடியாது போய்விட்டதே யென்று கூறி விசனித்தனர். அதைக்கேட்ட நளாயினி சுவாமீ! அடியாள் தங்களுடைய வியாதியைச் சாந்தஞ் செய்ய முடியாமற் போனாலும் தங்கள் மனோபீஷ்டப்படி அநேக புண்ணிய தீர்த்த ஸ்தலங்களுக்குத் தங்களைச் சுமந்து கொண்டாவது செல்கிறேனென்று விளம்ப.

அதுகேட்ட ருஷீஸ்வரர், பெண்மணீ! நல்லது அப்படியே செய்குவாய் என்று புகல, உடனே நளாயினி அவரைக் தூக்கிப்போவதற்கு ஒரு கூடை கொண்டு வந்து அக்கூடையில் துணிகளையும், பஞ்சுகளையும், நிரப்பி ருஷீஸ்வரரை வீற்றிருக்கச் செய்து அக்கூடையைச் சென்னிமேற் றூக்கி வைத்துக்கொண்டு அநேக புண்ணிய ஸ்தலங்களுக் கெல்லாஞ்சென்று தீர்த்தமாடு வித்துத் திருமந்திரமா நகரத்தின் வீதிவழியாக வரும் போது கூடையிலிருந்த மௌத்கல்ய மகருஷியானவர் ஆங்கொரு வீட்டிலிருந்த அழகுள்ள கணிகை மாதைக் கண்டு காதலுற்று அவ்வீட்டி னடையாளத்தையே கவனித்துக்கொண்டிருந்தனர்.

அப்பால் நளாயினி அவரைச் சுமந்து சிலதூரம் நடந்து அவ்விடத்துக்குப் பக்கத்திலிருந்த ஓர் சத்திரத்தின் கண் கொண்டு போய் இறக்கி வைத்தனள். பின்பு ருஷீஸ்வரர் மனையாளை நோக்கிப் பெண்மணீ! என் மனத்தி லொருவிதமான இச்சையுண்டாகி யிருக்கிறது. அந்த இச்சையை முடித்துக் கொள்ள வேண்டு மென்றால் ஐசுவரியம் வேண்டும். அவ் வைசுவரியமோ, நம்மிடத்தில் இப்பொழுதில்லை, என்ன செய்வேன், என்று சொல்லி வருத்தமுறுவதை நளாயினி கேட்டுச் சுவாமீ! நீங்கள் நினைத்தது எந்த ஆசையா யிருந்தாலுஞ்சரி அந்த ஆசையாகிய இச்சையைத் தங்கள்

எண்ணம்போல் முடித்து வைக்கிறேன். இன்னதென விவரமாகத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்க, அதற்கு மௌத்கல்ய மகருஷி மாதரசீ! இப்பொழுது வரும்போது இவ்வீதியில் நேரேதெரிகிற அந்த வீட்டினுள் ஒரு தாசியைக்கண்டு அவள் மீது மிகுந்த ஆசைகொண்டு மோகமுற்றேன். அவளை எனக்கு இணங்கும்படி செய்து வைப்பை யாகில், என் மனவருத்தம் தீருமென்று சொல்ல, அதைக்கேட்ட நளாயினி இதுவுங் கடவுள் செயலென நினைந்து பின்னும் நினைக்கிறாள். நமது நாயகரோ கொடியரோகி, அதோடு தேவதாசியை இச்சித்துமோகமுற்றிருக்கிறார். அந்தத் தாசியானவள் என்ன சொல்லுவாளோ வென்று ஆலோசித்து ஏங்கிச் சிறிது நாழிகைசென்றபின் பொருவாறு மனந்தேறித் தெய்வமே கதியென்று நினைத்துக் கதிரவ னுதையத்திற்கு முன் எழுந்து அத்தாசி விட்டுக்குச்சென்று வாசலிற் சாணந்தெளித்துக் கோலமிட்டு வந்தனள்.

இப்படி அநேக நாள்களாக நளாயினி செய்து வருவதை அத்தாசி தெரியாம லிருந்து பின்பு தெரிந்து ஒருநாள் இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கவனத்துட னிருக்குஞ் சமையத்தில் நளாயினி வழக்கம்போல் அவள் வீட்டுக்குவந்து வாசற்றெளித்து விசித்திர கோலங்களிட்டுக் கொண்டிருக்கையில் அத்தாசியானவள் தன் வீட்டுக் கபாடத்தைத் திறந்து உடனே வெளி வந்து கண்டு அம்மா நீ யார்? அனுதினமும் இங்கு வந்து சாணந் தெளித்துக் கோலமிட்டுச் செல்கின்றனையே அதன் விவரமென்ன வென்று கேட்க, அதற்கு நளாயினி அம்மா? யான் அவந்தி தேசத்தரசனாகிய நளனுடைய புத்திரி; என் நாமம் நளாயினியென்று சொல்லுவார்கள். எனது கணவர் குஷ்டரோகத்தையுடையவர். அவர் உங்களுடைய சௌந்தரியத்தைக் கண்டு மோகித்து இச்சையுற்றனர். அவ்விச்சையைத் திருப்திசெய்து வைப்பதற்குத் தங்களுக்கு இது நாள் வரை இந்த ஊழியஞ் செய்து வந்தேனே தவிரவேறொன்று மில்லை அதைக் கேட்ட தாசி இஃதோராச்சரி யத்தினு மாச்சரியமாயிருக்கிற தென்றெண்ணி அம்மா தங்களுடைய கணவரது மனோபீஷ்டம் போல் நடந்துகொள்ளுகிறேன். இன்றைய இரவில், அவரை வரச்சொல்லுங்களென்று கூறியதைக்கேட்ட நளாயினி அத்யந்த சந்தோஷங்கொண்டு தன் கணவரிடத்தில்வந்து நடந்த சமாசாரம் யாவுந்தெரிவித்து அன்றிரவு அவரைக் கூடையிலிருக்கச் செய்து கூடையைச் சென்னிமேல் தூக்கிச் சென்று அத்தாசி வீட்டில் வைத்து வெளித்திண்ணையில் வந்துட்கார்ந்து கொண்டிருந்தனள்.

அப்போது மௌத் கல்ய மகருஷி அக்கூடையிலிருந்து எழுந்து மன்மத சொரூபம்போல் உருவம் பெற்று அறையினுட் சென்று தேவதாசியோடு லீலை புரிந்து காமத்தை யநுபவித்து, இச்செய்தி எவருக்குந் தெரியக் கூடாதென்று சொல்லி வெளியில் வந்து பழைய கிழரோக வடிவங்கொண்டு கூடையில் வீற்றிருந்தனர். வெளித்திண்ணையிலிருந்த நளாயினி மறுபடியும் அக்கூடையைத் தூக்கிக்கொண்டு சத்திரத்துக்கு வந்து சேர்ந்தனள். இப்படித் தன்புருடனைக் கூடையில் வைத்து அனுதினமுந் தாசி வீட்டுக்குத் தூக்கி செல்வதும் பின்பு சத்திரத்துக்கு வருவதுமாக இருக்கும்போது ஒருநாள் வழியில் ஒரு பழுமரத்தில் தூண்டிலிட்டு அதன் கண் நாடியை வைத்து வாயுத்தம்பனத்தினின்றி தவஞ்செய்து கொண்டிருந்த மாண்டவ்ய மகருஷியின்

காலில் நளாயினி கொண்டு வருகிற கூடையிடித்ததனால் அவருக்கு வேதனையுண்டாக அவர் நளாயினியைப் பார்த்துப் பெண்ணே! நீ என்னுடைய தவத்தைக் கலைத்துவிட்டனை. ஆகையால், விடியவும் நீ உன்னுடைய மாங்கல்யம் நீங்கப் பெறுவாய் என்று சபித்தனர்.

அதைக் கேட்ட நளாயினி மிகுந்த வருத்தமுற்று சூரியனுதயமாதிருக்கக்கடவன் என மறு சாபத்தைக் கொடுத்தன். அந்த நளாயினியின் வாக்கின் படியே சூரியனுதயமாகாமலிருந்தது. அதுகண்ட தேவர் முதலானோர்கள் இச்செய்தியைத் தெரிந்து மாண்டவ்யரிடஞ்சென்று முறையிட்டுப் பிரார்த்திக்க அதற்கு மாண்டவ்யர் தேவர்களே! நானென்ன செய்வேன்! எனக்கொன்றுந் தெரியாது. மௌத்கல்ய மகருஷியின் மனைவியாகிய நளாயினியிடத்திற்சென்று கேளுங்களென்று கூற, அதுகேட்ட தேவர்கள் நளாயினியுடத்திற்சென்று முறையிட, அதற்கவள் என்னுடைய நாயகரை நான் இழக்காதிருந்தாற் கதிரவனுதய மாவானென்று சொல்ல. அதைக்கேட்டத் தேவர்கள் நளாயினியை அழைத்துக்கொண்டு மறுபடியும் மாண்டவ்ய மகருஷியிடத்திற்சென்று ஆங்கு இருவருடைய சாபத்தையும் மாற்றும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்ள, அப்படியே இருவர்களும் தங்கள் தங்கள் சாபத்தை மாற்ற மௌத்கல்ய மகருஷி உயிர் நீங்காதிருந்தனர். இரவும் நீங்கச் சூரியனும் உதையமானான். தேவர்கள் முதலான யாவரும் அவரவர்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பால், இச்செய்திகள் முழுதுந் தெரிந்த மௌத்கல்ய மகருஷி அதயந்த சந்தோஷத்தை யடைந்து தம் மனைவி நளாயினிக்கு முன்பு அழகிய மன்மத சொரூபராகத் தம்மைக் காண்பித்துப் பெண்ணே! உன்னை நான் விவாகமுடித்து அழைத்துவந்த நாள் முதல் இந்நாள்வரை உன்கற்பைப் பரிசோதித்து வந்தேனேயல்லாது வேறில்லை. ஆனாலும் நீ செய்த யணிவிடைகளையும் உன் கற்பாபரண மேம்பாடுகளையும் கண்டு அகமகிழ்ந்தேன். ஆதலால் உனக்கு என்னவரம் வேண்டுமெனக் கேட்க, அதற்கு நளாயினியானவள் "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்ற வாக்கியத்தின்படி, தன் பேதமைக் குணத்தினால் மேன்மையான வரங்களைக் கேட்காது என் மனந்திருப்தி யடையும்படி மோகசாகரமாகிய சுகத்தைத் தரவேண்டுமெனக் கேட்க உடனே ருஷீஸ்வரர் அப்படியே ஈந்தோமென வரங் கொடுத்தனர்.

பின்பு அவ்விருவர்களும் சத்திரத்தைவிட்டுப் பிரயாணமாகித் தங்களுடைய ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்து காம இன்பத்தை யளவில்லாமலனுபவித்துச் சுபமங்களமாக வாழ்ந்தார்கள்; என்று கூறியருளியதைக் கேட்டிருந்த தன்மார்த்தன் முதலான ஐவரும் முனிவரை வணங்கி விடைபெற்றுத் தங்கள் பன்னசாலைக்கட் சென்றிருந்தார்கள். மற்றொருநாட் காலையில் ஐவரும் நித்தியஸ்நான அநுட்டானங்களை முடித்தபின்பு உண்ணவேண்டித் தன்மார்த்தன் சூரசேனனைத் தண்ணீர் கொண்டு வருவதற்கு அனுப்பினான். அவனும் ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு நெடுந்தூரஞ்சென்று ஒரு காணாற்றைக் கண்டான். காணவும் அவ்வாற்றிலே சில யானைகள் துட்டர்ச்சியாக வந்து ஓடுகிற தண்ணீரைக் குடியாமல் ஒரு பெரிய ஊற்றுண்டாக்கி அதில் தண்ணீர் குடித்துக்கொண்டிருப்பதால் அவை சிறிதும் மளவும் மறைந்து நின்று அப்பால் ஆற்றங்கரையையடுத்து வந்தான்.

அப்பொழுது அங்கே ஒரு பெரிய வேங்கை வந்து ஆற்றினுள்ளே ஒரு சார்பில் நின்றது. அதனைக் கண்டவுடன் முன் அகத்தியர் உபதேசித்த மந்திரத்தைத் தியானித்து அம்பும் வில்லும் வரவேண்டுமென்றி கருதவும் சுவர்ணலிங்க மூர்த்தியின்றிருவருளால் உடனே ஒரு அன்பும் வில்லும் வரப்பெற்ற சூரசேனன் அதனை வளைத்து நாணேற்றுதலைக் கண்ட வேங்கையானது அவ்விடத்தில் உருமாறி ஒரு முனிவராக நின்றுகொண்டு சூரசேன மகாராஜனே! நாம் வேங்கையல்ல; நீ பயங் கொள்ள வேண்டாம். உனக்கு ஒரு இரகசியத்தை அறிவிப்பதற்காகவே நாம் இங்கு வந்தோம் என்று சொல்லவும், உடனே அவன் திடுக்கிட்டுப் பார்த்துப் பேராச்சரியங்கொண்டு அடுத்து வந்து வில்லையும், பாத்திரத்தையும் கீழே வைத்துவிட்டு நிலம்படிய விழுந்து வணங்கினான்.

அதுகண்ட முனிவர் பெருமான் அவனைக் கை கொடுத்துத் தூக்கித் தன் முன்பில் நிறுத்தி ஆசிகூறி அரசே! குடிதண்ணீர் கொள்ளுதற்காக நீ இங்கே வந்தனை என்பதை நாம் குறிப்பாலுணர்ந்து உனக்கு அறிவிக்க வந்த உண்மை என்னவென்றால், இந்த ஆற்றுத் தண்ணீரை ஒருவரும் குடிக்கக் கூடாது. சற்று நேரத்துக்கு முன்பு நீரருந்த வந்த யானைகள் இதோ இருக்கிற ஊற்றைத் தோண்டி நீர் குடித்துவிட்டுப் போதலை நீ அறிந்திருக்கின்றனை யல்லவா? இந்த ஊற்றுத் தண்ணீரையே நீ யெடுத்துக்கொண்டு போகலாமென்பதே என்றனர். அச்செய்தியைக் கேட்ட சூரசேனன் மிகுந்த மனமகிழ்ச்சியுடையவனாகி முனிவர் பெருமானே ஏன் இவ்வாற்று நீரை உன்னலாகாது? அந்த மர்மத்தைச் சொல்லியருளல் வேண்டுமென்று கேட்க அதற்கு முனிவர் சூரசேனா இவ்வாற்றினிருகரையிலும் விஷமரங்களிருக்கின்றன. அவற்றின் பழங்களுதிர்ந்து அப்பழங்களிலிருந்த விஷச்சத்துக்கள் இந்நீரிற் கலந்து வருகிறபடியால் இந்தத் தண்ணீரைக் குடிக்கலாகாதென்று அருளிச் செய்தனர்.

அவ்வுண்மையுணர்ந்த சூரசேனன் அவரை மிகவும் துதித்து எம்பெருமானே! இந்த ஆறு செல்லுமிடங்களிலெல்லாம் விலங்கினங்கள் பறவைகள் மக்கள் முதலிய யாவரும் உண்ணுவார்களே! அவர்களுக்கும் இவ்விஷச்சத்து தீங்கு விளைக்குமே! என்று வினவினான். அதனைக்கேட்ட முனிபுங்கவர் அரசே! நன்று வினாயினை, சிறிது தூரத்துக்கு அப்பால் இவ்வாற்றினிருகரையிலும் அமிழ்த விருக்ஷங்கள் நிரம்பவிருக்கின்றன. அவற்றினின்று முதிர்ந்த பழங்களினின்று வரும் அமிழ்தச் சத்தானது இவ்வாற்றி நீரிற் கலத்தலால் இங்கே உண்டாகிற விஷம் அங்கே மாறிவிடும். ஆனபடியால் அவ்விடங்களில் இவ்வாற்றுநீர் யாதொரு தீங்குஞ் செய்யாதிருப்பதுடன் சிறந்த நலத்தையுந் தருமென்று கூறினர். அதனைக்கேட்ட சூரசேனன் தவசிரேட்டரே! எங்களைப் பாதுகாக்க முன்வந்த பெருமானே! இவ்வுண்மையை நன்கு விளக்கியருளினீர். தாம் முதலில் ஒரு வேங்கையாக விருந்து அப்பால் இத்திருமேனியோடு எழுந்தருளியதன் உண்மையையும் அடியேனுக்கு விளங்கி அருளிச்செய்தல் வேண்டும் என்று மிக வணக்கத்துடன் கேட்க, அம்முனிவர் களி கூர்ந்து இந்த மலையில் வேங்கை வடிவமாகவும், யானை வடிவமாகவும், வேறுபல விலங்கு பறவை முதலியவற்றின் வடிவங்களாகவும் அநேக பெரியோர்கள் சஞ்சரிப்பார்கள். அவர்களில் எம்மையும் ஒருவராக நீ கண்டு கொள், என்றருளிச்

செய்து இனி நீ இங்கு தாமதிக்காமல் தண்ணீரெடுத்துப் போகலாம் என்று கூறிப் போனார்.

அப்பால் அவரது விடைபெற்றுக் கொண்ட சூரசேனனும் தண்ணீரெடுத்துக் கொண்டு வில்லுடன் பன்னசாலைக்கு வந்து சேர்ந்தான். அவன் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்த தன்மார்த்தன் முதலிய நால்வரும் கவலை தீர்ந்தவராகி அப்பா! சூரசேனா! நீ வெகு நேரம் சுணங்கிவிட்டனையே! நீ போன இடத்தில் ஏதேனும் விசேஷம் உண்டோ? நம்பெருமான் பால் இவ்வில்லினைப் பெறுதற்குக் காரணம் என்ன? என்று கேட்டனர். அதற்குச் சூரசேனன் அங்கு நடந்த வர்த்த மானங்களை யெல்லாந் தெரிவிக்க அதனைக் கேட்ட அவர்கள் மிக மகிழ்ச்சியையுடையவர் களானார்கள். பின் எல்லோரும் தாகசாந்தி செய்து காலாங்கி முனிவரிடத்தில் வந்து அவரனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒரு நாள் ஐவரும் முனிவரை நோக்கிச் சுவாமீ! நான்கு வேதத்தினுடைய வரலாறுகளைக் கூறி யருளவேண்டு கேட்க அதற்கு முனிவர் தன்மார்த்தன் முதலானோர்களே! தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமம் என்னும் நான்கு வேதங்களே, பழமறைகளாகும். இவற்றுள் அறவொழுக்கமாகிய ஐம்பெரும் வேள்விகளைப் பற்றிச் சொல்வது முதலாவதாகிய தைத்திரிய வேதமாம்.

இரண்டாவதாகிய பௌடிகவேதமோ பொருள் பற்றிய வொழுக்கமாகிய அரச நீதியைப் பற்றிச் சொல்லுவது. மூன்றாவதாகிய தலவகார வேதம் முல்லை நிலத்துச் செய்கையாகிய கற்பொழுக்கத்தையறிவிப்பது. நான்காவதாகிய சாமவேதம், அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்றன் நிலையாமை பற்றி இவற்றின் மேலுள்ள வீடுபேறாகிய அழிவற்ற பேரின்பத்தை நன்கு விளக்குவது. இப்பொருள் பற்றியே ""நான்கு கூறும் மறைந்த பொருளு முடைமையின் நான் மறை" என்றார் பெரியோர். இந்நான்கு பழமறைகளும் வாக்கு மனாதீத கோசரமாயுள்ள பரம்பொருளாகிய எண்குணக் கடவுளது திருவாய் மொழிகளாகும். இவற்றை அறிவிற்சிறந்த சித்தர் முதலான பெரியோர்களே பேணி வந்தனர்.

அப்பால் உலகத்திலே சில வாழ்நாள் பில்பிணிச் சிற்றறிஞர்கள் இப்பழமறைகளின் அருமை பெருமைகளை யறியமாட்டாத வரானார்கள். அதன் மேல் கால நிலைக்குத் தக்கவாறு விரிந்து கிடந்த வேதங்களைச் சுருக்கி இருக்கு, எசுர், சாமம் என்னும் மூன்று பெயர்களால் முதலில் வியாச முனிவர் வகுத்தருளினார். ஆகையால் "வேதந்த்ரயீ" என்னும் வாக்கியம் உண்டாயிற்று. இம்மூன்று வேதங்களில் நடுவிலுள்ளது எசுர் வேதம். அது ஏழு காண்டங்கள் யுடையதாதலின் அவற்றுள் நடுக்காண்டம் நான்காவதுகாண்டமாம்.

அந்த நான்காவது காண்டம் ஏழு சம்ஹிதைகளை யுடையதாதலின் அவற்றுள் நடுவிலுள்ள நான்காவது சம்ஹிதையில் முதலும் ஈறும் நீங்கலாக நடுவே யுள்ளது சதருத்திர மந்திரமாம். இம்மந்திரத்தின் நடுவிலே "நமச்சிவாயச, சிவதராயச" என்னும் பஞ்சாக்ஷர மந்திரம் விளங்கிக் கொண்டிருக்கும். ஆதலால் வேத புருடன் தனது இருதயத்திலே சதா பஞ்சாட்சரப் பொருளாகிய பரம்பொருளைத் தியானித்துக்

கொண்டிருக்கிறான் என்று பெரியோர் கூறுவர். அத்தகைய பஞ்சாக்ஷர தியானத்தை நீங்களும் கைக்கொண்டு வாழ்வீர்களாக. இப்பஞ்சாக்ஷரத்தை அகத்தே கொண்டுள்ள மூன்று வேதங்களும் உண்டான பிறகு, நான்காவதாகிய அதர்வண வேதத்தையும் வியாச முனிவர் அருளிச் செய்தனர்.

இந்நான் மறைகளும் இருக்கு-மந்திரம், எசுர்-பலி, சாமம்-துறவு, அதர்வணம் தியானம் என்னும் பொருள்களை விளக்கி நிற்கும். இந்நான்கு வேதாந்தங்களிலுமுள்ள நான்கு மகாவாக்கியங்களின் பொருள்களை நீங்கள் நன்கு அறிந்தவர்களாக நாம் குறிப்பாலுணருகிறோம். அத்தகைய உங்களுக்கு வேதங்களின் வரலாறுகளை ஐயந்திரிபறத் தெரியவேண்டியது அகத்தியமாதலால் நீங்களும் அதனை விரும்பினீர்கள். அதனை நாமும் உங்களுக்கு விளங்கக் கூறினோம். வேத வேதாந்தங்களின் வரலாறுகளை நீங்கள் தெரிந்திருத்தலுடன் உங்கள் சரீரத்தைச் சித்தி செய்து கொள்வதற்கு உரிய காயகற்ப மூலிகைகளைத் தெரிந்திருக்க வேண்டியதும் அவசியமல்லவா? அதற்காக நமக்குத் தெரிந்ததிருக்க வேண்டியதும் அவசியமல்லவா? அதற்காக நமக்குத் தெரிந்த காயகற்ப மூலிகைகளின் முறைகளிற் சிலவற்றை உங்களுக்குச் சொல்லுகிறோம். கவன முற்றுக் கேட்பீர்களாக. இவ்வனத்திற்கு வடபக்கம் அரை நாழிகை வழி தூரத்தில் ஒரு பொய்கையுண்டு. அப்பொய்கைக்குக் கீழ்த்திசையில் சில விருக்ஷங்களும், மண்கண்ட வெளியு மிருக்கின்றன. அவ்விடத்தில் தண்ணீர்க் கசிவுள்ள தரையின் கண் கற்றாமரை யென்றொரு மூலிகையிருக்கிறது.

அம்மூலிகையின் இலையைப் பார்த்தால் முதலில் அது ஒரு இலைபோற் றோன்றும், கரத்தாற்றீண்டினால் அது நான்கு இலையாக விரியும். அதன் வேர் சடைபோலிருக்கும். அவ்வேரில் இரும்பூசியைச் சொருகினால் தாமிர ஊசியாகும். அந்தத் தாமிர ஊசியைப் பிடுங்கி அவ்வேரில் மற்றோரிடத்திற் சொருகினால் வெள்ளி ஊசியாகும். அந்த வெள்ளி ஊசியை மறுபடியும் பிடுங்கி அதன் கண்வேறிடத்திற் சொருகினால் சுவர்ண ஊசியாகும். அம்மூலிகையை மிதித்துக்கொண்டு பகலிலாகாயத்தைப் பார்த்தால் நக்ஷத்திரங்க ளெல்லாந் தோன்றும். இந்த அடையாளங்களைக் கவனித்து அந்தக் கற்றாமரைச் சமூலமும் பிடுங்கிவந்து நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து, ஒரு மண்டலம் வெருகடிப் பிரமாணஞ் சாப்பிட்டுவரச் காயசித்தியாகும். இதுவுமன்றி இன்னுமொரு முறையும் உண்டு. அதாவது, அந்தக் கற்றாமரை மூலிகைக்குப் பக்கத்தில் மேற்கு மூலையில் கற்றாமரை திட்டொன் றிருக்கிறது. அந்தத் திட்டுக்குத் தென் சார்பில் ஓர் கிடங்கிருக்கிறது. அக்கிடங்குக்கு மேற்குப் பக்கத்தில் சுணங்கவிருக்ஷமென் றொரு மரமிருக்கிறது. அதனிலை நீளமாகவும் தடிப்பாகவும் சுனையாகவும் சுற்றிக்கறுக்காகவுமிருக்கும். அதன்கனி நாய்க்குட்டி போன்றிருக்கும். அக்கனி பழுத்துக் கீழே விழும்போது குலைத்துவிழும். அப்படி விழுந்து நொடி நேரங்கிடந்து பின்பு அவ்விருக்ஷத்தோடு போய்ச் சேர்ந்துகொள்ளும். அக்கனி விழும்போது சாக்கிரதையாக எடுத்து அறுத்துப்பார்த்தால் வெண்ணெய்போல் மெதுவாக இருக்கும்.

அதைக் கொஞ்சம் சாப்பிட்டுவர மூர்ச்சையுண்டாகும். எவரேனும் ஒருவர் சமீபத்திலிருந்து ஆவின்பாலில் நான்குக்கொன்று தேன்கலந்து ஒருகரண்டி விதம்

உள்ளே செலுத்திக்கொண்டு வரப் பதின்மூன்றாவது நாளில் மூர்ச்சை தெளியும். தேகமுஞ் சித்தியாகு மென்று மொழிந்து, தன்மார்த்தன் முதலானோர்களே! நம்முடைய வனத்தி லொரு வருடகால மிருப்பதாகத் தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள் வரை ஒரு வருடகாலமுஞ் சரியாய்விட்டது. ஆகையால் இவ்வனத்திற்கு அடுத்த பக்கத்தில் கைலாசகானலில் நந்தீஸ்வர ராச்சிரமமொன்றிருக்கிறது. ஆங்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய ஞானோபதேசங்களையும் கற்பமுறைகளையுங் கேட்டுக்கொண் டிருங்களென்று ஆக்ஞாபித்துத் தம் பக்கமிருந்த அநேக சீடர்களில் ஒருவனையழைத்துச் சீடனே! இத்தன்மார்த்தன்முதலான ஐவர்களையும் அழைத்துக்கொண்டுபோய் நந்தீஸ்வர ரிடத்தில் விட்டுவரு வாயென்று உத்தரவு கொடுக்க, அவ்வுத்தரவின்படி காலாங்கி முனிவர் சீடனும், தன்மார்த்தன் முதலைவருடன் பிரயாணமாகி நந்தீஸ்வரர் வனத்துக்குச் சென்றானென்று சாணாங்கி முனிவர் விளம்புதலும் நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! காலாங்கி முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் வேதாந்த ஞானோபதேசங்களையுங் காயகற்பங்களையுங் கேட்டு மிகுந்த சந்தோஷமுற்றோம். இனி நந்தீஸ்வரர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் அங்கவர் பெற்ற ஞானகற்ப முறைகளையும் அருளிச் செய்ய வேண்டுமெனச் சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

இருபத்தொன்றாவது,
காலாங்கி முனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது;

உ
சிவமயம்
இருபத்திரண்டாவது

நந்தீஸ்வரர் சருக்கம்

ஒன்பதாவது வனம்.

0சதுரகிரி நந்திவனந் தன்மார்த்தன் நால்வருடன் சார்ந்தே கற்பின்
*சதுரகிரிப் பான்வந்த முத்தேவர் சேயாகச் சார்த்துங் ( ) கார்க்க
சதுரகிரிப் பேரரசர் புகழத்ரி மனைகாதை சாற்றக் கேட்ட ??
சதுரகிரி புதன்முன்னே பாப்பாமெய் நிலைநின்ற தன்மை சொல்வாம்

கேளுங்கள் முனிவர்களே! காலாங்கி முனிவர் சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும் தென்கீழ்த்திசை நோக்கிப் பிரயாணமாகி அநேக பூஞ்சோலைகள் சூழ்ந்த வனங்களையும், தவமுனிவர்களுடைய ஆச்சிரமங்களையும், சப்தகன்னியர் ஆலயக்கானலையுங்கடந்து கைலாசக் கானலின் சமீபமாகச் செல்லும்போது ஐவரும் காலாங்கி முனிவர் சீடனை நோக்கிச் சுவாமீ! இவ்விடத்தில் சங்கு, சேகண்டி, மணி பேரிகை முதலிய முழக்கங்களும், அரகரா என்ற சத்தங்களும் கடலொலிபோல மிகுதியாகக் கேட்கின்றனவே. அதன் காரணமென்னவெனக் கேட்க, அதற்குச் சீடன் அங்கே தெரிகிற கைலாசக் கானலில் எழுந்தருளி யிருக்கிற சிவபெருமானையும், பார்வதாதேவியையும், மோக்ஷ சாம்பிராச்சியத்தைப் பெரும் பொருட்டு அநேக தவருஷிகள் பூசித்துப்போற்றக்கூடிய சத்தமெனத் தெரிவித்து. அப்பால் ஐவரையும் அழைத்துக்கொண்டு அக்கைலாசக் கானலுக்குட் சென்று ஆங்கு அழகிய ஒரு பொற்பீடத் திலெழுந்தருளியிருக்கிற ஈஸ்வரனையும் ஈஸ்வரியையும் மற்றும் உள்ள மகருஷிகள் யாவரையுங் கண்டு தரிசிக்கச்செய்து எல்லோரும் அவர்களது ஆசீர்வசனம்

0சதுரகிரி - சித்தாசலம், *சதுரகிரிப்பான் - (சதுர்-அகிரிப்பான்) சாமர்த்தியத்தை அயர்த்தும் பொருட்டு, ( ) கார்க்க சதுரகிரிப்பேர் - (கார்-கச-துரகு-இரி-பேர்) கரிய யானை குதிரைகளை ஏறிநடத்தும் (பெரிய ?? ஆசதுரகிரிபுதன்- (ஆசது-ஆர்-அகிரிபுதன்) குற்றமானது பொருந்திய கீரியின் : இந்நான்காவது அடியில் (ஆர்) என்றது (அர்) என்றாயது செய்யுள் விகாரம், எதுகை நோக்கி யெய்தியது: (ஆசு அது) என்றதில் (அது) என்பது பகுதிப்பொருள்விகுதி, (அகிரிபுமுன்னே பாப்பா) மென்றவிடத்து ஆசதின் அழிவை வருவித்துக் கொள்க. எற்றோ என்னின், அருத்தாபத்தி என்னும் நியரயத்தால் என்றும், பொருட்டொடர்பு பற்றி என்றுங் கூறுக

பெற்றவுடன் அவ்விடத்தை விட்டகன்று அரிய தவயோகசித்தர் குழாங்கள் அவரவர் தானங்களில் வளர்க்கும், வைத்திய வேள்வி, வாதவேள்வி, யோகவேள்வி என்னும் முத் தழல்களின் புகைகள் மேகம்போற் சூழ்ந்துகொண்டிருக்கிறதை மயில்களானவை பார்த்து நடனம் புரிகின்ற சோலைகள் சூழ்ந்த நந்தீஸ்வரர் வனத்திற்சென்று ஆங்குத் தம் ஆச்சிரமத்தின்கண் எழுந்தருளியிருந்த தவ உத்தமராகிய நந்தீஸ்வரரைச் சோடச வுபசாரங்களோடு நமஸ்கரித்து நிற்க, உடனே அந்நந்தீஸ்வரர் அவர்களுக்கு ஆசிவசனங் கூறி, யிருக்கும்படிச் செய்து காலாங்கி முனிவர் சீடனால் தன்மார்த்தன் முதலானோர்களுடைய செய்திகள்யாவும் தெரிந்துகொண்டு அச்சீடனை வழியனுப்பிய பின்பு ஐவர்களையும் பார்த்துத் தன்மார்த்தன் முதலானோர்களே! நம்முடைய வனத்தில் எவ்வளவு நாட்டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? என்னாலென்ன விஷய முங்களுக்குத் தெரியவேண்டும்? அதைத் தெரிவிப்பீர்களெனக் கேட்க. உடனே தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருடகாலமிருந்து ஞானோபதேசங்களையும் காயாதி கற்பங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப்புகல, அதைக்கேட்ட நந்தீஸ்வரர் அப்படியானால் நீங்கள் இவ்விடத்திற்குக் கீழ்பக்கம் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து வருவீர்கள் என்று உத்தரவு கொடுக்க உடனே ஐவரும் ருஷீஸ்வரர் சொற்படி ஐந்தடுக்குப் பன்ன சாலை :பமைத்து, அதில் வாசஞ் செய்துகொண்டு, தினந்தோறும் ஆத்ம ஞானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டு வருநாளில் ஒருநாள் நந்தீஸ்வரரை நோக்கிச் சுவாமீ! இவ்வனத்திற்கு மேற்றிசையின் கண் ஓர் உருவத்தோடு நீண்ட துவஜஸ்தம்பம் போல நிற்கிறதே! அஃதென்ன? வென்றுகேட்க, அதற்கு ருஷீஸ்வரர் தன்மார்த்தன் முதலானோர்களே! அந்த கம்பத்திற்குப் பக்கத்தில் ஒரு தண்கமலப் பொய்கை இருக்கிறது. அப்பொய்கையில் கற்பிற் சிறந்த மலையரச மகளிர் நாடோறும்வந்து நீராடிச் செல்வர். அதனையறிந்த காமுகனாகிய வாணன் என்றும் பெயரையுடைய ஒருவேடன் அத்துறையின் ஒரு சார்பில் வந்து மறைந்து நின்று மகளிர் கூட்டங்கூட்டமாகவந்து நீராடிச் செல்வதைக் கண்டு சமயத்தை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒருநாளில் மோகாந்த காரத்தில் மூழ்கிய அவன் தனித்து நீராட வந்த ஒரு மலையரமகளை அடுத்துப் பிடிக்க விரைந்து வருகையில், அதனைக் குறிப்பாலுணர்ந்த அப்பெண்மணி தனது கற்பு வலிமையைக் கடைப்பிடிக்கவுண்டாகிய துணியால் அடாதூர்த்த வேட! உன்னைப்போன்ற தூர்த்தருக்கு நல்லறிவை யுண்டாக்கும் பொருட்டு நீ ஒரு கற்றூணாகி நிற்கக்கடவது! என்று வன்மொழி வழங்கினவளாகி, அவ்வாறே அவன் நிற்றலைக்கண்டு மகிழ்ந்து சென்றனள்.

அந்நாள் முதல் அத்தூண் கற்கம்பமென்றும், வாணத்தூண் என்றும், பெயர்பெற்றுளது, என்று மொழிந்தருளினர். அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! அம்மலையரமகள் தன்னை இச்சித்த மூடனாகிய வேடனை அவன் செய்த் குற்றத்திற்குத் தகுந்த சிக்ஷையைச் செய்யாதபடி கற்றூணாகச் சபித்தனளே! அப்படிச் செய்யலாமா? இது ஞாயமாகுமா? வென்று கேட்க, அதற்கு ருஷீஸ்வரர் கற்புடைய ஸ்தீரீகளை எவனொருவன் பார்த்து இச்சிக்கிறனோ, அவனை

அந்த ஸ்திரீகள் எந்தவிதமாகச் சபித்தாலுங் குற்றமில்லை. அதற்கு இன்ன சாபந்தான் ஏற்பட்டிருக்கிற தென்றுமில்லை இஃதொரு பெரிதல்லவே! பூர்வம் தாணு, மால், அயன் என்ற மூன்று குருமூர்த்திகளும் அத்திரி மகாருஷியின் மனையாகிய அநசூயையின் கற்பைப் பரீட்சிக்கும் பொருட் டெண்ணங் கொண்டு அவளிடத்திற்சென்று நிருவாணிகளிடத்தில் பிச்சை கொள்வோமென்று சொன்னதற்காக அவ்வநசூயை தன் கற்பின் வலிமையால் அம்மூவரையும் சிறுகுழந்தைகளாகச் சபித்தனளே! அதைப் பார்க்கிலும் இவ்வேடனைச் சபித்தது குற்றமாமோ? என்று கூறியதைக் கேட்ட ஐவரும், சுவாமீ! அந்த அநசூயை என்னும் மகா புண்ணியவதி சரித்திரத்தைக் கிருபையோ டருளிச் செய்யவேண்டுமென்று கேட்க, அதற்கு நந்தீஸ்வரர்.

கேளுங்களைவர்களே! முற்காலத்தில் நறுமணங்கமழும் புஷ்பச்செடிகளும், அனேக விருக்ஷங்களும், பொய்கைகளுஞ் சூழ்ந்திலங்குகின்ற அழகிய வனத்தின் கண் சகல ஆகம வேத சாஸ்திர புராண கலைஞானங்களை யுமுணர்ந்து ஐம்புலனையடக்கி, உணவொழித்துக் காயசித்தி யுடையவராகிப் பிராணாயமத்தினாற் குருபதியிலூறும் அமுதத்தையுண்டு இன்பமுற்றிருப்பவராகிய அத்திரி மகருஷி யென்னும் பெயரையுடைய முனிவர் ஒருவர் இருந்தார்.

அவருடைய மனைவியோ! அருந்ததி முதலியோர் புகழுங் கற்பையுடையவளும், அழகில் இலக்குமியைப் போன்றவளும், மிகுந்த பரிசுத்த மனமுடையவளும், எதையும் நாயகன் சொல்லுமுன் நன்கு ணர்ந்து செய்யும் நன்னடக்கை யுள்ளவளும், ஒருவரையும் நோக்காது தன் பெருவிரலையே நோக்கி நடப்பவளும், நாயகர் கால்பிடித்து அவர்விழி துயின்றபின் துயின்று மகிழ்பவளும், நாயகர் எழுமுன் னெழுந்து வீட்டைப் பொறுத்த வேலைகளை யெல்லாஞ்செய்து பின் நாயகருத்தரவுக் கெதிர்பார்த்திருக்குஞ் சிந்தையுடையவளும், எதுசெய்தால் நாயகர் இன்புறுவாரோ அதனைச் செய்தலே தனது கடமையாகக் கொண்டவளும், அநசூயை என்னும் பெயரை யுடையவளுமாவள். அவள் திறமையை அளவிட்டுச் சொல்லவல்லவர் எவருமே யிலர். அத்தகைய உத்தமகுணங்க ளெல்லாம் வாய்ந்தமனைவிளோடிருந்து அத்திரி மகருஷீஸ்வரர் இல்லறதருமம் வழுவாது நடாத்திவரும்போது தேவலோகத்தில் தேவேந்திரன் முதலானதேவர்கள் வேள்வியொன் றியற்றுவதைக் கேள்வியுற்ற அவர் அவ்வேள்வியைத் தாமுங் கூடவிருந்து நிறைவேற்றி வருவோமென நினைந்து தம் மனையிடத்தில் தெரிவித்து ஆங்கெளந்தருளிச் சென்றனர்.

அத்தருணத்தில் நீண்ட காலங்களாக மழையில்லாது மிகுந்த துன்புற்றிருந்த மாதவர் பலரும் அநசூயையிருக்கிற பன்னசாலைக்கு வந்து தங்கள் தங்கள் குறைகளை முறையிட்டுக் கொண்டார்கள். அவர்கள் முறையிடுதலைக் கேட்ட அநசூயை தன் கற்பின் மகிமையினால் மழை வருஷிக்கும்படிச் செய்தனள். இச்செய்தியை அறிந்த அரன், அரி, அயன் என்ற மூவரும் அவளது கற்பு வன்மையைச் சோதித்து உலகத்திற் கறிவித்தல் வேண்டுமென நினைத்துக் கிழப்பருவ முடையவராகித் தலைமுடி நரைத்து முகம் வலித்துச் சுரித்து முக்கிக் கக்கி எலும்பு நரம்பு துன்ன எக்ஞோபவீதமின்ன மேனி வளைந்து வயிற்றிற் பசிகொதிப்பத் தடியூன்றி தத்தித் தடுமாறித் தள்ளாடி

அத்திரி முனிவர் மனைவியாகிய அநசூயையின் பன்னசாலைக்கு முன்னர் வந்து பசி மிகக் கொடிதே! பிக்ஷாந்தேகி? என்றுரைக்க, அவ்வார்த்தையைக் கேட்ட அநசூயை வெளியில் வந்து மூவரையும் வணங்கி அருக்கிய முதலியவை கொண்டுபசரித்து மனைக்குள் அழைத்துச் சென்று தகுந்த ஆசனங்களிலமரச்செய்து அறுசுவையுண்டி யமைத்துக் கொண்டு அமுதுண்ண வாங்களெனக் கூற, அதற்கு அம்மூவரும் நாங்கள் நிருவாணிக ளிடத்துப் பிட்சை கொள்வோம். என்றுரைக்க, அவ்வுரையைக் கேட்ட அநசூயை அச்சொல்லின் பொருளையறியாது மயங்கித் தன் செவிகளைப் பொத்தி அரகர வென்றஞ்சித் துன்பமிஞ்சிய மனத்தளாய் மூவரையும் நோக்கி ஐயா! நீங்களிப் பொழுது கூறியது தீதான மொழியாகும். அந்தோ! இவ்வார்த்தையைக் கேட்க நான் என்ன பாதகஞ் செய்தேனோ! என்று கூறி சுவாமிகளே! அடியாள் படைக்கும் அன்னத்தைப் புசித்து நன்மை வார்த்தை கூறுவதே தேவரீர்களது ஒழுக்கமென்று சொல்ல, அதற்கு அம் மூவரும் நாங்கள் நிருவாணிகளிடத்தன்றி மற்றவர்களிடத்தி லுண்ணமாட்டோமே! அதற்கென்ன செய்கிறது? என்று கூறினர்.

அதைக் கேட்ட அநசூயை இதுவுமொரு சோதனை தான் எனத்தன் மனத்துட்கருதித் தன் கணவரை நினைத்து அவர் பாத தீர்த்தத்தைக் கரத்திலேந்தி, என் முன்பாக இம்மூவருங் குழந்தைகளாகுக, என்று உரைத்து அத்தீர்த்தத்தை அவர்கள் மேற்றெளிக்க, உடனே அம்மூவருடைய கிழ உருவமும் நீங்கிச் சிறு பாலராகிக் கீழே கிடந்து அழலாயினர். பின்னர் அநசூயை அப்பாலகரைத் தன்மடி மேலடுத்திருத்திப் பாலைச் சங்கில் வார்த்துப் புகட்டி அணையில் சேர்த்துவாள், மீண்டும் புதல்வரை எடுப்பாள். உச்சியில் எண்ணெய் தேய்ப்பாள், நீராட்டுவாள், நெற்றியில் நீறணிவாள், சங்கணி பூட்டுவாள், தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டுவாள், இவ்விதமாக மும்மூர்த்தியாகிய குழந்தைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சிராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனள்.

அப்பால் அம்மூவருடைய மனைவியராகிய பார்வதி, இலக்குமி, சரஸ்வதி என்னும் மூவரும் தங்கள் நாயகரை காணாது மனம் வருந்தித்தேடி யிருக்கு மிடத்தை யறிந்துவரும் வழியில் எதிர் வந்த நாரதமகா முனிவரை கண்டு அவரிடத்தி லிருந்து சகல சமாசாரங்களையுந் தெரிந்து கொண்டு, அத்திரி முனிவரது ஆச்சிரமத்தைச் சேர்ந்து அவர் மனைவியாகிய அநசூயை வரவேற்க வீற்றிருந்து நன்மை வினாவிக் கொண்டிருக்குங் காலத்தில், அநசூயையானவள் தங்கள் கணவர் வந்து பிட்சை கேட்டு நிருவாணிகளிடத்தில் உண்போமென்றதால் சிறுபாலகராகி இருக்கின்றனர் என்ற செய்திகளை எல்லாம் விவரமாகச் சொல்லக் கேட்டுக் கொண்டிருக்குந் தருணத்தில் முன் தேவருலகத்துக்குச் சென்றிருந்த அத்திரி மகாமுனிவர் ஆங்கு மகத்தை நிறைவேற்றித் திரும்ப வருவதைக் கண்ட பத்தினியானவள் கதிரவனைக் கண்ட தாமரை மலர் போல முகம் மலர உவகை பூத்து அவருடைய பாதங்களை விளக்கி அருக்கிய பாத்திய ஆசமனாதிகளால் மலர் கொண்டு பூசித்துப் போற்றிப் புகழ, முனிவரும் ஆசீர்வதித்து ஆசனத்தமர்ந்து ஆங்கெழுந்தருளி யிருக்கின்ற மூவருடைய மனைவியரையும் பார்த்து மகிழ்வுற்றுப் பன்முறை வணங்கி யுபசரித்திருக்கும்போது, குழந்தைகளின் அழுகுரலைக் கேட்ட அம்முனிவர் தன்மனைவியை நோக்கி ஈங்கு

அழும் குழந்தைகள் யாரெனக் கேட்க அதற்கவள் ஆங்கு நடந்த செய்திகள் யாவையும் உள்ளவாறு மொழிந்தனள்.

அதனைக் கேட்ட முனிவர் மனக் களிப்படைந்து பெண்களுக்குக் கற்பைப் பார்க்கிலும் மேலானவை யாதொன்றுமில்லை என வியந்து, பேதாய்! நிருவாணிகளிடத்தில் நாங்களுண்போமென்று அவர்கள் கூறியதற்கு "மோட்ச இச்சையை யுடையவர்களிடத்தி லுண்போம்" என்னும் பொருளையறியாமல் நீ இவ்வாறு செய்தனை? இது உனது பெண்மையேயோம். இனிக் இக்குழந்தைகளை முன்போலாக்கி அவர்களுடைய மனைவியராகிய மூவரையும் நீமகிழ்விப்பாயாக: என்று ஆக்ஞாபிக்கவும், அவளும் வருந்தி அவ்வாறுசெய்தனள். மூவரும் பழைய கிழவடிவத்தை யடைந்தெழுந்து தம்தம் மனைவியைக் காணவும் நாணங்கொண்டு உடனே தமது சுயரூபத்தையடைந்து அநசூயைப் புகழ்ந்து பேசி நின்றார்கள்.

அங்ஙனே தம்பதிகளாய் நிற்கின்ற சிவ விஷ்ணுபிரமர்களது திருக்காட்சியை முனிவரும் அவர் மனைவியுங் கண்டு ஆனந்த முற்றுப் பன்முறை போற்றிப் புகழ்ந்து நிற்றலைக்கண்ட திரிமூர்த்திகளும் அவர்களைக் கிருபையோடு பார்த்து இப்பூலோகத்தில் உங்களைப் போல இல்லறத்திலிருந்து மாதவம் புரிந்தவர் எவருமில்லை என்று வாழ்த்தி அவர்கள் மனோபீஷ்டங்களெல்லாம் நிறைவேறக் கடவது என்னும், நன்மொழி வழங்கித் தங்கள் தங்கள் பதிக்கு மனைவியோடு எழுந்தருளிச் சென்றார்கள் என்று கூறியருளினார். அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் சொல்லொணாத மகிழ்ச்சியை யடைந்தவர்களாகி முனீஸ்வரரை நமஸ்கரித்து விடை பெற்றுத் தங்கள் பன்னசாலைக்குப் போய் சேர்ந்தார்கள்.

அப்பால் இராஜேந்திரபுர நகரத்தில் முன்னர், தன்மார்த்தன் முதலிய ஐவரும் வனத்திற்குப் பிரயாணமாகி வந்த பின்னர் சுவேத மகாராஜனானவன் சின்னாள் மனக்கவலை யடையவனாக விருந்து சுவேதசந்திரன், சற்குணன் என்னும் இரண்டு பெயரன்மாருடைய முகமதி யமிழ்தத்தைக் கண்வாய் நுகர்ந்து மனந்தேறி ஆங்கு அழுதரற்றிக் கொண்டிருந்த தன் மனைவி முதலானோர்கள் வருத்தத்தைப் பற்பல நீதி வாக்கியங்களால் மாற்றிச் சபாமண்டபத்துக்கு வந்து மந்திரி முதலியயாவருஞ் சூழந்திருக்கச் சிம்மாசனத் தமர்ந்து யாதொரு குறைவுமில்லாது இளைய குமாரனாகிய வச்சிரரங்கதனுடனே அளவளாவியிருந்து அரசு புரிந்து வருங்காலத்தில் ஒரு நாள் மந்திரிகளை நோக்கித் தன் மார்த்தன் முதலான ஐவர்களும் வனத்துக்குச் சென்று இது வரை ஒன்பது வருடங்களாகின்றனவோ? சிலகாலங் கழித்து நாங்கள் வந்து சேர்வோமென்று கூறியபடி ஏனோ இந்நாள் வரை அவர்கள் வந்திலர்? அவர்களையழைத்து வருவதற்கு தன் மைத்துனர்களான மங்கள பூபாலனையுஞ், சங்கர பூபாலனையும், சுந்தர பூபாலனையும், அனுப்புவிக்கலாமென்று நினைக்கிறேன். உங்களுடைய அபிப்பிராயம்யாது? என்ற கேட்க அதற்கு மந்திரி முதலானோர்கள் அரசே! யாங்களும் இதனைப் பற்றி தங்களுக்கு நினைப்பூட்டுதல் வேண்டுமென்று நேற்றுத்தான் இளைய மகாராஜாவுடன் பேசிக் கொண்டிருந்தோம். தாங்கள் கருதியபடி ஐவரையும் விரைவில் அழைத்துவரச் செய்ய வேண்டியது அவசியமே என்று கூறினார்.

அதனையறிந்த மங்கள பூபாலன் முதலிய மூவரும் அரசே! நாங்கள் இப்பொழுதே கானகத்துக்குச் சென்று எவ்விதமாவது ஐவரையுங் கூட்டிவந்து சேருகிறோமென்று சொல்லி விடைபெற்று நால்வகைச் சேனையுடன் உடனே பிரயாணமாகிச் சதுர கிரியிலுள்ள நந்தீஸ்வரன் வனத்திற் போய்ச்சேர்ந்து ஆங்கு பன்னசாலையிலிருந்த ஐவர்களையும் பார்த்து மிகுந்தகவலையுற்றுக் கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருக அழுதாற்றினார்கள். அதைக் கண்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் அவர்களையுபசரித்துப் பன்முறை நமஸ்கரித்து அவர்கள் மனத்தைத் தேற்றித் தம் தாய் தந்தை முதலானவர்களுடைய க்ஷேமாதீசயங்களைப் பற்றி விசாரித்தனர். அதற்கவர்கள் மருமக்களை நோக்கி உம்முடைய தாய் தந்தை முதலான யாவரும் க்ஷேமமே ஆனாலும் இவ்விடத்திற்கு நீங்கள் பிரயாணமாகி வந்தநாள் முதல் நம் இராஜேந்திரபுர நகரமானது நேத்திரமில்லாத சரீரத்தைப் போலும், தந்தியில்லாத வீணையைப் போலும், தாமரையில்லாத தடாகத்தைப்போலும், மதகரியில்லாத சேனையைப் போலும், அழகில்லா திருக்கிறது. அன்றியும் உம்முடைய தாய்தந்தையர் உங்களைப் பிரிந்த நாள் முதலசனகாதி நால்வரைப் பிரிந்த சரசுவதி காந்தனைப்போலிருந்து வருகிறார்கள்.

அங்கே அவ்வித மிருப்பவும் நீங்கள் தவஞானமே பெரிதெனெ நினைத்து இவ்விடத்துக்கு வந்து இக்கோலத்தோடிருப்பது தகுமோ? தங்கள் பிதா கிழப்பருவத்தில் முதிர்ந்து விட்டாரன்றோ? சுவேதசந்திரனோ! இளைஞனாயிருக்கிறானே? வச்சிராங்கதன் இராச்சிய காரியங்களை எல்லாம் பொறுத்துப் பார்க்கத்தக்கவனாயிருந்து பார்த்துவரினும் அவன் தனிமையில் என்ன செய்வான்? இத்தனையும் நீங்கள் தெரியாதவர்களுமல்லவே அப்படியிருந்தும் ஒன்றுந் தெரியாதவர்போல் இந்நிலையிலிருப்பது அரசகுலத்தினராகிய உங்களுக்குத் தருமமாமோ? சில காலங்கழித்து வந்து சேர்வோமென்று சொன்னபடி நகர்க்கு வரவேண்டாவோ? சொன்னபடி வரவில்லையாயின் பெற்றோர் முதலியோர் மனம் எவ்வாறு கலங்கும்? அவர்களை அவ்வாறு கலங்குவிக்கலாமோ? "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்னும் முதுமொழியை நாம் ஆதரித்தாலல்லவோ உலகம் ஆதரிக்கும்? இப்பொழுது அவர்கள் உங்களை அழைத்து வரச்சொல்லி எங்களை அனுப்பியிருக்கிறார்கள். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" - "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற மறைவழிப்படியின் தந்தை வார்த்தையாகிய மந்திரமே? முனிவர்கள் உபதேசிக்கும் மந்திரங்களினுஞ் சிறந்ததாகும். தாயாகிய கோயிலே எந்தக் கோயிலினு முயர்ந்ததாகும்.

ஆகையால், அவர்களை மகிழ்வித்தால் எல்லா ஞானங்களும் உங்களுக்குத் தானே வரும். இனி வீணே இங்குத் தாமதிக்கலாகாது. நகரத்துக்குப் போவோம் வாருங்கள். புறப்படுங்களென்று அழைத்தனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட ஐவருங் களிகூர்ந்தனராகி நால்வருந் தலைகவிழ்ந்திருப்பவுந் தன்மார்த்தன் மாத்திரம் அன்புடன் "மாமன்மாரைப் பார்த்து" மாதுலர்களே! தாய், தந்தை, சகோதரர், புத்திரர், சுற்றத்தார் முதலானோர் எத்தனைபேர்க ளிருந்தாலும் ஜீவன் சரீரத்தைவிட்டுப் பிரியாதிருக்குமோ? நம் இராச்சியத்தைப் போல எத்தனையோ கோடி இராச்சியங்களை யாண்டுவந்தாலும்

இறவாவரம் பெற்றிருப்போமா? அறுசுவையோ டன்னபானாதிகளைப் புசித்து இன்பசுகத்தோ டிருந்தாலும் தவஞான மோக்ஷத்தைப் பெறலாமா? ஒருக்காலுமில்லை. பிறந்தா ரனைவருமிறந்தார்களே யல்லாது எவராயினும் நீடூழிகாலம் நிலைத்திருக்க நாம் கண்டதில்லை. "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளொரு முடிவிலொரு பிடிசாம்பராயினர்" அதனைக் கண்டன்றோ! மகருஷிகளனைவரும் இவ்வுலக வாழ்வை அநித்தியமென்று நினைத்துவெறுப்புற்றுத் தவஞான நிட்டையை மேற்கொண்டு கற்பங்களைப் புசித்துக் காயசித்தி செய்து இவ்விடத்திற் குகைகளிலும், வனங்களிலும் வசித்து வருகின்றார்கள்.

ஆகையால் நாங்கள் அவ்வழியொழு ஒன்பது வருட காலமாக இறவா நெறியை யறிந்து அதற்குரிய சாதனங்களைக் கைக்கொண்டு இங்கிருந்து வருகிறோம் இன்னுஞ் சிலகாலம் இவ்வனங்களில் வசித்து அச்சாதனம் முற்றுப்பெற்றபின் அவ்விடத்துக்கு வருவோம். இப்பொழுது தாங்கள் எவ்வித சமாதானங்களைச் சொல்லி யழைத்தாலும் வருவதற்கு எங்களாலாகாதெனக் கூறினர். அதைக் கேட்ட மூவரும் இவர்கள் இறவா நிலையை அடைகிறதா யிருந்தால் அது மிகச் சிறந்ததே. அதனை நாம் தடுக்கலாகாது. அதன் உண்மையை நாம் அறிதல் வேண்டுமென்று கருதினவராய் எனது அருமை மருகரே! இவ்வனத்தில் தாங்கள் அறிந்த பெரியோரை யாங்களுந் தரிசித்து அருள் பெற்றுக்கொண்டு ஊருக்குப் போகலாமென்று நினைக்கிறோம்; என்று சொல்லவும், ஐவரும் மகிழ்ச்சியுடன் அவர்களை அழைத்துக்கொண்டு நந்தீஸ்வரரிடத்துக்கு வந்து அவரைத் தரிசித்தனர். அவரும் மகிழ்ந்து இப்புதியயோர் யாவர்? எனக்கேட்க, அதற்குத் தன்மார்த்தன் இப்பெண்களைப் பெற்றோரும், எங்களுக்கு மாமன்மாரும் ஆவர் என்று வரலாறுனைத்துங் கூறினன் அதனைக் கேட்டு நந்தீஸ்வரர் மகிழ்ச்சிகொண்டு க்ஷேமம் விசாரித்து ஐவருடன் அவர்களையும் பக்கத்திலிருப்பித்து வழக்கபடி இதோபதேசஞ் செய்தனர்.

அப்பால் அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பன்னசாலைக்கு வந்ததன்பின் மங்கள் பூபாலன் முதலிய மூவரும் ஒருவாரு மனந்தேறிச் சீக்கிரமாக வந்து சேருங்களெனக் கூறித் தங்கள் நகருக்குப் பிரயாணமாவதைத்தெரிந்து ஐவரும் சொர்ணலிங்கப் பெருமானை வேண்டி வருவித்த அறுசுவை யுண்டிகளை படைத்து அவர்களை அருத்தி உபசரித்து வணங்கி அன்புடன் வழியனுப்பினர். அவர்களும் பிரயாணமாகி சுந்தரமகாலிங்கம் முதலிய மூர்த்திகளைத் தரிசித்துப் பிரார்த்தித்கொண்டு இராஜேந்திர புரத்துக்குப் போய்ச் சேர்த்து சுவேத மகாராஜன் முதலியோரிடம் சகல சமாசாரங்களையுந் தெரிவித்து அனைவரும் மகிழ்ந்தனர்.

அப்பால் தன்மார்த்தன் முதலான ஐவரும் நந்தீஸ்வரர் ஆச்சிரமத்துக்கு வந்து அவரக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாட்களில் ஒருநாள் ஐவரும் நந்தீஸ்வரரை நோக்கிச் சுவாமீ! நாங்கள் பேரின்ப நிலையையடைய வேண்டுமென்றால் எந்த வழியா லடையலாம்? அதனைக் கூறியருளல் வேண்டுமென்று கேட்க, அதற்கு நந்தீஸ்வராரயினார். ஐவர்களே! நீங்கள் விரும்புகிற பேரின்ப நிலையில் ஜீவகோடிகளை யெல்லாம் வைக்கவேண்டியே சச்சிதானந்தபரம் பொருளாகிய

நம்பெருமான் பஞ்சகிருத்திய முதல்வனாக எழுந்தருளியுளன் - "வேண்டுவார் வேண்டியவெல்லாம்வேண்டியாங் கருள்வோ" னாகிய அவனுடைய திருவுளக்குறிப்பை யறியாத மக்களும் அவரவர் வினையின் அவரவர் வந்துளாராதலின் தத்தம் வினையிருந்தவாறே எவரெவர் எவ்வெத்தொழிலிற் றலை நின்றனரோ! அவ்வத்தொழில்வழி அவரவர் வேண்டியாங்கு இறைவனருளும் இன்பத்தைப் பெற்று மகிழ்கின்றனர். உண்மை அவ்வாறிருப்பவும் "பொறாமை, பேராசை, முனிவு தீச்சொல்" என்னும் நான்கு பாவச்செயல்களை மேற்கொண்டு நிற்கும் மூடர்களுக்கு அவர் எண்ணிய வண்ணம் கைகூடி வராமை பற்றி "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" ஆகிய முழுமுதற் கடவுள் பராமுகமாயினான் என்று சொல்லுதல் கூடாது.

ஏனெனில், அறிஞர் "வேண்ட முழுதுந்தருவோ" னாகிய இறைவன் "வேண்டத்தக்கறிவோ" னுமாயிருத்தலால் அவரவர்க்கு ஆகவேண்டுவதை: அறிவு மயங்கிய மகவுக்கு ஆக வேண்டியதை அன்னை வலிந்து ஊட்டுவது போலூட்டி அவர்களை வாழ்விக்கின்றமையால் என்றறிக. ஆனபடியால் எல்லாவுயிர்களையும் வாழ்விப்பதே கடனாகக்கொண்ட பேரருட் கடலாகிய அறவாழி அந்தணன், அறிவுடைய நீங்கள் விரும்பிய பேரின்ப நிலையில் உங்களை வைத்து வாழ்விப்பானாக: அவன் கடமை அஃதாகவும் இயல்பாகவே உங்களுக்கு வருகிற இன்பதுன்பங்களை உங்கள் வினைவழி இறைவனே ஊட்டுகின்றானென்றறிந்து, நீங்கள் மகிழ்ச்சியுடையவராய் நுகர்தல்வேண்டும். இதுவலிது, இது எளிது, இவர் உறவர் இவர் பகைவர் என்னும் பேதபுத்தியை நீக்கி எல்லா உயிர்களெல்லாம் உயிர்களிடத்தும் நீங்கள் அருளுடையவராய் இருத்தல் வேண்டும். உயிர்களெல்லாம் கடவுளுடைய அடிமைகள், அவ்வுயிர்களில் வைத்தெண்ணப்படும் நீங்கள், ஐவரும் உங்களால் இயன்றவரை பிறஉயிர்களுக்கு இரக்கங்காட்டி வருவீர்களாகில் அது ஆத்மநாதனாகிய கடவுளுக்கு உகப்பானதாயிருக்கும். அப்பொழுது உங்களை முதல்வராகக் கொண்டு எல்லா உயிர்களும் உங்களை நேசிக்கும்படி நம் பசுபதியே செய்வன்.

அத்தகைய நற்கேண்மை கைவந்த உங்களுக்குப் பிறர்செய்யும் நன்மையையும், தீமையையும் இறைவன் தானே ஏற்றுக்கொண்டு அவர்களை நல்வழிப்படுத்துவன். ஆகவே உங்களுக்கு உலகத்தில் இன்பமுமில்லை. துன்பமுமில்லை. எங்கும் எவற்றினும் நிறைந்து நின்று சகலத்தையு மெடுத்துச் சுமப்பானாயிருக்கும் நம்பனது திருவருட்டாயின் கைப்பிள்ளைகளாக நீங்கள் இருந்து வருதல் வேண்டும். இந்நிலைமையில் இறைவனை மறவாது சதா சித்தத்தைச்சிவன் பால் வைத்தவர்களாயிருக்க வேண்டிய உங்கள் கடமையை நீங்கள் கைவிடாதீர்கள். இப்பொழுதே "தாமே தரும்" இறைவன் உங்களை ஏற்றுகொண்டுபேரின்ப நிலையில் வைத்திருப்பதை நீங்கள் அறிந்து அனுபவிக்கும் ஜீவன் முக்தராவீர்கள். இந்த நிலைமை வருவதற்கு உதவியாகச் சிலகற்பமூலிகை களைப்புசித்துத் தேகத்தைச் சித்திசெய்து கொள்ளவேண்டுவது அவசியம். ஆகையால் அவற்றையும் கூறுவோம் கேட்பீர்களாக.

இவ்வனத்திக்கு மேற்றிசையில் அரைநாழிகை வழித்தூரத்தில் மண்திட்டு ஒன்றிருக்கிறது. அவ்விடத்தில் கனையெருமை விருக்ஷமென்றொரு மரமுண்டு. அது

இலுப்பைமரம் போலும் இருக்கும். அதன் காய் உருண்டையாக இருக்கும். அம்மரத்தினடியில் ஆட்கள் போய் நின்றால் அம்மரம் எருமைபோற்கனைக்கும். அம்மரத்தைக் குத்தினால் பால்வரும். அந்தப் பாலைக் கொண்டுவந்து தேனிற்குழப்பிக் காசெடை சாப்பிட நாலுநாள் வரை மூர்ச்சையாகும். அம்மூர்ச்சை தெளியும் வரை கிட்டவிருந்து ஆவின்பால் ஒருநாழிகைக் கொருகரண்டி வீதம் கொடுத்துவர அம்மூர்ச்சை தெளியும். நரைதிரை மாறும். காயசித்தியாகும். இதைத்தவிர இன்னும் ஒரு முறை உண்டு. அதாவது அந்தக் கனை யெருமை விருக்ஷமிருக்கிற இடத்திற்கு வடக்கே அம்பிடு தூரத்தில் பவளத் துத்தி என்னும் ஒரு செடியுண்டு அது துத்திச்செடி போலவும். அதன் இலைறுணியிற் சுற்றிலும் சிவப்பு நிறமாகவும், தண்டுகாம்பு இலைகள் சிவப்பாகவும், புஷ்பம் பவளநிறமாகவும் இருக்கும். அந்த இலையைச் சூரணித்து வெருகடிப் பிரமாணம் ஆவின் நெய்யிற் குழப்பி ஒருவாரஞ் சாப்பிடத்தேக சித்தியாகும். ஆகையால் நீங்கள் இக்கற்பங்களைப் புசித்துத் தேகத்தைக் காயசித்தி செய்துகொள்ளுங்கள்; என்று கூறியருள, அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் நந்தீஸ்வரரது சொற்படி காயகற்பங்களைப் புசித்துக்கொண்டு வரும்பொழுது ஒருநாள் ருஷீஸ்வரர் தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி ஐவர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் ஒரு வருடகாலமிருப்பதாக முன்பு இவ்விடத்துக்கு வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள்வரை ஒருவருடகாலஞ் சரியாய் விட்டது. ஆகையால் இனிமேல் நீங்கள் இவ்வனத்திற்கு அடுத்த தன்வந்திரி முனிவர் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்களென்று திருவாய் மலர்ந்தருளித் தம்பக்கத்திலிருந்த சீடர்களில் ஒருவனை அழைத்து இவர்களைவரையும் கூட்டிச்சென்று தன்வந்திரி முனிவரிடத்தில் வீட்டுவருவாயென்று உத்தரவு கொடுக்க; அவ்வுத்தரவின்படி சீடனும், தன்மார்த்தன் முதலான ஐவரும் நந்தீஸ்வரரை வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள். என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும் நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! நந்தீஸ்வரர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் உண்மை ஞானோபதேசங்களையும், கற்பங்களையுங்கேட்டு நாங்கள் ஞானசித்தி யுடையவர்களாயினோம். இனியந்தத் தன்வந்திரி முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் அருளிச்செய்ய வேண்டுமெனச் சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

இருபத்திரண்டாவது,
நந்தீஸ்வரர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்து மூன்றாவது

தன்வந்திரி முனிவர் சருக்கம்.

பத்தாவது வனம்.

சாருஞ் சதுகிரிதனிலே தன்வந்திரியின் வனம்புகுந்தின்
பாருங்கருத்திற் றன்மார்த்த னாதி நால்வர் சென்றதுவும்
வாரும் வனச மகாமன்னன் மாணாம் ருஷியைக்கொன்றெழுப்பிக்
கூருந் தெளிவை யுறச்செய்து கொண்ட கதையுங் கூறிடுவாம்.

கேளுங்கள் முனிவர்களே! பிரம முனிவர் சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும், கீழ்த்திசையை நோக்கிப் பிரயாணமாகி வெள்ளைப் பிள்ளையார் கானலுட்சென்று ஆங்குத் திருக்கோயில் கொண்டெழுந் தருளியுருக்கும் மகா கணபதியையுங் அக்கோவிலுக்கு வடபக்கத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானையுங் கண்டு அன்பொடு வணங்கி அகங்குளிரப் பல பாக்களினாற் புகழ்ந்து பாடி இன்பக் கூத்தாடி அவரது அருள்பெற்றுக்கொண்டு, சுற்றுவெளியும் சதம்பும் சோதிப்புல்லும் நிறைந்த இடத்தையும் விருக்ஷங்க ளடர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கின்றவனங்களையும், சளசளவென்ற சத்தத்துடன் ஓடுகிற வரையாறுகளையுங் கடந்து அப்பால் போகிறபோது தன்மார்த்தன் முதலியோர் சுவாமீ! இப்பக்கத்தில் சங்கு சேகண்டி முழக்கங்களும், ஸ்ரீமந் நாராயணா என்ற தொனியும் கேட்கின்றனவே! இங்கு என்ன விசேடம் நடக்கிறது? என்ற கேட்க, அதற்கு நந்தீஸ்வரர் சீடன் ஐவர்களே! இதோ தெரிகிற வனமாகிய விஷ்ணுலோகக்கானலில் ஸ்ரீமந் நாராயணனும், இலக்குமி தேவியும் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிற படியால் அங்கே அநேக தவருஷிகளும் புண்ணியாத்மாக்களும் வந்து பூசித்துப் போற்றுகிற சத்தமாம் இஃதென்று தெரிவித்து அவர்களை அவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று அவர்களை செய்வித்து மகாத்மாக்களின் ஆசிபெறுவித்தனன். அப்புரம் அனைவரும் அவ்விடத்தை விட்ட கன்று சில தூரஞ் சென்று ஒருநற்கொன்று மாறு கொண்டு நீண்டு வளர்ந்த பல விருக்ஷங்கள் நிறைந்து விளங்குகின்ற தன்வந்திரி வனத்திற்குச் சென்று ஆங்குத்தம் ஆச்சிரமத்தின் கண் வீற்றிருந்த தன்வந்திரி முனிவரைக் கண்டு அன்புற வணங்கி நின்றார்கள். அவர்களைக் கண்டவுடனே முனிவர் அவர்களுக்கு ஆசிவசனங்கூறி அவர்களை யழைத்து வந்த நந்தீஸ்வரர் சீடனால் தன்மார்த்தன் முதலான ஐவருடைய சமாசாரங்கள்யாவுந் தெரிந்து கொண்டு அச்சீடனை வழியனுப்பிய பின்னர் ஐவர்களையும் அங்கு வீற்றிருக்கும் படிச் செய்து தன்மார்த்தன்

முதலான ஐவர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் எவ்வளவு நாட்டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷயம் உங்களுக்குத் தெரிய வேண்டும்? அதைத் தெரிவிப்பீர்களெனக் கேட்டனர்.

அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடும் சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருட காலமிருந்து ஞானோப தேசங்களையும், காயாதி கற்பங்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளும் பொருட்டு வந்தோமென்று புகன்றனர். அதைக்கேட்ட தன்வந்திரி முனிவர், அப்படியானால் நீங்கள் இவ்விடத்துக்கு மேற்குப் பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்ன சாலையமைத்து அதில் வாசஞ் செய்து வருவீர்களென்று உத்தரவு கொடுத்தருளினார். அவ்வுத்தரவின்படி குறித்த இடத்தில் ஐவரும் ஐந்தடுக்குப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்துகொண்டு தினந்தோறும் முனிவரிடம் சென்று ஞானனுபவங்களின் உபதேசங்களைக் கேட்டு மகிழ்வராயிருந்தனர். அப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் ஐவரும், வைகுண்டக் கானலின் வினோத வேடிக்கைகளைக் கண்ணுற்ற உலாவி வரும் போது பின்னால் வருகிற சூரசேனன்னென்பவன் அரிசந்தனம், பாரிசாதம் கற்பகம் முதலிய பல அழகிய விருக்ஷங்களும் புஷ்பித்திருப்பதைக் கண்டு வியப்படைந்து இவ்வரிய மலர்கள் சிவபூசைக்காகுமென நினைத்து அம்மலர்களிற் சிலவற்றைக் கொய்தெடுத்துக் கொண்டு வர அதைக் கண்ட வனகாவலர்களாகிய துவாரபாலகர் உற்று நோக்கி இவன் யாரோ தெரியவில்லை, நம் பெருமானுக்கு கந்த மலர்களை அஞ்சாமல் கொய்து கொண்டு போகிற இவன் தவவேடம்புனைந்தவனாகவும் காணப்படுகிறான். ஒரு அரசகுமாரன் போலவுமிருக்கிறான். அத்தகைய இவன் இங்கே எதற்காக வந்தான்? எங்கே தாமசித்திருக்கிறான்? என்பதை யறிவோமென்று கருதி சூரசேனனைப் பின்பற்றிச் சென்றார்கள். அதற்குள் சூரசேனன் தன்மார்த்தன் முதலான நால்வரோடு கூடி முனிவருடைய ஆச்சிரமத்துக்கு வந்து சேர்ந்தனன். அவனைப் பின் பற்றிச் சென்ற துவார பாலகரும் தன் வந்திரி முனிவர் ஆசிரமத்தில் வந்து சூரசேனனைப் பார்த்து அப்பா நீ யார்? எங்களுடைய வனத்தில் உத்தரவில்லாமல் துணிந்து புகுந்து புஷ்பங்களை ஏன் கொய்து ஒடி வந்தனை? என்று முனிவுடன் கேட்டார்கள். அவர்களுடைய முனிவுரையைப் பொறுக்கலாற்றாதவனாகிய சூரசேனன் காவலர்களே வனமலர் கொய்தற்கும், வரையாற்று நீர் முகத்திற்கும் உங்களுத்தரவு வேண்டுமோ? நான் பூக்கொய்து திரும்புமளவும் நீங்களுறங்கிடந்தீர்களோ? இன்று வரை எதிர்த்தோரைப் புறங்காட்டி ஓட அடிக்கும் என்னை ஒடிவந்தனை யென்று பொய் கூறிய உங்களுக்கு அறிவுவரச் செய்கிறேன் பாருங்களென்று வில்லை எடுத்து நாணேற்றுவதை யறிந்த தன்வந்திரி முனிவர் தமது ஆச்சிரமத்தைவிட்டு எழுந்து அப்பா! பொறு பொறு என்று சொல்லிக் கொண்டு விரைந்து வந்தனர்.

அச்சமயத்தில் ஆயுதத்தை எடுக்கத் தொடங்கிய துவார பாலகரை தன்வந்திரி முனிவர் பார்த்து வீரர்களே! ஆறுதலடைவீர்களாக. இச்சூரசேனன் மகா உத்தமன். அவன் சிவபூசைக்காக மலர்க்கொய்துக் கொண்டு வந்தனன். அதனையறியாமல் சிவநேசச் செல்வர்களாகிய நீங்கள் அவன் பால் கலாம் விளைவிப்பது கூடாது என்று பல பல நியாயங்களைச் சொல்லி அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டனர்.

அப்பால் சூரசேனனையும் தன்மார்த்தன் முதலிய நாள்வரையும் முனிவர் பார்த்து அன்பர்களே! இவ்விருவரும் மிகுந்த பராக்கிரமசாலிகள்! அதிலுமுத்தமார்கள். இவர்களிடத்தி சூரசேனன் எதிர்க்கத் துணிந்தது நியாயமாயிருந்தாலும் தவக்கோலத்துடனிருக்கும் இப்பொழுது அது கூடாது. இருக்கட்டும். இவ்வனத்தில் எதுவும் ஆறுதலுடன் ஆராய்ந்து செய்தல் வேண்டும். அப்படிச் செய்யாமல் பூர்வத்தில் அயமகாராஜனுடைய குமாரனாகிய வனசமகாராஜன் பெருங்கவலைக்கு ஆளாகினான், என்று கூறி அதனைக் கேட்ட தன்மார்த்தன் தன்வந்திரி முனிவரை நோக்கி தாங்கள் கூறிய வனசமகாராஜன் சரித்திரத்தை யாங்கள் அறிய அவாவுடையவர்களாக இருக்கிறோம். அதனைக் கூறியருள வேண்டுமென்று கேட்க, அவர் சொல்லுவராயினர். ஐவர்களே! முற்காலத்தில் மாயா புரியென்னும் நகரை அரசாண்டுவந்த அயனென்றொரு அரசனிருந்தான். அவன் குமாரன் வனசமகாராசன் தன்குடிகள் பொருட்டு வேட்டமாடுதற்கு வேடுவர்களுடன் காட்டிற் சென்று கோரவிலங்கினங்களை யெல்லாங் கொன்று பின்னு மேதேனும் மிருகங்கள்வருகின்றனவா என்று நான்கு திசையினும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனன். அப்பொழுது ஆங்கு ஒரு மகருஷியானவர் மான்றோலொன்றைப் போர்த்துக்கொண்டு தவநிட்டையிலிருப்பதை அரசன்கண்டு ஒரு மானெனநினைத்து தன்கரத்திலிருக்கிற வில்லைநாணேற்றி ஓர் கணையை விடுத்தனன். அக்கணையானது அம்மகருஷியின் சரீரத்திற்றாக்கி ஊடுருவிச் சென்றது.

அவர் அப்பாணத்தின் வேதனை சகிக்கமாட்டாமல் துடிதுடித்துப் பூமியிற்சாய்ந்து நாராயணா! நாராயணா! வென்று ஓலமிட்டு உயிர் துறந்தார். அத்தொனியைக் காதிற் கேட்ட வனசமகாராஜன் இஃதென்ன மானிடர் சத்தம்போலிருக்கிறதே! யென்று நினைத்து நெஞ்சத்திடுக்கிட்டு அவ்விடத்திற்சென்று உயிர் துறந்து கீழ் வீழ்ந்து கிடக்கிற மகருஷியைப் பார்த்து மிகுந்த வருத்தமுற்று அழுதுபுலம்பி அந்தோ! நான் கொலையாகிய பழிக்கு ஆளாகினேனே! இனியென்ன செய்வேன்! என்று பலவாறு துக்கித்தும் பின்னொருவாறு மனந்தேறி வேடர் முதலானவர்களோடு திரும்பி நகரத்துக்குப் போய்ச் சேர்ந்து ஆரணியத்தில் நடந்த விஷயங்களைச் சிறிய தந்தையிடத்தில் தெரிவித்து இவ்வாழ்க்கையை வெறுத்து வனத்தைநாடித் தவஞானத்தை யடையப் போகிறேனென்று கூறினன்.

அதுகேட்ட சிறிய தந்தை அப்பா! யானும் உன்னோடு வருகிறனென்று சொல்லச் சரியென ஒப்புக் கொண்டபின் அவ்விருவரும் மந்திரிகளிடத்தில் இராச்சியத்தை ஒப்புவித்துப் பிரயாணமாகி பிரமருஷி வனதுக்குச்சென்று அவ்விடத்திற்றவ நிட்டையி லிருந்த தக்க ரென்ற பிரமருஷியைக் கண்டு வணங்கியபின் வனசம காராஜன், தான்முன்பு வேட்டைக்குச் சென்ற பொழுது ஆங்கு மானென்று நினைத்து ஓர் மகருஷியைக்கொன்ற செய்தியை அவரிடத்தில் முறையிட்டு அழுது பரிதபித்தனன்.

அவற்றைக் கேட்ட அந்த பிரமருஷி சந்தோஷ வார்த்தைகளால் அவர்களுடைய மனவருத்தத்தை மாற்றத் தன்னுடைய புத்திரர் சாந்த மகருஷியை யழைத்துச் சொல்லுவார் மைந்தனே! இவர்களை யழைத்து கொண்டுபோய் இவர்கள்காண்பிக்கிற பிரதேசத்தின் மேல் இந்தத் தீர்த்தத்தைப் புரோஷித்து ஜீவோற்பத்தி மந்திரத்தைச்

செபித்து மகருஷியை எழுப்பி அவர் இவர்களைக் கோபியாதிருக்கும்படிச் சென்ற வரக்கடவாயென்று என்று கூறி அனுப்பினர்.

அந்தச் சாந்த மகாருஷி அப்படியே நல்லதென்று விடைபெற்று அவ்விருவரையுங் கூட்டிச்சென்று அவர்கள் காண்பித்த ருஷிப்பிரதேசத்தின்மேல் தன் தந்தை சொற்படி கொண்டு வந்த தீர்த்தத்தைப் புரோக்ஷித்து மந்திரத்தைச் செபித்தவுடனே உயிர்நீங்கிப் பிரேதமாகக் கிடந்த அந்த மகருஷி உயிர்பெற்று எழுந்திருந்தனர். உடனே அரசன் அந்த மகருஷியின் பதமலர்களை நமஸ்கரித்து நடந்த விஷயங்களையெல்லாம் தெரிவித்து அடியேன் செய்த பிழையை மன்னித்தருள வேண்டுமென வேண்டிக்கேட்க, அம்மகருஷி அரசனே! நமக்கு நேர்ந்ததாகிய "இறந்து உயிர்த்தெழுதல்" என்னும் இப்புதிய பிறப்பு பூர்வ கர்மத்தால் வந்ததேயாகும். உன்மீது யாதொரு குற்றமுமில்லை. ஆகையால் நீ உன்னுடைய நகரத்துக்குப்போய்ச் சேருவாயெனக் கூறிப் பலமுறையும் அவனை வாழ்த்திப் பின்னுந்தவ ஞான நிட்டையிலிருந்தனர். அப்பால் அம்மூவரும் தக்க மகருஷி யிடத்திற்சென்று நடந்த சமாச்சாரங்களை யெல்லாந் தெரிவித்தனர். அவர் கேட்டுச் சந்தோஷித்து அரசனை யவனிருப்பிடத்துக்குச் செல்லும்படி யுத்தரவு செய்தனர். அவருத்தரவைப் பெற்று அரசன் தன்னுடைய நகரத்துக்குப் போய்ச் சுகமாக வாழ்ந்து வந்தான். ஆகையால் எந்தக் காரியத்தையுங் கவனித்துச் செய்தல் நலமென்று கூறியதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் வணங்கி விடைபெற்று தங்கள் பன்னசாலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மற்றொருநாள் சூரசேனன், தன்மார்த்தன் முதலானயைவருத்தரவின் பிரகாரம், வழக்கம்போற் காய்கனி பறித்து வருதற்கு அவ்வனத்தைக் கடந்து சன்னியாசி வனமென்ற பிரமருஷி வனத்தின் வழியே செல்லும் போது ஆங்கோரிடத்தில் பூவும், பிஞ்சும், காயும், வாசனை மிகுந்த பழமும் நிறைப்பெற்று விளங்குகின்ற ஓர் மாமரத்தைக் கண்டு பிரியமுற்று அப்பழங்களைப்பறிப்பதற்கு நினைத்து விருக்ஷத்தின்மே லேறுந்தருணத்தில் அவ்வனத்திற் சஞ்சரிக்கின்ற நாட்டிற் காணப் பெறாத பட்சிவர்க்கங்களைச் சார்ந்த பறவைப் பாம்பொன்று விரைவாகப் பறந்துவந்து அதன் சிறகினால் கனிபறித்துக் கொண்டிருக்கிற சூரசேனன், தேகத்தில் மோதிப் பக்கத்திலிருந்த நாவல்மரத்தின் லொட்டிக் கொண்டது.

அதைக்கண்ட சூரசேனன் நம்மேல் மோதிச்சென்ற பறவையானது எப்பறவையெனத் தெரியவில்லையே! அதை நாம் நன்கறியவேண்டும் என்று நினைத்துக் கனிகளைப் பறித்து மரத்தைவிட்டுக் கீழிறங்கி நாவல் மரத்தின் கிளையி லொட்டிக்கொண்டிருக்கிற அப்பறவையையுற்று நோக்கி, ஆ! ஆ! இஃதென்ன புதுமை? பார்வைக்குப் பாம்புபோலும் உடலி னிருபுறத்தினுஞ் சிறகு போலமைந்த தோலிரண்டுந் தெரிகின்றன. இத்தோலுதவியைக் கொண்டுதான் பறக்கிறதுபோலும், ஈசுவரசிருட்டுயிலிவ்வித ஜீவஜெந்து முளதோ? எனக்கூறி மிகுத்த ஆச்சரியத்தை யடைந்தவனாகி இச்செய்தியை முனிவரிடத்திற் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டு மொன்றெண்ணி அவ்விடத்தை விட்டகன்று பன்னசாலைக்குப் போய்ச்சேர்ந்து காய்கனிகளை நால்வர்க்கு கொடுத்துத்தானும் புசித்தனன். அப்பால் ஐவரும் முனிவரது

ஆசிரமத்துக்குச் சென்று அவரை வணங்கி ஆசிவசனம் பெற்று வீற்றிருந்தனர். அப்போது சூரசேனன் முனிவரிடத்தில் தான் கனி பறிக்கச்சென்ற வனத்திற்கண்ட பறவையி னதிசயத்தைத் தெரிவித்து அஃதென்னவென்று கேட்கவும், முனிவர் அப்பா! இது பறவைப் பாம்பென்று கூற, அதற்குச் சூரசேனன் சுவாமீ! பறவைப் பாம்பென்றால் நீண்ட காலங்களாகச் சீவித்திருப்பதனா லுடல்குறுகிப் பறக்குமென்றும் கண்டத்திற் சீவரத்தினம், நாகரத்தின மிருக்குமென்றும் அப்பாம்பு ஆயுள் முடிந்தவர்களைத்தான் தீண்டுமென்றும், அதன் விஷம் மீளாதென்றும், கேள்வியுற்றிருக்கிறேன்.

ஆகையால் அப்பாம்பு இதுதானா? எனக்கேட்க, அதற்கு முனிவர் அப்பா சூரசேனா! நீ சொல்லக்கூடிய பாம்பு ஈதல்ல. இது வேறு. இஃதல்லாமலும், நீ கனிபறித்த தானமாகிய சன்னியாசி வனத்திலெழுந்தருளியிருக்கிற மகத்துவமிகுந்த பிரம முனிவரது தவமகிமையால் அவ்வனத்திற் செனிக்கிற ஜீவஜெந்துக்களாகிய பாம்பு, கீரி, பூனை, ஓந்தி, அரணை, பல்லி முதலானவைகளெல்லாம் சிறகு முளைத்துப் பறந்துகொண்டிருக்கும், என்று கூறியதைக் கேட்ட ஐவரும் மிகுந்த மனமகிழ்ச்சி யடைந்தவர்களாய் மீண்டும் முனிவரை நோக்கிச் சுவாமீ! சாலோக சாமீப சாருப சாயுச்சியமென நான்கு பதவி யிருக்கின்றனவே. அவற்றின் விவரத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க, அதற்கு முனிவர் ஐவர்களே! நீங்கள் கூறிய அந்நான்கு பதவிகளில்,

சாலோ பதவியாவது, - ஆதிமத்தியாந்த ரசிதனாகிய முழு முதற்கடவுள் சிருட்டித்த இவ்வுலகில் நீதிநெறி முறை வழுவாது அப்பாற் சிவலோகத்திற் போயிருப்பது. சாமீப பதவியாவது, - சிவபெருமானை வேதசிவாகம முறைப்படிபூசித்து, அவர்தரிசனைப் பெற்றுப்போய் அவருடைய சமீபத்திற் கயிலாசத்திலிருப்பது, சாருப பதவியாவது, - காமக்குரோதாதி குணங்களை நீக்கிச் சத்துவ குணத்தையடைந்து சிவபுண்ணிய மேலீட்டினால் சிவபெருமானுடைய உருவத்தைப்பெற்றுக் கயிலாசத்திலிருப்பது. சாயுச்சிய பதவியாவது, - ஆத்ம விசாரணை செய்து துவித பாவணையை நீக்கி பரப்பிரமமாகிய சிவத்தோ டிரண்டறக் கூடி அதுதானாகவும் தானதுவாகவும் நிற்பது.

இந்நான்கு பதவிகளென்று பேசப்படினும் முன்னைய மூன்றுமே பதவிமுத்திகள். இறுதியிலுள்ள சாயுச்சியமென்பது பரமுத்தியேயாம். இவைமுறையே சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு படிகளில் சற்குருவினால் வைக்கப்பட்டு நெறியே நிற்கும் அறிஞர் பெறும் பேறுகளாம். ஆகையால் நீங்கள் அந்தச் சாயுச்சிய பதவி யடைய வேண்டுமென்றால் முதலிற் பலகற்பமூலிகைகளைப் புசித்து காயத்தைச் சித்திசெய்து கொள்ளவேண்டியது அவசியம். ஆதலால் எனக்குத் தெரிந்த காயகற்ப முறைகளிற் சிலவற்றைக் கூறுகிறேன் கேட்பீர்களாக.

அதாவது, ஸ்ரீ சுந்தர மகாலிங்கர் சன்னதிக்குத் தென்பக்கத்தில் காலாங்கி முனிவர் வனத்தின்கண் உதிரவேங்கை விருக்ஷமென்றொரு மரமுண்டு. அது வேங்கை மரம்போலும் தூர்கறுப்பாக இருக்கும். அவ்விருக்ஷத்தின் தூரில் ஒரு கற்கொண்டு தட்டினால் இரத்தம்போல் பால் பீறிட்டுவரும். அப்பாலைக் கொண்டு வந்து

உலோகங்களுக்குச் சுருக்கிட அவ்வுலோகங்கள் பேதிக்கும். அந்த உலோகங்களை மேற்படி பாலிலுருக்கி இருபதுதரம் சாய்க்கப்பழுக்கும். அப்படிப்பழுத்த தங்கத்தைச் செந்தூரமாக்கிக் காலைமாலை ஒருமண்டலம்வரை ஆவின்நெய்யிற் குழப்பிப் புசித்து வரக் காயசித்தியாகும்.

இதைத்தவிர இன்னுமொரு முறையுண்டு. அஃதென்னவெனில், அந்த உதிரவேங்கை விருக்ஷமிருக்கிற இடத்திற்குப் பக்கத்தில் பொற்றலைக்கரிப்பான் என்றொரு செடியுண்டு. அதன் காய் மிளகு போலிருக்கும். இலையைக் கசக்கினால் கரங்களில் எரிவெடுக்கும். அதன்சாற்றைப் பாஷாணங்களிற் சேர்த்து அரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். அந்தச் செந்தூரத்தை ஒரு வாரஞ் சாப்பிடக் காயசித்தியாகும்.

ஆகையால் நீங்கள் இக்கற்பங்களைப் புசித்துக் காயசித்தி செய்து கொள்ளுங்கள்; என்று கூறியருள அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் முனிவர் சொற்படி காயகற்பங்களைப் புசித்துக்கொண்டு வரும்பொழுது ஒருநாள் முனீஸ்வரர் தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி ஐவர்களே! நீங்கள் நம்முடைய வனத்திலொருவருடகால மிருப்பதாக முன்பு இவ்விடத்துக்கு வந்தவுடன் தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள்வரை ஒருவருடகாலஞ் சரியாய்விட்டது. ஆகையால், இனிமேல் நீங்கள் இவ்வனத்திற் கடுத்த குருராஜருஷி ஆச்சிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக்கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளித் தம் பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை நோக்கி இவர்க ளைவரையும் அழைத்துச் சென்று திருமூலர் சீடராகிய குருராஜ ருஷியிடத்தில் விடுத்து வருவாயென்று உத்தரவுசெய்ய அவ்வுத்தரவின்படி சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும் தன்வந்திரி மகாமுனிவரை அன்புறவணங்கி விடை பெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும் சௌனகாதி முனிவர்கள் சுவாமி! தன்வந்திரி மகாமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் வேதாந்த ஞானோப தேசங்களையும் காயகற்ப முறைகளையுங் கேட்டு அழிவிலா ஆனந்தத்தை யடைந்தோம். ஆனாலும் இதில் இம்மலைக்கு வேட்டையாடவந்த வசை மகாராஜன் கதை நன்றாயிருக்கிறது. அவன் வேட்டைப் பிரியனாகிப் பலவுயிர்களையுங் கொன்றவனன்றோ? அவனுக்கு அக்கொலையால் பாவமுண்டா? யில்லையா? என்பதைத் தெரிய நாங்கள் அவாவுகின்றோம்; அதைச் சொல்லியருளல் வேண்டும் எனக் கேட்க, அக்கேள்வியில் மகிழ்ந்த முனிவர் அன்பர்களே! வேட்டையாடுதல் அரசதருமத்தில் ஒன்றாம். அதாவது பன்றி முதலிய அறிவிலாத துட்ட விலங்குகள் நாட்டினுள்ளிறங்கிப் பயிர்களை அழிக்கத் தொடங்கும் காலத்தில் நாடு காவலனாகிய அரசன் தனது கடமையாகிய வேட்டையாடுதலைச் செய்யாது விடின் குடிகள் கதி என்னவாம்? தம் உணவுக்காக மெய் வருந்த முயன்று விளைவிக்கும் பயிர்களை விலங்குகள் அழித்துவிடின் குடிகள் பட்டினி கிடந்து இறக்கவன்றோ நேரிடும்! ஆதலால் குடிகளை பாதுகாத்தற்பொருட்டு துட்ட விலங்குகளை ஒதுக்கி, அவற்றை யிருக்குத்தானத்தி லிருப்பிக்கும் பொருட் டு ஆடுதலே வேட்டையாம். அவ்வேட்டையில் எதிர்க்கும் மிருகங்களும், பரிசனங்களுக்கு ஆபத்தைச் செய்யக்கூடிய மிருகங்களும், அரசனால் கொல்லப்படும். அக்கொலைக்காக அவன் பிராயசித்தஞ் செய்துகொள்வதும்

வழக்கம். ஆதலால் அரசனுக்குப் பாவமில்லை. துஷ்டநிக்ரகமேசிஷ்ட பரிபாலனமாதலறிக, இவ்வேட்டையில் கொல்லப்பட்ட விலங்குகளை வேடர்களே உண்ணுவார்கள். தமிழ்நாட்டில் அரசர் வேட்டையாடுதல் என்பதற்கு இதுவே பொருளாம் என்றனர். அதனைக் கேட்ட நாகார்சுனாதியர் மனமகிழ்ந்து இனி, குருராஜருஷி ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் ஞானகற்பமுறைகளையும் கூறியருள வேண்டுமென்று கேட்க, சாணாங்கிமுனிவர் சொல்வாராயினர்.

இருபத்துமூன்றாவது,
தன்வந்திரி மகாமுனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

இருபத்து நான்காவது

குருராஜருஷி சருக்கம்,

பதினொன்றாவது வனம்

நான்முகன் முதலோர் போற்றும் நாலுமா மலையி லன்பார்
கேன்மகா ரைவர் வந்து குலவுறு குருரா சன்பால்
மேன்மைசால் மார்க்கண்டேயன் வியன்கதை கேட்டுக் கற்பம்
பான்மையிற் பெற்ற பன்பும் பகருவேம் பாரில் மாதோ!

கேளுங்கள் முனிவர்களே! தன்வந்திரி முனிவரது சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும் கீழ்த்திசை நோக்கிப் பிரயாணமாகி மகருஷிகள் வாசஞ் செய்தவாதமேடையும் பெரிய சதம்பையும் மண்திட்டையும் புலி கரடி முதலிய பல துட்ட மிருகங்கள் சஞ்சரிக்கின்ற மலைகளையும் வனங்களையுங் கடந்து நறுமணங்கமழும் புட் செடிகள் சில்லென்று பூத்து நிறைந்து நிற்க வாசனை கமகமவெனக் கமழுஞ்சோலைகள் சூழ்ந்த குருராஜ முனிவர் வனத்தினுள் நுழைந்து ஆங்கு அவரது ஆச்சிரமத்திற்குட் சென்று ஆங்கு வீற்றிருந்த திருமூலர் சிடரான குருராஜ ருஷியைக் கண்டு நமஸ்கரித்து நின்றனர். அவர் ஐவர்களுக்கும் ஆசிவசனங் கூறித் தன்வந்திரி மகாமுனிவர் சீடனால் தன்மார்த்தன் முதலிய ஐவருடைய செய்திகளை எல்லாந் தெரிந்து கொண்டு அச்சீடனை வழியனுப்பிய பின்பு அவர்களைத் தம் பக்கத்திலிருக்கச் செய்தனர். அச்சமயம் திருமூலர் ஆசிரமத்தில் அடுத்த ஸ்தானத்தில் ஆசிரியர் எதிரேயிருக்கும் மாணாக்கர்களுக்கு உபதேசஞ் செய்து கொண்டிருக்குஞ் சமயமாயிருந்தது. உயர்ந்த முதலிடத்தில் ஒருவருமில்லாம லிருப்பதையும், ஆங்குள்ளாருடைய முகமெல்லாம் வாட்டமுற்றிருப்பதையும் ஐவருங் கண்டு ஒருவர் முகத்தை யொருவர்பார்த்து ஆலோசனையையுடையவராய் இருக்கையில், குணமதியம்மாள் முகம் ஒளிகுன்றிப் போயலுடன் கண்களினின்றும் நீர்ததும்பலும் உண்டாயிற்று.

இந்நிலைமையில் குருராஜருஷி உபதேசத்தை நிறுத்திவிட்டு ஐவர்களையும் நோக்கி அன்பர்களே! இவ்வாசிரமாதிபதியாகிய திருமூலமகாருஷி யானவர் சில வருடங்களுக்கு முன் ஏதோ காரியமாக வெளியேறினவர் இன்னும் வரவில்லை அவர் வராமையால் நாங்கள் கவலைக் கடலில் மூழ்கிக் கிடக்கிறோம். இங்கு வந்த நீங்கள் இவ்வாசிரமாதிபதி யில்லாமையை நோக்கி ஆலோசனை செய்வதாக நான் அறிகிறேன் அது தானோ? அல்லது வேறே யோசனை கொண்டீர்களோ? என்று கேட்க,

தன்மார்த்தன் முனிவரை நோக்கி சுவாமீ! அதைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்களெங்கே போனார்கள்? அது விவரத்தைத் தெரிவித்தல் வேண்டுமென்றுக் கேட்டனன்.

அதற்கு முனிவர் தன்மார்த்தன்! எனது ஆசிரியராகிய திருமூலமகரிஷி பர்காயப்பிரவேசஞ் செய்ய வல்லவராயலின் தம்முடைய திருமேனியை என்னிடத்தில் ஒப்புவித்து விட்டு வேறொரு சரீரத்திற் பிரவேசிக்கச் சென்றார். நெடுநாள் அவர் வராதிருந்தமையால் ஒருநாள் நான் அவரைத் தேடிச் சென்றேன். அக்காலத்தில் இம்மாணாக்கர்களும் அவரைத் தேடிப் பலதிக்குகளுக்குஞ் சென்றிருந்தார்கள். அச்சமயத்தில் இவ்விடத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த மகருஷீ தேகத்தை உளவறிந்த யாரோ எடுத்துத்தகனஞ் செய்து விட்டார்கள். ஆதலால் அவர் வந்தால் நாங்கள் என்ன பதில் சொல்லுகிறது என்ற கவலையை யுடையவர்களாயிருக்கிறோம். உலக முழுவதுந் தேடிப் பார்த்ததில் எங்கள் பார்வையில் அவர் அகப்பட்டிலர் என்று சொல்லியதைக் கேட்ட தன்மார்த்தன் சுவாமீ! தங்களுடைய திருநாமம் என்ன என்று கேட்டனன். அதற்கு முனிவர் என்னைக் குருராஜர் என்றழைப்பார்: என்று கூறிவிட்டு அப்பால் நீங்களிவ்வனத்தில் எத்தனைநாட் டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? என்னால் உங்களுக்கு ஆகவேண்டியது என்ன? என்று கேட்க, தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருட காலமிருந்து ஞானோபதேசங்களையும் காயாதி கற்பங்களையுங் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப் புகல, அதைக் கேட்ட குருராஜருஷீஸ்வரர் அப்படியானால் நீங்கள் வாசஞ்செய்வதற்கு இதன் வட பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனிப் பன்னசாலையமைத்து அதில் வாசஞ்செய்து வருவீர்களென்று உத்தரவு கொடுத்தார். உடனே ஐவரும் ருஷீஸ்வரர் சொற்படி ஐந்தடுக்குப் பன்ன சாலையமைத்து அதில் வாசஞ்செய்து கொண்டு தினந்தோறும் குருராஜ முனிவரிடத்தில் உபதேசங்களைக் கேட்டு கொண்டு வந்தார்கள்.

இவ்வண்ணம் நிகழும் நாட்களில் ஒருநாள் தன்மார்த்தன் முதலான ஐவரும் ருஷீஸ்வரரை நோக்கிச் சுவாமீ! காயசித்தி பெறுதற்கு வேண்டிய வழிகளில் ஏதாவது கூறியருள வேண்டுமென்று கேட்க, அதற்கு ருஷீஸ்வரர் புத்திரர்களே! காயசித்திபெற வேண்டுமானால் பலகற்ப மூலிகைகளாலும் தவ ஞானோப தேசங்களாலும் சிவலிங்க உபாசனா பூஜா கைங்கரியங்களாலும் சித்தியடையலாம். ஆனாலும் அவைகளுள் சிவலிங்க பூஜா கைங்கரியத்தால் முன்னம் மிருகண்டு முனிவர் புத்திரர் மார்க்கண்ட முனிவரென்பவர் என்றும் பதினாறு வயதாகச் சிவபெருமானிடத்தில் வரம்பெற்றுச் சரீரத்தைச் சித்தி செய்து கொண்டு சீவன் முத்தராய் வாழ்வாராயினார். அந்தப்படியே நீங்களும் பயபக்தியோடு இலிங்க பூசையைச் செய்து வருதல் நலமாகும் என்று கூறியதைக் கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! அந்த மார்க்கண்ட முனிவருடைய சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென, அதைக்கேட்ட ருஷீஸ்வரர் சொல்லுவார்.

கேளுங்க ளைவர்களே! முன்னொரு காலத்தில் கடகமென்னும் நகரத்திலே வாழ்ந்திருந்த மிருககண்டுயருக்கும் விருத்தைக்கும் பிறந்த மிருகண்டு முனிவர்பிரமசாரிய

ஆச்சிரமத்திலிருந்து பின் முற்கலமுனிவருடைய புதல்வி மருத்துவழி என்னும் கற்பிற்சிறந்த கன்னிகையை விவாகஞ்செய்து இல்லறம் வழுவா தொழுகி வருவாராயினர். சிலநாட் கழிந்தபின் புதல்வரில்லாமையால் மனம்வருந்தி இல்லத்தை விட்டகன்று மனைவி சுற்றத்தார் முதலானோர்களுடன் காசி நகரத்தின்கட் சென்று கங்கையில் நீராடித் திருக்கோயிலிற்சென்று சிவபெருமானை வலஞ் செய்து வணங்கித் துதித்து ஆங்கோரிடத்தில் புத்திர பாக்கியத்தை விரும்பித் தவஞான நிட்டையிலிருந்தனர்.

அப்பொழுது சிவபெருமான் அவர் செய்கிற தவநிட்டையைத் தெரிந்து சந்தோஷித்து இடபாரூடராய் எழுந்தருளி முன் வந்து நிற்றலும், மிருகண்டு முனிவர் அவரை வணங்கி நமஸ்கரித்துப் பலமுறை கீழே விழுந்து மெய்யன்புடன் தோத்திரஞ் செய்தனர். அப்பொழுது சிவபெருமான் மிருகண்டு முனிவரை நோக்கி உனக்கு யாதுவரம் வேண்டுமென்று வினாவுதலும், முனிவர் எம்பெருமானே! அடியேன், புத்திர பாக்கியத்தை அடையவேண்டும் தந்தருளுக என்று விண்ணப்பஞ் செய்தனர். அதற்குச் சிவபெருமான் புன்னகை புரிந்து மிருகண்டு முனிவனே! உனக்குத் தீக்குண முடையவனாகவும், அறிவில்லாதவனாகவும், ஊமை செவிடு குருடு நொண்டி முதலிய அங்கக் குறைகளை யுடையவனாகவும், நூறு வயது வரை நோயால் வருந்துகிறனாகவும் உள்ள ஒரு புதல்வன் வேண்டுமா? அல்லது அழகில் மிகுந்தவனும், அங்கக்குறை வில்லாதவனும், நோய்களால் வருந்தாதவனும், பலகலைகளும் பயில வல்லவனும், நம்மிடத்தன்புடையவனும், பதினாறு வயதை மாத்திரம் பெற்றுவனுமாகயுள்ள ஒரு புதல்வன் வேண்டுமா? உன்ணெண்ணம்யாது? சொல்லென்று கேட்டனர்.

அதற்கு மருகண்டு முனிவர் அவ்வார்த்தையை நன்காராய்ந்து பின்ஒருவாறு துணிந்த கருணாநிதியே! வயது குறுகினாலும் அறிவுடையோனாகவும், உடற் குறையில்லாதவனாகவும், தேவரீரிடத்தில் அன்புடையோனாகவு முள்ள ஒரு புத்திரனையே விரும்பினேன்; கொடுத்தருள வேண்டுமென்று கேட்க, அதற்குச் சிவபெருமான் அப்படியே உனக்கொரு சற்புத்திரனைத் தந்தோமென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயினர். அப்பால் மிருகண்டு முனிவர் சிவபெருமானைத் துதித்துக்கொண்டு மனைவியோடும், சுற்றத்தோடும் காசியிற் றானேயிருந்தார். இவ்வாறிருக்கிற நாளிலே சிவபுண்ணிய முதலானவைகளோங்க மிருகண்டு முனிவருடைய பத்தினி மருத்துவதியுடைய அருமைத் திரு வயிற்றில் ஒரு கருப்பம் உண்டாயிற்று. அதற்கு முனிவர் மாசந்தோறும் செயற் பாலனவாகிய கடன்களைச் செய்து கொண்டிருந்தார்.

பத்து மாதமும் பூரணமாகப் பங்குனி மாதம் இரேவதி நக்ஷத்திரமுமிதுன லக்கினமுங் கூடிய சுபதினத்தில் மருத்துவதி வயிற்றினின்றும் ஒரு ஆண் குழந்தை திருவதாரஞ் செய்தது. அதைத் தந்தையாராகிய மிருகண்டு முனிவர் தெரிந்து கங்கைநதியிற்போய் ஸ்நானஞ்செய்து சற்பாத்திரர்களாகிய பெரியோர்களுக்குத் தானங் கொடுத்துச் சாதகன்ம முதலியவற்றை செய்தனர்.

அப்பால் பிரமதேவர் வந்து அப்புத்திரற்குமார்க் கண்டேயர் என்று நாமகரணஞ் செய்தார். அம்மார்க் கண்டேயர் மறுவற்ற சந்திரன் போல் வளர்தலும் அன்னப்

பிராசனம், பிரவாசம், பிண்டவிர்த்தி, சௌளவினைகளும், அவருக்கு மிருகண்டு முனிவர் செய்வித்து ஐந்தாம் வயதிலே உபநயனமும் நடாத்தி, வேதம் முதலிய கலைகளெல்லாவற்றையும் உணர்த்தினர்.

மார்க்கண்டேய முனிவர் அவைகளின் மெய்ப் பொருளை நன்குணர்ந்து சிவபெருமானே முதற்கடவுளென்று துணிந்து அவருடைய திருவடியே புகலிடமாகக் கொண்டு சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் தம் குருவையும் தவ முனிவர்களையும் தாய் தந்தையர்களையும் சிரத்தையோடு வழி படுவராய்ப் பிரமசரிய ஆச்சிரமத்தை முறைவழுவாது அனுஷ்டித்து வரும் பொழுது வயது பதினாறு சென்றது. தாய் தந்தையர்கள் அதனையறிந்து தங்கள் குமாரனை நோக்கிப் நோக்கிப் பெருந்துயர்க் கடலில் மூழ்கி அழுது வருந்தினார்கள் அதையறிந்து மார்க்கண்டேய முனிவர் நீங்கள் ஏன் என்னைப் பார்த்துப் பார்த்துத் துன்பமுறுகின்றீர்கள்? இவ்விடத்தில் என்ன நிகழ்ந்தது? சொல்லுங்களென்றார். தந்தையர் அது கேட்டு மைந்தனே! ஒன்றுமில்லை முன்னாளிலே சிவபெருமான் உனக்குப் பதினாறு வயதென்றருளிச் செய்தனர். அது சென்றதனால் துன்பமுறுகின்றோம் என்றார்கள்.

உடனே மார்க்கண்டேயர் அவர் முகத்தை நோக்கி அப்படியா! நீங்க ளினிச்சிறிதும் வருந்த வேண்டாம். உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்த சிவபெருமானைப் பூசைசெய்து இயமனுடைய வலியைக் கடந்துஉங்களிடத்து விரைந்துவந் தடைவேன். நீங்க ளிங்கிருங்களென்று சொல்லி அவர்களைத் தேற்றினர். பின்னர் அதிவேகமாகச் சென்று மணி கன்னிகை யென்றும் திருக்கோயிலிற் புகுந்து தன்னிருகண்களினின்றும் ஆனந்த அருவியொழியச் சிவபெருமானை வலம் வந்து நமஸ்கரித்து ஆங்குத் தென்றிசையில் ஓரிடத்திலிருந்து சிவலிங்கந் தாபித்துப் பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அரிய தவஞ் செய்தனர். அப்பொழுது சிவபெருமான் பிரசன்னமாகி அன்பனே! நீ நம்மை நினைந்து அருந்தவமும் பூசையுஞ்செய்து வருகின்றாய்; நாம் அவற்றில் மிக விருப்படைந்தோம். உனக்கு வேண்டுவது யாது? சொல்வாயாக வென்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்கு மார்க்கண்டேயர் கருணா நிதியே! எம்பெருமானே! இச்சிறியேன் இயமன் கைப்படாது உய்யும் பொருட்டு நீர்எதிர்வந்து அருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய, இதற்கு உமா சமேதரராகிய சிவபெருமான் அப்பா நீ அந்த யமனுக்கு அஞ்ச வேண்டாம். தைரியமாக விருவென்று என்றிச் சிவலிங்கத்தில் மறைந்து எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு மார்க்கண்டேய முனிவருக்கு வயது பதினாறு பூர்த்தியாகச் செல்வதும் எமதருமராஜன் உத்தரவின்படி யெமதூதர்கள் தோன்றிச் சிவபூசையைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி நாங்கள் மார்க்கண்டேயனிடத்திற் செல்ல முடியாதென்று மீண்டுபோய் எமனை வணங்கி நின்ற இறைவனே! தங்களுடைய ஆஞ்ஞையின்படியே காசியிலே வாழும் மிருகண்டு முனிவர்யுத்திரன் மார்க்கண்டேயனைக் கொண்டுவரச் சென்றோம். அவன் சிவபூசை செய்து கொண்டிருக்கின்றான், அக்கினிச்சுவாலைகள் வீசுகின்றன. உள்ளே செல்ல முடியவில்லை. ஆகையால் திரும்ப வந்து விட்டோமென்று கூறினார்கள். அதைக்

கேட்ட இயமதர்மன் உளம் பதைபதைக்க உடலெங்கும் வெயர்க்கக்கண்கள் கனல்பொழியக் கோபித்து அவன் வாகனமாகிய எருமைக் கடாவைக் கொண்டுவரும்படிசெய்து அதன்மேலேறிக்கொண்டு காலதூதவீரர்கள் சூழ்ந்துவரக் காசி நாகரை யடைந்து மார்க்கண்டேய முனிவரிடத்திற் சென்று கோபித்துப் பலவிதமான வார்த்தைகளைப் பேசிக்கையிற் பிடித்த பாசமும் ஏந்திய தண்டமும் சூலமும் தெரிய எதிர்த்தான்.

எதிர்த்தலும் மார்க்கண்டேய முனிவர் இயமன் வந்தணுகினானெனச் சிந்தித்து எம்பெருமானுடைய திருவடிகளைத் துதித்து வணங்கித் தன்முன் நிற்கின்ற இயமன் முதலியவரை நோக்கி நீங்களெதற்காக இங்கு வந்தீர்கள்? இப்பொழுது நான் சிவபூசை செய்து கொண்டிருக்கிறேன். இவ்விடத்தில் நீங்கள் நிற்கொணாது வெளியே செல்லுங்கள் மூடர்கள் எனப் பற்பல வார்த்தைகளாற் தூஷித்ததைக் கேட்ட இயமன அக்கினி சொலிக்குங் கண்ணையுடையவனாகி, அடே மார்க்கண்டா! நீ சிவபூசை செய்தால் உன்னுயிரை இயமஸ்கைக்கொள்ள மாட்டானென்று நினைத்தாய்போலும். இப்பொழுது நீ வரமாட்டாயா? வென்று கேட்டு ஆர்ப்பரித்துக் கொண்டு மார்க்கண்ட முனிவர் சமீபத்திற் சென்று இலிங்க சொரூபத்தையுஞ் சேர்த்துப் பாசத்தை வீசியிழுத்தான். அப்பொழுது மார்க்கண்ட முனிவர் எம்பெருமானைத் துதித்துக்கொண்டு அவருடைய நித்தியானந்த வடிவாகிய திருவடி நிழலைப் பிரியாது நின்றார். அச்சமயத்தில் உமாமகேஸ்வரர் அஞ்சாதே! அஞ்சாதே! யென்று அபயாஸ்தங்கொடுத்துக் கொண்டு மதத்தினால் மிகுந்த இந்த இமயன் நம்மைந்தனுடைய உயிரைக் கவர நினைத்தானே யென்று திருவுளங்கொண்டு கோபித்துத் தமது இடப் பாதத்தினாலே அந்த எமனை யுதைத்துக் கீழே தள்ளினார். தள்ளினவுடனே இயமன் பூமியில் வீழ்ந்திறந்தான். அவன் பக்கத்து நின்ற காவதூதர்களும் அவன் வாகனமாகிய எருமைக் கடாவும் ஏங்கி வீழ்ந்தனர்.

அப்பால் தனியே அஞ்சலியஸ்தராய் நிற்கின்ற மார்க்கண்டேய முனிவரைக் காலகாலராகிய எம்பெருமான் கண்டு திருவுள மகிழ்ந்து மைந்தனே! நீ நம்மை மெய்யன்போடு, பூசை செய்தமையால் நாம் உனக்கு என்றும் பதினாறு வயதாக இருக்கும்படி வரந் தந்தோமென்று திருவாய் மலர்ந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினார். அதன்பின்னர் மார்க்கண்டேயர் எம்பெருமானுடைய திருவருவத்தை மனதிற் றியானித்துக் கொண்டு தம் தாய் தந்தையரிடத்திற் சென்று அவர்களுடைய துயரமுழுவதையு மாற்றி ஆங்கு சிலநாள் வசித்துப் பின்பு அவ்விடத்தைவிட்டு நீங்கிச்சிவதலங்கள் யாவையும் பக்தியோடு வணங்கித் துதித்து முடிவிலே சிவன் முத்தராயினார். அதன்பின் இயமன் இறந்தபின் பூமியிலுள்ளா ரெல்லாரும் மரணமடைதற்கிடமில்லா திருந்தபடியால் பூபாரம் பொறுக்கமுடியாது வருந்திய பூமிதேவி, விஷ்ணு, பிரமன், தேவர்கள், முதலியோர்கள் சிவபிரானிடத்திற் சென்று இயமனை எழுப்பி விடவேண்டுமென்று அன்போடு வணங்கித் துதித்தார்கள். அவர்கள் வேண்டுதலுக்கிரங்கிய சிவபெருமான் இயமனை எழுப்பி இனிமேல் நம்மடியார்களை மனிதர்களென்றெண்ணாது நாம் என்றே எண்ணக்கடவாய் என்று கூறி மறைந்தருளினார்.

அப்பால் இயமன் தூதர்கள் பூமிதேவி முதலான யாவரும் அவரவர்க ளிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்; என்று கூறிப் பின்னும் ஐவர்களை நோக்கி இதற்குத் தென்பக்கத்தில் தெரிகிற குகையின்கண் பிரமதேவனும் சரஸ்வதியும் அநேக தவருஷிகளும் எழுந்தருளியிருக்கிறார்கள். அதற்குச் சத்திய லோகக் கானலென்றும் பிரமலோகக் கானலென்றும் பெயர். ஆகையால் நீங்களைவரும் ஆங்குச் சென்று அவர்களை அன்புற நமஸ்கரித்து வருவீர்களென்று கூற, ஐவர்களும் அப்படியே நல்லதென்று அவரைத் தொழுது போற்றி விடைபெற்று பிரமலோகக் கானலுக்குட்சென்று ஆங்கு எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவரையும் சரஸ்வதியையும் அனேக தவஞான கிரேஷ்டர்களை யுங் கண்களாரத் தரிசித்துப் பலவாறு புகழ்ந்து தங்கள் பன்னசாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மறுநாட் காலையில் தன்மார்த்தன் முதலைவரும் நித்திய கன்மாநுஷ்டானங்களை முடிப்பதற்குச் செல்லும்போது தன் மார்த்தன் முதலான நால்வரையும் முன் செல்லவிட்டுப் பின்வருகிற வீரசேனத் திருமூலவரசன் மனைவியாகிய குணமதி தனக்குள் யோசிக்கிறாள், அதாவது திருமூலராகிய என்னுடைய கணவரை எப்பொழுது காண்பேனென்ற அவாவுடன் இவ்விடத்துக்கு வந்து பத்துவருட காலமாகியும் அவரை நான் காணப்பெறவில்லை. அவர் சீடராகிய குருராஜ ருஷீயும் அவரை எங்குத் தேடிப்பார்த்ததில் காணவில்லையென்று கூறிவிட்டார். இனி என்னசெய்யலாமெனப் பலவாறு யோசித்துத் தன்மார்த்தன் முதலிய நால்வரையும்விட்டுப் பிரிந்து தனக்கெட்டினவரை ஆங்கும் பல குகைகளிலும் தவருஷிகள் ஆச்சிரமங்களிலும் ஒருவாறு தேடிப்பார்த்துங்காணாத தால் மிகுந்த துக்கமுற்று இன்னும் இவ்வன முழுமை யுஞ் சுற்றித்தேடிப் பார்த்து வர வேண்டும். ஆனால் நாம் பெண்பாலாக விருக்கின்றோம். நமக்குத் துணைட .கச் சூரசேனனை யாவது கூட்டிக்கொண்டு சென்றாலோ, நம்முடைய அந்தரங்கங்கள் வெளிவந்துவிடும்.

ஆதலால், இப்போதே நாம் இவ்வடிவத்தை மாற்றி அரசனுக்குகொண்டு செல்லலாமென நினைத்து அவ்விதமே அரச உருவந்தாங்கி நெடுந்தூரம் தனக்கிச்சையாகிய வனங்களிலும், கானல்களினுள்ளுஞ்சென்று ஒவ்வோரிடங்களிலும் தேடிப் பார்த்து வருகையில் வழிதவறித் திசையறியாது வியாகுலமுற்று நின்றனள். அச்சமயத்தில் அவ்வனத்தில் வசிக்கிற வேடுவர்களது சத்தத்தைக்கேட்டு அக்குணமதியானவள் சந்தோஷமுற்று, அவ்வழியே சென்று ஆங்கு ஒருவேடுவப் பெண்ணைக் கண்டு அவளிடத்தில் தன் புருடராகிய திருமூலரது சமாசாரத்தைக்கேட்க, அதற்கு அவளெனக் கொன்றுந் தெரியாதென்று விளம்பக்கேட்டு அவ்விருவருஞ் சந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது வேடுவப்பெண்ணானவள் குணவதியாகிய அரசனைப் பார்த்து இவ்வித சுந்தரமான ஓர் புருடரையல்லவோ நான் சேர்த்து சுகிக்க வேண்டும். அவ்வாறு சுகித்தற் இவரை இன்று மணவாளனாக அடைவேனாகில் மேலாகிய இன்பத்தைப் பெற்றவளாவேன். என நினைத்துமாறுதலான வழியிற் கூட்டிக்கொண்டுபோய்த் தன் குடிசைக்குச் சமீபத்தில் வந்து அரசே! நாமிருவரும் சரச சல்லாபமா யிருக்கலாம். உள்ளே வாருங்களெனக் கரத்தைப் பற்றி யிழுத்தனள். அதுகண்ட குணமதி அவ்வேடுவப் பெண்ணினது

உட்கருத்தைத் தெரிந்து இஃதென்ன மோசமான காரியம். இக்குடிசையில் வசிக்கிற உன் புருடனுக்கு இதுசெய்தி தெரிந்தால் என்கெதியென்ன வாகுமென்று சொல்ல அதற்கு அப்பெண் அரசே! தாங்கள் பயங்கொள்ளவேண்டாம். நான் இன்னும் ஒருவருக்கு மணஞ்செய்யப்படவில்லை. ஈங்கு ஒருவரும் வரவுமாட்டார்கள். இச்சமயத்தில் என்னைச் சேர்ந்து சுகிக்கத்தான் வேண்டும். என்று பிடிவாதமாகக் கூறினாள். அதற்குக் குணமதி இனி நாம் எந்த விதமாகவாவது இவளை விட்டுத் தப்பி ஸ்நானஞ் செய்யச் செறை அரசர்களும், அரசிகளும் வருகிறதற்குமுன் பன்னசாலை போய்ச் சேரவேண்டும். நாம் பெண்ணென்று இவளுக்குத் தெரிவிக்கவுங் கூடாது. வேறு என்ன செய்யலாம். ஆ! ஆ! "ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்' என்ற முன்னோர் முதுமொழியின்படி நாம் என்ன விஷயத்தை எண்ணி இவ்விடத்துக்குவந்தோம். இங்கு என்ன விஷயம் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. இஃது ஒரு ஆச்சரியந்தான்; என்று நினைந்து புன்முறுவல்கொண்டு வேடுவமாதின் சமீபத்திற்சென்று அவள்கரத்தைப்பற்றிப் பெண்ணே! உன்னை நான் முதலிற் கண்டவுடன் மிகுந்த காதலையடைந்தேன். ஆனாலும் உன்னுடைய மனம் எப்படியிருக்கிறதெனச் சோதித்தேனே யன்றி வேறில்லை. இப்பொழுது உன்னை விதிப்படி விவாகஞ்செய்து சேரலாமென நினைக்கிறேன். உன்னபிப்பிராய மென்னவென்று கேட்க, அதற்கு அவ்வேடுவப் பெண் தன் கருத்தின்படி அரசன் இணங்கியதற்கு அளவில்லாத அகமகிழ்ச்சியடைந்து நல்லதென்று சம்மதித்தனள்.

அதன்மேல் அவ்விருவரும் ஸ்ரீமந் சுந்தர மகாலிங்க சுவாமி சன்னிதிக்குச் சென்று ஆங்குவேத விதிப்படி திருமாங்கல்யந்தரித்து இவ்விடத்தில் வந்து நம்முடைய காதற் பிரியத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்று ஒரு முடிவு செய்துகொண்டு உடனே வேடுவப் பெண் முன்னும் குணமதி பின்னுமாக நடந்து மகாலிங்கர் சன்னிதிக்குக் கிழக்குப் பக்கத்திலிருக்கிற திருமூலர் வணத்துக்கு வந்து சேர்ந்தவுடன் குணமதி தன் பன்னசாலைக்குட் சென்று அரச உருவத்தை மாற்றிச் சுயரூபத்தோடு வெளிவந்துநிற்கிறதைக்கண்ட வேடுவமாது அம்மா! தாங்களரச குமாரன்போல்வந்து என்னை மோகிக்கச் செய்து ஏய்த்து இங்குக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டீர்கள். இது உங்களுக்குத் தகுதியா என்று கேட்டனள்.

அதைக் கேட்ட குணமதி அவளுக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லி யனுப்பிவிட்டுத் தன்னைக் காணோமென்று தேடியலைந்துகொண்டிருக்கிற நால் வரையுங் கூப்பிட்டு நான் வடதிசைப் பொய்கைக்குட் சென்று ஸ்நானஞ் செய்துவரும்போது, வழிதவறி வந்ததனால் இத்தனை நாழிகையாயிற்று என்று தெரிவித்துக் கலந்துபேசிக் கலக்கந்தீர்ந்தபின் எல்லோரும் பன்ன சாலைக்கு வந்து சேர்ந்து காய்கனி சரக்குகளைப் புசித்து ருஷீஸ்வரர் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரைப்பணிந்து அவரது அனுகிரகம் பெற்று ஆங்கிருந்து வந்தனர். இவ்வண்ணம் நிகழும் நாள்களில், ஒருநாள் ஐவரும் ருஷீஸ்வரரை நோக்கி சுவாமீ! அடியேங்களுக்குத் தத்துவோபதேசங்கேட்டுக்கொள்ள ஆசையுண்டாய்க் கொண்டிருக்கிறது. அதனை அருளிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதைக்கேட்ட ருஷீஸ்வரர், தன்மார்த்தன் முதலானோர்களே! தத்துவமாவது:- உன் நிலைக்கருவி. புறநிலைக்கருவி

என இருவகைப்படும். அவற்றுள் உன்நிலைக்கருவி: சிவதத்துவம் வித்தியாதத்துவம். ஆன்மதத்துவம் என மூவகையினவாய் முப்பத்தாறு கருவிகளா யிருக்கும் புறநிலைக் கருவிகள்: அறுபதாகும். ஆகத்தத்துவம் தொண்ணூற்றாறு எனப்பெறும்.

அவையானவன:- சிவதத்துவம்-சிவம், சித்தி, சாதாக்கியம், ஈஸ்வரம், சுத்தவித்தை என ஐந்து. அவற்றுள் எல்லாவுயிர்களுக்கும் அறிவை எழுப்புவித்து நிற்கிற ஞானவடிவாகிய நாதத்துவமே சிவமாம். எல்லாவுயிர்களுக்கு முண்டாகியதொழிலை எழுப்புவித்து நிற்கிற விந்துதத்துவமே சக்தியெனப் பெறும். இந்நாதவிந்துக்க ளிரண்டுங்கூட்டி அறிவுந்தொழிலும் சமனாக நிற்கும் அவசரமே சதாக்கியமாம் கிரியையேறி ஞானங் குறைந்து நின்ற அவசரம் ஈஸ்வரம் எனப் பெறும். ஞானம் ஏறிக்கிரியை குறைந்துநிற்கும் அவசரம் சுத்த வித்தையாம். இவ் வைந்தும் பதியினுடைய சத்தியால்குடிலை யாகியசுத்தமாயையிலே முறையே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி விளங்கும். இத்தத்துவகர்த்தாக்கள் முறையே சிவம், சத்தி, சதாசிவம், மகேச்சுரன், உருத்திரன் ஆகிய ஐவருமாவர். முதலாவதாகிய விந்து தத்துவத்திலே நான்கு வாக்குகளும், ஐம்பத்தோரெழுத்துக்களும், எண்பத்தொருபதங்களும், ஏழுகோடி மகாமந்திரங்களும், வேதசிவாகமங்களும், விஞ்ஞானகலர் பிரளயா கலர்களுக்குத் தேகயோகங்களும், பதமுத்திகளும், பஞ்சகலைகளுந்தோன்றும்.

இனி, வித்தியாதத்துவம்-காலம், நியதி, கலை வித்தை, அராகம், புருடன், மாயை என ஏழு. அவற்றுள் காலமாவது: சென்றகாலத்து எல்லையையும் நிகழ்காலத்துப் பலத்தையும், எதிர்காலத்துப் புதுமையையும் பொருத்து விப்பதாகும். நியதியாவது எக்காலமும் கன்மத்தை இவ்வளவென்று நிச்சயம் பண்ணி நிறுத்துவதாம். கலையாவது ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குச் செயலை எழுப்புவது வித்தையாவது ஆன்மாவுக்கு விரைவில் அறிவை எழுப்புவது, அராகமாவது: பெற்றதைச் சிறிதாக்கிப் பெறாததிலே விழைவையுண்டாக்குவது புருடனாவது: மேலே கூறிய ஐந்து உடுப்புகளுடனே ஐம்புலன்களையும் நுகரும் அவசரமாம், மாயையாவது: ஒன்றனையும் நினைக்க வொட்டாமல் மயக்கத்தைச் செய்வது இவ்வேழனுள் காலமும் நியுதியுங் கலையும் அசுத்தமாயையிற் றோன்றும்: கலையில் வித்தை தோன்றும்: வித்தையில் அகாரந் தோன்றும்: இவ்வைந்து உடுப்புகளுடன் கூடிய ஆன்மாவே புருடன். இவ்வாறுக்கும் மூலமாயிருந்த அ,சுத்தமாயையேமாயையாம். இவ்வசுத்தமாயை ஆன்மாக்களுக்குத் தனுகரணம் உண்டாக்குவதாய் மலங்களில் ஒன்றாய் விபரீத. உணர்வைச் செய்வதாயுள்ளது. இதனைப்பதிக்குப் பரிக்கிரக சத்தி என்பர்.

இனி:—ஆன்ம தத்துவம் - வித்தியாதத்துவம் ஏழனுள் ஒன்றாகிய கலையிலே அவ்வியத்த குணவடிவாய்த் தோன்றிய மூலப்பகுதி என்னும் பிரபஞ்ச காரணமான பிரகிருதி மாயையில் நின்றும் உண்டாகிய இருபத்து நான்கு கருவிகளேயாம், அவை: பூதம் ஐந்து, அறிவுப் பொறி ஐந்து, புலன் ஐந்து, தொழிற் பொறி ஐந்து உட்கருவி நான்கு என விளங்கும். அவற்றுள் மண், நீர், தீ, காற்று, வெளி என்பன ஐம்பூதங்களாம். மூக்கு, நாக்கு, கண், காது மெய் என்பன அறிவுப் பொறிகள் ஐந்தாகும். நாற்றம், சுவை, ஒளி, ஓசை, ஊறு என்பன ஐம்புலன்களாகும். வாய், கை, கால், குறி, மலவாயில்

என்பன ஐந்து தொழிற்பொறிகளாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கும் உட்கருவிகளாம். ஆக விருபத்து நான்குமே ஆன்மதத்துவம்.

இவை உள்நிலைக் கருவிகளாக, இனிப்புறநிலைக் கருவிகளைச் சொல்லுகிறோம். அவை மண்ணின் கூறாகிய மயிர், எலும்பு, தோல், நரம்பு, ஊன் என்பன ஐந்தும். நீரின் கூறாகிய சிறுநீர், செந்நீர், வெண்ணீர் மூளை மச்சை என்பன ஐந்தும், தீயின் கூறாகிய உணவு உறக்கம் அச்சம் புணர்ச்சி சோம்பல் என்பன ஐந்தும், காற்றின் கூறாகிய ஓடல் நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றல் என்பன ஐந்தும், வெளியின் கூறாகிய சினம் ஈயாமை மயக்கம் செருக்கு பொறாமை என்பன ஐந்தும், ஆக ஐம்பூதக் கூறுகள் இருபத்தைந்து; மண்ணின் வழிப்பட்ட நரம்பு பத்து; காற்றின் வழிப்பட்ட வாயுப்பத்து; வெளியின் வழிப்பட்ட அவா மூன்று; தொழிற்பொறி வழிப்பட்ட செயல் ஐந்து; பிரகிருதியின் வழிக்குணம் மூன்று; விந்துவின் வழிவாக்கு நான்கு; ஆக அறுபதாம். இவற்றுள் மண்ணின் வழிப்பட்ட புரம்பு பத்தாவன; வலதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறலாக இடது மூக்கைப் பற்றி நிற்பதாகிய இடை கலையும் இடதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறலாக வலது மூக்கைப் பற்றி நிற்பதாகிய பிங்கலையும், மூலாதாரந் தொடங்கி எல்லா நரம்புகட்கு மாதாரமாய் நடுநாடியாய் உச்சித் துவாரம் வரைக்கும் எட்டி நிற்பதாகிய சுழி முனையும் கண்ணள வாய் நிற்பதாகிய காந்தாரியும், உடலெங்கும் நிற்பதாகிய அத்தியும், உண்ணாக்கிலே நின்று சோறு தண்ணீர் இவைகளை விழுங்கப்பண்ணுவதாகிய சிங்ஙவையும், செவியளவாய் நிற்பதாகிய அலம்புடையும், பாதத்தில் நிற்பதாகிய புருடனும், மார்பில் நிற்பதாகிய சங்கினியும் ஆகும்.

அப்பால் வாயுபத்தாவன:- மூலாதாரத்தில் தோன்றி இடை பிங்கலைகளில் ஏறி கபாலத்தைச் சுற்றிநாசி வழிப் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலம் வெளியிற் போய் எட்டங்குலம் உள்ளடங்கித்தான் நின்ற இடத்திற்றாக்குறுவதாகிய பிராணனும், குறியையும் மலவாயிலையும் பற்றி நின்று நீர் மலங்களைக் கழிப்பிப்பதாகிய அபானனும், விக்கல் கக்கல் இவற்றைப் பண்ணும் உதானனும், உண்ட அன்னசாரத்தை எழுபத்தீராயிர நாடிகளிலேயுங் கலப்பித்து உடம்பை வளர்க்கும் வியானனும், யாவையுங் ஏறுதல் குறைதல் செய்யவொட்டாமல் சமனாகப் பண்ணுவதாகிய சமானனும், இருமல் தும்மல்களை யுண்டாக்கும் நாகனும், கண்ணேற்றலைச் செய்யுங் கூர்மனும், சோம்பல் கொட்டாவிகளை யுண்டாக்கம் கிரிகரனும், இமைத்தல் நகைத்தல்களைச் செய்யும் தேவதத்தனும், பிராணன் சரீரத்தை விட்டுப்பிரியினும் தான் பிரியாமல் நின்று உடம்பை வீங்கவும் விரியவுஞ் செய்து கபாலத்தைப் பிளந்து செல்வதாகிய தனஞ்சயனும் ஆகும். இனி மூன்றவா ஆவன, ஊருங்காணியுந்தேடி அவற்றைப் பற்றிக் கிடத்தால் வரும் பிணக்காகிய மண்ணவாவும் பெண்டு பிள்ளைகளைப்பற்றி நிற்றலால்வரும் பிணக்காகிய பெண்ணவாவும், பொன்மணி முதலிய பொருள்களைத் தேடி அவற்றைப்பற்றி நிற்றலால்வரும் பிணக்காகிய பொருளவாவும் ஆகும். இப்பால், தொழிற்பொறிச் செய்கையாவன:- வெளியினிடமாக நிற்கும் வாய்க்கு உயிர்க்கூறாகிய வார்த்தையும், வாயுவின் இடமாக நிற்கும் காலுக்கு உயிர்க் கூறாகிய நடையும், தீயினிடமாக நிற்கும் கைக்கு உயிர்க்கூறாகிய கொடுக்கல் வாங்கலும், நீரினிடமாக நிற்கும் கீழ்வாய்க்கு உயிர்க்கூறாகிய விடுதலும் மன்னினிடமாக நிற்கும் குறிக்கு உயிர்க் கூறாகிய மகிழ்ச்சியும் என ஐந்துமாம்.

இனி முக்குணங்களாவன:- அருள், ஐம்பொறியடக்கல், அறிவு, தவம், பொறை, மேன்மை, மோனம், வாய்மை ஆகிய எண்குணங்களையுடைய சாத்துவிகமும், ஊக்கம், வீரம், அறம், தவம், கொடை, கல்வி, கேள்வி ஆகிய எண்குணங்களையுடைய இராசதமும், ஒழுக்க மின்மை. காமம், சினம் கொலை, சோம்பல், நெறிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணங்களையுடைய தாமதமுமாம்.

இப்பால், நான்கு வாக்குகளாவன:- செவிக்குக் கேட்கப்படுவதாய், பொருளோடு கூடியதாய் பிராணவாயுவைப் பொருந்தி வெளிப்பட்டு தொழிற்படுவதாகிய வைகரியும், செவிக்குப் புலப்படாமல் பிராணவாயுவின் செயலைப் பொருந்தாமல் கண்டத்தினுள் அடங்கி எழுவதாகிய மத்திமையும், நினைவு மாத்திரையில் நிற்பதாகிய பைசந்தியும், பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்கி ஞானமாத்திரைக்கு ஏதுவாகிய இலக்கணத்தையுடைய சூக்குமையும் ஆகும். இந்நான்கு வாக்குகளும் மூலாதாரத்திலுள்ள ஓங்கார வடிவாகிய பஞ்சமையினின்று எழுவதாம். இத்தத்துவ உண்மைகளை யறிந்து சாக்கிரத்தி லதீதத்தைச் செய்து கொண்டு தற்போதமிழந்து சிவபோத மேலிட்டு நிற்பவனே ஜீவன்முக்தனாவான். அந்த ஜீவன் முக்த நிலையைப் பெறவேண்டுமானால், காயகற்ப மூலிகைகளை முறைப்படி புசித்து தேகத்தைச் சித்திசெய்த கொள்ளின் உடலழியாது. அதற்காகக் கற்ப மூலிகைகளின் முறைகளைக் கூறுகிறேன். கேட்டு அதன்படி நடந்து வருவீர்களாக.

அதாவது இந்த மகாலிங்க சுவாமி சன்னிதிக்குத் தென் மேற்கு திசையில் ஒரு சுனையுண்டு. அச்சுனைக்கு மேல்புறத்தில் கருநொச்சி என்றொரு மூலிகை யிருக்கிறது. அதன் இலை கறுப்பாகவும் பாதியிற் புள்ளி புள்ளியாகவும் கிளைகளும் வேர்களுங் கருப்பாகவுமிருக்கும். வேரைச் சூரணஞ்செய்து அச்சூரணத்தைச் சிறுநீரிற் பிசைந்து வைத்துக்கொண்டு வெள்ளியுஞ் செம்பஞ் சமனெடைகூட்டி உருக்கையில் அச்சூரணப்பொட்டணத்தின் சாற்றைப்பிழியப் பேதிக்கும். அப்படிப் பேதித்த அதைச் செந்தூரமாக்கிச் சாப்பிடத் தேக சித்தியாகும். இன்னுமொரு பாகமும் உண்டு. அதாவது இலையைமட்டுஞ்சூரணஞ் செய்து திரிகடிப் பிரமாணம் அமுரியிற்கலந்து சாப்பிடக் காயசித்தியுண்டாகும். இதைத்தவிர மற்றொரு முறையும் உண்டு. அதாவது, அந்தக்கருநொச்சி மூலிகையிருக்கிற இடத்திற்கு மேற்குத்திசையில் அம்பிடு தூரத்தில் கருநாரத்தை விருக்ஷம் என்ற ஒரு மரமிருக்கிறது. அம்மரத்தினுடைய நிறம் கறுப்பாகவும் காய் பனங்காய் போலவுமிருக்கும். அந்தப் பழச்சாற்றைத் தலையிற் றேய்க்க நரைதிரைமாறும். செம்புருக்குமுகத்தில் மேற்படி சாற்றைவிடப் பேதிக்கும். அப்படிப்பேதித்த அதைச் செந்தூரமாக்கிப் பசுநெய்யில் ஒருவாரஞ் சாப்பிடத் தேகசித்தியாகும். இன்னுமொருபாகமுண்டு.

மேற்கண்ட கருநாரத்தை விருக்ஷத்தின் காய் பூ இலை இம்மூன்றையுஞ் சூரணஞ்செய்து காராட்டுப் பாலிற் பத்துநாள் புசித்துவரச் தேக சித்தியாகும். ஆகையால் நீங்கள் இக் கற்பங்களைப் புசித்து தேகத்தைச்சித்தி செய்துகொள்ளுங்கள் என்று கூறியருள, அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் குருராஜருஷியின் சொற்படி காயகற்பங்களைப்புசித்துக் கொண்டு வரும்பொழுது ஓர்நாள் ருஷிஸ்வரர்

தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி ஐவர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருட காலமிருப்பதாக முன்பு இவ்விடத்துக்கு வரும் போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள் வரை ஒரு வருடகாலமுஞ் சரியாய் விட்டது. ஆகையால் இனிமேல் நீங்கள் இவ்வனத்திற் கடுத்த கொங்கணமுனிவர் ஆச்சிரமத்துக்குச் சென்று! அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுப்கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளித் தம்பக்கத்திலிருந்த சீடர்களிளொருவனை நோக்கி இவர்களைவரையும் அழைத்துச் சென்று கொங்கண முனிவரிடத்தில் விடுத்துவருவாயென்று உத்தரவு செய்ய, அவ்வுத்தரவின்படி சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் குருராஜ ருஷீஸ்வரரை வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள். என்று சரணாங்கி முனிவர் விளம்புதலும் நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! குருராஜ ருஷீஸ்வரர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் ஞானோபதேசங்களையும் கற்ப முறைகளையும் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். இனியந்தக் கொங்கண முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திரங்களையும் அருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க, சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

இருபத்து நான்காவது,
குரு ராஜருஷிச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தைந்தாவது

கொங்கண முனிவர் சருக்கம்

பன்னிரண்டாவது வனம்

திங்களஞ் சடிலர் மேவுந் திருச்சது ராசலத்திற்
கொங்கணர் வனத்துச் சென்று குலவுதன் மார்த்தன் முன்னாந்
துங்கநல் ஐவர் தாமுந் தொழுசலற் காரர் மேன்மை
அங்கறிந் துற்ற தன்மை யறிந்தவா ரறைவோ மம்மா.

கேளுங்கள் முனிவர்களே! குருராஜ ருஷிஸ்வரர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும், கீழ்த் திசையை நோக்கிப் பிரயாணமாகி ஏமபுரங்கானலுக்குத் தென்பக்கத்தி லிருக்கிற சாதிக்காய்த் தோப்பையும், நொச்சியூற்றுறையுங் கடந்து அப்பால் ஆதவனூடாடாத அருங்கானலாகிய அழகிய பூஞ்சோலைகள் சூழ்ந்த கொங்கண முனிவர் வனத்துட்சென்று ஆங்குத்தம் பன்னசாலையிலெழுந்தருளி யிருந்த அம்முனிவரது மலரடியை வணங்கி நிற்கையில், அவர் ஐவர்களுக்கும் ஆசிவசனங்கூறி அவர்களையழைத்துவந்த குருராஜ மகருஷியின் சீடனால் தன்மார்த்தன் முதலானோர்களுடைய சமாசாரங்கள் முழுதுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பிய பின்னர் ஐவர்களையும் பார்த்து தன்மார்த்தன் முதலானோர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் எவ்வளவு நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷயம் உங்களுக்குத் தெரியவேண்டுமோ? அதைத்தெரிவிப்பீர்களெனக் கேட்டனர்.

அதற்கு ஐவர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒருவருடகாலமிருந்து ஞானோபதேசங்களையுங், காயாதிகற்பங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமென்று புகன்றனர். அதைக்கேட்ட கொங்கண முனிவர் அப்படியானால் நீங்கள் இவ்விடத்தில் வாசஞ் செய்வதற்கு இதன் மேற்குப் பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதில் வாசஞ்செய்து வருவீர்களென்று உத்தரவு செய்ய, உடனே ஐவரும் அவ்வுத்தரவின்படி ஐந்தடுக்காகப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து கொண்டு தினந்தோறும் யோக ஞானோப தேசங்களைக் கேட்டுக்கொண்டு வருநாள்களில் ஒருநாள் சுவாமீ! உலகத்தில் மானிடர்களுக்கு ஐம்பெரும் வேள்விகளுண்டென்றும், அவ்வேள்விகளை ஒவ்வொருவரும் தத்தமச் கின்றியமையாத கடன்களாகக் கொள்ளவேண்டுமென்றுங்

கூறுகின்றார்களே? அந்தக் கடன்களாவன யாவை? அவற்றை விபரமாக மொழிந்தருள வேண்டுமென்று கேட்க, அதற்கு முனிவர் தன்மார்த்தன் முதலானோர்களே! உலகத்திலே நன் மக்களாவாருக்குந் தென்புலத்தார் கடன், தேவர் கடன் விருந்தினர்கடன், சுற்றத்தார்கடன், தன்கடன் என ஐந்து கடன்களுள்ளன. அக்கடன்களைத் தீர்த்தலையே ஐம்பெருவேள்வி என்று அறவோர் அனைவருங்கொண்டாடுவர்.

அவற்றுள் முதன்மையானது தென்புலத்தார் வேள்வியேயாம். தென்புலத்தாரென்பது பெரிய புலமாகிய கந்தசண்ட சணாதிசாதி பதவிகளை யடைந்த பெரியோரைக் குறிக்கும். அவரே இறந்துபோன பெற்றோரும், ஆசிரியர் முதலிய பெரியோருமாவர். அவருள் பெற்றோர் இறந்த நாளில் ஆண்டுதோறும் அவரது மைந்தர்கள் கூடியும், ஆசிரியர் முதலிய பெரியோர்கள் முக்தி அடைந்த நாளில் ஆண்டுதோறும் அவரது மாணாக்கர் முதலிய அன்பர்கள் கூடியும் மரபு வழக்கத்திற் கிணங்கச்செயத் தக்க செய்து குருபூசை நடாத்தி மகிழ்வதாம். இனி இரண்டாவதாகிய தெய்வவேள்வியோ உயிடனிருக்கும் தாய், தந்தை, ஆசிரியன் மாரை அன்புடன் வணங்கி அவர்கட்கு வேண்டுவனவற்றை மனங்கோணாமல் வழங்கி மகிழ்வித்தலுடன் தேவாலய வழிபாடு செய்து வருதலுமாம்.

அப்பால் மூன்றாவதாகிய விருந்து வேள்வியாவது - ஒழுக்கங்களிற் சிறந்தவராய், கடவுள்பால் அன்புடையவராய், யாத்திரை வாசிகளாய், வரும் புதிய அடியவரைத் தேடியருத்தி மகிழ்வித்தலாகும். அதன்மேல் நாலாவதாகிய கிளை வேள்வியாவது:- "சுற்றந்தழால்" என்ற வழக்கழிவின்றி ஒவ்வொரு நன்மை தீமைகளிலும் தன் இனத்தாரை யழைத்து அறுசுவையுண்டியும், சந்தன தாம்பூலங்களும் வழங்கி மகிழ்விப்பதாம். அப்பாலுள்ள குடும்ப வேள்வியாவது:- தானும் தன்னுடைய மனைவி மக்களும் இறுக்கமின்றி உண்டு உடுத்திப் பூசிப்பூண்டு மகிழ்ச்சியுடன் வாழ்வதாம். இவ்வைந்து கடன்களையும் அழுத்தமின்றி அகமகிழ்வுடன் நடாத்தி வருபவர் இம்மையில் நன்மக்களைப் பெற்று உலகமெச்சும் நல்வாழ்வையடைந்திருத்தலுடன், மறுமையிலும் சுவர்க்க நாட்டார் வணங்கி மகிழ்விக்க வாழ்வார்கள். ஆகையால் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்றாங்கு - ஐம்புலத்தா றோம்பல் தலை" என்று வேதமும் இதனைத் தலையாய அறவொழுக்கமெனப் பாராட்டிற்று அதற்குத் திருஷ்டாந்தமாக, பூர்வத்தில் நடந்த ஒரு சரிதையைச் சொல்லுகிறேன்;

அதாவது முன்னொரு காலத்தில் உத்தண்டமென்னும் நகரத்திலே சலற்காரறென்ற பிராமணரொருவரிருந்தார். அவர் சகல வேதசாஸ்திரங்களையும் ஐயந்திரி பறக்கற்றுப் பிரம்மச்சரிய ஆச்சிரமத்தைக் கைக்கொண்டு தவஞான நிட்டையை யடைந்திருந்து பின்பு தேசசஞ்சாரஞ்செய்ய நினைத்துப் பிரயாணமாகி, மலை வன முதலான பல இடங்களை எல்லாஞ் சுற்றி முடிவில் எம்புறங்கானலுக்கு வருகையில் ஆங்குச்சில முனிவர்கள் ஒரு ஆலவிருக்ஷத்தின் கிளைக்கொம்புகளில் காலை மாட்டிக்கொண்டு, தலைகிழாகத் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்து நாம் உலகத்தில் எத்தனையோ முனிவர்கள் தவஞ்செய்து கொண்டிருப்பதைப்

பார்த்திருக்கிறோமே! ஆனாலும் இவர்களைப்போல் இவ்வித கொடிதாகிய தவத்தைச் செய்கிறவர்களை இதுவரை நாம் பார்த்ததில்லையே யென்று நினைத்து அவர்கள் சமீபத்திற்சென்று வணங்கிச் சுவாமிகளே இப்படியும் ஒரு தவமுண்டோ? நீங்களெல்லோரும் என்ன விஷயத்தை உத்தேசித்துத் தவத்தைச் செய்கிறீர்கள்? அஃது இன்னதெனக் கழறு வீர்களாகில் அடியேனு மித்தவத்தை யநுஷ்டித்து வரலாமென நினைக்கிறே னென்று கேட்க.

அதற்குத் தலைகீழாய்த் தொங்குகிற அம்முனிவர்கள் மனச்சஞ்சல முடையவர்களாகி இருகண்கிளி னின்றும் நீர் ஆறாகப்பெருக சலற்கார முனிவரை நோக்கி, அப்பா! இது தவமில்லை எங்களுக்கு எமதன்மனால் விதித்த தண்டனை யெனச் சொன்னார்கள். அந்தச் செய்தியைக் கேட்ட சலற்காரமுனிவர் மனமிக வருந்தி ஆ! ஆ! மகாத்மாக்களாகிய உங்களுக்கு ஏமன் இத்தண்டனையை விதிப்பதற்கு நீங்கள் என்ன பாவத்தைச் செய்தீர்கள்? என்று கேட்க, அதற்கு முனிவர்கள் அப்பா! இப்பொழுது, எங்களுடைய வம்சத்தில் சலற்கார னென்றொரு முனிவன் பிர்மசரிய ஆச்சிரமத்தை யடைந்திருக்கிறான்.

அவன் தனக்கு ஓர் பெண்ணை விவாகமுடித்துப் புத்திரப்பேற்றை யடைந்து பிதுர்க்களாகிய எங்களுடைய கடனைத் தீர்க்காத காரணத்தால், இக்கொடுந்தண்டனையை ஏமன் விதித்திருக்கிறான். அத்தண்டனையின் படி இவ்விருக்ஷத்தில் காலைமாட்டித் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கிறோம். இப்படி அநேக காலம் நாங்கள் தொங்கிக்கொண்டிருந்ததனால் இவ்விருக்ஷத்தின் கிளையும் இற்றுப்போய்விட்டது. இன்னும் சிறிது காலம் வரைக்குந்தான் ஓட்டிக்கொண்டிருக்கும். அதற்குள் எங்களுடைய வம்சத்தானாகிய சலற்கார முனிவன் விவாகத்தை முடித்துப் புத்திரப்பேற்றையடைந்தால் நாங்க ளிக்கொடுந் தண்டனையி னின்றும் நீங்கிச் சொர்க்கத்தை யடைவோம்; அல்லாவிடில் இற்றுப்போன இவ்விருக்ஷத்தின் கிளையறுந்து விழுமாகில் புத்தென்கிற நரகத்தில் வீழ்ந்துவிடுவோம்; இறுதியில் அந்தச் சலற்கார முனிவனும் எங்கள் கதிக்கு வந்து சேருவானென்று சொல்லியதைக் கேட்ட சலற்கார முனிவன் பயந்து நடுநடுங்கிச் சுவாமிகளே! அந்தச் சலற்கார னென்பவன் யான்தான். என்னாலல்லவோ? இக்கொடுந் துன்பம் உங்களுக்கு நேர்ந்தது என்று மிகுந்த கவலையடைந்து பின்பு ஒருவாறு மனந்தேறி இனிமேல் யோசிப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை என நினைத்து என்னுடைய நாமப்பொருத்தத்துக்குச் சரியான ஒரு பெண்ணைத்தேடி விவாகமுடித்துப் புத்திரரைப் பெற்று உங்கள் துன்பத்தைத் தீர்த்துவிடுகிறேனென்று வாக்களித்து அவர்களிடத்தில் விடை பெற்றுத் தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்தனன். அப்பால் காசிபருக்கும் கத்துருவைக்கும் பிறந்த சலர்க்காரை என்னும் ஓர் மாதைத் திருமணமுடித்து இல்லறம் வழுவாது நடாத்திவரும்போது சலர்க்காரை கருப்பமுற்று நல்ல சுகயோக சுபதினத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்குப் பெரியோர்களால் சலற்காரமுனிவர் "ஆஸ்திகன்" என நாமகரணமிட்டுச் சகல ஆகமவேத சாஸ்திரங்களையும் கற்பித்து வளர்த்துப் பிதுர்களுக்குச் செய்யவேண்டிய கடன்களை யொழுங்காகச் செய்து வந்தனன்.

அப்பால் எமபுரத்தில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த சலற்காரமுனிவனது பிதுர்க்கள் அவனது புத்திரனால் சொர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார்கள் என்று கூறியதைக் கேட்ட ஐவரும் தங்களுடைய பன்ன சாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பாலொருநாள் தன்மார்த்தன் முதலான நால்வருடைய உத்தரவின்படி கனிபறிக்கச் சென்ற சூரசேனன் வெகுதூரத்தில் சென்றமையால், திரும்பிவரத் தாமதமாயிற்று. அதனையறிந்த நால்வரும் அந்தோ! சூரசேனன் இன்னும் வரவில்லையே! என்ற மிகுந்த கவலையுற்ற மனத்தினராகி வழிமேல் விழிவைத்து நோக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சூரசேனன் மனைவியாகிய சுகமதி சொல்லொணாத் துக்கசாகரத்திலமிழ்ந்து நாம் போய்த் தேடிப் பார்த்து வருவோமென வெண்ணி, கொஞ்சத்தூரம் போய்ப்பார்த்து வருகிறேனென்று மூவரிடத்திலுஞ் சொல்லிப் பன்னசாலையை விட்டு நீங்கிச் சிலவனங்களைக் கடந்து சென்று பார்த்துங் காணாமையால் திரும்பிப் பன்னசாலையை நோக்கி வரும்போது வெகு நாளாக இம்மலையில் வந்து ஒளிந்து வசிக்கும் ஒரு திருடன் சுகமதியைக் கண்டு ஓடோடியும் வந்து ஓ மிக்க சௌந்தரியமுடைய பெண்மணி! நீ யார்! இவ்வனத்தில் தனிமையாக வரவேண்டிய காரணமென்ன? என்று கேட்க, அதற்குச் சுகமதி அப்பா! நான் இராஜஸ்திரீ. என்கொழுநன் முதலியவர்களோடு தவத்தைக் கருதி ஈங்கு வந்திருக்கிறேன். எனது நாயகர் காய்கனி பறித்துவரச் சென்றார். இன்னும் வரக்காணோமேயென அவரைத்தேடி இத்தனை தூரம் வந்து பார்த்துத் திரும்ப பன்னசாலைக்குச் செல்கிறேனென்று கூறினள். அதைக் கேட்ட திருடன் அப்படியா! சமாசாரம்! நல்லது! ஏ அரசி! உன்னுடைய கணவன் காய்கனி பறித்துவர இவ்விடத்துக்கு வந்தானென்று தெரிவிக்கிறாய்; அவன் இவ்வனத்திலுள்ள எந்தத்துட்ட மிருகத்திற்கு இரையானானோ! அவனினி வருவதென்ற அந்த ஆசையை ஒழித்துவிட்டு என்னைப்பார். நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன். உன்னழகிய பருவத்துக்கும் எனக்கும்பொருத்தமாயிருக்கிறது. உன்னை நான் முதலிற் பார்த்த மாத்திரத்தில் அனங்கனானவன் அழகிய கருப்புவில்லை வளைத்து, அரும்பு மலர்களைத் தொடுத்து, என்னை யடுத்து விடுத்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் இப்பொழுதே நாமிருவரும் கூடிச் சரசசல்லாபமாக இருப்போம் வருவாய். நீ யொன்றும் யோசிக்கவேண்டாம். நீ எதைக் கேட்டாலுங் கொடுக்கத் தடையில்லை. எனப் பற்பல மோகவார்த்தைகளைப் பிதற்றிக்கொண்டு அவளுடைய சமீபத்தில் வந்தனன்.

அதைக் கண்ட சுகமதி இவன் நம்முடைய கற்பை யழித்து விடுவான்போற் தெரிகிறது. அந்தோ! என் கரத்தைப்பற்றச் சமீபத்தில் வருகிறானே! ஹா! ஜெகதீசா! கருணையங்கடலே! பக்தரக்ஷகா! பாபவிநாசா! கணவரைத் தெய்வமென்று நினைத்து அவர் சொற்றவறாது இந்நாள்வரை நான் நடந்து வந்தது உண்மையானால் என்னைக் கற்பழிக்க வேண்டுமென்று வருகிற இக்கொடிய பாவியினுடைய சிரம்வெடிக்கக்கடவது. என மொழிந்தவுடனே மின்னலைப் போலொரு பிரகாசந் தோன்றி மறைதலும் திடீரென ஓர் சத்தங்கேட்டது. அச்சத்தத்தைக் கேட்ட சுகமதி தன்னிருகரங்களையு மூடிச் சிறிது நேரமௌனமுற்றுப் பின் விழித்துப்பார்க்க தலைவெடித்துத் திருடன்கீழ் விழ்ந்திறந்து கிடந்தனன்.

அதைக்கண்ட சுகமதியானவள் தனக்குதவி செய்த கடவுளுடைய வல்லமையைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து அவ்விடத்தைவிட்டு நீங்கிவரும்போது காய்கனி பறிக்கச் சென்ற சூரசேனன் ஆங்கொரு வழியில் எதிர்வரக்கண்டு மகிழ்ந்து நடந்த செய்திகளை அவனிடத்திற் சொல்லி வணங்களெல்லாங் கடந்து பன்ன சாலைக்கு வந்து மற்ற மூவரிடத்திலும் தனக்கு வந்த ஆபத்தையெல்லாம் வல்ல இறைவன் நீக்கியருளினாரென்று தெரிவித்தனள் பின்பு எல்லோரும் எம்பெருமான் திருவடிகளைப் பன்முறை வணங்கி வாழ்த்திக் காய்கனிகளைப் புசித்துச் சந்தோஷ முற்றிருந்தனர். மற்றொரு நாட்காலையில் தன்மார்த்தன் முதலிய ஐவரும் முனிவரது ஆசிரமத்துக்குச் சென்று அவரை அன்புடன்வணங்கி வீற்றிருந்து மெய்ஞ்ஞான உபதேசங்களைக் கேட்டுக்கொண்டு வருந்தருணத்தில், ஐவரும் முனிவரை நோக்கிச் சுவாமீ! ஞானத்தை யடையவேண்டுமானால் அதற்குச் சாதனமாகிய சமாதியை அப்பியாசஞ் செய்யவேண்டுமெனக் கூறினீர்களே! சமாதி யென்பது என்ன? அதன் விவரங்களைத் திருவாய் மலர்ந்தருள் வேண்டுமென்று கேட்டனர்.

அதற்கு முனிவர் ஐவர்களே! சமாதி யென்பது சித்தி முத்திகளை விரும்பும் ஒருவன் ஐம்பொறி முதலிய கருவிகளின், செய்கைகளுக்கு ஏதுவாகிய யாக்கையுள் நின்று அவற்றோடு கூடியிருப்பிலும், அவற்றைத்தான் பற்றாமல் உயிருக்குயிராயிருக்கும் பரம்பொருளையறிந்து மகிழ்தலாம். இஃது கட்டுயோகத்தொன்றேயாம். இத்தகைய தியான நிட்டை யுடையவரது தகுதிக் கேற்பச் சமாதியும் - தத்துவலயசமாதி, சவ்விகற்பமாதி, நிற்விகற்பசமாதி, சஞ்சாரசமாதி, ஆரூடசமாதி என ஐவகைப்படும். அவற்றுள் தத்துவலய சமாதியாவது:- ஆன்மதத்துவங்களையும், அவற்றின் செய்கைகளையுமறிந்த அறிஞன், தான் அவற்றின் வழிப்பட்டு உழலாமல் ஆசிரியன் அறிவித்த முறையில் அவை தன்வழிப்பட ஒடுக்கி நின்று மேலாகவுள்ள பரம்பொருளது திருவருளுண்மையை அறிந்து மகிழ்தலாம். இனி, சவ்விகற்ப சமாதியாவது:- தத்துவலய சமாதிமுற்றி அருள் நிலையையறிந்து, மேலோன் அப்பாலுள்ள வித்தியாதத்துவங்களையும், அவற்றின் செய்கைகளையும், கேள்வியாலும், ஆராய்ச்சியாலும் அறிந்து உயிர்கட்கிரங்கி நன்மக்களுக்கு அறிவு போதித்தலுடன், மேலுள்ள அருளாளான பரம்பொருளை அறிதற்கு அவாவும், பெரியோரைக் கூடியிருந்து எங்கும் எவற்றினும் நிறைந்தும், ஒன்றினும் பற்றின்றி நிற்கும். அந்தப் பரம்பொருளை நடுநின்று தியானித்துக் கண்டு மகிழ்தலாம். அதன் மேலுள்ள நிர்விகற்ப சமாதியாவது:- சவ்விகற்ப சமாதிமுற்றி அருளம்மையாலறி விக்கப்பட்ட அருளாளனாகிய அப்பனை அறிந்த ஞான்றே சிவதத்துவங்களும், அவற்றின் செய்கைகளும், நன்கு விளங்கப் பெற்று அந்தப் பரம்பொருளைக் கூடி நின்று:- விட்டுப் பிரியாது மகிழ்வதாம் நான்காவதாகிய சஞ்சார சமாதியில் முற்றி, பரம்பொருளையறிந்து தியானித்து சமாதித்து சாக்ஷாத்கரித்து நிற்கும் சீவன் முக்தன், உடம்பு நழுவாதிருக்குங்காய சித்தியுஞ் செய்து கொண்டவனா னிருப்பனேல் காலுணவுண்டு. வான்மிசை யுலாவுந்திறத்தை யடைந்து மகிழ்தலாம். இச்சஞ்சார சமாதியாளர் தண்ணிய அமிழ்த வடிவான ஒளி மேனியையுடையவராய், சூரியனுடைய வெம்மையைத் தாங்கி உலகத்துயிர்களுக்குத் துயர்தீர்ப்பவராய், சடைமுடியையுடையவராய் விளங்குவர். ஐந்தாவதாகிய ஆரூடசமாதியாவது:- சஞ்சார

சமாதிமுற்றி, பல கோடி காலம்கண்டு வான்மிசை வாழ்வோராயிருக்கும் பெருந்தகையடிகள் ஒரு காலத்தில் பரம்பொருளது திருவடி நிழலி லிரண்டறக் கலந்து பேரின்ப வாழ்வி லமர்தலாம். இவ்வைந்து சமாதிகளுள் உலகத்தவருக்கு முன்னைய மூன்றும், சித்தர்களுக்கு ஐந்தும் உரியவை. சஞ்சாரசமாதி ஆரூட சமாதிகளாகிய மேனிலைகளைப் பெறுதற்குத் தேகத்தை கற்ப மூலிகைகளாற் சித்தி செய்து கொள்ள வேண்டியது அவசியம். ஆதலால் அதையுமுங்களுக்குச் சொல்லுகின்றோம், கேட்பீர்களாக.

அதாவது சுந்தரமகாலிங்கர் சன்னிதிக்கு வட திசையில் அரைநாழி வழித்தூரத்தில் ஒருபாறையுங் கருங்கானலுமிருக்கின்றன. ஆங்குச் சோதிவிருக்ஷம் என்ற ஓர் மரமிருக்கிறது. அதன் தூர் வெண்மையாயும், பூ கொன்றைப்புட்பம் போலவும், காய் கொன்றைக்காய் போலவுமிருக்கும் இருட்டுக் காலங்களில் மரத்தைப் பார்த்தால் மின்மினிப் பூச்சிகள் சூழ்ந்திருப்பதுபோற் றோன்றும். அந்த மரத்தை வெட்டினாற் பால்வரும். ஆகையால், மூலிகைச் சாபம் நீக்கி அவ்விருக்ஷத்தின் பச்சைப் பட்டையைச் சீவிக் கொண்டு வந்து, கனையெருமை விருக்ஷத்தின் பாலிலூற வைத்து எடுத்துச் சுத்தி செய்த கந்தகத்தை நாலுக்கொன்று போட்டு இருபத்தொரு நாள் சுனையெருமை விருக்ஷத்தின் பாலை விட்டரைத்து மிளகுப் பிரமாணங் குளிகை செய்து நிழலி லுலர்த்தித் தினமும் ஒருகுளிகை வீதம் ஒருவாரஞ் சாப்பிட்டுவரக் காயசித்தியாகும்.

இதைத்தவிர, இன்னுமொரு முறை உண்டு. அதாவது அந்தச் சோதிவிருக்ஷ மிருக்கிற இடத்திற்குப் பக்கத்தில் நாகதாளியென்றொரு மூலிகையுண்டு. அதன் இலை சிறிய வெற்றிலை போலவும் மஞ்சள் நிறமுடையதாகவு மிருக்கும். அதற்கு நாகமணி இலையென்றும், ஈசுவர மூலிகையென்றும் பெயர். அந்த இலையை யரைத்துத்துணியிற் பொட்டணங்கட்டி முடிந்துவைத்துக் கொண்டு ஒரு சட்டியிற் சூதமும் அதனளவு நல்லெண்ணெய்யும்விட்டு ஒரு ஜாதி விறகு கொண்டு தீயெரித்து எண்ணெய் காய்ந்தவுடன் அந்த நாகதாளியிலைப் பொட்டணத்தை யெடுத்துச் சாறு பிழிந்தால் சூதங்கட்டிப் போகும்.

அதைச் செந்தூரமாக்கி ஆவின் நெய்யில் ஒரு வாரஞ் சாப்பிட்டு வரத் தேகசித்தியாகுமென்று கூறியருள. அதைக் கேட்ட ஐவரும் முனீஸ்வரர் சொற்படி காயகற்பங்களைப் புசித்துக் கொண்டு வரும்பொழுது ஒரு நாள் முனீஸ்வரர் தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி நீங்கள் நம்முடைய வனத்தில் ஒரு வருட காலமிருப்பதாகத் தெரிவித்த நாள் முதலிந்நாள் வரை ஒரு வருடஞ் சரியாய் விட்டது. ஆகையால், இனிமேல் நீங்கள் இவ்வனத்திற்கு மேற்கிலிருக்கிற சட்டைமுனிவர் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக்கொண் டிருங்களென்று திருவாய் மலர்ந்தருளித் தம்பக்கத்திலிருந்த சீடர்களி லொருவனை நோக்கி இவர்களைவரையும் அழைத்துச் சென்று சட்டை முனிவரிடத்தில் விடுத்து வருவாயென் றுத்தரவு செய்ய, அவ்வுத்தரவின்படி சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் முனீஸ்வரரை வணங்கி விடைபெற்று பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! கொங்கண

முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் சமாதி ஞான உபதேசங்களையும் காயாதி கற்ப முறைகளையுங் கேட்டு மிகுந்த சந்தோஷமாகினோம். இனியந்தச் சட்டை முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திர ஞானகற்ப முறைகளை அருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்வராயினர்.

இருபத்தைந்தாவது,
கொங்கண முனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தாறாவது

சட்டை முனிவர் சருக்கம்.

பதின்மூன்றாவது வனம்

விண்டு வேண்டுஞ் சதுரகிரி விளங்குஞ் சட்டைமுனி வனத்தில்
அண்டு வண்ணந் தன்மார்த்தன் அன்பார் நால்வர்த்தம் முடனே
கொண்டு புகுந்து முனியுரைத்த குணமார்தர்மர் காதையினிற்
பண்டு பழஞ்சேர்ந் தொட்டுகதை பரிந்து கேட்டபடி யுரைப்பாம்.

கேளுங்கள் முனிவர்களே! கொங்கணமுனிவர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும் வடதிசை நோக்கி வருகையில் அநேக விருக்ஷங்கள் நெருங்கி இருண்ட வனத்தைக் கண்டு ஐவருஞ் சீடனை நோக்கிச் சுவாமீ! கதிரவனுடைய கிரணங்களும் உட்புகாத இருள் சூழ்ந்த வனமொன்று எதிரே தோற்றுகிறதே? அது என்ன? என்று கேட்க, அதற்குச் சீடன் ஐவர்களே! ஆங்கு அநேக துஷ்ட மிருகக் கூட்டங்களும், விஷந்தங்கிய பெரிய சர்ப்ப ஈட்டங்களும் வண்டினங்களும், இன்னும் பல கொடிய ஜீவஜெந்துக்களும் சஞ்சரிக்கின்ற இடமாகையால், அதற்கு எமபுரக் கானலென்று பெயர்.

அவ்விடத்திற்கு மானிடர் எவருஞ் செல்லக் கூடாது என்று சொல்லி நேரே மேற்குத் திசையை நோக்கிப் பிரயாணமாகி நொச்சியூற்றுஞ் சங்கிலிச்சித்தர் குகையும் சாதிக்காய்த் தோப்பும், பெரிய சதமபும், லாதமேடும், வெள்ளைப்பிள்ளையார் கானலும், சோதிப்புல் நிறைந்த சுற்றுவெளி இடமும், பிரமன், விஷ்ணு, ருத்திரன் இவர்களிருக்கின்ற கானலும், கன்னிமார் கோவிலுங்கடந்து ஸ்ரீசுந்தரமகாலிங்க சுவாமிகளைத் தெரிசனை செய்துகொண்டு அதைவிட்டு, வடமேற்கு மூலையின் பக்கத்திற் சென்று அப்பால் தேன்றுளிக்கும் புஷ்பச்சோலைகள் சூழ்ந்த சட்டை முனிவர் வனத்துள் நுழைந்து ஆங்குத் தம் மாசிரமத்தில் புலித்தோ லாசனத்தில் வீற்றிருந்த முனிவரை நமஸ்கரித்துப் பயபக்தியோடு நின்றனர் சட்டைமுனிவரும் கருணைத்திருக்கண்ணால் அன்பொழுகப் பார்த்து அவர்களை ஆசீர்வதித்து ஐவரையுங் கூட்டிவந்த கொங்கண முனிவர் சீடனால் சகல சமாசாரமுந் தெரிந்து அவனை யனுப்பிவிட்டு ஐவரையும் நோக்கி ஈண்டிருங்களெனக் கையமர்த்தி யிருக்கச் செய்து. தன்மார்த்தன் முதலானோர்களே? நம்முடைய வனத்தில் எவ்வளவு நாட்டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷய முங்களுக்குக்

தெரியவேண்டும்? அதைத் தெரிவிப்பீர்களெனக் கேட்க, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒருவருட காலமிருந்து மெஞ்ஞான உபதேசங்களையும் காயாதி கற்பங்களையும் கேட்டுத்தெரிந்துகொள்ளும்பொருட்டு வந்தோமெனப் புகல அதைக்கேட்ட சட்டைமுனிவர் அப்படியானால் நீங்கள் இவ்விடத்திற்குக் கீழ்ப்பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனிப் பன்னசாலை யமைத்து அதிலிருந்து வருவீர்களென உத்தரவு கொடுத்தனர்.

உடனே ஐவரும் முனிவர் சொற்படி ஐந்தடுக்குப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ்செய்து கொண்டு தினந்தோறும் யோக ஞானானுபவங்களின் உபதேசங்களைக்கேட்டு வருநாளில் ஒருநாள் முனிவர் ஐவரையும் அழைத்துக்கொண்டு சந்தனமர நீழலி லெழுந்தருளியிருக்கிற சந்தனமகாலிங்கர் சன்னதிக்குச் சென்று அவரை யன்போடு தரிசிக்கச்செய்து, அப்பால் காளி வனத்துள் நுழைந்தபோது அவ்வனத்தில் ஒரு பூ, ஒரு காய், ஒரு பழம் இருந்தன. அப்பழம் நன்றாய்ப்பழுத்து அதிக வாசனையாக இருப்பதைக்கண்ட ஐவர்களும் அம்மரத்தின் சமீபத்திற் சென்று பழத்தைப் பறிக்கத் தொடங்குஞ்சமயத்தில் சட்டை முனிவர் பார்த்து அவர்களைத் தடுத்து ஒருவார்த்தை சொல்லுகிறார் ஐவர்களே! இந்த மாமரமானது சந்தனமகாலிங்கர்சங்கற்பத்தாலுண்டானது. அன்றியும் இதில் வருடத்திற்கொருதரம் ஒருபூவும், ஒருகாயும், ஒரு பழமுமுண்டாகும். இந்தப்பழத்தை இவ்விடத்திலிருக்கிற கௌமார முனிவரென்பவர் ஒருவருட காலம்வரைத் தவஞான நிட்டையிலிருந்து வந்து புசிப்பது வழக்கம். அவ்வழக்கம்போல் ஒருசமயம் இப்பொழுது வந்தாலும் வருவர். அப்படி வருவாரானால் அவருடைய சாபத்திற்கு நீங்கள் ஆளாக வேண்டியது வரும். ஆகையால் இப்பழத்தைக் கொய்யலாமெனக் கனவிலும் நினையாதீர்கள். முன்னம் பஞ்ச பாண்டவர்கள் வனத்துக்குவந்து இத்தகைய ஒரு பழத்தைப் பறித்துப் பெருந்துன்பத்திற் காளானதாக ஒரு கதை கூட உண்டு என்று கூறினர். அதைக்கேட்ட ஐவரும் சுவாமீ! அந்தப் பஞ்சபாண்டவர்கள் என்பவர் யார்? அவர்கள் எதற்காக வனத்துக்குச் சென்றார்கள்? ஆங்குப் பழத்தைப் பறிக்கவேண்டிய காரணம் என்ன? அந்தப் பழத்தால் என்ன துன்பத்தை யடைந்தார்கள்? இவைகளை விவரமாகக் கூறியருள வேண்டுமென்று கேட்க,

முனிவர் தன்மார்த்தன் முதலானோர்களே! ஆதியில் சந்திர குலத்தரசரில் சாந்தனு மகாராஜ னென்பவனொருவனிருந்தான். அவனுக்கு முதல் மனைவியாகிய கங்கையின் வயிற்றில் பீஷ்மனும், இரண்டாவது மனைவியாகிய சத்தியவதி வயிற்றில் சித்திராங்கதன் விசித்திர வீரியன் என்னும் இருவரும் பிறந்தார்கள். பீஷ்மன் பிரமசாரியாகவே கல்யாணமின்றி யிருந்தான். சித்திராங்கதனை ஒரு கந்தருவன் கொன்றான். அதன்மேல் விசித்திரவீரியன் காசியரசன் புத்திரியாகிய அம்பிகை அம்பாலிகை என்பவர்களை மணம்புரிந்து புத்திரப் பேறில்லாமல் தேக வியோக மானதினால் சத்தியவதி மனங்கலங்கிச்சந்ததியற்றுப் போவதை எண்ணி, வேண்டிக்கொண்டபடி, வியாசபகவான் வந்து அம்பிகை என்னும் மாதைப் புணர்ந்து திரிதராட்டிரனையும், அம்பாலிகை என்னும் மாதைப் புணர்ந்து பாண்டுவையும், அம்பிகையின் தோழியைப் புணர்ந்து விதுரனையும் பெற்றனர். பின்பு திரிதராட்டிரன் அரசனாகவும்

பாண்டுசேனைத்தலைவனாகவும், விதுரன் மந்திரியாகவும் இருந்து அத்தினாபுரியை யரசாண்டு வருங்காலத்தில் திரிதராட்டிரன் துரியோதனன் முதலிய நூறு குமாரர்களையும் துச்சனை என்னும் ஒரு குமாரத்தியையும் பெற்றான். பாண்டு மனைவியோடு தான் புணர்ந்தால் இறந்தொழிகவென்னும் ஒரு சாபவசத்தனாக இருந்தமையின், அவனுடைய மனைவியாகிய குந்தியென்பவள் தனக்கு இளமையில் துருவாசமுனிவர் கற்பித்திருந்த மந்திரங்களால் இயம தருமராஜனைத் தியானித்து அவனாற்றரும புத்திரனையும், வாயு தேவனைத் தியானித்து அவனால் பீமசேனனையும், தேவேந்திரனைத் தியானித்து அவனால் அர்ச்சுனனையும் பெற்று, தன் சக்களத்தியாகிய மத்திரை என்பவளுக்கு ஒருமந்திரத்தைக் கற்பித்தனள். அம்மந்திரத்தால் அவள் அச்சுவினி தேவர்களைத் தியானித்து இரட்டைப்பிள்ளையாகிய நகுல சகோதேவர்களைப் பெற்றாள்.

பின்பு பாண்டு மகாராஜன் தேகவியோகமானான். அதன்மேல், பாலியர்களாக விருக்கிற துரியோதனாதிகள் நூறுபேர்களும் பாண்டவர்கள்மீது உட்பகைகொண்டு பலவகைத்துன்பஞ்செய்து வந்தனர். அப்போது இவ்விருதிறத்தாரும் அஸ்திர சஸ்திர வித்தைகற்றுக் கொண்டிருந்தனர். இஃதிப்படியிலிருக்கத் திரிதராட்டிரன் தருமருக்கு, இளவரசாக முடிசூட்டினன். அது பெறாமல் துரியோதன் சொல்லிய வார்த்தைக்குத் திரிதராட்டிரன் பின்னரிணங்குத் தருமராஜன் அத்தினாபுரத்தையும் அரசாட்சி செய்யும்படிக் கட்டளையிட்டனன். பின்பு துரியோதனன் பாண்டவர்களைக் கொல்லும் பொருட்டு வாராணரவதத்தில் ஒரு அரக்குமாளிகை கட்டிக்கொடுத்தான். பாண்டவர்களதிற் சில நாளிருக்கையில் ஒருநாள் பீமசேனன் துரியோதனன் செய்த சூழ்ச்சியைத் தெரிந்து நித்திரை செய்து செய்துகொண்டிருந்த தருமர் முதலிய நால்வரையுந் தூக்கிக்கொண்டு வஞ்சனையாகக் கட்டிய அம்மாளிகையையுந் தீக்கொளுத்திவிட்டு இடும்பவனத்துக்கு வந்து ஆங்கு இடும்பாசுரனைக் கொலைபுரிந்து அவன் தங்கையாகிய இடும்பியை மணந்து கடோற்கஜனைப் பெற்றான்.

அதன்மேல் அங்கிருந்து ஐவரும், தாயாகிய குந்திதேவியும், வியாசபகவானருளாற் சாலிகோத்திர மகருஷி வனத்திற்குச்சென்று அவர்பால் வேதாந்தோபதேசமிபெற்றுச் சிலநாள் அவ்விடத்தில் தங்கியிருந்து. அப்பால் பிராமண வேடந்தரித்து வேத்திரகீயம் என்னும் நகருக்குச்சென்று பகாசுரனென்பவனை வீமனாற் கொலை செய்து ஆங்குச்சிலநாள் வாழ்ந்திருந்து. பின்பு திரௌபதை யினுடைய சுயம்வரத்தைக் கேள்வியுற்று பாஞ்சால தேசத்துக்குச் சென்றனர். அங்குக் கட்டியிருந்த மச்சயந்திரத்தை அர்ச்சுனன் அம்பினாலெய்து, திரௌபதையை மணந்துகொண்டு வரவே, அவளைத் தாய்சொற்படி ஐவரும் மனைவியாகக்கொண்டு வாழ்வாராயினர். அதைக்கண்ட திரிதராட்டிரன் அஸ்தினாபுரியைத் துரியோதனனும், ஒரு பாழ்நகரத்தைத் தருமரும் ஆளும்படி ஆஞ்ஞாபித்தான்.

அப்பாழ்நகரம் ஸ்ரீமத் கண்ண பிரானருளால் இந்திரப்பிரத்தமென்னும் ஓர் அழகிய நகரமாகச் செய்யப்பட்டுத் தருமராசன் இராசசூயமென்னும் ஒரு யாகமியற்றி ஸம்ராட்டு என்னும் ஓர் பெருங்கீர்த்திப் பட்டப் பெயர்புனைந்து பெருஞ்செல்வத்தோடு வாழ்ந்துவருவதைப் பொறாத துரியோதனன் அஸ்தினாபுரியில் ஒரு மண்டபங்

கட்டுவித்து அதைக்காண வரவழைப்பது போல் பாண்டவர்களை வரவழைத்துச் சகுனியைக் கொண்டு சூதாட்டமாடி அவர்கள் நாடுநகர முதலிய செல்வங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு, அவர்களையும் அடிமையாக்கித் திரௌபதியையுஞ் சபையில் மானபங்கஞ் செய்தனன். அப்பொழுது திரௌபதையும் பாண்டவரும் சொன்ன சபதத்தைக் கேட்டுத்திரிதராட்டிரனும் மற்றவரும் பயந்து அடிமைத்தனத்தை நீக்கும்படி அவர்கள் மறுசூதாடிச் சயிக்கச்செய்து அவர்கள் உரிமையைப் பெறுதற்காக அவ்விடத்துள்ள பெரியோர்களுடைய கட்டளையின்படி பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமுஞ் செய்துவரச் சொல்லினர். அப்படியே சம்மதித்துப் பாண்டவர்கள் நாட்டைவிட்டுப் பிரயாணமாகிப் பலபல வனங்களை யெல்லாங் கடந்து சௌனக முனிவர் வனத்துக்குவந்து அவரிடத்தில் அட்சய பாத்திரம் பெற்று அவ்வனத்தை விட்டுநீங்கிப் பகாசுரன் தம்பியாகிய கிம்மீரணன் வனத்துக்குவந்து ஆங்கு சிலநாட் டங்கியிருந்து அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாகிக் காமிய வனத்துக்குவந்து அர்ச்சனனைப் பாசுபதாஸ்திரம் பெறச்செய்து அவ்வனத்தைவிட்டு அழகிய பூஞ்சோலைகளைக் கடந்து நாரதர் அகத்தியர் முதலிய மகருஷிகளினுடைய தரிசனம் பெற்று, அவர்கள் கூறிய புண்ணிய சரித்திரங்களைக் கேட்டுச் சந்தோஷித்துப் யின்பு வீமசேனனை, அளகாபுரியிலிருக்கிற பாரிசாத புட்பங் கொண்டு வரும்படி சொல்லி அவனால் அவ்வனத்தில் வாழுகிற துட்ட அரக்கர்கள் யாவரையுங் கொல்லச் செய்து, சந்தோஷங்கொண்டு தங்களுக்கு முன் துரியோதனன் முதலானவர் செய்த கொடுமைகளை நினைந்து வருத்தமுற்றுப் பற்பலவாறு யோசித்துக்கொண்டு காலங் கழித்துவந்தார்கள்.

ஒருநாள் மாலைப்பொழுதில் அர்ச்சுனனும் பாஞ்சாலியும் வனவேடிக்கை பார்த்து வரலாமென எண்ணங் கொண்டவர்களாகி ஆங்கு முனிவர்கள் தவஞ்செய்தொழுகும் அடர்ந்த ஓர் சோலைக்குட் சென்றார்கள். அதிற் கண்டார் மனங்கவரும் ஓர் நெல்லிக்கனி பழுத்திருக்கும் மரமொன்றைத் திரௌபதை பார்த்து இதுயாவர் கண்களையுங் கவரத்தக்கதாயும், மிக்க வாசனையுடையதாயுமிருக்கிறது, என அதிகப்பிரியமுற்று, அர்ச்சுனனை நோக்கி: இக்கனியைப்பறித்துத்தர வேண்டுமென்று கேட்டனள். இவ்வாறு பாஞ்சாலி சொல்லக்கேட்ட அர்ச்சுனன் உடனே அக்கனியைப் பறித்து அவனிடம் கொடுத்தான். அதைக்கண்ட ஆங்குள்ள முனிவர்களிற்சிலர். அர்ச்சுனனைப்பார்த்து அரசனே! இக்கனியானது அருந்தவ சிரேட்டராகிய மித்திர மகாமுனிவர் உண்ணுதற்கிசைந்தது. அதைச் சிறிதேனுஞ் சிந்தியாது இக்கனியைப் பறித்து விட்டாயே! இம்மரமோ தேவசங்கற்பத்தாலுண்டானது. இதன் கனியோ. இரண்டாண்டு பூவாயிருந்து இரண்டாண்டு காயாகி இரண்டாண்டு செங்காயகி, இரண்டாண்டு கனியாகி, இரண்டாண்டு மதுப்பெருக்குற்று இருப்பது. இவ்வாறாகப் பன்னிரண்டு நிரம்பியபின்னர் இம்மரத்தினடியில் அம்முனிவர்வந்து ஆண்டு தவஞ் செய்வர்; அச்சமயத்தில் அவர்கரத்தில் தானே வந்துவிழும் அப்பொழுது அதை எடுத்துப் புசிப்பர்.

அவ்வித அருமையான கனியை நீ கொய்து பழிக்காளாயினையே! என்றனர். அதைக்கேட்ட அர்ச்சுனனும் திரௌ பதையும் பயந்து நடுநடுங்கி என்ன செய்வதென்று

மயங்கி அழுது ஒருவாறுதேறிய அர்ச்சுனன் சுவாமீ! நான் மாதுசொற்கேட்டு மதிமயங்கி இக்கனியைப்பறித்துப் பழிதேடிக் கொண்டேன் அம்முனிவர் என்ன சாபமிடுவாரோ அறியேன் என்று மனம்வருந்திக் கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற தருமன், முதலான நால்வரும் அப்பூஞ்சோலைக்குச்சென்று அர்ச்சுனனை யுந்துரோ பதையையுங்கண்டு அவர்களால் ஆங்கு நடந்த செய்திகளையெல்லாந் தெரிந்து அளவில்லாத வருத்தத்தையடைந்து மௌனமுற்று நின்றனர்.

அவ்வாறு வருத்தமுற்று நின்ற தருமனைச் சகாதேவன் பார்த்து அண்ணா! ஏனிவ்வாறு வருத்தமுற்று நிற்கிறீர்கள்? பாண்டவர் சகாயனென்று கூறும்படியான ஸ்ரீமத் கண்ணபிரானுடைய உதவி நமக்கு எப்போது மிருக்கக் குறை என்ன ஏற்படக்கூடும்? அவருடைய உதவி நமக்கு இல்லாமற் போனாலன்றோ துன்பம் நேரும்? அவரை ஈங்கு நாமொருங்குகூடித் தியானித்தால் நமது குறையகலுமென்றனன். அப்பால் பாண்டவரைவரும் ஒருமை மனமாய்க் கண்ணபிரானை எழுந்தருள நினைத்தனர். உடனே கண்ணபிரான் பாண்டவரைப் பார்க்க வருவார்போற் சத்திய பாமையுடனே போந்தருளினார். அவரைக்கண்ட ஐவரும் தாய்ப்பசுவைக்கண்ட கன்றேபோல் மணங்கனிந்துருகி எதிர்கொண்டழைத் துபசரித்துத் தங்கள் குறையைத் தெரிவித்தனர். அதைக்கேட்ட கண்ணபிரான் மனமுருகிவருந்தி என்ன கொடியகாரியஞ் செய்துவிட்டீர்கள்? பெரியோர் சாபத்திற்குள்ளானீர்களே! என்செய்வேன்! நான் கடவுளுமல்லன். மந்திரவாதியுமல்லன். ஆயினும் பெரியோருரைத்த பழமொழியொன்று என் மனத்திற் றோன்றுகிறது. அந்தப்பழமொழியோ "உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்" என்பதுவே. இது வேதமொழியோ டொத்தது. ஆதலால் நீங்கள் ஐவரும் அம்மரத்தடியிற்சென்று உங்கள் மனக்கருத்தை உள்ளவாறு வெளியிடுவீர்களாயின் இக்கனி முன்போல் மரத்திற்போய் ஒட்டிக்கொள்ளும் என்று அக்கனியைத் தருமராஜன் கையிற்கொடுத்து உன்கருத்தை வெளியிடு வென்றார்.

தருமன் வாக்கியம்

உடனே தருமராஜன் தன்னிஷ்ட தெய்வமாகிய கண்ணபிரானை மனமொழி மெய்களால் வணங்கித் தருமமும் சத்தியமும், பொறுமையும், இக்கண்ணபிரானுமே என் சிந்தையில் நினைக்கும் அரும்பொருள்கள்: பழிபாவ முதலியவைகள் என் கருத்தில் விலக்கப்பட்ட பொருள்கள் என்று சொல்ல, அக்கனியிரண்டுமுழ முயர்ந்தது.

வீமன் வாக்கியம்

பின்பு வீமராசன் தன்கருத்தை வெளியிடத்துணிந்து பிறர்தாரத்தைத் தாய்போலவும், பிறர்பொருளை எட்டிக்காய் போலவும், பிறர் வசையுரைப்பது பெருமை யன்றெனவும் பிறர் துயரை எனது துயரெனவும் கருதுவேன். எனக்கு முடிவு நேர்ந்தாலும் யான் நினைப்பன இவைதாம் என்று சொல்லவே அக்கனி பின்னும் இரண்டு முழ முயர்ந்தது.

அர்ச்சுனன் வாக்கியம்

அப்பால் அர்ச்சுனன் தன்கருத்தை வெளியிடத்துணிந்து புழுக்கள் நிறைந்த கேவலமான இந்தச் சரீரத்திலிருந்து முயிரினும் ஆபரணமாகிய மானமே சிறந்தது ஏனெனில் உயிரானது மாறி மாறி வேறு வேறு சரீரங்களை யடையும் நிலைமையுடையது. மானமோ நீடுழி காலம் நிற்கும் நிலைமையையுடையது. ஆதலால் அம்மானத்தைக் காப்பதே கடனென்றுதான் நினைப்பதையல்லாது வேறொன்றுமறியேன் என்றுகூற அக்கனியின்னும் இரண்டுமுழ முயர்ந்தது.

நகுலன் வாக்கியம்

பின்பு நகுலன் தன்கருத்தை வெளியிடத்துணிந்து உயர்ஜாதியிற் பிறந்தவரானாலும், அழகிற் சிறந்தவரானாலும், தவ மிகவுடையவரானாலும் கல்வியும் ஞானமும் சிறிதுமில்லாதாரை முருக்கின் மணமில்லா மலரைப் போல் நினைப்பது என் கருத்தென்றான். உடனே அக்கனி பின்னும் இரண்டுமுழ முயர்ந்தது.

சகாதேவன் வாக்கியம்

பின்பு சகாதேவன் தன் கருத்தை வெளிடத் தொடங்கிச்சத்தியமேதாய்; ஞானமேதந்தை; தருமமே சகோதரன்; கருணையே தோழன் சாந்தமே மனைவி பெருமையே புத்திரன் இந்த ஐவரையுமே யல்லாது வேறொன்று உண்டென்று நினைப்பது என் சிந்தையின் கருத்தல்ல வென்றுகூற, அக்கனியின்னும் இரண்டுமுழ முயர்ந்தது.

திரௌபதை வாக்கியம்

பின்பு பாஞ்சாலி யென்னும் திரௌபதை தன் சிந்தையின் கருத்தை வெளியிடத் துணிந்து ஐம்புலன்கள் போற் பாண்டவரைவரும் எனக்குப் புருடராக இருந்தும், இன்னொருவனை எனக்குக் கணவனாயிருக்க வேண்டுமென்று என்னெஞ்சம் ஒருகாலத்திலெண்ணினது. ஆகையால் அழகிய இவ்வுலகத்தில் ஆடவர் என்ற வகுப்பாரிருக்கும்வரை மாதரைக் கற்புடையவாகளென்று சொல்லுதற்கு முடியாது என்று சொல்ல அக்கனி அம்மரத்தில்போய் ஒட்டிக்கொண்டது. அப்பொழுது, கண்ணபிரான் அதிசயமுற்றான் போல மகிழ்வடைந்து, மெய்ம்மையே மேலாகிய மொழியென்று மொழிந்தருளி ஐவரிடத்திலும் விடைபெற்றுத் தாம் துவாரகைக்குப்போய்ச் சேர்ந்தான்.

அப்பால் பாண்டவர் இப்படி வனசஞ்சாரமாய்ப் பன்னிரண்டு வருடமும் ஒருவருடம் அஞ்ஞாத வாசமுங் கழித்த பின்னர் துரியோதனன் முதலானோர்களால் அனேக துன்பங்களை யடைந்து தூதுவிடுத்து அவர்களோடு யுத்தம் புரிந்து ஜெயித்த, அத்தினாபுரியிற் சந்தோஷமாக விருந்து அரசாண்டு வந்தார்கள் என்று கூறி, வேறு காய்கனிகளைக்கொய்து புசிக்கும்படிச் செய்து, ஐவரையும் கூட்டிக்கொண்டு பன்னசாலைக்குப் புறப்பட்டனர். வரும்போது, முனிவரை நோக்கிச் சுவாமி மேற்குத்

திசையில் தெரிகிற ஒரு மரத்தின் நிழலில் கருப்பணஸ்வாமியையும் வடதிசையில் பேச்சியம்மையையும், தென்றிசையில் வயிரவனையும், கீழ்த்திசையில் காளியம்மையையும் பிரதிட்டை செய்துவைத்திருப்பது என்ன காரணத்துக்கென்று தன்மார்த்தன் கேட்க அதற்குச் சட்டைமுனிவர் ஐவர்களே! ஈங்குத் தேவருஷி முனி சித்தர்கள் வாசஞ்செய்கிறபடியால் சரக்கு வைப்பில்லாத இடங்கிடையாது. முன்னம் ஒவ்வொரு மகருஷிகளும் தைலவைப்பு, சரக்குவைப்பு, வகாரவைப்பு, முதலியவைகளைச் செய்து அவற்றை மறைத்து வைத்திருக்கிறார்கள். அதுபோலக் காலாங்கி முனிவரும் சில தைலவைப்புகளை முடித்துக்கிணறு ஒன்றுண்டாக்கி அக்கிணற்றில் தைலத்தை ஊற்றிப் பெரிய பாறையால் மூடி அதற்குக் காவலாக நான்கு திசையிலும் கருப்பணசுவாமி; *பேச்சியம்மை, வயிரவக் கடவுள், காளியம்மை இவர்களைத் தாபித்து வைத்திருக்கிறார் என்று கூறி, முனிவர் தம்மாச்சிரமத்துக்குச் செல்ல, ஐவரும் தங்கள் தங்கள் பன்ன சாலைக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

மற்றொருநாட் காலையில் நித்தியஸ்நான அனுஷ்டானங்களை முடித்துவரச் சூரசேனனைப் பன்னசாலையிலிருத்திவிட்டு மற்ற நால்வருஞ் சென்ற பின்னர்த் தேவஉலக ஸ்திரீயாகிய சுகந்தவல்லி என்பவள் ஓர்வேடுவமாதுபோ லுருவங்கொண்டு பன்னசாலையிற் றனியாக விருக்கிற சூரசேனனிடத்திற்சென்று அரசே! தங்களுடன் பிறந்தவராகிய தன்மார்த்த மகாராசா தங்களை ஏதோ அவசர நிமித்தமாகக் கூட்டிவரச் சொன்னார் இப்பொழுதே என்னோடு வரவேண்டுமெனப் புகல, அவ்வார்த்தையைக் கேட்ட சூரசேனன் நடுநடுங்கி என்ன விஷயம்? எதற்காகக் கூட்டிவரச் சொன்னார்? அவர்கள் சென்று இன்னும் சரியாக ஐந்து நாழிகை யாகவில்லையே! இது என்ன ஆச்சரியம்! அப்படி என்ன ஆபத்து அவர்களுக்கு வந்ததோ! இன்னும் செம்மையாக விசாரிப்போம் என்று நினைத்துப் பெண்ணே! என்னுடைய தமையன் என்னை யழைத்து வரும்படி கூறியதுசரியே. அவர்கள் எவ்விடத்திலிருக்கிறார்கள்? ஆங்கு என்ன விபரீதம் நடந்தது? விவரமாக விளம்புவாய்? என்று கேட்கச் சுகந்தவல்லி ஐயா! பெண்கள் மூவரும் உங்கள்தமையனும் தெற்கே ஓடுகிற கானாற்றின்கண் நீராடிக்கொண்டிருக்கிறார்கள். அப்பால் எனக்கு யாதொரு செய்தியும் தெரியவராது என்று கூற அதற்குச் சூரசேனன் இவளைப் பார்த்தால் இம்மலைகளில் வாழ்கின்ற வேடுவப்பெண் போலிருக்கிறாள். ஏதோ அபாயத்தினால் நம்முடைய அண்ணன் முதலானோர்கள் பக்கத்திலிருந்த இவளையழைத்துவர அனுப்பியிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஆனாலும் சென்று பார்த்துவரலாம் என்று அந்த மாயச் சுகந்தவல்லியாகிய வேடுவப் பெண்ணோடு பின் பற்றிச்செல்ல, அவள் சூரசேனனைக் கூட்டிச்சென்று கருங்கானலிற்கொண்டு போய்விட்டு மறைந்தனள். அப்போது சூரசேனன் திடுக்குற்றுத் திகைத்து ஆஹா! இதென்ன கனவோ! நனவோ! மாயமோ ஒன்றுந் தெரியவில்லையே! இவ்வனமோ மந்திர மிகுந்த தந்திரவனம்போற் தெரிகிறது. நம்மை அழைத்து வந்த பெண்ணையுங்காணோம்? என்ன செய்வேனெனப் பலவாறு புலம்பி வருத்தமுற்றுச் சில தூரஞ்செல்வதும், அப்பால் திரும்ப வருவதுமாக அங்கு மிங்கும்

---

* பேச்சியம்மை அறிஞரால் பேசப்படுபவளாகிய கீர்த்தி லட்சுமித்தாய்.

அலைந்துகொண்டிருந்தான். அச்சமயத்தில் அவனைக்கூட்டிவந்த மாயவேடுப் பெண்ணானவள் அதிக சௌந்திரிய சுய உருவத்தோடு பூரணமான கோடிசந்திரனுதயமானாற்போலச் சூரசேனன் முன்னம் வந்து தோன்றினள் அவளைக் கண்ட அதிக ஆச்சரியமடைந்து பெண்ணே நீ யார்? இவ்விடத்துக்கு வந்த காரணமென்ன? என்று வினவ, அதற்கு அப்பெண்மணியானவள் ஐயா நான் ஒரு தேவமாது என் பெயர் சுகந்தவல்லி. இவ்வனத்தின் பொய்கையில் நான் அனுதினமும் வந்து நீராடிச்செல்லும் வழக்கம். அவ்வழக்கப்படி ஒருநாள் நீராடிச்செல்லும் பொழுது தங்களுடை ரூபலாவண்யத்தைக் கண்டு மோகித்து எவ்விதமாவது தங்களைச்சேர்ந்து சுகிக்கவேண்டுமென்றும், அதற்கு ஏகாந்தமான நாள் எப்பொழுது வாய்க்கு மென்றும் நீண்டநாளாக எதிர்பார்த்த வண்ணமாக இருந்தேன். அது இன்றுதான் வாய்த்தது. ஆதலால் தங்களுடைய தமையன் முதலானோர்கள் காலை ஸ்நானஞ் செய்யச் சென்றதன்பின் நான் ஒரு வேடுவப் பெண் வேடங்கொண்டு தங்களைத் தங்கள் தமையனார் அழைத்துவரச் சொன்னதாக இவ்விடத்திற் கூட்டிவந்து மறைந்து வேடுவப் பெண்ணுருவை மாற்றி என் சுயரூபத்தோடு வந்து தோன்றினேன்.

ஆகையால் இப்பொழுதே நாமிருவரும் சரசல்லாபமாக இருப்போம். வாருங்கள். தடையேதும் புகல வேண்டாம் என்று கூறினள். அதைக்கேட்ட சூரசேனன் இஃதென்ன விபரீதமாகயிருக்கிறது. நாமோ தவத்தைக் கருதி இவ்விடத்திற்கு வந்திருக்கிறோம். அத்தவத்தைக் கெடுக்க இவள் வந்தவள் போலும்; இவளை விட்டுத் தந்திரத்தினால் தப்பித்து நமது பன்னசாலைக்குச் செல்லவேண்டுமே தவிர வேறொன்றும் வழியில்லை எனக் கருதிப் பெண்ணே! நாங்களிவ்விடத்துக்கு வந்து மண், பெண், பொன் என்ற மூவாசைகளையும், வெறுத்துத் தந்தாரத்தையும் நட்பினளாகக் கருதிப் பாதுகாத்துக்கொண்டு தவ நிட்டை புரிந்து இறவாதிருக்கும்படி காயகற்ப மூலிகைளைப் புசித்துக்கொண்டிருக்கிறோம். அவ்விதமிருக்க எனக்கு உன்மீது எக்காரணத்தைக் கொண்டு மோகம் ஏற்படக்கூடும்? என்று சொல்ல அதற்கு அப்பெண்: அரசே! நீர் சொல்லிய வார்த்தையானது ஓர் வாலிபஸ்திரீ தன்னை மருவி அணையவேண்டு மென்று வலியவந்தால் நீ கிழவி என்று சொன்ன கதை போலிருக்கிறது. நீங்கள் இறகாதிருக்கத்தவத்தைச் செய்து காயகற்பஞ் சாப்பிடுகிறதாகக் கூறுகிறீர்கள்; எத்தனை ஊழிகாலமிருந்தாலும் பிறந்தவரிறந்து போவது திண்ணமென்று அறியீரோ? அல்லமலும் பெண்களின் ஆசையை வெறுத்த தனாற்றான் பெண்களோடுகூடி இவ்விடத்துக்குவந்து வசித்து வருகிறீர்களோ? ஆ! ஆ! இது என்ன ஆச்சரியம்! உம்முடைய வார்த்தை நன்றாயிருக்கிறது! இவ்வித வார்த்தைகளாகிய மாயாவித்தைக ளெல்லாம் என்னிடத்திற் பலியாது. என்னை மருவிச்சேரும். காலதாமத மாகின்றது என்றுகூற, சூரசேனன் இவள் நம்மைவிட்டு இலேசாகப் போகமாட்டாள் போற்றெரிகிறது. எனப்பலவாறு ஆலோசித்துப் பின்பு ஒருவாறு மனந்தேறி மாதே! இவ்வனமோ தபோதனர்கள் வாழ்கின்ற இடம். இவ்விடத்தில் உன்னைச் சேர்ந்து சுகிப்பது கூடாதகாரியம் ஆதலால் இத்தானத்தை விட்டகன்று எதாவது ஒரு நகரத்திற்போய்சேர்ந்து ஆங்கு நாமிருவரும் விவாகஞ் செய்து கொண்டு அப்பால்சேருவது தான் உத்தமமாகும். அதற்காக விரைந்து உடனே செல்லுவதற்குப் பெரியோர்களால் கொடுக்கப்பெற்ற ஆகாயமனகுளிகைகள் என்பாலிருக்கின்றன.

அக்குளிகைகளில் ஒன்றை எடுத்து வாயிற்போட்டுக் கொண்டு எவ்விடத்திற்குச் செல்லவேண்டுமானாலும் அவ்விடத்திற்குக் கனமார்க்கமாய்ப் போய்ச் சேரலாம். அஃது என்னுடைய பன்னசாலையி லிருக்கிறது. அதை எடுத்துவந்தால் இப்பொழுதே பிரயாணமாகிச் செல்லலாம். உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்க, அதற்கு அப்பெண் அரசே! அப்படியானால் நான்சென்று எடுத்துவருகிறேன் என, உனக்குக் குளிகை யிருக்கிற இடந்தெரியாது. நானே சீக்கிரஞ் சென்று எடுத்து வருகிறேன். இவ்வாறு இருவரும் தர்க்கித்து முடிவாகச் சுகந்தவல்லி நீர் இவ்விடத்திலேயே இரும். நானேசென்று எந்தவிதமானாலும் அக்குளிகையிருக்கிற இடத்தைத் தேடிக்கண்டெடுத்து வருகிறேன் என்று செல்லச் சூரசேனன் அவளுக்குத் தெரியாது அவளைப் பின்பற்றிச் சென்று தன் பன்ன சாலையில் நுழைந்துக்கொண்டனன்.

அதைக் கண்ட தேவமாது ஓகோ! இவன் நம்மை ஏய்த்துத் தந்திரமாக ஈங்கு வந்து நுழைந்து கொண்டனன், என்று வெட்கமுற்றுத் தன் எதாஸ்தானம் போய் சேர்ந்தனள். அப்பால் சூரசேனன் இது செய்திகளை நால்வரிடத்திலுந் தெரிவித்துக் காய்கனிகளை அவர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டு பசிதீர்ந்தனன். அதன் மேல் ஐவரும் சட்டை முனிவரது ஆச்சிரமத்துக்கு வந்து அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒருநாள் தன்மார்த்தன் முதலானோர்கள் முனிவரை நோக்கிச் சுவாமீ! ஆகமவேதங்களிற் கூறியுள்ள, பாசஞான பசுஞான பதிஞான வியல்புகளைக்கூறியருளவேண்டுமென்று கேட்க, அதற்கு முனிவர் அன்பர்களே! நீங்கள் கேட்ட விஷயங்களை விரித்துச் சொல்ல வேண்டுமானால் அநேக நாள் வேண்டும். நீங்கள் இவ்விடத்தை விட்டுப் புறப்படுகிற நாள்! சமீபித்துவிட்டபடியால் மிகச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லுவார்.

பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்னும் மூன்றனுள், பாசஞானமாவது:- வேதங்கள் சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் கலைக்ஞானங்கள் உச்சரிக்கத்தக்க வசிய மந்திரங்கள் முதலான சொற்பிர பஞ்சமும், நிலமுதல் நாதமீறாகிய பொருட்பிரவஞ்சமும் ஆகிய இவைகளைப் பற்றி யுண்டாகும் ஏகதேசஞான மேயாம். பசுஞானமாவது:- மேற்கூறிய சொற்பிர வஞ்சத்தையும், பொருட்பிர வஞ்சத்தையும் பொருந்திய ஆன்மா இப்பிரவஞ்சங்கள் தனக்குள் வியாப்பியமென்றறிந்து நீங்கித் தான் அவற்றின் மேற்படுதலால் அது பற்றியுண்டாவதோர் செருக்கினால் நானே கர்த்தா:- அதாவது நான் பிரமமென்று கூறப்பெற்ற சிவசமவாதமென்பது, பதிஞானமாவது:- தானேதற்பிரகாசமும் தன்னையும் விளக்கி ஆன்மாவையும் விளக்கிட் பரப்பிரகாசமுமாய் நின்று எல்லாப் பொருளையும் இனிது விளக்குவது, அந்த ஞானமாகிய பிரகாசத்தைப் பெற்றவர். அப்பதிப் பொருளை ஞான திருட்டியாற் காண்பார்கள். அதே முத்தியெனவும் பெறும்.

அம்முத்தியை யடையவேண்டுமானால் முதலிற் பலகற்ப மூலிகைகளால் தேகத்தைச் சித்தி செய்து கொள்ள வேண்டுவது அவசியமாகும். அதற்காகச் சில கற்பமுறைகளையுங் கூறுகிறேன் கேட்பீர்களாக. அதாவது ஸ்ரீசுந்தரமகாலிங்க சுவாமி கோவிலுக்கு வடக்குத் திசையில் அம்பிடுதூரத்தில் வெண்ணாவல் மூலிகை என்று

ஒரு விருக்ஷமிருக்கிறது. அதன் பூ காய் கனி இம்மூன்றும் வெண்மையாக விருக்கும். அவ்விருக்ஷத்தின் மேற்பட்டையைப் போக்கி அடிப்பட்டையை வெட்டிக் கொண்டு வந்து குழித்தைலமிரக்கி அத்தைலத்தில் இலேசான தாம்பிரத் தகட்டைக் காய்ச்சி நாற்பதுதரந் தோய்க்க வெள்ளியாகும். அதைச் செந்தூரமாக்கி மேற்படி பட்டைத்தூளிற் கலந்து மூன்று நாள் ஆறு பொழுது புசிக்கக் காயசித்தியாகும் இதைத் தவிர இன்னுமொரு முறையுண்டு அதாவது-

அந்த வெண்ணாவல் விருக்ஷமிருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் வனப்பிரமி என்ற ஒரு மூலிகை யுண்டு. அது கொடியாகப் படர்ந்து இலை நெல்லி யிலைபோலத் தடிப்பாக இருக்கும். அதை ஞாயிற்றுகிழமையும் பூச நக்ஷத்திரமுங் கூடிய சுப தினத்தில் சாப நிவிர்த்தி செய்து சமூலமும் பிடுங்கி வந்து சூரணித்து முப்பது நாட் புளித்தகாடியிற் கலக்கிப் புசித்துவரக் காயசித்தியாகும். மற்றொரு முறையுமுண்டு. அதாவது, அந்த வனப்பிரமி கொடியிருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் முப்பிரண்டை என்றொரு மூலிகை உண்டு. அது சாதாரண பிரண்டை போல் முப்பட்டமாயிருக்கும். அதைக் கொண்டு வந்து சாறெடுத்துச் சூதத்திற் சுருங்கிடச் சூதங்கட்டும். உடனே அதை எடுத்து நாகத்திற் கொடுக்க நாகங்கட்டும் நாகஞ் சூதம் இவ்விரண்டுக்கும் எடைக்கெடை கெந்திகூட்டி மேற்படி சாற்றாலாட்டிக்குக்குட புடமிடச் செந்தூரமாகும்.

அச்செந்தூரத்தைச் சாப்பிட்டுவரக் காயசித்தியாகும், என்று கூறியருள, அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் முனிவரது சொற்படி காயகற்ப மூலிகைகளைப் புசித்து தவஞானார்த்தங்களை அப்பியாசித்துக் கொண்டு வரும் நாள்களில், ஒருநாள் ருஷீஸ்வரர் ஐவர்களையும் நோக்கி இராசபுத்திரர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருடகால மிருப்பதாக இவ்விடத்துக்கு வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள் வரை ஒரு வருட காலஞ் சரியாய் விட்டது. நாமும் இனித் தவம்புரிய வேண்டியதாகவுமிருக்கிறது. ஆகையால் இனிமேல் நீங்கள் இவ்வனத்கடுத்த, இராமதேவர் வனத்திற் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளித் தம்பக்கத்திலிருந்த சீடர்களி லொருவனை நோக்கி சீடனே! இவர்களைவரையும் அழைத்துச் சென்று இராமதேவரிடத்தில் விடுத்துவருவா யென்று உத்தரவு செய்ய; அவ்வுத்தரவின்படி அவர் சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் சட்டை முனிவரை அன்புற வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள், என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும் நாகார்ச்சுனாதி முனிவர் சுவாமீ! சட்டை முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும், ஞானானந்த உபதேசங்களையும், காய கற்ப முறைகளையுங் கேட்டு இன்பமாகிய சாகரத்தில் மூழ்கினோம். இனி ராமதேவர் வனத்தில் நடந்த சரித்திர ஞானகற்ப முறைகளை அன்புகூர்ந் தருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க, முனிவர் சொல்வராயினர்.

இருபத்தாறாவது,
சட்டை முனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தேழாவது

இராமதேவர் சருக்கம்

பதினான்காவது வனம்

காமதகனன் கலந்துறையுங் கருணைச் சதுரகிரிதனிலே
ராம தேவர் வனந்தனிலே நயமார் தன்மார்த் தனமுதலோர்
சேம மாகப் புகுந்துபொய்கைசேருந்தவசிவேடத்தோன்
நேம வுண்மைத் தவ நிலைகொள் நீர்மை கேட்ட துரைத்திடுவாம்

கேளுங்கள் முனிவர்களே! சட்டை முனிவர் சீடனும் தன்மார்த்தன் முதலான ஐவரும், தென்கீழ்த்திசையை நோக்கிப் பிரயாணமாகிச் சுணங்கள் மேட்டையும் செம்பாறைத் தயிலக் கிணற்றையும் பேச்சிபாறையுங் கடந்து *கருப்பண சுவாமி சன்னதிக்கு வந்து அவரைத் தரிசித்து அப்பால் மேற்கு முகமாகச் சென்று அரிய தவ முனிவர்கள் சமாதியிலிருக்கிற ஓட்டைப் பலாநிழலாகிய ஒப்பிலாச்சாயையையும், பசுத்தொழுவையுந்தாண்டி நாவலூற்றையும், பாம்புக்கேணியையும், பார்த்துப் பெரிய பசுத்தொழுவுக்கு வந்து தென்திசையில் வண்டுகளானவை புஷ்பங்களிலிருக்கிற தேனையருந்திப் பற்பல இராகங்களைப் பாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, மயில்களானவை தோகையை விரித்து ஆடிக் கொண்டிருக்கும்படியான மணமிகுந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த, இராமதேவ ருஷீஸ்வரரது வனத்துட்சென்று ஆங்குத்தம் மாச்சிரமத்தி லெழுந்தருளி யிருக்கிறஇராமதேவரைக் கண்டு, அவரடியிணை மலரையன்புற வணங்கி நிற்க, உடனே ருஷீஸ்வரர் ஐவர்களுக்கும் ஆசிவசனங்கூறி அவர்களை யழைத்து வந்த சட்டைமுனிவர் சீடனால் தன்மார்த்தன் முதலானோர் களுடைய சமாசாரங்கள் முழுதுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பிய பின்பு ஐவர்களையும் வீற்றிருக்கும்படி செய்து கூறுவார்.

தன்மார்த்தன் முதலான ஐவர்களே! நீங்கள் இவ்வனத்தில் எவ்வளவு நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷயம் உங்களுக்குத்தெரிய வேண்டுமெனக் கேட்க, அதற்குத் தன்மார்த்தன் முதலிய ஐவரும் சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒரு வருடகாலமிருந்து ஞானோபதேசங்களையுங் கற்பங்களையும் கேட்டுத்

---

*கருப்பணன்-(கரு-பணம்) பிள்ளைச் செல்வத்தையும், பொருட் செல்வத்தையும், வழிபடுவார்க்கருளும் இரணிய கருப்பனாகிய தமநியன்

தெரிந்துகொள்ளும் பொருட்டு வந்தோமென்று புகன்றனர். அதைக்கேட்ட முனிவர் அப்படியானால் நீங்கள் இவ்விடத்தில் வாசஞ் செய்வதற்கு இதன் வடபக்கத்தில ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலை யமைத்து அதில் வாசஞ் செய்து வருவீர்களென்று உத்தரவு செய்ய உடனே ஐவர்களும் முனிவர் சொற்படி ஐந்தடுக்காகப் பன்னசாலை யமைத்து அதில் வாசஞ்செய்து கொண்டு தினந்தோறும் அவரிடத்தில் ஞானோபதேசங்களைக் கேட்டு அவ்வாறே நடந்து வந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒரு நாள் ஐவரும் அவ்வனத்தின் வள விசேடங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது ஆங்கொரு புடையில் செங்கலைப் போலவும், மாத்திரைக் கற்கள் போலவும், உயரமாகவும், ஒரு அடுக்குமேடு இருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியமுற்று முனிவரது ஆச்சிரமத்துக்குவந்து அவரிடத்தில் அவ்வதிசயத்தை என்ன வென்று கேட்க, இராமதேவர் சொல்லுவார். ஐவர்களே கோபாலபுரமென்றொரு பட்டணத்தில் குலசேகரனென்றொரு வர்த்தகனிருந்தான், அவன் பிறருடைய பொருளை வஞ்சனையினாற் களவு செய்யுந் தொழிலையே பிரதானமாகக் கொண்டு அக்களவினால் வரும் பொருளை மிகுதியாகச் சேர்த்து அதனாற் கோடீஸ்வரனாகிக் குமுதமதி யென்னும் ஓர் அழகிய மங்கையை விவாகமுடித்து மனமகிழ்ச்சியோடு வாழ்ந்து வருநாள்களில் அவன் மனைவியாகிய குமுதமதி கருப்பமுற்றுப் பத்து மாதமும் பூரணமானவுடன் நல்ல சுபதினத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துக் குணநிதான னெனப் பெயரிட்டுச் சகல வேத சாஸ்திரங்களையும் ஐயமறக் கற்கும்படி செய்து வளர்த்து வருகையில் குணநிதானனென்னும் சிறுவனுக்குப் பன்னிரண்டு வயதாகியது. அப்போது தாய் தந்தையராகிய குலசேகரனுங் குமுதமதியுங் காலஞ் சென்றார்கள்.

அப்பால் குணநிதானன் சகலவேத சாஸ்திரங்களையுங் கற்றவனாகையால் தருமவழியொழுகித்தியாகியென்று வருவோர்க்கெல்லாம் நாஸ்தியென்று சொல்லாமல் அறுசுவையோ டன்னங்கொடுத்து விசேஷ தர்மங்களைச் செய்துவந்தான். இப்படி நிகழும் நாளில் அவனுக்கு வயது இருபதாயிற்று. அப்போது குணநிதானன் காமுமின்னார்களின்பமே கதியெனக் கருத்துட் கொண்டு அவர்கள் மனங்கோணாத வண்ணம் வேண்டிய ஆடையாபரண ஐசுவரியங்களைக் கொடுத்து வீண்செலவுகளைச்செய்து தன்னிடத்தில்யாதொரு பொருளுமில்லாமற் போக நாடோடியாக அலைந்து முடிவிலே பிக்ஷை எடுத்துச் சீவனஞ்செய்து கொண்டு வருநாளில், ஒருநாள் ஆ! ஹா! நான் பிறந்ததும், செல்வமாக வளர்ந்ததும், அநேக வேத சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டதும், அவ்வாறு கற்றுக்கொண்டதன் பயனால் உயர்வான ஒழுக்கத்தைப் பெற்றுத்தான தருமங்களைச் செய்ததும், பின்பு காமமயக்கத்தினால் எல்லா ஐசுவரியங்களையு மிழந்ததும், விதிவசமென்று நினைத்து வியாகுலமுற்று ஒருவாறுதேறி இனிமேல் நாம் பொருளைச் சம்பாதிக்க வேண்டியதைத்தவிரவேறொன்றுஞ் செய்யவேண்டியதில்லை. ஏனென்றால் "முனிவருமன்னரு முன்னுவ பொன்னால் முடியும்" என ஆன்றோரருளிச் செய்திருப்பதாலென்று துணிந்து, நல்வழியிற் சம்பாதிக்கத் தெரியாமல் தன்னுடைய பிதாவின் தொழிலாகிய களவையே கைக்கொண்டு பல பல இடங்களுக்குச் சென்று

எவ்விதத்தினாலாவது திரண்ட பொருளைச் சேகரித்துக்கொண்டால், அப்பொருளை வைத்து நீடித்து ஆயுள் பரியந்தம் சுகமாக மகிழ்ச்சியுடன் இம்மை மறுமைப் பயன்களை நிராட்சேபமாக அனுபவித்து வாழலாமெனக்கருதி அதற்குத்தக்க சூழ்ச்சியை நினைந்து தன்னூரை விட்டகன்று பற்பல நகரங்களெல்லாஞ் சுற்றித்திரிந் தலைந்துகொண்டிருந்தான்.

இஃதிப்படியிருக்க, இராமராஜபுர மென்னும் நகரத்தைப்பரிபாலனஞ் செயதுவருகிற சந்திர சேகரமகாராஜன் மந்திரி முதலானோர் புடைசூழச் சிம்மாதனத்திலிருந்து நீதிவழுவாது அரசு புரிந்து வருநாளில் தனக்கு நீண்ட நாள்களாகப் புத்திரப்பேறில்லாது ஒரு தவசிரேஷ்டரது கிருபையால் ஒரு பெண்மகவைப்பெற்றுக் குமுதவல்லி என்று பெயரிட்டு சகல சாஸ்திரங்களையுங் கற்பித்து அருமையாக வளர்த்து வருநாளில் அப்பெண்ணுக்குப் பெதும்பைப்பருவங்கடந்து மங்கைப்பருவம் வந்தது. அதைக் கேள்வியுற்ற பல வரசர்களும் விவாகஞ் செய்யும் பொருட்டு வந்து அப்பெண்ணை மணம் பேசினார்கள். அதற்குப் பெண்ணின் பிதாவாகிய சந்திரசேகர மகாராஜன், அரசர்களே! இப்பெண்குழந்தை ஒன்று தானிருக்கிறது. எனக்குப்பின் இவ்விராச்சியத்தையாள்வதற்கு ஆண்குழந்தையில்லை. ஆகையால் இப்பெண்ணை விவாகஞ்செய்து கொள்ளுகிறவர்கள் அரசர்களானாலும் தவசிரேஷ்டர்களானாலும் சரியே. அவர்கள் இவ்விடத்தில் வந்திருந்து விவாகஞ் செய்து கொண்டு எனக்குப்பின் இந்நகரை அரசுபுரிய வேண்டும். அல்லது அப்பெண் வயிற்றிற் பிறக்கிற ஆண்குழந்தைக்காவது இளவரசுப் பட்டஞ் சூட்டவேண்டும். இதைத்தவிர, என் புத்திரியை மறு நகரத்துக்குச்சென்று வாழும்படியாக விவாகஞ்செய்து கொடுப்பதில்லை என்று கூறினன். அவ்வார்த்தைகளை மணம்பேசவந்த அரசர்களெல்லோருங் கேட்டு இது நமக்காகாத காரியமென நினைத்துத் தங்கள் தங்கள் நகரத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

அப்பால் பல நகரங்களிலுஞ் சுற்றித்திரிந் தலைந்து கொண்டிருந்த குணநிதான னென்னுந் திருடன், அவ்விராமராஜபுரநகரத்தின் விசேடங்களைக் கேள்வியுற்று ஆங்குச்சென்று வேவுகாரர் மந்திரிகள் முதலானோரிடத்தில் தந்திரமாய் வார்த்தையாடித் திரவிய உளவுகளையறிந்து இவ்விடத்திற் சிலகால மிருக்க வேண்டுமென்றெண்ணி அரசனையடுத்து பொக்கிஷசாலைக்கு அதிகாரியாக வோர் வேலையிலமர்ந்து நீண்டநாள் இருந்து, ஒருநாள் அப்பொக்கிஷத்திலுள்ள திரவியங்களையெல்லாம் திருடிச் செல்வதற்றகு எதிர் பார்த்துக்கொண்டிருக்குந் தருணத்தில் முன்பு அரசன் குமாரத்தியை வதுவை செய்துகொள்ளச் சில அரசர்கள் கேட்டுவந்ததற்கு அரசன் மறுமொழியாகக் கூறியயாவும் ஆங்குள்ளவர்களாற்றெரிந்து ஆலோசிக்கிறான்.

நாம் இப்பொழுது மொத்தமாக இப்பொக்கிஷ சாலையிலிருக்குந் திரவியத்தை எவ்வாறாயினும் அபகரித்துக்கொண்டு போக முடியாதே! தெய்வகதியால் பலவித உபாயத்தினால் ஒருக்கால் அபகரித்துக் கொண்டு போனாலும், அரசன் இலேசாக நம்மை விட்டுவிடுவானா! விடமாட்டான். உடனே கண்டுபிடித்து நம்மைச் சிரச்சேதஞ் செய்துவிடுவான். ஆகையினால் இத்தொழில் நமக்கு வேண்டாம். இவ்வரசன் புத்திரியை

எவ்விதமாவது, நாம் விவாகஞ் செய்துகொள்வோமானால் இந்த ராச்சியம் முழுதும் நமக்குச் சொந்தமாகும். அப்போது யாதொரு கவலையு மில்லா திருக்கலாம் என்று உறுதிப்படுத்திக்கொண்டு அவ்வேலையினின்று நீங்கி அரசனிடத்தில் விடைபெற்று வெகுதூரத்திற்சென்று ஆங்கொரு கிராமத்தில் சிறிது காலம் வசித்துக் சடைமுடிகாவி முதலானவைகளாலலங்கரித்து மாத்திரைத் தண்டு கமண்டலதாரியாய் ஓர் பெரிய தவசிரேஷ்டரைப் போலுருவங் கொண்டு திரும்ப இராமராஜபுர நகரத்தில் வந்து ஓர் மடத்தில் இருந்தான். பின்பு அவன் அன்னம் ஆகாரமற்ற பெரியோர்களைப்போற் பாவனைகளைக் காண்பித்து இரவு பதினைந்து நாழிகைக்குமேல் வெளியே சென்று, எதையாவது வாங்கிப் புசித்துக்கொண்டு மடத்தில் வந்து ஆங்கு ஓர் தூணிற்சாய்ந்து நேத்திரங்களைமூடி நிட்டையிலிருப்பவரைப் போல மோனமுற்றிருந்தனன். அதைக்கண்ட அந்நகரத்து ஜனங்கள் யாவரும், அவ்வஞ்சக சந்நியாசியைத் தரிசிக்கப்போவதும் வருவதுமாக இருப்பதைத் தெரிந்த அரசன் வந்து பார்த்து அவனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து இம்மகானுபாவர் சிறுபிராயமாகவும் தவத்தில் மிகுந்தவ ராகவு மிருக்கிறார்.

இவரை நம் அரண்மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென நினைத்து வேவுகாரர்களால் பல்லக்கைக்கொண்டுவரச் சொல்லி அதில் எழுந்தருளி யிருக்கச் செய்து அநேக மங்கள வாத்தியங்களுடன் தன தரண்மனைக்கழைத்துச்சென்று தகுந்த ஆசனத்திலிருத்தி சோடசோபசாரத்துடன் மனைவி சுற்றத்தார் முதலானோர்களுடன் பணிந்து தன்புத்திரி குமுதவல்லியை அந்த யோகிக்கு விவாகஞ் செய்துகொடுக்கத் தீர்மானித்து நல்ல சுபமுகூர்த்தத்தில் திருமணமுடித்து வைத்தனன். அப்பால் மணஞ் செய்து கொண்ட இருவரும் மனவொற்றுமையாக மகிழ்ச்சியோடு இல்லறம் வழுவாது வாழ்ந்து வரு நாள்களில், குமுதவல்லியானவள் கருப்பமுற்றுப் பத்துமாதமும் பூரணமானவுடன் ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அதைக்கேள்வியுற்ற அரசன் மிக மகிழ்ச்சியுற்றவனாகி அக்குழந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளனைத்தும், வழுவாது செய்து சந்திரோதயனென நாமகரணஞ் சூட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். அப்படியிருக்க ஒரு நாள் குமுதவல்லியின் கணவனான குணநிதான யோகிக்கு அவனது முன்னோர்கள் சாதி வித்தியாசம் பாராட்டாமல் பசித்து வந்தவர்கெல்லாம் பந்தி வஞ்சனையின்றி அறுசுவை யுண்டியளித்து வந்த தருமத்தின் துணையால் ஓர் எண்ணந் தோன்றிற்று.

அதாவது நாமிந்தப் பொய்ம்மையாகிய தவவேடங் கொண்டதற்கு இத்தனை பெருமையும், பூசிதையுமிருக்குமானால் மெய்ம்மையாகிய தவவேடத்திற்கு எத்தனை பெருமையும் பூசிதையுமுண்டாகும் என்பதே அவன் கெட்டவழியிற் றிரும்பிய காலத்திலும் அவனையறியாமல் தடுத்தாண்டு வந்த முன்னைத் தருமம் இச்சமயத்தில் அவனை மிகவும் ஊக்கப்படுத்தவே உண்மைத் தவஞ் செய்ய வேண்டுமென நின்னத்துச் சமயம் பார்த்துக் கொண்டிருந்து ஒருநாளிரவு பதினைந்து நாழிகைக்கு மேல் எவரும் அறியாது அந்தப் புரத்தை விட்டகன்று இம்மலைக்கு வந்து சேர்ந்தான். வரவும் இவ்விடத்திலிருந்த மகேசரிஷீஸ்வரருடைய சந்நிதான விசேஷத்தால் அவரையடைந்து ஞானோபதேசம் பெற்று மகாசித்தனாகி அவர் செய்யும்படியான வகார

வேலைகளைக்கற்றுத் தானுஞ்செய்ய நினைத்து அநேக மூலிகைகளைக் கொண்டு வந்து தைலமிறக்கி உலோகங்களிற், கொடுத்து அவைகளை யுருக்கிப் பாளம் பாளமாகவூற்றிச் செங்கல் போலறுத்து மலைபோலடுக்கி வைத்தனன். அதைக்கண்ட மகேசருஷி இவன் பூரண சித்தனாகி விட்டானென்று எண்ணி மகிழ்வடைந்து அவனுக்குக் குணநிதான மகருஷி எனப் பெயரிட்டழைத்துப் புகழ்ந்து அந்தத் தங்கப் பாளக் கற்களை மானிடர் கண்ணுக்கு தோற்றாதபடி கருங்கல்லாகச் சபித்து அத்தா-த்தைவிட்டுக் குண நிதான மகருஷியையழைத்துக் கொண்டு மேற்குத் திசைக்கட்சென்று ஆங்கு வாசஞ் செய்து கொண்டிருந்தனர்.

அப்பால் இராமராஜபுரத் தரசனாகியசந்திரசேகரன் தன் மருகனாகிய முனிவனைக் காணாது நாடுநகர் முதலான இடங்களிலெல்லாம் வேவுகாரராற் றேடியும் அகப்படாததினால் மனமிக வருத்தமுற்றுப் பின்பு ஒருவாறு மனந்தேறித் தன் பேரனாகிய சந்திரோதயனுக்கு இளவரசுப்பட்டங் கட்டி புருடனைப் பிரிந்த குமுதவல்லியின் மனதைப் பல சந்தோஷ வார்த்தைகளாற் றேற்றிக்கொண்டு இராச்சிய பரிபாலனஞ்செய்து வந்தான் என்று கூறி யருளினார். அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர்களாய் எழுந்து முனிவரைப் பன்முறை வணங்கி விடைபெற்றுப் பன்ன சாலைக்குப் போயிருந்தார்கள்.

மறுநாட்காலையில் தன்மார்த்தன்முதலான ஐவரும் நித்தியஸ்நான அனுஷ்டான ஜெபதபங்களை முடித்து வந்த பிறகு சூரசேனனைத் தன்மார்த்தன் முதலான நால்வரும் காய், கனி, கிழங்குகள் கொண்டுவர அனுப்பித்தனர். அவன் அவர்கள் சொற்படியே சில தூரஞ் சென்று காய்கனிகளைப் பறித்து, ஆங்கோரிடத்தில் கருடன் கிழங்கோடு முளைத்திருந்த வள்ளிக்கிழங்கைத் தோண்டி யெடுத்து அவற்றைக்கொண்டு பன்ன சாலைக்கு வந்து தன்மார்த்தன் மனைவி தனமதி கையிற் கொடுத்தனன். அவள் வாங்கி காய் கனிகளைப் பாகம்பண்ணி, கனியுடன் நால்வருக்கும் படைத்தனள். உண்ட நால்வரும் உடனே மூர்ச்சித்துக் கீழே விழுந்தனர். அதைக்கண்ட தனமதி வாய்விட்டலறி அழுது கொண்டு இராமதேவரிடத்திற்போய் நடந்த செய்தியைத் தெரிவித்தாள். அவர் சிறிது நேரம் அகமுகமாயிருந்து உண்மையை யுணர்ந்து அம்மா! கருடன் கிழங்கு என்னுமோர் விஷகிழங்குகட் கிடையிலுண்டாயிருந்த வள்ளிக் கிழங்குகளைக் கொண்டுவந்து வேக வைத்து அதில் தேன்விட்டுப் பிசைந்து சாப்பிட்ட தன் காரணமாக மூர்ச்சித்திருக்கிறார்கள்; இதோ எதிரே முளைத்திருக்கிற சஞ்சீவி மூலிகையில் ஒருபிடி இலையைக் கிள்ளிக்கொண்டுபோய் சிரசிலிருந்து பாதம் வரைக் கசக்கித் தடவினால் அம்மயக்கந் தெளிந்துவிடும் ஆகையால் நீ அஞ்சவேண்டாமென்று அவளைத் தேற்றிப் பன்னசாலைக்குப் போகச் சொல்லிவிட்டுப் பின்னாலே ஒரு சீடனையு மனுப்பினர். அவனும் மூலிகையுடன் போய் இராமதேவரது கட்டளைப்படி தன்மார்த்தன் சூரசேனன் என்னும் இருவருக்கும் சிகிச்சைசெய்து முதலில் அவர்களை எழுப்பிவிட்டு, தனமதியால் அம்மூலிகையைக் கொண்டு சுகமதி குணமதி யென்னும் இருவருக்குஞ் சிகிச்சை செய்வித்து அவர்களையும் எழுப்பி வைத்து உறங்கி யெழுந்தவரைப்போல வெழுந்திருந்த நால்வரையுங் கண்டு மகிழ்ந்து சென்றாள்.

அப்பால் தனமதியானவள் மிகவும் சந்தோஷித்து அந்நால்வரிடத்திலுங் கீழ்ப்போன செய்திகளனைத்தையுந் தெரிவித்தனள். பின்பு ஐவரும் இவையெல்லாம் ஊழ்வினை வசமென்று தெளிந்து வேறு காய்கனிகளைக் கொண்டு வந்து அருந்திப் பசிதீர்ந்து முனிவராச்சிரமத்துக்குச் சென்று அவரை வணங்கி அவரனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒருநாள் ஐவரும் முனிவரை நோக்கிச் சுவாமீ! உலகத்திலுள்ள மக்களினத்தவ ரனைவரும். ஒரே குலத்தின ராவரென்றும், முன்னைக் காலங்களில் இனப் பிரிவுண்டா யிருந்ததேயில்லை யென்றும் பெரியோர் கூறுகின்றனரே! அதன் விவரத்தை யருளிச் செய்ய வேண்டும்? என்று கேட்டனர். அதற்கு முனிவர் ஐவர்களே! உலகத்திலுள்ள பல்லுயிர்களுள்ளேயும் மக்களே உயர்ந்தவராவர். நாணுடைமை, அறுசுவையுண்டிகளை யாக்கிக் கொள்ளுதலுடைமை, அணையிற்றுயில லுடைமை, மணந்து வாழ்தலுடைமை, மக்களோடு மகிழ்தலுடைமை, ஆராய்ந்தறிதலுடைமை, முதலிய செய்கைகள் பிறவுயிருக்குண்டா யிருக்கவில்லை. சிறப்பியல்பாகிய உயர்ந்த இந்நற்குண நற்செய்கைகளையுடைய மக்களே பகுத்தறிவுடைமையாற் பெருமையுஞ் சிறப்பும் மேன்மையுமுடையவராயினார். அவரனை வரும் இறைவனால் ஒரு தரத்தினராகவே படைக்கப் பட்டிருக்கின்றார்.

ஆகலின் படைப்புக்காலந் தொட்டு மானுடப் பிறவியில் ஏற்றக் குறைச்சல்கள் காணப்படாமையின் சாதிபேத முளதெனக் கூறவழியில்லை. ஆனால் மண்ணிடைக்-கரிசல், உவர், வெள்ளை, மண், செம்மண், மணல், சரல் முதலிய பலபேதங்களைக்காணலாம், ஒளிக் கற்களில் ஒன்பது வகைக்கற்களுள்ளன வென்பது வெளிப்படை, பலவகைப்பட்ட மரங்களில் மாமரம் ஒன்றில் எத்தனையோ சாதிகளுள்ளன வாதல்போல, எல்லா மரங்களிலுமுண்டாயிருக்கும் பல்வேறு சாதிகளை பார்க்கலாம். விலங்கினத்திலோ! ஆட்டின மொன்றனுள் வெள்ளாடு, செம்மறியாடு, பள்ளையாடு, கம்பளியாடு, குறும்பையாடு, வரையாடு முதலிய பல சாதிகளுண்மையை யாவரும் மறுக்கமாட்டார். அப்படி நாய் முதலிய ஒவ்வொரு விலங்கினத்திலும் பல பிரிவிருத்தல் மலைமேல் விளக்காம். இன்னும் பலவகைப் பாம்பினங்களையும் பல்வகைத் தேள் முதலியவற்றையும், பல்வகைமீன் தவளை முதலியவற்றையும் பல்வகைக் கிளி குருவி முதலியவற்றையுங் காணாதாரிலர். அப்படிப்போல மக்களுள்ளேயும் சாதிப்பிரிவு இறைவனாலேயே படைக்கப்பட்டிருக்குமாயின் வடிவவேற்றுமை காணப்படல் வேண்டும்.

அங்ஙன மில்லாமையால், மக்களுட் சாதிபேதம் கடவுளால் உண்டாக்கப் பட்டிலதென்பது திண்ணம். பிறபடைப் பினங்களெல்லாம் சாதி பேதமுடையன வாயிருப்பவும், மக்கட் படைப்பின் மட்டும் சாதிபேத மில்லாமையே அவரையும் தேவரென்றறிவிக்கிறது. அப்படியிருக்கப் பலசாதி பேதம் எப்படி மக்களில்வந்தன? எனின்:- படைப்புக்காலந்தொட்டு "ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்" என்றறிந்து வந்த மக்கள் "பாண்டிநாடே பழம்பதியாகவும்" என்றபடி கடவுளால் முதன் முதல் தமிழ் நாட்டிலேயே படைக்கப்பட்டவர்களாய், கடவுள் கட்டளைவழி மக்களொழுக்கத்தில் வழுவாது நடந்துவந்தவர்களாயிருந்தார்கள். அப்படியிருந்துவரும்

நாள்களிலெல்லாம் நீர்வளம் நிலவளங்களையுடைய மருதநிலம் முல்லை நிலங்களில் அவர்கள் குடியேறி உழவு. ஆன்காத்தல் என்னும் இரண்டு தொழில்களை மேற்கொண்டு உடுக்கவும் உண்ணவும் வேண்டப்படுபொருள்களை யாக்கி உண்டு உடுத்து மகிழ்வுற்றுவாழ்வாராயிருந்தார்கள். அந்நாளில் ஒரு நிலத்து வீளைபொருளை அது விளையப்பெறாத அடுத்த நிலத்துக்குக் கொண்டுபோய் அந்நிலத்து விளைபொருளைப் பண்டமாற்றிச் செல்லுந் தொழிலை மேற்கொண்டோர் வணிகரெனப்பட்டு வாழ்வர்.

இவ்விருபாலாராயிருக்கும் மக்களில் விருப்பு வெறுப்புக்களினுட்படுவோர் தம்மிலுண்டாம் வழக்குகளைத் தீர்த்தற்பொருட்டுத் தெரிந்தெடுத்து வைக்கப்பட்ட, தக்காரே அரசர் குடிப்பிறப்பினராவர். ஆகவே உழவர் வணிகர், அரசர் என்னும் மூவருக்கும் ஆசிரியன் மாராக வைக்கப் பட்டவர்தாம் அந்தண ரெனப்பட்டார். இந்நான்கு குடிப்பிறப்பினருள் உழவர் பெரும்பாலாராயிருப்பர் வணிகர் ஒருசிலரேயாயிருந்தனர். அரசரும் ஆசிரியரும் ஊருக்கொன்றிரண்டு குடும்பத்தினர் தாமிருந்து வந்தனர். இவர் தம்மிற் பெண்கொண்டு கொடுத்தலும், ஒரு பந்தியிற் கூடியுண்ணலும், யாண்டும் விலக்கப்பட்டிலவாகலின் சாதி வித்தியாசமென்ற பேச்சே அக்காலத்தில்லை. நெடுங்காலங்களுக்குப்பின், மெய்வழுவி ஒழுக்கவரம்பு கடந்து நிற்பாருமிடையிடையே காணப்பட்டனர். அவ்வொழுக்கந் தவறினோர் வேறாகப் பிரிந்து வாழ்ந்தமையால், ஜாதிபேத முண்டாயிற்று. இவ்வளவேயன்றி வேறில்லை: என்று கூறி உலகத்திலே பிறருக்கு இன்னா விளையாதவராய், எவ்வுயிர்க்கும் இரங்வோராய், தத்தம்மாலியன்ற அளவில் எல்லாவுயிர்கட்கும் நன்மையுஞ் செய்வோராயிருந்து பரம் பொருள் எது? என அறிஞர்பால் வினாவியும். உண்மை நூல்வழி யாராய்ந்தும், அப்பொருளை யடைதற்கு இடையறா விருப்பமுற்று மனத்தை ஒரு வழிப்படுத்தி ஞானவழியில் வழுவாது நிற்பவரே பேரின்பத்தைப் பெறுவோராவர். அத்தகைய நிலையிலுள்ள உங்களுக்குத் தேகசித்தி செய்து கொள்ளவேண்டியது அவசியமாம். ஆனதால் அதற்குரிய கற்பமூலிகைகளிற் சிலவற்றைச் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக.

அஃதாவது இவ்வனத்துக்குக் கீழ்திசையில் இரண்டு நாழிகை வழித்தூரத்தில் ஒரு பாறையும் வடதிசையில் கண்ணேணியாறும் இருக்கின்றன. அவ்விரண்டுக்கும் மத்தியில் உரோமவிருக்ஷம் என்று ஒரு மரம் உண்டு. அம்மரம் சாம்பல் நிறமாகவும் கிளைகளானவை உரோமத்தைப் போலவும் அதைத் தொட்டால் பஞ்சுபோல மிருதுவாகவுமிருக்கும். அதன் பட்டையை இரும்புபடாமல் தட்டி எடுத்துச் சூரணித்துத்திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலம் தேனிற்கலந்து புசிக்க நரைதிரைமாறும். தேக சித்தியாகும். அப்படிச் சாப்பிட்டால் அவனுடைய அமுரி பஞ்சலோகத்தையும் பேதிக்கச்செய்யும். மற்றொரு பாகமும் உண்டு. அஃதாவது மேற்படி விருக்ஷத்திற் துளையிட்டு சூதத்தை ஊற்றி அந்த விருட்சத்தின் பட்டையால் மூடி நாற்பத்தைந்து நாட் கழித்துப் பார்க்க, அச்சூதங் கட்டியிருக்கும். அதை எடுத்து அதற்கு அப்பட்டையை யரைத்துக் கவசஞ் செய்து முழப்புடமிட உருகி மணியாகும். அந்த மணியை வாயிலிட்டுக் கொண்டவர் சரீரத்தில் கத்தி வெட்டு, தண்டு, அம்பு முதலாகிய

ஆயுதங்கள் ஏறமாட்டா. நரை திரை மாறித் தேகசித்தியாகும். இதைத் தவிர மற்றொரு முறையும் உண்டு. அஃதாவது.

அந்த உரோம விருக்ஷமிருக்கிற இடத்துக்குப் பக்கத்தில், கருநெல்லி விருக்ஷமென்றொருமரம் உண்டு. அம்மரமானது சாதாரணமான நெல்லிமரம் போலவும், அதன் காம்பு கிளை, தூர் முதலியவைகள் எல்லாம் கறுப்பாகவு மிருக்கும். அதன் பட்டையை இரும்பு படாமற் றட்டி எடுத்துவந்து, சூரணஞ்செய்து அதோடு காராட்டுப்பாலும் குறுவையரிசியும் சேர்த்து வேகவைத்து ஆவின் நெய்யைவிட்டு இலேகித்துப்புசிக்க தேக சித்தியாகும். இதைத்தவிர மற்றொரு முறையும் உண்டு. அஃதாவது.

அந்தக் கருநெல்லி விருக்ஷமிருக்கிற விடத்திற்கும் பக்கத்தில், நாகபடக்கற்றாளை என்றொரு மூலிகை உண்டு அது பாம்பு படமெடுப்பதுபோலும் வரிவரியாய் நீர்வடிந்துகொண்டுமிருக்கும். அந்தக் கற்றாளைச் சமூலத்தைப் பிடுங்கிவந்துபால் விட்டரைத்துப் பாலோடு சேர்த்துக் கலக்கி யருந்த ஒரு முகூர்த்த நேரம் மூர்ச்சையாகும். அப்போது அடிக்கடி ஒரு கரண்டி வீதம் பால் கொடுத்துவர மூர்ச்சை தெளியும். காயசித்தியாகும், எனக் கூறியருள, அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் முனிவரது சொற்படி காயகற்ப மூலிகைகளைப் புசித்துத் தவஞானார்த்தங்களை அப்பியாசித்துக்கொண்டு வரும் நாள்களில், ஒருநாள் முனிவர் ஐவர்களையும் நோக்கி இராஜபுத்திரர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருடகாலமிருப்பதாக இவ்விடத்துக்கு வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள் முதலிந்நாள்வரை ஒருவருட காலஞ் சரியாய் விட்டது. நாமும் இனித்தவம்புரிய வேண்டியதாகவுமிருக்கிறது. ஆகையால் இனிமேல் நீங்கள் இவ்வனத்திற்கடுத்த கோரக்க ராச்சிரமத்துக்குச்சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக்கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளித்தன் பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை நோக்கிச் சீடனே! இவர்களைவரையும் அழைத்துச்சென்று கோரக்கரு ஷிஸ்வரரிடத்தில் விடுத்து வருவாயென்று உத்தரவு செய்ய, அவ்வுத்தரவின் படி அவர் சீடனுந்தன்மார்த்தன் முதலான ஐவரும் இராமதேவரை அன்புற வணங்கி விடைபெற்றுப் பிரயாணமாகிச் சென்றார்கள், என்று சாணங்கிமுனிவர் விளம்புதலும் நாகார்ச்சுனாதியர் சுவாமீ! இராமதேவர் ஆச்சிரமத்தில் நடந்தபுண்ணிய சரித்திரங்களையும் ஞானானந்த உபதேசங்களையும், காய கற்ப முறைகளையுங்கேட்டு இன்பமாகிய சாகரத்தில் முழ்கினோம். இனி அந்தக் கோரக்கர் வனத்தில் நடந்த சரித்திர ஞானகற்பமுறைகளை அன்பு கூர்ந்தருளிச் செய்ய வேண்டுமெனக் கேட்க, சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

இருபத்தேழாவது,
இராமதேவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தெட்டாவது

கோரக்கருஷி சருக்கம்.

பதினைந்தாவது வனம்

தீரக் கருணைத் தன்மார்த்தன் றிகழுஞ் சதுரகிரி
தனிலே கோரக் கர்தம் வனத்திடையே கூடு நால்வர்
தன்னுடனே சேரக் கொண்டே யமுதமுனஞ் சீராய்க்
கடைந்தசெயல்கேட்ட பாரக் கதையும் பிறகளையும் பாரோர் புகழப்
பகர்ந்திடுவாம்.

கேளுங்கள் முனிவர்களே! இராமதேவர் சீடனுடன் தன் மார்த்தன்முதலான ஐவரும், மேற்குத்திசையை நோக்கிப் பிரயாணமாகி இரட்டைலிங்க மூர்த்தியைத் தரிசித்து அத்தானத்தை விட்டகன்று வனங்கள் சூழ்ந்த, மலைகளையும் கானாறுகளையுங் கடந்து தேக்கு, அகில், சந்தனம் முதலிய அநேக விருட்சங்கள் நிறைந்து மிக்கமணம் வீசும் வளமிகுந்த கோரக்க முனிவரது வனத்துட்சென்று ஆங்கு உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கின்ற தவசிரேட்டராகிய கோரக்க முனிவரைக் கண்டு, அவரடியிணை மலரை யன்புற வணங்கி நிற்க, முனிவரும் கருணைத் திருக்கண்ணால் அவர்களை நோக்கி ஆசீர்வதித்து அவர்களை யழைத்து வந்த இராமதேவர் சீடனால் தன்மார்த்தன் முதலானோர்களுடைய சமாசாரங்கள் முழுதுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பியபின்பு ஐவர்களையும் வீற்றிருக்கும்படிகூறி அவர்களை நோக்கித் தன்மார்த்தன் முதலான ஐவர்களே! நீங்கள் இவ்வனத்தில் எவ்வளவு நாட்டங்கி யிருக்கலாமென வந்தீர்கள்? என்னென்ன விஷயம் உங்களுக்குத் தெரியவேண்டுமெனக் கேட்க, அதற்குத் தன்மார்த்தன் முதலிய ஐவரும் வணக்கத்துடன் சுவாமீ தங்களுடையவனத்தில் ஒருவருடகாலமிருந்து ஞானோப தேசங்களையும், காயாதி கற்பங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமென்று புகன்றனர். அதைக்கேட்ட முனிவர், அப்படியானால் நீங்கள் இவ்விடத்தில் வாசஞ்செய்வதற்கு இதன் தென்பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனி பன்னசாலையமைத்து அதில் வாசஞ்செய்து வருவீர்களென்று உத்தரவு செய்ய உடனே ஐவர்களும் முனிவர் சொற்படி ஐந்தடுக்காகப் பன்னசாலையமைத்து அதில் வாசஞ்செய்து தினந்தோறும் ருஷீஸ்வரரிடத்தில் ஞானோப தேசங்களைக் கேட்டுக்கொண்டு வருநாளிலொருநாள் ஐவரும் ருஷீஸ்வரரை நோக்கிச் சுவாமீ! நமக்கு நேராக இருக்கிற கௌண்டின்னிய நதிக்குள் தண்ணீர் நிறைந்த கற்குண்டா வொன்றிருக்கிறதே? அஃதென்ன வென்று கேட்க அதற்கு ருஷீஸ்வரர், சொல்லுவார்.

ஐவர்களே! முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களுஞ் சேர்ந்து அமுதங்கடைந்தஇடந் திருப்பாற் கடலாகும் பின்னொரு காலத்தில் சித்தர்களும் முனிவர்களாகிய நாங்களுஞ் சேர்ந்து அமுதங்கடைந்த இடம் கௌண்டின்னிய நதியாகும். அந்நதியில் தண்ணீர் நிறைந்திருக்கிற கற்குண்டாவில் காயகற்ப மூலிகையையும் அமுதமென்ற கஞ்சாவையும் போட்டு நாங்களும் எங்களுடைய சீடர்கள் முதலான யாவரும் ஒருங்குகூடி மத்திட்டுக் கடைந்து மேலிருக்கிற அதன் விஷத்தைப் போக்கிவிட்டு அடியிலிருக்கிற ரசத்தைக் கற்பமாகக் சாப்பிட்டு வந்தோம். அன்றியும் அம்மூலிகையின் இலைச்சத்தைப் புகையிலையுடன் சேர்த்துக் குடுக்கையில் வைத்து அதன் மேற்றழலேற்றி மூச்சையடக்கி இழுத்து அதிலிருந்து வருகிற புகையைக் கற்பமாகவுஞ் சாப்பிடுவோம். அதற்காக இந்தக் குண்டா அமைக்கப்பெற்றது என்று கூறினர். அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! திருப்பாற்கடலில் தேவர்களும் அசுரர்களும் அமுதங்கடைந்ததாகக் கூறினீர்களே! அதன் விவரத்தை எங்களுக்கு நன்கு தெரியும்படி சொல்லியருளவேண்டுமென்று கேட்க, ருஷீஸ்வரர் ஐவர்களே! முன்னொரு காலத்தில் தனக்கு நிகரொருவரில்லை என்ற துருவாச மகாமுனிவர் என்பவர் ஒருநாள் கடவுளிடத்திலிருந்து தமக்குக் கிடைத்த கடவுட் பிரசாதத்தைக் கொண்டு இந்திரனுலகத்துக்கு வந்தனர்.

அப்போது இந்திரனானவன் ஐராவதமென்னும் யானையின்மே லாரோகணித்து அரம்பை மேனகை திலோத்தமை ஊர்வசி முதலிய நடனமாதர்கள் பலமங்களவாத்தியங்களுடன் நடனம் புரியப் பவனி வந்து கொண்டிருந்தான். அப்படிவருவதைத் துருவாசமுனி கண்டுமகிழ்வுற்று நீவாழ்க; என்றுகூறி அப்பிரசாதமாகிய மாலையைக் கொடுத்தருளினர். அம்மாலையை இந்திரன் தோட்டியால் வாங்கித் தன் செல்வச்செருக்கினாலும், பவனி வருமமதையினாலும், அம்முனிவரையும், மாலையின் பெருமையையும், மதியாது யானையின் மத்தகத்தின்மேல் வைத்தனன். உடனே யானை தன் துதிக்கையா லம்மாலையை யிழுத்துக் கீழே தள்ளி மிதித்துத் தேய்த்துவிட்டது.

அதைக்கண்ட துருவாசமுனிவர் விழிவழியொழுகிடும் வெங்கனற்கோபத்தா லிந்திரனை நோக்கி அடா தேவர்கோனே! எம்மையும் இந்தமாலையின் கௌரவத்தையும் நினையாது பாழ்செய் தமையால் நீ உன்னுடைய செல்வங்களை எல்லாமிழந்து வறுமையாலும் நோயாலும் துன்புற்று அசுரராலும் பீடிக்கப் பெறுவாயாக என்று சபித்தனர். அச்சாபத்தால் காமதேனு, கற்பகவிருக்ஷம், சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி, ஐராவதம் என்னும் யானை, உச்சைச் சிரவம் என்னுங் குதிரை, அரம்பைகள் முதலிய சகல சம்பத்தும் திருப்பாற் கடலுட்சென்று மறைந்தன.

அப்பால் தேவேந்திரன் நீண்டகாலம்வரை வியாதிகளாலும் வறுமைகளாலும் அசுரர்களாலும் மிகுந்த கஷ்டமுற்றுத் தாங்க முடியாதவனாகி முடிவில் அநேக நாட்டவம்புரிந்து அடியார்க் கௌியகடவுளது தரிசனக்காட்சியைக்கண்டு பன்முறை வணங்கித் தன்குறைகளை முறையிட்டு வேண்டினான். அவன்வேண் டுகோளுக்கிரங்கிய கடவுள் தேவேந்திரனை நோக்கி, அரசே! நீ நம்மை நினைந்துசெய்த தவத்தினால் உன்னுடைய மிடிகள் யாவுமின்றோடு தீர்ந்தன. ஆனாலும் இனி நீ இழந்த

வலிமையையுஞ் செல்வங்களையும் பெறவேண்டுமானால் நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் அசுரர்களுங் கூடி மந்தரகிரியை மத்தாகவும், வாசுகி யென்னும் பாம்பைத் தாம்பாகவும், சந்திரனைத் தூணாகிய கம்பமாகவும், ஏற்படுத்திப் பாற்கடலைக் கடந்து அப்பாற் கடலிலிருந்து உண்டாகும் அமிழ்தத்தை யுண்ண வேண்டும். அப்பால் உனக்கு எல்லாச் செல்வங்களுங் கிடைக்கும். என்று திருவாய்மலர்ந்தருளினர், அதைக் கேட்ட தேவ அரசன் அப்படியே செய்கிறேனென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விடைபெற்றுவந்து தேவாசுரர்களால், மந்தர பருப்பதத்தைக் கொண்டு வந்து மத்தாகத் திருப்பாற் கடலிற்போட்டு சந்திரனைக் கம்பமாக நட்டு வாசுகியைத் தாம்பாகப்பிணித்து ஓடதியைப் பிரையாக அப்பாற் கடலிலிட்டு நிறைத்தனன். அதன்பின் தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் வாசுகியின் வாற்பக்கமும் அறுபத்தாறுகோடி அசுரர்கள் தலைப்பக்கமும் நின்ற இழுத்துக்கடைந்தனர். அப்படிக் கடையக்கடைய மந்தரகிரி கடலினுள்ளே யழுந்திற்று. அது கண்ட ஸ்ரீமந் நாராயணன் ஓர் ஆமையின் வடிவமாகி அக்கிரியைத் தாங்கிக் கொண்டிருந்தனர்.

அக்கணம் வாசுகி என்ற பாம்பானது அவர்கள் இழுத்துக்கடைவதைப் பொறுக்கமுடியாது விஷத்தைக் கக்கிற்று. அதனாலநேக அசுரர்கள் மாண்டுபோனார்கள். சில அசுரர்மறைந்துகொண்டனர். அம்மட்டோ. அந்தக் கொடிய விஷாக்கினியின் வெப்பத்தைத் தேவர்கள் யாரும் பொறுக்கமுடியாது சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து எங்களை யிரஷிக்க வேண்டுமென்று பிராத்தித்தனர். உடனே அவர் பிரசன்னமாகி அவ்விஷத்தையுண்டு அத்தேவர்களை யிரஷித்தனர். அதன் பின்னர் மறுபடியும் கடலைக்கடையும்பொழுது மறைந்து போன இந்திரனுடைய சகல செல்வங்களும், இலக்குமியும், கௌத்துவமணி முதலியவைகளும், அமுதமும் உண்டாயின. அப்படி உண்டான இலக்குமி முதலான பொருள்களை எம்பெருமானாகிய மகாவிஷ்ணு அணிந்து கொண்டார். தேவேந்திரன் தன்செல்வங்கள் யாவையும் பெற்றுக்கொண்டான். அமுதத்தை அசுரர்கள் எடுத்துக் கொண்டார்கள். அதைக்கண்ட தேவர்கள் மிகுந்த வியாகுல முற்று மகாவிஷ்ணுவிடத்தில் வந்து முறையிட்டனர். அம்முறையைக்கேட்ட பூமகள் நாயகனான விஷ்ணு: அசுரர்களோ கொடிய துஷ்டர்கள். இவ்வமுதத்தைச் சாப்பிடுவார்களாகில் தேவர்களுக்கு அழிவை யுண்டாக்கி விடுவார்களென நினைத்து அவ்வசுரர்கள் கரத்திலிருக்கிற அமுதகலசத்தை வாங்குவதற்காக யாவரும் இச்சையுறும்படியான அதிக சௌந்தரியமுள்ள மோகினிரூபம் கொண்டுவந்தனர். அதைக்கண்ட அசுரர் ஒவ்வொருவரும் மோகினியினிடத்து மோகமுற்று ஒருவர்க்கொருவர் வார்த்தையாடிக்கொண்டு அப்பெண்ணிற் குச்சமீபத்தில் வந்து மாதரசி! ஈங்குவந்த காரணமென்ன வென்று கேட்க, அதற்கு மோகினிப்பெண் ஐயா! தேவர்களும் நீங்களுஞ்சேர்ந்து படைத்த அமுதத்தை இருதிறந்தாருக்கும் அவர் தம்மிற்கலகஞ்செய்து கொள்ளாது பங்கிட்டுக் கொடுக்கும்பொருட்டு இவ்விடத்துக்கு வந்தேனென்று கூறினாள்.

அசுரர்கள் அப்பெண்மணியின் சௌந்தரியத்தையே நோக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது மோகினியானவள் குறுநகை புரிந்து அசுரர்களே! இந்த அமுதத்தை

நான் இருதிறத்தாருக்கும் சரிபாகமாகப் பங்கிட்டுக் கொடுப்பேனென்ற எண்ணம் உங்களுக்கிருக்குமேனயானால் அமுதகலசத்தை என்வசங் கொடுங்களென்று சொல்ல: அதைக்கேட்ட அசுரர்கள் மதிமயங்கி மோகவாசையால் அமுதகலசததை அவள் கையிற் கொடுத்தனர். அதனைப் பெற்றுக் கொண்ட மோகினிப் பெண் தேவர்களை ஒருபுறமும் அசுரர்களை ஒரபுறமாக உட்கார வைத்து அசுரர்கள் பக்கம் தன்முகத்தைக் காண்பித்து அவர்களை பரிமாறிக்கொண்டு வரும்போது அசுரர் கூட்டங்களிலுள்ள இராகு கேதுவென்னு மிருவரும் மோகினிப்பெண் மோசஞ்செய்ய நினைத்திருப்பதைத் தெரிந்து தேவ வுருவங்கொண்டு தேவர்கள் பக்கத்தில் வந்திருந்து அமுதத்தை வாங்கியுண்ணுவதையறிந்த சூரிய சந்திரர்கள் மோகினி மாதிடத்திற் குறிப்பாகச் சொல்ல, அம்மோகினி பார்த்துக்கோபித்துத் தன்கரத்திலிருந்த அகப்பையால் அந்த இருவர் சென்னியிலும் அடித்தமாத்திரத்தில் அமுதமுண்ட பலத்தால் இறவாது சிரககள் மட்டும் அறுபட்டுவிழுந்தன. அப்போது அந்த அசுரராகிய இருவரும் மோகினி மாதை நோக்கி அம்மா! நாங்கள் செய்த குற்றத்திற்குத் தண்டித்தது சரியே. ஆனாலும் அந்தச் சூரியனும் சந்திரனும் எங்களைக் காண்பித்துக் கோட் சொன்னதற்கு என்ன செய்வதென்று கேட்க, அதற்கு அப்பெண்மணி! நீங்களிவர்களை விழுங்கி உமிழ்வீர்களாக என்று ஆஞ்ஞாபித்து விட்டு மீதமிருந்த அமுதத்தைத் தேவர்கள் கையிற் கொடுத்துத் தேவேந்திரனிடத்தில் ஒப்புவிக்கும்படி செய்து மறைந்தனள். அப்பால் அசுரர்கள் இந்திரனோடு சண்டையிட்டுத் தோல்வியடைந்து தமதிருப்பிடத்துக்குச் சென்றனர்; பின்பு இந்திரனானவன் சகல செல்வங்களோடு இந்திராணி சமேதனாக அமராவதியை ஆண்டுவந்தார் என்று கூறியருளினார். அதைக் கேட்ட ஐவரும் சந்தோஷமனத்தராய் முனிவரை வணங்கி விடைப்பெற்றுத் தங்களுடைய பன்னசாலைக்குச் சென்றிருந்தார்கள்.

மற்றொரு நாட்காலையில் தன்மார்த்தன் முதலான ஐவரும் வழக்கம்போற் கானாற்றுக்குச் சென்று நித்திய ஸ்நான வநுட்டான ஜெபதபங்களை முடித்து வந்து நீண்ட நாளாக முனிவர்களுபதேசித்தருளிய இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், யிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற இவ்வெண்வகை யோகங்களையும் நன்கறிந்த முறையில் நாடொறுஞ் செய்து வரும் வழக்கம்போல் தத்தம் பன்னசாலையின் பக்கத்தில் தனித்தனியாகத் தகுந்த ஆசனத்தில் வீற்றிருந்து ஐம்புலன்களையு மடக்கிச் சரீரத்தில் இடைவிடாது சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பிராணவாயுவை ரேசக பூரக கும்பகங்களினாலந்தர் முகமாகச் திருப்பி நிறுத்தி நிட்டைகூடியிருக்கையில் மீளாமல் அப்படியே சிலநாள் வரை இருந்து விட்டார்கள்.

அவ்வாறு இருந்து வருவதைக் கோரக்க முனிவர் தெரிந்து தம் சீடர்களுடன் அவர்கள் பன்னசாலைக்குச் சென்று அந்த ஐவர்களும் தவயோக நிட்டையி லமர்ந்திருக்கிற சித்த வைராக்கிய வைபவக்காட்சியைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்து சென்றனர். அப்பால் இச்சதுரகிரியில் காயகற்ப மூலிகைகள் அநேகமிருப்பதாகக் கேள்வியுற்று நீண்ட நாளாக இவ்விடத்துக்கு வரவேண்டுமென நினைத்திருந்தவர்களும். அருள் மலிந்திலகுஞ் சுருளிமலையின்கண் வாசஞ் செய்கிறவர்களுமான மகத்துவ மிகுந்த மகருஷிகளிருவர் வந்து இம்மலையில் உயர்ந்த

மூலிகைக ளிருக்குமிடங்களைத் தேடிச் சிலகற்ப மூலிகைகளைச் சேகரித்துக் கொண்டு வரும் வழியில் யோகநிட்டையி லமர்ந்திருந்த தன்மார்த்தன் முதலிய ஐவர்களையுங்கண்டு, இம்முனிவர்கள் யாரோ தெரியவில்லையே என நினைத்து கிட்ட வந்து உற்றுநோக்கித் தங்களது ஞானதிருட்டியால் அவ்வைவருடைய வரலாறு முழுமையு மறிந்து, அவர்களுடைய தவயோகத்தைப் பரிசோதிக்க வேண்டுமென எண்ணிப் புலியுருவங்கொண்டு பயங்கரமாகிய ஒருவித சத்தமிட்டனர். அச்சத்தத்தைக் கேட்ட ஐவரும் கண்களை விழித்துப் பார்த்து அதையொருபொருட்டாக எண்ணாது மௌனமுற்றிருந்தனர்.

அதைக் கண்ட அம்மகருஷிகள் புலியுருவம் நீங்கித் தங்கள் சுயரூபத்தோடு நின்று ஐவருடைய மனவுறு தியை மெச்சி இவர்கள் தவத்தில் மிக்க சமர்த்தர்கள் என நினைத்துச் சந்தோஷித்துக் கரகோஷஞ்செய்தனர். அக்கரகோஷத்தைச் செவியிற்கேட்ட ஐவரும் தவத்தில் மிக்க சமர்த்தர்கள் என நினைத்துச் சந்தோஷித்துக் கரகோஷஞ்செய்தனர். அக்கரகோஷத்தைச் செவியிற்கேட்ட ஐவரும் தவயோக நிட்டைகலைந்து அவர்களைப் பார்த்து அரியமகாருஷிகளெனத் தெரிந்து எழுந்து அவ்விருவரையும் பன்முறை வணங்கித் தோத்திரஞ் செய்து நிற்கும்போது அவர்களை மகருஷிகளிருவரும் நோக்கி ஐவர்களே! நீங்கள் இராஜபுத்திரர்களா யிருந்தும், மூவாசைகளையும் வெறுத்துத் தவஞான யோகத்தைக் கருதி ஈங்குவந்து இதுநாள்வரை அநேக மகருஷிகளிடத்தில் அரிய ஞானானந்த வுபதேசங்களைப் பெற்றீர்கள். ஆனதாலினி என்ன குறை உங்களுக்கிருக்கிறது? யாதொன்று மில்லை எனப்பலவாறு புகழ்ந்து வாழ்த்தி ஆசீர்வதித்துத் தமதிருப்பிடத்துக்குச் சென்றனர். அப்பால் ஐவரும் கோரக்க முனிவரது ஆச்சிரமத்துக்குச் சென்று அவரை அன்புற வணங்கிவீற்றிருந்து, அவரனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு வந்தார்கள்.

இவ்வண்ணம் நிகழும் நாள்களில் ஒருநாள் முனிவரை ஐவரும் நோக்கிச் சுவாமி! தங்களிடத்தில் இது நாள்வரை வேத ஞானோப தேசகங்களையும் புண்ணிய சரித்திரங்களயையுங் கேட்டு மகிழ்வுற்றோம். ஆனாலும் நாங்களினித் தேகசித்தியடையும் பொருட்டு கற்பமுறைகளை மொழிந்தருள்க எனக் கேட்க, அதற்கு முனிவர் ஐவர்களே! உலகத்தி லெம்மைப்போன்ற சித்தர்களது அனுபவத்தி லிருந்து வருகிற அனேக காயாதி கற்ப முறைகளைக் கூறுகிறோம் கேட்பீர்களாக.

அதாவது, இவ்வனத்துக்குத் தென்திசையில் படர்ந்த காணலின்கண் அம்பிடு தூரத்தில் மஞ்சட்பூத்தைவேளை என்ற ஓர் மூலிகை யிருக்கிறது. அது சாதாரணத்தை வேளைச்செடிபோலவும் அதன் பூ மஞ்சள் நிறமாகவுமிருக்கும். அம்மூலிகையைச் சமூலமும் பிடுங்கிச் சாறெடுத்துச் சூதத்திற்குச் சுருக்குக் கொடுக்கக்கட்டும் கட்டிய அதைச் செந்தூரமாக்கிவெள்ளியில் நூற்றுக்கொன்று கொடுக்கப் பழுக்கும். பழுத்த அதைப் பற்பஞ் செய்து சாப்பிடத் தேகஞ்சித்தியாகும்.

இதைத் தவிர, இன்னுமொரு முறையுண்டு. அந்த மஞ்சப்பூத் தைவேளையிருக்கிற இடத்திற்குப் பக்கத்தில் செங்கற்றாளை என்ற ஒரு மூலிகை இருக்கிறது. அது சாதாரண சோற்றுக்கற்றாளைபோல் உள்ளும் புறமும் சிவந்த நிறமாக

இருக்கும். அக்கற்றாளையின் சோற்றை ஞாயிற்றுக்கிழமை அனுஷ நக்ஷத்திரங்கூடிய நேரத்தில் எடுத்துக் கொண்டுவந்து சுத்திசெய்து அதோடு திரிகடுகுச் சூரணத்தைத் திரிகடிப்பிரமாணஞ் சேர்த்து அதற்குத் தக்க சர்க்கரையும் நெய்யுங் கலந்து குழைத்து அரை மண்டலஞ் சாப்பிட்டுவர நரை திரை மாறும். தேகமும் சித்தியாகும் இதைத் தவிர, மற்றொரு முறையும் உண்டு.

அதாவது, அந்தச் செங்கற்றாளையிருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் செந்நாயுருவி என்ற ஒரு செடியிருக்கிறது அது சாதாரண நாயுருவிச்செடி போலவும் சமூலமும் சிவப்பாகவுமிருக்கும். அதன் சமூலத்தையும் கொண்டுவந்து சூரணம்செய்து காரீயம் உருக்குமுகத்திற் தூவிச் செந்தூரமாகும்வரை கடைந்து அச்செந்தூரத்தைச் சுத்திசெய்த தாம்பிரத்தில் பத்துக்கொன்று கொடுக்கப் பழுக்கும். பழுத்த அதைச் சுண்ணஞ்செய்து மூன்றுவேளை ஆவின் நெய்யிற் கொளள்த் தேகஞ் சித்தியாகும். இதைத்தவிர வேறொரு முறையும் உண்டு. அதாவது செந்நாயுருவி மூலிகையிருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் அமுதவல்லிச்செடி என்றோர் மூலிகை யுண்டு. அச்செடி குப்பைமேனிச் செடியைப் போலவும், இலை, பழம்பாசி யிலையைப்போலவும், புட்பம், கொட்டான் கரந்தைப் புட்பத்தைப் போலவும், இருக்கும். அப்புட்பத்தை மாத்திரங் கொய்துவந்து சிறிது சிறிதாகப் புசித்துவந்தால் வாயில் அமுதமூறிக் கொண்டிருக்கும். தேகமும் சித்தியாகும் என்று கூறியருளினர். அதைக்கேட்ட தன்மார்த்தன் முதலான ஐவரும் முனிவரது சொற்படி காயகற்ப மூலிகைகளைப் புசித்துத்தவஞானாத் தங்களை அப்பியாசித்துக்கொண்டு வரும் நாள்களில் ஒரு நாள் முனிவர் தன்மார்த்தன் முதலானோர்களை நோக்கி இராஜபுத்திரர்களே! நீங்கள் நம்முடைய வனத்தில் ஒருவருடகால மிருப்பதாக இவ்விடத்துக்கு வரும்போது தெரிவித்தீர்கள். அந்நாள்முதலிந்நாள்வரை ஒருவருடம் சரியாய் விட்டது நாமும் இனித் தவம் புரியவேண்டிய தாகவுமிருக்கிறது. ஆகையால், இனிமேல் நீங்கள் இவ்வனத்திற்குப் பக்கத்தில் மச்சமுனிவர்வனமொன்றிருக்கிறது. ஆங்குச் சென்று அவரிடத்தில் வேண்டிய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருங்களென்று திருவாய் மலர்ந்தருளித் தம்பக்கத்திலிருந்த சீடர்களிலொருவனை நோக்கிச் சீடனே! இவர்களைவரையும் அழைத்துச்சென்று மச்சமுனி ஆச்சிரமத்தில் விடுத்து வருவாயென்று உத்தரவு செய்ய, அவ்வுத்தரவின்படி அவர் சீடனுந் தன்மார்த்தன் முதலான ஐவரும் முனீஸ்வரரை நமஸ்கரித்து அன்புற வணங்கி விடைப்பெற்று பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் விளம்புதலும், நாகார்ச்சுனாதியர் சுவாமீ! கோரக் முனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் ஞானானந்த உபதேசங்களையும் காயாதி கற்ப முறைகளையுங்கேட்டு இன்பமாகிய கடலில் மூழ்கினோம். இனியந்த மச்சமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த சரித்திர ஞானகற்ப முறைகளை அன்பு கூர்ந்தருளிச் செய்ய வேண்டுமெனக்கேட்கச் சாணாங்கி முனிவர் சொல்வாராயினர்.

இருபத்தெட்டாவது,
கோரக்கமுனிவர் சருக்கம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
இருபத்தொன்பதாவது

மச்சமுனிவர் சருக்கம்.

பதினாறாவது வனம்

மெய்ச்சவருஞ் சதுரகிரி தன்னில் நால்வர்
மேவிவரத் தன்மார்த்தன் விரைந்து சென்று
மச்சமுனி வனமுற்று மகிழ்வா யந்த
மாமுனிசொல் உபதேச வளமுங் கேட்டுக்
கச்சணிதா ருகாவனத்து மேவும் பொற்பார்
கலசமுலை மாதருக்குக் காம மூட்டிப்
பச்சமுற முனிலோர்க்குப் பரமன் செய்த
பரிவுமதன் மேற்கதையும் பகர்வா மன்னோ.

கேளுங்கள் முனிவர்களே! கோரக்கர் சீடனுடன் தன்மார்த்தன் முதலான ஐவரும் மேற்றிசையை நோக்கிப் பிரயாணமாகிப் பல குன்றுகளையும், வனங்களையுங் கடந்து பசுமிதிப் பாறைக்கு வந்து பசுமிதியைக் கண்டு தம்மை யழைத்துக் கொண்டு வரும் கோரக்க மகருஷிஸ்வரர் சீடனை வணங்கிச் சுவாமீ! யிந்த இடத்திற் கற்பாறையில் பசு மிதித்ததுபோற் பதிந்த தடமிருக்கிறதே! இதன் விவரமென்ன? என்று கேட்டனர். அதற்கவர் ஐவர்களே! முன்னம் பச்சைமா லாயனென்னும் ஓர் பக்த சிரோமணியானவன் கீழிருந்து இவ்விடத்திற்கு வருவதற்கு வழி தெரியாது மிகுந்த மனவருத்தமுற்று, சுந்தரமகாலிங்கரைத் தோத்திரிக்க, அவன் பக்திக் கிரங்கிய நம்பெருமான் கட்டளையின்படி காமதேனுவாகிய தெய்வப்பசு ஒரு பசுவைப் போல வந்து அவனையும், அவனுடைய ஆவினங்களையும் அழைத்துவருந் தருணத்தில், அத்தெய்வப் பசுவின் பாறை என்று பெயர் என்று கூறுதலும், ஐவருங்கேட்டு மகிழ்ந்து அவ்விடத்தை விட்ட கன்று மந்திகளும் வழி தெரியாமல் மயங்கும். நெருங்கிய பல விருக்ஷங்களும் தன்மலர் வாவிகளுஞ் சூழ்ந்த மச்ச முனிவர் வனத்துள் நுழைந்து ஆங்குத் தம் மாசிரமத்தில் புலித்தோ லாசனத்தில் வீற்றிருந்த முனிவரை நமஸ்கரித்துப் பயபக்தியோடு நின்றனர்.

முனிவரும் கருணைத் திருக்கண்ணால் அன்பெழுகப் பார்த்து அவர்களை ஆசீர்வதித்து ஐவரையுங் கூட்டிவந்த கோரக்க மகருஷி சீடனால் ஐவர்களுடைய சகலசமாசாரமுந் தெரிந்து அச்சீடனை வழியனுப்பி விட்டு, ஐவரையும் நோக்கி

ஈண்டிருங்களெனக் கையமர்த்தி, யிருக்கச் செய்து, தன்மார்த்தன் முதலானோர்களே! நீங்க ளிவ்வனத்தில் எவ்வளவு நாட் டங்கியிருக்கலாமென வந்தீர்கள்? எம்மாலென்ன விஷய முங்களுக்குத் தெரிய வேண்டும்? அதைத் தெரிவிப்பீர்களெனக் கேடக, அதற்குத் தன்மார்த்தன் முதலானோர்கள் மிகுந்த வணக்கத்தோடு சுவாமீ! தங்களுடைய வனத்தில் ஒருவருட காலமிருந்து ஞானோபதேசங்களையும் காயாதி கற்பங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தோமெனப் புகல, அதைக்கேட்ட மச்ச முனிவர் அப்படியானால் நீங்கள் இவ்விடத்திற்குத் தென்பக்கத்தில் ஐந்தடுக்காகத் தனித்தனிப் பன்னசாலை யமைத்து அதிலிருந்து வருவீர்களென உத்தரவு கொடுத்தனர்.

உடனே ஐவரும் முனிவர் சொற்படி ஐந்தடுக்குப் பன்ன சாலை யமைத்து அதில் வாசஞ் செய்து கொண்டு தினந்தோறும் முனிஸ்வரரிடத்தில் ஞானோப தேசங்களைக் கேட்டுக் கொண்டு வருநாளில், ஒரு நாள் முனிவர் தன்மார்த்தன் முதலானோர்களே! நீங்கள் யோக ஞான தவமே பெரிதென நினைத்து இந்த மாயப் பிரபஞ்ச ஆசைகளை யெல்லாம் வெறுத்து இம்மலைக்கு வந்து ஈங்குள்ள தவஞான ருஷீஸ்வரர்களிடத்தில் உபதேசம் பெற்று காயசித்தி, யோகசித்தி, ஞானசித்தி என்ற மூவகைச் சித்திகளையடைந்தீர்கள். ஆனால், "கற்க கசடற கற்பவை - நிற்க வதற்குத்தக" என்றபடி நன்னிலை திறம்பாத உங்கட்கே இவைதகும். செருக்கு மேட்டிமைகளை யுடையாருக்கு இவைகைவரமாட்டா. அன்றியும் முன்னம் தாருகாவனத்து ருஷிகளும் அவர் பத்தினிகளும், கருவத்தாலேயே சிவபெருமானால் அடக்கப்பட்டனர். சிறந்த நற்குண நற்செயல்களுடைமையால் கடவுள் உங்களுடனிருக்கிறார். ஆகையால் நீங்கள் எங்களைப்போல் சித்தர்களாகி விட்டீர்கள். இனி உங்களுக்குயாதொரு குறையுமில்லை, என்று சொல்லினர். அதைக் கேட்ட தன்மார்த்தன் முதலானோர்கள் சுவாமீ! எல்லாந்தங்களுடைய ஆசீர்வாதத்தின் மகிமையேயன்றி வேறல்ல. தாருகாவன ருஷிகளையும் ருஷி பத்தினிகளையும் அவர் கருவத்தாற் சிவபெருமான் அடக்கியதாக கூறியருளினீர்களே! அஃதென்ன? விவரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்க, முனிவர் கேளுந் தன்மார்த்தன் முதலானோர்களே! முன்னொரு காலத்திலே தாருகா வனத்திலுள்ள முனிவர்கள் யாவரும், சிவபெருமானிடத்தி லன்பில்லாதவர்களாய், ஆகருடணம், உச்சரடனம், தம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேடணம் ஆகிய இவ்வெண் வகைக் கருமமே இன்பத்தைத் தரவல்லது என நினைந்தவராகித் தங்கள் சரீரந் துன்புற, அளவில்லாத தவங்களையும், யாகங்களையுஞ் செய்து துணிவுற்ற அவ்வழியே தங்கள் தங்கள் மனைவியரோடு ஒழுகி வருவாராயினர். இவ்விதமிருக்க, திருக்கைலையங்கிரியின் கண் உமா சமேதராக வீற்றிருந்தருளுஞ் சிவபெருமான் அதனைத் தெரிந்து வைகுந்த பதியாகிய விஷ்ணுவைத் தன்னிடத்தில் வரும்படி செய்து, அத்தாருகா வனருஷிகளது நினைப்பையும், அதற்காகத் தான் கொண்ட கருத்தையும், அவரிடத்திற் குறிப்பாலுணர்த்திய பின்னர் நீ, பூர்வங்கொண்ட மோகினியுருவை எடுப்பாயெனக் கூற, உடனே விஷ்ணுவானவர், மிகுந்த அழகிற் சிறந்த ஓர் பெண் வடிவை எடுத்து வருவதைக் கண்ட சிவபெருமானும் அளவிலாத அழ பொருந்திய ஆணுருவமுடையவராகி முத்தலைச் சூலத்தையும், பிக்ஷா பாத்திரத்தையும் தமது திருக்கரங்களி லேந்திக் கொண்டு விஷ்ணுவாகிய அப்பெண்ணுடன் கைலையை விட்டகன்று தாருகா வனத்திற்கு வந்து பிட்சாடனர்; ருஷிபத்தினிகளிருக்கு மிடத்தை

மோகினி: ருஷிகளிருக்குந் தவச்சாலையையும், நோக்கிச்சென்று திருவிளையாடல் செய்வராயினார். இருடிகளிருக்குஞ் சபையை யடைந்த மோகினி அவர்களுக்கு முன்பாக நின்றனள்.

அவளைக் கண்ட முனிவர்கள் யாவரும் காமவேட்கை கொண்டு தவவலி குறைந்து யாகத்தை விடுத்து உள்ளழிந்து உருகி அவளங்கங்க ளெல்லாவற்றையும் உற்றுற்றுப் பார்த்துத் தமது அறிவழிந்து எழுந்து தீபத்தைக் கண்ட விட்டிற் பறவைகளாய் விரைந்து வந்து அவளைச் சூழ்ந்து அக்கினியிற்பட்ட தளிர்போல விரகத்தீயால் வெதுப்பப்பட்டு நின்றார்கள். இனிப் பிக்ஷாடனர்: பிக்ஷை ஏற்பார்போல முனி பத்தினி மாரிருக்கும் பன்னசாலை வீதிவழிச்சென்று இசையோடு சாமகானங்களைப் பாடினார். அக்கானங்களைக்கேட்ட இருடிமங்கையர் யாவரும் தங்கள் தங்களிருக்கையை விட்டு வெளிப்போந்து சாமகானங்கேட்க வருவார் போலக் கூட்டங்கூட்டமாக அவரைச் சூழ்ந்துகொண்டு காமக் கடலுள்மூழ்கி, உணர்வுமாழ்கி, உயிர்பதைத்துச் சோர்ந்து அதிக மயக்கமாகி அம்மயக்கத்தால் தம்வசமிழந்து அவர் திருமேனியையே வியந்து பலவாறு பேசிப் பிக்ஷையுமேந்தி வருவாராய், உடுத்திருந்த சேலைகளும், பூண்டிருந்த வளையல் முதலிய ஆபரணங்களும், நாணமும் கற்பும் நழுவ அவரைப் பின்றொடர்ந்து சென்றார்கள்.

அதன்பின் பிக்ஷாடனர், இருடி மங்கையர்க ளெல்லாந் தம்மைப் பின்றொடர்ந்துவர அவர்கள் பன்ன சாலைகளைக் கடந்து அப்பாற் சென்றனினார். அவ்விடத்திற்குத் தாருகாவனத்து முனிவர்கள் யாவரும் பின்றொடர்ந்துவர மோகினியும் வந்து சேர்ந்தனள். ஆங்கு வந்து முனிவர்கள் பிக்ஷாடனரைச் சூழ்ந்து நிற்கும் தங்கள் மனைவிமாரைப் பார்த்து, அந்தோ! இஃதென்ன! இவர்கள் உடுத்திருந்த சேலையையும், நாண முதலியவற்றையும் விடுத்து ஏன் இங்கு வந்தார்கள்? நாம் இந்தப் பெண்ணைக்கண்டு மயங்கியதைப் போல இவர் அவ்வாடவனைக் கண்டு மயங்கினார்கள் போலும்; என்று தட்முட்கருதி மனம் வருந்தி நின்றனர் அவ்வாறே எதிர்நின்ற ருஷிபத்தினிகளும் தத்தம் புருடரினிலைமையை யறிந்து மோகினியால் வீழ்ந்து அறிவிழந்த இவர் நம்மை இகழாரென்று ஒருவாறு மனந்தேறி நின்றார். அத்தகைய பெண்களுடைய கற்பினை யழித்தவர் கைலாச வாசராகிய சிவபெருமானே யாவரென்றும், யாம் செய்து வந்த தவத்தை அழிக்கும்படி வந்தவர் விஷ்ணுவே யாவரென்றும் அறிந்துகொண்ட முனிவர் இறைவனதுணோக்கத்தால் மயக்கந்தெளிந்தவராகி நம் பெண்களை வயப்படுத்த வல்ல திருமேனி கொண்ட இப்பிட் சாடனரைத் தகுந்த தந்திரோபாயத்தால் வெல்லல் வேண்டுமென்று கருதி, மானமாகிய நெருப்பும் கோபமாகிய காற்றுங் கிளரநின்று தமது மனைவியர் குழாங்களை மீண்டும் மிருகண்களினின்று தீப்பொறிப்பறக்கப்பார்த்துக்கூவி நீங்களின்று கற்பழிந்தீர்களாதலால், இவ்விடத்திலேயே இறந்துவிடுதல் நன்று. அல்லாவிடில் உம்முடைய ஊருக்குச் செல்லுங்களென்று கடிந்துரைத்தார்கள்.

அவ்வார்த்தையைக் கேட்ட மனைவியர் யாவரும் இந்த ஆடவர் நம்மைப்போல மனமழிந்தவராய் நிற்பதை மறந்து நம்மை மாத்திரங் குற்றத்தினுட்படுத்திச் சினக்கின்றனர். வரட்டும் பார்ப்போம்; நம்மனத்தைக் கவர்ந்தவர் சிவபெருமானே

யாகலின் நமக்கென்ன பயமென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு அக்கடவுளுடைய திருவுருவை மனத்துள் வைத்தவராய்த் தம் மிருக்கைகளை யடைந்தனர். அப்பால் சிவ்பெருமானும் விஷ்ணுவும் தத்தம் சுயரூபத்தோடு நின்றனர். அத்தருணத்தில், அறியாமையை மேற்கொண்ட தாருகாவனத்து முனிவர்கள் என்றும் அழிவில்லாதவராகிய சிவ பெருமானை முனிவோடு நோக்கி ஏ! தச்சாடண! நாம் இப்பொழுதே ஒரு கொடிய வேள்வியைச் செய்து உன்னைக் கொல்லுகிறோம் பார். எனச்சபதங்கூறி உடனே ஒரு அபிசார ஹோமஞ்செய்து, அந்த ஹோம குண்டத்திலிருந்து பயங்கரமாகிய புலி, சூலம், உடுக்கை, மான், கன்று, மழு, சர்ப்பங்கள், பூதகணங்கள், வெண்டலை, முயலகன் முதலியவைகளை யுண்டாக்கிச் சிவபெருமானைக் கொல்லும்படி விடுத்தனர். அவர் அவைகளைக் கண்டவுடனே மனமகிழ்ச்சி கொண்டவராய் புலியை யுரித்துவஸ்திரமாக உடுத்தியும், சூலத்தை ஒரு கரத்திற் படையாகக் கொண்டும், உடுக்கையை மற்றொரு கரத்திற் பிடித்தும், மான்கன்றைத் தமதிடக் கரத்திலேந்தியும், மழுவை வலக்கரத்திலேந்தியும், சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்தும், பூதகணங்களைச் சேனைகளாகச் சூழ்ந்திருக்கச் செய்தும், வெண்டலையைச் சடைமேற் றரித்தும், முயலகன்மீது ஏறி நடனம் புரிந்தும், இவ்வித திருவிளையாடலைச் செய்து கொண்டிருந்தனர். அதைக்கண்ட முனிவர்கள், இச்சிவன் இன்னும் பிழைத்திருக்கின்றான்; அந்தோ! நாம் யாகஞ்செய்து அதிலிருந்து உண்டாக்கி விட்டவை யெல்லாம் அழிந்து விட்டனவோ! என்றிரங்கித் திரும்பவும், சிவன் அழிக என்று எண்ணிலாத சாபங்களையுங் கொடுத்தனர்.

அச்சாபங்கள் யாவும் ஊழித்தீயின்மேற் செல்லும் பூளைப் புட்பங்களைப் போல் அழிந்தன. அதனால் முனிவர்கள் தாம் கொண்ட கோபமும் நீங்கி வலியுங் குறைந்து ஒரு செயலுமின்றி வாட்டமும், நாணமுங் கொண்டு நடுங்கித் தொலையாத பாவமும் பழியும் பூண்டு நின்றார்கள். அவ்வாறு நிற்கின்ற முனிவர்களை கைலாசவாசராகிய எம்பெருமான். தன் கிருபைக்கண்களால் நோக்கி, அவர்கள் இந்நாள் வரை செய்து வந்த கரும பாவங்களைப் போக்கி நல்லறிவை ஈந்தருளினார். அவ்வறிவைப் பெற்ற முனிவர்கள் உடனே விரைவிலெழுந்து சிவபெருமானே! பொல்லாத பாவங்களையே இயற்றி வந்த எங்களுடைய குற்றங்களனைத்தும் பொறுத்தருள் புரிய வேண்டும் என்று கூறிப் பன்முறை அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். அதற்கு நம்பெருமான் மனமிரங்கி முனிவர்களே! இனிமேல் நம்முடைய வேதாக நெறிமுறை வழியே யொழுகிப் பாவவழியிற்புகுதாமல் தவத்தைச் செய்து கொண்டிருங்கள் எனத் திருவாய் மலர்ந்தருளி அவர்களை ஆங்கே நிறுத்தித் தாமும் விட்டுணுவும் தத்தமிடத்துப் போய்ச் சேர்ந்தார்கள், என்று கூறியருளினர். அதைக்கேட்ட ஐவரும் முனிவரை வணங்கி விடைபெற்றுத் தங்கள் பன்னசாலைக் குட்போய்ச் சேர்ந்தார்கள்.

இனி இராஜேந்திரபுரத்தில் நடந்த சரித்திரத்தைக் கூறுகிறேன். கேட்பீர்களாக; என்று சாணாங்கி முனிவர் சொல்லுவராயினர். கேளுங்கள் முனிவர்களே! வளமிகுந் இராஜேந்திரபுர நகரிற்கிழத் தன்மையடைந்த சுவேதமகராஜன் ஒருநாள் வழக்கம்போற் சபாமண்டபத்தில் வந்து சிம்மாதனத் தமர்ந்து ஆங்குச் சூழவீற்றிருந்த அரசர், அந்தணர்,

முனிவர், மந்திரி முதலானோராகிய எல்லோரையும் நோக்கி, நேயர்களே! யான் நற்கதியடையும் படியான வழி என்ன உண்டுமோ அவ்வழியை இனித் தேடிக்கொள்ள வேண்டுவது அவசியம். அதைத் தவிர்த்து இது நாள் வரை இராச்சியத்திலேயே இருந்துநான் வாணாளை வீணாளாகக் கழித்து விட்டேன். இனி அரைக்ஷண மேனுமிங்கிருக்க முடியாது; வீரசேனன் இன்ன இடத்தி லிருக்கிறானெனத் தெரியவுமில்லை. வனத்துக்குச் சென்றதன்மார்த்தன் முதலான ஐவரும் இதுநாள் வரை இவ்விடத்துக்கு வந்து சேரவுமில்லை. ஆதலால் இவ்விராச்சியத்தை எங்கள் பரம்பரை வழக்கத்தின்படி அந்த வீரசேனனுடைய குமாரனாகிய சுவேதச்சந்திரனும் திருமுடி குட்டுவிக்கலாமென நினைக்கின்றேன். உங்கள் அபிப்பிராயம் யாது என்று கேட்க, அதற்குப் பக்கத்திலிருந்த சுவேத சந்திரன் மிகுந்த மன வருத்தமுற்று திடீரென எழுந்து சுவேத மகாராஜனை நோக்கி, அரசரேறே! தாங்கள் என்ன யோசனை செய்தீர்கள்? வயது முதிர்ந்த இப்பருவத்தில் வனத்துக்குச் செல்லுகிறேனென்றும், தவத்தையடைய வேண்டுமென்றும், எனக்கு மகுடஞ் சூட்ட நினைக்கிறே னென்றும், பல பல வார்த்தைகளை விளம்புகிறீர்களே? அவையெல்லாங் கூடாத காரியங்களே. ஆயினும் நான் ஒருக்கால்தங்க ளாஞ்ஞைப்படி பட்டாபிஷேகஞ் செய்து கொள்ள வேண்டுமென்றால் வனத்துக்குச் சென்ற என் பிதா இருவரும், தாய்மார் மூவரும் இவ்விடத்துக்கு வந்தாற்றான் சூட்டிக் கொள்வேன். இல்லாவிடி லதுமுடியாத காரியம். அவர்களும் முன் என் பாட்டன் முதலானோர்கள் சென்றழைத்ததற்குச் சிறிது காலங்கழித்து வருகிறோமென்று கூறியிருக்கிறார்கள். ஆனதால் யானும் சற்குணனும் இப்பொழுதே வனத்துக்குச்சென்று எங்களுக்குத் தெரிந்த தந்திரசாமர்த்திய வசனோபாயங்களைக் கொண்டு எவ்விதத்திலும் அவர்களை அழைத்து வந்து விடுகிறோம். இவ்வார்த்தை நிச்சயமென் றெண்ணுங்களெனத் தாட்டீகமாக மொழிந்து விடைபெற்று மந்திரி பிரதானியர் மற்றுமுள்ள சுற்றத்தார்களோடு நகரத்தை விட்டுப் பிரயாணமாகி வனம் வனாந்தரங்களை யெல்லாங் கடந்து சதுரகிரிக்குப் போய்ச் சேர்ந்து ஆங்குத் தன்மார்த்தன் முதலானோர்க ளிருக்கிற மச்ச முனிவர் வனத்தைக் கண்ட ஐவரும், ஓகோ! நம்முடைய அரசகுமார ரிருவர் சேனாசைனியங்களுடன் வருவது போற்றோன்றுகின்றதே! என்ன காரணமாக ஈங்கு வரகிறார்கள்! என ஒருவரக்கொருவர் வார்த்தை யாடிக்கொண்டிருக்கும்போது சுவேதச்சந்திரனும், சற்குணனும் வந்து அவர்களது பாதமிசை வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கண்ணீர் ததும்பிய முகத்தோடு நிற்க, உடனே தன்மார்த்தன் அவ்விருவர் முகத்தையும் உற்று நோக்கி மக்களெனவறிந்து அவர்களை அன்புடனாதரித்திருத்திச் சுவேதச் சந்திரனை நோக்கவும், தன் தம்பியாகிய வீரசேனனே வந்தாற் போலிருத்தலைக் கண்டு சகோதர வாஞ்சைவந்து தாக்க மிக்கவிசனத்தை யடைந்தனன். மற்றைய நால்வர்களும் தன்மார்த்தனைப் போலவே ஆறாத்துயரத்தி லழுந்தினர்.

அதன்மேல் ஐவரும் கண்ணீர் மாறாதிருக்கும் புத்திரருடைய அழுகையை நிறுத்தி முகத்தைத் துடைத்துக் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் சொரிய மக்களே! விதியின் பயனை எவர் கடக்க வல்லார்! ஆகையால் வருத்தமுறா திருங்கள் எனப்பல சந்தோஷ வார்த்தைகளைக்கூறி மனத்தைத் தேற்றித் தங்கள் பன்னசாலைக்கு ளழைத்துப்போய்ச் சொர்ணலிங்கப் பெருமானருளாற் பெற்ற

அறுசுவையுண்டிகளால் அவர்களைப்பசியாற்றி, அவர்களுடன் வந்த மந்திரி முதலான சுற்றத்தார் யாவரையும் வரவேற்று உபசரித்து அமுதளித்துப்பின்னர் ஐவரும் சுவேதச் சந்திரனையும் சற்குணனையும் பார்த்து, புத்திரர்களே! நம் நகரத்தின் க்ஷேமாதிசயங்கள் எவ்வாறுள்ளன? என்று கேட்க, அதற்கு அவ்விருவரும் தன்மார்த்தனை நோக்கி, பிதா! அரசகாரியங்களெல்லாம் ஒழுங்காக நடைபெற்று வருமென்பது தங்களுக்குந் தெரிந்ததே; தாங்கள் நகரத்தில்லாக்குறையைத் தீர்க்க அப்பாவாலும் ஆகவில்லை அக்குறையை தீர்க்கத்தான். நாங்கள் புறப் பட்டிருக்கிறோம். மற்றபடி ஈசுரகிருபையால் யாவரும் க்ஷேமமே. என்று கூற, அதைக்கேட்ட தன்மார்த்தன் முகமலர்ந்து புத்திரர்களே! நீங்களிருவரும் இவ்விடத்திற்கு எதற்காகப் புறப்பட்டீர்கள்? விளங்கச் சொல்லுங்கள்? எனக் கேட்க, அதற்கவ்விருவரும் பாட்டனாராகிய சுவேத மகாராஜன் கூறிய சமாசாரங்கள் யாவையுந் தெரிவித்து உங்களைவரையும் அழைத்துக் செல்லவந்தோமென, அவ்வார்த்தையைக் கேட்ட ஐவரும், மக்களே! தாய் தந்தை முதலான யாவரையும், இராச்சிய முதலியவைகளையும் வெறுப்புற்று அரிதாகிய தவஞானமோக்ஷமே பெரிதென நினைத்து, இவ்விடத்திற்குவந்து, அநேக தவசிரேட்டர்களிடத்தி லுபதேசங்களைப் பெற்று அவ்வழியிலிது நாள்வரை யொழுகிவருகிற நாங்கள் இனி நகர்க்கு வருவதென்றால் அதுமுடியாதகாரியம். ஆகையால் நீங்களிருவருஞ் சுகமாக நகரத்துக்குச்சென்று மகுடாபி ஷேகத்தைப்பெற்று இராச்சிய பரிபாலனஞ் செய்துவாழ்வீர்களாக, என்றுகூற, அதைக்கேட்ட சுவேதசந்திரன் மனமிகவருந்தி ஐயா! என் தந்தைக்குப் பிரதிநிதியாகத் தாங்கள் வந்திருந்து என்னை மகிழ்விப்பீர்களென நினைத்திருந்தேன். இப்பொழுது அதற்கு மாறான வார்த்தைகளைத் தங்கள் திருவாய் மலர்ந்தே வழங்கப்பெற்றேன். இனி உங்கள் வார்த்தையை மறுக்காமல் நான் மகுடஞ் சூட்டிக் கொள்ளவேண்டுமென்றால், மைந்தன் வேண்டுதலையுந் தாங்கள் மறுக்காமல் தாய்மார்களுடன் நகரத்துக்கு வந்து சேர்தல் வேண்டும். அல்லாவிடில் எனக்கு நாடும் வேண்டாம். நகரமும் வேண்டாம். உங்களால் வெறுக்கப்பட்ட இவ்வுடலும் வேண்டாம். தங்களுடைய திருவுள்ளத்தில் என்னுடைய வேண்டுதல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற தீர்மானந்தெரிந்த அப்பொழுதே நீங்கள் ஒரு பொருட்படுத்தாத இவ்வுடலை இவ்வாளுக்கிரையாக்கி விடுதல் திண்ணம் எனக்கூறி உறையிற் கிடந்த வாளையுருவிக் கரத்திற் பற்றினான். அப்பொழுதே சற்குணனும் தன்னுடைய வாளையுருவிக் கையிற் பிடித்து நின்றான்.

அப்பொழுது தன்மார்த்தனும், சூரசேனனும், தாய்மார் மூவரும் மக்களுடையதுணிவான அந்நிலையைக் கண்டு திகிலுற்று நம்மிலுஞ் சிறந்த வைராக்கிய சித்தமும், உறுதியுடைமையும்; சகோதர ஒருமையும் இவர்களிடத்திலுண்டாயிருக்கின்றன வென்று அறிந்து மகிழ்ந்து அவர்கட்கு ஆறுதல் கூறி வாளை யுறையிற் சேர்க்கச் செய்தனர். அப்பால் மகிழ்வுற்ற மக்களை நோக்கிப் பிள்ளைகளே! நாங்கள் யோகஞான தவத்தையடைந்தும், பூர்வகண்மாதுபாவம் எங்களைவிட் டகலவில்லை. யாகலின் பதினாறுயாண்டுகட்குப் பின்னர் இவ்வாறு நீங்கள் வந்து பற்றிக்கொண்டீர்கள்; எனப் பலவாறு புலம்பி வியாகுல முற்றிருக்குந் தருணத்தில் ஆச்சிரமத்திலிருந்த தவ உத்தமராகிய மச்சமுனிவர் தம் சீடர்களாற் சகல செய்திகளையுங் கேள்வியுற்று ஐவர்களின் பன்னசாலைக்குச் சென்று அவர்களை

நோக்கித் தன்மார்த்தன் முதலானோர்களே! மலைகளிலும் வனங்களிலும் வாசஞ்செய்துகொண்டு தவம்புரிந்தாற்றான் நலமென்றும், நாடு நகரங்களில் வசித்துத் தவம்புரிந்தால் நலங்கிடையாதென்றும், வேதங்களிற் கூறியிருக்கின்றனவோ? அப்படிக்கூறக் கண்டிலம். ஆகலின் எங்கிருந்து தவத்தைச் செய்தாலும் நாம் அடையவேண்டிய பொருள் ஒன்றுதான். அதாவது பேரின்பநிலையே. அத்திருவடிப்பேற்றைப் பெற ஐம்புலன்களும் மனமும் அறிவின் வழிப்பட்டடங்கிக்கிடக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டியதைத்தவிர வேறு செய்ய வேண்டிய தொன்றுமில்லை. நீங்களோ அதில் மிகக்கை தேர்ந்தவர்கள் இவ்விடத்தில் பதினாறுயாண்டளவும் நங்கையருடனிருக்கும் நம்பிகளாகியடங்கள் மனது உங்களால் வெல்லப்பட்டதனாலன்றோ! நீங்கள் ஞானிகளென்று எங்களால் நன்கு மதிக்கப்பட்டீர்கள்; இத்தகைய நீங்கள் நாட்டிலிருந்தாலும், நாடாண்டாலும் தாமரையிலையிற் றண்ணீர் கிடத்தல் போலச் பற்றின்றி வாழ்தலுடன், நீர்க்குடத்திற் கருத்தாகவருந் தாதிமனம் போலச் சிவன் பால் வைத்த சித்தத்தையுடையவராயிருக்கும் உங்களுக்கொரு குறைவும் வரமாட்டாது.

ஆகையால் இவ்விள வரசுகளுடன் நகரத்துக்குச் சென்று அவர்களை வாழ்விக்க வேண்டியது உங்கள் கடமையும், உங்களுக்குத் தருமமுமாம் என்று கூறியருளினர். அதைக் கேட்ட ஐவரும் உத்தரமேதும் புகலாது தங்களுடைய நகருக்குச் செல்லுகின்றோம்; ஆனாலும் நாங்கள் இதுநாள் வரைத் தங்களிடத்தில் புண்ணிய சரித்திரங்களையும், தவஞானோப தேசங்களையும், கேட்டு அரிய பேறு பெற்றவர்களானோம். இனி நாங்கள் தேகசித்தியடையும் பொருட்டுக் கற்பமுறைகளைக் கூறி யருள்வீரெனக்கேட்க, அதற்கு முனிவர் இராஜ புத்திரர்களே! உலகத்தில் எம்மைப் போன்ற அநேக சித்தர்களி னனுபவத்திலிருந்து வருகிற காயாதி கற்ப முறைகளிற் சிலவற்றைக் கூறுகிறேன். கேட்பீர்களாக.

இவ்வனத்துக்கு தென்திசையில் ஓர் ஓடைக்குப் பக்கத்திலிருக்கிற சிறுகுன்றிலிருந்து அம்பிடு தூரத்தில் வெள்ளைப்புன முருங்கை என்றொரு மூலிகை உண்டு. அது சாதாரண முள் முருங்கையைப் போலிருக்கும். அதன் பூ வெண்மையா யிருக்கும். அதன் சதைப்பட்டையைக் கொணர்ந்து பாக்கு வெற்றிலையுடன் சேர்த்து மென்று வாயிலடக்கிக் கொண்டு இறை நீளமுள்ள இரும்புத் தகட்டை உலையில்வைத்து ஊதிப் பழுக்கக்காய்ந்தவுடன் அதில் வாயிலிருக்கிற தம்பல உமிழ்நீரைப் பத்து தரம் உமிழ்ந்து சுருக்கிட அது பழுக்கும். பழுத்த அதைச் செந்தூரமாக்கிப் புசிக்கக் காயசித்தியாகும். மற்றொரு பாகமாவது. மேற்படி மரத்தின் பிசினை எடுத்துவந்து நாற்பத்தைந்து நாள் ஒரு பண எடை வீதம் புசித்துவரக் காயசித்தியாகும். பத்தியம் பாலுஞ்சாதமும் புசிக்க வேண்டும். இதைத் தவிர, மற்றொரு முறையுமுண்டு. அதாவது, அந்த வெள்ளைப்புன முருங்கை இருக்கிற இடத்திற்குப் பக்கத்தில் பேய்ச்சுரை என்றொரு மூலிகை உண்டு. அது கரைக் கொடிபோ லிருக்கும். காய் மட்டும் வில்வக்காய்ப் பருமனாக இருக்கும். அக்காயைப் புசித்தாற்கசக்கும். அதன் விரையை மாத்திரம் கொணர்ந்து குளித்தைலமாக இறக்கி மூன்று கழஞ்சுத் தைலத்தில் நெய் தேன் சமனெடை சேர்த்துச் சூத செந்தூரத்திற் குழைத்துப் புசிக்க மூர்ச்சையாகும்.

அச்சமயத்தில் ஒரு ஆளிருந்து மேற்படி தைலத்தை தேகங்களிலும் பாதங்களிலுந் தடவுவதுடன் ஒரு அகப்பை பசுவின் பால்வீதம் இருபத்தொரு நாள் வரை யுள்ளே கொடுக்க மூர்ச்சை தெளியும் தேகமுஞ்சித்தியாகும். இதை தவிர மற்றொரு முறையும் உண்டு.

அதாவது, அந்தப் பேய்ச்சுரை மூலிகை இருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் குறுவரிக்கற்றாளை என்ற ஒரு மூலிகையுண்டு. அது பெருவிரற்கனமாக விருக்கும். ஒன்றரைச் சாணுயரம் வரைக்கும் குறுக்கே வரிவரியாக இருக்கும். அதைச் சமூலம் பிடுங்கி வந்து இடித்துச் சாறெடுத்து இரும்பை லேசாகத் தகடு தட்டி அந்த தட்டை மேற்படி சாற்றிலூறவைத்து எடுக்கத் தாம்பிரமாகும். அதைச் செந்தூரஞ் செய்து புசிக்கக் காயசித்தியாகும் என்று கூறினர். அதை அவர்களின் பக்கத்திலிருந்த சுவேதச் சந்திரனும் சற்குணனும் கேட்டு எழுந்து முனிவரை முறையோடு வணங்கி ஸ்வாமீ! உலக தரும வொழுக்கங்களைப் பற்றிய வுபந்நியாசங்களை நாங்களிருவரும் தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென் றெண்ணுகிறோம். அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்து எங்களை யாட்கொள்ள வேண்டுமெனக் கேட்க, அதற்கு முனிவர் அளவிலாத மகிழ்வு கொண்டு அன்புகூர்ந்து ஆசீர்வதித்து அவ்விருவர்களையும் வீற்றிருக்கச் செய்து, அன்பார்ந்த மைந்தர்களே! நீங்கள் விரும்பிய உலக தரும வொழுக்கங்களில் முக்கியமாக உங்களுக்கு வேண்டுவது இராஜதருமமே. அவ்விராஜ தருமமாவது என்னவென்றால்,

ஒரு இராஜனானவன் அனுதினமும் அதிகாலையிலெழுந்து நித்ய கன்மஸ்தனாநுட்டான முதலியவைகளை யெல்லாம், முடித்துத் தான் வழிபடுகடவுளை நமஸ்கரித்துச் சபாமண்டபத்துக்கு வந்து ஆகமவேத சாஸ்திரங்களையும் நீதி சாஸ்திரங்களையும் இலக்கண வழியோடு சகலமுந் தெரிந்த பெரியோர்களிடத்திற் கேட்டறிந்து, உயிர்களிடத்தி வன்புடையவராகிச் சாமபேத தான தண்டமென்னுஞ் சதுர்வித உபாயங்களாலும், சிறந்த தருமங்களாலும், நல்லொழுக்கங்களாலும் இராச்சியத்தை நீதிவழுவாது செங்கோல் செலுத்தி வருதலாகும். இனித்தெய்வ உண்மையும், புண்ணிய பாவமும், அவற்றால் வரும் சுவர்க்கநாதமும், பிறப்பு இறப்பும், தவஞான முக்தியும் உண்டு; என்ற உண்மையை எந்தக்காலமும் நீங்கள் மறக்கலாகாது. எதிரிக்கிடங்கொடுக்கலாகாது. எதிர்பார்க்குப் புறங்காட்டலாகாது. அறிவுள்ள மந்திரிகளுடனும் பெரியோர்களுடனும் அளவளாயிருந்து எதுவும் ஆராய்ந்து செய்தல் வேண்டும். வீரலக்ஷுமி தோளையும், தீர லக்ஷுமி உள்ளத்தையும் விட்டு நீங்காமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். எந்த ஜீவனுக்கும் தீமை நினைப்பது கூடாது. பிறவுயிர்களுக்குத் துன்பம் நேர்ந்த சமயத்தில் அத்துன்பத்தை அவசியமாக நீக்க முயலல் வேண்டும். பொறுத்துக்கொள்வதற்கரிதாகிய கோபமும் சஞ்சலமும் வந்தால் அவைகளை எவ்விதத்திலும் சகித்துக்கொள்ளவேண்டும். பிறருடைய பொருளை விஷத்துக்குச் சமானமாக நினைத்தல் வேண்டும். தனக்கு பிறர் செய்த நன்றியை மறக்கலாகாது. வஞ்சனையை ஒழித்தல் வேண்டும். பகைவர் சிநேகர் நொது மலர் ஆகிய மூன்று வகுப்பினரிடத்தும் பக்ஷுபாதகமின்றி சமமாக நீதி செலுத்தல் வேண்டும். பிறருடைய கல்வி அறிவு நல்லொழுக்கம் அழகு செல்வ முதலியவைகளைப் பார்த்துப்

பொறாமை யடையலாகாது. அவைகள் தன்னைப் பார்க்கிலும் அவர்களுக்கு அதிகமாகப் பெருக வேண்டுமென நினைத்தல் வேண்டும். வலியரைக் காணாதவிடத்தும் எளியரைக் கண்டவிடத்தும் இகழ்ந்து பேசுதல் கூடாது. பொய் புகலலாகாது. எந்நாளும் சத்தியத்தையே புகல வேண்டும். தன்னை ஏளனஞ் செய்து வைதனிடத்தும் கடுஞ்சொற்களை மொழிவது கூடாது. தனக்கும் பிறருக்கும் பயனற்ற வீணான வார்த்தைகளை விளம்பலாகாது. கோட்சொல்லலாகாது. தமையன் மனைவியைக் குருபத்தினியாகவும், தம்பி மனைவியையும் தன் மைந்தன் மனைவியையும் மருமக்களாகவும் பிறருடைய மனைவியைத் தாய் தமக்கை தங்கைகளாகவும் நினைத்தல் வேண்டும். பிறரிடத்தில் ஏதாவது குற்றமுண்டாயின் தனித்தவிடத்திற் கண்டு அக்குற்றத்தையும் அதனால் வருங்கெடுதியையும் அவர்கட்குத் தெரிவித்து அவரை நல்வழியிற் கொண்டு வரல் வேண்டும்.

கடவுளை நிந்தித்துப் பேசிய துரோகி, கொலைஞன் சூதாடுவோன், இலகிரி வஸ்துக்களை யுண்போன், பொய்ம்மை பேசுவோன், களவாடுவோன், தூர்த்தன், வஞ்சகன், பொறாமையுடையவன், புறங்கூறுவோன், பலரிடத்திலும் பகைப்பவன். வரவுக்கு மிஞ்சிய செலவு செய்பவன் இவர்களோடு சிநேகிக்கலாகாது. தனக்கு மந்திரங்களையேனும், ஆகமவேத சாஸ்திரங்களையேனும், உபதேசித்த ஆசிரியரை வழிபடல் வேண்டும். தாய் தந்தை முதலிய பெரியோர்களை வணங்கி அவர்களுக்கு வேண்டுவனவற்றை யுதவி அவர்கள் மனங்கோணாமல் நடக்க வேண்டும். தன்னில் உயர்ந்தோரையாயினும் தனக்குச் சமமானவரையாயினும் வணங்கும் போது அவ்வணக்கம் அவர் சரீரத்திற்கென்றெண்ணாமல் அவரிடத்தில் உயிருக்குயிராயிருக்கும் கடவுளுக்கென் றெண்ணி வணங்கல் வேண்டும். தன்னைப் பிறர் வணங்கும்போது அவ்வணக்கத்தைத் தனக்கென்று கருதாமல் கடவுளுக்கென்று சொல்லி அவர்பால் ஒப்புக்கொடுத்தல் வேண்டும். ஒருவருக்குச் செய்த நன்றியையும், தருமத்தையும், புகழ்ந்து பேசலாகாது. தனக்கு ஒருவரிட்ட போஜனத்தை இகழ்ந்து பேசலாகாது. வியாதியாளர், கல்விகல்லாதவர், ஆசாரமில்லாதவர், பொய் முதலிய ஐம்பெரும் பாவங்களைச் செய்பவர் முதலானோர்களைப் பரிகசித்தல் கூடாது.

இராக்காலங்களில் ஏதேனும், ஓர் காரணத்தை உத்தேசித்து அவசியமாகச் செல்லவேண்டுவதா யிருந்தால் துணையின்றிச் செல்லலாகாது. அதிகமாக உறக்கங்கொள்ளுதல் அதிகமாக விழித்திருத்தல், அதிகவருத்தமுறல் இவைகளாகாவாம். எக்காலத்திலும் வடக்கு, மேற்கு இவ்விரண்டு திக்கிலும் தலைவைத்துச் சயனித்தல் கூடாது. எப்பொழுதும் ஆரோக்கியமாயிருத்தல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற உயிர்க் குறுதிப் பொருள் நான்கினையும் அடைவதற்குக் கருவியாகிய அருமையான உடலை வியாதிகள் அடையாவண்ணம் பாதுகாத்துக்கொள்வது முக்கிய கடமையாகும். செய்கைத் தவறாலும், காலவேறு பாட்டாலும் ஒரு சமயம் வியாதி உண்டானால் தமிழ் வைத்திய முறைகளைச் சந்தேக விபரீதமறக் குருமுகமாகக் கற்றறிந்த வைத்தியனிடத்து மெய்யன்பு வைத்து மருந்து சாப்பிட்டுக் குணப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஒரு நாட்டு வைத்தியம் மற்றொரு நாட்டுக்குப்

பொருந்தமாட்டாது. ஏனெனில், சீதோஷ்ண ஸ்திதியும், மூலிகைகளின் தத்துவமும், வெவ்வேறாக விருத்தலால் என்றறிக.

நல்லோரிணக்கமும், நல்லறிவுடைய அரசனும், தனவந்தரனைவரும், தங்களுடைய நல்வாழ்வின் பொருட்டு உத்தம தருமமாகிய பூர்வ தேவாலயத் திருப்பணிகளை ஆகமவிதிப்படி வழுவற மிகுந்த சிரத்தையோடு செய்துவரல் வேண்டும். கடவுள் பூசனைக்கு வேண்டும். பூந்தோட்டங்க ளமைத்தலும், வித்தியா சாலைகளை ஏற்படுத்தலும், ஏழைகட்கும், மெய்யடியார்கட்கும், துறவிகட்குமென்று அன்னசத்திரங்கட்டி வைத்தலும், தல யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்பவர்களுக்கு வேண்டுவன வுதவுதற்குரிய அறச்சாலைகளை நிலையிடுதலும், தண்ணீர்ப்பந்தர் வைத்தலும், குளம், கூபம் தோண்டுவித்தலும் தர்ம வைத்திய சாலைகளை யமைத்து ஏழைகளின் பிணி தீர்த்தலும், நடைவழிகளை செவ்வைப்படுத்தி இருபக்கத்திலும் நிழலுக்காக விருக்ஷங்களை வைப்பித்தலும், ஆகிய இத்தருமங்களைச் செய்தவர்கள் இம்மை மறுமைகளில் நல்வாழ்வைப் பெற்று மகிழ்வார்கள்.

ஆகையால், நீங்கள் இவ்வொழுக்கங்களிற் சிறிதேனுந் தவறாது எந்நாளும் நடந்துவரல் வேண்டும் என்று கூறியருளினார். அதைக் கேட்ட சுவேத சந்திரனும் சற்குணனும் மிகுந்த மகிழ்ச்சியுடையவராயினார்கள். அதன் பின்னர் நகரத்திலிருந்து அவ்விருவருடன் வந்திருந்த சில உத்தமப் பெண்கள் அம்முனிவரைத் தொழுது சுவாமீ! யாங்களுந் தங்களிடத்தில் ஏதாவது உபதேசம் பெற்றுக் கொள்ளலாமென் றெண்ணுகிறோம். அவ்வெண்ணத்தைத் தாங்கள் பூர்த்திசெய்து எங்களை யாட்கொள்ள வேண்டுமெனக் கேட்க. முனிவர் புத்திரிகளே! உங்கள் ஒவ்வொருவருக்கும் முக்கியமாய் வேண்டுவது கற்பு அக்கற்பு என்னும் உபதேசத்தைப் பற்றிக் கூறுகிறேன். கவனமுறக் கேட்பீர்களாக. உலகத்திற் பெண்களுக்குக் கற்பு என்று சொல்லப் பெறுவது யாதெனில் தம்மை விவாகஞ்செய்த நாயகன் சொல்லக்கடாவாதிருத்தலாம். ஆகையால்" கற்பெனப்படுவது சொற்றிலும் பாமை" என்னும் பழமொழியை நீங்கள் மறக்கலாகாது. பொதுவாகப் பெண்கள்: குழந்தைப் பருவத்திலே தாய் தந்தையாராலும், யௌவனப் பருவத்திற் புருடனாலும், மூப்புப் பருவத்தில் புத்திரனாலும் காக்கப்படத் தக்கவரே யாவர். ஆதலால் பெண்கள் ஒருபோதும் சுவாதீனராயிருக்க விரும்பலாகாது. இவ்வாறு முக்காலத்திலும் பெண்கள் காக்கப்படுதல் "சிறைகாக்குங்காப்பு" என்னுஞ் சொற்றொடருக்குப் பொருளாம். ஆகலின் "காவல்தானே பாவையர்க் கழகு" என்னும் முதுரை வழங்கலாயிற்று. இக்காவலைக் காட்டிலுஞ் சிறந்தது. பெண்கள் தாங்களாகவே மனங்கொண்டு தலையாய "நிறைகாக்குங் காப்பு" டைமையைக் கடைப்பிடித்தலாம் ஆகையால் "தற்காத்து தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் மறைக்குப் பெண்கள் இலக்கியராயிருத்தல் வேண்டும். அத்தகைய பெண்கள் ஒவ்வொருத்தியும் கதிரோனுதயத்துக்கு முன் நித்திரை விட்டெழுந்து வீடுபாத்திர முதலானவைகளை விளக்குதல் செய்து மாமன் மாமியாரைவணங்கிக் கணவனுடைய பணிவிடைகளைத் தவறாது செய்துவரல் வேண்டும். நாள்தோறும் தன்னுடைய புருடன் உண்டபின் தான் உண்டலும், அவன் உறங்கியபின் தானுறங்குதலும், அவன் எழுந்திருக்குமுன் தான் எழுதலும், தன் கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

அன்றியும் கணவன் கொடுத்த பொருளை வீண் செலவு செய்யாது வரவுக்கேற்பச் செலவழித்தலும் அவன் மனதின்படி ஒத்திருத்தலும் கடுஞ்சொற்களைக் கூறாது. இன்சொற்களைச் சொல்லலும் ஆகிய நற்குண நற்செய்கைகளை யுடையவளாய்ப் பெண்கள் நடந்துவரல் வேண்டும். தன்னில்லத்திற்கு வரும் ஏழைகளுக்குப் பிச்சையிட்டு இனிய வார்த்தைகளைச் சொல்லியனுப்புதல் வேண்டும். எவரோடும் இடியிடித்ததுபோல உரத்த சத்தத்தோடு பேசலாகாது. இனிய குரலோடு மிருதுவாகப் பேசல் வேண்டும். நாயகனுடைய ஆயுள் விர்த்தியாகும் பொருட்டு மஞ்சள் குங்குமந்தரித்துக் கொள்ளல் வேண்டும். யாண்டும் தன் நாயகன் பெயரைக் கூறவாவது பிராறிய அவன் எதிரே உட்காரவாவது கூடாது. அவனுடைய உச்சிட்டத்தை அமுதமென நினைத்துப் புசிக்க வேண்டும். அவன் ஒரு சேனையை நோக்கி ஏவு முன்னமே அவன் குறிப்பறிந்து நடந்து கொள்ளல் வேண்டும். தன் நாயகன் வீட்டுக்கு வரும்பொழுது அவனை முகமலர்ச்சி யோடெதிர் கொண்டு அகமலர்ச்சியாய் உபசரித்தல் வேண்டும். தகாத வார்த்தை பேசல், வீட்டுக்கு வெளியே நிற்றல், பலகணி வழியாகப் பார்த்தல், பிறர்காணச் சிரித்தல், பகல் நித்திரை கொள்ளுதல், கணவன் உத்தரவில்லாமல் வெளிப்போகுதல், அயல்மனிதரோடு பேசுதல், வேசைகள் போல்பார்த்தல், புருடன் இல்லாத போது தன்னை அலங்கரித்துக் கொள்ளுதல், நாடகம் முதலியவைகளைப் பார்க்க விரும்புதல், கணுக்காலும் குயமுந் தெரியத் துகிலுடுத்தல், விருத்தாப்பிய வயதுடையரில்லாத இல்லத்திற்குப் போதல், கூட்டத்திலுட் செல்லும்போது குறுநகை புரிதல், வேசி தூர்த்தை கற்பு நிலை தவறினவள் மாயவஞ்சப் பெண்கள் ஆகிய இவர்களுடன் சிநேகித்தல், கணவனைப் பிரிந்து அயலூருக்குச் செல்லல், தான் விரும்பிய இடத்திற்குச் சென்று உறங்குதல் ஆகிய இச்செய்கைகளை நீக்கவேண்டும். தனக்கு வாய்த்த புருடன் அழிகில்லாதவனாக விருந்தாலும், நற்குண நற்செய்கை ளில்லாதவனானாலும் பிணியாள னானாலும் தரித்திரனானாலும் கல்வி கல்லாதவ னானாலும், வயது சென்றவனானாலும், அவனைக் கொஞ்சமேனும் அவமதியாது நன்கு மதித்து வழிபடல் வேண்டும். இயன்றமட்டும் தன் புருடனுக்குக் கோபமுண்டாகாவண்ணம் நடந்துவரல் வேண்டும். ஒரு சமயம் கோபமுண்டாயின் அதனைப் பொறுத்து முகமலர்ச்சிகாட்டி இனிய வார்த்தைகளால் அக்கோபத்தை யாற்றல்வேண்டும். கணவன் அநீதியாகத் தண்டித்துக் கோபிக்கும்படி நடந்து கொள்ளலாகாது. கோபசமயத்தில் மௌனமுற்றிருந்து அவனுக்கு ஆறுதலுண்டாகும் சமயம்பார்த்து இதமாகப் பேசி அறிவெழுப்புதல் வேண்டும். தன் புருடனுடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது. அவனுடைய துற்குணங்களைச் சொப்பனத்திலும் நினைக்கலாகாது. அவனுடைய நற்குண செய்கைகளைப் பாராட்டி மெய்யன்போடு உபசரித்து ஒழுகல் வேண்டும். தன்னுடைய தாய் தந்தையர் சகோதரர் சுற்றத்தார் முதலிய எல்லோரிடத்திலும் பார்க்கத் தன்புருடனித்து அன்புவைத்து நடக்க வேண்டும். தான்தரித்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றி யிருந்தாலும் தன் மாங்கல்யத்தை மாத்திரம் ஓரிமைப்பொழுதாயினுங் கழற்றிவைத்தல் கூடாது. அதுபோலத் தன் மாதா பிதா சுற்றத்தார்களை விட்டு நீங்கினாலுந் தன்னாயகனை மாத்திரம் விட்டு விலகியிருக்கக்கூடாது. எந்நாளுங்கற்பழியாது நிலமையைக் காத்துவரல்வேண்டும். இவ்வித லக்ஷணங்களின்படி நடந்துவருகிற பெண்களைத்தாம் பதிவிரதைகளென்று சொல்லக்கூடும். அப்படியில்லாது கற்புத்தவறி நடந்து வருகிற

பெண்கள் இம்மையிற் கொடிய வியாதிகளால் வருந்திப் பிறராற்பழிக்கப்பட்டுப் பிறந்த குடும்பத்துக்கும் புகுந்த குடும்பத்துக்கும் வசையை யுண்டாக்கி முடிவில் மீளா நரகத்திற்கும் ஆளாவார்கள்.

ஆகையால் கற்புங் காவலும் பெண்கள் தங்களுக்குப் பூஷணமாகக் கொண்டு மேம்படுதல் வேண்டும். இத்தகைய பெண்கள் தத்தம் கணவருடைய தாய்வழிச் சுற்றம், தந்தைவழிச் சுற்றம், கொண்டு கொடுத்தவழிச் சுற்றம் எனப் பெறு மியல்புடைய மூவர்களையே தம் சுற்றத்தா ரென்னும் உண்மை யறிவுடையவர்களாய்க் கணவனிருக்கும் போதும் இல்லாத நேரங்களிலும் உபசரிக்கக் கடமைபட்டவர்களா யிருக்கிறார்கள். இவர்களே உத்தமிகள் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாவர் என்று கூறியருளினர்.

அதைக் கேட்ட அப்பெண்கள் அடங்காத மகிழ்ச்சியுற்றனர். அப்பால் சுவேதச்சந்திரனும் சற்குணனும் அவர்களுடைய சுற்றத்தாராகிய உத்தமர்களும், மந்திரி முதலான யாவரும், தவ உத்தமராகிய மச்சமுனிவரது செம்பொற்பாதங் கண்மிசை சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்துச் சுவாமீ! தாங்கள் நகரத்தை விடுத்து இவ்விடத்துக்கு வந்து தங்களுடைய தெரிசனம் பெற்றது எங்கள் பூர்வ புண்ணியமே என்று புகழ்ந்து பேசினர். அப்பால் தன்மார்த்தன் முதலிய ஐவரும் முனிவரை வணங்கிச் சுவாமீ! தங்களைப் போலும் அரிய தவமுனிவர்களி னநுக்கிரக உபதேசங்களைக் கேட்டு கேட்டபடி நடந்து மேலாகிய தவயோகஞான நிலையை அடைந்தோம்; நாங்கள் வந்தது முதலின்று வரை சற்றேறக் குறைய பதினாறு வருடகாலமாகின்றன. ஆகையாலினி தங்கள் ஆஞ்ஞையின்படி நகரத்துக்குச் சென்று வருகின்றோம். எங்களுக்கு விடையளித் தருளவேண்டுமென்று கூறினர். அதைக்கேட்ட முனிவர், இராஜபுத்திரர்களே! யாதொரு தடையுமின்றி உங்கள் நகரத்துக்குச் சென்று தாய் தந்தையர் முதலான சுற்றத்தார்கள் மனங்கோணாது அவர்கள் சொற்றவறாது நடந்து, இச் சிறுவர்களி லொருவனுக்கு இராச்சிய பாரத்தைத் தாங்கும்படி பட்டாபிஷேகஞ் செய்வித்துப் பின்பு உங்கள் மனோபீஷ்டத்தின்படி அவ்விடத்திலேயே தவவனம் ஒன்றுண்டாக்கி அதிலிருந்து தவம்புரிந்து வருவீர்களென்றனர். அப்பால் ஐவரும், புத்திரர் முதலான யாவரும் முனிவரை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய்ச் செல்வதும் மீண்டு திரும்ப வருவதுமாக விருந்து முடிவில் ஒருவாறு மனந்தேறி தன்மார்த்தன் முதலிய ஐவரும் முன்னாக, மந்திரிமுதலானோர் பின்னாகப் பிரயாணமாகிச் சென்றார்கள் என்று சாணாங்கி முனிவர் கூறுதலும், நாகார்ச்சுனாதி முனிவர்கள் சுவாமீ! மச்சமுனிவர் ஆச்சிரமத்தில் நடந்த புண்ணிய சரித்திரங்களையும் ஞானோபதேசங்களையும், காயகற்ப முறைகளையும், இதோப தேசங்களையுங் கேட்டு இன்ப வடிவாயினோம். இனி அந்தச் சுவேசந்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் சூட்டிய வைபவத்தை அன்பு கூர்ந்தருளிச் செய்ய வேண்டுமென்று கேட்கச் சாணாங்கி முனிவர் சாற்றுவாராயினர்.

இருபத்தொன்பதாவது,
மச்சமுனிவர் சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்
முப்பதாவது

பட்டாபிஷேகச் சருக்கம்

முன்னை நல்வினையி ருந்து யோகநெறி
முழுது மோர்ந்திட முனைந்திடமுனைத்தருள்
அன்னை பார்வைகொடு நாலுமாமலைய
டைந்து சித்தர்களின் வாழ்த்துடன்
இந்நி லத்தழிவில் காயகற்பமுத
லெய்தி மச்சமுனி யாணையால்
தொன்ன கர்க்குவரு மைவர் சேய்க்குமுடி
சூட்டி வைத்ததிற னோதுவாம்.

கேளுங்கள் முனிவர்களே! தன்மார்த்தன் முதலான ஐவரும், சுவேதசந்திரன் சற்குணன் முதலிய யாவரும் மேற்குத் திசைநோக்கிச் செல்லுகையில் பலா, சந்தனம், அகில் முதலாகிய பலவிருக்ஷங்கள் சூழ்ந்த கானல்களையும், வனங்களையும், யானை, கரடி, புலி முதலான அநேக துட்டமிருகங்கள் சஞ்சரிக்கின்ற பயங்கரமான காவுகளையும், பனிக்கட்டிகளானவை உறைந்து மூடிக் கொண்டிருக்கிற உயர்ந்த சிகரங்களையுடைய மலைகளையும் அப்பனிக்கட்டிகளானவை கதிரவனுடைய கிரணத்தாற் கரைந்து ஆறாகப் பெருக்கெடுத்து, முத்துக்களையும், நவரத்தின மணிகளையும், சந்தன குங்கும விருக்ஷங்களின் கிளைகளையும் முரித்து வாரிக் கொண்டு அதிவிரைவாக ஓடிவருகிற அநேக வரையாறுகளையுங் கடந்து தவசிரேட்டராகிய மிருகண்டுயரின் ஆசிரமத்தைச் சேர்ந்து அவரைக்கண்டு தரிசித்து அத்திரிமுனிவர் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரனுக்கிரகத்தைப் பெற்று, ஆங்குச் சற்றிளைப்பாறி அவ்விடத்தை விட்டகன்று தென்திசையை நோக்கித் தோணிப்பாறை வழியாக நடந்து ஆங்கு மலைக்குக் காவலாயிருக்கும் கருப்பண சுவாமியைத் தரிசித்து இராஜபுத்திரத்தைச் சேர்த்து அன்றிரவைப் போக்கி, மறுநாட்காலையிலெழுந்து மாவூற்றின் மார்க்கமாகச் சென்று உதையகிரி நாதருடைய தரிசனக்காட்சியைப் பெற்று அவ்விடத்தினின்றும் சிலதூரங் கடந்து இப்பூமிக்கோர் திலகமென விளங்குவதும் தேவநகராகிய அமராவதிப் பட்டணம் போன்றதுமான ஆழ்ந்த அகழிகள் சூழ்ந்த உயர்வாகிய மதிலையுடைய அழகிய இராஜேந்திரபுர நகருக்குச் சமீபத்தில் வரும்போது அவர்களைக் கண்ட அந்நகரத்து ஜனங்கள் யாவரும், தன்மார்த்தன் முதலான ஐவரும் நகரத்துக்கு வருகிறார்களென்ற ஆனந்த மேலீட்டால், எதிர் சென்று அவர்களைப் பன்முறை வாழ்த்திப் பரிமளப் பொடிகளை வாரி வாரித் தூவியும், மங்களங்கள்

பாடியும், ஆலத்தி யெடுத்தும், பலமங்கள வாத்தியங்கள் முழக்கியும் இவ்வித கோலாகலத்துடன் உபசரித்து அழைத்துவர, ஐவரும் அரண்மனைக்குட் சென்று தாய் தந்தையராகிய சுந்தரவதனி, சந்திரவதனி, சுவேத மகாராஜன் முதலானோர்களை நமஸ்கரிக்க, அவர்கள் தன்மார்த்தன் முதலான ஐவரையும் நல்வரவேற்று ஆசீர்வதித்த பின்னர் ஐவர்களையு மழைத்துவந்த சுவேத சந்திரனையும், சற்குணனையும், தாய்மார்கள் கட்டித்தழுவி முத்தமிட்டு மிகுந்த மனமகிழ்ச்சியை யடைந்து கொண்டிருந்தார்கள்.

அப்பால் தன்மார்த்தன், தந்தையாகிய சுவேத மகாராஜனிடத்திற் சென்று தம்பி வீரசேன மகாராஜாவின் குமாரனாகிய சுவேதசந்திரனுக்கும் தன்னுடைய குமாரன் சற்குணனுக்கும் விவாகஞ் செய்யும்படிக் கூற, அவ்வார்த்தையைக் கேட்ட சுவேத மகாராஜன் அவ்வாறே செய்ய நினைந்து தன்தம்பிக்கு மகள் புத்திரிகளான சுமுகவல்லி, சரசவல்லி என்ற இரு பெண்களையும், விவாகஞ் செய்ய நிச்சயித்து, நல்ல சுபயோக சுபதினத்தில், மிகுந்த கோலாகல வைபவங்களோடு அவ்விருவருக்குந் திருமணத்தை முடித்து மனமகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்கள். இஃதிவ்வாறிருக்க மற்றொரு நாள் வழக்கம்போற் சுவேத மகாராஜன், சபாமண்டபத்துக்கு வந்து, சிம்மாதனத்தமர்ந்து ஆங்குச் சூழ வீற்றிருந்த அந்தணர், முனிவர், மந்திரி முதலானயாவர்களையும் நோக்கிப் பெரியோர்களே! நான் தவத்தைப் பெற வனஞ் செல்லுதற்கு நீண்ட நாட்களாக எண்ணியிருந்த எண்ணமானது இன்றுதான் பூர்த்தியாகிறது. இனி அரைக்ஷணமேனு மிங்குத் தாமதித்திருப்பது கூடாதகாரியம்; இராச்சியத்தை எமது பரம்பரை வழக்கத்தின்படி நகரத்தை விட்டுச் சென்ற வீரசேனனுடைய குமாரன் சுவேந்திரனுக்குத் திருமுடி சூட்டி வைத்துவிட்டுப் பின்பு வனத்துக்குச் செல்ல வேண்டும்; என நினைக்கின்றேன். உங்கள் கருத்து யாது? எனக்கேட்க, அதற்கு மந்திரி முதலானோர்கள் அரசே! தாங்கள் இப்பொழுது கூறிய செய்திகள் யாவும் எல்லாருக்குஞ் சம்மதமே; அவ்வாறே செய்யுங்கள், எனத் தெரிவித்து அரசனுத்தரவின்படி ஐம்பத்தைந்து தேசத்தரசர்களையும், மற்றுமுண்டான யாவர்களையும் நிருபமூலமாக வரும்படி செய்தனர்.

அப்பாலங்குள்ள காரியக்காரர்களால் மகுடாபி ஷேகத்துக்கு வேண்டிய உபகரணங்கள்யாவையுஞ் சேகரிக்கச் செய்தனர். அப்பொழுது பளிங்குக் கற்களாலமைக்கப் பெற்ற அழகிய சிங்கார மண்டபத்தில் மாணிக்கப் பலகைதைத்து வச்சிரக்கால்கள் சேர்த்துப் பொன்னாற்செய்த இரத்தின சிம்மாசன பீடத்தின்மேல் சுவேத சந்திரனை வீற்றிருக்கச் செய்து, சுமங்கல்ய ஸ்திரிகள் மங்கள கீதங்கள் பாடவும், வேதசாஸ்திர விதியின்படி அந்தணர் வேதகோஷஞ் செய்யவும், பல மங்கல வாத்தியங்கள் முழங்கவும், அநேக தவமுனிவர்களும், அந்தணர்களும், மிகு புத்திமான்களாகிய வித்துவான்களும், ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும், மந்திரி முதலானோர்களும் வாழ்த்துக்கூற முறையாக அபிஷேகம் பண்ணிவைத்துக் சோதிட கணிதசாத்திரவிதிப்படி குறித்த நல்ல சுபமுகூர்த்தத்தில் சுவேத மகாராஜனும் தன்மார்த்தன் முதலான யாவருஞ்சூழ, மந்திரியாகிய இளங்கோ முதல்வர் நவமணிக்கிரீடத்தை எடுத்துத்தர, அக்கிரீடத்தைக் குலகுருவாகிய சூட்சம புத்தி யென்ற

குருமகா ருஷீஸ்வரர் வாங்கித் தேவர்கள் அந்தரத்தில் புட்மாரி பொழியச் சுவேதச் சந்திரன் சென்னியிற் சூடினார். அங்ஙனம் நிகழ்ந்த முடிசூட்டு வைபவத்திருக் காட்சியைக் கண்ட சர்வ ஜனங்களும் நிறைந்த மனமகிழ்ச்சி யுடையவர்களானார்கள். அத்தருணத்தில் சிலர் மங்கள வாழ்த்துப் பாடினார்கள். சிலர் பல்லாண்டு கூறினார்கள். தேவ மாதர்கள் நடனஞ் செய்தனர். அன்றிரவு சுவேத சந்திரனை இரதத்திலேற்றி மிகுந்த சிறப்புடன் நகர் வலஞ் செய்வித்து மனமகிழ்ந்தவர்களாக மறுநாள் ஐம்பத்தைந்து தேசத்தரசர் முதலான யாவரும் சுவேத மகாராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவரவர்கள் நகரத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் சுவேத மகாராஜனும் அவன் மனைவிய ரிருவரும் தன்மார்த்தன் முதலான ஐவரும் தங்களுடைய நகருக்குச் சமீபமாக, அழகிய தபோவனம் ஒன்றமைத்து அதிலிருந்து தவம்புரிந்து வந்தனர். அப்பால் சுவேதச்சந்திரமகாராஜன் தன் சிறிய தந்தையாகிய வச்சிராங்கதனையும், தம்பி சற்குணனையும், தனக்கு தவியாயிருக்கும்படி செய்து தவமுனிவர்கள், மாமறையோர்கள் ஆசிவசனங்கூற, மந்திரி முதலான யாவரும் புடை சூழ்ந்திருக்கச் சிம்மாதனத்திருந்து தன்னுயிர் போல் மன்னுயிர்களைனைத்தையும் பாதுகாத்து நீதி நெறி முறை வழுவாது செங்கோல் செலுத்தி அரசு புரிந்து வந்தான் என்று சாணாங்கி முனிவர் கூறுதலும் நாகார்ச்சுணாதி முனிவர்: சுவாமீ! சுவேத சந்திரனுடைய முடிசூட்டு வைபவத்தின் சரித்திரத்தைக் கேட்டுச் சொல்லொண்ணாத மகிழ்ச்சியையடைந்தோம். இனிப் பதினெண் சித்தர்களின் வரலாற்றைக் கேட்க, மிகுந்த அவாவுடையவர்களாக இருக்கிறோம். அதனை எங்களுக்கு நன்கு தெரியக் கிருபைகூர்ந் தருளிச்செய்ய வேண்டுமென்றுகேட்கச், சாணாங்கி முனிவர் கூறுவாராயினர்.

முப்பதாவது,
பட்டாபிஷேகச் சருக்கம்,
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்
முப்பத்தொன்றாவது

பதினெண்சித்தர்.

வரலாற்றுச் சருக்கம்

மீகார்மழை சூழ்நீள்பொழில் மேலார்தரு நாலு
நாகாரிய நாகார்ச்சுனர் நாவார்வமொ டேற்ப
ஏகாதிப சாணாங்கிய ரீரொன்பது சித்தர்
வாகார்வர லாறோதிய வாறேபகர் வாமால்.

கேளும் நாகார்ச்சுனாதி முனிவர்களே! ஆதிகாலந் தொட்டு பொதியமலைச்சார்பாகிய இச்சதுரகிரியின்கண் பதினெண்சித்தர்களி னாசிரமங்களும் இருந்து வருகின்றன. அவற்றுள் பொதியமலையிலிருந்து திருக்குற்றால நாதரைச் சேவித்துக் கொண்டு சதுரகிரிக்கு வந்த அகத்தியர் தமிழ் நன்மக்களினத்தவ ராவர். அவருக்கு அகத்தின் செயலறிந்து கூறின காரணம்பற்றி அகத்தியர் என்னும் பெயருண்டாயிற்று. அவரே பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னு மிருமுதனூல்களின் வழியே முத் தமிழ்களைத் தமிழுலகத்திற் பரப்பிய பேராசிரியராவர் அவர்தாமே சோதிட நூல்களையும், வைத்திய வாதயோக ஞானசாஸ்திரங்களையுஞ் செய்து அவற்றையுந் தம் மாணாக்கர்மூலமாக உலகத்திற்பரவச் செய்தனர்.

அவருடைய மாணாக்கருள் புலத்தியர், தேரையர், என்னுமிருவரும் மிகச் சிறந்தவராவர். அவ்விருவருக்கும் பொதியமலையில் இரண்டு ஆசிரமங்களுமிருக்கின்றன. ஆசிரியராகிய அகத்திய முனிவர் முக்கோடி வாழ் நாள்வரை உலகத்துக்கு உழைத்தவராய் அப்பால் மலைவாசஞ் செய்வாராயினர். அப்படி யிருக்கிறகாலத்தில் தமது சாஸ்திரங்களை நாதரிஷி என்னும் பெயரையுடைய ஓர் வேதமுனி சிலரிடத்திற் கேட்டுப் படித்துக் கொண்டு அதை வடமொழியில் சுலோகங்களாக இயற்றி வெளிப்படுத்தியதைத் தெரிந்த அகத்திய முனிவர் அவருக்குச் சாபங் கொடுத்து அவரிடத்துள்ள தமிழ்ப் பாடல்களையெல்லாம் வாங்கித் தம்மிடத்திலிருந்த சாஸ்திரங்களோடு சேர்த்து ஒரு குகையில், ஒளித்துவைத்துவிட்டுச் சதுரகிரிக்குவந்து சேர்ந்தனர். இங்கே வந்த இடத்தில் சுந்தரானந்தரை அவர் மாணாக்கராகப் பெற்ற சரித்திரத்தை முன்னமே நாம் உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அதன்மேல் அகத்திய முனிவர் கும்பமலையிலிருக்கும் பொழுது அவருடைய சாபத்தால் நாதருஷி

பௌத்தராகிச் சிலகாலம் அலைந்தும், சில நூல்களைச் செய்தும், மதக்குழப்பங்களை யுண்டாக்கினார். அப்பால் நவநாதசித்தர் செய்தருளிய நூல்களின் வழி வந்த வாமமதப் பிரவேசராகி சிலகாலம் பிரசித்தராக அலைந்தார். பின்பு வேதமுனி எனப்பேர்பூண்டு என்னைத் தவிர வேறொரு கடவுளில்லை. நானே பிரம்மம். சத்தி ஏது? சிவம் ஏது? எல்லாம் நானே! என்னும் மதத்தோடு சார்ந்திருந்தனர். அதனையறிந்து பொறுக்கலாற்றாத அகத்தியர் தம் மாணாக்கராகிய சுந்தரானந்தரை அனுப்பி அவரைச் சாபந்தீர்த்து அழைத்து வரச்செய்தனர். அழைத்து வரவும் அவருக்கு அருள் செய்து, ஞானோபதேசத்தால் அவரை ஆட்கொண்டருளினார். இதுவே இவ் அகத்தியர் வரலாறாகும். இவர் செய்த நூல்களாவன:-

பெருநூல்	12000
மணி	4000
மேற்படி சூத்திரம்	2000
திருமந்திரம்	1500
*வைத்தியகாவியம்	1500
அமுதகலைக்ஞானம்	1200
**ஆயுள்வேதம்	1200
சௌமியசாகரம்	1200
வாதசௌமியசாகரம்	1200
இலக்கசௌமியசாகரம்	1200
யோகசௌமியசாகரம்	1200
ஞானசௌமியசாகரம்	1200
பரிபூரணம்	1200
4 -காண்டவைத்யஜாலம்	1200
மேற்படிவகராஜாலம்	1200

* வைத்தியம் = (வை÷து x இயம்) வையகத்தாருக்கு வேண்டப்படும் நுகர்ச்சிப் பொருள்களை அவரவர் உடம் பினிலைக்குத் தக்கவாறு சொல்வதாகிய நூல். அந்நூலாராய்ச்சி வல்லுநரே வைத்திய ரெனப்படுவர்.

** ஆயுள் வேதம் = (ஆய் x உள் x வே x த் x அம்) களைந்து விடல் என்னும் பொருள் தருள், "ஆய்தல்" என்னுந் தொழிற் பெயர்ச் சொல்லில் "தல்" விகுதி கெட, நின்ற "ஆய்" என்னும் பகுதியானது உள் "என்னுந் தொழிற் பெயர் விகுதி புணர்ந்து "ஆயுள்" என்றால், அது மருந்து கொடுத்து நோய்களைத் தீர்க்கும் வைத்தியனுக்கும், நோய் நீங்கப் பெற்றவர்களாயிருப்போர் வயதுக்கும், பெயராக வழங்கி வருதலான், நோய் தீர்ந்து வயதேறப் பெறும் உளவைக் கூறும் நூல். இதில் "வேதம்" என்பதில், வே = உளவு. அதாவது உள்ளறியப்படத் தக்கது. த் = எழுத்துப் பேறு. அம் = விகுதி. இனி உட்புறத்தாராய்ச்சியை யறிவிக்கும் நூலே, ஆயுள்வேத மென்பாரும் உளர். இந்நூல் வல்லார் ஆயுள்வேதிய ரெனப்படுவர்.

5-காண்டவைத்யஜாலம்	1200
ஆறுகாண்டசத்திஜாலம்	1200
ஏழுகாண்டசிவஜாலம்	1200
12-வைத்திய நிகண்டு	1200
வைத்யதிரட்டு 2 காண்டம்	1000
வைத்தியகாவியம்	1000
வாதகாவியம்	1000
ஞானகாவியம்	1000
பூரணகாவியம்	1000
இலக்கணகாவியம்	1000
மாந்திரீக காவியம்	1000
பஞ்சகாவியம் நிகண்டு	800
திராவகம்	800
வல்லாதி	600
பர்ண்டுவைப்பு	600
குருநூல்முப்புசிந்தாமணி	600
மேற்படி நடுக்காண்டம்	600
மேற்படி கடைக்காண்டம்	600
பரிபாஷை	500
ஜாலசூத்திரத்திரட்டு	500
ஞானம்	500
0 இரணவாகடம்	500
வைத்தியம்	500
பூரணம்	400
கௌமதி	400
எடைபாகம்	400
சம்வாதசாதாக்கியம்	400
வைத்யரத்தினச்சருக்கம்	360
செந்தூரம்	300

0வாகடம் = (வாகு+அடம்) ஒழுங்காக நோய்களை அடக்குவது, அல்லது போக்குவது. அடப்படுவது.

"அடம்" ஆகலின் நோய்களைப் போக்கு முறையை ஒழுங்காகக் கூறும் நூல் வாகடம் என்னும் பெயரைப் பெற்றது. இந்நூல் வல்லார் வாகடரெனப் படுவர். இனி வாகு = உடம்பு ஒழுங்காதற்கு, அடம் = அடுத்தலைச் செய்யக் கூறும் நூலாகலின் வாகடமெனப்பட்ட தென்பாரும் உளர். இவற்றில் முறையே அடமென்பது;- சடுதல் எனப்படும் திருடல் நடை பெறுங்காடு கடமெனவும், பெரியோர்களை உட்கொண்டிருத்தலால் மடுத்தலையுடைய மாளிகை மடமெனவும் ஆனாற்போலப் பொருட்டும் பெயராய் வைத்திய நூலுக்கு வழங்கிய தறிக.

பாலவாகடம்	300
அட்டகருமம்	300
கனகமணியிலக்கியம்	300
கன்மகாண்டம்	300
மேற்படிசூத்திரம்	300
தத்துவம்	300
தர்க்கசாஸ்திரம்	300
விஷவைத்தியம்	250
குருநாடி	235
பூரணசூத்திரம்	216
பூரணம்	205
வகாரசூத்திரம்	200
நயனசாத்திரம்	200
தீட்சாவிதி	200
பூஜாவிதி	200
தாக்கபரிபூரணம்	200
சௌமியச்சுருக்கம்	150
சரக்குச்சுத்தி	150
வைத்தியம்	150
தைலம்	150
பக்ஷிணி	130
குருநாடி	130
வைத்தியக்கோவை	130
குணவாகடம்	130
அமுதகலைஞ் ,ஞானசூத்ரம்	120
மனோன்மணிதீட்சை	120
நிகண்டுசூத்திரம்	116
நாடிப்பரீக்ஷை	100
மதிவெண்பா	100
சகலகலைக்ஞானம்	100
குருமுறைச்சூத்திரம்	100
ஞானம்	100
கற்பமுறை	100
சிவயோகம்	100
குருமுடிப்பு	100
வைத்தியசதகம்	100
வகாரச்சுண்ணம்	100
கேசரி	100
காவியச் சருக்கம்	100
பிள்ளைத்தமிழ்	100

அனற்கிரியை	63
உட்கருச் சூத்திரம்	50
வெளிக்கருச் சூத்திரம்	50
சுரநூல்	50
குழம்பு	50
நாற்பது முக்கோண பூஜாவிதி	50
சரக்கு வைப்பு	50
குருநூல் முப்பு	50
மேற்படி சூத்திரம்	50
மெய்ச்சுருக்கம்	50
வைத்திய வெண்பா	50

இவைகளும் இன்னும் பல நூல்களுமாம். நாம் பார்வையிட்ட நூல்கள் இவைகளேயாம். பஞ்சபட்சி நூல்களும் வேறுள. இன்னும் அளவற்ற நூல்கள் குகைகளில் பதனஞ் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் பெரியோர் கூறுவர். இவராற் சொல்லப் பெற்ற சோதிட நூல்கள் வேறிருக்கின்றன. மூலிகை நிகண்டும், இவர் செய்திருக்கிறார்.

இனிப் போகர் வரலாற்றைக் கூறுவோம். கேட்பீர்களாக போக மகாருஷி தமிழ்நாட்டு வேட்கோவர் வகுப்பைச் சார்ந்தவராவர். இவரை சர்வ சாஸ்திரங்களின் றுறைபோகிய காரணம் பற்றி போகரென்றழைப்பர். இவர் காலாங்கி நாதருக்கு முதன்மாணாக்கராவர். இவர் இச்சதுரகிரியிலுள்ள காயகற்ப மூலிகைகளால் தேகசித்தி செய்து விளங்கியவர். இவர் எல்லா நாட்டு மொழிகளும் நன்கு தெரிந்து வைத்திய வாத யோக ஞானங்களைப் பல நாட்டிலும் பரப்பிப் பலநாட்டு மொழிகளையுந் திரட்டித் தமிழில் ஆயிரத்தெழுநூறு பாடல்களால் ஒரு நிகண்டு செய்து தந்தவர். இவர் புலிப்பாணி, கருவூரார், கொங்கணர், இடைக்காடர்முதலியோருக்கு அட்டமாசித்தி முதலிய சர்வ ஞானங்களையும் போதித்த ஆசிரியராவர். இவருடைய மாணாக்கருள் புலிப்பாணி முனிவர் பழநியிலும், இடைக்காடர் அருணாசலத்திலும் ஆசிரமங்கொண் டமருவாராயினார். ஆசிரியராகிய போகரோ, தமிழ் மாணவர் சிலருடன் சீனதேசத்துக்குச் சென்று பல கருவி நூல்களும், இயந்திர நூல்களும் இயற்றி ஆங்குள்ள வரைப் படிப்பித்து அரசரால் மதிப்புப் பெற்று திரும்பி வந்து சதுரகிரியி லமர்ந்தருளினார். அவரிடத்தில் தன்மார்த்தன் முதலிய ஐவரும் உபதேசம் பெற்ற உண்மையை முன்னர் உங்களுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். அப்பால் சில காலங்கழித்து பழநி மலையை யடைந்து அங்கே இவர் வாழ்வாராயினார். இதுவே போகமுனி வரலாறு ஆகும். இவர் செய்த வைத்திய நூல்களாவன:-

துவாத காண்டம்	12000
சப்த காண்டம்	7000
நிகண்டு	1700
வைத்தியம்	1000

சரக்கு வைப்பு	800
வைத்தியம்	700
பலதிரட்டு	700
ஜெனனசாகரம்	550
கற்பம்	360
உபதேசம்	150
இரணவாகடம்	100
ஞான சாராம்சம்	100
கற்பசூத்திரம்	54
வைத்திய சூத்திரம்	77
முப்பு சூத்திரம்	51
ஞான சூத்திரம்	37
அட்டாங்கயோகம்	24
பூஜாவிதி	20

இந்நூல்களேயாம். இவற்றையேயாம் பார்த்துளோம். இன்னும் பல நூல்கள் இவரியற்றியிருக்கிறாரென்றும் ஒரு கேள்வி உண்டு. இவர் பேரால் பஞ்சபட்சி சாஸ்திர முதலியவைகளும் சில இருக்கின்றன.

இனி புசுண்டர் வரலாற்றைக் கூறுகிறோம் கேட்பீர்களாக. புசுண்ட மகாருஷி உரோமருஷிக்கு ஆசிரியராவர். இவரைத் தமிழ் நன்மக்களினத்தின ரென்பர். இவர் பிரளயகாலங்களில் அவிட்ட நக்ஷத்திர பதவியில் வாழ்வாராதலில் இவரைக் காகபுசுண்டரென்பார் பெரியோர். இவரது பெருமையுஞ் சிறப்பும் மேன்மையையும் எவரால் அளவிட்டுச் சொல்லலாகும். இதுவே இவரது வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியவாத யோக ஞானம்	1000
மேற்படி சூத்திரம்	500
ஞானகாவியம்	33
மெஞ்ஞான விளக்கம்	80
உபநிடதம்	32
ஞானசூத்திரம்	19
ஞானக்குறள்	19

இவையேயாம். இன்னுஞ் சில நூல்களும் இவர் பாடியிருக்கின்றார். இவர் சோதிடத்திலும் வல்லவர் என்று பெரியோர் கூறுவர்.

இனி உரோமருஷி வரலாற்றை கேட்பீர்களாக. உரோம ருஷியானவர் சதா நிஷ்டையுடையவராய் மதி அமிழ்தமுண்டு அமிழ்தத்தால் நனைந்த உடம்பு முழுவதும் எப்பொழுதும் புளகாங்கித முற்று இருப்பாராதலின் இப்பெயர் கொண்டார். இவர்

தமிழ் நன்மக்களுள் ஒருவராவர். புசுண்டமகாமுனிவருக்கு மாணாக்கராவாருமிவரே. இவரது சிறந்த அரிய பெரிய மேலான மகிமாதி சயங்களை அளக்கவல்லா ரெவருமிலர். இதுவே இவரது வரலாறாகும். இவர் செய்த நூல்களாவன:-


வைத்தியம்	1000
சூத்திரம்	51
வைத்திய சூத்திரம்	500
அமுதகலைக்ஞானம்	50
பெருநூல்	500
குரு நூல்	50
காவியம்	500
முப்புசூத்திரம்	30
இரண்டடி	500
சோதிவிளக்கம்	27
பரிபாஷை	500
வகாரம்	27
நாகாரூடம்	114
வகாரசூத்திரம்	25
கிங்கிவைப்பு	100
வைத்தியசூத்திரம்	2!

இவையேயாம். நாம் பார்வையிட்ட இவற்றைத் தவிர வேறு பல நூல்களும் உள. இவர் செய்த பட்சி சாஸ்திரங்களும், சோதிட நூல்களும் வேறிருக்கின்றன.

இனி யூகிமுனிவர் சரித்திரத்தைக் கேட்பீர்களாக. யூகிமுனிவர் தேரையர் மாணாக்கருள் ஒருவர். தமிழ் நன் மக்களுள் இவரும் ஒருவரே. இவர் தமது ஆசிரியராகிய அகத்தியரிடத்துத் தம் திறமையைக் காட்டி செல்வாக்குப்பெறக் கருதி இவ்விடத்தில் கும்பமலைக்கு வந்து சேர்ந்தார். இவரைக் கண்ட அகத்தியரும் தமது ஞான வலிமையால் வந்தகுறிப்பைத் தெரிந்து பிள்ளாய் வாழ்க. என்று ஆசீர்வதித்து உன்கையிலிருப்பது என்ன? என்று கேட்க, அதற்கு அவர் இது வீரச் சுண்ணம் என்றார். அதைக் கேட்ட அகத்தியர் இச்சுண்ணம் என்ன செய்யும்? என, உடனே அவ்விடமிருந்த ஒரு கருங்காக்கையைத் தமது அழைத்தல் வலிமையால் கிட்டி வரச்செய்து, அதனைப் பிடித்துத் தம்கையிலிருந்த சுண்ணத்தில் சிறிது கொடுத்து உண்பித்து அக்கருங்காக்கையினை வெண்மைவடிவாக்கிக் காண்பித்தார். அதைக்கண்டு மகிழ்ந்த அகத்தியர் இவரை யூகி எனப்பெயரிட்டழைத்தனர். இவர் வரலாறு இதுவேயாம். இவர் செய்த நூல்களாவன:-

பன்னிருகாண்டம்	12000
வைத்திய சிந்தாமணி	800
மேற்படி சூத்திரம்	500


வான்மீகி - எட்டிக்குடி
கோரக்கர் - வ.பொய்கை- நல்லூர்
கமலமுனி - திருவாரூர்
சட்டைமுனி -சீர்காழி
அகஸ்தியர்
கும்பகோணம்
சுந்தரானந்தர் -மதுரை
அகப்பைச் சித்தர்
கருவூரார் கரூர்
திருவிடை மருதூர்
கொங்கணர் திருப்பதி


தன்வந்திரி - வைத்தீஸ்வரன்கோவில்
பாம்பாட்டிச் சித்தர்
இராம தேவர் : அழகர்மலை
- மருதமலை -
திருக்கடையூர்
இடைக்காட்டு சித்தர்
- திருவண்ணாமலை
திருமூலர்
- சிதம்பரம்
போகர்
- பழநி
காளாங்கிநாதர்
அழுகண் சித்தர்
மச்சமுனி சித்தர்
- நாகப்பட்டினம்
- காஞ்சிபுரம் சதுரகிரி
திருப்பரங்குன்றம்

வகாரம்	200
மேற்படி சூத்திரம்	150
கரிசல்	150
தத்துவஞானம்	105
கற்பம்	100
மேற்படி சூத்திரம்	55
மேற்படி ஞானம்	50

சிகிச்சாசாரங்கிரகம் முதலியனவாம். நாம் பார்வையிட்ட இவற்றைத்தவிர வேறுபல நூல்கள் இருப்பனவாகவுங் கேள்வியுண்டு.

இனி சுந்தரானந்தர் சரித்திரத்தைக் கேட்பீர்களாக. சுந்தரானந்தரோ! தமிழ்நாட்டு இரட்டிய ஜாதியைச் சேர்ந்தவராவர். இவர் அகத்தியருடைய மாணாக்கரென்பதைப்பற்றி முன்னமே நாம் உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம், போகரிடத்திலும் சட்டை முனிவரிடத்திலும் சில நூல்முறைகளை இவர் கேட்டுமிருக்கின்றார். சிவநேசத்திற் சிறந்த இவரது பெருமை அளவிடற்பாலதன்று. இதுவே இவரது வரலாறாகும். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியத்திரட்டு	1500
மேற்படி காவியம்	1000
மேற்படி சூத்திரம்	500
வகாரம்	200
ருதுநூல்	110
அதீதசூத்திரம்	104
வரதசூத்திரம்	100
விஷநிவாரணி	100
வாக்கிய சூத்திரம்	64
கேசரி	55
சுத்தஞானம்	51
தீட்சாவிதி	50
தண்டகம்	47
பூஜாவிதி	37
அதிசயகாரணம்	36
சிவயோக ஞானம்	32
முப்பூ	25
சிவஞான போதம்	16

இவையேயாகும். நாம் பார்வையிட்ட யிவையுமின்றி இவர் செய்த பல நூல்கள் வேறுள்ளன வென்றுங் கேள்வி சோதிட நூல்களும் இவர் செய்திருக்கிறார்.

இனி பிரமருஷி வரலாற்றைச் சொல்லுவோம் கேட்பீர்களாக. பிரமமுனியோ!

குருக்ஷேத்ரமத்திய தேசமாகிய பிரமருஷி தேசத்திலிருந்து தென்னாட்டுக்கு வந்து தமிழ்கற்று சித்தர் கூட்டத்திற் சேர்ந்து வாழ்ந்தவராவர். இவர் செய்த வேள்வியிலிருந்து, கஞ்சாவும் புகையிலையுமாகிய கற்பமூலிகைகள் உண்டாயின என்பதைப்பற்றி முன்னமே நாம் உங்களுக்குக் கூறியிருக்கிறோம். இவர் பிராமணத்திருமேனி யாவர் இவர் அட்டமாசித்திகளில் மிகத் தேர்ந்தவர். இதுவே இவர் வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியம்	700
மேற்படி	380
சூத்திரம்	200
தண்டகம்	100
ஞானம்	100
வகார சூத்திரம்	68
அண்டவித்தை	52
முப்புதீக்ஷை	45
மேற்படி சூத்திரம்	45
பிரமஞானம்	36

இவைகளேயாம், இனிக்காலாங்கி நாதர்சரித்திரத்தைக் கூறுகிறோம். இவர்வேளாளச்சாதியாவர். இவரது திருமேனி கத்தி ஊடாடத்தக்க காற்று வடிவாக இவரால் அமைக்கப் பெற்றிருத்தலால் அது காரணமாக "காலாங்கி" என்னும் பெயர் இவருக்குண்டாயிற்று. இவர் போகமுனிவருக்கு ஆசிரியராயிருந்து சகல சாஸ்திரமுறைகளையு முபதேசித் தருளினார். இவர் வகாரத் தொழிலில் வல்லவரென்பதையும், ஒரு வணிகனுக்குச் சிவன்கோயில் கட்டிமுடிக்கவேண்டும் பொருள் கொடுத்தைப்பற்றியும், தைலக்கிணறு அமைத்ததைப்பற்றியும் உங்களுக்கு நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். இவரது அருமை பெருமைகளை விரித்துச்சொல்வதற்கு என்னுடைய ஒரு நாவுபோதாது. இதுவே இவரது வரலாறாகும். இவர் செய்த நூல்களாவன:-

வைத்திய காவியம்	1000
ஞானசாராம்சம்	500
வகாரத்திரவியம்	200
ஞானம்	100
கற்பவிதி	84
ஞானபூஜாவிதி	80
தண்டகம்	80
மேற்படி பக்ஷிணி	51
இந்திரஜால ஞானம்	46
தீட்சாவிதி	35
உபதேசஞானம்	34
சூத்திரம்	33

ஞானவித்துரகசியம்	30
ஞானசூத்திரம்	29

இவைகளேயாம் இன்னும் நூல்கள் பலவன.

இனி நந்தீசர் சரித்திரத்தைச் சொல்லுவோம். கேட்பீர்களாக! நந்தீசரோ! பூர்வத்தில் உமாதேவி யார் அர்த்த நாரியாக வேண்டுமென்று தவஞ்செய்யக் கருதி சதுரகிரிக்கு வரும்பொழுது கைலையங்கிரியிலிருந்து அம்மையுடன் வந்த வீரகன் என்னும் பெயரையுடைய ஒரு கணநாதராவர். அக்காலத்தில் சிலாதர் என்னும் ஒரு முனிவர் புத்திரப் பேற்றை வேண்டி அருந்தவஞ்செய்துகொண்டிருந்தார். இந்நிலைமையில் நமது கௌரிப்பிராட்டியார் அருந்தவஞ்செய்து அர்த்த நாரியாகப் பெற்றபின் வீரகனென்னும் கணநாதர் இச்சதுரகிரியிலுள்ள வனங்களையும், சித்தர்களுடைய மகிமாதிசயங்களையும், கண்டு கைலையிற் சிறந்திருக்கும் இங்கேயே வாசஞ் செய்தற்கு ஆசை கொண்டிருந்ததை உமையொருபாகரறிந்து ஏ வீரக! உன்னுடைய எண்ணத்தின்படி நீ இங்கேயே இருக்கலாம். ஆனால் இப்பொழுது நீ கணநாதனாக இருக்கிறாய் இவ்வடிவத்தைவிட்டு அரிய தபசு செய்து கொண்டிருக்கிற சிலாத முனிவருக்குப் புத்திரராக பிறந்து சிலகாலம் வாழ்ந்து அப்பால் இச்சதுரகிரியில் கைலாசக் கானலிலே நமது சன்னிதானத்தின் முன்பாக ஆசிரமங் கொண்டிருந்து வருவாயாக, என்று அருளிச் செய்த அவ்வாறே கண நாதரும் சிலாதமுனிவருக்கு குமாரராகப் பிறந்து நந்திதேவர் என்னும் பெயர் பெற்றுச் சிலகாலம் வாழ்ந்து அப்பால் அச்சதுரகிரியில் வந்து கைலாசக் கானலிலே சிவபெருமான் திருமுன்னர் வாழ்வாராயினார். இவரே வைத்திய வாதயோக ஞானசாஸ்திரங்களும், சோதிட நூல்களும் செய்தருளித் தம் மாணாக்கர்களால் உலகத்தில் பரவும்படி செய்தருளினார். இதுவே இவர் வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியகாவியம்	1200
கலைக்ஞானம்	1000
மேற்படி சூத்திரம்	500
நிகண்டு	300
கருக்கிடை	300
சம்வாதம்	200
தண்டபக்ஷணி	100
ஞான சூத்திரம்	100
சங்கம விளக்கம்	42
முப்பு சூத்திரம்	37
வைத்தியம்	32
கருக்கிடைச் சூத்திரம்	33

இவைகளேயாம். இன்னும் பலவுள நந்திவாக்கிய முதலிய சோதிட நூல்கள் சில இவராற் செய்யப்பட்டுள்ளன.

இனி தன்வந்திரி முனிவர் மான்மியத்தைச் சொல்லுவோம் கேட்பீர்களாக தன்வந்திரி முனிவரோ சுராஷ்டிரானுடைய மகனாகிய தீர்க்கத பசுவின் புத்திரராவார்.

இவர் ஆரியாவர்த்தத்தை விட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ்கற்று மிகச்சிறந்தவராகி இச் சதுரகிரியில் விஷ்ணுகானலில் ஆசிரமங்கொண்டு இருந்தாராதலின் இவரை விஷ்ணு அம்சம் என்பாரும் உளர். இவர் பிரமத்தை யறிந்தவராதலால் பிரமகுலம் என்பர் இவர் நந்தீசரது மாணாககராவர். இவர் லோகோபகாரமாய் வைத்தியவாத யோகஞான சாஸ்திரங்கள் பல அருளிச்செய்தனர். வடமொழியிலும் இவர் சில நூல்கள் செய்துளார். வைத்தீஸ்வரன் கோவிலில் தமிழ் மாணவருடன் சிலகாலம் வாழ்ந்து தவம்புரிந்து கடவுளருளைப் பெற்றவரும் இவரே. இதுவே இவர் வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வைத்திய சித்தாமணி	1200
மேற்படி காவியம்	1000
நாலுகாண்ட ஜாலம்	800
கலைக்ஞானம்	500
தைலம்	500
சிமிட்டு ரத்தினச் சுருக்கம்	360
கருக்கிடை	300
மேற்படி நிகண்டு	300
வைத்தியம்	208
தண்டகம்	140
மேற்படி சூத்திரம்	100
கருடாரூடம்	100
வைத்யசிந்தாமணிச்சுருக்கம்	73
செய்நீர்	50
முப்புசூத்திரம்	48
கலைக்ஞானம்	32

இவைகளேயாம் இவர் செய்த சிறந்த நூல்கள் வேறுள.

இனி குருராஜருஷி காதையைச் சொல்லுவோம் கேட்பீர்களாக, குருராஜருஷியோ ஸ்ரீதிருமூலரின் முதன் மாணாக்கராவர். இவர் சேர இராஜ வம்சத்தைச் சார்ந்தவர். வைத்தியவாதயோக ஞானசாஸ்திரங்களில் மிகவல்லவர். நந்திதேவர் வெகு மறைப்பாகப் யாடிய நூல்களையும், சுந்தரானந்தர் முன் பின்னாகப் பாடிய நூல்களையும், கமலமுனி மாறாட்டமாகப் பாடின நூல்களையும் அகத்தியர் முதலானோர் அடக்கமாகபாடின நூல்களையும் நன்காராய்ந்து வெளியாக யாவரும் அறிந்துகொள்ளும்படி இவர் யலதமிழ் நூல்களைப்பாடியருளினார். அந்நூல்களை மற்றுள்ள சித்தர் பார்த்து மறைவில்லாமல் பாடிய நூல்களை எல்லாம் நீர் இப்பொழுதே கிழித்தெறிந்துவிடல் வேண்டும். அப்படிச் செய்யாதே போனால் உமக்குச் சாபம் தருவோம் என்று பயமுறுத்தினர். அதனைக் கேட்ட குரு ராஜர் உடனே அம்பிகையை நினைக்கவும். அவள் பிரத்தியக்ஷமாகி சித்தர்களை கோபித்து நான் உலகுக்கு உபகாரமாகும்படி வெளியாகப் பாடுதற்கு உத்தரவு கொடுத்தேன் இவர் பாடினார்; என்று உண்மையை யுணர்த்தி அவர்களைச் சமாதானப்படுத்தி மறைந்தருளினாள். அப்பால் சித்தர்கள் சடைவோடும்

சமாதானத்தோடும் அந்நூல்களை ஏற்று மகிழ்ந்தார்கள். இவருடைய ஆசிரியராகிய திருமூலரைப் பற்றிய சரித்தை முன்னமே உங்களுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். அத்திருமூலர் வனமே இவரிருக்குந் தானமாகும். இதுவே இவரது வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

காவியம்	1000
சூத்திரம்	700
யோகம்	500
ஞானம்	200
மேற்படி	120
மேற்படி	100
சிவயோக சிந்தாமணி	50
ஞானரத்தினா பரணம்	50

இவைகளேயாம். இன்னுஞ்சிலவுள. இவையன்றியும் இவரது ஆசிரியராகிய திருமூலர் செய்த நூல்களை இவர் பேணி வந்தனர். அவையாவன.

பெருநூல்	8000
வைத்திய காவியம்	1000
வைத்தியம்	600
மேற்படி சூத்திரம்	500
கற்பவிதி	500
தசயோக தீட்சை	216
பரிபூரணம்	200
சூத்திரம்	200
கலைக்ஞானம்	200
வியாதிக்கூறு	100
தண்டகம்	100
தசநாடி சூத்திரம்	128
யோகவிறலிவிடு தூது	176
ஞானம்	84
சுருக்கம்	84
திருமந்திரம்	65
குளிகை	50
ஞானவிறலிவிடுதூது	46
பூரணசூத்திரம்	43
பூஜாவிதி	41
சிவஞானம்	31
ஞானோபதேசம்	30
நடுவணைஞானம்	30
ஞானக்குறி	30

இவைகளேயாம். இன்னும் பல நூல்களும் இவர் பாடியுள்ளாரென்று தெரிகிறது.

இனிக்கொங்கணர் சரித்திரத்தைக் கூறுவோம் கேட்பீர்களாக. கொங்கணரோ மேலைக்கடற்கரையில் கேரள தேசத்திற்கு வடபாலுள்ள கொங்கணதேசத்தில் புளிஞரென்னும் வேடுவ ஜாதியிற் பிறந்தவராவர். இவர் போகமுனிவருடைய மாணாக்கர் களிலொருவர். இவர் திருவீரட்டகாசமூர்த்தியின் சென்னியில் தமது குளிகையைவைக்க அச்சிவலிங்கமூர்த்தி நீறாக்கா துமறைத்தருளினமையால், அவரைப்பூசித்து அவர்பால் குளிகை பெற்றவர். இவர் ஒரு காலத்தில் திருவள்ளுவ ராசிரமத்துக்குச்சென்று அவரது இல்லறவொழுக்கத்தை உலகத்தாருக்கு அறிவிக்கும்படி பிச்சைகேட்கவும், நாயனார் கட்டளையின்படி பிச்சை கொண்டுவருமுன், காலந்தாழ்த்ததென்று அம்மையாரைச் சினந்து பார்க்க அவ்வம்மையார் "கொக்கென்று நினைந்தனையோ கொங்கணவா" என்று கூறக் கேட்ட முனிவர் தாம் முன்னொரு காலத்தில் மேலேபறந்த கொக்கு நம் தலையிலெச்சமிட அதனைப் பார்த்து நீறாக்கிய செய்தியை இவள் எவ்வாறறிந்தனள் எனத் தம்முள்ளே யோசித்துக்கொண்டு கற்புநிலையை மெச்சி வாழ்த்தி மகிழ்ந்தவர்! இதுவே இவரது வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:- :

வாதகாவியமுதற்காண்டம்	1000
மேற்படி நடுக்காண்டம்	1000
மேற்படி கடைக்காண்டம்	1000
காவியம் முதற்காண்டம்	500
மேற்படி நடுக்காண்டம்	500
மேற்படி கடைக்காண்டம்	500
தனிக்குணம்	200
வைத்தியம்	200
வாதசூத்திரம்	120
தண்டகம்	109
ஞானசைதன்னியம்	111
சரக்குவைப்பு	100
கற்பசூத்திரம்	100
வாலைக்கும்மி	100
ஞானமுக்காண்டசூத்திரம்	80
வாதசூத்திரம்	50
வாதமுதற்காண்ட சூத்திரம்	50
மேற்படி நடுக்காண்டசூத்திரம்	50
மேற்படி கடைக்காண்ட சூத்திரம்	50
ஞானவெண்பா	49
ஆதியந்த சூத்திரம்	45
முப்புசூத்திரம்	40
உற்பத்திஞானம்	21
சுத்தஞானம்	16

முதலியனவாம். இன்னுஞ் சில நூல்களும் இவர் செய்துள்ளார்.

இனி சட்டைமுனிவர் மான்மியத்தைச் சாற்றுவோம் கேட்பீர்களாக. சட்டைமுனிவரரோ, தமிழ் நாட்டுச் சேணிய வகுப்பினர். இவர் கைலாயம் போய்ச் சிவபெருமானைச் சேவித்து வந்தவர் எப்பொழுதும் கம்பளச் சட்டைத் தரித்தவராயிருத்தலினால் கம்பளச்சட்டை முனிவர் என்றும் அழைக்கப் பெறுவர். இவரிடத்தில் சுந்தரானந்தர் சில சாஸ்திரங்கள் கேட்டுளார். இவர் சரக்குவைப்பு, நவரத்தினவைப்புகளில் மிகக் கைதேர்ந்தவர். இதுவே இவரது வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

நிகண்டு	1200
வாதகாவியம்	1000
சரக்குவைப்பு	500
நவரத்தினவைப்பு	500
வகாரம்	200
தீட்சை	200
முன்ஞானம்பின்ஞானம்	200
சடாக்ஷரக்கோவை	108
கற்பவிதி	100
நிகண்டுசூத்திரம்	53
தண்டகம்	81
மேற்படி சூத்திரம்	52
ஞானவிளக்கம்	51
குருசூத்திரம்	25

இவை முதலியனவாம். இன்னும் பல நூல்களும் இவர் செய்திருக்கின்றனர்.

இனி இராமதேவர் வரலாற்றை இயம்புகிறோம் கேட்பீர்களாக. இராமதேவரோ, தமிழ்நாட்டுத் தேவர்கள் எனப்படும் மறவர் குலத்திற் பிறந்தவர். இவர் நாகபட்டினத்தில் சிவபூஜையிற் சிறந்தவராயிருந்து சிவபெருமான் றிருவருளால் எல்லாச்சித்திகளுங்கைவரப் பெற்றவர். காசியிலிருந்து சட்டை நாதரைக் கொண்டு வந்து நாகையிற் பிரதிட்டை செய்தவரும் இவரே. இவர் ஒரு காலத்தில் குளிகையிட்டு மக்கமாநகரஞ் சென்று ஆங்கு அரபிபாஷையில் வைத்திய வாத சாஸ்திரங்களைச் செய்தருளினார். இவரை அரபிகள் யாக்கோபு என்னும் பெயரிட்ட ழைத்துத் தம்மவராகவே பாராட்டி வந்தார்கள். அப்பால் அவ்விடத்தைவிட்டு இச்சதுரகிரிக்கு வந்து காளி கானலுக்குப் வடபக்கத்தில் துருக்கமொட்டை யென்னும் வனத்தில் ஆசிரமங்கொண்டு யாக்கோபு என்னும் பெயரோடு எழுந்தருளுவாராயினர். அங்கிருக்கிற காலத்தில் இவர் தமிழில் வைத்திய வாத நூல்கள் சில செய்தனர். அப்பால் சிலநாள் கழித்து இராமதேவர் என்னும் தமது பழம் பெயரைக் கொண்டு அவ்வனத்துக்கு மேற்குத் திசையிலிருக்குந் தமது வனத்துக்கு எழுந்தருளினார். அங்கே யிருந்து கொண்டும் பல நூல்களைச் செய்தனர். இதுவே இவரது வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியகாவியம்	1000
ஜாலம்	800
நிகண்டு	500
கலைக்ஞானம்	500
பரிபாஷை	300
சிவயோகம்	200
தண்டகம்	110
பக்ஷிணி	100
பரஞானகேசரி	100
வைத்தியசூத்திரம்	33
சுத்திமுறை	50
அட்டாங்கயோகம்	50
முப்புச்சூத்திரம்	31
பரிபாஷை விளக்கம்	27

இவைகளேயாம். வேறு சில வைத்திய நூல்களும் சோதிட நூல்களும் செய்யப்பட்டுள்ளன. இவையன்றியும் யாக்கோபு என்னும் பெயரால் இவர் செய்த நூல்களாவன:-

சவுக்காரம்	1200
வைத்திய சிந்தாமணி	750
சுண்ணம்	600
வைத்தியம்	400
சுண்ணம்	300
செந்தூரம்	300
களங்கம்	300
பஞ்சமித்திரம்	300
வைத்தியம்	300
சுண்ணசூத்திரம்	150
செந்தூர சூத்திரம்	150
தண்டகம்	119
வாதசூத்திரம்	57
செந்தூரசூத்திரச் சுருக்கம்	50
சுண்ண சூத்திர சுருக்கம்	50

எடைபாகம் 16 இவையாம்.

இனிக்கோரக்க முனிவர் வரலாற்றைக் கூறுவோம் கேட்பீர்களாக. கோரக்கரோ, மச்சமுனிவரின் மாணாக்கருள் ஒருவராவர். இவர் தமிழ்நாட்டுச் சேணிய வகுப்பினர். இவர் கஞ்சாவை முதற்சரக்காகக் கொண்டு காயகற்பமுண்டு தேகத்தை அச்சிய காயமாக்கி மகிழ்ந்தவர். இவர் தமது பெருமையை அல்லமதேவருக்கு

அறிவித்ததற்காக தம்கையிலிருந்த ஒருவாளை அவர் கையிற் கொடுத்துத் தம்மை வெட்டும்படி கூறவும் அவர் பலமெல்லாங் கொண்டு வெட்டியதில் வாள் மழுங்கியதே அன்றி, தேகத்தில் ஊறுபடாததைக் கண்டு மகிழ்ந்தவராய், மெச்சிக் கொண்டு அவருக்குத் தம் பெருமையை யறிவிக்க வேண்டி அல்லமதேவர் அந்த வாளைக் கோரக்கரிடம் கொடுத்து தம்மை வெட்டும்படி சொல்லவும், அப்படி வெட்டியதில் வாள் அல்லம தேவர் சரீரத்தில் ஊடாடி நிற்பதைக் கண்டு தம்மிலும் இவர் சிறந்தவரென அறிந்து மகிழ்ந்தவராவர். அன்றியும், கூடுவிட்டுக் கூடுபாயுந் தொழிலும் தமக்குத் தெரியும் என்பதை இறந்து கிடந்த ஒரு ஆயனுடம்பில் தாம் புகுந்து விளையாடிக் காட்டினவர். நமது ஆசிரியராகிய இவரது பெருமையை நாம் சொல்லாமலே நீங்கள் நன்கு தெரியலாகும். பிரமமுனிவர் இவருக்குச் சிறந்த நட்பினராவர். இவர் செய்த நூல்களாவன:-

கற்பம்	1000
முத்திநெறி	500
அட்டகர்மம்	300
மேற்படி சூத்திரம்	100
வகார சூத்திரம்	150
மூலிகை	100
தண்டகம்	50
கற்பசூத்திரம்	31
பிரமஞானம்	20
குருசெயநீர்	20

இவை முதலியன வாம்.

இனி மச்சமுனிவர் வரலாற்றை வமுத்துவோம் கேட்பீர்களாக. மச்சமுனிவரோ, தமிழ்நாட்டுச் செம்படவமரபிற் பிறந்தவராவர். இவர் பிடிநாக்கீசர் மாணாக்கருள் ஒருவராவர். திராவக முறையிலிவர் மிகச் சிறந்தவராவர். இவரது வரலாறாம். இவர் செய்த நுல்களாவன:-

பெருநூல் காவியம்	800
சரக்கு வைப்பு	800
வகாரம்	800
யோகம்	800
வைத்தியம்	800
திருமந்திரம்	800
வேதாந்தம்	800
ஞானம்	800
குருநூல்	800
திட்சாவிதி	100
தண்டகம்	100

ஞான தீட்சை	55
தூலசூக்குமகாரணஞானம்	30
சூத்திரம்	21

இவை முதலியனவாம். இவர் சொல்லிய சோதிட நூல்களும் வேறுள.

இனிக் கருவூரார் வரலாற்றைப் பற்றிச் சொல்லுகிறோம் கேட்பீர்களாக. கருவூராரோ, போகருஷிமாணாக்கருள் ஒருவராவர். இவர் சேரற்கு இராஜதானியாகிய கருவூரில் தமிழ் மக்களினத்தவராவர். இவர் ஞான நூல் ஆராய்ந்து சைவ சமயத்தைக் கடைபிடித்து சிவயோக சித்தியடைந்து விளங்குங் காலத்தில் அது பொறாத பிராமணர். இவர்பால் தர்க்கிக்கவும், அவரை சாஸ்திரங்களாலும் அற்புதங்களாலும் வென்று அப்பால் தலயாத்திரை செய்யக் கருதி வெளி ஏறினர். பலநலன்களையுஞ் சுற்றித் திருக்குற்றாலம் அடைந்து சிவதரிசனஞ் செய்து திருவிசைப்பாப்பாடி அருள்பெற்று கருவூர்த் தேவர் என்று எல்லோரும் புகழ்ந்து கொண்டாட சில காலம் பொதிகையில் எழுந்தருளியிருந்தனர். அதன் பிறகு மானூருக்கு வந்த இடத்தில் ஆங்குள்ள வேதியர் இவரை இகழ்ந்தமையால் வேதியருக்கு இவ்வூரில் வீடில்லாமற் போகக் கடவது என்னும் ஓர் பெருஞ்சாபத்தை இவர் அளித்தார். அதன் மேல் தஞ்சை அரசனால் தஞ்சாவூருக்கு அழைக்கப் பெற்று ஆங்கு நடந்த சிவலிங்க அட்டபந்தன கும்பாபிஷேக தரிசனை செய்து சிலகாலம் அங்கே வாழ்ந்தனர். சிலகாலங் கழிந்து இச்சதுரகிரியில் வந்த இங்குள்ள சித்தர்களோடு அளவளாவி மகிழ்ந்து வாழ்வாராயிருந்த கருவூரார் நெடுங்காலத்துக்குப் பின்பு கருவூர் போய்ச் சேர்ந்தனர். அங்கே பழம் பகை பூண்ட வேதியர் இவரை வெறுக்க, இவர் பொருட்டு அரசன் சினந்து பல வேதியர்களை ஊரை விட்டு ஓட்டினன். அதிலும் அடங்காமல் சிலர் இவருக்குத் துன்பஞ் செய்யத் தொடங் குகையில் பயந்தவர்போற் திருவானிலைக் கோயிலை அடைந்து சிவமூர்த்தி யருள்பெற்று வாழ்வாராயினார். இவர் உண்மையான பிரமக் ஞானியா யிருந்தமையால் இவரை மகாசித்த ரென்றுங் கூறுவர். இதுவே இவர் வரலாறாம். இவர் செய்த நூல்களாவன:-

வாதகாவியம்	700
வைத்தியம்	500
யோகஞானம்	500
பலதிரட்டு வைத்தியம்	300
குருநூற்சூத்திரம்	105
பூரண ஞானம்	100
மெய்ச் சுருக்கம்	52
சிவஞான போதம்	42
கற்பவிதி	39
கெவுன சூத்திரம்	32
முப்புசூத்திரம்	30
பூஜாவிதி	30

இவை முதலியனவாம்.

இனிப்பிண்ணாக்கீசர் வரலாற்றைப் பற்றிப் பேசுவோம் கேட்பீர்களாக. பிண்ணாக்கீசரோ, தமிழ் நாட்டுக் கார்காட்டார் சாதியிற் பிறந்தவராவர். மச்சமுனிக்கு ஆசிரியர் இவரே. இவர் தமிழிலும் கிரந்தத்திலும் மிக வல்லுநராகி வைத்திய நூல்கள் பல செய்துள்ளார். இவருடைய குமாரரை அழுகண்ணிச்சித்த ரென்று கூறுவாருமுளர் இவர் பிரமக்ஞான முடையவராயிருந்ததனாலும், ஆரியாவர்த்தத்திற்சென்று வட மொழியில் ஞானோப தேசஞ்செய்து கொண்டிருந்து, பிரசித்தராகி சிலகாலங்கழித்து இச்சதுரகிரிக்கு வந்து சித்தர்களோடு அளவளாவி இருந்து காயகற்பமுண்டு அநேக சித்திகளைச் செய்து இருந்ததினாலும், இவரைப் பிராமணரென்றுங் கூறுவர். இவர் வரலாறு இதுவே யாகும். இவர் செய்த நுல்களாவன:-

மெஞ்ஞானம்	200
ஞானப்பால்	50
முப்புச்சுண்ணச்செயநீர்	45
யோகப்பாடல்	25

இவை முதலியனவாம். இப்பதினெண்மர் வரலாறுகளையும், இவர்களுடைய நூல்களையும், எமக்குத் தெரிந்தவரை நாம் உங்களுக்குச் சொன்னோம் என்ற சாணாங்கிமுனிவர் கூறுதலும், நாகார்ச்சுனாதியர் அளவிலா இன்பத்தையடைந்த நிலம்படிய விழுந்து வணங்கிப் பிரார்த்தித்து அவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு தன் ஆசிரமத்திற்குச் சென்று யோகத்தமர்ந்து வாழ்வாராயினார்.

சதுரகிரித் தலபுராணம்,
முற்றுப் பெற்றது.
வாழ்க, வாழ்க, பல்லாண்டு

உ
சிவமயம்

அநுபந்தம்

சதுரகிரிக் கட்டாரி

காமைய ராஜன் வரலாறு.

காட்டு தமிழ்நன் மணந்திகழுங் கவினார் சதுரகிரித்தலத்துச்
சூட்டும் புராண காலத்தைத் தொடுத்துப் பின்னே நடந்ததுவும்
நாட்டும் இந்தக் காலத்துநயமா நடக்கும் நல்வளமும்
கூட்டு முறையே நனிநாளுங் குலவ விளக்கிக் கூறிடுவாம்.

சீர்பூத்த வுந்தித் திசைமுகனாற் சிருட்டித்த இப்பூவுலகத்தின்கண் அமிழ்தினு மினிய செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் இராஜதானியும் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற முச்சங்கங்களிருந்து பெருங்கீர்த்தி வாய்ந்ததும், சாக்ஷாத் ஸ்ரீசோமசுந்தரப் பெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளியதும், மாதமும்மாரி பொழிதலால் நீர்வள நிலவளமிகுத்துக் குடிவளஞ் செழித்தோங்கி விளங்குவதும், அழகிய பூஞ்சோலைகளாலும், புண்ணிய *நதிகளாலுஞ் சூழப்பெற்றதுமான மதுரை மாநகரை வழி வழி யாண்டு வந்த பாண்டியர்களுக்குக் கர்த்தாக்கள் பரம்பரையில் ஒன்பதாவது அரசராக, கலி 4710 - வது ஆண்டில் பட்டம் பெற்ற முத்துவீரப்ப நாயக்கருடைய அருமைத் திருக்குமாரராகிய ஸ்ரீ: திருமலை நாயக்கரென்பவர் பத்தாவது அரசராக, கலி 4724 - வது ஆண்டில் பட்டம் பெற்று மநுநீதி நெறி முறை வழுவாது குடிகளிடம் ஆறிலொரு கடமைவாங்கித் தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாதுகாத்துத் தருமந்தவிராத தயாநிதித் தர்ாதிபராக அரசுபுரிந்தார்.

அப்போது தனக்கு முன்னம் நேரிட்ட காசரோகத் தாற்பிரார்த்தனைசெய்து கொண்டிபடிக்கு மதுரை ஆலயத்தின் சிற்சில பாகங்களையும், மார்கழிமாத வசந்தோற்சவத்திற்காக விசித்திர உருவங்களை நன்கமைக்கப் பெற்ற புது மண்டபத்தையும் தைப்பூச உற்சவத்திற்காக நந்தனவன நீராழிமண்டபம் ஒன்றனை மத்தியில் மிகு சூழ்ச்சியாயமைக்கப்பெற்ற அழகியபெரிய தெப்பக்குளத்தையும், பெரியகோபுரமாக இருக்கவேண்டுமென இராய கோபுரத்தையும், தாமிருந்து அரசுபுரிவதற்கு ஓர் "மால்" அரண்மனையையும், அதி நிபுணர்களான சிற்பிகளாற் கட்டிமுடித்தனர். மேலும் ஸ்ரீமீனாட்சி சுந்தரருக்கு விலையுயர்ந்த வச்சிரவைடூ ரியங்களா

---

* வைகை, கிருதமால் என்னுமிரு நதிகள்.

பரணங்களை யமைத்தும், திருவிளையாடலின்படி மாதந்தோறும் உற்சவ முறைகளை யுண்டாக்கியும், கட்டளைகளேற்படுத்தியும், திருப்பரங்குன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், அழகர் கோவில் முதலிய பலதலங்களிலுமுள்ள தேவாலயத்திருப்பணிகளை அழகுறச் செய்தும், அவ்வவ்விடங் களிற்றன் இராஜலக்ஷணத் திருவுருவைத் தூண்களிலமைப் பித்தும், பிறபல திருத்தொண்டுகள் புரிந்தும் மகிழ்ந்தார். அக் காலத்தில், மைசூர், டில்லி முதலிய நாட்டின் பெரிய அரசர்கள் தன் நகரைநோக்கி எழுந்தால் அவரோடு எதிர்த்தேறி அவரை விரட்டித் தம் நாட்டைக் காத்தற்கோர் சிறந்தபடையமைப்பாகத் தனது பெருநாட்டைப் பல குறு நிலங்களாகப் பிரித்து ஆங்காங்கு தலைவர்களை நிறீஇ அவர்களனைவரையும் பாளையகாரர்ராக ஏற்படுத்தினர். அப்பாளையப்பேட்டுகளிலொன்றான வனமிகுந்த *சாப்டூர். என்னும் நகரத்தையும், அதனைச்சார்ந்த சதுரகிரி முதலிய பல இடங்களையும், புயபலமிகுந்த வீரராகிய காமைய நாயக்கரவர்களுக்கு உரியதாக்கி சுபமுகூர்த்தத்தில் அவரை மகுடாபிஷேகஞ் சூட்டிவைத்து அரசுபுரிந்து வரும்படி செய்தார்.

அன்று முதல் அந்த சாப்டூர் என்னும் திருநகருக்குக் காமைய நாயக்கர் புரமென ஒரு பெயரும் உண்டாயிற்று அத்தேசாதி பதியாகிய காமைய நாயக்கரவர்கள் சதுரகிரியிலெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ சுந்தரமகாலிங்கப் பெருமானை அநுதினமுஞ்சென்று வணங்கித் தோத்திரித்து அவருடைய அனுக்கிரகத்தைப்பெற்று நீதிவழுவாது செங்கோலோச்சிவந்தார்.

கணபதிச்சாமி வரலாறு

அக்காலத்திற் சதுரகிரி சுந்தர மகாலிங்கக்கடவுளை ஆகம விதிப்படி பூசித்து வந்த சுந்தரானந்தரும் சட்டை முனிவரும், உலகத்தைச் சுற்றிப்பார்க்க எப்பொழுதும் போய்வருகிற வழக்கம்போற் ககனமார்க்க மாகச்சென்று மாடமாளிகை கூடகோபுரஞ் சூழ்ந்திலங்கிய காஞ்சிபுர நகரிலிறங்கி ஆங்கு மூர்த்தி சொருபமாக ஸ்ரீ காமாட்சி சமேதரா யெழுந்தருளி யிருக்கின்ற ஏகாம்பரநாதரைத் தரிசித்து செங்குத்தர் வீதிவழியாக வரும்போது அவ்விடத்தில் அம்மரபிலுற்பவித்தவனும், ஞானவொளி முகவசீரக தோற்றங்களை யுடையவனும். ஏழாட்டைப் பிராயமுள்ளவனும், கணபதி என்னும் பெயரினனுமாகிய ஒரு சிறுவனைக் கண்டு அத்யந்த பிரியமுற்று அவனுக்கு மெஞ்ஞானத்தை யுபதேசித்துச் சென்றனர்.

அத்தருணம் அச்சிறுவனும் அவர்களோடு பின்துடர்ந்து செல்லுவானாயினான். அவ்வாறு செல்லுவதை அவனுடையதாய் தந்தையர் தெரிந்து ஓடோடியும்வந்து தடுத்துங் கேளாமல் அவன் முனைத்துச் சென்றனன். அப்பால் சுந்தரானந்தரும் சட்டை முனிவரும் தங்கள் பின்னால் வருகிற சிறுவனைப் பார்த்து அடங்கா மகிழ்ச்சி யுற்றவர்களாகி அவனை அழைத்துக்கொண்டு ககன மார்க்கமாகச் சென்று சதுரகிரிச் சார்பிலிருக்கிற கூவலப்புரமென்னும் ஓர் சிற்றூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

---

* சாபடூர் - சாப்பையூற்று.

கூவுலப்புரம் சுந்தரசுவாமி வரலாறு

அதன்பின்பு மூவரும் ஆங்கு வசிக்கிற சுந்தரரெட்டியார் என்பவரின் மனைவி முத்தம்மாளை ஊருக்குத் தென்பக்கத்துள்ள விளை நிலைத்திற்கண்டு, அவள்தன் கணவனுக்கு அன்னமிடப் போவதையறிந்து அம்மே! இச்சிறுவன் மிகுந்த பசிப்பிணியோடிருக்கிறான் ஆகாரஞ் சிறிது கொடுத்தல் வேண்டுமெனக் கேட்க, அதற்கவர்கள் எழுந்து அவ்விருவரையும் வணங்கி சுவாமிகளே! நல்லது அவ்வாறே கொடுக்கிறோம். தற்சமயம் வீட்டில் அறுசுவையோடு சமையலா யிருக்கிறது. நீங்களும் உண்ண வருவீர் களெனக்கூறினர். முனிவரிருவரும் இப்பொழுது எங்களுக்குப் பசியில்லை. இச்சிறுவனை மாத்திரம் அழைத்துக் கொண்டு போய்ச் சோறு கொடுத்து வைத்திருங்க ளெனக்கூறி, இதோ நாங்கள் போய் வருகிறோம், எனச் சிறிது தூரஞ்சென்று மறைந்தருளினர். அப்பால் ரெட்டியாரும் அவர் மனைவியும் அச்சிறுவனைத் தங்களில்லத்துக்குக் கூட்டிச்சென்று அறுசுவை யோடன்னம் படைத்து மகிழ்வித்தார்கள்.

அச்சிறுவனும் உண்டு பசியாறி வெளிவந்து முனிவரிருவருடைய வருகையை நெடு நேரம்வரைப் பார்த்திருந்துங் காணாமையால், மனமிகவருந்தி அவர்கள் எவ்விடஞ் சென்றனரோ என நினைத்து ஏங்கி அதே சிந்தனையை யுடையவனாகி அவ்விடத்தே சிலநாளிருந்தனன். பின்னர் ஒருநாள் அவன் சட்டைமுனிவரையும், சுந்தரானந்தரையுங்கண்டு தரிசித்து வரவேண்டுமென் றெண்ணங்கொண்டு ரெட்டியாரில்லத்தைவிட்டகன்று இவ்விடத்திற்குத்தான் செல்ல வேண்டும் என நினையாது மனம்போன போக்கிற்போய் தம்பிபட்டி என்னுங் கிராமத்திற்றங்கி ஆங்கிருந்து ஆவினங்கள் செல்லும் வழியாகச் சதுரகிரியின் மேற்சென்று அவ்விடத்திற் பக்தர்களின் பொருட்டுக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற சுந்தரமகாலிங்கக் கடவுளைக் கண்டு வணங்கித் தோத்தரித்து நிற்கும்போது, தவ முனிவர்களாகிய சட்டைமுனிவரும், சுந்தரானந்தரும் அச்சிறுவன் முன்னர் தோன்றினர்.

அவர்களைக் கண்டவுடனே சிறுவன் சிரமேற் கரங்கூப்பிப் பன்முறை போற்றிப் புகழ்ந்து நின்றனன். அவர்களும் ஆசீர்வதித்து அவனைக் கட்டித் தழுவி ஞான தீட்சை முதலியவைகளைச் செய்து பூஜாவிதிகளையும் கற்பித்து கணபதிச்சாமி என நாமகரணமிட்டுச் சுந்தரமகாலிங்கரைப் பூசித்து வரும்படி உத்தரவு செய்தனர். அக்கணபதிச் சாமியாரும் அவர்களுடைய உத்தரவின்படி கடவுளைப் பூசித்து வந்தனர். அப்பால் ஆங்குக் கூவலப்புரத்தில் அந்நாளில் கணபதிச்சாமிக்குச் சோறிட்ட ரெட்டியாரும் அவர் மனைவியும் தங்களிடமிருந்த பிள்ளையைக் காணாது மிகுந்த வியாகூலமுற்ற மனத்தினராய் எவ்விடத்துந் தேடிலைந்து கடைசியாய் ஆயர்குலச் சிறுவர்களால் சதுரகிரி சுந்தரமகாலிங்கரைப் பூசித்து வருகிறானெனக் கேள்வியுற்று உடனே ஆங்குச்சென்று அக்கடவுளைத் தரிசித்தபின்னர் பின்னர் சிறுவனைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களாகச் சுகநலம் விசாரித்துத் தங்களில்லத்திற்கழைக்க, அதைத் தெரிந்த சுந்தரானந்தரும் சட்டை நாதரும் வந்து அவ்விருவர்களையும் நோக்கிச் சதிபதிகளே! இச்சிறுவன் இனி அவ்விடத்திற்கு வரமாட்டான். அதைப்பற்றி நீங்கள் வருத்தங் கொள்ள வேண்டாம். நாங்கள் இப்பூஜா கைங்கரியத்துக்காகவே இவனை

வெகுதூரத்திலிருந்து கூட்டி வந்தோம்; என்ற சகல செய்திகளையும் விவரமாக அறிவித்து அவர்கள் வேண்டிய வரங்களை யீய்ந்தருளி இன்றுமுதல் நீங்கள் உங்களூரி லன்னக் கொடிகட்டி ஈங்கு நம்பெருமானைச் சேவிக்க வருகிற திருத்தொண்டரனை வோருக்கும் அறுசுவையோடன்ன மளித்தல் முதலாகிய *பதினாறு பெருந் தருமங்களையுஞ் செய்து வருவீர்களாகில் இம்மையில் குடும்ப அரசாட்சி, நம்மக்கட்பேறு, அறம் பேணுசுற்றம், நல்வழிப்பொருள், ஒளிர் மணிப்பூண், விளைநிலம், அழகிய ஊர்தி, அன்பாரடிமை என்னும் எட்டுச் செல்வங்களையும், பெற்று முடிவில் மேலாகிய மோட்சவாழ்வை வழிவழிப் பெறுவீர்கள் என்று கூறிப் புகழ்ந்து அனுப்பினர். அவர்களும் அவ்வாறே செய்து வருகிறோமெனக்கூறி அம்முனிவ ரிருவரையுஞ் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விபூதிப் பிரசாதம் பெற்று விடைவாங்கிச் சென்றனர்.

அன்னக்கொடி மட தருமபரிபாலனம்

அதன் பின்பு செட்டியாரும், அவர் மனைவியும், கூவலப்புரத்திற்கு வந்து முனிவர்களது நன்மொழி வலிமையாலும், பிரசாத மகிமையாலும், தன்மினத்தார்களின் ஒற்றுமையையும், உதவியையும் வேண்டி நடந்தவற்றை அவர்களுக்குத் தெரிவிப்ப, அவர்கள் கூடி அவ்விடத்தில் ஒரு பெரிய திருமடங்கட்டி, அன்னக் கொடி கட்டி, சுந்தர ரெட்டியாருக்கு ஸ்ரீ சுந்தரசுவாமி என்னும் பரிவட்டப் பட்டங்கட்டி, அவரது ஆட்சியின் கீழ் யாதொரு குறைவிலாது ஆங்கு வந்தவர்களுக் கெல்லாம் அறுசுவை யுண்டி முதலான தருமங்களை நடந்து வரும் படி செய்தனர். அன்றுமுதல் தருமசிவத்தின் திருவருள் ஆங்குக் குடிகொண்டு வாழ்வதாயிற்று. அம்மடாதிபதியாகிய முதலாவது சுந்தரசாமி யாருக்குப்பின் இரண்டாவது பட்டத்து இராமலிங்க சுவாமியும், அவருக்குப் பின் மூன்றாவது பட்டத்து (2-வது) சுந்தரசுவாமியும், அவருக்குப்பின் நான்காவது பட்டத்து சுப்பையசுவாமியும் அவருக்குப்பின் ஐந்தாவது பட்டத்து மௌனகுரு சுவாமியும், அவருக்குப்பின் ஆறாவது பட்டத்து (3-வது) சுந்தரசுவாமியும், தருமாதிபதிகளா யிருந்து முறை பிறழாமல் வழிவழி அறத்தை நடாத்திக்கொண்டு வந்தனர். *இப்போது ஏழாவது பட்டமாக (4-வது) சுந்தரசுவாமியும், இராமலிங்க சுவாமியும் மடாதிபதிகளாயிருந்து அதிசிரத்தையோடு ஒரு குறைவுமின்றித் தருமத்தை நடாத்தி வருகின்றனர்.

அம்மடத்துக்குத்தொன்று தொட்டு ரெட்டியார் வமிசத்தவர்கள் தனதானிய முதலியவைகளை அவரவர் தகுதிக்குத் தக்கவாறு வேண்டிய மட்டும் கொடுத்துதவி செய்து வருகிறார்கள்.

---

* பதினாறு பெருந்தருமங்களை இப்புத்தகம் 31-ம் பக்கத்திற் கண்டுகொள்க.

* இந்நூல் 1923ம் ஆண்டு வெளியிடப்பட்டதாகையால் இங்கும் பிறவிடங்களிலும் அக்காலத்திலிருந்த மடாதிபதிகள் முதலானவர்களே குறிப்பிடப்பட்டுள்ளனர்..

இனி முன் சட்டை முனிவர், சுந்தரானந்தர் இவ்விருவருடைய உபதேச வாக்ஞையின்படி கணபதி சுவாமியார் ஸ்ரீசுந்தரமகாலிங்கரை நாடொறும் விதிமுறை தவறாது பூசித்தும், பன்னிரண்டு மாத உற்சவபூசைகளை நடாத்தியும் வந்தனர். அக்கணபதி சுவாமி யாருக்குபின் இரண்டாவது பூசகராக சிவஞான தேசிகரும், அவருக்குபின் மூன்றாவது பூசகராக வாலை சுந்தரராஜயோகியும், அவருக்குப்பின் நான்காவது பூசகராக வாலை சுந்தரப்பரதேசியும், அவருக்குப்பின் ஐந்தாவது பூசகராக வாலைசுந்தரப்பரதேசியும், மிக்க பயபக்தியோடு பூசித்து வந்தனர். இப்போது ஆறாவது பூசகராக குழந்தையானந்த சுவாமியார் பூசித்து வருகிறார். உற்சவ முறைகளையும் அதி சிரத்தையோடு இவர் நடத்தி வருகின்றார். இக்கோவிலுக்குப் பூசகரே வழிவழி அகுதாராவர்.

இராமகிரி கோஷாயி வரலாறு

இனி மாவூற்றில் மூவரையதேவன் என்னும் அரசனால் நிலையிடப்பெற்ற திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் உலககிரிநாதரை இராமகிரி கோஷாயி என்னும் மகாராஷ்டிர உலகரது பரம்பரையினரே பூசை செய்துகொண்டு வருகின்றனர். இவரது மூலபுருடராகிய ஆதி இராமகிரி கோஷாயி மேற்படி அரசனால் நன்கு மதிக்கப்பெற்றுப் பூசைக்கென்று கொண்டுவந்து வைக்கப்பெற்ற ஒரு சிறந்த முனிவராவர். அவரது வழியில் இப்பொழுது பூசகராக விருக்கும் இராமகிரிகோஷாயி சைவாகம விதிப்படி பயபக்தியோடு பூசித்து வருவது எல்லோராலும் பாராட்டத்தக்கது.

ஆலய தருமபரிபாலனம்

இச்சதுர மலைக்குரிய காமைய ராசன் என்னும் அரசரது பரம்பரையினரே இங்குள்ள கோயில்களின் வழிபாடுகளையும், வரவு செலவுகளையும் வழிவழி மேற் பார்த்து வந்தனர். அந்த முறையில் மகாராஜஸ்ரீ சதுரகிரி, கட்டாரி, இராமசாமி காமைய நாயக்கர் அவர்களது திருமகனாராகிய மகாராஜஸ்ரீ சதுரகிரி, கட்டாரி காமரா ஜேந்திரநாகைய இராமசுவாமி காமையநாயக்கர் அவர்களும் இப்பொழுது மேற்பார்த்து வருகிறார்கள். இவர்களுடன் மகாராஜஸ்ரீ பேரையூர் ஜமீந்தார் முத்து விஜய ரெகுநாத கொடுமுடி தும்பயசாமி நாயக்கரவர்களும் சுந்தர மகாலிங்கப்பெருமான்பால் சிறந்த அன்புடையராயிருத்தலின் நம் அரசாங்கத்தாரால் மெம்பராக எடுக்கப்பட்டு, கோயிற் காரியங்களை மேற்பார்த்து வருகிறார்கள். அன்றியும், மகாராஜஸ்ரீ சந்தையூர் ஜமீந்தார் சின்னயசாமி கூளப்பநாயக்கரவர்கள் சுந்தரமகாலிங்கப் பெருமானை மறவாதவர்களா யிருந்து அன்பு செலுத்தி வருகிறார்கள்.

வாழ்க.

இங்ஙனம்,
கு. இராமசாமிக்கோ...

வாழ்த்து

இவ்வரசரதுபரம்பரையும், மாவூற்று இராமகிரி கோஷாயி பரம்பரையும், பூசகரது கண்ணியமும், கூவலப்புரத்து அன்னக்கொடி மடாதிபதியின் பரம்பரையும், அறவாழியந்தணராகிய சுந்தரமகாலிங்கசேசுவரரது திருவருளால் நீடூழி வாழ்க வாழ்க வாழ்க பல்லாயிரத்தாண்டு வாழ்க.

இங்ஙனம்,
கு. இராமசாமிக்கோன்.

உ
சிவமயம்

ஓர் விஞ்ஞாபனம்

"சதுரகிரித் தலபுராணம்" என்னும் இந்நூலை ஆராய்ச்சி செய்யும் அன்பர்களே!

இந்நூலில் முப்பத்தொன்றாவது சருக்கத்தில் பதினெண்சித்தர் வரலாறு சொல்லப்பெற் றிருப்பினும், அதிற் சொல்லப்பெறாத சித்தர்களையும், அவரது நூல்களையும், நீங்களறிவீர்கள். ஆகையால் அவ்வுண்மையை யானும் அறிந்த அளவில் ஈண்டுச் சுருக்கிக் கூறுகின்றேன்.

1. ஈசுவரன்.

சித்தர்களுக் கெல்லாம் முதலாசிரியராகிய சிவ பெருமான் பெயரால் காணப்படும் நூல்களாவன:-

சிவாரூடம்	118
வாக்கிய சூத்திரம்	63
மெய்ஞ்ஞான நாடி	30
குருநாடி	16
பூஜாவிதி	15

ஞானசரநூல் முதலியனவாம்.

2. ஈசுவரி.

அம்மை பெயராலும், சத்தியாரூடம் 109, வாக்கிய சூத்திரம் 11, முதலிய சில நூல்கள் உண்டாயிருக்கின்றன.

3. கணநாதர்.

இம்மூத்தபிள்ளையார் பெயராலும், ஞானோபதேசம் 16, யோகம் 10 இவை சில நூல்களுள.

4. சுப்பிரமணியர்.

இளைய பிள்ளையாராகிய இவர் பெயரால்

வைத்திய விஞ்சை	1500
குருபர நிதான ்ை	1000

ஞானம்	500
பக்ஷணி	300
ஞானம்	200
மேற்படி சைதன்யம்	108
சுத்தஞானம்	100
ஞானகக்கிஷம்	55
சிவயோகம்	40
ஞானம்	33
நாடி	32
ஞானம்	32
வைத்திய விஞ்சை	30
ஞானம்	36
ஞானம்	20
ஞானம்	16
மேற்படி தீக்ஷை	16
ஞானம்	12
தேவிஞான தரிசனம்	10
பூஜாவிதி	10

முதலிய சில நூல்களுள்ளன.

5. தட்சணாமூர்த்தி.

தென்முகத் தெய்வமாகிய இவர் பேராலும்,

திருமந்திரம்	1500
காவியம்	1000
ஜாலசூத்திரத்திரட்டு	500
ஞானோபதேசம்	16
காவியச்சுருக்கம்	16
சுத்தஞானம்	13
ஞானபூஜாவிதி	10
ஞானசூத்திரம்	10
மேற்படி	8
ஞானபஞ்சாக்ஷரம்	6

முதலிய சில நூல்களுண்டா யிருக்கின்றன.

6. தேரையர்.

அகத்தியருடைய மாணாக்கருள் ஒருவராகிய இவர் வைத்தியத்தில் ஒப்புயர் வற்றவர். இவர் சரீரசம்பந்தமான சாரீர சாஸ்திர உணர்ச்சியிலும், நோய்களின் காரணத்தை நிச்சயித்து மதிக்கத்தக்க முறையைக் கூறும் நிதான சாஸ்திர அறிவிலும்

நோய் நீக்கும் முறைகளைச் சொல்லக் கூடிய சிகிச்சா சாஸ்திரப்பயிற்சியிலும் வல்லவரென்று ஆசிரியராலேயும் நன்கு மதிக்கப் பெற்றவர். ஒரு காலத்தில் தலைக்குத்தினால் வருந்திய ஒரு அரசனுக்கு அந்நோய் அவன் மண்டையிலிருந்த தேரையினால் உண்டாயிற்றென்றறிந்து கருவியாடி மண்டையைத் திறந்து அதனை வெளியேற்ற ஆசிரியர் வழியை ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு கிண்ணத்திற் றண்ணீர் கொண்டுவந்து அத்தேரையின் முன்பாக இவர் காண்பிக்கவும் அத்தேரை தானே தண்ணீரில் குதிப்பதைக் கண்ட ஆசிரியர் மகிழ்ச்சி யுற்றுப் பொருத்தி நோயை நீக்கியபின்பு இவரைத் தேரையர் என்று அழைத்த காரணத்தினால் இவருக்குத் தேரையர் என்னும் பெயருண்டாயிற்று. ஆராய்ச்சி முதல்வராயிருந்தமையின் இவர் தேரையர் என்னும் பெயரைப் பெற்றனர், என்பாரும் உளர். மற்றொரு காலத்தில் ஒரு பாண்டியனுக்கு இடையில் நோயினாற் கூனலுண்டாகவும், சிவநேசச் செல்வனாகிய அவனுடைய வேண்டுதலுக்காக அழகிய சொக்கராணையின்படி தேரையருடன் வந்த அகஸ்தியர் பாண்டியனரண்மனையிலுள்ள ஒரு கூடத்தில் வைத்துத் தைலங் காச்சிக் கொண்டிருக்கும் பொழுது ஏதோ ஒரு காரியமாக ஆசிரியர் வெளிச் சென்றிருக்குஞ் சமயத்தில் தைல அடுப்புக்கு நேர் மேலே இருந்த பல்லக்குக் கொம்பின் வளைவு நிமிர்த்தலைக்கண்டு, பதம் வந்து விட்டதாக வறிந்து இவர் தைலத்தை இறக்கிவைத்திருப்பவும். அப்பால் வந்த ஆசிரியர் உண்மையை யுணர்ந்து இவரை மிகவும் மெச்சிக் கொண்டாடினர். இவ்வாறு பல காலங்களிலும் ஆசிரியரால் நன்கு மதிக்கப்பெற்ற இவருக்கு அருமையான வைத்திய வாதயோக ஞானங்களின் மறை பொருள்களெல்லாம் ஆசிரியரிடத்திலிருந்து கிடைத்தமையின் மாணக்கர் பலரினும் இவர் மிகச் சிறந்தவராயினாரென்பர். இவர் தமிழ் நன்மக்களுள் ஒருவராவர். இவராற் செய்யப்பட்ட நூல்களாவன:-

வைத்திய காவியம்	1500
இரசவர்க்கம்	1500
வைத்தியம்	1001
கருக்கிடை	1000
வைத்தியசிந்தாமணி	600
வைத்தியம்	500
கரிசல்	300
*மருத்துவபாரதம்	200
தைலம்	150

*மருத்துவம் = (மரு×து×அம்) மக்களுக்குப் பொருத்தமான, அதாவது உடம்பினிலைக்குத் தகுதியான நுகர்ச்சிப் பொருளாகிய உணவு செய்தலைக் கூறும் நூல். இந்நூல் வல்லார் மருத்துவரெனப் பட்டார். (மருவல்=பொருந்துதல். இதன் முதனிலையாகிய "மரு" பகுதி) "மருந்து" என்பது பொருத்தமான உணவென்றும் பொருளுளது. மருந்து கூறும் நூல் "மருத்துவம்" எனப்படும் என்பாருமுளர். ஈண்டுப் பொருள் கூறுங்கால் நகரம் தகரமாக வலிந்து நின்றது விகாரம். "அம்" செய்யப்படு பொருள் விகுதி.

வைத்தியம்	100
சிவபூஜாவிதி	75
விஷவைத்தியம்	40
சூத்திரம்	30
மேற்படி	20
நவலோகபற்பம்	

நீர்க்குறி நெய்க்குறி முதலியனவாம்.

7. புலத்தியர்.

அகத்தியர் மாணாக்கருள் இவரும் ஒருவராவர். அறிவிற் சிறந்தவரா யிருந்தமையின் புலத்தியரென்னும் பெயரை இவர் பெற்றனர். இவரும் தமிழ் நன்மக்களில் ஒருவராவர். இவர் செய்த நூல்களாவன:-

வைத்திய வாதம்	1000
வாதசூத்திரம்	300
வைத்தியம்	100
கற்பம் முதற்காண்டாம்	100
மேற்படி நடுக்காண்டம்	100
மேற்படி கடைக்காண்டம்	100
வாதம்	100
வழலைச் சுருக்கம்	13

இவைகளே யாம்.

8. புலிப்பாணி.

இவர் போகமுனிவரது மாணாக்கருள் ஒருவராவர். தமிழ்நாட்டுப் பொன்வணிகர் இனத்தைச் சார்ந்தவராதலின் புலிப்பாணி என்னும் பெயர் இவருக்குண்டாயிற்று என்றும், வியாக்கிரபாதரின் பெயரிடப் பெற்றமையின் புலிப்பாணி எனப்பட்டாரென்றுங் கூறுவர். இவர் செய்த நூல்களாவன:-

வைத்தியம்	500
ஜாலம்	325
வைத்திய சூத்திரம்	200
பூஜாவிதி	50
சன்முக பூஜை	30
சிமிழ் வித்தை	25
சூத்திர ஞானம்	12
சூத்திரம்	9

இவைகளும் சோதிடம் முதலியனவுமாம்.

9. கமலமுனி.

இவர் தமிழ்நாட்டுக் கன்னார் வகுப்பைச் சார்ந்தவர். இவர் செய்த நூல்களாவன:-

ஞான சூத்திரம்	76
மேற்படி சைதன்யம்	16

இவையாம்.

10. கடைப்பிள்ளை.

இவர் தமிழ் நன் மக்களிலொருவராவர். கொங்கணருடைய மாணாக்கருள் இவரும் ஒருவரே. இவர் செய்த நூல்களாவன:-

பெருணல்	500
கலைக்ஞானம்	120
சிவயோக ஞானம்	100
ஞானக்கக்கிஷம்	80
ஞான தண்டகம்	50
பஞ்சாட்சரச் சுருக்கம்	32
ஞான சமாதி தீட்சை	17
ஞான தீட்சாவிதி	16
மௌன தீக்ஷை	12
ஞானசைதன்யம்	7

இப் பதின்மரும் சித்தர் குழாத்துள்வைத்து எண்ணப்படுகின்றார் என்றாலும் இவருள் தேரையர், புலத்தியர், இருவரைச் சேர்த்துக்கொண்டு, பிர்மருஷி, தன்வந்திரி என்னும் இரண்டு வடவரையுந் தள்ளிப் பதினென் சித்தருக்குக் கணக்குக் கூறுவாருமுளர். அன்றியும் அவர் கருவூராரை நிறுத்திப் புலிப்பாணியைச் சேர்த்தே அங்ஙனம் பதினெண்மரைக் கூறுவர். கமலமுனியே காலாங்கி என்றும் கூறுவர். இங்ஙனம் பலவும் அறிஞர் ஆராய்ந்தே உண்மையைக் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர். இனி நவநாதசித்தரிற் கேட்கப்படும் கோரக்கநாதரும் மச்சேந்திரநாதரும் இப்பதினெண்மரிற் கூறப்படும் இருவரில் வேறொருவர். ஈண்டுக் கூறிய தன்வந்திரி வேறு; மற்றொரு தன்வந்திரிப் பட்டம் பெற்ற காசியரசன் புதல்வனாகிய திவோதரசன் வேறு; பாற்கடலிற் பிறந்ததாகப் போற்றப்படும் தன்வந்திரி வேறு என்று கூறுவாரும் உளர். இஃதிங்ஙனமாக, இங்குக் கூறிய-இவரனைவரும் பழையோராயிருப்பவும் பிற்காலத்தில்,

1. அகப்பேய்ச்சித்தர்
2. அழுகண்ணிச்சித்தர்
3. இடைக்காட்டுச்சித்தர்
4. கடுவெளிச்சித்தர்
5. கஞ்சமலைச்சித்தர்
6. கல்லுளிச்சித்தர்
7. காலாட்டிச்சித்தர்
8. குதம்பைச்சித்தர்
9. கௌபாலசித்தர்
10. சங்கிலிச்சித்தர்

11. ஞானசித்தர்
12. திரிகோணமலைச் சித்தர்
13. தொழுகண்ணிச் சித்தர்
14. நாதாந்த சித்தர்
15. நொண்டிச் சித்தர்
16. பாம்பாட்டிச் சித்தர்
17. விளையாட்டுச் சித்தர்
18. மௌனசித்தர் வகுளிநாதர்

இப்பதினெண்மரும் சித்தர் என்னும் பட்டம் புனைந்து விளங்கி நின்றனர். இவ பெயராலும் தனித்தனிப் பாடல்கள் சில உண்டாயிருக்கின்றன. அன்றியும் சிவவாக்கியரும், அவரது திருமகனாராகிய சிவானந்தரும், திருவள்ளுவரென்னும் பெய கொண்ட ஒருவரும் ஜெயமுனியும், வேறுசிலரும், இவர் கூட்டத்தில் வைத்துப் பேசப்படுகின்றனர். இனி

அசுவனிதேவர்
அத்திரி
கண்ணுவர்
பிருகு
மிருகண்டர்
வசிஷ்டர்
கலைக்கோட்டார்
காசிபர்
கௌசிகர்
கௌதமர்
சுகப்பிரமர்
சூதர்
துருவாசர்
பரத்துவாசர்
பாரசுரர்
வரருஷி
வான்மீகர்
கபிலர்
கூர்மானந்தர்
சங்கமுனி
சமதக்கினி
சங்கராசாரியர்
திலோத்தமை
ஊர்வசி

முதலிய ரிஷிகளின் பெயராலும் சிலதமிழ் நூல்கள் உண்டாயிருக்கின்றன வள்ளுவர் என்னும் ஒருவரால் "ஞான வெட்டியான்" என்னும் ஒரு சிறந்த நூலுப் உண்டாயிருக்கிறது. இதில் இரண்டாயிர வருடங்களுக்கு முன்னர்த் தோன்றிட் பண்டைத் தமிழ் மறையை முதற்பாவாகிய குறள் வெண் பாட்டிற் செய்தருளியவரும் மைலாப்பூர் வேளாளர் குடிப்பிறந்த வரும், தொண்டைமண்டலத்துச் காவேரிப்பாக்கத்து வேளாண்குடி முதல்வருடைய திருமகளை மணந்தவரும் ஆகிய திருவள்ளுவ நாயனாரருளியகுறளுக்கு "யானும்" அகமகிழும் அம்பிகைட் பெண்ணருளினாலே அவனிதனில் ஞானவெட்டியருள...... நிகழ் திருவள்ளுவ நயினாருரைத்தவேதம்..........காப்பாமே, என்று இரண்டாவது கவியில் காப்புச் கூறப்பட்டிருக்கிறது. இதனால் பிற்காலத்தவராகிய "ஞானவெட்டியா" னாசிரியர் வேறெென வறிக. இவ்வளவில் வைத்தியவாத யோக ஞானசித்தர்களின் உண்மையை உணர்ந்து கொள்க.

ஜீவனுக்கு மோட்சம் தரும் சதுரகிரி யாத்திரை

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூர் என்ற கிராமத்தில் இருந்து, மேற்கு தொடர்ச்சி மலை கடல் மட்டத்திலிருந்து 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது சதுரகிரி மலை ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் சுயம்பு லிங்கமாகத் தோன்றிய லிங்கம். இந்த சதுரகிரி தென்கயிலை சதுரகிரி சுயம்பு மகாலிங்கம் என அழைக்கப்படுகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் தலைமை மலையாக சதுரகிரி மலை உள்ளது. சுந்தர மகாலிங்கம் சுயம்பு லிங்கமாகத் தோன்றி சித்தர்களுக்கும்,முனிவர்களுக்கும் ரிஷியர்சளுக்கும், மகாரிஷிகளுக்கும், ஞானிகளுக்கும், பரதேசிகளுக்கும், பக்தர்களுக்கும் அருள்பாலித்து வருகிறார். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் மதுரை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்கள், செங்கோட்டை, குற்றாலம், பாபநாசம், வருசநாடு, உப்புத்துறை, ஆண்டிப்பட்டி, தேனி, உத்தமபாளையம், கம்பம், போடி, போடிமெட்டு, சுருளி, தேக்கடி, கொடைக்கானல், திண்டுக்கல், வத்தலகுண்டு, உசிலம்பட்டி, சேடப்பட்டி, பேரையூர், சாப்டூர் முதலிய பல ஊர்களில் இருந்தும் ஸ்ரீ சுந்தர மாகலிங்கம் சுவாமிமலை தரிசனம் செய்து வருகிறார்கள். முக்கிய விழாக்காலம் தை அமாவாசை, ஆடி அமாவாசை தினங்களில் சதுரகிரி மலையில் 'நவராத்திரி கொலு பூசை' திருவிழா நடைபெறும். மற்றும் பௌர்ணமி, அமாவாசை, பிரதோஷம், சிவராத்திரி, வெள்ளி, சனி, ஞாயிறு பக்தர்கள் வருகை உண்டு. கால

பூசைகள் தினந்தோறும் நடைபெறும். அந்த காலத்தில் பக்தர்கள், மாட்டுவண்டி, கூண்டு வண்டிகளிலும், நடைபயணமாகவும், ஆறு நாட்களுக்கு முன்பே சதுரகிரி பயணம் செல்ல தொடங்கி விடுவார்கள். சதுரகிரி மலை அடிவாரம் தாணிப்பாறை வழியாக 7 கிலோ மீட்டரும், பேரையூரிலிருந்து சாப்டூர், வண்டார், அணைக்காரப்பட்டி, வாழைப்தோப்பு வழியாக 5 கிலோ மீட்டரும் நடைப் பயணமாக சதுரகிரி யாத்திரை தொடங்கும்.

காராம் பசு பால் கொடுத்தது

ஸ்ரீ சதுரகிரிசுந்தர மகாலிங்கம் இடதுபுறம் சாய்ந்த நிலையில் சுயம்பு லிங்கமாகக் காட்சி அளிக்கிறார். சாய்ந்த நிலையில் இருக்கும் சிவனுக்கு ஒரு சம்பவத்தை முன்னோர்கள் கூறி உள்ளனர். சதுரகிரி மலையில் மாடு மேய்ப்பவர்கள் மலைமேல் மாடு மேய்த்துக் கொண்டு இருந்தனர். அதில் ஒரு காராம் பசு மாலை நேரத்தில் மாடு மேய்ப்பவர் பால் கறக்க வந்தபோது விலகி விலகிச் சென்றது. ஏன் இப்படி செய்கிறது என்று மாடு மேய்ப்பவர் எண்ணி, பசுவை அமைதிப்படுத்தி பால் கறக்கத் தொடங்கினார். ஆனால் மடியில் இருந்து பால் சுரக்கவில்லை. மேய்ப்பவர் அதிர்ச்சியானார். தினமும் பால் தரும் இந்த காராம்பசு இன்று ஏன் பால் சுரக்கவில்லை என்று குழம்பினார். வேறு யாரும் பாலை கறந்திருப்பார்களோ! என்று எண்ணினார். இது போல் பல நாட்களாக அந்த காராம்பசு மாடு மேய்ப்பவருக்கு பால் தருவதில்லை. எந்த தவறும் அவருக்கு தென்படவில்லை. மனதில் மிகவும் குழப்பம் அடைந்தார். ஒரு நாள் காராம்பசுவை

கண்காணித்தபோது பசு ஒரு சிறிய பாறையின் நடுவில் மகிழமரம் அடியில் நின்று கொண்டு தன் மடியில் உள்ள பாலை பாறையின் மீது வடியச் செய்தது. அந்த பாறையில் சிறிய லிங்க ரூபத்தில் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் அந்த காராம்பசுவிற்கு தெரிந்த காரணத்தினால் அது தன்னுடைய பாலை ஸ்ரீ சுந்தர மகாலிங்கத்திற்கு கொடுத்து வந்தது. இதைக் கண்டு மாடு மேய்ப்பவர் கோபமடைந்தார். இந்த காராம்பசு ஏன் கல் பாறை மேல் பாலை சுரக்கிறது என்று நினைத்து, ஓடி வந்து கையிலிருந்த தடியால் காராம்பசுவை அடித்தார். அப்போது கையிலிருந்த தடியால் அந்த பாறையில் உள்ள சிவலிங்கத்தையும் ஓங்கி அடித்தார். அவ்வாறு அடிக்க அவர் ஓங்கும் போது ஸ்ரீ சுந்தர மகாலிங்கம், அடி தன் மேல் விழாமலிருக்க ஒருபுறமாக சாய்ந்தார். சாய்ந்த போதும், அடி லிங்கத்தின் மீது பட்டது. மாடு மேய்ப்பவர் அடித்தவுடன் நேராக இருந்த லிங்கம் சாய்ந்து விட்டது என்று திரும்பிப் பார்த்தார். அப்போது ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் மாடு மேய்ப்பவருக்கு காட்சி தந்து, தன் திருவிளையாடலில் இதுவும் ஒன்று என்று கூறி சதுரகிரியில் மாயமாக மறைந்தார் மாயன். சாய்ந்த நிலையில் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார் சதுரகிரியில் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம்.

சித்தர்கள் பூமி

சதுரகிரியை சித்தர்கள் பூமி என்றும், சித்த மருத்துவ மூலிகை நிறைந்த வனம் என்றும் கூறுவர். சதுரகிரியில் ஏகமான மூலிகை தீர்த்தங்களும்,அருவிகளும் காணப்படுகின்றன. இந்த சதுரகிரிக்கு 16 கிரிகள்

துணைக் கிரிகளாக சொல்லப்படுகிறது. இந்த 16 கிரிகளுக்குள் நடுவே ஸ்ரீ சுந்தரமகாலிங்கம் அருள்பாலிக்கிறார். சதுரகிரியின் அற்புதங்களை சொல்லிக் கொண்டே போகலாம். இந்த உலகில் மனிதராக பிறப்பெடுத்தவர் மறுபிறவி பிறவாநிலையை பெறுவதற்கு சதுரகிரி யாத்திரை செல்கிறார்கள். ஜீவனுக்கு மோட்சம் தரும் மோட்சத்தை பக்தர்களுக்கு தருவார் ஸ்ரீ சுந்தரமகாலிங்கம். பயணம் கடினமாக இருக்கும். பயணம் தொடரும் போது பக்தர்களுக்கு இனம் புரியாத ஒரு உணர்வு தூண்டப்படும். நிச்சயம் சிவனின் ஆசிர்வாதமும், சித்தர்களின் ஆசிர்வாதமும் கிடைக்கும் என்பது சதுரகிரி யாத்திரையின் மகிமை. இந்த அனுபவங்களை மலையில் ஏறும் போதே நாம் உணரலாம். கரடுமுரடான பாறைகள் வழியாகச் செல்லும் போது நம் உடம்பில் உள்ள வியர்வைத் துளிகள் மலையில் விழுந்ததும் நமது ஆன்மா துருவ நட்சத்திரத்தை நோக்கிச் செல்லத் தொடங்கும். மலை மேல் நடந்து செல்லும் போது சூட்சமமாக சித்தர்களும், மகரிஷிகளும் நமக்குத் துணையாக வருவார்கள். சதுரகிரி மலை வழியில் பைரவர் அதிகம் காணப்படுகிறது. அவ்வப்போது இந்த பைரவர் நமக்குத் துணையாக நம்முடனே தொடர்ந்து பயணம் செய்யும். மலை மேல் ஏறும் போதும், இறங்கும் போதும் பைரவர்கள் ரூபத்தில் சித்தர்கள் துணை வருவார்கள். கயிலை சென்று கயிலைநாதனை காண இயலாதவர்கள், மேற்கு தொடர்ச்சி மலை தென்கயிலை சதுரகிரி ஸ்ரீ சுந்தர மகாலிங்கத்தை தரிசனம் செய்து தங்கள் ஆசையினை பூர்த்தி செய்யலாம். சதுரகிரியில் ஒரு நாள் இரவில் தங்கி தியானம் செய்கின்ற அன்பர்கள் தியானம் செய்யலாம். நல்ல பலன்களை ஸ்ரீ சுந்தர மகாலிங்கமும்,

சித்தர்களும் வந்து அருள்புரிவார்கள். அங்கு இருக்கும் போது தேவலோகத்தில் இருப்பது போல் ஆனந்தம் பெறலாம். சதுரகிரி பயணம் செய்யும் போது வழியில் உள்ள தெய்வங்கள், தீர்த்தங்கள், சித்தர்கள் குகைள் உள்ளன. அறிந்தவரை ..

ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் சுயம்புலிங்கம் திருக்கோயில்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமி திருக்கோயில்.

ஸ்ரீ சந்தன மகாலிங்க சுவாமி திருக்கோயில்.

ஸ்ரீ பெரிய மகாலிங்க சுவாமி.

ஸ்ரீ அகத்தியர் மாமகரிஷியார் வனம்.

ஸ்ரீ இடைக்காடர் வனம்.

ஸ்ரீ பெரிய கணபதி சுவாமி.

ஸ்ரீ நாகதேவி அம்மன் சுவாமி.

ஸ்ரீ நாகதேவன் சுவாமி.

ஸ்ரீ சித்தர்கள் தவசு குகை மேடை.

ஸ்ரீ ஊஞ்சல் கருப்பன் சுவாமி.

ஸ்ரீ ஆதி சிவன் வனம்.

ஸ்ரீ ஆனந்த வள்ளி அம்மன் திருக்கோயில்.

ஸ்ரீ பலவடி கருப்பன சுவாமி திருக்கோயில்.

ஸ்ரீ வனதுர்க்கை அம்மன்.

ஸ்ரீ வன காளியம்மன்.

ஸ்ரீ கோரக்க சித்தர் குகை வனம்.

ஸ்ரீ அத்திரி மகரிஷி வனம்.

ஸ்ரீ காராம்பசு தடம்.

ஸ்ரீ பெரிய காராம்பசு வனம்.

ஸ்ரீ இரட்டை மகாலிங்கம் சுவாமி சன்னதி.

ஸ்ரீ காலாங்கி நாதர் குகை வனம்.

ஸ்ரீ சதுரகிரி காவல் தெய்வம் கருப்பணசாமி கோயில்.

ஸ்ரீ சதுரகிரி காவல் தெய்வம் பேச்சியம்மன் கோயில்.

ஸ்ரீ சப்த கன்னிமார்கள் கோயில்.

ஸ்ரீ தங்கம் ராஜயோக காளியம்மன் கோயில்.

ஸ்ரீ தாணிப்பாறை விநாயகர் கோயில்.

மேலும் சதுரகிரி மலையை சுற்றி பல இடங்களில் தெய்வங்களும், கோயில்களும் குகைகளும் உள்ளன.

சதுரகிரி மலைக்கு மூன்று வழிப்பாதைகள் உண்டு

முதல் பாதை

1. உசிலம்பட்டியிலிருந்து, சேடப்பட்டி, பேரையூர், சாப்டூர், வாழைதோப்பு வழி சதுரகிரி மலை அடிவாரத்தை அடைய 35 கி.மீ. 2. மதுரையில் இருந்து திருமங்கலம் டி.கல்லுப்பட்டி, பேரையூர், சாப்டூர், வாழைதோப்பு வரை 40 கி.மீ. சதுரகிரி மலை அடிவாரம் 5 கி.மீ. நடைப்பயணம் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் திருக்கோயில் சென்றடையலாம். 5 கி.மீ. நடைப் பயணமாகவே இறங்க வேண்டும்.

இரண்டாவது பாதை

1. ஆண்டிப்பட்டி, தேனி, வருசநாடு, உப்புத்துரை மாளிகைப்பாறை, கருப்பசாமி கோயில் வழியாக சதுரகிரி அடிவாரத்தை அடையலாம்.

அங்கிருந்து 10 கி.மீ. நடைப்பயணமாக ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் திருக்கோயில் சென்றடையலாம். இறங்கும்போதும் 10 கி.மீ. நடைப்பயணமாக இறங்க வேண்டும்.

மூன்றாவது பாதை

1. மதுரையிலிருந்து திருமங்கலம், டி.கல்லுப்பட்டி, அழகாபுரி, கிருஷ்ணன்கோயில், வத்ராயிருப்பு, தாணிப்பாறை. சதுரகிரி அடிவாரம் 72 கி.மீ. ராஜபாளையத்திலிருந்து திருவில்லிப்புத்தூர் கிருஷ்ணன் கோயில் வத்திரயிருப்பு, தாணிப்பாறை வழியாக சதுரகிரி அடிவாரத்தை அடைய 35 கி.மீ. தாணிப்பாறையிலிருந்து 7 கி.மீ. நடைபயணம் (யாத்திரை) மலையின் மேலிருந்து இறங்கும் போதும் 7 கி.மீ. நடைபயணமாக தாணிப்பாறை வர வேண்டும். மூன்று வழிப் பாதையிலும் அந்தந்த ஊர்களிலிருந்து வழக்கமாக வந்து போகும் பக்தர்கள் அவரவர்கள் அறிந்த வழியில் வந்து போவார்கள். புதிதாக வருபவர்கள் கண்டிப்பாக அருகில் உள்ள கிராமத்து பக்தர்களிடம் கேட்டு அறிந்து வரவும். ஒவ்வொரு வழியும் ஒவ்வொரு விதமாக இருக்கும். சில நேரங்களில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாகவும், சில நேரங்களில் குறைவாகவும் இருக்கும். எந்தெந்த கால கட்டங்களில் எந்த வழியில் செல்லலாம் என்பதை கேட்டு அறிந்து கொண்டு பயணம் செய்யலாம். அடிவாரத்திலிருந்து பயணம் தொடங்கும் நேரம் காலை 6 மணியிலிருந்து மதியம் 2 மணிக்குள் நடைப்பயணத்தை தொடர வேண்டும். இது போல் மாலை 4 மணிக்குள் மலை மேலிருந்து இறங்க வேண்டும் என்பதை மனதில் வைத்து

பயணிக்கவும்.

ஸ்ரீ சுந்தர மகாலிங்க சிவனை பார்ப்பதற்கு, அவசர அவசரமாக பயணம் செய்ய வேண்டாம். நிதானமாக சுந்தர சிவனே போற்றி போற்றி என்று மனதில் சொல்லிக்கொண்டு தங்கள் உடலை சுத்தி செய்து பயணம் செய்யவும். கைபேசி மலைப்பகுதியில் பேச இயலாது. ஒரு நாள் பயணம் மிக அமைதியாக இருக்கும். நாம் எதைத் தேடி செல்கின்றோமோ அதைப் பெறலாம். கைலாசம் செல்வது போல் எந்த சிந்தனையும் இல்லாது ஒரே நிலையில் மோட்சத்தை நோக்கிச் செல்ல வேண்டும். ஆரவாரம் இல்லாது சென்றால் அன்போடு அமைதியாக அரவணைப்பார் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம். அவர் பாதம் பணிந்து, அங்கு தங்கி, நமது ஆத்மாவை சுத்தி செய்து உடம்பில் உள்ள பிணிகளை விலக்கி, எண்ணங்களை சீர்படுத்தி நாம் ஓர் நிலையினை அடையலாம். மோட்சம் நம்மை தேடி வரும் ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் நம் வாழ்வில் வளமும், நலமும் தருவார் என்பது உறுதி.

கிரிவலம் உள்ளது

அந்த காலத்தில் பக்தர்கள் கிரிவலம் செல்வது போல் சாப்டூர், வாழைத்தோப்பு வழியாக சதுரகிரி மலை ஏறி சுந்தரனை தரிசனம் செய்து தாணிப்பாறை வழியில் இறங்குவார்கள். அதே போல் தாணிப்பாறை வழியாக ஏறி தரிசனம் செய்து, சாப்டூர், வாழைத்தோப்பு வழியாக இறங்குவார்கள். அதே போல் வருசநாடு மாளிகைபாறை, கருப்பசாமி கோயில் வழியாக ஏறி, தரிசனம் செய்து விட்டு, சாப்டூர், வாழைத்தோப்பு வழியாகவும், தாணிப்பாறை, வத்ராயிருப்பு வழியாகவும் இறங்குவார்கள். இதிலிருந்து சதுரகிரி மலையை அந்தக் காலத்திலேயே கிரிவலம் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இப்படி கிரிவலம் வந்தால் நினைத்த காரியம் நிறைவேறும். மூன்று வழியிலும், பல தெய்வங்களும், பல சித்தர்களின் ஆசியையும் மூலிகைகளின் மருத்துவ மணமும், நாம் பெறுவதற்கு மும்முனையாக இறைவனும் சித்தர்களும் நமக்கு பாதைகள் அமைத்துத் தந்து அருளியிருக்கிறார்கள்.

பாரம்பரியம் வழியில் பரம்பரை அறங்காவலர்கள்

1. திரு. பரமானந்த யோகீஸ்வரர் சுவாமிகள்.
2. திரு. ராமலிங்க சுவாமிகள்.
3. திரு. கணபதி சுவாமிகள்.
4. திரு. தவஞானபோதக சுவாமிகள்.
5. திரு. வால சுந்தர ராஜயோகீஸ்வரர் சுவாமிகள் 1857வரை.
6. திரு. நா. சுந்தர பரதேசி சுவாமிகள் 1860.
7. திரு. பெரியசாமி பரதேசி சுவாமிகள் 1878 முதல் 1889 வரை.
8. திரு. வால சுந்தர பரதேசி சுவாமிகள் 1889 முதல் 1915 வரை.
9. திரு. குழந்தை அனந்த சுவாமிகள் 1915 முதல் 1980 வரை.
10. திரு. பெரியசாமி பரதேசி சுவாமிகள் 1980 முதல் 1982.
11. திரு. P. துரைராஜ் (எ) பெரியசாமி பரதேசி 1982 முதல் ஸ்ரீ சுந்தர மகாலிங்கத்தை சாப்டூர் கிராமத்தைச் சேர்ந்த பரதேசி என்று பட்டம் பெற்ற பாரம்பரியம் 11-வது தலைமுறையாக பராமரித்து நிர்வாகம் செய்து வருகிறார்கள். ஆதிகாலத்தில் சுயம்பு லிங்கமாக ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் சதுரகிரியில் தோன்றப்பட்டதை கண்டறிந்து மதுரை மாவட்டம் சாப்டூர் என்ற கிராமத்து ஆன்மீக பரதேசிகள் மிக ஏழ்மையான நிலையில் இருந்தாலும் சிவனை பூஜித்து பராமரித்து வந்தார்கள்.

அன்றாடம் மலையில் உள்ள பூக்களை பறித்து ஸ்ரீ சுந்தர மகாலிங்க சிவனுக்கு அலங்கரிப்பது, ஆராதனை செய்வது போன்ற வேலைகளை சித்தர்களுடன் சித்தர்களாக இருந்து பரதேசி பாரம்பரியத்தினர் செய்து வந்தனர். மேலும் பரதேசிகள் சதுரகிரி மலையில் உள்ள மூலிகைகளைக் கொண்டு கிராமத்தில் உள்ள நோயாளிகளுக்கு மருந்துகளை செய்து கொடுத்து வந்தார்கள். மலையில் சித்தர்கள் நடமாட்டங்களை அறிந்து அவர்களுடன் பேசி மகிழ்ந்தனர். அவ்வாறு இருந்தபோது ஆங்கிலேயர்கள் காலத்தில் ஆங்கிலேயர்கள் ஸ்ரீ சுந்தர மகாலிங்க சிவனை ஆய்வு செய்தபோது, பலவித ஆச்சர்யமும், அதிசயமுமான சம்பவங்களை கண்டு ஸ்ரீ சுந்தர மகாலிங்க சிவனை பராமரிக்கவும், பாதுகாக்கவும் செம்பு பட்டா ஓலையாக 63 ஏக்கர் 76 செண்ட் நிலப்பரப்பை குழந்தை ஆனந்தசாமி அவர்கள் முயற்சி செய்து பெறப்பட்டது. ஆதிகாலத்திலிருந்து இன்று வரை பரதேசி குடும்பத்தினர் அரசு அறநிலையத்துறை ஆதரவு பெற்று ஸ்ரீ சுந்தர மகாலிங்க சுவாமி திருக்கோயில் நான்கு கால பூஜைகளை நடத்தி வருகின்றனர். தமிழகத்திலிருந்து பல லட்சம் பக்தர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். அயல் நாட்டவர் வருகையும் உண்டு. சதுரகிரி வரும் பக்தர்களுக்கு மலையின் மேல் தங்கும் வசதியும், மடங்களும் இலவச அன்னம்பாலிப்பு வசதிகளையும் பரதேசி குடும்பத்தார் செய்து வருகிறார்கள்.

பக்தர்கள் யாத்திரை பயணிக்கும் போது

யாத்திரை செல்பவர்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன் படுத்தக்கூடாது.

அவ்வாறு பயன்படுத்தினால் அவற்றை மலையில் மேல் போடாமல் கையில் வைத்துக் கொண்டு தாணிப்பாறை அடிவாரத்தில் வந்து தொட்டியில் போடுவது நல்லது. பிளாஸ்டிக் கவர், பேப்பர் போன்றவற்றை சதுரகிரி மலை மேல் போட்டால் மிருகங்கள், குரங்குகள், பறவைகள், கரடி போன்றவைகள் உண்டு விட்டு இறந்து விடக்கூடும். மேலும் சுனை தீர்த்தங்கள், ஊற்றுநீர்கள், அருவி நீர்கள் செல்லும்போது பிளாஸ்டிக் பொருட்கள் சென்று அதனை அடைத்து விடும். ஆகையால் பக்தர்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் மலைப் பாதையில் நடக்கும்போது பிளாஸ்டிக் பொருட்களைக் கண்டால் அவற்றை எடுத்து வந்து அடிவாரத்தில் உள்ள தொட்டியில் போட்டு விடவும். சதுரகிரி யாத்திரை செல்லும் போது ஆங்காங்கே புனித தீர்த்தங்கள் பல உண்டு. நீராடுவோர் நீராடலாம். அல்லது தலையில் தெளித்துக் கொள்ளலாம். பாட்டில்களில் சேகரித்து வீடுகளுக்கு கொண்டு சென்று பூஜைக்கு பயன்படுத்தலாம். அருகில் உள்ளவர்களுக்கு கொடுக்கலாம். அருகில் குடமுழுக்கு நடக்கும் கோயில்களுக்கு கொடுத்து புண்ணியம் தேடலாம். தீர்த்தங்கள் வீட்டில் இருப்பது நல்லது. சகல தோஷங்களும் நீங்கும். சதுரகிரி மலையில் உள்ள தீர்த்தங்கள் எல்லாமே சித்தர்கள் வாசம் செய்த தீர்த்தங்கள். மூலிகை தீர்த்தமாக இருப்பதால் அங்கு குளிப்பவர்கள் கண்டிப்பாக சோப்பு, சாம்பு, சீயக்காய் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. இயற்கையாக நீராடி உடம்பில் உள்ள ஜீவ அணுக்கள் மற்றும் ஆன்மாவை புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்.

சதுரகிரி ஸ்ரீ சுந்தர மகாலிங்கம் சுவாமி நமக்கு துணை வருவார். ஆரோக்கியம் தருவார். சதுரகிரி ஸ்ரீ சுந்தர மகாலிங்க மலை சிவனையும், சித்தர்களையும் தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் அனைவரும் வருக! ஸ்ரீ சுந்தர மகாலிங்க சிவன் அருள் பெற வருக! வருக! என வரவேற்கிறோம். கோர்வை தொடரும்...

சென்னையிலிருந்து தினந்தோறும் மாலை 6.00 மணி அளவில் அரசு பேருந்து பேரையூருக்கு புறப்படுகிறது. அதே போல் பேரையூரிலிருந்து மாலை 6.00 மணிக்கு சென்னைக்கு புறப்படுகிறது.

முற்றும்



உலகம்
பூஜ்ஜியம்
சிவமயம்
சதுரகிரி
அருள்மிகு ஸ்ரீசுந்தரமகாலிங்க சுவாமி
மூலிகை வனம்